2700

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL. XLVII NO: 5

March 31 1983

D
V211,31'N83
N83.47.5.1
136024

## உள்ளடக்கம்

31-3-1983


1. வினாக்கள்—விடைகள்:
   - ஒடுக்குறியிட்ட வினாக்கள் 641—670
2. தகவல் கோரல்:
   - (அ) வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச் சாட்டை அவையில் விவாதிப்பது 671..672 695—697
   - (ஆ) உறுப்பினர்களுக்கென விடுதியில் இருந்து சட்டமன்றம்வரை விடப் பெறும் பேருந்தில் வெளியாரை அனுமதிப்பது 682—683
3. ஒத்திவைப்புத் தீர்மானம்:
   - திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட மரணம் 672—682
4. அறிவிப்பு:
   - நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு 1983. 684
5. கவன ஈர்ப்புகள்:
   - (அ) சென்னை பழவேற்காடு பகுதியில் மீனவர்களுக்கிடையே மோதல் 684—687
   - (ஆ) மூளைக்காய்ச்சல் நோயால் தமிழகத்தின்பல பகுதிகளில் பலர் பாதிக்கப் பட்டுள்ளது. 688—695
6. அறிக்கை அளித்தல்:
   - அரசு உறுதிமொழிக் குழு 697
7. வரவு—செலவுத் திட்டம் 1983—84 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)
   - (அ) கோரிக்கை எண். 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன்
   - (ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை
   - மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி } 697—859
   - திரு. ஜே. எஸ். இராசு 700—710
   - திரு. சீ. சிவப்பிரகாசம் 710..716
   - திரு. எல். இளையபெருமாள் 716..730
   - திரு. மே. அ. இராசகுமார் 730—732

திரு. என். பழனிவேல் 732—746

திரு. ப. தனபால் 746—752

திரு. மு. அப்பாதுரை 752..759

திரு. ஏ. பெரியசாமி 759—761

திரு. ஜி. மூர்த்தி 761—769

திரு. வெ. அரங்கராசன் 769—774

திரு. அ. ரகுமான்கான் 774—792

திரு. பி. துரைராஜ் 792—796

திரு. குமரி அனந்தன் 796—808

திரு. சேச. கலிதீர்த்தான் 808—815

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் 815—821

திரு. ஆர். ரங்கசாமி 821—826

திரு. துரைமுருகன் 827—836

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி 838—858

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்: 860


2700

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வியாழக்கிழமை, 1983 மார்ச் 31.

பங்குனி 17, துந்துபி–திருவள்ளுவர் ஆண்டு 2013.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்'

மேல் நிலையில் இருந்தாலும் மேன்மைப் பண்பு இல்லாதவர் மேலானவர் அல்லர். கீழ் நிலையில் இருந்தாலும் இழிகுணம் இல்லாதவர் கீழ்மக்கள் அல்லர்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுகுறியிட்ட வினாக்கள்.

சேடப்பட்டி, சாப்டூர், எழுமலை, T. கல்லுப்பட்டி
ஆகிய இடங்களில் பிற்பட்டோர் நல மாணவர் மற்றும் மாணவியர்
விடுதிகள் துவங்கும் திட்டம்.

*வினா எண். 607—திரு. இரா. முத்தையா: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் சேடப்பட்டி, சாப்டூர் ஆகிய இடங்களில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதியும், எழுமலை, T. கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் மாணவியர் விடுதியும் தொடங்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடுதிகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) மற்றும் (ஆ): மதுரை மாவட்டத்தில் சேடப்பட்டி, சாப்டூர் ஆகிய இடங்களில் பிற்பட்டோர் மாணவர் விடுதிகள் துவக்க கோரிக்கைகள் வந்துள்ளன. அவற்றுள் சேடப்பட்டியில் 50 மாணவர் எண்ணிக்கைகள் கொண்டுள்ள பள்ளி மாணவர் விடுதி ஒன்று 1981–82ஆம் ஆண்டில் துவங்கிட உரிய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சாப்டூரில் விடுதி துவக்கும் கோரிக்கை அங்கு தேவைப்படும் மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் இடவசதி முதலான விவரங்களை கருத்திற் கொண்டு பரிசீலிக்கப்படும். டி.கல்லுப்பட்டியில் ஏற்கனவே 50 பேர்கள் கொண்ட ஒரு மாணவியர் விடுதி அங்கு

இயங்கி வருகிறது. எழுமலையில் மாணவியர் விடுதி கோரி இது
வரையிலும் கோரிக்கைகள் ஏதும் வரவில்லை. ஆனால் இங்கு ஏற்
கனவே 50 பேர்கள் கொண்ட மாணவர் விடுதி ஒன்று இயங்கி
வருகிறது.

திரு இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இதை நான் 1980 ஆம் ஆண்டு கேட்டேன். 1981 ஆம்
ஆண்டில் சேடப்பட்டியில் மாணவர் விடுதி தொடங்கப்பட்டிருக்
கிறது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னு
டையப் பகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆனால் டி.கல்லுப்பட்டியில் 50 மாணவியர்கள்
கொண்ட ஒரு விடுதி நடந்து வருவதாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் தெரிவித்தார்கள். மாணவியர்கள் விடுதி அல்ல, மா
வர்கள் விடுதித்தான் அங்கேயிருக்கிறது. மாணவியர் விடுதி
என்னுடைய பகுதியிலேயே இல்லை.

அடுத்து, எழுமலையிலே இயங்கிவந்த மாணவர் விடுதிகூட,
அங்கேயிருந்த வீட்டுக்காரர் தகராறு காரணமாக எம். கல்லுப்
பட்டியில் இயங்கி வருகிறது. எனவே இந்த ஆண்டு புதிதாகத்
தொடங்குகிறபோது இந்த இடங்களில் ஏதாவது இரண்டு இடங்
களிலாவது ஆரம்பிக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் உத்தர
விடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்தந்தப் பகுதியினுடைய நிலைமைகள்,
மற்றவைகளையெல்லாம் கூர்ந்து ஆராய்ந்து பார்த்துதான்
முடிவுகள் எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்
களை உள்ளத்திலே வைத்துக்கொண்டு இந்த ஆண்டு எத்தனை
மாணவியர் விடுதிகள் திறக்கப்படும் என்று எதிர்பாக்கப்படு
கிறதோ, அதிலே கூடுமான வரையில், ஏற்கனவே இப்பொழுது
ஒரு விடுதியும் இல்லாத பகுதியிலே முன்னுரிமை தரவேண்டு
மென்று இருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு ஆரம்பிக்கப்
படும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தாரமங்கலம் தாலுக்காவைப் பற்றிய கேள்வி அது.
தாரமங்கலத்தில் அரிசன, கள்ளர் மாணவியர் விடுதி சொந்தக்
கட்டிடத்திற்கு இந்த ஆண்டு மாற்றப்பட்டிருக்கிறது. இட வசதி
நிறைய இருக்கிற காரணத்தினாலேயும் பிற்பட்ட பகுதியாக இருக்
கிற காரணத்தாலேயும் அந்த விடுதியிலேயே அதிக மாணவியர்
களைச் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, அதுப் பற்றிய விவரக் குறிப்புகள்
என்னிடத்திலே இல்லை. போதுமான அளவுக்கு இட வசதி
இருக்குமேயானால் அந்தக் கோரிக்கை ஆராயப்படும்.



திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எழுமலையில் ஏற்கனவே இயங்கிவந்த மாணவர்
விடுதியை, அந்த வீட்டுச் சொந்தக்காரர் காலி செய்ய வேண்டு
மென்று கோரிக்கை எழுப்பி அப்பொழுது காலி செய்யாத
காரணத்தால், அவரே பூட்டிவிட்டார். அங்கேயிருக்கிற என்னைப்
போன்ற மக்கள் பிரதிநிதி யாரையும் கேட்காமல் அந்த விடுதியை
இன்னொரு ஊருக்கு மாற்றிவிட்டார்கள். திரும்பவும் அந்த
விடுதியை அங்கே தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு தலை
வரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெரிதும் முயல்
கின்ற அந்த ஊரிலேயே தக்க, வாய்ப்பான, வசதியான, ஒரு
கட்டிடத்தைப் பார்த்துத் தருவதற்குப் பேருதவி புரிவார்களா
னால், மாற்றப்பட்ட விடுதியை, அந்த ஊருக்கே மாற்றியமைக்க
எந்தவிதத் தடையும் எழ வாய்ப்பில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தப் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளில்
இன்றைக்கு எந்த விதமான வசதிகளும் இல்லை. அங்கே அந்த
விடுதிகளில், மாணவர்களுக்குப்படுக்கைகூட,விரிப்பான்கூட கிடை
யாது. அவர்கள் உபயோகப்படுத்தக்கூடிய சாப்பாட்டிற்கான
சாமான்கள் கூட எந்தவித சுகாதார வசதியும் இல்லாமல் மிகமிக
மோசமானநிலைமையில் இருக்கிறது. நானே உசிலம்பட்டியில்
ஒரு ஹாஸ்டலைப் போய் பார்த்தேன். ஆகவே, இம்மாதிரி
குறைபாடுகளை அரசு உடனடியாக கண்காணிக்குமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, அந்தந்த விடுதிகளுக்கு வேண்டிய
வசதிகள் செய்யப்பட வேண்டும். எங்கேயாவது வசதிகள் குறை
வாக இருந்தாலோ அல்லது வசதிகள் செய்யப்படாமல்
இருந்தாலோ அந்தந்த விடுதிகளைப் பொறுத்திருப்பவர்கள் மேல்
அதிகாரிகளுக்கு உரிய முறையில் விண்ணப்பித்தால் அதுபற்றி
அரசு ஆராய்ந்து கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த விடுதியைப் பொறுத்த
வரைக்கும் எல்லாம் நன்றாக இருக்கிறது என்று உறுப்பினர் திரு.
முத்தையா சொல்லிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சிலபல விடுதிகளில்
குறைகள் இருக்கலாம்; எல்லா விடுதிகளிலும் சொல்லவில்லை.
எங்கேயாவது குறைகள் இருந்தால் அது அரசின் கவனத்திற்குக்
கொண்டு வரப்படலாம்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் அரிசி, நெல் ஆகியவைகளுக்கு ஒரு டன்னுக்கு ஆகும் செலவு.

*வினா எண். 608—திரு. பொ. உத்திராபதி: திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் அரிசி, நெல் ஆகியவைகளின் கொள்முதல் விலை நீங்கலாக மற்றச் செலவுகள் இன வாரியாக ஒரு டன்னுக்கு எவ்வளவு செலவு ஆகிறது?

(ஆ) ஒரு குவிண்டால் நெல்லுக்கு எத்தனை கிலோ அரிசி அறவை ஆலைகளிடம் வாங்கப்படுகிறது?

(இ) அவர்களுக்கு அறவைக்கூலி எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) நெல் விலையில் கொள்முதலுக்காக செலவு ஒரு டன்னுக்கு ரூ.20, கொள்முதல் நிலையத்திலிருந்து கிடங்குகளுக்கும் மற்ற இடங்களுக்கும் எடுத்துச்செல்ல மோட்டார், லாரி வாடகை போன்றவைகளுக்கு ரூ.70, கிடங்கு வாடகை மாதத்திற்கு ரூ.5, போக்குவரத்து இழப்பு, சேமிப்பில் இழப்பு, இரண்டுவிழுக்காடு, கோணிதேய்மானம் ரூ.7.50 முதலீட்டு வட்டி 13 சதவீதம், எதிர்பாராத செலவு ரூ.11 என்று செலவாகிறது. அரவைக்கூலி ரூ.70, கோணியின் விலை ரூ.65, அரிசி நிலையில் போக்குவரத்துச் செலவு ரூ.70, போக்குவரத்தில் இழப்பு 1 சதவீதம், சேமிப்பில் இழப்பு 1 சதவீதம். கிடங்கு வாடகை மாதத்திற்கு ரூ.5, வட்டி 13 சதவீதம், நிர்வாகச் செலவு 2 சதவீதம், சில்லறை விற்பனை இலாபம் ரூ.40-ம் செலவாகிறது.

(ஆ) 68 கிலோ அரிசி வாங்கப்படுகிறது. குறுவை நெல்லில் சில இரகங்களுக்கு ஈரப்பதத்தை அனுசரித்து குறைவாக வாங்கப்படுகிறது.

(இ) புழுங்கல் அரிசிக்கு கிலோவிற்கு ரூ.7ம், பச்சரிசிக்கு ரூபாய் 6·25 காசும் கொடுக்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் செலவழிக்கப்படும் தொகையைப் பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது மிகவும் அதிகமாகத் தெரிகிறது. எதிர்பாராத செலவு என்றே ரூபாய் 11 சேர்க்கப்படுகிறது. இவ்வளவு அதிகமாகச் செலவு செய்து நாம் வாங்குகின்ற நேரத்தில், வியாபாரிகள் இதில் நான்கில் ஒரு பங்கு கூடச் செலவு செய்வதில்லையே. இப்படி அதிகமாகச் செலவு செய்து வாங்குகின்ற காரணத்தினால் திரும்பவும் மக்களுக்கு



அதை நாம் விநியோகிக்கிற நேரத்திலே அதிகமாக விலை ஏறுவதோடு, அரசாங்கமும் இதற்கு அதிகமாக மானியமாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, இந்தச் செலவுகளைக் குறைப்பதற்காக, சம்பந்தப்பட்டவர்களையோ அல்லது எதிர்க்கட்சிக்காரர்களையோ அழைத்து என்னென்ன வகையில் இந்தச் செலவுகளைக் குறைக்கலாம் என்பதை ஆலோசிக்க இந்த அரசு தயாராக இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கூறுவதைப்போன்று இந்தச் செலவினங்களை எவ்வளவுக்கெவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு குறைக்க வேண்டுமென்பதுதான் அரசின் எண்ணம். ஒரு குவிண்டால் நெல் கொள்முதல் விலை, 122 ரூபாய் என்றால், அதனுடைய செலவுகள் எல்லாம் சேர்ந்து கடைசியில் கணக்குப் பார்த்தால் 139 ரூபாய் 46 காசு ஆகிறது. கிட்டத்தட்ட 17 ரூபாய் 46 காசு ஆகிறது, எந்த வகையிலே செலவு குறையும் என்றால் கிடங்கிலே அதிக காலம் வைக்காமல் இருந்தாலும், உடனடியாக அரவைச் செய்து அனுப்புகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றபொழுதும் இந்தச் செலவினங்கள் பெரிதும் குறைகின்றன. நீண்ட நாட்களுக்குக் கிடங்கில் வைக்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டால் வட்டி கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது; எந்தெந்த வகைகளிலே செலவினங்களைக் குறைக்க முடியுமோ அவைகளைச் செய்யத்தான் வேண்டும். ஏற்கெனவே கொள்முதல் செய்து கிடங்குகளில் பல மாதங்கள் வைத்து, பிறகு அனுப்புகின்றபொழுது இந்தச் செலவினங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் கிடங்குகளில் நீண்ட காலம் வைக்கவோ, அதனால் வாடகைக்காக செலவு ஆகும் நிலையோ, வட்டி அதிகமாகக் கொடுக்கின்ற நிலையோ அதிகமாக இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்போன்று செலவினங்களைக் கூடுமானவரையில் குறைத்து, அடக்க விலையைக் கட்டுப்படியாகக்கூடிய விலையில் வைக்க வேண்டுமென்ற எண்ணத்தை அரசு ஏற்று அதற்கான முறைகளையெல்லாம் ஆராயும்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது அகில இந்திய அளவிலே, நம்முடைய நிபுணர் குழு சொல்லியிருக்கின்ற அடிப்படையில் கொள்முதல் விலைக்கும், திரும்பவும் மக்களுக்கு விநியோகிக்கின்ற விலைக்கும் இடையிலே 12 சதவீதத்திற்கும் மேலே எந்தப் பொருளுக்கும் மார்ஜின் செல்லக்கூடாது என்ற விதியைச்சொன்னதாக எனக்கு ஞாபகம். அந்தஅடிப்படையிலே இதிலே கொள்முதல் விலைக்கும் மக்களுக்கு விநியோகிக்கின்ற விலைக்கும் இடையிலே உள்ள விகிதாச்சாரத்தைப் பொறுத்தவரையில் 12 சதவீதத்திற்குக்கீழே கொண்டுவருவதோடு மட்டுமல்லாமல் இப்பொழுது அரவை ஆலைகளிலே கொடுத்து அறைக்கும் அந்த அரிசி 68 கிலோ என்று சொல்லப்படுகிறது; சில இடங்களில் 70 கிலோ வருகிறது என்று தெரிகிறது. ஒவ்வொரு கிலோ அரிசிக்கும் மானியமாக எவ்வளவு தொகை கொடுக்கப்படுகிறது என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

இப்போது ஒவ்வொரு கிலோ அரிசிக்கும் நியாய விலைக் கடைகளில் ரூ.1.75 என்று விற்கப்படுகிறது. நமக்கு ஆகிற செலவு ரூ.1.39. நமக்கு மொத்தமாக ஆகிற செலவு எல்லாவற்றையும் சேர்த்து ரூ.2.54. ஆனால் நாம் கொடுப்பது ரூ.1.75. கிட்டத்தட்ட 79 காசு ஒரு கிலோவுக்கு மானியமாக ஏற்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், இதனுடைய கொள்முதல் விலைக்கும், விற்பனை விலைக்கும் இடையில் 12 சதவீதம் இருக்கவேண்டுமென்ற அளவிற்கு நிபுணர்கள் எடுத்துச்சொல்லியிருக்கின்ற கருத்து, நல்லதொரு கருத்துதான். அந்தக் கருத்தின் அடிப்படையில் செலவினங்களைக் குறைக்கலாம். அப்படிக் குறைக்கும்பொழுது. இந்த வாடகைக் கட்டுவது, அங்கே வைப்பதற்கு ஆகும் செலவு, வட்டி, சேதாரம் கிடங்கை இவைகளையெல்லாம் கூடுமானவரை குறைப்பதற்கு ஏற்பாடு செய்வோமேயானால், இந்த 12 சதவிகிதத்திற்குள்ளே கட்டுப்படியாகும் என்பதுதான் என்னுடைய கருத்து. அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. பாபு ஜனார்த்தனன: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு டன் கொள்முதல் செய்ய ரூ.20 என்றும் எடுத்துச்செல்வதற்கு ரூ.70 என்றும், கிடங்கு வாடகை ரூ.5 என்றும், போக்குவரத்து இழப்பு, கோணி, தேய்மானம் ரூ.7.50 என்றும் செலவினங்கள் எல்லாம் இருக்கின்றன. அரவைக் கூலி ரூ.7 தரப்படுகிறது. ஏறக்குறைய ஒரு குவிண்டலிற்கு ரூ.17.40 ஆகிறது. ஆனால் பல இடங்களில் அவசர நியமித்தம் அரவைக்காக கொடுக்கப்படும் நெல்லை சில அரவை உரிமம் பெற்றவர்கள் அனுமதி இல்லாமல் விற்று விடுகிறார்கள். அப்படி விற்றுவிடுகின்ற காரணத்தால், அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்பொழுது பல வருடங்கள் ஆகிவிடுகின்றன. அதற்கு எத்தனையோ உதாரணங்களை காட்ட முடியும், ஆக பல இடங்களில் இவ்வாறு நடக்கின்றது. ஆகவே தரமுள்ள, அரவை உரிமம் பெற்ற உரிமையாளர்களைத் தேர்ந்தெடுக்க நல்ல முறையிலே அவர்களிடத்திலே நெல்லைக் கொடுத்து அரிசியைப்பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது அரவை உரிமம் பெறுகின்றவர்களுடைய தகுதி, திறமை ஆகியவைகளை எல்லாம் கூடுமானவரை ஆராய்ந்து நல்லவர்களாகப் பார்த்துதான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், அதற்கான விதிமுறைகள், நிபந்தனைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த அளவில்தான் பல பேர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், பல பேர் நாணயமாகவும், நேர்மையாகவும் நடந்து கொண்டு வருகிறார்கள். ஆனால் சிற்சில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல் இப்படி ஏமாற்றுகிறவர்கள், ஏமாற்றி விற்பவர்கள் உண்டு. அவர்களில் சிலர் மீது நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு வருகிறோம்.





மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று இதிலே காலத்தாழ்வு ஏற்படுவது பற்றி எனக்கே கூட வருத்தம் உண்டு. அந்தத் துறைகளுக்கு நான் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். 'கூடுமானவரை நீங்கள் எல்லாம் ஆண்டுக் கணக்கிலே சொல்லாமல், மாதக்கணக்கிலே அதற்கெல்லாம் முடிவு ஏற்படுத்துவீர்களேயானால், இந்தத் துறை இன்னும் செம்மையாகவும், சிறப்பாகவும் பயன்படமுடியும், என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்தக் கருத்தை அரசு நடைமுறைப் படுத்துவதிலே கவனம் செலுத்தும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, அரிசி அரவை ஆலைகளிலே நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக நெல்லை அரைக்கக் கொடுத்து அவர்கள் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதாக அரசுக்கு ஏதாவது புகார் வந்துள்ளதா? அப்படி கொடுக்காத அரவை ஆலைகளுடைய லைசன்ஸை ரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே இது பொதுவான கேள்வியாக இருக்கிறது. ஆனால் குறிப்பிட்டு கூறப்படுமேயானால் அதனுடைய நிலைமைகளை நான்குறிப்பிட்டு சொல்லமுடியும். ஆனால் நாம் கொடுத்த நெல்லை கொடுத்த காலத்திற்குள்ளே அரவை செய்து கொடுக்காமல் அவர்கள் ஏமாற்றுவார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், நடவடிக்கைகள் எடுக்க அரசுக்கு அதிகாரம் இருக்கிறது.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, எல்லா அரிசிக்கும் 'அவுட் டர்ன்' இருக்கிறது. 68 சதம் அரிசி வருவதில்லை என்ற நிலை இருக்கிறது. அதைப்பற்றி அரசின் கவனத்திற்கு கொண்டு வந்தார்களா? உரிமை பெற்ற 'ஹல்லிங் ஏஜெண்ட்ஸ்' எத்தனை பேர்கள் மாநில அளவில் இருக்கிறார்கள்? கூட்டுறவுத் துறையின் மூலமாக எத்தனை அரவை ஆலைகள் நெல்லை அரிசியாக்குகிறது? அரசுத் துறையில் எத்தனை ஆலைகள் இருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உறுப்பினர் கேட்ட அந்த புள்ளி விவரங்கள் என்னிடத்தில் இப்போது விவரமாக இல்லை. ஆனால் மத்திய அரசு நெல்லை அரைவை செய்ய அரிசியின் கண்டுமுதல் 68 சதவீதம் இருக்க வேண்டுமென்று வற்புறுத்தி சொல்லி இருக்கிறார்கள். ஆனால் ஆங்காங்கே இருக்கிற செலவிலே அரைவை முதலாளிகள் அவ்வளவு தோராயமாக சொல்வதில்லை, நாமும் கண்டறிந்து ஆங்காங்கே இருக்கிற சூழ்நிலைக்கேற்ப, நான் முதலிலே சொன்னபடி நெல்லினுடைய தரத்தைப் பார்த்து, அதற்கேற்றபடி 67 சதம், 66 சதம் என்று ஆங்காங்கே நிர்ணயித்து இருக்கிறோம் ஈரப்பதமாக, குறுவைகால மழையும் சேர்ந்து வருவதன் காரணமாக ஈரத்தோடு வந்துவிடும். 18 சதவீத ஈரப்பதத்தை நாம்

எடுத்துக்கொள்கிறோம். அதற்கு மேலும் ஈரப்பதம் இருக்குமேயானால், அதற்காக கொண்டுவந்த விவசாயிகளை வீட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என்றும், அதற்காக அவர்கள் விலையில் கொஞ்சம் குறைத்து, அதிலே ஏற்படுகிற நஷ்டத்தை ஈடுகட்டுகிற அளவிற்கு, 24, 21, 23 என்று இருக்குமேயானால், அதற்கேற்றபடி வாங்கலாம் என்று நாம் சொல்லியிருக்கிறோம் அதை அந்தக் கணக்கில் அரைவைக்கு எடுத்துக்கொண்டு அதிலே ஒவ்வொரு சதவீதம் இருக்குமேயானால், அதில் ஒவ்வொரு காசு குறைக்கலாம் என்ற அளவிற்கு நாம் வைத்திருக்கிறோம். இந்த அளவிற்கு அவர்கள் ஏற்கனவே 68 சதவீதம் கொடுக்க முடியாது என்பதை திரும்பத் திரும்ப எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு இப்போது சுமுகமாக ஏற்பாடு வந்திருப்பதன் காரணமாக அந்தப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நெல் கொள்முதல் சம்பந்தமாக ஏற்படும் செலவினங்களைப் பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் தங்களுடைய நெல்லை நேரிடையாக சென்டரிலே கொண்டுபோய் கொடுக்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகள் இருக்கும் இடத்திலே சென்றுதான் கொள்முதல் செய்வது கிடையாது. ஆனால் அரசாங்கம் இதை அறிவித்ததே தவிர, விவசாயிகள் தான் வண்டிச்சத்தம் போட்டுக் கொண்டுவந்து நெல்லை இறக்குகிறார்கள். அப்படி இறக்குகிறபோது எப்படி இவ்வளவு அதிகமாக செலவு ஆக வேண்டிய நிலை இல்லையே, எப்படி ஆவதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த நெல்லை நாம் கொள்முதல் செய்கிறபோது உதாரணமாக தஞ்சாவூரிலே கொள்முதல் செய்தாலும் அதை வைத்து திருநெல்வேலிக்கு அனுப்பவேண்டியிருக்கிறது; கோயம்புத்தூருக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது. சேலத்திற்கு அனுப்பவேண்டியிருக்கிறது. இதையெல்லாம் சேர்த்து ஒட்டுமொத்தமாக அவரேஜ்-ஆகத்தான் நாம் போட்டிருக்கிறோமே தவிர, தஞ்சை மாவட்டத்திலே கொள்முதல் செய்து அங்கேயே வைத்து, அங்கேயே கொடுப்பதாக இருந்தால் இன்னும் ரொம்ப குறையும். ஆகையினாலே நாம் கொடுக்கின்ற கணக்கு மாநிலத்தைப் பொறுத்து, ஒட்டுமொத்தமானது. பெரும்பாலான கொள்முதல் நடைபெறுகிறது. தஞ்சாவூரிலே வைக்கிறோம். திருநெல்வேலிக்கு மாற்றுகிறோம். கோயம்பத்தூருக்கு அனுப்பி வைக்கிறோம். அப்படிப்பட்ட வகையிலே லாரிச் செலவினங்கள் எல்லாம் கொஞ்சம் கூடுதலாக ஆகின்றன. நாம் போட்டு இருப்பது மாநில அளவிலே சராசரி கணக்கை வைத்துத்தான் போட்டிருக்கிறோம்.



திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே இந்த நெல்லை அரிசியாக்குகின்ற முயற்சி, அரசுக்கு ஏற்படுகின்ற செலவுகளைத் தவிர்ப்பதற்கு அரசு இந்த அரிசி ஆலைகளை தேசியவுடைமையாக்க முன்வருமா? அப்படி தேசியவுடைமையாக்க முன்வராவிட்டால் அந்தத் தொழிலில் போட்டி ஏற்படுத்த இப்போது ஏறக்குறைய 110 பேர்களுக்கு மேல் அந்தத் தொழிற்சாலைக் கட்டிவைத்து உரிமங்கள் பெறாமல் இருக்கிறார்கள், அந்த உரிமத்தை கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா அரிசி ஆலைகளையும் தேசியமயமாக்கி அதை மிகத் திறம்பட நடத்த முடியுமென்று நாம் சொல்வதற்கு இல்லை( அனுபவத்தின் அடிப்படையில்). ஆனால் இப்போது அரசாங்கத்தின் சார்பாக 13நவீன ஆலைகளை வைத்து நாம் நடத்திக்கொண்டிருக்கிறோம். மிகப் பெரிய அளவில் ஒரு ஆலையை வைக்க வேண்டுமென்ற காரணத்தால் தான் 2 கோடி ரூபாய் செலவில் தஞ்சை மாவட்டத்திலே—நெல் அதிகமாக கிடைக்கின்ற அளவுக்கு இருக்கிற காரணத்தால்-தென் ஆர்க்காடு மாவட்டத்தையும் மையமாக வைத்து. சீர்காழிக்கு அருகிலே ஒரு பெரிய நவீன ஆலை வைப்பதற்கான முயற்சியிலே நாம் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம். மேலும் கூடுமானவரையில் புதிய ஆலைகளை அரசின் சார்பாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதே சமயத்திலே தனியார் ஆலைகளிலே இந்த நிபந்தனைகளுக்கு எல்லாம் அவர்கள் உட்பட்டு அவர்கள் அரைத்துக் கொடுக்கின்றபோது அவர்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற அளவிற்குத்தான் இருக்கிறோம். ஆனால் உரிமம் வழங்குகின்றபோது மத்திய அரசு ஒரு விதியை விதித்து, எல்லோரும் அவர்கள் இஷ்டப்படி ஆரம்பித்து விடவேண்டாம். 7500 டன் நெல் உபரியாக இருந்து ஒரு புது அரைவை ஆலை ஆரம்பிக்க முடியுமென்றால், அங்கே லைசன்ஸ் கொடுங்கள் என்றும், ஆகவே பற்றாக்குறையாக இருக்குமானால் அங்கேகொடுக்க வேண்டாமென்றும் ஒரு அறிவுரை கூறியிருப்பதன் காரணமாகத்தான் பல இடங்களிலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எங்கே உபரியாக நெல் வந்து விளைச்சல் பெருகி எங்கே கூடுதலாக அரிசி ஆலையையோ, அறவை ஆலையையோ வைக்க முடியும் என்றால், அப்படிப்பட்ட இடங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவருடைய சிபாரிசின் பேரிலே் அளித்து வருகிறோம்.

### 1982—83-ல் திருச்சியில் பிற்பட்டோர் நல மாணவர் விடுதியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள்.

* வினா எண் 609—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1982-83 கல்வி ஆண்டில் திருச்சியில் பிற்பட்ட வகுப்பினர் கல்லூரி மாணவர் இல்லத்தில் வெளி மாவட்ட மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்படாதது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அங்கே, எந்த அடிப்படையின் கீழ் மாணவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டனர்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) தற்போது அரசு பிற்பட்டோர் நல மாணவர் விடுதியில் கீழ்க்காணும் விதிமுறைகளின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்:—

(i) உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும் அகதிகளாக வந்தவர்களின் குழந்தைகளுக்கும முன்னுரிமை வழங்குதல்:

(ii) மேற்காணும் முன்னுரிமையில் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மீதமுள்ள இடங்களுக்கு மாணவர்கள் பின்வரும் குறியீடுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.:—

1. வருமானம்
2. மதிப்பெண்கள்
3. வசிக்கும் இடத்திலிருந்து கல்வி நிலையத்தின் தூரம் மற்றும்
4. முன்னாள் இராணுவ வீரர்களின் குழந்தைகள், கிராமத்தில் தொழில் அடிப்படையில் பிற்பட்ட வகுப்பினரான நாவிதர், வண்ணார், கருமார், தச்சர், குயவர், தோல் சம்பந்தப்பட்ட தொழில் செய்பவர், போயர்கள் மற்றும் இவர்களைப் போன்றவர்களின் குழந்தைகள்.

(iii) மேலே (ii)-ல் கூறப்பட்டுள்ள குறியீடுகளின் அடிப்படையில் சமநிலையில் உள்ள மாணவர்கள் இருந்தால் அவர்கள் குலுக்குச் சீட்டு முறையில் மாணவர் விடுதிகளில் சேருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. திருச்சிரப்பள்ளியிலுள்ள கல்லூரி மாணவர் விடுதிகளில் 1982-83-ம் கல்வியாண்டில் புதியதாக 123 மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டிய இடங்களுக்கு 857 மனுக்கள் பெறப்பட்டன. மாணவர் விடுதிகளில் சேர்க்கப்பட வேண்டிய விதி முறைகளின் அடிப்படையில் அங்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

(முற்பகல் 9-20)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அகதிகளாக வந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் திருச்சியில் சிலோனில் இருந்து வந்த மாணவர்கள் கல்லூரிகளில் சேர்ந்து படிக்கின்ற நேரத்தில் அவர்களுக்கு இடங்கொடுக்காமல் இருந்ததால், அது சம்பந்தமாக அவர்கள் ஒரு கோரிக்கையைக் கூட அரசுக்கு எழுதி அனுப்பி



யிருக்கிறார்கள் என்பது உண்மையா? அப்படியானால் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? வருங்காலத்திலாவது சிலோனில் இருந்து அகதிகளாக வந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படுமா? குலுக்குச்சீட்டு என்ற முறை வந்ததால், அவர்களுடைய பெயர் வராமல் போய் விடுகிறது என்று சொல்கிறார்கள். ஆகவே, குலுக்கு சீட்டு முறையை அகதிகளாக இருப்பவர்களைப் பொறுத்து வைக்காமல், கல்லூரிகளில் படிக்கின்றவர்கள் மனு கொடுத்தால், அதன் அடிப்படையில் அவர்களுக்கு எல்லோருக்கும் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியைப் பொறுத்தவரையில் 3 கல்லூரிகள் விடுதிகள் இருக்கின்றன. அந்த மூன்று கல்லூரி விடுதிகளிலும் 265 மாணவர்கள் சேர்க்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிறது. ஆனால் முன்னுரிமை என்று வருகிறபோது உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கும், அகதிகளாக வந்தவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, இடங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டபின்னரே, மீதியிருப்பவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. கடைசியில் வருகின்ற நேரத்தில் அல்லது சம எண்ணிக்கை வருமானால் அவர்களுக்கு மட்டும் குலுக்குச்சீட்டு போடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப்போல் திருச்சியில் அந்த அகதிகள் விண்ணப்பித்து அவர்கள் சேர்க்கப்படாமல் இருப்பார்களானால், அதை அரசின் தனிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தக் குறைபாட்டை நீக்குவதற்கு அரசு தக்க முயற்சிகளை மேற்கொள்ளும்.

திரு. ஜி. மூர்த்தி : தலைவர் அவர்களே, இப்போது திருச்சியில் சிலோன் அகதிகள் அதிகமான அளவிற்கு சேர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வருமானம், மதிப்பெண்கள், வசிக்கும் இடத்திலிருந்து கல்வி நிலையத்தின் தூரம் ஆகியவற்றைக் கணக்கில் எடுக்காமல், அவர்களுக்கு விடுதிகளில் இடம் ஒதுக்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உடல்ஊனமுற்ற மாணவர்களுக்கும், அகதிகளாக வந்த மாணவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு இடங்கள் ஒதுக்கிய பிறகுமற்றவர்களுக்கு மீதமுள்ள இடங்களை ஒதுக்குகிறபோதுதான் வருமானம், மதிப்பெண்கள் வசிக்கும் இடத்தில் இருந்து கல்வி நிலையத்தின் தூரம் ஆகியவை கணக்கிடப்பட்டு கொடுக்கப் படுகிறது. ஆகவே, இவர்களைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்னை இல்லை.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்ற 1982-83 ஆம் ஆண்டில் 122 மாணவச்கள் தேர்ந்தெடுக்கப்படுகிற அளவிற்குத்தான் இடம் இருந்தது என்றும், ஆனால் 857 மனுக்கள் வரப்பெற்றன என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே சேர்க்கப்பட்டவர்களில்

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்? பிற மாவட்டங்களில் இருந்து சேர்க்கப்பட்டவர்கள் எத்தனை பேர்? அடுத்து அதிகமான மாணவர்கள் திருச்சியிலே உள்ள கல்லூரிகளில் சேர்ந்துள்ளதாலும், புதிதாக பாரதிதாசன் சர்வகலாசாலை ஏற்படுத்தப்பட்டு இருப்பதாலும், அங்கே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் சேர்க்கப்படும் எண்ணிக்கையை 25 சதவீதம் கூடுதலாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 857 மனுக்கள் வந்ததன் காரணமாக, அதற்காக என்று வைக்கப்பட்டு இருக்கிற குழுவினர் ஆராய்ந்த வகையில் அந்தந்த மாவட்டங்களில் கல்லூரிகளும், மற்றவைகளும் இருப்பதால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் இத்தகைய நெருக்கடி நிலையில் இடம் தரப்படலாம் என்று முடிவு எடுத்ததன் காரணமாக அதிலே மற்ற மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் சேர்க்கப்படவில்லை. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மட்டும் இடம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அந்த மாணவர்களுக்கான இட வசதிகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் அங்கே போதுமான அளவிற்கு இட வசதி இருக்குமானால் அவர் கூறிய யோசனை பற்றி அரசு ஆராயும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் 610, 611, 612, மற்றும் 613 ஆகியவை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

### கோவையில் தேசிய பஞ்சாலைக்கழகம் நடத்தும் பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான வருங்கால வைப்புநிதி.

* வினா எண் 614——**திரு. கு. ரமணி :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் நடத்தி வருகிற பஞ்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களின் பிராவிடண்ட் நிதிக்கு மில் நிர்வாகங்கள் செலுத்த வேண்டியுள்ள பணம் செலுத்தப்படாமல் பாக்கியுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் மில் வாரியாக பாக்கி நிற்கும் தொகை எவ்வளவு?

(இ) அதை செலுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?



**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** ** அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, 1974-க்கு முன் கோவை மாவட்டத்தில் இருக்கும் ஏழு ஆலைகள், நலிந்து போன அந்தப் பஞ்சாலைகள் கொடுக்க வேண்டிய பிராவிடன்ட் பண்ட் பாக்கிப் பணம் 42 1/2 இலட்சம் ரூபாயாகும். அது அவ்வளவும் தொழிலாளர்களுக்கு வரவேண்டிய பணம். இந்தப் பணத்தில் ஒரு காசுக்கூட கொடுக்காமல் அதாவது அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமல் ஒன்பது ஆண்டுகள் தாண்டியாகிவிட்டன. மத்திய அரசு இது சம்பந்தமாக முடிவு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது. இந்த அரசாங்கம் நேரடியாக இந்தக் காரியத்தில் தானே ஒன்றும் செய்து விட முடியாது என்றிருந்த போதிலும் கூட இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய உழைப்பாளி மக்கள் வேலை செய்து உருவாக்கிக் கொடுத்த அந்த நிதியை யாரோ கொள்ளையடித்து அந்த மில்கள் நசித்துபோனதற்காக இந்தத் தொழிலாளர்கள் கஷ்டத்திற்கு ஆளாக்காமல் இந்தப் பணம் அவ்வளவும் அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு, மத்திய அரசிடமிருந்து கிடைப்பதற்கு என்ன உருப்படியான நடவடிக்கைகள் நமது அரசு எடுக்கப்போகின்றன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே, என்ன உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப் போகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்ன உருப்படியான நடவடிக்கை எடுக்கலாம்? மத்திய அரசுக்கு வேண்டுமானால் உங்கள் உணர்வுகளை தெரிவிக்கும் வகையில் மேலும் ஒரு கடிதம் எழுதலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கடைசி வாக்கியத்தைப் பார்த்தால் மத்திய அரசாங்கத்திடமிருந்தோ அல்லது மத்திய வருங்கால வைப்புநிதி ஆணையாளரிடமிருந்தோ எந்தவொரு அறிவுரையும் இதுபற்றி வரவில்லை என்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளை மனதில் வைத்து மத்திய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களுக்கு இந்த அமைச்சகத்திலிருந்து கடிதம் எழுதுகிறேன்.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, இந்தக் கடிதங்கள் எழுதியது வரை, அவை என்ன கதியாகியிருக்கிறது என்பது இந்த அரசுக்குத் தெரியும். தொழிலாளர்களுக்கு காசு கிடைப்பது மட்டுமல்ல, நமக்கு தொழிற்சாலைகள் உருவாவதற்கு லைசென்ஸ் கிடைக்கமாட்டேனென்கிறது. ஆகவே நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புவதெல்லாம். இது ஒரு சாதாரண விஷயம் அல்ல, ஒருவர் வேலை செய்து அவருக்கு பாத்தியதையாகியிருக்கும் உழைப்பாளி பணம். It should b the first charge. கமிஷனர் ஆப் பேமெண்ட்ஸ் இந்த பணத்திற்கு பர்ஸ்ட் சார்ஜ் ஆகப்போடவேண்டும், உடனடியாகக் கொடுக்கவேண்டும்என்பதை

**860 ம் பக்கத்தில் இணைப்பு 1 ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

நமது தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அங்கு தொழிலாளர்கள் நலத்துறை அமைச்சர்கள் கூட்டத்திற்குப் போகும்போது வற்புறுத்தி அந்தத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுத்து எங்களுக்கு அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் :** தலைவர் அவர்களே' மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது மிகவும் நியாயமானது என்ற காரணத்தால் அந்த வேலையை நான் எடுத்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய ஏழு பஞ்சாலைகளில் கிட்டத்தட்ட ரூ. 42,59,000 தொழிலாளர்களிடம் பிடித்திருக்கக்கூடிய ப்ராவிடன்ட்பண்ட் பணம் கட்டப்படாமல் இருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் ப்ராவிடன்ட் பண்ட் கட்டவில்லையென்று சொன்னால் ப்ராக்ஸிக்யூட் செய்யலாம் என்ற விதி இருப்பதால் அதைப் பயன்படுத்தி நேஷனல் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷனிடமிருந்து அவர்களே இந்தப் பணத்தைக் கொடுக்க தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி அந்த தொகையைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பார்களா?

(முற்பகல் 9.30)

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவர் அவர்களே ப்ராஸிக்யூஷன் இப்போது ஒன்றும் பலன் தராது. இந்தப் பணம் ஏற்கனவே இந்த மில்ஸ்க்கு யார் சொந்தக்காரர்களாக இருந்தார்களோ அவர்கள் தர வேண்டியது. அது இப்போது அவர்களுக்கு பணம் கொடுப்பதற்கு கமிஷனர் ஆப் பேமெண்ட்ஸ் என்று நியமித்திருக்கிறார்களே, அவர்களுக்கு கொடுத்திருக்கக் கூடிய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஆலை தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படும் ஈட்டுத்தொகையிலிருந்து இதைப்பெற வேண்டும் என்று கொடுத்திருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல் பர்ஸ்ட் சர்ஜ் ஆக செய்ய வேண்டும் என்ற கருத்தை நாம் வலியுறுத்தலாம்

அமராவதி அணைக்குக் கீழுள்ள குளுகோஸ்
தொழிற்சாலை.

* வினா எண். 622—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமராவதி அணைக்கு கீழுள்ள குளுகோஸ் தொழிற்சாலையிலிருந்து கழிவு நீரை ஆற்றில் விடுவதால் அதில் வரும் மீன்கள் அனைத்தும் இறந்து விடுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதைத்தடுத்து நிறுத்த அரசு ஆணை பிறப்பிக்குமா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) குளுகோஸ் தொழிற்சாலையிலிருந்து முறைப்படி சுத்தம் செய்யப்படாத கழிவுநீர் எப்போதெல்லாம் அமராவதி நதியில் விடப்படுகிறதோ அப்போதெல்லாம் நதியின் நீர் அசுத்தமடைந்து அதனால் சில நேரங்களில் மீன்கள் பாதிக்கப்பட்டு இறந்துவிடுகின்றன எனத் தெரிய வருகிறது.

(ஆ) அமராவதி நதியில் குளுகோஸ் தொழிற்சாலையி ருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரினால் மீன்கள் பாதிக்கப்படுவது குறித்து 1978 ஆம்ஆண்டில் ஆராய்ச்சி ஒன்றை மீன்துறை மேற்கொண்டது. அதன் பயனாக கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி ஆற்றில் விட வேண்டும் என்று வற்புறுத்தி குளுகோஸ் தொழிற்சாலைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன. தொழிற் சாலை தற்போது கழிவுநீரைத் தூய்மைப்படுத்தி ஆற்றில் விட ஒரு சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ளது. எனவே மீன்களுக்குச் சேதம் ஏற்பட வாய்ப்பில்லை என தெரிய வருகிறது. தொழிற் சாலையின் கழிவுநீர் தூய்மைப்படுத்திய பிறகே ஆற்றில் விடப் படுவதை மீன்துறையும் கண்காணித்து வருகிறது.

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, அமராவதி ஆற்றிலே அங்கே அருகிலுள்ள குளுகோஸ் தொழிற்சாலையி லிருந்து கழிவுநீரை சுத்தப்படுத்திவிடவேண்டுமென்று 1978-ல் உத்தரவு போடப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்ற ஆண்டு அந்தப் பகுதியிலிருந்து மீனவர்கள் வந்து என்னிடம் மனு கொடுத்தார்கள், அரசாங்கத்தினிடமும் மனு கொடுத்தார்கள். அந்தக் கழிவுநீர் இன்னும் வந்துகொண்டு தானிருக்கிறது. அதனால் அந்த மீன்கள் முழுவதும் இறந்து விடுவதால் அந்த மீனவர்களின் வாழ்க்கையே பாதிக்கப்படுகிறது. சுகாதாரக்கேடும் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே இருக்கிற மீன் துறை அதிகாரிகள் அறிவிப்பின்படி , குளுகோஸ் தொழிற்சாலையிலே இருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீர் அமராவதி அணைக்குக் கீழ் விழுகின்றது. இதனால் மீன்கள் இறப்பதில்லை எனவும், இதுபற்றி எந்த முறையீடும் வந்ததில்லை எனவும், கோவை மண்டல மீன்துறை துணை இயக்குநரும், பவானிசாகர் நன்னீர் உயிரியல் உதவி மீன்துறை இயக்குநரும் தகவல் அளித்துள்ளதாகத் தெரிவித்து உள்ளார் ' எப்புளுவன்ட் டிரீட்மெட் பிளான்ட்' 1978-லே முடிவு செய்தபடி, அங்கே ஒரு சுத்திகரிப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல், இப்போது இருக்கின்ற சூழ்நிலையில், இன்றைக்கும் சுத்திகரிக்கப்படாத நீர் அங்கே வந்து கொண்டிருக்கு மானால், உடனடியாக தக்க நடவடிக்கையை மீன் துறை எடுக்கும். அதேசமயத்தில், மக்கள் நல்வாழ்வுத் துறை

அதிகாரிகளும் கண்காணித்துக் கொண்டு வருகிறார்கள். அங்கே ஒரு சுத்திகரிப்பு பிளாண்ட் வைக்கப்பட்டிருப்பதாக அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அங்கே, கழிவுநீரை வேளியேற்றிக் கொண்டிருப்பதாக தகவல் இருக்கிறது. ஆனால், முறையீடு வருமானால், உடனடியாக அரசு அதுபற்றி நடவடிக்கை எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழிவுநீர் தொழிற்சாலைகளிலே இருந்து வெளியேற்றப்படுவதைப் பொறுத்தவரையில், அது இங்கே அமராவதியில் மட்டுமல்ல, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இம்மாதிரியான சூழ்நிலை இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் இதுபற்றி கேட்கின்றபோது, சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு உரியவர்கள், அதற்கு ஆவன செய்வதாக சொல்லுகிறார்கள். ஆனால், நடைமுறையில் சாத்தியமில்லாமல், குடிநீர், விவசாயம், மீன் பிடி ஆகியவை பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உடனடியாக தமிழகம் முழுவதும் இதுபற்றி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சவுத் இந்தியா விஸ்கோஸ் தொழிற்சாலை, சிறுமுகை என்ற இடத்தில் பவானிசாகர் நீர்த்தேக்கத்திற்கு மேலே பவானி ஆற்றில், கழிவுப் பொருட்களைக் கலக்கும் பகுதி. பவானி நதியில் பள்ளிப்பாளையம் என்றும் இடத்தில் நெசவாளர்கள் தங்களது கழிவுப் பொருட்களை கலக்கும் பகுதி, மற்றும் சேஷசாயி பேப்பர் மில்ஸ் மெல்லிய நூல்போன்ற மரக்கழிவுப் பொருட்களையும் மாநிற சாயப் பொருட்களையும் கலக்கும் பகுதி. திருச்சி மாவட்டத்தில், காவிரி நதியின் கிளையான உய்யகொண்டான் வாய்க்காலில் அரியமங்கலம் என்னும் இடத்தில், நகரத்தில் சாக்கடை நீரையும் மற்றும் திருச்சி டிஸ்டில்லாரி அண்ட் கெமிகல்ஸ் நிறுவனம் சுத்தப்படுத்தப் படாத கழிவுப் பொருட்களையும் வெளியேற்றும் பகுதி போன்ற சில பகுதிகளை மனதில் வைத்து, 5.10-81-ல் ஒரு கூட்டத்தைக் கூட்டி, அதற்குரிய முதலாளிகள் மனேஜர்கள் ஆகியோரை அழைத்து, கூட்டத்தை நடத்தி, கழிவுநீரை வெளியேற்ற வேண்டுமென அறிவுருத்தப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஆங்காங்கே கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். நானும் இப்படி அவர்களுக்கு அறிவுரை தந்து மற்றவைகளையும் சொல்லிய பிறகும் யாரேனும் அப்படிக் கேட்காமல் இருந்தால், அதற்குப் பிறகு அவர்களுடைய உரிமங்களை ஏன் ரத்து செய்யக்கூடாது என்று நோட்டீஸ் கொடுத்து உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று துறையினரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், மற்றுமுள்ள அதிகாரிகளும் ஆங்காங்கே இப்படி அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.



திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுமுகையிலுள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையில், இந்தக் கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொறுத்தப்பட்டு, நாள் ஒன்றுக்கு குறைந்தது ரூ. 50,000-க்கு மேல் செலவாகிறது என்ற காரணத்தினால், எந்திரத்தை பொறுத்திக் காட்டிவிட்டு, இப்போது அது இயக்கப்படாமல் தண்ணீர் சுத்தகரிக்கப்படாமல் ஆற்றில் கலக்கிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அமராவதியைப் பற்றியது. ஆகவே, நீங்கள் கேட்பதற்கும், இதற்கும் சம்பந்த மில்லை.

### தமிழக லாட்டரி சீட்டுகள் விற்பனை மீதான தடை

* வினா 623—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக லாட்டரி சீட்டுகள் தற்பொழுது இந்தியாவின் எப்பகுதியிலாவது விற்பனை செய்யப்படக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் கீழ் இயங்கும் பிரதேசமான சண்டிகார் நிர்வாகம் தமிழ்நாடு பரிசுச்சீட்டு விற்பனையை அந்தப் பகுதியில் தடை செய்துள்ளது. மற்ற எந்த மாநிலமும் (மத்திய அரசின் கீழ் இயங்கும் பிரதேசங்கள் உட்பட) தமிழ்நாடு பரிசுச் சீட்டு விற்பனையை தங்களது பகுதிகளில் தடை செய்யவில்லை.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த லாட்டரி சீட்டு விற்பனைக்கு சண்டிகார் பகுதியில் தடை விதிக்கப் பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். மத்திய அரசின் அனுமதி பெற்று அம்மாதிரி செய்கிறார்களா அல்லது அவர்களே தடை செய்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தந்த மாநிலத்திற்கே அப்படி தடுத்து நிறுத்துகின்ற உரிமை இருக்கிறது. ஆனால் இந்த பரிசுச்சீட்டு நடத்துகின்ற உரிமையை மத்திய அரசிடம்தான் பெற வேண்டும். நம்முடைய பரிசுச் சீட்டு விற்பனையை சண்டிகார் பகுதியில் தடுத்து நிறுத்தியதன் காரணமாக அவர்களுடைய பரிசுச்சீட்டை தமிழ்நாட்டில் விற்பனை செய்ய நாம் தடை செய்திருக்கிறோம். மற்ற எல்லா மாநிலங் களிலும் மைய அரசுக்கு உட்பட்ட இடங்கள் உட்பட கிட்டத்தட்ட 23 மாநிலங்களில் நம்முடைய பரிசுச்சீட்டு விற்பனை செய்யப் படுகிறது; அவர்களுடைய பரிசுச்சீட்டு இங்கே விற்பனை செய்யப்படுகிறது. சில மாநிலங்கள் பரிசுச்சீட்டு நடத்தா விட்டாலும் நம்முடைய பரிசுச்சீட்டுகளை அங்கே விற்பனை செய்ய அவர்கள் தடை விதிக்கவில்லை, விற்பனைக்கு இசைவளித்திருக்கிறார்கள்.

திரு. குமரிஅனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கிட்டத்தட்ட 23 மாநிலங்களிலுள்ள பரிசுச்சீட்டுகள் தமிழ்நாட்டில் விற்கப்படுவதாகவும் அதைப்போன்று தமிழ் நாட்டில் பரிசுச்சீட்டுகள் அந்த மாநிலங்களிலும் விற்கப் படுவதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் விற்பனையாகும் மற்ற மாநிலங்களின் பரிசுச்சீட்டு விற்பனை தொகை எவ்வளவு? மற்ற மாநிலங்களில் விற்பனையாகும் தமிழ்நாட்டு பரிசுசீட்டின் மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைக் கணக்கிட வேண்டுமானால் எல்லா மாநில பரிசுச்சீட்டுகள் விற்பனையையும் சரிபார்த்தால்தான் முடியும் என்பதை பொதுவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் எல்லா மாநிலங்களின் பரிசுச்சீட்டுகளிலும் பெரும்பகுதி தமிழ்நாட்டில் தான் விற்பனையாகிறது; இதை நம்பித்தான் எல்லோரும் பரிசுச்சீட்டு நடத்துகிறார்கள். அண்மையில் இராணுவ நிதிக்கு என்று நடத்தப்பட்ட பரிசுச்சீட்டில் முதல் பரிசு 77 இலட்சம் ரூபாய் தமிழ்நாடுக்குத்தான் கிடைத்திருக்கிறது. அதைப்போன்று ஒரு இலட்சம் ரூபாய் பரிசில் 10-ம் தமிழ்நாட்டுக்கு விழுந்திருக் கிறது. ஆகவே அந்த அளவுக்கு இங்கே பரிசுசீட்டுகள் வாங்கு கிறார்கள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த பரிசுச் சீட்டுகள் மூலம் தமிழகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? அந்தத் தொகை என்னென்ன காரியங்களுக்குச் செலவிடப்படுகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனி கேள்வி போட்டால் அதனுடைய கணக்கு முழுவதையும் சொல்கிறேன். உதாரணமாக ஒன்றைச் சொல்கிறேன். பரிசுச் சீட்டு விற்பனை மூலம் 10 இலட்சம் வருகிறதென்றால், காகிதம், அச்சிடுதல், அனுப்புதல் பரிசு வழங்குதல் போன்ற காரியங் களுக்கு 65 சதவீதம் செலவாகிவிடுகிறது. கிட்டத்தட்ட 35 சதவீதம் அரசுக்கு மீதப்படுகிறது. சாதாரண குலுக்கல்கள் மூலம் இந்த அடிப்படையிலேதான் கிடைக்கிறது. சிறப்பு குலுக்கல்கள் மூலம் கொஞ்சம் கூடுதலாகக் கிடைக்கிறது. இந்த நிதி, நான் முன்பே சொன்னதைப்போல, ஆதிதிராவிடர் நலம், உடல் ஊனமுற்றோர் நலம், பிச்சைக்காரர் மறுவாழ்வு, தொழுநோயாளிகளுக்கு உதவி செய்தல் போன்ற இத்தகைய சமூகநலத் திட்டங்களுக்கு பங்கிட்டுத் தரப்பட்டு பயன்படுத்தப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன.

திரு. க. பாலன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தமிழ்நாட்டில் பரிசுச்சீட்டுகள் அதிகமாக விற்பனையாகின்றன என்று சொன்னார்கள். இப்படி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பெரும் தொகை பரிசுச்சீட்டு மூலம் பெறுவதற்குக் காரணம் இங்கே அதிஷ்டசாலிகள் அதிகமாக இருக்கிறார்களா? அதனால்தான் இப்படி பெரும் தொகை வாங்குகிறார்களா என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அது என்ன காரணம் என்று கண்டுபிடிப்பது கடினமாக இருந்தாலும் ஒன்றுமட்டும் தெளிவாகத்தெரிகிறது. இந்தியாவிலே இருக்கிற மற்ற எந்த மாநிலத்தையும் விட தமிழ்நாட்டு பத்திரிகைகள்தான் ராசி–பலன்களை பக்கம் பக்கமாகப் போட்டு, ஒவ்வொருவரும் தங்களுடைய ராசி–பலன்களைத் தெரிந்து கொள்ளும் வகையில் அதிகமாக பரிசுச் சீட்டுகளை வாங்கு கிறார்கள் என்பது ஓரளவுக்கு உண்மை.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, மற்ற மாநில பரிசுச்சீட்டுகளுக்கு அதிகமான பரிசுகள் வழங்குவதால் அந்தப் பரிசுச்சீட்டுகளை தமிழக மக்கள் அதிகமாக வாங்கு கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே, அதைப் போன்று நம்முடைய பரிசுச் சீட்டுகளுக்கும் அதிக பரிசுகள் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தினுடைய பரிசுச்சீட்டு ஆரம்பக் காலத்திலிருந்து இன்று வரையில் ஒரு கட்டுக்கோப்பான முறையில், நிதானமான முறையில், அதிலே எந்தவிதமான தவறும் ஏற்படாத அளவுக்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. ஆக, அதிகமாக ஆசைப் படுவதும் இல்லை. அதை அடியோடு விட்டுவிடவும் நாம் தயாராக இல்லை என்ற அளவுக்கு அதை நடத்திக் கொண்டு வருகிறோம். பிற மாநிலங்களிலே சில பல இடங்களிலே இந்த பரிசுச்சீட்டு முறைகளில் ஊழல்கள் நடைபெறுவதாகக் கூட எடுத்துச் சொல்கிறார்கள். அந்த மாநிலம் அளிக்கின்ற பரிசுத் தொகை முழுவதும், பரிசு பெற்றவர்களுக்குப் போய்ச் சேராத அளவுக்கு சிலபல தவறுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள்.

பிற மாநிலங்களில் இருப்பது போல் தமிழகத்தில் 50 லட்சம் 40 லட்சம் 30 லட்சம் என பரிசுத் தொகை இல்லாவிட்டாலும், சிறப்பு பரிசு என்றால் 10 லட்சம் என்றும், சாதாரண குலுக்கலில் 1 லட்சம் என்று வைத்திருக்கிறோம். எதுவாக இருந்தாலும் முறைப்படி நடத்தப்பட்டு கட்டுக்கோப்பாக இருந்து, எந்தவித தவறும் நடக்காத வகையில் நடத்திக் கொண்டு வருகிறோம். மேலும் இதனை சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகளை எந்த வகையில் எடுக்கலாம் என்பதையும் அரசு ஆராய்ந்து வருகிறது.

## நான்காவது ஊதியக்குழு அமைப்பது குறித்த அரசுஊழியர்கள் கோரிக்கை

*வினா எண் 624—திரு பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நான்காவது சம்பள கமிஷன் அமைக்கக்கோரி அரசு ஊழியர்கள் கேட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்

(ஆ) ஊதியக்குழு அமைப்பது பற்றிய செயற்குறிப்பு தற்பொழுது இல்லை,

## தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 1980-81ல் சிராத்தூரில் ஆரம்பிக்கப்பட்ட கிராம குடிநீர்த் திட்டம்

*வினா எண் 615—திரு. டி. மணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980-1982ல் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சிராத்தூரில் ஆரம்பிக்கப்பட்ட கிராம குடிநீர்த் திட்டம் எப்போது முடிவடையும்?

(ஆ) கால தாமதத்திற்கு காரணம் என்ன?

(இ) புதுக்கடையில் ஆரம்பித்துள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். (அ) (ஆ) இத்திட்டம் 7-6-1982-ல் முடிவுற்று செயல்பட்டு வருகிறது.

(இ) இத்திட்டம் 7-8-1982ல் முடிவுற்று செயல்பட்டு வருகிறது.

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியைப் போட்டே ஒரு ஆண்டுக்கு மேலா கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த மாதிரி அன்று, அந்த திறப்பு விழாக் கூட்டத்திற்கு அவர்கள் வந்து அதை துவக்கி வைத்தார்கள். நான் கேட்க விரும்புவது. அந்த இடத்திலிருந்து 1 பர்லாங் தூரத்தில் ஒரு முந்திரி ஆலை இருக்கிறது. அந்தப்பகுதிகளில் தண்ணீர் கிடைப்பதில்லை ஆகவே அந்தப்பகுதிகளுக்கும் குழாய்களைப் போட்டு அதை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தோம். அந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சில பகுதி களில் கிள்ளியூர் தொகுதி உறுப்பினரான நமது மாண்புமிகு உறுப்பினர் விஜயராகவன் அவர்கள் தொகுதியில் ஆதேசம் பகுதியிலும் அந்த திட்டம் எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 2வது கேள்விக்கு என்னிடத்தில் பதில் இல்லை. முதலிலே குறிப்பிட்ட, தெருக்குழாய்கள் போடுவது பற்றிய கேள்வி குறித்த விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் எழுதி எழுத்து மூலமாகக் கொடுப்பார்களே யானால், சம்பந்தப் பட்ட அதிகாரிக்கு அனுப்பி ஆவன செய்ய முடியும் என்றால், செய்வதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

## திருவையாறு பேரூராட்சிப் பகுதிக்கு குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 616—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு பேரூராட்சியில் குடிதண்ணீர் குழாய் மூலம் விநியோகம் செய்ய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) (ஆ) திருவையாறு பேரூராட்சியில் தற்சமயம் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கப் பட்டு 60 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் தற்சமயம் வழங்கப்படுகிறது. திருவையாறு தஞ்சாவூர் குடிநீர் அபிவிருத்தி திட்ட நீரேற்றுக் குழாய் செல்லும் தடத்தில் அமைந்துள்ளது. தஞ்சாவூர் குடிநீர் திட்ட நீரேற்றுக் குழாயிலிருந்து நீரை எடுத்து திருவையாற்றிற்கு விநியோகம் செய்வதற்கான திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூருக்கு அருகிலே உள்ள திருமானூரிலேயிருந்து தஞ்சாவூருக்கு குடிதண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள். அந்த தண்ணீரை தியாகவிளன் குடிக்கும், திரு வயாற்றுக்கும் அளிப்பது குறித்து ஆய்வில் இருப்பதாகச் சொன்னார்கள், அது எந்த ஆண்டு முடியும் என்று அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ்.இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாற்றுக்கு குடிதண்ணீர் கொடுப்பது பற்றிக் கேட்டார்கள். அதைத்தான் நான் சொன்னேன். அந்தத் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது, அந்த வழியாக குழாய் போகிறது. ஆகவே, திருவையாற்றுக்கு தண்ணீர் கொடுக்க ஒரு திட்டம் வைக்கப்பட்டிருக்கிற ஆனால் அந்த திட்டம் பரிசீலனையில் இருக்கிறது, எந்த ஆண்டு வரும் என்று கேட்டால் சொல்ல முடியாது. வேண்டுமானால் அதை விரைவுப் படுத்தச் சொல்லலாம்.

சென்னை நகருக்கு செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம்,

*வினா எண். 617—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) சென்னை நகருக்கு செம்பரம்பாக்கம் ஏரி தண்ணீரை கொண்டுவரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம்எனில் அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சென்னை மக்களுக்கு தேவையான குடிதண்ணீர் எல்லாம் ரெட்ஹில்ஸ் ஏரியிலிருந்துதான் வழங்கப்படுகிறது. அதனுடைய அருகிலே இருக்கிற இரட்டை ஏரி, ஒரு ஆண்டுக்கு தேவையான தண்ணீரை சப்ளை செய்யக்கூடிய முறையிலே இன்றையதினம் இருக்கிறது.

ஆனால் மழைக்காலத்தில் தேங்குகின்ற தண்ணீர் ஆவியாக மாறி வீணாகப் போய்விடுகின்றது. ஆகவே அந்த இரட்டை ஏரியிலிருந்த தண்ணீரை கொண்டுவந்து குடிநீருக்கு பயன்படுத்துவது பற்றி முடிவு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இரட்டை ஏரி எங்கே இருக்கின்றது என்பது தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரைப்படத்திலே உள்ள எல்லா இடங்களைப் பற்றியும் அமைச்சர் தெரிந்துக் கொள்ள இயலாது.

திரு குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவர செயற்குறிப்பு இருக்கின்றது என்று சொன்னார்கள் சென்னை நகர மக்களுக்கு தண்ணீர் எப்படியாவது கொண்டுவரவேண்டும் என்ற வகையில் முயற்சிகள் எடுக்கப்படுவது மகிழ்ச்சிதான். செம்பரம்பாக்கம் ஏரியைப் பொறுத்தவரையில் கடைமடைக்குப் பருவக்காற்றை நம்பி



இருக்கின்ற பொற்தலை ஆற்று நீர்ப்பிடிப்பு பகுதியிலிருந்து தண்ணீர் வந்தால் தான் நிரம்பும் அப்படி வந்தால்கூட 10 ஆயிரம் ஏக்கர் நெல் விளைச்சல் வருகின்ற நிலங்கள் அங்கே இருக்கின்றன, அந்த விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கின்றதா அப்படி அந்த விவசாயிகளுக்குத் தண்ணீர்கொடுப்பதற்காக ஆழ்கிணறு தோண்டுவதாக இருந்தால் அந்தக் கிணற்றிலிருந்து தண்ணீர் சென்னைக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வது பற்றி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது விவசாயிக்குப் பயன்படக்கூடிய ஏரி என்பதால்தான் நிதானமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எடுக்கலாமா, வேண்டாமா சரியாக இருக்குமா என்பதைப்பற்றி எல்லாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள் பரிசிலனையில் இருக்கின்றது என்று. மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் ஆழ்கிணறு திட்டம் இருக்கின்றதா என்று கேட்டபோது திட்டம் இருக்கின்றது என்று சொல்கிறார்கள். என்ன திட்டம். எப்போது செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்ன பதிலை மீண்டும் இப்போது சொல்ல விரும்புகிறேன், அது விவசாயிக்குப் பயன்படக்கூடிய ஏரி, ஏனவே அதிலேயிருந்து குடிப்பதற்குத் தண்ணீர் கொண்டுவருவது சாத்தியமாக இருக்குமா, சரியாக வருமா என்பதைப் பற்றி பரிசிலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு இரா. சா. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகே உள்ள தாமரைப்பாக்கம் ஏரி என்ற இடத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருகிறார்கள். இப்படி சென்னைக்கு அதிகமாகத் தண்ணீர் கொண்டுவந்து விடுவதன் காரணத்தால் அங்கே இருக்கின்ற பொதுமக்களுக்கு தண்ணீர் கிடைக்காமல் இருக்கின்றது. ஆகவே அவர்களுக்குத் தண்ணீர் கொடுத்துவிட்டு மீதியை இங்கே கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தாமரைப்பாக்கம், பஞ்சட்டி போன்ற இடங்களிலிருந்து தண்ணீர் கொண்டுவந்தால் அங்கே பாதிப்பு ஏற்படும் என்று சொன்னால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

[1983 மார்ச் 31

## நகர கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் வழங்கப்படும் கடன் தொகை

*வினா எண் 618—திரு க. பாரமலை: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகர கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் வீடு கட்டுவதற்கு வழங்கப்படுகின்ற கடனின் உச்சவரம்பு ரூ. 40,000/- என்றிருப்பது எத்தனை வருடங்களாக நடைமுறையில் உள்ளது?

(ஆ) அதனை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: (அ) 1-1-1979 முதல் நடைமுறையில் உள்ளது.

(ஆ) ஆம்.

திரு க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த வீடு கட்டும் சங்கங்கள் வீடு கட்டுவதற்காக, வழங்குகின்ற தொகை 40 ஆயிரம் ரூபாய் என்று 1974—ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்றது. அதை உயர்த்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு விலைவாசி எல்லாம் மிக அதிகமாக ஏறி இருக்கின்றது. கட்டிடத்தின் விலை மதிப்பும் அதிகமாக இருக்கின்றது. எனவே அதை அடிப்படையாக வைத்து இந்த அரசின் முடிவை விரைவில் அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை மனதில் கொண்டுதான் நடுத்தர வருவாய் பெறுகின்றவர்கள் என்ற தகுதியினருக்கு வழங்கப்படும் கடன்தொகை 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது. உயர்ந்த வருவாய் பெறுகின்றவர்களுக்கு நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கம் தருகின்ற கடனை 40 ஆயிரம் ரூபாயிலிருந்து 60 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம்.

திரு க. பாரமலை: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 40 ஆயிரம் ரூபாய் என்று இருந்தது 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். அது தற்சமயம் போதாது. ஆகவே அதை 60 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த மீண்டும் அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி இருக்கிறோம். உயர்வருவாய் உள்ளவர்களுக்கு 40 ஆயிரம் ரூபாய் என்றுதான் இருந்தது. அதை தற்போது 60 ஆயிரமாக உயர்த்தி இருக்கிறோம். ஆகவே மற்றவைகளைப் பொறுத்தவரையில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்த்து, நிதிவசதியையும் மனதிலே வைத்து ஆவன செய்யலாம்.



1983 மார்ச் 31]

(முற்பகல் 9–50)

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது வீடு கட்டுவதற்கு கொடுக்கக்கூடிய கடனை ரூ. 40 ஆயிரத்திலிருந்து ரூ. 60 ஆயிரமாக உயர்த்தி இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னால் அந்த பணத்தை திருப்பிச்செலுத்தக்கூடிய தவணை 20 ஆண்டுகளாக இருந்தது. இப்போது அது 15 ஆண்டுகளாகவும், 10 ஆண்டுகளாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அவர்கள் கட்டக்கூடிய தவணைப் பணம் அதிகமாகி பல பேர் குறிப்பிட்ட காலத்தில் தவணைப் பணத்தை கட்டமுடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே முன்பு இருந்தது போல் 20 ஆண்டு கால தவணையில் அதை மாற்ற அரசு துரிதமான நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கருத்தை இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிருக்கிறார்கள். பரிசீலனைச் செய்யலாம்.

திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இப்படி தருகின்ற தொகைக்கு ஒரு சதவீத வட்டியை உயர்த்திய காரணத்தால் 14 சதவீத வட்டிக்கு கொடுக்கிறார்கள். இதில் 5, 6 ஆண்டுகளுக்கு முன்னால் இப்போது இங்கே பேரவைத்தலைவராக இருப்பவர் அதனுடைய அமைச்சராக இருந்தபோது அதற்கு 11½ சதவீத வட்டி இருந்தது இது ஆயுள் காப்பீட்டு கழகத்திலிருந்து பெறுகின்ற அந்த தொகைக்கு வட்டி கிடு கிடுவென்று உயர்ந்துவிடுகின்ற காரணத்தால் வட்டியை கொடுப்பவர்கள் மிகவும் துன்பப்படுகிறார்கள். ஆகவே அந்த வட்டி சதவீதத்தை குறைக்கக்கூடிய அளவுக்கு ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி வட்டியை குறைக்க முயற்சி செய்வார்களா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டு கழகத்தைப் பொறுத்த வரையில் அவர்கள் வட்டியைக் குறைப்பதாக இல்லை என்பது எனக்கு நன்றாக தெரிந்த தகவலில் ஒன்று.

மேலும் ஒரு அடிஷன்ஸ் இன்ஃபர்மேஷன். நடுத்தர வருவாய் உள்ளவர்களுக்கு 40,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாய் என்றும்; உயர்வருவாய் உள்ளவர்களுக்கு 40,000 ரூபாயிலிருந்து 60,000 ரூபாய் என்றும் உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். தவிர, அந்தக் கடன் வழங்கும் போது, அவர்களுடைய 48 மாத வருமானம் முழுவதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டு, அந்தக் கடன் வழங்கப்படும் என்ற அடிஷனல் இன்ஃபர்மேஷனை இந்த அவைக்கு கொடுக்கிறேன்.

## லாலாபேட்டை குடிநீர் திட்டம்

*வினா எண். 625—திரு எம். சின்னசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் லாலா பேட்டை குடிநீர் திட்டப்பணி கடந்த ஐந்து ஆண்டு காலமாக நிறுத்தி வைக்கப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான காரணம் என்ன?

(இ) அத் திட்டப்பணியை மீண்டும் தொடங்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். (அ) ஆம்.

(அ) இத்திட்டத்திற்கான பணிகள் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்தால் மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்தக் காரரின் தவறினால் முடிக்கப்படவில்லை.

(இ) ஊராட்சி ஒன்றியம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்பணி வைப்புத் தொகைப் பணியாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டு முதற்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## வத்திராயிருப்பு பேரூராட்சிப்பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண். 626— திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம் திருவல்லிப்புத்தூர் தொகுதி வத்திராயிருப்பு பேரூராட்சிக்குப் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த அளவில் உள்ளது?

(ஆ) எப்பொழுது முதல் செயலுக்கு வரும் எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ,) மற்றும் (ஆ) வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்குவதற்கான ஓர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப் பட்டுவருகிறது?

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் திட்டத்திற்கு சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னால் ஆய்வுத் தொகையாக சுமார் 14 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் அரசு அதிகாரிகள் ஆய்வு செய்கிறேன் என்று சொல்லி இந்த குடிநீர் திட்டத்திற்கு எல். ஐ. சியிடமிருந்து கடன் வாங்கு





வதா அல்லது உலக வங்கியிடமிருந்து கடன் வாங்குவதா என்று சொல்லி குழப்பிக்கொண்டு காலதாமதத்தை செய்து கொண்டு இருக்கிறார்கள். ஆகையால் இதை உடனடியாக செய்வதற்கு. அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு பேரூராட்சிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர், 2, 3 துளை கிணறுகளிலிருந்து குடிநீர் எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டியில் ஏற்பட்ட அந்த தண்ணீர் பகிர்மான குழாய் மூலம் விநியோகிக்கப்படுவதாக உள்ளது. இத்திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் இப்போது நடந்துக்கொண்டிருக்கின்றன. அந்த வேலைகள் முடிந்த பின்னால் திட்டத்தினால் பயன்பெறும் மக்கள் தொகை, நீரின் அளவு, திட்டத்திற்கான செலவு ஆகிய விவரங்கள் எல்லாம் தெரியவரும். ஆகவே இப்போது ஆய்வு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆய்வு வேலை தாமதம் ஆகிறது என்பது மாண்புமிகு உறுப்பினருடைய குற்றச்சாட்டு. ஆகவே இதைத் துரிதப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வத்திராயிருப்பு பேரூராட்சிக்கு குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலைகள் நடந்துகொண்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அதில் காலதாமதம் ஆகிறது என்று சொன்னேன். வத்திராயிருப்பு பேரூராட்சியைப் பொறுத்தவரையில் ஆய்வு வேலை தேவை இல்லை, போதிய தண்ணீர் இருக்கிறது, இதற்கு எதற்கு ஆய்வு? ஆகையால் விரைவாக திட்டம் தீட்டி ரூபாய் ஒதுக்கி திட்டம் நிறைவேற்றவேண்டிய ஏற்பாட்டை அரசு செய்யுமா? பக்கத்திலுள்ள......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆய்வு எதற்கு என்று கேள்வி கேட்டால் என்ன செய்வது,

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்திராயிருப்பு பேரூராட்சியில் போதுமான தண்ணீர் இருக்கிறது. பாதுகாக்கப்பட்ட தண்ணீர் இல்லாத காரணத்தால் அங்குள்ள மக்கள் மேசமான தண்ணீரை அருந்தி பிறகு நோயால் பீடிக்கப்படுகின்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் பக்கததில் உள்ள ஆகாசம்பட்டியிலிருந்து இணைப்பு கொடுக்க இந்த திட்டம் வரும்போ —அரசிடம் திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இப்பேரூராட்சிக்கு 2 கிணறுகள் பொறுத்தப்பட்டுள்ள மின் விசை பைப்புகள் மூலம் 3 மேல்நிலை தொட்டிகளும் 37 பொதுக் குழாய்களும் இயங்கி வருகின்றன. ஆனாலும் குடிநீர் போதாது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அவசர

மாக செய்யவேண்டும் என்று சொன்ன உணர்வையும் அரசு அறிந்து அதற்கு ஏற்றால் போல் அரசு செயல்படு , முயற்சி எடுக்கும்.

வடமதுரைப் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்

*வினா எண் 627—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

வேடசந்தூர் தொகுதி வடமதுரை பேரூராட்சி பகுதியில் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: வேடசந்தூர் வட்டம் வடமதுரை நகர் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க உத்தேச மதிப்பீடு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப் பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டத்திற்கான வேலைகள் துவக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த வடமதுரை பேரூராட்சிப் பகுதிக்கான குடிநீர் திட்ட ஆய்வு 1977 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு எந்த இடத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு வருவது என்பதிலே பிரச்சினை ஏற்பட்டு அரசு அதை ஒத்திவைத்துக்கொண்டு வருகிறது. தற்போது நடக்கிற ஆய்வு எந்த இடத்திலிருந்து அந்தப் பேரூராட்சிக்கு குடிநீர் கொண்டுவருவது என்பது பற்றி அரசு முடிவு எடுத்து விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அந்த பேரூராட்சியின் தீர்மானத்தின் பேரில் வடமதுரை குடி நீர்த் திட்ட ஆய்வு மதிப்பீடு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கு தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆய்வு வேலை தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான நீர் ஆதாரத்திற்கான ஆழ்குழாய் கிணறுபோடும் வேலை வேலாயுதம்பாளையத்திற்கு அருகில் — அதுதான் தலைமையிடம், ஹெட்வொர்க் வருகிறபோது அந்தக் கிராமத்தில் ஒரு சிலரின் எதிர்ப்பு நடவடிக்கையால் அது கைவிடப் பட்டது. வேறு குடிநீர் ஆதாரம் எங்கே என்று கேட்டார்கள். அதைத்தான் நாம் இப்போது தேடிக்கொண்டிருக்கிறோம். வேறு குடிநீர் ஆதாரம் தலைமையிடம் தற்போது ஆய்வில் உள்ளது. ஆய்வு முடிக்கப்பட்டு தலைமையிடம் முடிவு செய்யப் பட்டதற்குப்பின்பு குடிநீர்த் திட்ட அறிக்கை ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்படும். அ து வேறு சோர்ஸ், ஆதாரம் எங்கே இருக்கிறது என்பதை பரிசீலனை சய்யப்பட்டு வருகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நீர் ஆதாரப் பற்றி மேற்கொண்டும் ஆய்வு நடத்துவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அங்கே



கடுமையான தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. இந்த வறட்சியை நீக்க அவசரமாக சமாளிப்பதற்கான நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களாக?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரமாக அந்த இடத்தில் என்ன செய்யவேண்டும் என்பதுபற்றி எழுதிக்கொடுப்பார்களானால் நிச்சயமாக டெம்பரரிமெஷராக ஏதாவது ஏற்பாடு செய்வது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

மதுராந்தகம் வட்டத்திலுள்ள அரிசி ஆலைகள்

வினா எண். 628 திரு எஸ். டி, உகம்சந்த்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள அரிசி ஆலைகள் Factory Act-ன் கீழ் பதிவு செய்யப் படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த ஆலைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

(இ) இச்சட்டத்தின் கீழ் பதிவு சய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். (அ) அறியும்.

(ஆ) இந்த அரிசி ஆலைகள் 10—க்கும் குறைவான தொழிலாளர்களுடன் இயங்கிவருவதால் தொழிற் சாலைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்ய வாய்ப்பில்லை.

(இ) இச்சட்டத்தின் கீழ் ''ஸ்ரீ தனலட்சுமி ரைஸ் மில்' என்னும் தொழிற்சாலை மட்டும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் 20 தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவிக்கின்ற நோக்திலே அங்கே இருக்கின்ற ஆலையிலே 10-க்கும் குறைவான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஆனால் பல ஆண்டுகளாக பல தொழிலாளர்கள் இங்கே வேலை செய்து வருகிறார்கள். கேஷுவல் லேபராக வேலை சய்கிறார்கள், அவர்களுக்கு சட்டவிதியின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு.எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, யாராக இருந்தாலும் மின்விசையால் இயக்கப்பட்டு 10 பேர்கள் வேலை செய்தால் பேக்டரியில் அது வரும். மின்விசை இல்லாமல் 20 பேர்களும் அதற்கு மேலும் வேலை செய்தால் அது பேக்டரியில் வரும். கேஷுவல் லேபர் ஆக வேலை செய்வதாக உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். எனவே அதை மனதிலே வைத்து திடீரென்று சோதனை போட்டு எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதைப் பார்த்து அதற்குமேல் நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு அந்தப் பகுதியில் கேஷுவல் லேபராக வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணிப் பாதுகாப்பும் அவர்கள் தங்களுக்கு தொழிலாளர் நலத்துறைச் சட்டத்தின் அனைத்துச் சலுகைகளும் கொடுக்கவேண்டுமென்ற கோரிக்கையைக் கொடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இயலாது. காரணம் தனிக் கேள்வி போட்டால் அதற்கு வேண்டிய பதிலை சேகரித்து நான் தருகிறேன். அந்தக் கேள்விக்கு இப்போது என்னிடத்திலே பதில் இல்லை.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 619, 620, மற்றும் 621 ஆகியவை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது.

*டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 12 ஆம் நாளன்று இந்த அவையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் என் மீது ஒரு குற்றச்சாட்டைக் கூறி, பெரியகுளம் தொகுதியில், தேனி நகரத்தில், முத்துதேவன்பட்டி என்ற இடத்தில் என்னுடைய மகன் மு. க. அழகிரி பெயரால் 100 ஏக்கராக்கள் நிலமும், அதற்குள்ளே வீடும் வாங்கப்பட்டிருப்பதாகவும், அதிலே தான் நான் தங்கிக்கொண்டு தேர்தல் பணிகளை ஆற்றியதாகவும், அதை நிரூபிக்கத் தயார் என்றும் இந்த மன்றத்திலே குறிப்பிட்டு அது பதிவாகி இருக்கிறது. அவரே அதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம் என்று சொன்னபோது, நான் எழுந்து அப்படிப்பட்ட நிலமோ, வீடோ அங்கே எனக்கோ அல்லது என்னுடைய மகனுக்கோ இல்லை என்பதைத் தெரிவித்த பிறகும், அவர் அத்துடன் விடாமல் அதை நிருபிக்க தயார் எனவும், அறை கூவலைக் ஏற்றுக்கொண்டு ராஜினாமா செய்யத் தயார் எனவும் குறிப்பிட்டார்கள். அதற்கான ஆதாரங்களைத் தருவதாகவும் சொன்னார்கள். இந்த அவையினுடைய மரபு, தாங்கள், மரபைச் சுட்டிக்காட்டி விடுத்துள்ள ஆணையின்படி எந்த குற்றச்சாட்டைச் சொல்வதாக இருந்தாலும் அதற்கான ஆதாரங்கள் தேவை. அவைகளை தரவேண்டும் என்பதாகும். ஆனால் பிறகு தருகிறேன் என்று சொல்லப்பட்ட அந்த ஆதாரம் இதுவரையில் தரப்பட்டதாகத் தெரியவில்லை. அந்த இடம் தேனியில், முத்துதேவன்பட்டியில் தேர்தல் பணிகளுக்காக நான் தங்கியிருந்த அந்த இடம் கம்பம் மறைந்து விட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராசன் அவர்கள்



குடும்பத்தில் அவர்களுடைய மைனர் குழந்தைகளுக்காக வாங்கப்பட்ட இடம். மொத்த பரப்பளவு 8 ஏக்கர் 74 செண்ட்டுகள். அதற்கான ஆறு பத்திரங்களை நான் தங்களிடத்திலே அப்போதே ஒப்படைத்து இருக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவை தாங்கள் கூட்டியபோது, அந்த பத்திரங்களை அலுவல் ஆய்வுக் குழுவில் கட்சித் தலைவர்களிடத்தில் நான் காட்டியிருக்கிறேன். யாருடைய பெயர்களில் அந்த பத்திரங்கள் எழுதப்பட்டிருக்கிறதென்று அதுகுறித்து தாங்கள் தீர்ப்பு அளிப்பதாகச் சொன்னீர்கள். நான் அடுத்து ஒரு முறை இந்த அவையிலே பிரச்னையை எழுப்பியபோது விரைவில் தீர்ப்பு அளிப்பதாகச் சொன்னீர்கள். பிறகு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் நான் தங்களிடத்தில் கேட்டபோது உள்ளாட்சித் துறை அமைச்சர் இல்லத்திலே திருமணம் முடிந்த பிறகு அந்தப் பிரச்னை குறித்து பேசலாம் என்று சொன்னீர்கள். இதுவரையில் நான் பொறுமையாக இருந்தேன். இதுவரையில் பொறுமையாக இருந்தேன் என்றால் இனி பொறுமையாக இருக்க மாட்டேன் என்ற பொருள் அல்ல. இனியும் பொறுமையாக இருக்கத்தான் விரும்புகிறேன். ஒரு தவறான குற்றச்சாட்டு என் மீது சாட்டப்பட்டது பற்றி நாட்டிற்கு உண்மை தெரியவேண்டும் என்ற காரணத்திற்காக இந்த அவையில் அவர்கள் வலியுறுத்தி பேசிய காரணத்தாலே நான் அளித்த ஆதாரத்தைப் போல ஏதாவது தங்களிடத்திலே அளிக்கப்பட்டிருக்கிறதா? இப்படி ஆதாரம் அளிக்காமல் குற்றச்சாட்டைச் சொல்லலாம் என்று வந்துவிடுமேயானால் இனி எஞ்சியிருக்கிற சட்டமன்றக் கூட்ட நாட்களில் எதிர்க்கட்சியிலே இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் ஆதாரம் எதுவும் அளிக்காமல் குற்றச்சாட்டுகளைச் சொல்லி விட்டு பிறகு ஆதாரம் அளிக்க தவணை கேட்டால் என்ன செய்வது என்கிற ஒரு சிக்கலான பிரச்னையை தாங்கள் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்-

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி நான் அமைச்சரிடத்திலே நேற்றைக்கு முன்தினம் கேட்டேன். அவர்களை விசாரித்தபோது திருமண அலுவல் காரணமாக கொஞ்சம் தவணை வேண்டுமென்று கேட்டார்கள். ஆறு நாட்கள் தவணை தந்திருக்கிறேன். 4-ஆம் தேதி மீண்டும் சட்டமன்றம் கூடுகிற போது அவர்கள் ஏதாவது சான்றுகள் இருந்தால் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சான்றுகள் கொடுத்தால் அதை அலுவல் ஆய்வுக் குழுவிலே வைப்பதற்குத் தயாராக இருக்கிறேன் தராவிட்டாலும் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தைக் கூட்டி அந்தச் செய்தியை நான் தந்துவிடுகிறேன். அதுவரையில் பொறுத்திருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இதுபோன்ற ஒரு மரபு அல்லது உறுப்பினர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட்டு ஆதாரம் தருவதற்கு தவணை கேட்டுக்கொண்டேயிருந்தால், அப்படி ஒரு மரபு இந்த அவையிலே உண்டாகக் கூடாது என்று தாங்கள் ஏற்கெனவே மிக கடுமையான ஆணை

தேவையான ஒரு ஆணையை பிறப்பித்திருக்கிறீர்கள். அந்த ஆணை இப்போது அமைச்சரவையிலேயே மீறப்பட்டுள்ளது முறைதானா என்பது தான் என்னுடைய கேள்வி.

திரு. என். எஸ் வி. சித்தன்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, 26 ஆம் தேதிக்குள்ளாக ஆதாரத்தை உங்களிடம் கொடுப்பதாக கூறியதாக நீங்கள் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் சொன்னதாக நான் நினைக்கிறேன். 26-ம் தேதிக்குள் கொடுக்கமுடியாமல் ஒத்திப்போட்டதற்கு என்ன காரணம்? ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறார்களா? காட்டுவதற்கு தவணை கேட்கிறார்களா? இது மிக முக்கியமான பிரச்னையாக இருக்கிற காரணத்தால் விரைவாக தீர்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக தவணை தரப்பட்டிருக்கிறது. தவணை தருவது முறையல. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவையில் ஒருவரை பற்றி ஒருவர் குற்றச்சாட்டுச் சொல்லிக் கொண்டு பிறகு தவணை கேட்டுக் கொண்டிருந்தால் தொல்லையாகப் போய்விடும் என்பதை நன்றாக அறிவேன். இந்த பிரச்னை சுமுகமாக முடியவேண்டுமென்று விரும்புகிறேன். அதனாலே தான் கொஞ்சம் தவணைக்கு ஒப்புக்கொண்டிருக்கிறேன். அதைத் தவிர வேறு காரணம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: நான் தந்துள்ள ஆதாரப் பத்திரங்களைத் தாங்கள் படித்துப் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அது 8 ஏக்கரா 74 சென்ட் என்பதையும் நடராஜனுடைய மைனர் குழந்தைகள் பெயரால் வாங்கப்பட்ட சொத்து என்பதையும் அதையாவது தாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பார்த்து விட்டேன். நான் வழக்குமன்றமாக நடத்த விரும்பவில்லை. அந்தப் பத்திரங்களில் இருப்பது 8 ஏக்கரா, 74 சென்ட்–நடராஜன் குழந்தைகளுக்குரியது என்பது தவறான கருத்தல்ல. அதிலே ஒன்றும் மறுப்பதற்கு இல்லை. நான் அந்த ஊருக்குப்போனதும் இல்லை. பார்த்ததும் இல்லை. ஆகவே, என்னைப் போய் ஆதாரத்தைக் காட்டி, நீங்கள் சிக்கலிலே வைப்பது நல்லதல்ல.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### திருச்செந்தூர் அரசு மருத்துவ மனையில் ஒரு பெண்ணிற்கு ஏற்பட்ட மரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், டி. மணி, கே. ஆர். சுந்தரம், என். வரதராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ஏ. சாகுல் ஹமீது, வி. அப்பாதுரை, ஆகியோர், "கடந்த 25–3–1983 அன்று



திருச்செந்தூர் அரசு மருத்துவ மனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட 27 வயது கோமு அம்மாள், கருத்தடை செய்வதற்காக ஊசி போடப்பட்டு இறந்து விட்டதால் அந்தப் பகுதி முழுவதிலுமுள்ள பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு தி. கா. நல்லப்பன்: தலைவர் அவர்களே, நானும் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பெயர் குறிப்பிட்டவர்கள் மட்டும்தான் கொடுத்திருக்கிறார்கள். திரு. நல்லப்பன் இது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-3-1983 அன்று நெல்லை மாவட்டம் திருச்செந்தூர் மருத்துவ மனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட கோமு அம்மாள் என்ற 27 வயது நிரம்பப்பெற்ற பெண் பிரசவத்திற்குப் பிறகு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டுமென்பதற்காக போடப்பட்ட ஊசியினால் இறந்தார் என்பது குறித்து இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மருத்துவ மனையில் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ள வேண்டுமென்று விரும்புகின்ற மக்களுக்கு ஒரு பெரிய பீதியை உண்டாக்குகின்ற சம்பவமாக இந்தச் சம்பவம் அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்திய அரசாங்கமும், தமிழக சர்க்காரும், ஏன் உலகமே விரும்புகின்ற இந்தக் குடும்பக் கட்டுப்பாட்டைச் செய்து கொள்வதற்காக முன்வருகின்ற பொதுமக்கள் மத்தியில் ஒருவித பீதியை உருவாக்குகின்ற நிலையில் அந்த மருத்துவ மனையில் இறப்பு எடுத்துக் காட்டுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே, இப்பொழுது நம்முடைய அமைச்சர் கூட அடிக்கடி சொல்வார், விழாக்களிலும் சொல்லிவருகிறார், குடும்பக் கட்டுப்பாடு ரொம்ப எளிமையாக்கப்பட்டிருக்கிறது என்று.

(முற்பகல் 10-10)

எளிமையாக மட்டுமல்ல; குறுகிய காலத்திலேயும்கூட செய்து கொள்ளக் கூடியதாக ஆக்கப்பட்டிருக்கிறது என்றும், நவீன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டு கையாளப்படுகின்றன என்றெல்லாம் இங்கே அந்தக் குடும்பக் கட்டுப்பாட்டைப்பற்றி மிகச் சிறப்பாக அடிக்கடி சொல்வதை நாம் பார்க்கிறோம். லெப்ரஸ்கோப் என்ற முறை. அந்த முறை நல்லமுறைதான் என்று அந்த முறையைத் தெரிந்தவர்கள் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் அந்த முறையே தவறான முறையோ என்ற அச்சத்தை

உண்டாக்கி, குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டுமென்று விரும்புகின்ற பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்துகின்ற ஒரு நிலை அந்த மருத்துவமனையிலே போடப்பட்ட ஊசியினால் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மருத்துவமனைகளிலேயும் இதே கேஸ்தான். சமீபத்திலேகூட கஸ்தூரிபா ஹாஸ்பிடலில் ஒரு லேடி டாக்டர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருச்செந்தூரிலிருந்து கஸ்தூரிபா மருத்துவமனை வெகு தொலைவில் இருக்கிறது.

திரு. ப. பொன்னுரங்கம்: மருத்துவமனைகளில் ப்ராப்பர் அட்டென்ஷன் இல்லை என்பதற்காகத்தான் சொல்ல வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமராவதி ஆற்றிலே மீன் செத்தபொழுதே அதைப்பற்றித் தாங்கள் எழுப்புவீர்கள் என்று நினைத்தேன். (சிரிப்பு)

திரு. ப. பொன்னுரங்கம்: 'யூட்டரஸ் ரெமூவ்' செய்யச் சென்ற லேடி டாக்டர் இறந்து இருக்கிறார். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் ஆன உறுப்பினர்கள் முதலமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு ஹெல்த் மினிஸ்டர் அவர்களுக்கும் சொன்ன பிறகுதான் மருந்துகள் போகின்றன; டாக்டர்கள் போகிறார்கள், அந்த அளவிற்கு மருத்துவமனைகளில் அட்மினிஸ்ட்ரேஷன் சரியாக இல்லை என்ற அளவிற்கு இருக்கிறது. டாக்டர்கள் இல்லை; மருந்துகள் இல்லை அப்படியே மருந்துகள் இருந்தாலும்கூட அவைகள் முறையாகப் பயன்படுத்தப்படுவதில்லை.

நாம் கூடப் பார்க்கிறோம். பென்சிலின் ஊசி போட்டால் சிலருக்கு அலர்ஜி ஏற்படுகிறது. உடனடியாக அதற்கு மாற்று வழி கண்டு பிடிக்கிறோம். அதைபோல கருத்தடை போன்ற முக்கியமான விஷயங்களுக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கும்பொழுது வேறு ஏதாவது ஆபத்து ஏற்பட்டுவிட்டால் அதற்கு மாற்று கண்டு பிடிப்பதற்கு மருத்துவத்துறையில் வழியே இல்லையா? அப்படியிருந்தும் அ·· ஏன் செய்யப்படவில்லை? என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்னவென்றால் இப்படிப்பட்ட ஆபத்தான நிலை நாட்டில் ஏற்படக் கூடாது * * * * என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, இது முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் இப்படிப்பட்ட தகவல்களையெல்லாம் சொல்லி * * என்ற எண்ணம் வந்து விடக் கூடாது. ஆகவே, அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குமாறு ஆணையிடுகிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: * * அவைக்குறிப்பிலேயிருந்து மாத்திரம் நீக்குங்கள்: (சிரிப்பு)

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே; அந்தக் குடும்பம் ஒரு ஏழைக் குடும்பம் என்று கேள்விப்பட்டேன். ஏற்கனவே இரண்டு பிள்ளைகள் இருக்கின்றன; இப்பொழுது ஒரு பிள்ளை. மூன்றாவது பிள்ளை பிறந்த பிறகு அந்த ஸ்டெர்லிசேஷனுக்கு முயற்சித்திருக்கிறார்கள். எனவே, அந்தக் குடும்பத்திற்குச் சர்க்கார் நஷ்டயீடு கொடுப்பது போன்ற விவகாரங்களையெல்லாம் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும். இது மிகவும் முக்கியமான பிரச்சனை. உலகத் திட்டத்தின் எண்ணமான, இந்தியாவின் எண்ணமான, தமிழ்நாட்டின் எண்ணமான குடும்பக் கட்டுப்பாட்டை அழிக்கக்கூடிய நிலையில் அந்த மருத்துவமனை சம்பவம் அமைந்திருக்கிறது என்று சொல்லி, இதுபோன்ற விவரங்களையெல்லாம் விளக்கமாகவும், தெளிவாகவும் விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களையெல்லாம் ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, 25–3–83 ஆம் தேதியன்று வள்ளியூரைச் சேர்ந்த சோமு என்ற 25 வயதுடைய ஒரு பெண் மூன்றாவது பிரசவம் ஏற்பட்டதன் காரணமாக, இந்தக் கருத்தடை செய்யப்பட வேண்டியது அவசியம் என்று அவளிடம் பேசப்பட்டு, இன்னும் சொல்லப்போனால், அரசாங்கத்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுருக்கிறது; அந்த இலக்கை பூர்த்தி செய்ய வேண்டுமென்பதற்காக ஒரு அரசாங்க ஊழியர் அந்த அம்மாளிடம் விஷயங்களையெல்லாம் பேசி, அந்த ஊழியருக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கைச் சரிகட்டுவதற்காக அந்த அம்மாளிடம் பேசி, சம்மதத்தைப் பெற்று, அந்த அம்மையாரை கருத்தடை செய்து கொள்வதற்காகத் திருச்செந்தூர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அங்கு அழைத்துச் சென்று, அங்குள்ள ஒரு டாக்டர் அந்த அம்மையாருக்கு ஒரு ஊசியைப் போட்டிருக்கிறார். அவ்வாறு அந்த ஊசியைப் போட்டவுடனே அந்த அம்மையாருக்கு மயக்கம் ஏற்பட்டிருக்கிறது அவ்வாறு மயக்கம் ஏற்பட்டவுடன், முன்னெச்சரிக்கையுடன் இருந்திருந்தால் அல்லது மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தால் அந்தச் சாவைத் தவிர்க்கக் கூடிய வாய்ப்புகள் உண்டு என்றெல்லாம் எங்களுக்குத் தகவல்கள் வந்திருக்கின்றன இன்னும்கூட அந்தப் பகுதியிலே பேசப்படுகிறது. சமீப காலங்களிலே இப்படிப்பட்ட கருத்தடைகளை இந்த மாதிரியான ஊசி போடாமல், கடைசியாக வந்த நவீன இயந்திரத்தின் மூலமாக ஒரு நிமிட நேரத்திலே எந்தவிதமான சங்கடமும் இல்லாமல்கூட கருத்தடை செய்ய வாய்ப்புகள் இருக்கும் பொழுது அந்த மாதிரியான வாய்ப்புகளை உபயோகப்படுத்தாமல் இப்படி அவசர கோலத்தில் செய்யப்படுகிற அவசியம் ஏன் ஏற்பட்டது என்று அந்தப் பகுதியிலே ஒரு சந்தேகமான, பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆக டாக்டர்களுடைய அஜாக்கிரதையின் காரணமாகத் தான் இப்படிப்பட்ட சம்பவம்

ஏற்பட்டு, இன்றைக்கு அந்த அம்மையார் இறந்துவிட்டார்கள். அவர்களுக்கு ஏற்கனவே 2 குழந்தைகள், இப்பொழுது ஒன்று, ஆக 3 குழந்தைகள் இருக்கின்றன. கஷ்டப்படுகிற குடும்பம். இப்படிப் பட்ட நிலைமையிலே கூட்டிக்கொண்டுவந்த ஒவ்வொருவரும் நான் இல்லை, நீ இல்லை என்று நழுவி ஓடுகிற நிலை ஏற்பட்டு, இதன் காரணமாக அரசாங்கம் நிர்ணயித்த கருத்தடை பிரச்சாரம் செய்து, கருத்தடையைச் செய்வதற்கான இலக்கை நிறைவேற்ற இயலாத ஒரு அபாயகரமான நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதைபற்றியெல்லாம் விரிவாக விவாதித்து, இப்படிப்பட்ட சம்பவங்கள் இனி நிகழாது என்ற ஒரு நிலை ஏற்பட்டால்தான் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டமே வெற்றி பெறுவதற்கான ஒரு நிலையும் ஏற்படும். ஆகவே இவைகளையெல்லாம் பற்றி விரிவான முறையிலே விவாதிக்க இருப்பதோடு, அந்த இறந்த குடும்பத்திற்கு அரசாங்க தரப்பிலே நஷ்ட ஈடு கொடுத்து, அந்த குடும்பத்தைப் பராமரிக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது. அவைகளையெல்லாம் பற்றியும் விவாதித்து அந்தக் குடும்பத்தை பாதுகாப்பதற்கான நஷ்ட ஈடு கொடுப்பது உட்பட விவாதிக்க வேண்டி இருப்பதன் காரணமாக, இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25-ஆம் தேதி திருச்செந்தூர் மருத்துவ மனையிலே நடைபெற்ற அந்த சம்பவம் பற்றி திருச்செந்தூர் என்றாலே சமீப காலங்களிலே அரசியலில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்ட நிலையில். இன்றைக்கு மருத்துவமனையில் ஒரு தாய் அதுவும் தன்னுடைய மூன்றாவது பிரசவத்திற்குச் சென்று, கருத் தடையின்போது அங்கே ஊசி போட்டதன் மூலமாக அவர் சாகப் பட்டிருக்கிறார். அது எந்த அளவிற்கு இந்த அரசினுடைய— குறிப்பாக அந்த மருத்துவமனையில் இருக்கிற மருத்துவர்கள் எவ்வளவு அஜாக்கிரதையாக இதை கையாண்டிருக்கிறார்கள் என்று புரிகிறது. அதிலும் குறிப்பாக அந்த கோமு அம்மாள் தன்னுடைய மூன்றாவது பிரசவத்திற்கு மருத்துவ மனைக்குச் சென்ற நேரத்திலே இப்படி கருத்தடை என்ற பெயரால் அவருடைய உயிரைப் போக்கக்கூடிய அளவிற்கு இன்றைய நிலை இருக்கிறது என்றால், அதை எண்ணிப் பார்க்கவேண்டும். அந்த கோமு அம்மாள் இறந்ததோடு மட்டுமல்ல, அவருடைய மூன்று குழந்தைகளும் இன்றைக்கு பராமரிக்கக்கூடிய நிலையில் இல்லாமல் இன்றைக்கு பரிதாபத்திற்குரிய நிலை இருக்கிறது. இதன் விளைவாக திருச்செந்தூர்பகுதியிலேஏற்பட்டிருக்கிற பதட்டமான பரபரப்பான சூழ்நிலையைப் பற்றி விவாதிப்பதற்கும், அதே நேரத்திலே அந்த குழந்தைகளுக்காக அரசு நஷ்ட ஈடு தரவேண்டு மென்றும், நானும் மாண்புமிகு உறுப்பினரோடு சேர்ந்து, இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது சம்பந்தமாக விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, கடந்த 25 ஆம் தேதி திருச்செந்தூர் அரசு பொது மருந்துவமனையில் குடும்ப நலத்திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட கோமு என்ற பெண் இறந்திருக்கிறார்கள்.

அதேபோல நம்முடைய கஸ்தூரிபா காந்தி ஆஸ்பத்திரியிலே கூட டாக்டர் ஒருவர் இறந்துவிட்டார்கள். அதுபற்றிகூட நாம் இங்கே விவாதித்தோம்.

அதேபோல கோவில்பட்டியிலேகூட ஒரு தாய், 4 குழந்தை களை உடைய ஒரு தாய், நம்முடைய புதிய நவீன அறுவை சிகிச்சை செய்ததன் காரணமாக இறந்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது என்று எடுத்துச் சொன் னார்கள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்று சொன்னால், இதற்கு மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்கூடிய கருத்தடை சிகிச்சை செய்துகொண்டால், இறந்துவிடுகிறார்கள் என்ற ஐயப்பாடு ஏற்படும் என்று சொன்னால், இன்றைக்கு இந்த திட்டம் நிறைவேற்றப்படாமல் இன்றைக்கு அரசு மருத்துவமனை பற்றியும், ஒரு அவநம்பிக்கை மக்கள் மத்தியிலே ஏற்பட்டுவிடும். ஆகவே அப்படிப்பட்ட நிலைமை தமிழகத்திலே தொடரக்கூடாது என்றகாரணத்திற்காக இன்றைக்கு இறந்து இருக்கக்கூடிய கோமுவுக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். மிகவும் இளம் வயது. அந்தக் குடும்பத்திற்கு அரசாங்கம் போதிய நிதியுதவி கொடுப்பதோடு மட்டுமல்ல, இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகத்திலே தொடரக்கூடாது என்று விரிவாகவும், விளக்கமாகவும் விவாதிக்க வேண்டிய நிலைமைகள் உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில், இந்த அவையின் பிற அலுவல் களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவிரும்பு கிறேன்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 19-3-1983 அன்று கோமு என்கிற பெண்மணி 25 வயது? அவர்கள் அங்கே மருத்துவமனையிலே மூன்றாவது குழந்தை பிறப்பதற்காக அனுமதிக்கப்பட்டார்கள். 21-3-1983 அன்று 10-3/4 மணிக்கு குழந்தை பிறந்தது. 25ஆம் தேதியன்று அவர்களுக்காக அங்கே பில்பிரல் ஸ்டெர்லைசேசன் என்று, குழந்தைப் பிறந்ததற்குப் பிறகு ஒரு அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். இந்த குழந்தை பிறந்ததற்குப் பிறகு அறுவைச்சிகிச்சை செய்கிற நேரத்திலே (குறுக்கீடு). பெரிய பெரிய விஷயங்களை எல்லாம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள், ஆகவே நீங்கள் இதை தயவு செய்து கேட்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே 10-3/4 மணிக்கு ஆபரேஷன் செய்தார்கள். பில்பிரல் ஸ்டெர்லைசேசன் என்றால், குழந்தைப் பிறந்ததற்குப் பிறகு

நடத்துகின்ற அந்த அறுவைச் சிகிச்சைக்கு அப்படிப்பட்ட ஒரு பெயர் இருக்கிறது. இந்த அறுவைச் சிகிச்சை செய்யவேண்டும் என்றால், லேப்ரோஸ்கோப் செய்யமுடியாது. லேப்ரோஸ்கோப் என்றால் இந்தக் குழந்தை பிறந்தவுடனே செய்யமுடியாத ஒரு அறுவைச் சிகிச்சை. அதை வெகு எளிதில் கிட்டத்தட்ட ஒரு 5 நிமிடங்களுக்குள்ளே செய்யக்கூடிய ஒரு அறுவைச் சிகிச்சை. 3 குழந்தை பிறந்ததற்குப் பிறகு அறுவைச் சிகிச்சை செய்து கொள்கிறேன் என்று சொல்லி, அவர்கள் அதற்காக ஒத்துக் கொண்டார்கள். அப்போது அனஸ்திசியா கொடுப்பதற்காக அங்கே டாக்டர் ஏற்பாடு செய்தார்கள். இந்த அனஸ்திசியாவுக்குப் பின்பாக, பிரி-மெடிகேசன் என்று ஒன்று இருக்கிறது. அதையும் செய்திருக்கிறார்களா என்று நான் விசாரித்ததிலே நமக்கு கொடுத்திருக்கக்கூடிய விவரத்தின் அடிப்படையில், கொடுக்கவேண்டிய அந்த மருந்துகள் எல்லாம் அவர்களுக்கு கொடுத்தார்கள். பிறகு அவர்களுக்கு பல்ஸ் குறைந்தது. ரெஸ்பிரேட்டரி செய்ததினால் இறந்ததாக தகவல் கொடுத்திருக்கிறார்கள். நான் ஒரு முக்கியமான ஒரு கருத்தை இந்த நேரத்திலே சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். யாரும் தவறாக எண்ணிவிடக்கூடாது. நாம் லட்சக்கணக்கான அறுவைச் சிகிச்சைகள்; குறிப்பாக கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்து காண்டு வருகிறோம். ஏறக்குறைய இந்த ஆண்டு நல்ல வகையிலே இலக்கை எட்டுவதாக இருக்கிறோம். சென்ற ஆண்டும் செய்திருக்கிறோம். இதுவரையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எத்தனை நடந்திருக்கிறது என்றால், நாம் லேப்ரோஸ்கோப் செய்யக்கூடிய நேரத்திலே ஏற்பட்ட ஒரு விபத்து அல்ல. குழந்தை பிறந்ததற்குப் பிறகு அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவேண்டும் என்று தாமாகவே அவர்கள் முன் வந்த நேரத்திலே அனஸ்திசியா கொடுக்கின்ற நேரத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு விபத்து. இதிலே நான் வேதனையோடு சொல்கிறேன். நம்முடைய மதிப்பிற்குரிய கடையநல்லூர் எம்.எல்.ஏ. அவர்கள் பயன்படுத்தி இருக்கக்கூடிய வார்த்தைகள் அப்போசிசன் என்றால், இதை வைத்துக்கூட நாம் தாக்குவதற்கு உரிமை உண்டு. ஆனால், நாம் எப்படிப்பட்ட ஒரு வேலையிலே ஈடுபட்டுக் காண்டு இருக்கிறோம் என்பதை ஒரு தேசிய கண்ணோட்டத்துடன் நாம் பார்க்க வேண்டும் என்பதற்சாகத் தான் நான் தாழ்மையுடன் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். சாக அடிக்கப்பட்டார் என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய ஒரு வார்த்தை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி உங்களுக்கு வேதனை இருக்கிறதோ அந்த மாதிரி எனக்கும் இருக்கிறது. வார்த்தையை பயன்படுத்துவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் எப்படிப்பட்ட வார்த்தைகள் எந்தக் கட்டத்திலே நாம் பயன்படுத்துகிறோம் என்பதைப் பார்க்க வேண்டும். இதிலே அரசியலைக் கொண்டுவந்து புகுத்தவேண்டிய அவசியம் இல்லை. அரசியல் ரீதியாக நாம் மோதுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அது அல்ல பிரச்னை. அங்கே தயவுசெய்து நான் கேட்டுக்சொள்வது என்னவென்றால், (குறுக்கீடு) உங்களைபோல எனக்கும் ஒரு மனம் இருக்கிறது,



மனம் வெந்துதான் போகிறது. இதற்காகத்தான் சொல்கிறேன். இதிலே நீங்கள் சொல்லி இருக்கின்ற வார்த்தைகள், அவர்கள் சாக அடிக்கப்பட்டார்கள் என்று வேறு விசயங்களை எல்லாம் நீங்கள் ஜோடித்துப் பேசவேண்டிய அவசியம் இல்லை. ஒரு உதாரணம் சொல்ல வேண்டும் என்றால், ஒருவருக்கு பெனிசிலின் ஊசி போடுகிறோம், அப்படி பெனிசிலின் ஊசி போடுகின்ற நேரத்திலே மிக எச்சரிக்கையாக அனபலர்ட்டிக் ரியாக்சன் வருகிறதா என்று, அதற்காக டெஸ்ட் ஊசி தமிழிலே நாம் வழக்கமாக சொல்வது, அது சரியான வார்த்தையல்ல-அதை டெஸ்ட் டோஸ் என்று சொல்வார்கள், பாயிண்ட் 1 சி.சி. சொடுத்து பேச் எப்படி வருகிறது என்பதைப் பார்த்து அதற்காகத் தான் ஊசி போடுகிறார்கள். ஆனால் சில நேரங்களிலே பெனிசிலின் போடுகிற நேரத்திலே அந்த டெஸ்ட் டோஸ் போடுகின்ற நேரத்திலே இறந்து போகக்கூடிய நிலை ஏற்படுகிறது. அது ஒரு விபத்து, ஒரு கலாமிட்டி, ஒரு டிசாஸ்டர். அப்படி இருக்கக்கூடிய நிலைமை உலகத்தின் எல்லாப் பகுதியிலும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிலே இருக்கிறது. நான் இதை குறைத்து மதிப்பிடுகிறேன் என்று தயவுசெய்து யாரும் எண்ணவேண்டாம். நீங்கள் இப்போது பேசியதைவிட கடுமையாக நான் இலாகா ரீதியாக நடவடிக்கை எடுத்து கொண்டிருக்கிறேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே தேசிய கண்ணோட்டத்தோடு ஒட்டிப் பேசுவது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் கடந்த 15 ஆண்டுகளாக, எதிர்க் கட்சியில் இருந்தபோது பல விபத்துக்கள் இப்படி ஏற்பட்ட போதெல்லாம் நான் கேள்வி ரீதியாக கொண்டுவராமல் இருந்ததில்லை. அந்த நேரத்திலே யார் அமைச்சராக இருந்தாலும், அவர்களிடம் அணுகி இருக்கிறேன். அன்றைக்கு இருக்கக்கூடிய எந்த அமைச்சராக இருந்தாலும் நான் எதிர்க்கட்சியிலே இருக்கின்றபோது வேறு வகையிலேயும் நான் கடுமையாக சாடியிருக்கிறேன்.

But I never made these important items, as items for hitting the Ruling party.

ஏன் என்றால், அப்படி நாம் செய்வதன் மூலமாக என்ன ஆகும் என்றால், அனாவசியமாக ஒரு பீதி ஏற்பட்டுவிடும். இதிலே லேப்ராஸ்கோப் ஆப்பரேசன் கிடையாது. அறுவைச் சிகச்சை செய்யவேண்டிய இடத்திலே ஏற்பட்ட விபத்து அல்ல. அனஸ்திசியாக கொடுக்கின்ற நேரத்திலே, அந்த அனஸ்திசியாவுக்கு ஒரு அனபலாட்டிக் ஷாக்காக அங்கே வந்திருக்கிறது. நாம் இங்கே மிக முக்கியமாக கவனிக்க விரும்புவது. தேச மனப்பான்மையோடு விரும்பக்கூடிய ஒரு காரியம், தாய்க்குலம் என்று நினைக்கக்கூடிய ஒரு பெண்மணியை நாம் இழந்திருக்கிறோம்.

இது வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் இதிலே ஒரு பெரிய பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்று சொல்வதாலே அந்தப் பகுதியில் ஒரு விரும்பத்தகாத நிலைமையை நாம் உருவாக்கிக்கொண்டு வருகிறோம். என்பதை நான் மிகத் தாழ்மையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பிரச்னை குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வருவதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்த வகையில் உரிமை இருக்கிறதோ அதேபோல் இந்தக் கருத்தை இங்கே எடுத்து வைப்பதற்கும் எனக்கு உரிமை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். 20 ஆண்டுகாலமாக எதிர்க் கட்சியில் இருந்தவன் என்ற உரிமையை வைத்துச் சொல்கிறேன், ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் அது எதற்காக கொண்டு வரவேண்டுமென்றால், அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையில் இருந்து தவறி இருக்கிறது என்கிற நிலைமையில்தான், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டும். இந்தப் பிரச்னையில் அரசாங்கம் செய்ய வேண்டிய கடமையில் இருந்து இம்மியளவும் தவறவில்லை. அப்படி யிருக்கிற நேரத்தில், ஒரு பெரிய பதட்ட நிலை எதுவும் அங்கே இல்லை. பதட்ட நிலை இருப்பது போன்ற ஒரு கற்பனையை இந்த மன்றத்திலே எடுத்து வைக்கத் தேவையில்லை என்பதை நான் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தின் தலைவர் அவர்களே, இங்கே அவசர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொது நிகழ்வினைக் குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் நம்முடைய பேரவைத் தலைவரிடத்தில் கொடுக்கப்பட்டு, அதைத் தாங்கள் ஆய்வு செய்து பிரைமா பேசி அதை ஒத்திவைப்பதற்கு எடுத்துக்கொள்ளலாமா வேண்டாமா என்பதை விளக்கிச்சொல்லி அனுமதித்து, அதற்கு அமைச்சர் விளக்கம் அளிக்கிற, அந்த வகையில் அந்தப் பிரச்னை பற்றி இங்கே அவையின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு பள்ளிக்கூட வாத்தியார்போல் சொல்லிக்கொண்டு இருப்பது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி இங்கே எடுத்துச்சொல்கிறபோது, அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற வகையில் உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். அதை எடுத்துக்கொள்ளத் தேவையில்லை, அரசு இன்னின்ன காரியங்களைச் செய்து இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் தருகின்றார். அந்த வகையில் இங்கே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்படுவதன் மூலமாக மக்கள் கருத்துக்களை அறிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அதுதான் ஒத்திவைப்புத்தீர்மானத்தின் தாத்பர்யம், தத்துவம். சில நேரங்களில் மிக முக்கியமான பிரச்னைகள் மீதான



ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. சில நேரங்களில், பல்வேறு காரணங்களினால், மிக முக்கியம் அல்லாத பிரச்னைகள்கூட எடுத்துக்கொள்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் இருந்து விளக்கம் பெறவேண்டும் என்ற அடிப் படையில் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுவதால், அந்த வகையில் அது எடுத்துக்கொள்ளப்பட்டு, நிலைமைகள் தெளிவாக்க வழிவகை செய்யப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் சொல்கிற கருத்துக்களை அருள்கூர்ந்து அமைதியாக உறுப்பினர்கள் கேட்கவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தயவுசெய்து யாரும் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எந்த அளவிற்கு இந்தப் பிரச்னை முக்கியதுவம் வாய்ந்தது, பதட்டநிலை இதனால் ஏற்பட் டுள்ளது என்பதை விளக்குவதற்குக் கடமைப்பட்டு இருக்கிறார் களோ, உரிமைப்பெற்று இருக்கிறார்களோ அதைப்போல, அரசாங்கம் தன்னுடைய கடமையில் இருந்து தவறவில்லை, முழுப்பொறுப்புடன் நடந்து கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. அவர்கள் சொல்கிற நேரத்தில் நான் குறுக்கிடவில்லை. அவர் எப்படி அவருடைய கருத்துக்களை இங்கே எடுத்து வைத்து வாதாடுகிறார்களோ, அதைப்போல அங்கேயொன்றும் பதட்ட நிலைமை இல்லை, அரசாங்கம் கடமையைச் செய்து இருக்கிறது என்று சொல்வது என்னுடைய கடமை. ஆகவே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்று கொண்டு வருகிறபோது இப்படிப்பட்ட பிரச்னை காரணமாக அங்கே பதட்ட நிலை ஏற்பட்டுள்ளது என்றுகொண்டு வருவதன் காரணமாக அது வீணான ஒரு கற்பனையை அங்கே உருவாக்கியிருக்கிறது. அந்த வகையில் இந்தச் செய்யவேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே,—ப்ளீஸ் பி காம்—அமைதியாக இருங்கள் - இப்படிப் பட்ட பிரச்னைகளைக் கொண்டு வர உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்களுக்கு உரிமை இருப்பதுபோல் எனக்கும் உரிமை இருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி இங்கே சொல்லிக்கொள்கிறேன்,

இந்தப் பிரச்னையை எடுத்து விவாதிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் கூறுவதைப்போல், எனக்கும் இந்த நடவடிக் கைகளை எடுத்துள்ள காரணத்தால் இதைப்பற்றி ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்று சொல்கிற உரிமை எனக்கும் இருக்கிறது.

(முற்பகல் 10·30)

அடுத்து ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் ஏராளமான கருத்தடை அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. ஆனால் மிகக்குறைவான அளவிலே தான் சேதம் ஏற்படுகிறது என்பதை நான் மிகத் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேமாதிரியாக, அடுத்து ஒரு கேள்வியைக் கேட்டார்கள். இறந்து போனவர் குடும்பத்திற்கு உதவித் தொகை அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். எவ்வளவு தொகை கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு கொடுக்கலாம்; மற்றுள்ள உதவி களையும் செய்ய அரசு தயாராக இருக்கிறது; அதற்கு அரசு உடனடியாக உத்தரவு போட தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய இந்த விளக்கத்திற்குப் பிறகு மேலும் இது குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப்பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 2. தகவல் கோரல்—(தொடர்ச்சி).

### ஆ. உறுப்பினர்களுக்கென விடுதியில் இருந்து சட்டமன்றம் வரை விடப்படும் பேருந்தில் வெளியாரை அனுமதிப்பது.

*திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இன்று காலையில் நடந்திருக்கிற ஒரு நிகழ்ச்சியின் செய்தி தொகுப்பை உங்களுக்குத் தந்து, உங்கள் மூலமாக ஜனநாயக முறையில் கடமையாற்றுகின்றவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று காலை 9.15 மணிக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வருகின்ற ஒரு பேருந்திலே நிருபர் ஒருவர் — உமாபதி என்பது அவருடைய பெயர் — ஏறியபோது எவ்வளவோ சொல்லியும் அந்த பஸ்ஸை ஓட்டுகிறவர் அவரை கீழ்த்தரமாக, கேவலமாகப் பேசி, தரக்குறைவாகப் பேசி, கீழே இறக்கிவிட்டுவிட்டார். சட்ட மன்ற உறுப்பினர்கள் வருகின்ற பேருந்திலே மற்றவர்கள் ஏறக்கூடாது என்பது ஒரு விதி இருந்தாலும் நிருபர் ஒருவர் வரும்போது, அந்த நிருபர் எவ்வளவோ சொல்லியும் அக்ரடிட்டேஷன் கார்டைக் காட்டியும், சட்டமன்ற நுழைவுப் பாஸைக் காட்டியும் கேட்காமல் அவரை தரக்குறைவாகப் பேசி, கட்டாயப்படுத்தி கீழே இறக்கி விட்டார் ஓட்டுநர். ஜனநாயகத்தின் 'ஃபோர்த் எஸ்டேட்'டில் பணியாற்றக் கூடியவர் அவர். அவருடைய சிரமத்தை மனதிலே கொண்டு, அவருக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் பாதுகாப்பு கொடுப்பதற்கும் மாற்று ஏற்பாடு செய்வதற்கும் வழி செய்து, அவர்கள் நெஞ்சத்திலே இருக்கிற துன்பத்தையும் துயரத்தையும் துடைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடந்த நிகழ்ச்சி வருந்தத் தக்கது. ஆனால் சட்டமன்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அவசரமாக, வேகமாக வரவேண்டும். அதற்காக அவர்களுக்கு என்று 3, 4 சிறிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 4 தினங்களுக்கு முன்னால் இந்த மன்றத்திலே ஒரு பிரச்சனை எழுப்பப்பட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். இதிலே இருக்கிற பிரச்சனை என்னவென்றால் உறுப்பினர்கள் வருகின்ற பேருந்து களில் மற்றவர்களும் ஏறுவதாக இருந்தால் உறுப்பினர்களுக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது என்று குறைபட்டுக் கொண்டார்கள். அதனால்தான் அவர்களுடைய குறையை போக்குகின்ற வகையில் உறுப்பினர்கள் வருகின்ற வண்டிகளில் மற்றவர்கள் ஏறவேண்டாம், வேறு பெரிய பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. அவற்றிலே அவர்கள் வரலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அந்த வகையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினருடன் இன்னொருவர் வரலாம் என்று 'பாஸ்' இருந்தாலும் அதை மற்ற நெடுந்தூரம் செல்லுகின்ற பஸ்களிலே பயன்படுத்திக்கொள்ளலாம்; அங்கே தடை இல்லை; உறுப்பினர்களுக்கு அவர்களுடன் ஒருவரை அழைத்துச் செல்ல உரிமை இருக்கிறது.

சட்டமன்ற விடுதியிலிருந்தும் பெரிய வண்டிகள் விடப் படுகின்றன. அவற்றிலே யார் வேண்டுமானாலும் ஏறிக் கொள்ளலாம். ஆனால் உறுப்பினர்களுக்கு என்று விடப் பட்டிருக்கின்ற சிறு வண்டிகளில் மற்றவர்கள் வருவதை தவிர்க்க வேண்டும். உறுப்பினர்கள் வேகமாக, அவசரமாக அவைக்கு வரவேண்டும் என்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நான் நிருபர்களை எல்லாம் கேட்டுக் காள்கிறேன், நீங்கள் பெரிய வண்டிகளில் வரலாம்; அதற்குத் தடையில்லை. உறுப்பினர்கள் அவசரமாக வரவேண்டும் என்பதால் இந்த ஏற்பாடு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டிரைவர், கண்டக்டர் — அவர்கள் தொழிலாளர்கள். அவர்களுக்கு இடப்பட்ட உத்தரவை அவர்கள் நிறைவேற்று கிறார்கள். அதைத்தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை. அதுவும் உறுப்பினர்களின் வசதியைக் கருதிதான் இப்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. 9 மணிக்குப் பிறகு, உறுப்பினர்கள் குறைவாக இருந்தால். அப்போது மற்றவர்களும் அந்த வண்டிகளைப் பயன்படுத்தினால் தவறில்லை. ஆனால் உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். எனவே, சட்டமன்றத்திற்கு அவசரமாக வரும்போது, மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றவர்களை அதே வண்டியில் ஏற்றிக்கொண்டு வராமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்பு.

### நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு 1983

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில், ''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை, சட்டமுன்வடிவு எண். 27/1983) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று, பரிந்துரைகள் ஏதுமின்றி திருப்பி அனுப்பப்பெற்றதாக, மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்திவரப் பெற்றுள்ளது.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) சென்னை பழவேற்காடு பகுதியில் மீனவர்களிடையே மோதல்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ''சென்னை பழவேற்காடு அருகே உள்ள திருப்பாலைவனம் என்ற ஊரில் 1-3-1983 அன்று இரு மீனவர் தரப்பினரிடையே நடந்த மோதல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

திருப்பாலைவனம் காவல் நிலையத்திலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள நடுவூர்க்குப்பம் என்ற கிராமத்தில் சுமார் 250 குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்களில் பெரும்பாலானவர்கள் கிறித்துவர்கள்; மீன்பிடி தொழிலை மேற்கொண்டவர்கள். பொது விஷயங்களைக் கவனிக்க, இக்கிராமத்தில் ஒரு பஞ்சாயத்து உள்ளது. 1979 ஆம் ஆண்டு வரை பஞ்சாயத்து உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர்.





ஆனால் 1979 ஆம் ஆண்டுக்குப் பின் திரு. கே. ஜே. தேவதாஸ் என்பவரின் கோரிக்கையின்படி தேர்தல் நடத்தப்பட்டு, 10 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. செல்வராஜ் என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. ஏ. அந்தோணி என்பவர் 2 ஓட்டு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். இத்தேர்தலுக்குப் பின்னரும், செல்வந்தரான திரு. தேவதாஸே கிராம மக்கள் மீது அதிகாரம் செலுத்தி வந்தார். கிராம விசாரணைகளில் தலையிட்டு ஒருதலைப் பட்சமாகச் செயல்பட்டு வந்தார். எனவே, தேவதாஸை விரும்பாத ஒரு தரப்பினர், அந்தோணியுடன் சேர்ந்து, கிராமப் பஞ்சாயத்து முடிவுகளை எதிர்த்து வந்தனர். இதனால் தேவதாஸ் தரப்பினர், பஞ்சாயத்துத் தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட அந்தோணி தரப்பினர் என்று இரு பிரிவுகள் தோன்றி, கிராமத்தில் அவ்வப்போது இரு தரப்பினருக்குமிடையே சச்சரவுகள் ஏற்பட்டு வந்தன. குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 107-வது பிரிவின்கீழ் இரு தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் 7-11-82 அன்றும் 28-11-82 அன்றும் சைதாப்பேட்டை உதவி மாவட்ட ஆட்சித் தலைவரால் அமைதிக் கூட்டம் கூட்டப்பட்டு, திங்களுக்கொரு முறை என்று மாறிமாறி தேவதாஸ் தரப்பினரும் அந்தோணி தரப்பினரும் கிராமக் கணக்கு வழக்குகளை நிர்வகித்து வருவது என்ற ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேவதாஸ் தரப்பினரும் 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அந்தோணி தரப்பினரும், பிப்ரவரி மாதம் மீண்டும் தேவதாஸ் தரப்பினரும் கிராமக் கணக்கு வழக்குகளை நிர்வகித்தனர். ஒப்பந்தப்படி, 3-3-83 அன்று தேவதாஸ் தரப்பினர் அந்தோணி தரப்பினரிடம் நிர்வாகத்தை ஒப்படைத்திருக்க வேண்டும். அந்தோணிக்கு கிராம மக்களின் ஆதரவு பெருகுவதைக் கண்டு ஆத்திரமடைந்த தேவதாஸும் அவரது ஆதரவாளர்களும், 8-3-83 அன்று நிர்வாகத்தை ஒப்படைக்க விரும்பவில்லை. 1-3-83 அன்று மாலை 6 30 மணியளவில் பழவேற்காட்டில், அந்தோணி தனது சகாக்களுடன் மாதா கோயிலுக்குச் சென்றுவிட்டு வெளியே வரும்போது, தேவதாஸ் தனது ஆதரவாளர்களுடன் கூடி அந்தோணியைத் துப்பாக்கியால் சுட்டார். மேலும் அந்தோணியை ஒழித்துவிடுமாறு கூச்சல் போட்டார். தேவதாஸின் ஆதரவாளர்கள் கைகளில் இரும்புக் குழாய்கள், கத்திகளுடன் அந்தோணியைத் தாக்க வரும்போது அந்தோணி ஓடினார். அப்போது, சின்னப்பன் என்ற முன்னாள் இராணுவ வீரர் ஒருவரிடமிருந்த துப்பாக்கியை பாலையா என்பவர் வாங்கி, அந்தோணியை நோக்கிச் சுட்டார். சாமராஜும் குழந்தை ராஜும் மற்றுமுள்ளவர்கள் அந்தோணியை இரும்புக் குழாய் முதலிய ஆயுதங்களால் தாக்கினர். இதனால் அந்தோணிக்கு தலை, இடது புஜம், வாய் போன்ற இடங்களில் காயம் ஏற்பட்டது. அந்தோணியைக் காப்பாற்ற வந்த சூசைமேரி சகாயம், காலிஸ்ராஜ் என்பவர்களும் தாக்கப்பட்டு காயமடைந்தனர். சம்பவம் நடைபெறும் இடத்தில் மக்கள் கூடுவதைப் பார்த்து, குற்றவாளிகள் ஆயுதங்களுடன் ஓடி விட்டனர்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1983 மார்ச் 31

2. இரவு 7-30 மணிக்கு திருப்பாலைவனம் காவல் நிலையத்திற்கு வந்து அந்தோணியே தகவல் கொடுத்தார். வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவர் ஸ்டான்லி மருத்துவ மனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டார். காயம் அடைந்த மற்ற மூவரும் மருத்துவ மனையில் உள் நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். தாக்குதலுக்குள்ளான காயமடைந்த நால்வரும் சிகிச்சை பெற்று திரும்பினர். குற்றம் சாட்டப்பட்டவருள் ஒருவர், அரசு பொது மருத்துவ மனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார்.

3. சம்பவம் பற்றிய தகவல் கிடைத்ததும், பொன்னேரி—எண்ணூர் காவல் துறை ஆய்வாளர்களும், திருவொற்றியூர் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரும் மற்ற அதிகாரிகளும் கிராமத்திற்கு உடனடியாகச் சென்று, மேலும் அசம்பாவிதம் ஏதும் நடக்காமல் தடுக்க தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து, விசாரணை நடத்தினர். சம்பவம் நடந்த இடத்திலிருந்து, இரத்தம் தோய்ந்த மண், சில குண்டுகள், காலித் தோட்டா ஒன்று ஆகியன கைப்பற்றப்பட்டன. குற்றவாளிகள் அனைவரும் அவர்களது குடும்பத்தினருடன் தலைமறைவாகி விட்டனர்.

4. தேவதாஸ் தரப்பினரே அந்தோணி தரப்பினரைத் தாக்கியுள்ளனர். தேவதாஸும் அவரது உறவினர் சின்னப்பனும் உரிமம் பெற்ற தங்களது துப்பாக்கிகளை ஏற்கனவே சென்னை சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள சம்பந்தம் அண்டு கம்பெனியில் 1981-ஆம் ஆண்டிலேயே பாதுகாப்பாக வைத்து விட்டனர். எனவே, இச்சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டவைகள் நாட்டுத் துப்பாக்கிகளே எனத் தெரிய வருகிறது. செல்வம், ஆரோக்கியசாமி, மைக்கேல், கோதண்டராமன், ஆரோக்கியம், லூர்து, ஜோசப் ஆகியவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர். தேவதாஸ் மற்றும் 6 பேர்கள் தலைமறைவாகிவிட்டனர். அவர்களைப் பிடிக்க தனியாக ஒரு காவற்படை ஏற்படுத்தப்பட்டது. இதற்கிடையில் மேற்கண்ட 7 நபர்களும் 23-3-83 அன்று சென்னை உயர் நீதி மன்றத்தில், அவர்கள் கடலூரில் தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில், முன் ஜாமீன் உத்தரவு பெற்றுள்ளனர்.

5. ஆயுதக் காவற்படைப் பிரிவு ஒன்றும், கண்ணீர்ப் புகைப் பிரிவு ஒன்றும், ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 6 காவலர்கள் அடங்கிய படை ஒன்றும் பந்தோபஸ்துக்காக அக்கிராமத்திலேயே உள்ளனர். நிலைமை தற்போது அமைதியாக உள்ளது. தனிப்பட்ட விரோதத்தால் எழுந்த இச்சம்பவம் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இவ்விரு தரப்பினரைத் தவிர, இவ்விஷயத்தில் கிராமத்திலுள்ள மற்றவர்களுக்கு அக்கறையில்லை. எனவே இப்பகுதி பொதுவாக அமைதியாக உள்ளது.



1983 மார்ச் 31]

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை-பழவேற்காடு அருகே உள்ள திருப்பாலைவனம் கிராமத்தில் 1979 ஆம் ஆண்டு முதல் மோதல் நடக்கிறது. அங்கே, அந்தோணி என்பவர் தலைமையில் ஒரு மீனவர் கோஷ்டியும் தேவதாஸ் என்பவரின் தலைமையில் ஒரு மீனவர் கோஷ்டியும் 1979 ஆம் ஆண்டு முதல் மோதிக் கொண்டேயிருக்கின்றன. இதனால் அங்கே பதட்ட நிலை ஏற்பட்டு, கத்தி, அரிவாள் போன்றவைகள் மோதிக் கொள்வதோடு, இப்போது துப்பாக்கி முதற்கொண்டு பரிமாறிக் கொள்கிற — சுடப்படுகிற ஒரு நிலைமை உள்ளது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில், அங்கே இருப்பவர்கள் கிறித்துவ சமுதாயத்தைச் சேர்ந்த மக்களாக இருப்பதால், அவர்களின் பாதிரிமாரையும் அழைத்து, இந்த இரு கோஷ்டித் தலைவரையும் அழைத்துப் பேசி, அவர்களுக்கிடையே சமாதானம் ஏற்படுவதற்கு உண்டான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சைதாப்பேட்டை உதவி மாவட்ட ஆட்சித் தலைவருடைய தலைமையில் அமைதிக் கூட்டம் கூட்டப்பெற்று, திங்களுக்கு ஒரு முறை மாறி மாறி இரு தரப்பினரும் அந்தக் கிராமத்தை நிர்வகிப்பதற்கு தலைமை தாங்குவார்கள் என்ற முடிவு ஏற்படுத்தப்பட்டு, இரண்டு மாதம் வரை அது அமைதியாக நடந்து வந்தது மறுபடியும் மாச்சரியங்கள் அவர்களிடையே ஏற்பட்டதன் விளைவாக, இப்படிப்பட்ட மோதல்கள் திரும்பவும் ஏற்பட்டு, விரும்பத் தகாத சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. அது பற்றி காவல் துறையினர் முறையான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். சிலர் கைது செய்யப்பட்டு காவலிலே வைக்கப்பட்டு, அவர்கள் கடலூரிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று ஜாமீனைப் பெற்று சென்றிருக்கிறார்கள். 6 பேர்களை இப்போது காவல் துறையினர் தேடிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தலைமறைவாக இருக்கிறார்கள். என்றாலும் அங்கே பாதுகாப்பு ஏற்பாடு செய்வதற்கு ஆயதக் காவற்படைப் பிரிவு ஒன்றும், கண்ணீர்ப் புகை பிரிவு ஒன்றும், ஓர் உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 6 காவலர்கள் அடங்கிய படை ஒன்றும் அங்கே நிரந்தரமாக வைக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்ற மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, இரு சாரரையும் அழைத்து, அந்த ஊரைச் சேர்ந்த பெரியவர்களையும், மதம் சம்பந்தப்பட்ட தலைவரையும் அழைத்து பேசி, அதன் மூலம் அமைதி ஏற்படுமேயானால் அதை உடனடியாக மேற்கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய முயற்சிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே ஏற்படுத்த முயன்றுக் கொண்டிருக்கிறார்கள்.

[1983 மார்ச் 31

**(ஆ) மூளைக்காய்ச்சல் நோயால் தமிழகத்தின் பல பகுதிகளில் பலர் பாதிக்கப்பட்டுள்ளது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் த. ஆறுமுகம் ரா. கிருஷ்ணன், டி. மணி, கே. எம். தங்கமணி, சோ. அழகர்சாமி எம். ஆறுமுகம், இரா. கருப்பையா, மற்றும் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. த. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ''அண்மை காலத்தில் திருநல்வேலி மாவட்டத்திலும், அரியலூர் மற்றும் தமிழகம் முழுவதும் மூளைக்காய்ச்சல் நோயால் பலர் இறந்துள்ளதால், அதைத் தடுக்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

''ஜப்பானிஸ் வைரஸ் மூளைக்காய்ச்சல்'' சாதாரணமாக பன்றி, குதிரை முதலிய கால்நடை விலங்கினங்களிடையே ஏற்படும் ஒரு நோயாகும். இந்நோய் ஒரு வகை சாக்கடை கொசுவினால் (CULEX) பரப்பப்படுகிறது. ஆனால் விலங்கினங்களிடையே இந்நோய் தகுந்த அறிகுறி இல்லாததால் வெளியில் தெரியாது.

2. கொசுக்களுக்கு தேவையான இரத்த உணவு விலங்கினங்களிடம் கிடைக்காத போது கொசுக்கள் மனிதரை தாக்குகின்றது. இது ஓர் எதிர்பாராத நோய் பரப்பும் நிகழ்ச்சியாகும். மனிதர்களுக்கு இந்நோய் தோன்றினால் 3 அல்லது 4 நாட்களுக்கு அதிக காய்ச்சலும் பின் நினைவிழத்தலும், வலிப்பு நோயும் தோன்றும். இவ்வகை ''மூளைக்காய்ச்சல்'' 5 வயது முதல் 15 வயது வரை உள்ளவர்களிடையே பெருமளவில் ஏற்படுகிறது.

3. தமிழ்நாட்டில் ஐயப்பாட்டிற்குரிய மூளைக்காய்ச்சல் நோய் 1977-ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் தோன்றியது. 1977, 1978, 1979, 1980, 1981, 1982, 1983-ம் ஆண்டுகளில் இந்நோயினால் வெவ்வேறு மாவட்டங்களில் பாதிக்கப்பட்டோர் இறந்தவர்கள் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.



1983 மார்ச் 31]

| மாவட்டம். | 1979 | | 1979 | | 1979 | | 1980 | | 1981 | | 1982 | | 1983 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பா | இ | பா | இ | பா | இ | பா | இ | பா | இ | பா | இ | பா | இ |
| (1) | (2) | | (3) | | (4) | | (5) | | (6) | | (7) | | (8) | |
| 1. செங்கல்பட்டு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 4 | 1 | 0 | 0 | 0 | 0 |
| 2. வடாற்காடு | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 203 | 535 | 49 | 10 | .. | .. |
| 3. தென்னாற்காடு | .. | .. | 135 | 16 | 5 | .. | 95 | 53 | 643 | 152 | 90 | 48 | 14 | 4 |
| 4. திருச்சிராபள்ளி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 30 | 10 | 8 | 3 | 1 | 1 |
| 5. தஞ்சாவூர் | .. | .. | .. | .. | 2 | 2 | .. | .. | 239 | 31 | 8 | 3 | 1 | 1 |
| 6. மதுரை | .. | .. | 18 | 8 | 14 | 1 | .. | .. | 7 | 1 | 22 | 3 | 3 | 2 |
| 7. சேலம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 49 | 9 | 6 | 2 | 0 | 0 |
| 8. தர்மபுரி | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7 | 3 | 1 | 0 | 0 | 0 |
| 9. இராமநாதபுரம் | .. | .. | 35 | 5 | .. | .. | .. | .. | 9 | 2 | 8 | 0 | 0 | 0 |
| 10 திருநெல்வேலி | 12 | 7 | 302 | 99 | 64 | 3 | 123 | 15 | 115 | 25 | 50 | 16 | 12 | 5 |
| மொத்தம் .. | 12 | 7 | 490 | 128 | 85 | 6 | 218 | 68 | 1305 | 827 | 242 | 83 | 50 | 12 |

பா — பாதிப்பு
இ — இறப்பு

4. 1979-80-ம் ஆண்டுகளில் சில மாவட்டங்களில் மட்டுமே இந்நோய் தோன்றி இதனால் பாதிக்கப்பட்டவரின் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது. 1981-ல் பல மாவட்டங்களில் இந்நோய் பரவி பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையும் கூடியது. வறட்சியால் பாதிக்கப்பட்டு பின் கூடுதல் மழையின் காரணமாக கொசுக்களின் எண்ணிக்கை பெருகியதால் 1981-ம் ஆண்டில் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தது.

5. இந்நோய் 1981-ல் அதிக அளவில் தோன்றியதன் காரணமாகவும் அண்டை மாநிலங்களிலும் பலர் பாதிக்கப்பட்டதாலும் இதைப்பற்றி விரிவான ஆலோசனை செய்ய மைய அரசின் சுகாதார அமைச்சர் அவர்களின் தலைமையில் 27-11-81 அன்று சென்னையில் தென் மாநில சுகாதார அமைச்சர்களும் சுகாதாரத்துறை அலுவலர்களும் இந்நோய் பற்றி அறிந்த நிபுணர்களும் கூடி விரிவான ஆலோசனை செய்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி முடிவெடுத்தார்கள்.

6. இந் நோயைக் கட்டுப்படுத்த இம்மாநிலத்தில் கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன :—

(1) பாதிக்கப்பட்ட பகுதிகளில் மருந்து தெளிப்பதற்கான குழுக்கள் அமைக்கப்பட்டு வீடுகளிலும், கால்நடை தொழுவங்களிலும் B.H.C. என்ற மருந்து தெளிக்கப்பட்டது.

(2) பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கோ வட்ட அல்லது மாவட்ட மருத்துவமனைகளுக்கோ எடுத்துச்செல்ல போக்குவரத்து வசதி செய்யப்பட்டது.

(3) மருத்துவ அலுவலர்கள் உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டியும் எந்தவிதமான சிகிச்சை எப்படியெப்படி அளிக்க வேண்டும் என்பதற்கு வேண்டிய குறிப்புகள் வழங்கப்பட்டது.

(4) ஏற்கனவே மாநிலத்தில் உள்ள கொசு மருந்தை புகையாக்கி அடிக்கும் இயந்திரங்களுடன் மைய அரசு வேறு மநிலத்திலிருந்து அனுப்பிய இயந்திரங்கள் மூலமாகவும பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரிவான அளவில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

(5) தேசிய நுண்கிருமிகள் நிறுவனத்தின் பெங்களூர் கிளையிலிருந்து ஒரு குழு வரவழைக்கப்பட்டு பாதிக்கப்பட்டோரின் இரத்த மாதிரிகளை ஆராய்ச்சிக்காக எடுத்துச் சென்றுள்ளது.



(6) பொது மக்கள் இந்த வியாதியைப் பற்றி எடுத்துக் கொள்ள வேண்டிய தடுப்பு நடவடிக்கைகளை குறிக்கும் துண்டு புத்தகங்கள் அச்சிடப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொடுக்கப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக இந்த வியாதியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1982-ம் ஆண்டில் வெகுவாக குறைந்துள்ளது. 1981, 1982-ல் பல மாவட்டங்களில் பரவியிருந்த நோய், 1983-ல் நான்கு மாவட்டங்களில் மட்டுமே தோன்றியுள்ளது. தென்னாற்காடு, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இதுவரை 30 பேர் பாதிக்கப்பட்டு 12 உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் அரியலூரில் எவரும் பாதிககப்படவில்லை.

7. இந்நோயை தடுக்க உபயோகப்படும் ஜப்பானிய வாக்ஸின் என்ற மருந்து போதுமான அளவு கிடைக்காததாலும் அதனுடைய விலை மிகக் கூடுதலாக இருப்பதாலும் மேலும் அதனால் பொருத்தளவு பாதுகாப்பு அளிக்க இயலாது என்பது நிபுணர்களின் கருத்தானதால் இந்நோய் பரவுவதை தடுப்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று தென் மாநில சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

8, பெருமளவில் சிறுவர்களை பாதிக்கும் இந்த நோயைக் கட்டுப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது என்றும் மேலும் மக்கள் நலம் காக்க வேண்டி எல்லாவித நடவடிக்கைகளையும் அரசு எவ்வித தயக்கமோ தடங்கலோ இன்றி எடுக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

**திரு. த. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கிட்டத்தட்ட 10 மாவட்டங்களில் மூளைக்காய்ச்சல் நோயால் மக்கள் பாதிக்கப்பட்டு, 1977-லேயிருந்து 1983 வரை, அது பற்றிய குறிப்புகள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-40)

ஆனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் அரியலூர் பகுதியில் எவரும் பாதிக்கப்படவில்லை என்று கொடுத்திருக்கின்றார்கள். ஆனால் திருச்சி மாவட்டம் அரியலூர், உடையார்பாளையம் போன்ற பகுதியில் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகாலமாக மூளைக் காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு 200-க்கு மேற்பட்ட குழந்தைகள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு கிட்டதட்ட 10 குழந்தைகள் இறந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் 1981-82-ஆம் ஆண்டில் இதற்கு சிக்சை மேற்கொள்ளப்பட்டதன் காரணத்தால் அந்தப் பகுதியில் ஓரளவுக்கு இது கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்த ஆண்டு அந்த மூளைக்காய்ச்சல் நோய் வந்து அங்கே உள்ள மருத்துவமனைகளில் சரியான முறையில்

சிகிச்சைகளை அளிக்கவில்லை. 1-3-1983 அன்று அரியலூர் பகுதியில் மூளைக் காய்ச்சல் நோய் ஏற்பட்டு பல குழந்தைகள் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று அரசு அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறோம். ஆனால் அதற்குப் பிறகும் அங்கே மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்ட குழந்தைகளுக்கு போதிய மருந்துகள் இல்லாததால் இரண்டு ஹையர் செகண்டரி படிக்கின்ற குழந்தைகள் இறந்திருக்கின்றார்கள். அதுபற்றிய விவரங்களை அதிகாரிகள் அரசுக்கு அறிவிக்காமல் மறைத்து இருக்கிறார்கள், அது வருந்தத்தக்கது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது உண்மையானதா அல்லது உண்மைக்குப் புறம்பானதா என்று கண்டறிய முன் வருவார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் புள்ளிவிவரம் நான் வைத்திருக்கிறேன். இந்த மூளைக் காய்ச்சலால் இந்த ஆண்டு யாரும் இறந்து போகவில்லை, சென்ற ஆண்டு அதாவது 1982 ஆம் ஆண்டு 8 பேர் நான் மொத்தமாகச் சொல்கிறேன்—8 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களில் 3 பேர் இறந்து இருக்கிறார்கள் என்ற தகவல் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. 1981 ஆம் ஆண்டுதான் அது கடுமையாக இருந்திருக்கின்றது. இப்போது ரொம்பவும் குறைந்திருக்கின்றது. சில நேரங்களில் வேறு ஏதாவது காய்ச்சல் வந்து இறந்து போனால் அதாவது கைப்பர் வைரஸ் கன்வல்ஷன் போன்றவை வருகின்றது, அதனைக் கூட மூளைக் காய்ச்சல் என்று பரவலாகப் பேசக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஆகவே மூளைக் காய்ச்சலால் யாரும் இறந்து போகவில்லை என்ற தகவலை என்னிடத்திலே கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையின் 7 வது பாராவிலே இந்நோயைத் தடுக்க உபயோகப்படும் ஜப்பானிய வாக்ஸின் என்ற மருந்து போதுமான அளவு கிடைக்காததாலும் அதனுடைய விலை மிகக் கூடுதலாக இருப்பதாலும் மேலும் அதனால் பெருத்தளவு பாதுகாப்பு அளிக்க இயலாது என்பது நிபுணர்களின் கருத்தானதால் இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்று தென் மாநில சுகாதார அமைச்சர்களின் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த முக்கியத்துவம் என்ன? நிபுணர்களின் கருத்து ஏன் டெஸிமிஸ்டாக வந்திருக்கின்றது. மேலும் இந்திய—ஜப்பான் கூட்டு முயற்சியால் டெல்லிக்கு அருகே இந்த ஜப்பானிய வேக்ஸின் மருந்து தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. அங்கிருந்துகொண்டு வரப்படுகின்ற மருந்து போதுமானதாக இருக்கின்றதா? இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்பதை அறியவிரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாட்டில் இருக்கக்கூடிய கர்நாடக மாநிலம், ஆந்திரா மாநிலம், புதுவை மாநிலம், தமிழம் போன்ற இடங்களில்தான் இந்த நோய் பரவி இருந்திருக்கின்றது. இந்நோய் 19 1 ஆம் ஆண்டு ஏற்பட்டது, அதற்குப் பிறகு ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு வரக்கூடிய நிலைமை இருக்கின்றது. பெரும்பாலும் இந்த நோய் ஒரு வகையான கொசு, பன்றியின் மீது உட்கார்ந்து அதைக் கடித்து பின்னர் மனிதனைக் கடிப்பதால்தான் வருகின்றது. இந்த நோயை ஒட்டுமொத்தமாக ஒழிப்பதற்கு ஆல்டர்னேட் பேஸிஸ்லே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் சங்கரானந்த் அவர்கள் சொன்னது போன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கின்றது. இந்தப் பன்றிகளை தெருக்களிலே அதிகமாக நடமாட விடாமல் செய்வது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் ஒட்டு மொத்தமாக இந்த வியாதி பரவுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று நான் குறிப்பிட்ட தென் மாநிலங்களில் எல்லாம் உள்ள மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டங்களைத் தீட்டி இருக்கிறார்கள். அடுத்து வேக்ஸின் என்பதைப் பொறுத்தவரையில் நிறைய தேவைப்படுகின்றன. ஜப்பான் போன்ற நல்ல முன்னேற்றம் அடைந்து இருக்கின்ற நாடுகளில் கூட அது தேவைப்படுகின்ற அளவுக்கு அந்த வியாதி இருக்கின்றது. மேலும் அந்த வேக்ஸினுக்கு ஏராளமான டாலர் பணம் கொடுக்க வேண்டி இருக்கின்றது. ஆகவே இந்த வேக்ஸினை தரவழைத்து செய்ய முடியாது என்பதற்காக நாம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். பன்றியை அதிகமாக நடமாட விடாமல் செய்வது போன்ற இப்படிப்பட்ட சில தடுப்பு நடவடிக்கைகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக இந்த ஆண்டு மிகவும் நல்லவகையில் இந்த நோய் குறைந்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைத்திருக்கக்கூடிய அறிக்கையிலே இந்த மூளைக் காய்ச்சலுக்கு அடிப்படையான காரணம் கொசு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகவே கொசுவினால் உண்டாகக்கூடிய இந்த நோயைத் தடுப்பதற்கு ஆரம்பத்திலேயே நடவடிக்கை எடுக்கின்ற வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். கொசுவினுடைய தொல்லையை ஒழிக்காவிட்டால் இந்த நோய் அதிகமாகப் பரவும், இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற கணக்குப்படி பார்த்தால் திருநெல்வேலி மாவட்டத்தில்தான் அதிகமாக கிட்டத்தட்ட 100க்கு 50 சதவீதம் பாதிக்கப்பட்டு இருப்பதாக இப்போது அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இப்போது கொசுத் தொல்லை என்பது தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் நிறைய இருக்கிறது. எங்கள் ஆஸ்டலில் கொசுவுக்காக மருந்து அடிக்கிறார்கள், அப்படி மருந்து அடித்தவுடன் கொசு அதிகமாகிறதே தவிர குறைவது இல்லை. ஆகவே இந்த

நோயை உருவாக்கக்கூடிய இந்த கொசுவை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை கேட்டுக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் 7-வது பாராவில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னது மாதிரி ரொம்ப நெகட்டீவ் ஆக பதில் இருக்கிறது. என்னவென்றால் மருந்து போதுமான அளவுக்கு கிடைக்காததாலும் அதனுடைய விளைவு மிகவும் கூடுதலாக இருப்பதாலும் மேலும் அதனால் பெருத்த அளவுக்கு பாதுகாப்பு அளிக்க இயலாது என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஆளை கொல்வது என்று முடிவு எடுத்துவிட்டீர்களா? இயலாது என்று கான்கிரீட்டாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நிபுணர்கள் கருத்தாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதை ஒழிப்பதற்கு என்ன கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது மாதிரி பல நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டதன் விளைவாகத்தான் 1981 ஆம் ஆண்டு தென்னாட்டில் இருக்கக்கூடிய நல்வாழ்வுத் துறை அமைச்சர்கள் மாநாட்டில்—மத்திய அமைச்சர் அவர்கள் தலைமையில் நடந்த அந்த மாநாட்டிலே-சில முடிவுகள் எடுத்துக்கொண்டு நடைமுறைப்படுத்தியதன் விளைவாக 1981ம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 1305 ஆகவும், இறந்தவர்களின் எண்ணிக்கை 287 ஆகவும், இருந்தது 1982ம் ஆண்டு பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 1305லிருந்து 242—ஆக குறைந்தது. இறந்தவர்களின் எண்ணிக்கை 287 ஆக இருந்தது. 83 ஆக குறைந்தது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அது ஓரளவுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றாலும் கூட முன்னேற்றம் அடைந்து இருக்கிறோம் என்பதற்கு இது ஒரு சான்று ஆகும். அதைப்போல கொசு ஒழிப்பதற்கு மருந்து அடிப்பதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள் அதையும் ஆல் இந்தியா ரீதியில் டப்ள்யூ. எச். ஓ. கூட அந்த பிரச்சனைப்பற்றி கொஞ்சம் கவலை எடுத்துக்கொண்டிருக்கிறது. ஏன் என்றால் ஏசியன் நாடுகளில் கூட அந்த தலைவலி இருக்கிறது. முன்பு நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கக்கூடிய டீ. டீ. டி இப்படிப்பட்ட அந்த Anti Mosquito medicines இருக்கிறதே அந்த மருந்துகளுக்கு எல்லாம் இப்போது கொசுக்கள் இறந்து போவது கிடையாது. They have developed resistence ஆகவே நலப்பயான் தான் நாம் பயன்படுத்த வேண்டி இருக்கிறது. நலப்பயான் கொஞ்சம் அதிகமாக பயன்படுத்தினால் மனித உயிர்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது. அது ஹைலி கான்சன்டிரேட்டடு ஆகவே லோ-



கான்ஷன்டிரேட்ஷனை தான் நாம் பயன்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்காக அந்த வகையில் செய்து கொண்டு வருகிறோம். ஒட்டுமொத்தமாக சுகாதார தன்மை நம்முடைய 'லிவிங் ஆபிட்ஸ்'—அதிலே நான் சொல்ல வேண்டும் என்றால் நமது சென்னையைப் பொறுத்தவரையில் நகரங்களில் சாக்கடை அடைப்பு ஏற்படுகிறது. அதேநேரத்தில் வீடுகளுக்குள்ளேயே மாடுகளை வைத்துக்கொண்டு அதன் மூலமாக ஏற்படுகின்ற சாணி, புல் இவைகள் எல்லாம் போய் சாக்கடையை அடைத்துக்கொள்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளைஎல்லாம் நாம் நீக்கி ஒட்டு மொத்தமாக The level of Sanitary conditions living habits-ஐ-நாம் மாற்றி அமைத்துக் கொண்டால் தான் சரியாக இருக்கும். அதற்கு அரசாங்கம் பொறுப்பு இல்லை என்று ஆகாது. அரசாங்கம் பொறுப்பு எடுத்துக்கொண்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். Who is worried about this

2 தகவல் கோரல் (தொடர்ச்சி)

(அ) வெளியில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டை அவையில் விவாதிப்பது தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் 9·30 மணிக்கு மேல்சபையில் எனக்கு கேள்வி பதில் இருந்தது. அந்த காரணத்தால் நான் அந்த அவையில் கேள்விக்கு வேண்டிய பதில்களை சொல்ல வேண்டிய கடமை இருந்தது. அதனால் இந்த அவைக்கு வர முடியாத நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது. ஆனால் நான் இல்லாத நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்கனவே இந்த அவையில் உள்ள ஒரு பிரச்சனைக்கு முடிவு காணவேண்டும் என்பதற்காக இங்கே பேசியதாக நான் அறிகிறேன். நான் ஏற்கனவே உங்களிடத்திலே, ஒரு பதிலிலும் கூட குறிப்பிட்டேன். அலுவல் ஆய்வுக்குழு அதைப்பற்றி விசாரிக்க முடியாது. அதற்கு காரணம் ஒரு நீதிமன்றத்தின் முன்னால் தான் வைத்து இதை முடிவுக்கு கொண்டுவரவேண்டுமே தவிர அலுவல் ஆய்வுக் குழுக்கு கொண்டு வந்து தீர்வு காண்பது என்பது முடியாத காரியம். காரணம் ஆதாரங்களை வைத்துக் கொண்டு சட்டமுடிவுகளை அலுவல் ஆய்வு குழுவின் மூலமாகஎடுக்க முடியாது என்பது தான் 256-வது விதி முறையின் மூலமாக இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தான் அவைகளை எல்லாம் நான் உங்களுக்கு எடுத்துச்சொன்னேன். அதே நேரத்தில் நீங்களும் கூட என்னை கேட்டுக் கொண்டீர்கள். ஆதாரம் இருந்தால் நீங்கள் கொடுத்து விடுங்கள் அதற்கு பின்னால் நாங்கள் ஒரு முடிவுக்கு வருகின்றோம் என்று கூட சொன்னீர்கள். ஆகவே அதற்கும் கூட தான் உங்களுக்கு

பதில் சொன்னேன். ஆதாரத்தை கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆதாரம் இல்லாமல் முறைகேடான பிரச்சனையில் ஈடுபடவேண்டும் என்ற எண்ணம் எனக்கு எள் அளவும் இல்லை என்பதையும் நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன் நான் இல்லாத நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த பிரச்சனையை எடுத்து ஆதாரம் இல்லாமல் ஒரு அமைச்சர் பேசுவது முறைதானா? என்றுங் கூட அந்த கேள்விதனை கேட்டிருக்கிறார்கள். நான் எதிர்கட்சித் தலைவர் அவர்களை.... (குறுக்கீடு)

(முற்பகல் 10–50)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; அப்படிக் கேட்கவில்லை. ஆதாரம் வந்திருக்கிறதா இல்லையா என்றுதான் கேள்வி கேட்டார்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: அதற்குரிய ஆதாரத்தை தகுந்த நேரத்தில் கண்டிப்பாக நான் நீங்கள் சொல்கிற நேரத்திலே கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இவ்வளவு அவசரம் எதிர்க்கட்சித் தலைவருக்கும் தேவை இல்லை. அப்படி அவசரமாக இருந்தால் வேண்டுமானால் வழக்கு மன்றத்திலே வழக்குத் தொடரட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்கு மன்றத்திற்குப் போவது போகாதது என்பது வேறு பிரச்சனை. ஆதாரம் இருக்கிறதா ஏதாவது தந்தார்களா என்று கேட்டார்கள். இது வரைக்கும் தரவில்லை. 6 நாட்கள் நேரம் கொடுத்திருக்கிறேன். 4 ஆம் தேதி தருவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தந்தால் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. துரைமுருகன்: இது ஹவுஸ் ப்ராப்பர்டியாகிவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஹவுஸ் ப்ராப்பர்டி என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆதாரம் தருவதற்கு நேரம் கேட்டிருக்கிறார்கள். நேரம் தந்திருக்கிறேன். அதுவரைக்கும் அமைதியாக இருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுக் கொண்டு போய் இருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, தாங்களே. அவர் 4 ஆம் தேதி தருவதாகச் சொல்லியிருக்கிறார், நான் தருகிறேன் என்று சொன்னீர்கள். அமைச்சர் வேறு எதையோ பேசினார். அது இருக்கட்டும். ஆனால் இந்தச் சபையிலே சொல்லி இருக்கிறார், காட்டுகிறேன் என்று சொல்லியிருக்கிறார். 4ஆம் தேதி அமைச்சர் தகுந்த ஆதாரங்களை தங்களிடத்திலே கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்களா? 4 ஆம் தேதி ஆதாரங்களை எதிர்பார்க்கலாமா?





மாண்புமிகு பேரவைத் தலைவர்; நீங்கள் கேள்விகேட்டு நான் பதில் சொல்கிற இடத்தில் இல்லை. அலுவல் ஆய்வுக்குழுவிலே சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே அவர் கொடுக்கிற ஆதாரம் வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன்.

6. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

திரு. க. பரமலை: தலைவர் அவர்களே, 7–வது சட்ட மன்றப் பேரவையின் அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கையை இந்த அவைக்கு நான் அளிக்கிறேன்.

7. வரவு—செலவுத் திட்டம் 1983–84 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)
(அ) கோரிக்கை எண் 31–பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

(ஆ) கோரிக்கை எண் 44-எழுதுபொருள்—அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இன்றைக்கு பழங்குடியினர் ஆதிதிராவிடர் நலன் பற்றிய மானிய கோரிக்கைகள் விவாதத்திற்கு வருகின்றன. பேசுவதற்கு நிறையப்பேர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். நாளையிலிருந்து 3 நாட்களுக்கு சட்டமன்றக் கூட்டம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஊருக்குப் போகவேண்டியிருக்கிறது. மாலையிலே பேசுவது என்றால் எனக்கு பிரச்சினை இல்லை. ஆகவே உறுப்பினர்கள் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல் என்ற முறையிலே பேசினால் இந்த அவை நிகழ்ச்சியை மத்தியானம் 2 மணிக்குள் முடிக்கலாம் என்று கருதுகிறேன்.

திரு. துரைமுருகன்: அவசரம் அவசரமாக விவாதிப்பது ஒரு சமுதாயத்தைக் கேவலப்படுத்துவது ஆகும்.

திரு. எல். இளையபெருமாள்: மாலையிலும் வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; எனக்கு ஒன்றும் ஆட்சேபனையில்லை, உறுப்பினர்கள் எல்லாம் ஊருக்குப் போக வேண்டும் என்று சொன்னதால்தான் குறிப்பிட்டேன். மாலையில் வைத்துக்கொண்டால் எனக்குப் பிரச்சினை இல்லை, மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 31–பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 44,45,68,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. க. பாலன்: தலைவர் அவர்களே, பழங்குடியினர் ஆதிதிராவிடர்கள் ஆகியோர் வாழும் பகுதிகளில் அவர்களது வருவாயைப் பெருக்க சிறு தொழில்கள் ஏற்படுத்த நடவடிக்கைகள், எடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுந் தீர்மானத்தை மொழிகிறேன்:

மானியக் கோரிக்கை எண் 31–பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,45,68,000 இல் ரூ. 100/— குறைக்க வேண்டும்.''

திரு. எல். இளையபெருமாள்; தலைவர் அவர்களே, ''Non i nplementation ‹f Government order regardi g appointments of Scheduled Castes and Scheduled Tribes''

என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 31—பழங்குடியினர், ஆதிதிராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,45.68,000–இல் ரூ. 100/— குறைக்க வேண்டும்.''

தி. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, தமிழகத்தில் வசிக்கும் ஏழை தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்குவதில் சமீப காலத்தில் இடையூறுகள் ஏற்பட்டு வீட்டு மனைகள் வழங்காதிருப்பதற்கான இடையூறுகளைப் போக்கி வீட்டு மனைகள் வழங்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுந் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 31–பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 44,45,68,000–இல் ரூ.100/– குறைக்கவேண்டும்.''

திரு. எம். ஆறுமுகம்; தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், காரமடைக்கு அருகாமையில் உள்ள ஆதிமாதையனூர் மற்றும், அதை சுற்றியுள்ள மலைகளில் குடியிருக்கும் பழங்குடி மக்களுக்கு கரவை மாடுகள், விவசாய பூமிகள், வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 31–பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூபாய் 44,45,68,000-இல் ரூ. 100/— குறைக்க வேண்டும்.''



(ஆ) கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறை

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 44-எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,22,92,000-க்கு மேற்படாத் தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. க. பாலன்; தலைவர் அவர்களே, அரசு எழுதுபொருள் அச்சுத் தொழிலாளர்களுக்கு தனியாக வீடு கட்டித்தர நடவடிக்கை எடுக்காதது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 44-எழுதுபொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,22,92,000—இல் ரூ. 100/— குறைக்க வேண்டும்.''

திரு. கே. கல்லன்; தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரசு அச்சகம் ஒன்று அமைப்பதை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 44-எழுதுபொருள்—அச்சுதுறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,22,92,000–இல் ரூ. 100/- குறைக்க வேண்டும்''

திரு. ரா. கிருஷ்ணன்; தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண் 44-எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,22,92,000–இல் ரூ. 100/—குறைக்க வேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன், தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.—

''மானியக் கோரிக்கை எண். 44—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,22,92,000-இல் ரூ. 100/—குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது சொல்ல விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983-84-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது கொள்கை விளக்கக் குறிப்புகள்* இங்கே அச்சிடப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே காணப்படுகின்ற கருத்துக்களை நான் ஆற்றிய உரையாக ஏற்றுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு பின்னாலே அரசின் சார்பிலே என்னுடைய பதிலை அளிக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை மற்றும் எழுதுபொருள்—அச்சுத்துறை ஆகிய மானியங்களின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்நாட்டின் மொத்த மக்களுடைய எண்ணிக்கை 484 லட்சம் என்றால் அதிலே 88 லட்சத்து 66 ஆயிரம் மக்கள் தாழ்த்தப்பட்ட மக்களாகவும், 5 லட்சத்து 20 ஆயிரம் மக்கள் மலைவாழ் மக்களாகவும் இருக்கிற ஒரு நிலைமையில் இந்த மானியத்தைப் பற்றி இன்றைக்கு நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இவ்வளவுப் பெரிய மக்கள் தொகை, தோராயமாகச் சொன்னால் தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் ஆகியவர்களின் எண்ணிக்கை 94 லட்சம் ஆகிறது. தோராயமாகச் சொன்னால் ஒரு கோடி பேர். இந்த ஒருகோடி மக்களுடைய வாழ்வில் முன்னேற்றம் காணவேண்டும் என்பதற்காக தொடர்ந்து ஏற்கெனவே இருந்த அரசாங்கங்கள் செய்த பல்வேறு முயற்சிகளின் தொடர்ச்சியாக இன்றைக்கும் சில காரியங்களை தமிழக அரசு செய்து வருகிறது என்பதை நான் துவகத்திலேயே ஒப்புக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அதற்கு முன்பு நான் என்னுடைய கருத்துக்களை வழக்கத்திற்கு மாறாக சற்று வேறுபட்டு தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய துறைக்கு அரிஜன் வெல்பேர் டிபார்ட்மெண்ட் என்று பெயர் இடப்பட்டிருந்தது. அண்மையில் அந்த பெயரை மாற்றி ஆதிதிராவிடர் நலத்துறை என்றுவைத்தார்கள். பெயர் மாற்றம் செய்த போது சுயமரியாதை இயக்கத்திலே, திராவிடர் இயக்கத்திலே வளர்ந்த நாம் எல்லாம் திராவிடர் என்ற இனப்பெயர் வருகிறது என்று உள்ளப்படியே மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் பெயர் மாற்றத்திலே ஏற்பட்ட மகிழ்ச்சி இந்த துறை செயல்படுகிற தயக்கமான சூழ்நிலையைப் பார்க்கிறபோது உள்ளபடியே வருத்தமாக இருக்கிறது

---

**..902—955ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சடிக்கப் பெற்றுள்ளது.





1360 ... 600 008

என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன் சில விவரங்களைச் சொன்னால் அமைச்சர் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். இலாக்காவைப் பற்றி நான் நீண்டகாலமாக அறிவேன். 1978—79 வாக்கில், அப்போது தாங்கள் அமைச்சராக இல்லை. அந்தக் கட்டத்தில் திருச்சி மாவட்டத்தில், பி. டி. ஆசிரியர்கள் நியமனத்திற்காக, நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. ஆனால் ஒரு பி.டி. ஆசிரியர் கூட நியமிக்கப்படவில்லை. நேர்முகத் தேர்வு நடைபெற்று செலக்ஷன் லிஸ்ட் எல்லாம் போடப்பட்டும் நியமனம் செய்யப்படவில்லை. அந்த இலாகாவினுடைய திறமைக்கு அது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. உங்களைப் பற்றி அல்ல. 1978—79ல் நடைபெற்ற ஒரு சம்பவம் இது. அதற்கு என்ன காரணம் என்பதை நான் இப்போழுது ஆராய விரும்பவில்லை.

(முற்பகல் 11-00)

மூன்று ஆண்டுக்காலமாக ஒரு குறையைச் சொல்லிவருகிறோம். தாழ்த்தப்பட்டோர் நலப் பள்ளிகளில் அல்லது உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர்கள்—மாணவர்கள் இருப்பதற்கு, உட்காருவதற்குத் தேவையான மேசை நாற்காலிகள் இல்லையென்பதை தொடர்ந்து சொல்லி வருகிறோம். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தபால் எழுதியிருக்கிறோம், நேரடியாகச் சொல்லியிருக்கிறோம், கவனிப்பதாகப் பதில் வருகிறதே தவிர, இந்த 3 ஆண்டுக்காலத்தில் திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆசிரியர்கள்—மாணவர்கள் அமர்ந்து படிப்பதற்கு மேசை நாற்காலிகள் போடப்படவில்லையென்று நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இரண்டு சான்றுகளையும் நான் சொல்லக் காரணம், இலாகா எவ்வளவு வேகமாக வேலை செய்கிறது என்பதை எடுத்துக் காட்டத்தான்.

இன்றைக்கு ஆரம்பப் பள்ளிகள். நலப்பள்ளிகள் ஆகியவற்றிற்கு அமைச்சர் அவர்கள் சென்றால். ஆசிரியர்கள் சுவற்றிலே ஒருகாலை வைத்து, அதனை ஆதாரமாக வைத்து நின்று கொண்டு பாடம் நடத்துகிற காட்சிகளை பல பள்ளிக்கூடங்களிலும் பார்க்கலாம். இந்த இரண்டு உதாரணங்களே போதும் என்பதால் நான் வேறு உதாரணங்களுக்குச் செல்ல விரும்பவில்லை.

ஏற்கனவே போன ஆண்டும், அதற்கு முந்தைய ஆண்டும், நானாக இருக்கட்டும், மற்றவர்களாக இருக்கட்டும் அமைச்சர் அவர்களைக் கொஞ்சம் மைல்டாகத்தான் இந்தப் பிரச்னையில் அணுகினோம். ஆனால், இருக்கிற நிலைமையைப் பார்த்தால், சீரியஸ்னஸை நீங்கள் உணர வேண்டுமென்பதற்காக நான் அழுத்தமாகச் சில விஷயங்களைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

N83-47.5 1211/83 N83

தாழ்த்தப்பட்டோர் நல இலாகா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆளுகையில், தங்களுடைய ஆளுகையில், எந்த அளவுக்குச் செயல் திறன் இல்லாமல் இயங்குகின்றது என்பதைப் பற்றி பலர் விமர்சித்தாலும்கூட, உங்களுடைய கவனத்திற்கு வந்திருப்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். துக்ளக் பத்திரிக்கையிலே 1—2—1983—லே ஒரு பெரிய கட்டுரை வந்திருக்கிறது. உங்கள் கவனத்திற்கு அது வந்திருக்கிறது; மாண்புமிகு உறுப்பினர் இளைய பெருமாள் அதைஉங்களிடம் கொடுத்திருக்கிறார். நிச்சயம் அதை நீங்கள் படித்திருப்பீர்கள். நான் அதிலே என்ன எழுதியிருக்கிறது என்பதை அப்படியே படிப்பதற்கு தலைவரே உங்களுடைய அனுமதியை வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாற்றுத் தலைவர் அவர்களே, பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய குறிப்புகளை வைத்து அவையிலே பேசுவது என்பது வரவேற்கக் கூடியது அல்ல. அந்தப் பத்திரிகையிலே வந்திருக்கக்கூடியவற்றை நானும் பார்த்திருக்கிறேன். உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் கொடுத்து நான் படிக்கவில்லை. அதை ஏற்கனவே படித்துவிட்டேன். பத்திரிகையிலே நான் படித்திருக்கக்கூடியதைப் பற்றி, என்னுடைய பதில் உரையிலே தேவையான கருத்துக்களைச் சொல்ல இருக்கிறேன். ஆகவே, அதிலே இருக்கக்கூடிய குறிப்புகளை இப்பொழுது படிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நான் அத்தனை குறிப்புகளையும் படிக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன். நீங்கள் ஆர்வமாக, இளைய பெருமாள் தருவதற்கு முன்பே படித்திருப்பதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அந்த விவரங்களைச் சொல்லவில்லை. ஆனால், என்னுடைய கருத்தைச் சொல்லவிரும்புகிறேன். அதனுடைய இறுதி பாராவிலே சொல்லப்பட்டிருப்பது, 'இட் இஸ் ய கமென்ட்.' "தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவே தமிழக அரசை நடத்துகிறோம்" என மேடைதோறும் முழங்கிக் கொண்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கான திட்டங்களைப் பற்றி சற்றும் கவலை இல்லாமல் இப்படி—உண்மைக்கு மாறான, வேறு வார்த்தை போட்டிருக்கிறார்கள்; நான் அதைச் சொல்லவில்லை— "மோசடி, ஏமாற்றுவேலை, பித்தலாட்டம், எல்லாவற்றையும் செய்து வருகிறது தமிழக அரசு." அது 'ஒய்ட் ரீடிங் பேப்பர்' நிறைய சர்க்குலேஷன் ஆகிற பத்திரிகை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு—இது எந்த அளவுக்குச் சமுதாயத்திலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது, இதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதற்காக ஒரு சான்று சொல்ல விரும்புகிறேன். போன வாரம் எந்தத் தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு மாண்புமிகு அமைச்சராக இங்கே அமர்ந்திருக்கிறார்களோ அந்தத் தொகுதியிலே ஒரு பொதுக் கூட்டத்திற்குச் நான் சென்று இருந்தேன்.



சின்ன குக்கிராமம் அது. அங்கே ஒரு தாழ்த்தப்பட்ட தோழன் ஒரு சின்ன பேப்பரை என்னிடத்திலே கொடுத்து இதைப் பற்றி பேசுங்கள் என்று சொன்னார். ஆக, அந்த அளவுக்கு "இந்தப் பத்திரிகையிலே வந்த செய்தி, நாட்டுமக்களுடைய கவனத்தில், குக்கிராமத்தில் ஒரு ஏழை, தாழ்த்தப்பட்டவன் உள்ளத்தைக் கூட ஏதோ ஒரு வகையிலே கவர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக்காட்டத்தான் இப்பொழுது சொல்கிறேன். 1-2-1983-ல் வந்ததற்கு, அமைச்சர் அவர்களே, படித்துவிட்டதனால், பதில் அறிக்கையை, விளக்க அறிக்கையை, எங்களுக்குத் தந்திருந்தால், நாங்களும் இந்த மன்றமும் உள்ளபடியே மகிழ்ந்திருப்போம். தங்களுக்கு ஒருகால் நேரம் இல்லாவிட்டாலுங்கூட....

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, பத்திரிகையிலே வருகின்ற செய்திகளுக்கெல்லாம் நாம் மறுப்பு தெரிவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற சட்டம் இல்லை, அதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. ஜே எஸ். இராசு : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே. நான் சொல்வது, இந்தச் செய்தி எவ்வளவு முக்கியமாகத் தமிழ்நாட்டிலே பரப்பப்பட்டிருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். ஒரு ஆண்டு விழா என்றால், ஒரு அரிசன நல விழா என்றால் பல பத்திரிகைகளிலே முழுப் பக்கத்தில் சாதனைகளை விளக்கிக் கொண்டிருக்கிறது நம்முடைய தமிழக அரசு. அதை நான் குறையாகச் சொல்லவில்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது, இப்படிப்பட்ட மாபெரும் குற்றச்சாட்டு அரசுக்கு வந்திருக்கிறது என்பதை அறிந்த தாங்கள்—தாங்கள் பெரிய இலாக்காவை நிர்வகித்து வருகிறீர்கள், இயக்குநர் இருக்கிறார், தாங்கள் சொல்வதைப்போல ஐ. ஏ. எஸ். மட்டத்தில் இருக்கிறார்கள், தலைமைச் செயலகத்தில் சோஷியல் வெல்ஃபேர் செக்ரட்டரி இருக்கிறார், அவர்களெல்லாம் ஏன் இதைப்பற்றி அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை; இதுபற்றி நாட்டு மக்களிடத்திலே சொல்வதில் என்ன தயக்கம் என்று கேட்கிறேன். குற்றங்களை நீங்கள் நீக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேனே தவிர வேறல்ல என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சில கொள்கை விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு நான் விழைகிறேன். பிற்பட்டோர் நலனுக்காக, பிற்பட்டோர் கல்வி உயர்வு பெறுவதற்காக, வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக, கல்லூரிகளில் இடம் பெறுவதற்காக 50 சதவீதம் என்று தமிழக அரசு ஒதுக்கீடு செய்திருப்பதற்கு எங்களுடைய பாராட்டுதல்களை நாங்கள் ஏற்கனவே தெரிவித்திருக்கிறோம். அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்களுடைய விகிதாச்சரம், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைப்பதற்காக அவர்களுக்கு 20 சதவீதம் அல்ல, அதற்கு மேலே தமிழக அரசு ஒதுக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக்கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டு மூன்று முறைகள் நான் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு பேசியிருக்கிறேன். ஸ்டேட் அரிஜன் வெல்ஃபேர் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தங்களிடம் நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் இதை ஏன் இதுவரையில் போடாமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணம் இன்று வரையில் எங்களுக்கு விளங்கவில்லை. எம். எல். ஏ-க்களைப் பற்றிய விவரங்கள் கேட்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி 'ஹூ இஸ் ஹூ'-வைப் பார்த்தால் தெரிந்து விடும். மேற்கொண்டும் விவரங்கள் வேண்டுமென்றால் அதைத் தாங்கள் எங்களிடத்திலேயிருந்து பெற்றுக் கொள்ளலாம். அந்தக் குழுவில் எக்ஸ் அஃபிஷியோ மெம்பர்களை, அதாவது அதிகாரப் பற்றற்றவர்களைப் போட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அதையும் கொண்டு வந்து விடலாம். இந்தக் கமிட்டி அமைக்கப்படாமல் இருப்பதன் காரணமாக, அதனால் ஏற்படும் பலன்களைத் தமிழ்நாட்டு மக்கள் இந்த மூன்றாண்டுக் காலமாக இந்த ஆட்சியிலே அனுபவிக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். யார் அங்கே உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதுகூடப் பிரச்னை அல்ல. ஆனால் மதுரை, திருச்சி, தஞ்சை, இதுபோன்ற வேறு இடங்களில் இந்தக் குழு கூடி, அங்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறை அதிகாரிகள், மற்றும் வெல்ஃபேர் டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் ஆகியவர்கள் வருவார்கள். இன்னும் செல்ல வேண்டுமென்றால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த டிஸ்ட்ரிக்டைப் பொறுத்தவரையில் முழு விவரங்களும், அனுபவமும் கிடைக்கும். அந்தக் கமிட்டியில் பல்வேறு யோசனைகளையும், பரிந்துரைகளையும் தங்களுக்குச் சொல்வோம். அரசாங்கம் அவை அனைத்தையும் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், பாதிக்குப் பாதியையாவது ஏற்று, இந்தப் பட்ஜெட்டிலே அறிவிக்கத் தக்க வகையில் வந்திருக்கும், அப்படித்தான் கடந்த கால வரலாறு. ஆனால் அந்தக் கமிட்டியில் இப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கான ஆலோசனைகளைச் சொல்வதற்கான வாய்ப்பை ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கேகூட தாங்கள் தராமல் இருப்பது எனக்கு வருத்தத்தை உண்டாக்குகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலமைச்சருடைய டேபிளில், அவருடைய கவனத்தில் அந்தக் கோப்பு இருப்பது உண்மையாக இருந்தால்—உண்மையாக என்பது எனக்குத் தெரியாது, உண்மையாக இருந்தால்—நான் போன ஆண்டே கேட்டுக்கொண்டபடி இப்பொழுதாவது அந்தக் கமிட்டி விரைவில் அமைக்கப்படும் என்ற உத்தரவாதத்தைத் தருவார்கள், தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கலப்புத் திருமணத்தைப் பொறுத்தவரையில், [illegible] மிகவும் முக்கியமானது. ஜாதி ஒழிப்புக்கு அடிப்படை[illegible] மாக அமைவது அது. பேரறிஞர் அண்ணா அவர்கள் [illegible]



அந்தத் திட்டம் இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டு, நாங்கள் அதுபற்றிப் பேசினோம். கலைஞர் காலத்திலும் அந்தத் திட்டம் தொடர்பாக....

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாநிலக் கமிட்டி அமைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில், அந்தக் கமிட்டியை அமைப்பது சம்பந்தமான கோப்பு தற்போது முதலமைச்சரவர்களிடத்தில் இருப்பதாகத் தவறான தகவலைத் தந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பு கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் அளித்திருக்கிறேன். அப்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் அவையில் இல்லை என்று கருதுகிறேன். அந்தக் கோப்பு தற்போது முதலமைச்சரவர்களிடத்தில் இல்லை என்பதை மட்டும் தெரிவித்து, இந்த மாமன்றத்தில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாநிலக் கமிட்டி அமைக்கப்பட வேண்டுமென்பதில் இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. மாநிலக் கமிட்டி அமைப்பதன் மூலமாக இங்கே உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் சொன்னதைப்போல அதிலே எத்தகைய வசதிகள் ஏற்படுமென்பதையும், அந்தக் கமிட்டியிலே இருக்கின்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்தைச் சொல்வது அரசுக்கு எந்த அளவிற்கு உதவியாக இருக்கும் என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அந்தப் பிரச்னை குறித்து இந்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பே அந்தக் கமிட்டி அமைப்பதற்கான நடவடிக்கை தற்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த உறுதிமொழிக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தயக்கம் இல்லை என்று சொல்லிக் கொண்டு மூன்றாண்டுக்காலமாக தயங்கியதற்காக நான் வருத்தப்படுகிறேன். கோப்பு எங்கே இருக்கிறது என்பதைப்பற்றி எங்களுக்குப் பிரச்னை இல்லை. எங்கே வேண்டுமானாலும் இருக்கலாம். இருக்க வேண்டிய இடத்தில் கோப்பு இருந்தால் போதும்.

(முற்பகல் 11-10)

கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களுக்கு சில சலுகைகளைத் தருகிறோம். மேலும் சில சலுகைகளை அளிக்கவேண்டும். கலப்பு திருமணம் செய்துகொண்ட தம்பதியர்களுக்கு பிறக்கக் கூடிய குழந்தைகளுக்கு, ஒன்று தாய் அல்லது தந்தையினுடைய ஜாதியை கொடுக்கிறோம். பெரும்பாலும், தந்தை ஜாதி தான் வருகிறது. தாய் ஜாதி வந்தாலும் பிறகு தந்தை ஜாதி வாரிசுகளாக இருந்தாலும் கூட, அது ஒரு ஜாதியாகப் போய்விடுகிறது. அறிவு இயக்கத்தில் இருப்பவர்கள் ஒரு யோசனையைச் சொல்கிறார்கள். இப்படி தாய் ஜாதியையோ அல்லது தந்தை

ஜாதியையோ குறிப்பிடுவதை விட அவர்களுக்கு ஒரு புதிய பெயர் கரவேண்டும். 'கேஸ்ட்லெஸ்' ஜாதியற்றவர்கள் என்று. ஒரு வளரும் குழந்தைக்கு ஜாதி என்ற உணர்வே இல்லாமல், Certificate–லே Interview–லே Enquiry-லே போடுகிறபோது ஜாதி பற்றிய கவலை இல்லாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும். ஆகவே ஜாதியற்றவர்கள் Casteless என்றும் 'Certificate'–லே குறிக்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பீஹாரிலே அண்மையிலே அந்த ஊர் முதலமைச்சர் சில நல்ல சலுகைகளை கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். நம்முடைய அரசாங்கம் இதை கவனித்திருக்கும் என்று கருதுகிறேன். அதிலே 10 சதவீதம் வீட்டு மனை கொடுப்பது, வீடு கட்டிக் கொடுப்பது, வேலைவாய்ப்பு, தொழில் துவங்குவதற்கு கடன், ஆகிய அனைத்திற்குமே ஒரு 10 விழுக்காடு கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களுக்கு ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1967–க்கு முன்னாலே கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ் இருக்கிறார்கள். 500 பேர்கள் இருப்பார்கள், ஒரு பொதுக்கணக்காக சொன்னேன். இந்த 500 பேர்களுடைய குழந்தைகளுக்கும் படிப்பை பற்றி அதிகமாக அக்கறைப்படாமல், இரயில்வே, வேறு துறைகளில் ஒரு 5, 6 வகுப்பு படித்தால்கூட, ஏதாவது வேலைக்கு அவர்களுக்கு ஏற்றவாறு இந்த அரசாங்கம் தருவதற்கு முன்வரவேண்டும்.

அர்ச்சகர் சட்டம் உயிர் பெற மீண்டும் அரசு முனைய வேண்டும். மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் ஒரு கமிட்டியைப் போட்டு, அந்தக் கமிட்டியினுடைய பரிந்துரைகளையெல்லாம் இங்கே சுருக்கமாகத் தந்தார்கள் அதைப் படித்துப் பார்க்கும்போது, அர்ச்சகர் சட்டம் வேண்டாம் என்று சொல்லிவிடுவது போல் அர்த்தம் வருகிறது. அதில் இருக்கிற Provisions, Conditions எல்லாவற்றையும் பார்த்தால், அந்த தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப்பட்டவர்கள் அர்ச்சகர் ஆகும் ஆசையை விட்டுவிடவேண்டும். அந்த அளவிற்கு அதிலே போடப்பட்டிருக்கிறது.

தமிழிலே போதிய திறமை இருந்தால் கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்று இருந்தால் போதும். அதிலே 'சான்ஸ்கிரிட்' வேண்டும் என்று தமிழகத்திலே இருக்கிற சாமிகள் எல்லாம் சொன்னால்—தான், பூசையை ஏற்றுக்கொள்ளும் என்றால், அப்படிப்பட்ட சாமியே நமக்குத் தேவையில்லை.



டாக்டர் கே. சமரசம : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு ஜே. எஸ். இராசு கலப்பு மணம் புரிந்து கொண்டவர்கள் ஜாதி அற்றவர்கள் என்று ஏற்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியானால், அரசாங்கம் இனிமேல் Forward, Backward, Scheduled Castes, Scheduled Tribes என்பதோடு, ஜாதி அற்றவர்கள் என்ற ஒரு பிரிவை ஏற்படுத்தி, அதற்கு சில சதவிகிதம் கொடுக்கவேண்டும் என்ற ஆலோசனையை வழங்குகிறாரா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : கட்சியின் சார்பில் அவர் பேசுகிறார்.

திரு. ஜே. எஸ். இராசு : நிச்சயமாக அப்படி செய்யலாம். ஜாதியற்ற ஒரு சமுதாயம் உருவாவதற்கு தங்களைத் தியாகம் செய்துகொண்ட தம்பதியர்களுக்குப் பிறந்த வாரிசுகளுக்கு ஜாதி அற்றோர் என அழைக்கலாம். இன்னும் சில செய்திகளைச் சொல்ல இருப்பதால் அனுமதிக்க வேண்டுகிறேன்.

மாலை நேரக் கல்லூரி சட்டப் படிப்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே துவக்கப்பட்டது. அது என்ன காரணத்தினாலோ நீக்கப்பட்டு விட்டது. அதை ஏற்கனவே நான் கல்வி மானியத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். Greatest happiness to greatest number என்பது பொதுவாக ஜனநாயக தத்துவம். அந்த தத்துவத்தின் பிரகாரம் பார்த்தாலும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர்கள் கல்லூரியிலே போய் நிச்சயமாக படிக்கமுடியாதவர்களாக இருக்கிறார்கள். புத்திசாலிகளும் இருக்கிறார்கள். அவர்கள் மாலை நேரக் கல்லூரியிலே சேர்ந்து சட்டப் படிப்பு படித்தால், 10, 15 ஆண்டுகள் வக்கீலாக பணியாற்றி, சுப்ரீம் கோர்ட்டு, ஹைகோர்ட்டு நீதிபதிகளாகப் போகலாம். அந்த வாய்ப்பை உருவாக்கவேண்டுமானால், மாலைநேர சட்டக் கல்லூரியை ஏற்படுத்தவேண்டும்.

இப்போது, பெங்களூர், மைசூர், விதர்ப்பா யூனிவர்சிட்டி. பீஹார், குஜராத், ராஜஸ்தான் ஆகிய ஊர்களிலே இருக்கிறது 'எக்சப்ட்' தமிழ்நாடு. அதனால் பாதிக்கப்படுவது S.C., S.T. and B.C. ஆக தயவுசெய்து மாலை நேரக் கல்லூரியை துவக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாட்கோ திட்டம். இதைப்பற்றி அமைச்சரிடத்திலே அரசாங்கத்திடத்திலே நாங்கள் பல தடவை வேண்டினோம். இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டுக்கு அறிமுகப்படுத்திய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் போன ஆண்டு இந்த மன்றத்திலே இதைப்பற்றி கேட்டார்கள். அப்படி கேட்டபோது எல்லோரும் இதைப்போல் வீடுவேண்டுமென்று கேட்கிறார்கள். பி. சி. கூட கேட்கிறார்கள். அதிகமாக பணம் செலவாகிறது என்று நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிகமாக பணம் செலவானாலும்கூட இனாமாக கட்டித்தரக்கூடிய இந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டார்கள். இப்போது அங்கேயே லோன் கொடுக்கப்படுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால், இனாமாக சாப்பாடு போடுகிறோம். இனாமாக பல்பொடி கொடுக்கிறோம். சாப்பாடு, பல்பொடியை விட கிரகலட்சுமி என்று இதைச் சொல்வார்கள், அதை

இனாமாக கட்டித் தந்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உள்ளபடியே ஒரு நிரந்தரமான பலன் கிடைக்கும். அதை அரசாங்கம் சிந்திக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த வாட்டர் போர்டு. குடிநீர் வாரியத்திலே பேசுகிற போது நான் குறிப்பிட்டேன். மற்ற உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற பகுதியில், பல கிராமங்களில், நல்ல குடிநீர் கிடைப்பதில்லை, காரணம் உப்புநீர். உப்பு நீர் கிடைப்பதால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் ரொம்பத் தொலைவிலே போய் குடிநீரைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டத்திற்காக அதிக கவனம் செலுத்தவேண்டும். அப்படிப் பார்த்தால் குடிநீர் உப்பு நீராக இருக்கிற பகுதிகளுக்கு, அந்தத் திட்டத்தை, வாட்டர் போர்டு மூலமாகவோ, அல்லது வெல்பேர் டிபார்ட்மென்ட் மூலமாகவோ கொண்டு வரவேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியிலே தொண்டாம்பாடி, கொம்பலூர் போன்ற கிராமங்களில் சுத்தமாக உப்பு நீராக இருப்பதால், நல்ல நீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறு தொழில் வட்டி இல்லாக் கடன் என்ற தலைப்பில் நாம் சில கோடி ரூபாய்களை கொடுத்திருக்கிறோம். அப்படி கொடுத்ததுதான் கொடுத்தோம், ஆனால் பல பேர்கள் என்ன காரணத்தாலோ, அது போதவில்லை என்ற காரணத்தாலோ, அல்லது வசதியில்லாத காரணத்தாலோ அல்லது நடத்தத் தெரியாத காரணத்தாலோ, இந்தத் தொழிலில் அவர்கள் இன்று இல்லை. அவர்கள் கடன்காரர்களாக இருக்கிறார்கள். அதற்கு இன்ட்ரஸ்ட் வேறு வளர்ந்து கொண்டிருக்கிறது, ஏன் என்றால், அந்தத் தொழில் துவங்கவில்லை. இதனால் வட்டிவேறு வளர்ந்து கொண்டிருக்கிறது. அடுத்து இந்த டாக்குமென்ட்ஸ் எல்லாம் நம்முடைய இலாக்காவில் இருக்கிறது. எனவே சொத்து ஜாமீன் கொடுத்தவர்கள் அந்த டாக்குமென்ட்ஸ்கள் அவர்களுக்குத் திரும்பி வந்தால்தான் வேறு ஒரு காரியத்திற்கு அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதனால் பல குடும்பங்களில் தகராறு வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களை அதைக் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் வரைக்கும் கடன் இருக்கிறது. தமிழகத்தில் எத்தனையோ விவசாயிகளுக்கு கொடுத்த கடனை எல்லாம் ரத்து செய்திருக்கிறீர்கள். இந்தப் புண்ணியத்தையும் சேர்த்துக்கொண்டால், It is well and good on the part of the Tamil Nadu Government. அருமையான பாராட்டு உங்களுக்குக் கிடைக்கும். ஜனங்களுக்கு பலன் கிடைக்கும். ஆகவே இந்தக் கடனை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இனிமேல் எதிர்காலத்தில் கொடுக்கிற போது நாம் கேர்புல்லாக இருந்து கொடுக்கலாம்.

அடுத்து, இந்த ஹாஸ்டலிலே நம்முடைய தமிழ்நாட்டிலே தாழ்த்தப்பட்ட இலாகாவால், ஆதிதிராவிடர் நல இலாக்காவால் நடைபெறுகிற விடுதிகளைப் பற்றி இரண்டொரு கருத்துக்களை



சுருக்கமாக சொல்ல விரும்புகிறேன். சென்னையை எடுத்துக் கொண்டால், ராயபுரத்தில் ஹைஸ்கூல் மாணவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. 160 பேர்கள் படிக்கிறார்கள். ஒரே ஒரு கழிவு அறைதான் இருக்கிறது. தரமான உணவு இல்லை என்று குற்றச்சாட்டு வருகிறது. வாரம் ஒரு தடவை மட்டன் போடப்படுவதாக கணக்கு எழுதப்படுகிறது. ஆனால் போடவில்லை என்று நமக்கு தம்பிகளாக இருக்கின்ற மாணவர்கள் சொல்கிறார்கள்—தம்பியை நம்ப வேண்டுமல்லவா, அதற்காகத்தான் சொல்கிறேன். இட வசதியில்லை. குளிப்பதற்கு வசதியில்லை. இப்போது குளிப்பதற்கு வசதியில்லை என்பது சாதாரணக் காரியம்தான். இப்போது தண்ணீர் இல்லை. ஆனால் தண்ணீர் இருக்கிறபோது வசதியில்லை, ஆகவே தண்ணீர் வருகிற போதாவது குளிப்பதற்கு வசதிகளைச் செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பஸ் டோக்கன் வாங்குவதற்கு நாம் பணம் கொடுக்கிறோம் இலாகாவிலிருந்து. அது தக்க நேரத்திலே, உரிய நேரத்திலே கொடுக்காத காரணத்தால் மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு போகமுடியாத ஒரு சூழ்நிலை வருகிறது. இதைக்கேட்டால் நல்ல வார்டனாக இருந்தால், சமாதானமாக பதில் சொல்கிறார்கள். மற்ற வார்டன்கள் சிலர் பையன்களை மிரட்டுகிறார்கள். எனவே இவைகளை எல்லாம் கவனித்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோல் தமிழ்நாடு முழுவதும் நம்முடைய விடுதிகளிலே பல குறைகள் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே தெரிவிக்காமல் பல விடுதிகளுக்குப் போனால் நான் சொல்வதைவிட மிக அதிகமாக செய்திகளைத் தெரிந்து கொள்ள முடியும். உதாரணமாக மட்டன் போடுவதற்கு நாம் 5 ரூபாய் மாதாமாதம் கொடுக்கிறோம். அது கட்டுப்படியாகாது. திருச்சி ஜில்லாவிலே 70 ஹாஸ்டல்கள் இருக்கின்றன. அந்த 70 ஹாஸ்டல்களுக்கும் காய்கறி, பால், விறகு, மட்டன் கொடுப்பதற்கு கான்ட்ராக்ட் விடுகிறோம், டென்டர் விடுகிறோம். தப்பல்ல, ஆனால் ஏற்கனவே அந்தந்த ஊர்களுக்கு பக்கத்திலே இருப்பவர்கள்தான் கான்ட்ராக்ட் எடுப்பார்கள். ஆனால் தற்போது திருச்சி ஜில்லாவிலே இருக்கின்ற 70 ஹாஸ்டல்களுக்கு நான்கே நான்கு பேர்கள்தான் கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறார்கள். அந்தக் கான்ட்ராக்ட்காரர்கள் நேரடியாக சப்ளை செய்வதில்லை. வார்டனிடத்திலே பணத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். 15 பர்சன்ட் பிடித்துக்கொள்கிறார்கள். வார்டன், அவர் கொஞ்சம் பிடித்துக் கொள்கிறார்கள். அவர்கள் கெட்டவராக இருந்தால். இப்படி அவரவர்கள் கொஞ்சம் கொஞ்சம் பிடித்துக் கொள்கிறார்கள். பேரறிஞர் அண்ணா சொன்ன பனிக்கட்டி கதை் பாதிரி பையனுக்கு கொஞ்சுண்டு சோறும், ஒரு கறி, ஒரு பருப்பு, என்றுதான் போகும். அந்தமாதிரி நிலைமைக்கு ஆளாக்கக்கூடாது. இந்த மட்டன் போடுகின்ற விஷயத்தில் பணத்தைக் கொஞ்சம் கூட்டிக்கொடுத்து, இதை நல்லமுறையிலே செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு கோரிக்கையைச் சொல்ல விரும்புகிறேன். வெல்பேர் டிப்பார்ட்மென்ட்டில் 'லேன்ட் அக்கொயர்' செய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக நல்ல திட்டம் போட்டு இருக்கிறோம் மனைகள் தருகிறோம், என்று எல்லாம் சொல்கிறார்கள். ஆனால் அந்த வேலைகள் வேகமாக நடக்கவில்லை என்பதற்கு உதாரணமாக நான் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். கடந்த பல ஆண்டு காலமாக என்னுடைய தொகுதியில் பெரம்பலூர், பொம்மனாம்பாடி, மேட்டுப்பாளையம், களரம்பட்டி, குரும்பலூர், அய்யலூர், தேவையூர், அரசலூர், பூலாம்பாடி, எனம்பலூர், அயன் பேரையூர், பாளையம், அரனாரை, துரைமங்கலம் பெருநிலா, வெங்கலம், திருவாலந்துரை, கிருஷ்ணாபுரம், கல்லப்பட்டி, அகரம் அம்மாபாளையம் போன்ற பல இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக வைக்கப்பட்டு இருந்தும், அவைகள் எல்லாம் நீண்ட காலமாக 'பென்டிங்காக' இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு வீட்டுமனைகள் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அச்சகத்தைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி என் உரையை முடித்துக் கொள்கிறேன், நம்முடைய அரசு அச்சகம் ஆசியாவிலேயே மிகப்பெரிய அச்சகம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெருமையோடு சொல்லிக்கொண்டார்கள். அங்கே 'பிளைன்ட் பர்ஸன்ஸ்' (கண்ணொளி இழந்தவர்கள்) பைண்டர்களாக வேலை செய்கிறார்கள். அவர்களில் டி. வெங்கடேசலு, எஸ். சண்முகம், கே. என். கோபால் ஆகியோர்—பைண்டிங் செக்ஷனில் வேலை செய்பவர்கள் சரியான அவுட்-டர்ன் கொடுக்கவில்லை, மைனஸ் அவுட்டர்ன் கொடுத்தார்கள் என்பதற்காக ஒரு ஆண்டு இன்கிரிமென்ட் கட் செய்யப்பட்டது. கண் இருப்பவர்களே, சரியாக வேலை செய்யாமல் இருக்கின்ற இந்தக்காலத்தில், கண் ஒளி இல்லாதவர்களிடத்தில் இத்தகைய கடுமையான முறையில் அந்தத் துறை இருப்பது சரியல்ல, அதை அவர்கள் மாற்றிட வேண்டும் என்று கேட்டு, உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்று புரட்சித் தலைவர் தலைமையில் இயங்கும் இந்த அரசு, மாண்புமிகு ஆதித்திராவிட நலத்துறை அமைச்சர் மூலமாகக் 1983-84 ஆம் ஆண்டுக்காக கொண்டு வரப்பட்டுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, என் உரையைத் துவக்குகிறேன்.



இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவரின் அரசு ஆதித் திராவிட மக்கள் பொருளாதாரத் துறையிலே நல்ல முன்னேற்றத்தை பெற வேண்டும், அவர்கள் எல்லா மக்களுக்கும் இணையாக வாழவேண்டும் என்ற முறையில் பல்வேறு திட்டங் களை, சீரான முறையில், சிறப்பான முறையில், திட்டி செயல் படுத்தி வருகிறது. அந்தத் திட்டங்களிலே இன்றைக்கு மிகப் பெரிய திட்டமாக இருப்பது ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டமாகும். அந்தத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக, ஆதிதிராவிடர் மக்களுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர் களால் நிலஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாதியிலேயே உயர்நீதிமன்றத்தின் ஆணையால் தடை செய்யப்பட்டு விட்ட காரணத்தால், அந்தத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்த, முடியாத நிலை இருக்கிறது. அந்தத் திட்டங்களை விரைவாக செயல்படுத்த ஆதிதிராவிட மக்கள் விரைவாக நல்ல முறையில் வீட்டு வசதி பெற வேண்டிய வகையில் மாற்று ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து, அந்த மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு ஆதிதிராவிடத் துறை மூலமாக கொடுக்கப்படும் வீட்டு மனைப்பட்டாக்களை, அந்த ஆதிதிராவிடர் வீட்டு வசதி வாரியமே எடுத்துக்கொண்டு, அவர் களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டும். தன்னிறைவுத் திட்டத்தைப்போல் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தத் திட்டங்கள் எவ்விதத் தடையும் இன்றி விரைவாகச் செயல்படுத்தப்பட வேண்டும். இன்றைக்கு பல இடங்களில் வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்பட்டு இருந்தாலும், அவர் களுடைய பொருளாதார சூழ்நிலை காரணமாக அவர்களால் வீடுகளைக் கட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி, தன்னிறைவுத் திட்டத்தின் அடிப்படையில், ஒரு 100 வீடுகள், 200 வீடுகள் ஒவ்வொரு பகுதியிலும் கட்டிக் கொடுக்கின்ற வகையில் திட்டங்களைத் தீட்டவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள ஆதித்திராவிடர்கள் அத்தனை பேருக்கும் அந்த குறிப்பிட்ட சதவிகித அடிப்படையில் இடங் களை ஒதுக்கி, அந்தச் சமூகத்திலிருந்து வரும் மாணவர்கள் அத்தனைபேரும் அதன் மூலம் பயன்படும் வகையில் திட்டங் களைத் தீட்டவேண்டும் என்று, அதற்கான ஏற்பாட்டைச் செய்து இருப்பதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

அடுத்து ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே நல்ல குடிநீர் வசதியை ஏற்படுத்தித் தரும் நோக்கத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் பல நல்ல திட்டங்களை உருவாக்கி, அந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வசதி அளித்து வருகின்றது. அந்தத் திட்டங்

களிலே ஒருசில இடங்களிலே குறைபாடு இருந்தாலும் அந்த குறைபாடுகள் வருமாண்டுகளிலே நிவர்த்தி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் இந்தத் திட்டங்கள் நல்லமுறையிலே நடைபெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டுமனைப் பட்டா. வீட்டுமனைப் பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்யும்போது மாவட்ட அளவிலே நிலங்களை எடுக்கும்போது அந்த நிலங்களை எடுக்கவிடாமல் அவற்றின் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று தடை பெற்று வருகிறார்கள். அதனால் நாம் நினைக்கின்ற அளவுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க முடியவில்லை. இந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படும்போது மாற்று ஏற்பாடு செய்து கொடுக்கின்ற வகையில் அங்கே இருக்கின்ற பட்டா நிலங்களை எடுத்து அந்தப்பகுதி ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மத்திய சிறப்பு நிதி உதவியின் கீழ் இன்று பல திட்டங்கள் தமிழ்நாட்டிலே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் மூலம் பல ஆயிரக்கணக்கான ஆதிதிராவிட மக்களுக்கு பயன்படும் வகையில் 1982-83 ஆம் ஆண்டில் செய்துவரும் பணிகளை எண்ணிப்பார்த்து, தமிழக அரசை நான் பாராட்டு கிறேன். இந்தத் திட்டங்கள் செயல்படும் ஒன்றியங்களிலே மலைவாழ் மக்களும் பயன்படுகின்ற வகையில் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழங்குடி மக்கள் துணைத் திட்டம். இந்த பழங்குடி மக்கள் துணைத் திட்டம் இன்றைக்கு எல்லா மாநிலங்களிலும் சிறப்பாகச் செயல்பட்டாலும் தமிழ்நாட்டிலே இந்தத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் மற்றவர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய வகையில் மிகச் சிறப்பாக நடை பெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பல கோடி மக்கள் வாழும் பகுதிகளுக்கு முதல் கட்டமாக சாலை அமைத்துக் கொடுக்கும் பணியைச் செயல்படுத்துகிறார்கள். இந்த சாலை அமைப்புப் பணியின் மூலம் கடந்த 2, 3 ஆண்டுகளில் பல்வேறு சாலைகள் போடப்பட்டு, அதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்பட்டு வருகின்றது. இந்த திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம் பல கோடி மக்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற அரசை நான் பாராட்டு கிறேன்.

இந்த சாலை போடும் திட்டம், சிறு பாசனத் திட்டம், மருத்துவமனை அமைக்கும் திட்டம் போன்றவை சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்களும் பொருளாதாரத்



துறையிலே முன்னேறுவதற்காக அவர்கள் வாழுகின்ற பகுதி களிலும் பல்வேறு பணிகளை, குறிப்பாக சிறு தொழில்களை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து தோட்டக்கலை மூலம் இன்றைக்கு பல நல்ல திட்டங்களை சேலம் மாவட்டம் கல்ராயன் பகுதியில் ஏற்படுத்தி யிருந்தாலும், அதைப்போன்று ஒரு நல்ல திட்டத்தை கொல்லி மலையிலும் ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். ஏனென்றால் கொல்லிமலை பல கனிகள் விளைகின்ற மலை. கனிவளம் நிறைந்து இருக்கின்ற காரணத்தால் அங்கே 1000 ஏக்கர் நிலத்தை எடுத்து, அரசுப் பழத்தோட்டம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மலைவாழ் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் நிரந்தரமாக சுகாதார முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்க வேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடு பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் மூலமும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமும் பல பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சென்ற ஆண்டு சில இடங்களில் சுகாதார முறையில் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் விளைவாக மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் போர்வெல் போடுகிறார்கள். ஆனால் போர்வெல் போடுவது சிரமமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் தண்ணீர் கிடைக்காமல் 'ஃபெயில்யூர்' ஆகிவிடுகிறது. இந்த நிலையைப் போக்க அந்தப் பகுதிகளிலுள்ள ஊருணிகள், சிறு சிறு ஆறுகள், உள்ள இடங்களில் சிறு நீர்த்தேக்கங்கள் அமைத்து அந்தப் பகுதி மக்களுக்கு சுகாதார முறையில் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இன்னொரு பிரச்சினை. இன்றைக்கு மலைவாழ் மக்கள் என்ற போர்வையில் பலர் நுழைந்திருக்கிறார்கள் என்ற சந்தேகம் ஏற்படுகிறது. மலைவாழ் மக்களுக்கு பல சலுகைகள் கிடைக்கின்ற காரணத்தால் அந்தச் சலுகைகளைப்பெற போலி சான்றுகள் பெற்று, பயனடைந்து வருகிறார்கள். அதனால் உண்மையான மலைவாழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம் 1971 சென்ஸஸ் கணக்குப்படி மலைவாழ் மக்கள் 3 இலட்சம்தான். ஆனால் இன்றைக்கு 5,20,000 பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே இதில் சிறிதளவு தவறு நடந்திருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை தனிப்பட்ட முறையில் கவனித்து, தகுந்த நடவடிக்கை எடுத்து, உண்மை யான பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் சலுகைகள் பெற்று பயன்படும் வகையில் பார்த்து, திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சீ. சிவப்பிரகாசம்] [1983 மார்ச் 31

(முற்பகல் 11-30)

அடுத்து நலிந்த மலைவாழ் மக்களின் நலனுக்காக கூட்டுறவு துறையின் மூலமாக பல சங்கங்களை உருவாக்கியுள்ளார்கள். அந்தச் சங்கங்கள் எல்லாம் பல நல்ல திட்டங்களை உருவாக்கியிருந்தாலும் பெரிய தொழிற்கூடங்களை அவர்களுக்காக உருவாக்க எண்ணி, பழம் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பிக்க மத்திய அரசின் அனுமதியைக் கேட்டு அனுப்பியிருப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பழப் பதனிடும் தொழிற்சாலைக்காக இரண்டு வருடகாலமாகவே மலைவாழ் மக்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில், அதற்கான அனுமதியை மத்திய அரசு தராமல் இருப்பதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக மிகுந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பழப் பதனிடும் தொழிற்சாலையை அவர்களுக்குப் பெற்றுத்தர வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பழங்குடி மக்களுக்கு சொந்தமான நிலங்களை யாரும் வாங்கக்கூடாது என்று ஒரு தனிச்சட்டமே இயற்றப்பட்டிருப்பதாக அறிகிறேன். ஆனால் அந்தச் சட்டத்தை சிறிதும் சட்டை செய்யாமல், பழங்குடி மக்களின் நிலங்களை மற்றவர்கள் பெரிதும் வாங்கி பயன்படுத்துகிற ஒரு நிலை உருவாகி வருகிறது. அந்த மாதிரி நிலை உருவாகிவருவதால், அந்தப் பழங்குடி மக்கள் அவர்களுக்கு அடிமைகளாக இருக்க வேண்டிய சூழ்நிலையும் மெல்ல மெல்ல ஏற்பட்டு வருகிறது. காரணம் தாங்கள் பெற்றக் கடனுக்கு ஈடாக அல்லது வட்டிக்கு ஈடாக அவர்கள் அந்த நிலங்களை மற்றவர்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலங்களில் உற்பத்தியாகும் சாய்கறிகள் பழங்கள் முதலியவை அந்த வட்டிக்கே ஈடாக கொடுக்கப்படும் நிலை இருப்பதால், அவர்கள் தொடர்ந்து கடனாளியாகவும், அடிமைகளாகவும் நடத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அப்படி கடனுக்காக வட்டிக்காக அளிக்கப்பட்ட நிலங்களை அவர்களுக்கே—அந்தப் பழங்குடியினருக்கே—திருப்பி அளிக்கும் வகையில் ஒரு மாற்றுச் சட்டம் கொண்டு வர அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டு நான் கேள்வி கேட்ட நேரத்திலே கூறியிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை விரைவாகக் கொண்டு வந்து, அவர்களுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமாய் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் ஊனந்தோட்டம், முள்ளுக்குறிச்சி, பிரபஞ்சோலை, நடுக்கோம்பை, காரமணப்பட்டி, கார்கடல் பட்டி, வாழவந்தான்கோம்பை போன்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களில் 50 சதவீதத்திற்கு மேல் பழங்குடியினராக இருக்கிறார்கள். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு பல பணிகளைச் செய்துக் கொடுக்கும் திட்டம் அரசின்



1983 மார்ச் 31] [திரு. சீ. சிவப்பிரகாசம்]

பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்னாலேயும் பேசியிருக்கிறார்கள். இப்போதும் அது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தி, நான் மேலே குறிப்பிட்ட என்னுடைய தொகுதி மக்களுக்கு அந்தப் பழங்குடியினருக்கு தேவையான வசதிகளை எல்லாம் செய்துக் கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் முள்ளிக்குறிச்சி வாழவந்தான் பகுதியில் மலைவாழ் மக்களுக்கு என்று ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அங்கே பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் சேர்ந்து படிக்கிறார்கள். அந்தப் பள்ளிக் கட்டிடத்திற்கு தேவையான கட்டிட வசதியில்லை. ஆகவே, அந்தப் பள்ளிக்கு கூடுதல் கட்டிட வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, அந்த மாணவர்களுக்கு அந்தப் பள்ளியில் குடிநீர் வசதியையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கொல்லிமலைப் பகுதியில் பெண்களுக்கு என்று ஒரு பள்ளிக்கூடம் தான் இருக்கிறது. 200 பெண்களுக்கு மேல் அந்தப் பள்ளியில் படிக்கிறார்கள். அந்தப் பெண்கள் அவர்கள் வசிக்கும் மலைவாழ் பகுதியிலிருந்து நெடுந்தூரம் நடந்து வந்து உயர்நிலைப் பள்ளியில் படிக்க வேண்டிய நிலை இருக்கிறது. அங்கேயே தங்கும் வசதிகள் கிடையாது. அதனால் அவர்கள் பள்ளிக்கே வர முடியாத சூழ்நிலையும் ஏற்பட்டு விடுகிறது. ஆகவே, அந்தப் பெண்கள் அந்தப் பள்ளிக்கூடம் இருக்கும் பகுதியிலேயே தங்கிப் படிக்கின்ற அளவுக்கு அங்கே தங்கும் விடுதியும், அவர்களுக்கு என்று தனியாக உயர்நிலைப் பள்ளி ஒன்றையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த சப்-பிளான் மூலமாகவாவது, அல்லது அடுத்த நிதி ஆண்டிலாவது, மலைவாழ் மக்களின் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் முள்ளிக்குறிச்சிப் பகுதியிலிருந்து பூசணிக்குழி வரையில் 20 கிலோ மீட்டர் வரை நெடுஞ்சாலை ஏற்படுத்தி தருவதோடு, வேந்தமங்கலத்திலிருந்து வாசவனூர் பட்டி வரை 20 கிலோ மீட்டர் நெடுஞ்சாலையையும் போட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஆதிவாசி மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சப் பிளேனின் கீழ் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தைத் கொண்டு வந்து, அத்துணை மலைவாழ் மக்களும் வீட்டு வசதியைப் பெற்று நல்வாழ்வு வாழ உதவி செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். அததோடு சக்கரைப்பட்டி பெருமாபட்டி, வல்லைக்குளம் ஆகிய பகுதிகளையும் இந்த சப்பிளேனில் சேர்த்து, அவர்களுக்கும் இந்த வீட்டு வசதி திட்டத்தை கொடுத்து, கொல்லிமலையில் உள்ள

பழங்குடிமக்களும் அதன் பயனை பெற்று, நல் வாழ்வு வாழ வழிச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர் களைக் கேட்டுக் கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று எடுக்கப்பட்டிருக்கிற ஆதிதிராவிட நலனுடைய மானியக் கோரிக்கையிலே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத்துறையில், காங்கிரஸ் ஆட்சி இந்த மாநிலத்திலிருந்து செல்வதற்கு முன், பல திட்டங்களை தீட்டிக் கொடுத்தது. குறிப்பாக வீட்டு வசதி, மனை வாங்கிக் கொடுத்தல், அவர் களுக்கு உதவித் தொகை அளித்தல், தொழிலுக்கு உதவி செய்தல் வீடுகள் கட்டிக் கொடுத்தல், கல்வி வசதி போன்ற பல ஏற்பாடுகளைச் செய்தது. அதை நாடு அறியும்.

ஏனென்றால் அந்தத் துறையிலே தற்போதுள்ள முன்னேற் றத்திலே அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை பொறுத்த அளவில், ஆண்டுக்காண்டு அது கூடுதலாக ஆகியிருக்கிறது, அதிலே மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு அடித்தளம் போட்டது காங்கிரஸ் ஆட்சிதான் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆனால் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், எந்த அளவு நிதி ஒதுக்கீடு ஏறியிருக்கிறதோ அந்த அளவுக்கு செய்ய வேண்டிய காரியங்கள் ஒழுங்காக செய்யப்படுகிறதா என்றால் இல்லை என்று வருத்தத்தோடு கூறவேண்டிய நிலையில்தான் இருக் கிறேன், நான் இப்போது எதைச் சொன்னாலும், அவைகளை எல்லாம் அதிகாரிகளிடமும், அமைச்சரிடமும் பலமுறை முன்பே எடுத்துச் சொன்னதுதான். அதையேதான் திரும்பவும் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். வேறு ஒன்றும் புதியதாக சொல்லவேண்டிய நிலையில் இல்லை என்றும் கூறிக் கொள் கிறேன்.

குறிப்பாக 1983 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28 ஆம் தேதி வரையில் இந்த தாட்கோ நிறுவனத்தின் மூலமாக ஒரு வீடு கூட கட்டிக் கொடுக்கப்படவில்லை. மத்திய அரசும், மாநில அரசும் இதற்காக தொகையை எல்லாம் ஒதுக்குகின்றன. வீடு கட்டிக் கொடுப்போம் என்று அமைச்சர் அவர்கள் கூட சொல்லி இருக்கிறார்கள். ரூரல் வெல்ஃபேர் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக 5 ஆயிரம் ரூபாய் கொடுத்து வீடு கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. 4000 ரூபாய் கடனாகவும் 1000 ரூபாய் மானியமாகவும் கொடுத்து வீடு கட்டுவதற்கு உதவி செய்யப்படும் என்றெல்லாம் நம்முடைய தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் மூலம் இங்கே கணக்கு எல்லாம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதன்படி பணம் வாங்கியும்



வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் பாதியிலேயே நிற்கின்ற ஒரு கேவலமான நிலைமை இருக்கின்றது. இதுகுறித்து வீட்டுவசதி அமைச்சரிடமும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சரிடமும் நான் சொல்லி இருக்கிறேன். அவர்களும் கூட கவனிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் நான் அதுபற்றிச் சொல்லி ஓராண்டு காலம் ஆகிவிட்டது. தென்னாற்காடு மாவட்டத்திலே திருக்கோவிலூரில் பாவந்தூர் என்ற கிராமத்தில் ரூரல் வெல்ஃபேர் ஹவுஸிங் ஸ்கீம் மூலமாக உறுப்பினர் சேர்க்கப்பட்டு ஒரு நபருக்கு 25 ரூபாய் என்று வாங்கப்பட்டு கடந்த மூன்றாண்டு காலமாக அந்த வேலைகள் நடக்கவில்லை. இப்படிப்பட்ட அவல நிலை பல இடங்களில் இருக்கின்றது. அதுபற்றி கடிதங்கள் எழுதியும் கூட நிவாரணம் கிடைக்கவில்லை. மக்கள் வாழாத இடங்களைக் குட்டி சுவர் என்று சொல்லுவர்களே, அப்படி குட்டிச் சுவர்களாக அந்த இடங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே நம்முடைய அரசினிடத்திலே பல்வேறு அதிகாரிகள் இருக் கிறார்கள். அவர்களை அனுப்பி அங்கே என்ன காரணத்தால் வீடுகள் கட்டப்படாமல் தாமதம் ஏற்படுகின்றது என்பதை அறிய வேண்டும். இப்படித் திட்டங்களுக்கு பணம் ஒதுக்கப் பட்டும். அந்தத் திட்டங்கள் நடந்ததா இல்லையா என்று பார்க்கப்படாத நிலைமையில் கேட்பாரற்று கிடக்கின்றது.

அடுத்து பல இடங்களில் அரசு பணம் கொடுத்து இடங்களை வாங்கி ஏழை ஆதி திராவிட மக்களுக்கு பட்டா கொடுக்கப் பட்டிருக்கின்றது, ஆனால் அந்த இடங்கள் எவை எவை என்று சர்வேயரால் சர்வே செய்து கொடுக்கப்படாத நிலைமை இருக் கின்றது. இதுபற்றி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். இப்படிப் பட்ட நிலைமை 10 ஆண்டுகள், 7 ஆண்டுகள், 6 ஆண்டுகள் என்ற அளவிலே இருந்து வருகின்றன. மேலும் சில இடங்களில் கொடுக்கப்பட்ட நிலங்கள் நஞ்சை நிலங்களாகக் கொடுக்கப் படுவதால் பள்ளமாக இருக்கின்றன. எனவே அந்த இடத்திலே அவற்றை விற்றவர்கள் பணம் வாங்கிக்கொண்டது மட்டுமல்லாமல் அந்த இடத்தையும் அவர்களே வைத்துக்கொண் டிருக்கிறார்கள். எனவே அந்த மக்கள் வந்து அந்த இடங்களைக் கையகப்படுத்த முடியாத நிலைமை இருக்கின்றது. ஆகவே இந்த அரசுக்கு பணக் கஷ்டம் இருக்கின்றது என்றால் சிறு சிறு உதவி களுக்குக் கொடுக்கின்ற பணத்தை நிறுத்தி அந்தப் பணத்தை வைத்து பள்ளமான இடங்களை மேடாக ஆக்கவேண்டும். அல்லது அந்த இடத்தை வாங்குவதற்குக் கொடுத்த பணத்தை வாங்கி வேறு இடங்களை, மேடான இடங்களை பெற்றுக் கொடுப் பதற்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். ஆகவே இந்தப் பிரச்சினையில் நாம் முறையாக செய்யத் தவறி இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட் என்பதில் 1983-84 ஆம் ஆண்டுக்கான அந்த பட்ஜெட்டில் ஆதி திராவிடர்களுக்கு என்று கொடுக்கப்பட்ட குறிப்பில் 40-வது பக்கத்தில் ட்ரெயினிங் கம் ப்ரடக்ஷன் சென்டர் என்று இருக்கின்றது. அப்படி ட்ரெயினிங்

கொடுக்கப்பட்டும், ஸ்டைஃபன்ட் கொடுக்கப்பட்டும், ஃபாலோ அப் ப்ராகிராம் இல்லாத காரணத்தால் எந்தவிதமான பயனும் இல்லாத நிலைமை இருக்கின்றது. இதனால் நஷ்டம்தான் ஏற்படுகின்றது. ஆகவே ஃபாலோ அப் ப்ராகிராமிற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அடுத்து 11—வது பக்கத்திலே காந்தி மெமோரியல் அவார்ட் என்று மெரிட் ஸ்காலர்ஷிப் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுப்பது பற்றி இருக்கின்றது. நலிந்த பிரிவினரான ஆதிதிராவிட மக்கள் அறிவு பெற்று நிரம்ப மார்க்குகள் வாங்கினால் அவர்களுக்கு அவார்ட் கொடுக்கப்பட வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கின்றது. ஆனால் அப்படி பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதுவரையில் 2 ஆண்டுகளுக்கு மேலாகியும் அந்த அவார்ட் கொடுக்கப்படவில்லை, எனக்குத் தெரிந்த 5 மாணவர்களுக்கு இன்னும் கொடுக்கப்படவில்லை, இரண்டு ஆண்டுகள் ஆகியும். அதுபற்றி ஆதிதிராவிட நலத்துறையைச் சேர்ந்த வெல்ஃபேர் டைரக்டரிடம் போய்க் கேட்டால் டைரக்டர்ஆஃப் எக்ஸாமினேஷன்-லிருந்து இன்னும் பதில் வரவில்லை என்று சொல்கிறார்கள், அவர்களிடம் போய்க் கேட்டால் ஆதிதிராவிட நலத்துறையைச் சேர்ந்த வெல்ஃபேர் டைரக்டரிடமிருந்து பதில் வரவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை கடந்த இரண்டு ஆண்டுகளாக திருப்பனந்தாள் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்களுக்கு இருக்கின்றது. எனவே இது குறித்து அந்த இரண்டு இடங்களுக்கும் நான் கடிதம் எழுதினேன்.

(முற்பகல் 11-40)

இதுவரையில் எனக்கு பதில் கிடைக்கவில்லை. இதை ஒரு உதாரணத்திற்காக சொல்கிறேன். அதைப்போலவே 21ம் பக்கத்தில்

Financial assistance to Law Graduates

என்று இருக்கிறது. அதற்கு நான் நன்றியை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்ரோல்மெண்டுக்கு 750 ரூபாயும், புக்ஸ் வாங்குவதற்கு 750 ரூபாயும் அரசாங்கம் கொடுப்பதிலே நான் சந்தோஷப்படுகிறேன், பாராட்டுகிறேன். இன்று இருக்கிற ஒரு சர்ச்சையான பிரச்சினை அடுத்த மாதம் ஏப்ரல் மாதம் பரிட்சை தொடங்குகிறது. நான் குறிப்பாக சொல்கிறேன் அதிகாரிகள் அதை வெரிபை பண்ண வேண்டும் என்பதற்காகத்தான் ரெக்கார்டுக்காகத்தான் சொல்ல வேண்டிய அவல நிலையில் இருக்கிறேன். அந்த மாணவர்கள் சென்னையில் சட்டக்கல்லூரியில் ஏற்பட்ட ஒரு மாணவன் தகராறு. புதிசின மாணவன் அல்ல, பின்தங்கிய மாணவன் அல்ல, யாரோ ஒரு மாணவனுக்கும் போலிசாருக்கும் தகராறு. அந்தத் தகராறு கோர்ட்டில் இருக்கிறது. ஆனால் அந்தவிடுதி மூடப்பட்டுவிட்டது அதற்கு பல்வேறு காரணங்களை பலசாக்குபோக்குகளைசொல்லுகிறார்கள். ஆனால் அவர்களுடைய ஸ்காலர்ஷிப் அமௌண்ட் கொடுக்கப்படவில்லை



9-3-83—ம் தேதி அந்த சட்டக்கல்லூரியிலே விடுதி காப்பாளராக இருக்கின்றவர் ஒரு மாணவனுக்கு 200 ரூபாய் என்ற முறையிலே அதுகூட ஆதிதிராவிடர்நல துறையில்உள்ள டைரக்டர்அவர்களும் செகரட்டரி அவர்களும் உடனடியாக இந்த பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சருடைய நல்ல எண்ணத்தோடு சொல்லப்பட்ட பிறகும் ஸ்காலர்ஷீப் கொடுக்கப்படவில்லை. அவர்கள்

Hostel welfare Deposit amount.

லிருந்து கொடுத்திருக்கிறார்கள். அந்த நிலை தவறானது. ஏன் இதுவரையில் கொடுக்கவில்லை. எனக்குத் தெரிந்த தகவல் உண்மையாக இருக்குமானால் நம்முடைய டைரக்டர் மூலமாகவும், டைரக்டர் ஆபிஸ் மூலம் அல்லது செகரட்டரி மூலம் அல்லது டிபார்ட்மென்டு மூலம் பணம் அவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை பாங்கில் வைத்து இருக்கிறார்களா அல்லது செக்கை மாற்றினார்களா, இல்லையா அது கொடுக்கப்பட்டும் ஏன் இவ்வளவு நாட்களாக கொடுக்கப்படாமல் இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை.

இதேபோல் தான் தாட்கோவில் கூட 1983ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி வரையிலும் ஒரு வீடுகூட கட்டப்படாததால் அவர்களுக்கு ஒதுக்கிய பணம் தேசிய வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கிறதா? நாங்கள் அந்தப் பணத்தை யாரும் எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லவில்லை. ஆனால் எந்த பாங்கில் வைத்து இருந்தாலும் சரி, அல்லது வைக்காமல் செலவழித்து இருந்தாலும் சரி, 1983ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி வரையிலும் நமக்கு ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்படவில்லை. இதை அமைச்சர் அவர்கள் என்ன காரணம் என்று கேட்டாலொழிய அந்த உண்மை விவரம் தெரியாது ஆகவே அதை அமைச்சர் அவர்கள் கேட்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே பக்கம் 29ல்

Admission in Educational Institutions

என்று போட்டு இன்ஜினியரிங் காலேஜில் 1971-72ல் 4.37 சதவீதம் பிறகு 1981-82ல் 8.6 சதவீதம் என்று கொடுத்து இருக்கிறார்கள். இதற்கு 2 காரணங்கள் சொல்வார்கள். அந்தப் பிரிவுகள் மாணவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள், நேற்று கூட ஒரு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அவர்கள் மனு போடவில்லை. அதனால் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால் பிள்ளைகளிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அங்கு இருக்கின்ற பிரின்ஸிபால்கள் அவர்களுக்குக் கொடுக்காமல் தட்டிக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாக்க சொல்ல வேண்டுமானால் இன்றைக்கு எம். ஏ., எம்.ஈ.டி., எம்.ஏ., பி.எட். படித்த பிள்ளைகள் எட்டத்தட்ட 5 ஆயிரம் பேர் வேலை இல்லாதவர்களாக

இருக்கிறார்கள். அந்த வேலை அற்றவர்களில் 1500 பேர் ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காரணம் அவர்களுக்கு படிப்பதற்கு வாய்ப்பாக இன்ஜினியரிங் கல்லூரியிலே அல்லது வேறு சப்ஜெக்டுகளில்

Phys cs, Chemistry and Economics

என்ற இனங்களில்கூட இடம் கொடுக்கவில்லை. குறிப்பாக இப்போது பிள்ளைகள் எந்தக் கல்லூரியானாலும் நீங்கள் ஒரு லிஸ்ட்டை வாங்கிப் பாருங்கள் இவர்களுக்கு இஸ்ட்டரி தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த மாணவர்களில் ஒரு சில மாணவர்கள் தவறான மாணவர்களாக இருக்கலாம். சோம்பேறிகளாக இருந்துகொண்டு இருக்கலாம். அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டதை இவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று ஒரு இன்ஸ்டிரக்ஷனை நாம் கொடுக்க வேண்டும். இந்த சதவீதம் என்று சொல்லும் போது இந்த அரசு உத்தியோகத்திலே கொடுத்து இருப்பதைப் பார்த்தாலே அவர்களுடைய சதவீதம் முழுமையாக கொடுக்கப்படவில்லை என்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கிறது. அரசு உத்தியோகத்தில் 12.47 சதவீதம் கொடுத்து இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது 18 சதவீதம். அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மலைவாழ் மக்களைச் சேர்ந்தவர்கள் படித்தவர்கள் இல்லையா? நான் ஆல் இந்தியா கமிட்டி சேர்மேனாக இருந்த போதுகூட இதே கேள்விதான் 1969ல் நெய்வேலியில் வந்தது. நான் நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் சேர்மேனைக் கேட்கிறபோது

Qnalified candidates are not available

என்று சொன்னார்கள். நான் உடனே அங்கு இருக்கிற எம்ளாய்மென்டு எக்சேஜ் ஆபிஸரைக் கூப்பிட்டு குவாலிபைய்டு கேண்டிடேட்ஸ் இருக்கிறார்களா இல்லையா என்று கேட்டேன். அவர்கள் Qualified candidates are available among Scheduled Castes என்று சொல்லி இத்தனை டாக்டர்கள், இத்தனை இன்ஜினியர்கள் இத்தனை கிராஜ்வேட்ஸ் இருக்கிறார்களென்று சொன்னார்கள். பிறகு இரண்டு பேரையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து நீங்கள் சொல்வது சரியா? நீங்கள் சொல்வது சரியா என்று கேட்ட போது மிக வருத்தமான நிலைமை உண்டானது. அதேபோல் இங்கு 18 சதவீதம் என்று பெருமையாகச் சொன்னாலும் அரசாங்க உத்தியோகத்தில் 12.47 சதவீதம் தான் நாம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால் குவாலிபைய்டு கேன்டிடேட்ஸ் இல்லையென்று கருத்து உண்டாகிறது.

அதேபோல் public undertakings, public sectors பார்த்தாலும் அதிலும் 12 சதம்தான் போடப்பட்டு இருக்கிறது. அதிலே என்ன கஷ்டம்? உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் விஷயத்தை நான் சொல்லித்தான் ஆகவேண்டும், வேறு வழியில்லை. ரேஞ்சர் போஸ்ட் கோயம்புத்தூரிலே டிரெயினிங்கிற்காகக் கேட்டார்கள். 40பேர்கள் அனுப்பப்படும் என்று சொன்னார்கள். சுமார் 27 ஆதி திராவிட





சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அக்ரிகல்சர் படித்துத் தகுதியானவர்கள் வந்தார்கள் என்றாலும்கூட அந்த 27 பேர்களில் ஒருவர் கூட எடுக்கப்படவில்லை. வனத்துறை அமைச்சரவர்களிடம் இதைக் கேட்டபோது கட்டாயம் இளையபெருமாள் நான் இதை விசாரிக்கிறேன், செய்வேன் என்று உறுதிமொழி சொன்னார்கள், ஆனால் செய்யவேயில்லை. இதையெல்லாம் டிபார்ட்மெண்ட் கண்காணிக்க வேண்டும். கொடுக்கிறார்களா இல்லையா என்பதைப் பார்க்கவேண்டும், கேட்கக்கூட ஆள் இல்லையென்றால் எப்படிக் கொடுப்பார்கள்? அவர்களுக்குக் கொடுப்பதே பாவமென்றும் அவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி பல சர்ச்சைகளை உண்டாக்குகிறார்கள், இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிற காலத்திலே நம்முடைய டிபார்ட்மெண்ட் கண்காணிப்பாக இருந்தால் இது நடைபெறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன், வடாற்காடு மாவட்டத்திலே திமிரி பஞ்சாயத்து யூனியனிலே விளாப்பாககம் என்ற இடத்திலே குடிநீர் கேட்டார்கள். நான் ஜாதியன்ற முறையிலே சொல்லவில்லை. இந்து சகோதரர்கள் இருக்கிறார்கள். மற்றவர்கள் சொல்கிற வார்த்தையை நான் சொல்கிறேன், ஜாதி இந்துக்களுக்கு டேப் ஒன்று இருக்கிறது. அங்கே ஆதிதிராவிடர் வசிக்கிற இடத்திலே தண்ணீர் இல்லை. ஆனால் கலெக்டரிடத்திலே நான் ஒரு கடிதத்தைக் கொடுத்தேன், அவர்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்று டேப் கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்கள். ஆனால் மூன்றாவது நாள் அதைக் கேட்ட ஆசிரியர் படுகொலை செய்யப்பட்டார். இன்றுவரையிலும் சாட்சியம்—அரிசனங்கள் தான் சொல்வார்கள், வேறு யார் சொல்வார்கள் — வேறு யாரும் சொல்லவில்லை என்பதால் அந்த கேஸின் நிலை என்ன ஆயிற்று என்றுகூடத் தெரியவில்லை. ஏன் இதை நான் சொல்கிறேன் என்றால் உரிமை, உரிமையென்று சட்டத்தில் கொடுத்து உரிமையைக் கேட்கத் துணிகிற மக்கள் கொலை செய்யப்படுகிறார்கள். அந்த இடங்களுக்கெல்லாம் அமைச்சர் நேரிலே சென்றால் அந்த மக்களைப் போய்ப் பார்த்தால் அவர்களுக்கு ஒரு நம்பிக்கை வரும். தைரியம் வரும், அது மாத்திரமல்ல, அதிகாரிகள் நினைப்பார்கள், நம்முடைய அமைச்சர் வருகிறாரென்று. உண்மையைக் கண்டுபிடிக்க முடியும், சில இடங்களுக்கு நேரிலே போனால்தான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும். மந்திரி எல்லா இடங்களுக்கும் போகமுடியாது........

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொல்கிற அந்தப் பகுதிக்கு அந்தப் பிரச்சினை ஏற்பட்டவுடனே நான் சென்று மாவட்ட ஆட்சித் தலைவரோடும், எஸ்.பி.யோடும் பேசி தேவையான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறேன். குறிப்பிட்ட அந்த வழக்கு எந்த அளவிலே இருக்கிறது என்ற விவரம் எனக்குத் தெரியாது. நான் அந்தப் பகுதிக்குச் சென்று தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள்: உடனே சென்றிருந்தால்—மூன்று மாதம் வரையிலும் நான் போய் வருகிற வரையில் அமைச்சர் போகாமல் இருந்தார்—போய் இருந்தால் மகிழ்ச்சி.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: நடந்தவுடனே போய் இருக்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: அமைச்சர் அவர்கள் நடந்தவுடனே சென்றிருந்தால் பாராட்டத்தக்கது. போகவில்லையென்றால் குறையாக இருக்கும் என்பதால் சொன்னேன். நம்முடைய குறிப்பிலே பெர்பார்மென்ஸ் பட்ஜெட் 1983-84இல் 46வது பக்கத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது.

.02 lakhs has been provided for the year 1983-84

என்று டியுஷன் கொடுக்க வேண்டியவர்களுக்கு உதவி செய்வதற்காகச் செய்திருக்கிறோம் 1979-80 ஆம் ஆண்டில் 1980-81, 1982-83 இல் ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டதா இல்லையா? என்ன காரணம்? அது மட்டுமல்ல சில இடங்களிலே நடக்கிறது, சில இடங்களிலே நடக்கவில்லை, வெல்பர் ஆபிசரைக் கொண்டு, தாசில்தாரர்களைக் கொண்டு விசாரித்துப் பார்த்து உண்மையைக் கண்டறிய வேண்டும். அந்த நிர்வாகம் ஒழுங்காக இருக்குமானால் அவர்களுக்குக் கொடுங்கள். ஆனால் கொடுக்கிற பணத்தை 50, 100 என்பதைவிட கொஞ்சம் உயர்த்திக் கொடுக்கலாம், தகுதியாக இல்லையென்றால் அந்தப் பணத்தை வேறு காரியத்திற்கு உபயோகப்படுத்தலாம், வீணாகாமல்; நடத்தாமல் பணம் வாங்கக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது. பக்கம் 47இல்

Special component plan - Central Assistance

கொடுக்கிறோம். 1408.62 லட்சம் 1981-82இல் நாம் செலவழிக்கப் பணம் கிடைத்திருக்கிறது. ஆனால் அதன் பிரகாரம் ஒரு வருஷம்தான் அந்த ஸ்கீம் இருந்ததாக அறிகிறேன், நான் அறிந்த தகவல் உண்மையாக இருக்குமானால் ஒரு வருஷமாக நடத்தப்பட்டது, மீண்டும் சரியாக இல்லையென்று சொல்கிறார்கள். அமைச்சர் அவர்களிடத்திலே நான் கேட்டுக்கொள்வது, அந்த ஸ்கீம் எந்தெந்த இடங்களில் இருக்கிறது, என்னென்ன பலன்களை யார் பெற்றார்கள்,

(முற்பகல் 11-50)

அந்த ஸ்கீமில் ஃபாலோ-அப் புரொக்ராம் இருக்கிறதா? லோனாக கொடுத்தோமோ? ஆனால் லோன் வாங்கியவர்கள் ஒழுங்காகச் செய்கிறார்களா இல்லையா என்பதை நாம் பார்க்க வேண்டும். ஏதோ அரசாங்கம் கொடுக்கிறது, அதை வாங்கி ஏமாற்றலாம் என்று எண்ணுகிற நிலைமையில் அவர்கள் இருப்பார்களானால் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களிடத்திலே கூடச் சொல்லியிருக்கிறேன், நாம் அவர்



களுடைய முன்னேற்றத்திற்காகக் கொடுக்கிறோம். நாம்
சோம்பேறிக்கு கொடுக்கிறோம் என்று சிலர் எண்ணுவார்களா
னால், அது யாராக இருந்தாலும் சரி. தகுதியுள்ளவர்களாக
இருந்து பணம் பெற்று அதை ஒழுங்காக உபயோகப்படுத்தவில்லை
யென்றால் அந்தப் பணங்களை நாம் நிச்சயமாக வசூல் செய்ய
வேண்டும். அதில் ரத்து செய்வதென்ற பிரச்னைக்கே இடம்
கொடுக்கக்கூடாது, என்ற என்னுடைய எண்ணமாக சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் எந்த நல்ல நோக்கத்திற்கு
செய்கிறோமோ அந்த நல்ல நோக்கம் நடைபெறவில்லையென்
றால் பாவமான காரியத்திற்கு நாம் உடந்தையாக இருப்பதாகச்
செய்துவிடும்.

பக்கம் 55-ல் சொல்கிறபோது செக்ரிகேஷன் இல்லாமல் செய்
வதற்கு அரசு திட்டம் இருக்கிறதென்று சொன்னார்கள். கடந்த
மூன்று நான்கு மாதங்களாக நடக்கிற வாக்குவாதங்களில்
மத்திய அரசு, மாநில அரசு என்ற எண்ணங்களுக்கு பிரச்னைக்கு
இடமே இல்லை. செக்ரகேஷன் இருக்கக் கூடாதென்று சொல்
வதானது அது மத்திய அரசிற்கும் அந்தக் கொள்கைதான்;மாநில
அரசிற்கும் அந்தக் கொள்கைதான். ஆனால் அவர்கள் செய்ய
வில்லையே, நாங்களும் செய்யவில்லை என்ற எண்ணத்திற்கும்,
பிரச்னைக்கும் இடம் கொடுக்கக் கூடாது. அந்த முறைப்படி
தமிழகத்திலே எத்தனை இடங்களில் ஆதிதிராவிட மக்களோ
அல்லது ஆதிதிராவிடர் அல்லாத மக்களோ ஒன்றாகச் சேர்ந்து,
அவர்கள் பிராமணர்களாக இருந்தாலும் சரி, அரிசனங்களாக
இருந்தாலும் சரி அல்லது எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்
களாக இருந்தாலும், சாதிவேற்றுமை இல்லாமல் நாங்கள் ஒன்று
பட்டு மனிதர்களென்ற முறையிலே வாழ்வோமென்று ஒருவார்
களானால் அவர்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். கிராமப்
பகுதிகளில், ஏதோ ஒரு கிராமம்கூட; பக்கத்திலே அவர்களுக்கு
இடம் கையகப்படுத்தி வருகிறோமென்று சொல்ல முடியாது.
அப்படி வருகிறபோது மூன்று பர்லாங் தூரம், அல்லது ஒரு
மைல் தூரம் என்று எடுத்திருப்பதனால் பல சங்கடங்கள் அவர்
களுக்கு ஏற்படுகின்றன. காரணம் அவர்களுக்கு தனி கிணறு,
தனி ரோடு, தனி சுடுகாடு, அந்த சுடுகாட்டிற்கு தனி ரோடு என்று
இப்படி 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாக கேட்டுக்கொண்டே இருக்
கிறார்கள். வீட்டை வாங்கிக் கொடுக்கிறோம்; நிலத்தை வாங்கி
கொடுக்கிறோம்; ஆனால் தேவை மட்டும் அவர்களுக்கு அப்படியே
இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே வருங்காலத்திலாவது எந்த
கிராமத்திற்கு எடுக்கிறார்களோ அந்த கிராமத்திற்கு அருகிலேயே
நீங்கள் இடம் வாங்கி அதற்கு ஏற்பாடு செய்தாலொழிய நீங்கள்
போடுகிற திட்டங்கள், நீங்கள் போடுகிற பணம், நீங்கள் என்ன
எண்ணம் எண்ணுகிறீர்களோ அந்த நல்ல எண்ணத்திற்கு நல்ல
பயன் இல்லாமல் போய்விடும். ஆகவே செக்ரிகேஷன் இல்லாமல்
செய்வோம் என்று சொல்கிறோமே, தவிர அதை நடைமுறையில்
செய்வதற்கு வழிவகை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். பல இடங்களில் மக்கள் கல்யாணம் செய்து கொடு
வதற்கு, மற்றவைகளுக்கு நாகரீகமாக செய்ய வேண்டுமென்றால்
சத்திரங்கள் கிடைப்பதில்லை. தெரியாமல் கொடுத்தால் இடம்

கிடைக்கிறது. சில இடங்களில் நல்லவர்கள் இருக்கிறார்கள்.
அவர்கள் கொடுக்கிறார்கள். குறிப்பாக ஒன்றைச் சொல்ல
விரும்புகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில், ஸ்ரீபெரும்புதூர்
நகரத்தில் 40 சத்திரங்கள் இருக்கின்றன. நான் ஒரு கல்யாணத்
திற்குக்கூட சென்றிருந்தேன். என்னுடைய அனுபவத்தைச்
சொல்கிறேன். ஒரு காங்கிரஸ்காரர் ஒரு சத்திரத்தை கல்யாணத்
திற்காக அரிசன பையனுக்காகக் கொடுத்தார். நானும்
கல்யாணத்திற்குப்போய் வந்தேன். வந்த மூன்றாம் நாள் அந்த
பையனின் அப்பாவிற்கு டி; அந்த மாப்பிள்ளை பையனுக்கு
அடி: அதுமட்டுமல்ல. சத்திரக்காரர்கள் அத்தனை பேரும் அங்கு
ஒன்றாகச் சேர்ந்து நீ எப்படி அந்த இடத்தைக் கொடுத்தாய்?
இனிமேல் கொடுத்தால் உன்னுடைய சத்திரத்தை உடைத்து
விடுவோம் என்று சொல்லிவிட்டதால், இப்போது அங்கு யாரும்
சத்திரத்தைக் கொடுப்பதில்லை. இதையெல்லாம் குற்றச்
சாட்டாக ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
உங்களிடத்தில் சொல்லவில்லை. நான் அமைச்சர் அவர்களிடத்
தில் கேட்டுக்கொள்வது ஒவ்வொரு தாலூகா ஹெட்குவார்ட்டர்
சிலும் கம்யூனிட்டிசென்டர் என்ற பெயராலே-வில்லேஜிற்கு ஒன்று
என்று கட்டிக்கொடுத்து அந்த ஊரிலும் பயன்படுத்தாமல்,
மக்களுக்கும் பயன்படாமல் வீணாகப் போவதைவிட—தாலூகா
தலைநகரங்களில் ஜில்லா தலைநகரங்களில் கட்டிக்கொடுக்கலாம்.
நாம் 16 ஜில்லாக்களை வைத்திருக்கிறோம். அந்த ஜில்லா
தலைநகரங்களில் ஒரு கம்யூனிட்டி சென்டர் கட்டிக்கொடுத்
தால் உபயோகமாக இருக்கும். நாம் ஜாதியற்ற சமுதாயத்தைப்
செய்தவர்களாக ஆவோம்.

வடாற்காடு மாவட்டத்தில் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்
கிறேன். எல்லாவற்றையும் அமைச்சர் அவர்களின் ஜில்லாவைப்
பற்றியே சொல்ல வேண்டியிருக்கிறது. நான் போய் வந்ததால்
இந்தச் சொல்கிறேனே தவிர, குற்றமாகச் சொல்லவில்லை.
போளூர் தாலூக்காவில், வாயூர் என்ற ஊரில் காடுக்கப்பட்ட
தண்ணீர் வசதி மற்ற சகோதரர்களுக்கு இருக்கிற இடங்களில்
தண்ணீர் கிடைக்கிறது—ஆதிதிராவிட, தாழ்த்தப்பட்ட மக்கள்
வாழ்கிற இடங்களில் தண்ணீர் கிடைபபதில்லை. தண்ணீருக்
காக தொலைதூரம் அவர்கள் செல்லவேண்டிய அவசியம் இருக்
கிறது. இங்கே இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்-
ஒவ்வொரு தாலுக்காவிலும் தாலுக்கா தாசில்தார்
இருக்கிறார். ஆதிதிராவிடர் தாசில்தார் இருக்கிறார்.
ரெவின்யூ இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அவ்வளவு பேர்கள்
இருந்தும் அங்கே தண்ணீர் இருக்கிறது, கிடைக்கிறது; ஆனால்
அங்கே இவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதில் வாட்ச் டாக்
வேலைதான் நம்முடைய வேலை. வெல்பர் டிபார்ட்மென்ட்களில்
பச்சையாகச் சொன்னால் தாசில்தார்கள் இரண்டுபேர்கள் இருக்
கிறார்கள். ஒருவர் ரெகுலர் தாசில்தார், மற்றொருவர் வெல்பர்
தாசில்தார். ரெகுலர் தாசில்தாரும் அய்யர்தான்; வெல்பேர்
தாசில்தாரும் அய்யர்தான்; நான் மற்ற சாதிகளைக்கூடச் சொல்ல
வில்லை. ஆனால் ரெகுலர் தாசில்தாருக்கு கிடைக்கிற மரியாதை



ஆதிதிராவிடர் தாசில்தாருக்குக் கிடையாது. ஆதிதிராவிடர்
தாசில்தாராக வந்த அய்யரும் அரிசனராக, தீண்டத்தகாதவராக
நினைக்கப்படுகிறார். இதை இல்லையென்று மறைத்து
பிரயோசனமே இல்லை. ஆர். டி. ஓ-க்களுக்கும்கூட இதே கதி
தான். ரெகுலர் ஆர்.டி.ஓ. வந்தால் உடனே தோட்டி, தலையாரி,
கணக்கப்பிள்ளை எல்லோரும் கையைக் கட்டிக்கொண்டு நிற்
கிறார்கள். நம்முடைய டிபார்ட்மெண்டிலே உள்ள ஆர். டி. ஓ.
கேடரில் உள்ள அதிகாரிகள் போனால் அந்த கணக்கப்பிள்ளை
வருவதில்லை. பழைய கணக்கப்பிள்ளையை நான் சொல்கிறேன்.
இப்போது இருக்கிற கணக்கப்பிள்ளையைப் பற்றிய நிலைமை
எனக்குத் தெரியாது. இப்பொழுது கணக்குப் பிள்ளை என்ன
செய்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது. (குறுக்கீடு) ஆளே
இல்லையா? அந்த நிலைமை எனக்குத் தெரியாது. ஆகவே,
இந்த அவல நிலைமையை ஏன் சொல்கிறேன் என்றால், இதனை
மந்திரி செய்ய வேண்டாம். ஆனால், செக்கரட்டரி லெவலில்,
டைரக்டர் லெவலில், அடிஷனல் செக்கரட்டரி, அண்டர்
செக்கரட்டரி போன்ற கெசடட் ஆபிசர்களிடம், கலெக்டரிடம்
சொல்லி, எங்கேயாவது ஒருவரைக் கண்டித்தாலொழிய இந்த
அவல நிலைமை, அவமான நிலைமை போகாது. குறிப்பாக,
வேலூர் டவுனில் வெங்கடேஸ்வரா டவுன் ஹைஸ்கூல் ஒன்று
இருக்கிறது. காமராஜர் பொறுப்பிலே இருக்கும்போது இரண்டு
செட் குழந்தைகளுக்குத் துணி கொடுத்தோம். அது அப்பொழுது
நன்றாக ஒழுங்காக நடந்து வந்தது. என்னம்மா தெரியவில்லை,
சரியாகப் பணம் கிடைக்கவில்லையோ, துணி கிடைக்கவில்லையோ
தெரியவில்லை, ஒரு செட்தான் சென்ற ஆண்டு கொடுத்தார்கள்.
அந்த ஒருசெட் என்னவாயிற்று? அந்தத் துணிகூட பிள்ளைகளால்
போட்டுக்கொள்ள முடியவில்லை. எடுத்து மாட்டினால் மாட்ட
முடியாத நிலைமை இருக்கிறது. இதை ஏன் உங்களுக்குச்
சொல்கிறேன் என்றால், இது பெரிய விஷயமல்ல. துணி கொடுக்
கிறோம். அந்தத் துணியைப் பிள்ளைகளிடம் கொடுத்து, ஒழுங்
கான டெயிலரிடம் கொடுத்து, தைத்தால்தான் சரியாக
இருக்கும். 5 வயது பையனுக்கு 10 வயது பையன்
அளவுக்கும் தைப்பதும் கூடாது; 10வயது பையனுக்கு 5 வயது
பையன் அளவுக்குத் தைப்பதும் கூடாது. ஏதோ கணக்கு
எழுதுவதும், பணம் கொடுப்பதும் என்ற நிலை கூடாது என்று
நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று கோயம்புத்தூர் ஜில்லாவிலே, கல்லுக்குழி
என்ற பள்ளமான இடம் இருக்கிறது. கடந்த 3, 4 ஆண்டுகளாக
அங்குள்ள மக்கள் அவதிப்படுகிறார்கள். நம்முடைய அமைச்
சருக்கும் சொன்னோம், முதலமைச்சருக்கும் சொன்னோம்,
நானும் சொன்னேன். அதற்குப் பதிலாக வேறு இடம் கொடுப்
பதாகச் சொன்னார்கள். நகரத்தின் பகுதியிலே, இராமநாதபுரம்
என்ற இடம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அந்த இடத்திலே
என்ன இருக்கிறது என்றால், அங்கே பழைய காலத்து
ரெக்கார்டில், டிரை லாண்ட் என்பதை வெட் லாண்ட் என்று
எழுதி வைத்துவிட்டார்கள். அதுபற்றி கலெக்டரிடம் சொல்லி,

வெட் லான்ட் என்று ரெக்கார்டிலே இருக்கிறதே ஒழிய, அது டிரை லான்ட்தான் என்று சொல்லி, சர்ட்டிபிகேட் கொடுத்து விட்டார். சர்ட்டிபிகேட் வந்து விட்டது, என்ன கஷ்டம்? ஏன் 3 வருஷம் பென்டிங்காக இருக்கிறது? ஆகவே, எங்கோ அந்த மெஷினரி சரியாக இல்லையென்று அந்தச் சந்தேகத்திற்கும் வருத்தத்திற்கும் இடம் இல்லாமல் அதை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, ஆதிவாசிகளுக்கு நலத் துறையிலே நாம் நல்லது செய்திருக்கிறோம், இல்லையென்று சொல்லவில்லை. ஆனால், இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டிய நிலைமை யிருக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவில், அந்த ஆதிவாசி மக்கள் ஏழைகளாக இருப்பதனால், காடுகளில் போய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் பொய் வழக்குகள் போடுகிறார்கள். குறிப்பாக, கோயம்புத்தூர் ஜில்லாவில் மேட்டுப்பாளையம், பரளி, மாஞூர், அத்திக்காவூர், பில்லூர், ஆகிய இடங்களில் சிலர் வேலையாளாக கள்ளக் கடத்தல் செய்து கொண்டிருந்தார்கள், அந்தக் கடத்தல் பேர்வழிகளுக்கு இவர்கள் உடந்தையாக இருக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். இவர்கள் சங்கம் அமைத்து, நாங்கள் இனிமேல் அந்தத் தொழிலைச் செய்ய மாட்டோம். அரசாங்கத்தின் உத்தரவை மீற மாட்டோம் என்று சொன்னதற்காக, நேற்று உதவி செய்தவர்கள், இன்றைக்கு இவ்வளவு விழிப்புணர்ச்சியோடு இருக்கிறார்கள் என்ற கோபத்தினால், இவர்கள் பேரில் பொய் கேஸ் போட்டு, அவர்களுக்குத் தொல்லைக் கொடுத்து, அவர்களை வேலையற்ற நிலைமைக்கு உண்டாக்கி, மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள், இது சிறு விஷயம்தான். ஆனால் கேட்பார்கள் இல்லை. கோயம்புத்தூர் வெல்பேர் ஆபீசருக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவர் என்ன செய்தார்? எப்படி. ஏன், இது விடுபட்டது என்று எனக்குப் புரியவில் ல.

நகரத்தை எடுத்துக் கொண்டால், சில விஷயங்களைக் குறிப்பாகச் சொல்லி முடித்து விடுகிறேன். சேத்துப்பட்டு என்ற இடம் தீக்கிரையாகி இருக்கிறது. நான் பல தடவைச் சொல்லி யிருக்கிறேன். 1980 ஆம் ஆண்டு நடந்தது. வீட்டுவசதி வாரியம் எடுத்துக்கொள்ளட்டும், அல்லது ஆதி திராவிட நலத் துறையில் எடுத்துக்கொள்ளட்டும். அல்லது அந்த இடத்தைப் பட்டா செய்து கொடுங்கள். கொடுக்க முடியவில்லையென்றால், நீங்களே வீடுகட்டி, வாடகைக்கு விடுங்கள். ரெவினியூ அமைச்சர் அவர்கள் சொன்னாகள், அது உண்மையான தகவலாக இல்லாமல் உண்மைக்கு மாறுதலாக இருக்கிறதோ என்று கூட நான் அச்சப்படவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். ரூ. 2,000 அவர்களுக்கு வீடு கட்டக் கடன் கொடுக்கப்பட்டதாகச் சொன் னார்கள். ஆனால், இதுவரையிலும் ரூ. 1 கூட கொடுக்க முடியவில்லை. நான் ஏன் இந்த நலத் துறையைச் சொல்கிறேன் என்றால், நாம் தான் கஸ்டோடியனாக இருக்கிறோம். நாம் தான் அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நீங்கள் செய்ய வேண்டும்.



சென்ட்ரல் ஜெயில் பக்கத்திலே சத்தியவாணிமுத்து நகர் என்ற இடம் ஒன்று இருக்கிறது. அந்த இடத்திலே 1909 ஆம் வருஷம் அவர்கள் குடி புகுந்திருக்கிறார்கள். பத்திரம் இருக் கிறது. அது தனிப்பட்டவர் இடம். அவர் கொடுத்து விடுகிறேன் என்று எழுதிக் கொடுத்துவிட்டால், இது வரையில் 1909 ஆம் வருஷத்திலிருந்து 1983 ஆம் வருஷம் வரையிலும் வெள்ளைக்காரன் காலத்திலேயிருந்த லேபர் டிபார்ட்மென்டுக்கு, பிறகு காங்கிரஸ் காலத்திலே அரிசன் வெல்பேர் டிபார்ட் மென்ட், இன்றைக்கு நம்முடைய காலத்திலே ஆதி திராவிடர் நலத் துறை என்று எல்லோருக்கும் எழுதிக்கூட அந்த மக்களுக்கு நன்மை கிடைக்கவில்லை, அவதிக்கு ஆளாகி இருக்கிறாகள். ஆகவே, இந்த அவல நிலைமையை நாம் போக்கியாக வேண்டும்.

இதைப் போலவே கல்யாணிமேஸ்திரி கார்டன். 1977-லே போர்டு போடப்பட்டது; வாரியம் எடுத்துக்கொள்ளப்பட்டது என்று இத்தனை இலட்சம் ரூபாய் செலவாகும்? இத்தனை வீடுகள் கட்டுவோம் என்று சொன்னார்கள். இப்பொழுது போர்டும் காணவில்லை, வேலையும் நடக்கவில்லை. அவர்களுக்கு மாற்று இடமும் இல்லை. இதை யாரிடம் போய் சொல்வது? என்ன செய்வது? இதற்கெல்லாம் பழி தாங்கிக் கொள்ள வேண்டியது ஆதி திராவிட நலத்துறைதான்.

(நண்பகல் 12–00)

ஏனென்றால் பெயரை ஆதி திராவிடர் என்று நீங்கள் வைத்துக்கொண்டிருப்பதால் எந்த டிபார்ட்மென்ட் செய்யா விட்டாலும் அதற்கு நீங்கள்தான் பொறுப்பு ஏற்க வேண்டும். நம்முடைய டிபார்ட்மெண்ட் மூலமாக அந்த வீட்டு வசதி வாரியத்திடமோ அல்லது குடிசை மாற்று வாரியத்திடமோ தொடர்பு கொண்டீர்களா? அவர்கள் என்ன பதில் கொடுத் தார்கள்? அல்லது தொடர்பு கொள்ளாமல் இருந்தால் அமைச் சரவர்கள் தொடர்பு கொண்டு அதற்கு ஆக்கம் காட்டி காரியத்தை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ஸ்டெல்லா மேரீஸ் காலேஜுக்குப் பக்கத்தில் ஒரு இடம் இருக்கிறது. அந்த இடத்தில் சுமார் நூறு வருஷங் களுக்கு முன்பிருந்தே ஆதி திராவிட மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அந்த மக்களுக்கு 2–2–72-லே ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு மூலமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு உத்தரவு போடப் பட்டது. ஆனால் 2-3-83—லே பணக்காரர்களின் செல்வாக்கின் காரணமாகவோ அல்லது அரசியல்வாதிகளின் செல்வாக்கின் காரணமாகவே அந்த ஸ்லம் க்ளீயரன்ஸ் போர்டு கட்ட வேண்டிய தில்லை என்ற உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 2-2–72—லே ஸ்லம் கிளீயரன்ஸ் போர்டு வீடு கட்டுவதற்கு டெக்ளேர் செய்து, ஆனால் 2–3–83-லே வேண்டாமென்று சொல்கிறார்கள். அப்படி யென்றால் அங்கே வாழ்கின்ற மக்களுக்கு யார் வீடு கட்டிக் கொடுப்பார்கள்? ஆனால் என்ன உண்மை என்றால், பணக்கார

கிறித்துவப் பெரியவருக்கும், பணக்காரத் தொழில் அதிபருக்கும் 5 இலட்சம் ரூபாய்க்கு, 40 குடிசை வாழ் மக்கள் வாழுகின்ற இடத்தைப் பேரம் பேசியிருக்கிறார்கள். இதற்கான மூல ரெக்கார்டு என்ன என்று யார் கேட்பது? அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. அமைச்சரவர்கள் இளைஞராக இருப்பதால் அவர் கேட்க முடியும். குடிசை மாற்று வாரியத்தால் இது கட்டப்படுவதாக முதலில் இருந்திருந்தால், நிலத்தை வாங்கி யிருக்க வேண்டும். நியாயமான தொகையை அதற்காக ஒதுக்கி யிருக்க வேண்டும். அப்படியெல்லாம் ஒதுக்கியிருந்தால் இம்மாதிரி மார்ச் 2, 1983 ஆம் தேதிய கெஜட்டில் வந்திருப்பது எந்த வகையில் நியாயம்? இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலைமையில் நடப்பதை நம்முடைய டிப்பார்ட்மெண்ட் உடனடி யாகக் கவனிக்க வேண்டும். அப்படிக் கவனிக்கத் தவறினால் அந்த மக்கள் கேட்பாரற்ற மக்களாக ஆகிவிடுவார்கள்.

சென்னையிலே திருவல்லிக்கேணி கான்ஸ்டிடியூயன்சி, 99-வது டிவிஷனில் ஏழைகள் குடியிருக்கிறார்கள், கிட்டத்தட்ட 80 வருஷங் களாகக் குடியிருக்கிறார்கள். நம்முடைய ஆதிதிராவிட நல அதிகாரியாகயிருந்த டி. ஆர். கல்யாணசுந்தரம், டிஸ்ட்ரிக்ட் அரிசன் வெல்ஃபேர் ஆபீசர், மெட்ராஸ்-1, 29-6-74 ரெக்கார்ட் ஆனது என்று எழுதியிருக்கிறார்கள். ஸ்பெஷல் தாசில்தாருக்கு, அசைன் மெண்ட் தாசில்தாருக்கு எழுதி அவருக்குப் பட்டாவும் கொடுக்கப் பட்டிருக்கிறது. ஆனால், அந்த இடத்தில் அவர்கள் கோவாப்ப ரேட்டிவ் பில்டிங் சொசைட்டியை ஏற்படுத்தி அரசாங்கத்திலிருந்து கடன் பெற்று கட்டிக்கொண்டு வாழ்வோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்பது 50 இலட்சம், 60 இலட்சம் ரூபாய் அல்ல; வீடு கட்டுவதற்காக 10,000 ரூபாயோ அல்லது 15,000 ரூபாயோதான் கேட்கிறார்கள். ஆனால் அந்த மக்களுக்குக் கடன் கிடைக்கவில்லை. எனவே, நம்முடைய நலத்துறையில் இருப்பவர்களும், அமைச்சரவர்களும் கவனத்தில் எடுத்துக்கொண்டு உடனடியாக இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேட்டுப்பாளையம் என்ற இடத்தில், வடாற்காடு மாவட்டத்தில், நண்பர் திரு. பலராமன் அவர்களின் தொகுதி; கடிதம்கூட அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சரும் போய்ப் பார்த்து உடனடியாகச் செய்வதாக உறுதி கொடுத்திருக் கிறார்கள். ஆனால் மூன்றாண்டுகளாக (குறுக்கீடு) நான்காண்டுகள் என்றால் அவர்கள் அமைச்சராக வந்து மூன்று வருஷங்கள்தான் ஆகின்றன, அதற்குமுன் அவர்கள் மந்திரியாக இல்லை, எனவே அந்த ஒரு வருஷத்தைப்பற்றி அமைச்சரிடம் கேட்பது சரியாக இருக்காது. இந்த மூன்று வருஷங்களாகக் கேட்டுக்கொண்டிருக் கிறார்கள். இடம் தெரிகிறது, அதை வாங்குவதற்குச் சர்க்காரிடம் பணம் இருக்கிறது, எனவே, அதை வாங்குவதில் என்ன கஷ்டம்? பில்டிங் கட்டுவது என்ன கஷ்டம்? எல்லோருக்கும் ஒரே நாளில் கட்ட வேண்டுமென்று நான் சொல்லவில்லை, அவ்வாறு கட்ட முடியும் என்றும் நான் சொல்லவில்லை. ஜில்லாவாரியாக



எடுத்துக்கொள்ளுங்கள், டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் என்று எடுத்துக்கொண்டு அங்கே செய்யுங்கள். எங்கே டிரை ஏரியாவாக இருக்கிறதோ அங்கே செய்யுங்கள். ஏனென்றால் மக்கள் நீண்ட காலமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் நினைக்கக் கூடும், காங்கிரஸ்காரர்களைப் பார்த்தாகி விட்டது; திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களைப் பார்த்தாகி விட்டது; அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர் களைப் பார்த்தாகி விட்டது என்று சலித்துப் போய், தடி எடுத்தவன்தான் தண்டல்காரனாக முடியும் என்ற எண்ணத் திற்கு வந்து விட்டால் நிலைமை என்னவாகும்? அப்படிக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள் எங்களுக்குக் கிடைக்க வில்லையே என்ற கோபத்தினால் செய்ய ஆரம்பித்தால் எல்லாம் கெட்டழிந்து போகும். எனவே, அந்த அளவிற்கு எண்ணத்தை அவர்களுக்கு உண்டாக்கிவிடக் கூடாது.

அடுத்து, எனக்கு ஒரு நல்ல செய்தி கிடைத்திருக்கிறது. இந்தக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாகவே மாநில அரிஜன் வெல்ஃபேர் கமிட்டியைப் போட்டு விடுவோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். அது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. எனவே, அதைப்பற்றி பேச வேண்டிய அவசியமில்லை. ஆனால் ஹை பவர் கமிட்டி இருக்கிறது. அதற்கு முதலமைச்சர் தான் சேர்மன்; எல்லா டிபார்ட்மெண்ட் செக்ரட்டரிகளும் மெம்பர்கள்; அரிசன் டைரக்டர் அதில் மெம்பர் செக்ரட்டரி, அந்தக் கமிட்டி எத்தனை முறை கூடிற்று? என்ன முடிவு எடுத்தது? உங்கள் ரிக்கார்டு பிரகாரம் 12.47% தான் கவர்ன்மெண்டு அப்பாயிண்ட் மெண்ட் என்று சொல்கிறீர்கள். அப்போது அந்த கமிட்டியைக் கூட்டுங்கள். இப்பொழுது 12.47% என்றிருப்பதை 18% ஆக ஏன் ஆக்கவில்லை? அதைப் பரிசீலித்தீர்களா? அதை இந்த ரிப்போர்ட்டில் கொடுத்திருந்தால் உங்கள் பேரில் ஒரு பெரிய சந்தோஷம் ஏற்படும். ஆனால் முதலமைச்சர் அவர்களைக் கேட்டால், கட்டாயம் நான் கொடுக்கச் சொல்கிறேன் என்று ஒவ்வொரு தடவையும் சொல்கிறார். உண்மையிலேயே இரக்கமாகச் சொல்கிறார். மற்றைய நிலைமையைவிட நம்முடைய முதலமைச்சர் சொல்கிறார் என்று நான் பெருமைப் படுகிறேன். ஆனால் காரியம் நடக்கவில்லை என்ற நிலைமையில் தான் அந்த 'ஹை பவர் கமிட்டி' ஒழுங்காக கூட்டப்படவில்லை என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது. அப்படி கூடியிருந்தால் 12.47% என்பதை ஏன் 18% ஆக மாற்றவில்லை? கேண்டிடேட் கிடைக்கவில்லையா?

இந்த நிலைமையை அமல்படுத்துவதற்காக அதிகாரிகளைக் கேட்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், சொன்னால் அதிகாரிகள் கேட்கவில்லையா என்பது தெரியவில்லை. ஒன்று கேண்டிடேட் கிடைக்கவில்லை என்று சொல்லவேண்டும். இல்லை, அதிகாரத்தில் இருப்பவர்களால் முடியவில்லை என்று சொல்ல வேண்டும். அல்லது அங்கெல்லாம் 'கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்ஸ்'-ல் தப்பு ஏதாவது இருக்கும் என்று சொல்ல

(திரு. எல். இளையபெருமாள்) [1983 மார்ச் 31

வேண்டும். ஆனால் இப்பொழுது 'கான்பிடென்ஷியல் ரிப்போர்ட்' எழுதுவதில்லை என்று எல்லோருக்கும் தெரியும். ஆக இதையெல்லாம் மனதில் வைத்து, அவர்களுக்கு ஒதுக்கீட்டுக் கோட்டாவை செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று நம்முடைய அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது. ஒரு நாளைக்கு ஒரு ஜில்லாவிற்கு நீங்கள் சென்று அங்கு இருக்கும், பி.டி.ஓ மாவட்ட நல அதிகாரி அல்லது தாசில்தார் அவர்களை.. (குறுக்கீடு) நான் தவறுதலாக 2 வருஷம் என்பதை ஒரு வருஷம் என்று சொல்லிவிட்டேன். இன்னும் 2 வருஷம் இருந்தாலும் அந்த மாவட்ட அதிகாரிகளைப் போய்ப் பார்த்து அவர்கள் 'General Pool'-லே இந்த மக்களுடைய Welfare Schemes—க்காக என்ன செய்தார்கள்! அப்படிச் செய்த லிஸ்ட்லே 2 இடத்தை நீங்கள் செலக்ட் செய்து அங்கே போய்ப் பார்த்து அந்த வேலை நடந்ததா, இல்லையா என்று தெரிந்து கொள்ளாத வரையிலும் தமிழகத்திலே நீங்கள் என்ன பதில் கொடுத்தாலும், அதிகாரி கொடுக்கிறதை நீங்கள் கொடுக்கிறீர்கள். நீங்கள் கொடுக்கிறதை நாங்கள் படிக்கிறோம். எந்த அரசையுமே நான் குறை கூற விரும்பவில்லை. ஏனென்றால் அதிகாரி கொடுக்கிறதைத் தானே நீங்கள் கொடுக்கிறீர்கள். ஆகவே ஆவன செய்ய வேண்டுமென கோருகிறேன் (மணியடிக்கப் பெற்றது).

*திரு. மே. அ. இராசகுமார்: மாண்புமிகு தலைவரவர்களே, 1983–84 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலன் குறித்த மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித் தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த மானியக் கோரிக்கையை வரவேற்று ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரிடையே ஒரு மலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்று கருதுகிறேன். இந்த அரசானது ஏறத்தாழ 58 திட்டங் களை அந்த ஆதிதிராவிடர், பழங்குடியினருக்காக உண்டாக்கி, அந்தத் திட்டங்களைச் செவ்வனே செயல்படுத்தி வருகிறது. இந்தத் தமிழகத்திலே மொத்த ஜனத்தொகையில் 45 சதவிகித் தினர் படித்தவர்களாக இருக்கிறார்கள். அந்த படித்த சமூகத்திலே ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 30 சதவிகிதமாகவும், பழங்குடியினர் 20 சதவிகிதமாகவும் இருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு செயல் பட்டு வருகிறது என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்தக் கல்வி நிறுவனங்களிலே கல்வித் துறை யிலே பல்வேறு உயர் ஜாதி மக்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்லி, அவர்கள் முன்னுரிமை பெறுவதிலிருந்து, இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்த அளவிற்கு முன்னுரிமை அளிக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிறது.



1983 மார்ச் 31] [திரு. மே. அ. இராசகுமார்]

(பிற்பகல் 12-10.)

அடுத்தபடியாக பல்வேறு சட்டங்களை இயற்றி இந்த மக்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் 31-3-82 முடிய 9,200 வழக்குகள் போடப்பட்டு, அந்த வழக்குகளிலே ஏறத்தாழ 4,041 வழக்குகளில் தண்டனைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மாதிரியாக அந்த மக்களின் மேம்பாட்டுக்காக, இந்த அரசு பல்வேறு சட்டங்களை இயற்றி, அவர்களுடைய மேம்பாட்டுக்காக பாடுபட்டு வருவது நாம் கண்கூடாகப் பார்த்து வருகிற ஒன்று. அந்த வகையிலேதான் இந்த அரசானது மறைந்த மாமேதை தந்தை பெரியார் அவர்களுடைய வழியிலும், அவருக்குப் பிறகு பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியிலும், ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவதில் தீவிரமாக பாடுபட்டு வருகிறது. குறிப்பாக எடுத்துக்கொண்டால் இன்றையச் சூழ்நிலையில் மத மாற்றங்களைத் தடை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கை ஒரு பகுதியில் விடுத்துக் கொண்டிருக்கும்போது, இந்த அரசானது எம்மதமும் சம்மதம் என்ற முறையிலே பாடுபட்டு வருகிறது. அதைப்போலவே ஆதி திராவிட மக்களுக்காக வீட்டு மனைப் பட்டா வழங்குவதிலேயும் சரி, காலனிகளைக் கட்டிக் கொடுப்பதி லேயும் சரி, மற்றும் தீண்டாமையை ஒழிப்பதற்காக அவர்கள் எடுத்து வருகிற முயற்சியிலும் சரி, முன்னணியில் இருக்கிறது. இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பணங்களை ஒதுக்கி, வேலை வாய்ப்புகளை ஒதுக்கி அவர்களை இன்று முன்னேற்றப் பாதையிலே வைத்திருக்கிறது. நான் இந்த மன்றத்தின் வாயிலாக எனது தொகுதியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக மருங்காபுரி தொகுதியிலே மிகவும் வறட்சி தாண்டவமாடுகிறது. அங்கே பல்லாயிரக்கணக்கான ஆதி திராவிட மக்கள் வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பதால், அவர்கள் தற்போது இந்த வறுமையின் காரணமாக பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய வறுமையைப் போக்கும் வகையிலே அவர்களுக்கு தனிப்பட்ட முறையிலே கவனம் செலுத்தி அவர்களுக்கு கடன் வசதிகள், கிணறு தோண்டும் கடன், போன்ற வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மணப்பாறை தாலுக்கா களிங்கப்பட்டியைச் சேர்ந்த மரவப்பட்டி என்ற கிராமத்திலே அழகன் என்ற ஒரு ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்தவர் ஒருசில ஆண்டுகளுக்கு முன்பு அந்த ஊரிலே உள்ள புறம்போக்கு நிலத்திலே உழுது பயிர் செய்ய பட்டா வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார். அது விசாரணை முடிந்தும், இதுவரை கரூர் ஆர்.டி.ஓ. அவர்களால் அந்த அரிஜன வகுப்பைச் சேர்ந்தவருக்கு பட்டா வழங்கவில்லை. அதை விசாரித்து அந்த ஏழைக்கு பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மணப்பாறை தாலுக்கா, வேம்பலூரில் உள்ள ஏழை ஆதி திராவிட மக்கள் தாய்க்கிராமமான வேம்பலூருக்குச் செல்லுவதற்கு குறுக்கே இருக்கின்ற ஒரு ஆற்றைக்கடந்து தான்

செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஆற்றில் மழைக்காலங்களில் தண்ணீர் நிரம்பிவிடுவதால், அவர்களுடைய போக்குவரத்து தடைப்படுகிறது. அந்தத் தடையைப் போக்கும் வகையிலே வேம்பலூருக்குச் செல்லுகின்ற, அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக மருங்காபுரி தொகுதியிலுள்ள, ஆமணக்கும் பட்டியைச் சேர்ந்த செருப்பு தைக்கும் தொழிலாளர்கள் பலர் தங்களுக்கு வேலைவாய்ப்பு இன்றி மிகவும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரும் வகையிலே சிறுசிறு திட்டங்களை அங்கே உண்டாக்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டத்தில் உள்ள இரும்பேடு கிராமத்தில் ஆதிதிராவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தவேண்டு மென்று ஏற்கனவே அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டிருக் கிறது. அந்தக் கோரிக்கையை உடனடியாக பரிசீலித்து அதை உயர்நிலைப் பள்ளியாக மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மதுராந்தகம் வட்டத்தில், செங்காட்டூர், பாளூர் போன்ற கிராமங்களில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். பழனிவேல்:** சட்ட மன்ற மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அவைமுன் உள்ள 31-வது மானியக் கோரிக்கையான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், மற்றும் அச்சுத் துறை மானியக்கோரிக்கைகள் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சில கருத்துக் களைச் சொல்ல இருக்கிறேன். இன்றையதினம், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இந்தத் துறைக்கு 44 கோடியே 45 லட்சத்து 68 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் தொகையானது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப் பட்டுள்ள மொத்தத் தொகையில் $2\frac{1}{2}$ சதவீதம் ஆகும். இந்த $2\frac{1}{2}$ சதவீதத் தொகை மொத்தத் தொகையில் கிட்டத்தட்ட 18 சதவீதம் அல்லது 19 சதவீதம் என்று வந்து இருக்கக்கூடிய மக்கள் தொகைக்கு போதுமானதாக இல்லை, குறைந்த அளவு தொகையாக இருக்கிறது. சென்ற ஆண்டு 41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருந்தது. இன்றைக்கு 3 கோடி ரூபாய் அதிகம் ஒதுக்கப்பட்டு இருந்தாலும், இது போதுமானது அல்ல. இன்று ஏற்பட்டு இருக்கும் விலைவாசியை ஈடுகட்டுவதற்கு இது போது மானதல்ல என்பதை எடுத்த எடுப்பிலேயே நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.





இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருமே இன்றைக்கு கிட்டத்தட்ட விவசாயத் தொழிலாளர்களாகத்தான் இருக் கிறார்கள். அவர்களுக்கு சொந்தமாக நிலபுலங்கள் மற்ற சொத்துக்கள் என்று எதுவும் இல்லை. இந்த நிலைமையில் தான் 99 சதவீத மக்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் உணரவேண்டும். அவர்கள் எந்தவிதமான சொத்து, சுகம் இல்லாத விவசாயக் கூலிகளாக இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்றுவதற்காக ஏதோ கறவை மாடுகள் வாங்கித் தருகிறோம். சிறு தொழில் செய்ய கடன் வழங்குகிறோம், 500 ரூபாய் கடன் கொடுக்கிறோம், என்று சில காரியங்களைச் செய்தாலும், இந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்களை முன்னேற்றத்திற்குக் கொண்டு வர முடியாது. நாம் கடந்த 35 ஆண்டுகாலமாகப் பார்த்துக்கொண்டு வருகிறோம். இந்த மாதிரி பிச்சைப்போடும் காட்சியைத்தான் நாம் பார்க் கிறோம். ஆகவே, அவர்களுடைய அடிப்படையான வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற வேண்டுமானால், நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கடுமையாக அமுலாக்கி, அதன் மூலம் கிடைக்கும் உபரி நிலத்தை எடுத்து, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்குக் கொடுத்தாலொழிய இவர்களுடைய வாழ்க்கையில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்த முடியாது.

அது மட்டுமல்லாமல், அவர்களுக்கு நாம் ஏதோ உதவி செய்கிறோம் என்ற அடிப்படையில், அவர்களுக்கு கறவை மாடுகள் வாங்க கடன், வீட்டு வசதிக்காகக் கடன், ஆடு வாங்கக் கடன், சிறு தொழில் நடத்தக் கடன் என்று தருகிறோம் என்று சொன்னாலும், அவற்றைப் பெறுவதற்காக அங்கிருக்கும் வங்கி களுக்குச் சென்றால், சொத்து செக்யூரிட்டி கேட்கிறார்கள். சொத்து ஜாமீன் கேட்கிறார்கள். சொத்து பத்திரம் கேட் கிறார்கள். அவர்களிடத்தில் என்ன பத்திரம் இருக்கிறது? உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், என்னுடைய தொகுதியில் ஆடு வளர்ப்புச் சங்கம் ஆரம்பித்து — 100 பேர் அதில் உறுப்பினர்கள் ஆகி, 1000 டிபாசிட் கட்டி, மூன்று ஆண்டுகள் ஆகிறது. இன்னும் வங்கியில் இருந்து கடன் தொகை வரவில்லை, அங்கே போய் கேட்டால் அவர்கள் திருப்பித் திருப்பி அனுப்புகிறார்கள், பத்திரம் கொண்டு வா என்கிறார்கள். இதைப் பற்றி கலெக்டரிடத்தில் சொல்லியாகிவிட்டது. அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். இது நடக்காத ஒரு காரியமாக இருக்கிறது. இம்மாதிரியான சூழ்நிலையைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டத்தின் காரணமாக கொஞ்ச நஞ்சம் புறம்போக்கு நிலங்களை — நத்தம் புறம்போக்கு பாரஸ்ட் புறம்போக்கு — வைத்து இருந்து, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், அரை ஏக்கர் என்று விவசாயம் செய்து கொண்டிருந்த மக்களையும் இன்றைக்கு வெளியேற்றும் நிலைமை இருக்கிறது.

(திரு. என். பழனிவேல்) [1983 மார்ச் 31

பெரும்பாலானவர்களிடத்தில் பட்டா கிடையாது. சிலர் பட்டா வைத்து இருந்தாலும் அவர்களும் வெளி யற்றப்படுகின்றனர். காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் பாரஸ்ட் இலாகாவால் அவர்கள் வெளியேற்றப்படுகின்ற நேரத்தில், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டியது யார்? அந்தத் துறைக்கும் இந்தத் துறைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லும். இருப்பினும், நான் சென்ற 22-ம் தேதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இது சம்பந்தமாக மனு ஒன்றைக்கூட கொடுத்து இருக்கிறேன். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், 'காடுகள் வளர்க்கப்படவேண்டும். நம்முடைய நாட்டில் மழை அதிகமாக வேண்டும். ஆகவே, அவர்களை வெளியேற்றாமல் என்ன செய்வது' என்று சொன்னார்கள். நான் குறிப்பிட்டேன் — 'நீங்கள் பட்டா செய்து அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறீர்கள், அவ்வாறு கொடுத்த பின்பு இப்படி வெளியேற்றுவது நியாயமா என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்னார் — நாம் கொடுத்தது தானே, அதை எடுத்துக் கொள்வதில் என்ன தவறு என்று கேட்டார்கள், ஆகவே இந்தச் சமூக மக்களிடத்தில் அவர்களுக்கு அக்கறை இல்லை என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் செல்லக் கடமை பட்டு இருக்கிறே .

இந்தத் துறை சம்பந்தப்பட்ட மட்டில், இந்த அவையில் கேள்வி நேரமாக இருந்தாலும் மற்ற எந்த நேரமாக இருந்தாலும், அந்தச் சமூக மக்களுக்காக இருக்கும் பிரச்னைகள் பலவற்றை எவ்வளவோ ஆழமாக ஒவ்வொரு முறையும் எடுத்துச் சொல்லியும், இன்றைக்கு இந்த மானியத்தின் மூலம் பலவேறு கருத்துக்களைச் சொல்லியும் வருகிறோம். இந்த மானியம் மிகவும் முக்கியமான மானியம். இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இருந்து, இந்த மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்னை குறித்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மனம் திறந்து சொல்கிற கருத்துக்களைக் கேட்டு ஆவன செய்யவேண்டும். ஆனால் அதைக் கேட்பதற்குக்கூட இந்த அவைக்கு அவர்கள் வரவில்லை என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

இந்தக் காடு வளர்ப்புத் திட்டத்தின் பெயரால் என்னுடைய தொகுதியில் — மேற்குத் தொடர்ச்சி மலையில் — பழனியில் இருந்து ஒட்டன் சத்திரம் வரையில் — பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய ஆதி திராவிட மக்கள், அவர்கள் வைத்து இருக்கும் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படுகிறார்கள், ஆனால் இந்த அரசு என்ன சொல்கிறது என்றால், அந்த ஏழைகள் புறம்போக்கு நிலங்களில் குடிசை போட்டுக்கொண்டு இருந்தாலும் விவசாயம் செய்து வந்தாலும், அந்த நிலம் அவர்களுக்கு உடனே பட்டா செய்து கொடுக்கப்படுகிறது, என்பதாகும். ஆனால் இன்றைக்கு பட்டா வைத்து இருக்கும் விவசாயிகளைக் கூட நிலங்களில் இருந்து வெளியேற்றும் நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துச்



1983 மார்ச் 31] (திரு. என். பழனிவேல்)

சொல்லி, அந்தச் சமூக மக்களின் நல்வாழ்வில் இந்த அரசுக்கு உண்மையான அக்கறை இருக்குமானால், அந்த நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்து அதன் மூலம் விவசாயக்கூலிகளாக இருக்கும் தாழ்த்தப்பட்ட, அரிசன மக்களுக்கு அந்த நிலத்தைப் பிரித்துக்கொடுத்தாலொழிய அவர்கள் வாழ்க்கையில் எந்த விதமான முன்னேற்றத்தையும் இந்த அரசு கொண்டு வர முடியாது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அடுத்தப்படியாக இந்த வேலைவாய்ப்பிலே 12·47 சதவீதம் அரசுத் துறையிலும் பொதுத் துறையிலும் கொடுக்கப் பட்டுள்ளதாக இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. வேலை வாய்ப்பைப்பற்றி கேட்கும்போது என்ன சொல்கிறீர்கள்? ஒவ்வொரு போஸ்ட்டுக்கும் 18 சதவீதம் போடு கிறோம் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 54 துறைகள் இருக்கின்றன. இந்த 54 துறை களிலும் 18 சதவீதம் போடப்பட்டிருக்கிறதா? அதுபற்றி ஒருதடவை இங்கே ஒரு கேள்வியை கேட்ட போது 14 துறை களில் 13 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் வரை கொடுக்கப் பட்டிருக்கிறது என்று பதில் சொன்னார்கள். அப்படியானால் பாக்கி என்னவாயிற்று? அது என்னென்ன துறை? ஏன் கொடுக்கவில்லை? எப்படி கொடுக்கப்போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்துசமய அறநிலையத்துறை இருக்கிறது. அந்தத் துறையிலே இந்த 18 சதவீதம் வேலைவாய்ப்பு கொடுக்க வில்லை என்று சொல்கிறார்கள். அதற்கு சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். சட்டத்தைத் திருத்த வேண்டு மென்றால் ஏன் திருத்தக்கூடாது? இலட்சக்கணக்கான ஊழியர்கள் அந்தத் துறையிலே வேலை பார்க்கிறார்கள். ஆனால் இந்த ஆதிதிராவிட மக்கள் அந்தத் துறையிலே நுழைய முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

அது மட்டுமல்ல, தனியார் துறை இருக்கிறது. பல கோடி ரூபாய் அரசாங்கத்திலிருந்து பெற்று, தனிப்பட்ட பெரும் முதலாளிகள் பணம் பெற்று, தொழிற்சாலைகள் ஆரம்பிக் கிறார்கள். அங்கே அவர்களுக்கு வேலைவாய்ப்பு இந்த விகிதாச்சாரப்படி கொடுக்கப்படுகிறதா என்றால் இல்லை. இதை நான் வேண்டுமென்று சொல்லவில்லை. பல இடங்களில் கண்ணால் பார்த்த சமாச்சாரத்தைச் சொல்கிறேன். அவர்களே கொடுப்பார்கள் என்று நாம் பார்த்துக் கொண்டிருந்தால் இந்த விகிதாச்சாரம் நடைபெறாது. நோக்கம் நிறைவேறாது. ஆகவே என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறேன். ஏற்படக்கூடிய வேலைவாய்ப்புகளில் முதலில் தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் வந்தால் அவர்களுக்கு உடனே வேலை போட்டுக் கொடுக்கவேண்டும்.

இன்றைக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள். அதற்கு மேலே படித்தவர்கள் எல்லாம் பதிவு செய்துவைத்து 4 வருடத்திற்கு மேலானாலும் இந்த மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால் சிலர் பதிவு செய்து 6 மாதத்திற்குள்ளாக இண்டர்வியூ வருகிறது, வேலை கிடைக்கிறது. என்ன கொடுமை இது? இந்த மக்கள் பதிவு செய்து 4 ஆண்டுகள் ஆனாலும் இண்டர்வியூ கூட வருவதில்லை. அதற்கெல்லாம் என்னென்னவோ சொல்கிறார்கள். ஆனால் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் அப்படிச் செய்ய முடியுமா? அவர்கள் அதிகாரிகளைப் போய்ப்பார்க்க முடியுமா? இது நடக்காது. ஆகவே தகுதியுள்ள அனைவருக்கும் அவர்களின் தகுதியின் அடிப்படையில் வேலை போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். இல்லை என்றால் இந்த 18 சதவீதம் இன்னும் 30 ஆண்டுகள் போனாலும் நிறைவேறாது.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கல்லூரி மாணவர்களுக்கு மாதத்திற்கு 60 ரூபாய் கொடுக்கிறீர்கள். 60 ரூபாய் எதற்குப் போதும்? இந்த 60 ரூபாயை வைத்துக்கொண்டு ஒரு கல்லூரி மாணவன் சுவையான உணவை உண்ண முடியுமா? இப்படி இருந்தால் எப்படி அவன் நாகரீகமாக இருக்க முடியும்? 60 ரூபாய்க்கு ஒரு மாணவன் ஒரு நேரத்தில் சாப்பிடும் நிலைமை இருக்கிற இந்த நேரத்தில் ஒரு மாதத்திற்கு 60 ரூபாய் கொடுத்தால் அவன் எந்த அளவுக்கு சாப்பிட முடியும்? முன்னால் 50 ரூபாய் என்று இருந்ததை இப்போது 60 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறீர்கள். இது போதுமானதல்ல. மாதம் 150 ரூபாயாவது கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஒரு கல்லூரி மாணவனுக்கு மரியாதை இருக்கும், சாப்பாட்டுக்குப் போதுமானதாக இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆதிதிராவிட மாணவர்களுக்கு என்று கல்லூரிகளில் தனி விடுதி தேவையில்லை. அதனால் பல பிரச்சனைகள் வருகின்றன. தனியாக கல்லூரி விடுதியில் இருந்து வரும்போது இன்னொரு பகுதி மாணவர் இருக்கின்ற சூழ்நிலையில், சில நேரங்களில் அந்த இரண்டு விடுதி மாணவர்களுக்கும் தகராறு வந்து, பல பிரச்சனைகள் வருகின்றன. வகுப்பு கலவரமாக அது உருவெடுக்கிறது. ஆகவே அரிசன மாணவர்கள், நான்—அரிசன மாணவர்கள் என்ற பிரச்சனையை ஏற்படுத்த வேண்டாம். ஆகவே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளை அதே கல்லூரியிலேயே, மற்றவர்களோடு இணைத்து வைத்தே கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுதான் ஜாதி வித்தியாசத்தை ஒழிக்க உதவுவதாக இருக்கும். அரசு அதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுவசதியைப்பற்றி எடுத்துக்கொண்டால் 1980—81-ல் 17.48 கோடி ரூபாய் இன்றைக்கு கொடுக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். அது என்னவாயிற்று? இந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். கொடுத்தது என்னவாயிற்று? எதற்காக கொடுத்தீர்கள் என்பதை விளக்கிச் சொல்ல வேண்டும்.



அதைப்போன்று மத்திய அரசு சிறப்பு நிதி உதவி ஒன்று செயல்படுகிறது. 1981-82-ல் அதாவது சென்ற ஆண்டு அந்தத் திட்டத்தின்கீழ் 9.56 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. அதில் 8.32 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். மீதி இருக்கக்கூடிய 1.24 கோடி ரூபாய் என்னவாயிற்று? ஏன் செலவு செய்யவில்லை? யாரும் கேட்கவில்லையா? அல்லது பிரச்சனை இல்லையா என்பதை தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு ஆதித்திராவிட சிறுநில விவசாயிகளுக்கு-இங்கே பட்ஜெட் உரையிலே கூட சொல்லியிருந்தார்கள். ஆழ் துளை கிணறுகளை விவசாயிகள் எங்கெங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கே எல்லாம் போடப்போகிறோம் என்று சொன்னார்கள். அதிலேகூட குறிப்பாக மதுரை மாவட்டத்திலே 24.80 லட்சம் ரூபாய் ஒதுக்கி, 198 கிணறுகள் போடவேண்டும் என்று திட்டமிட்டு, கடைசியில் 29 கிணறுகளைப் போட்டதில், அவைகள் கடுமையான பாறையுள்ள இடமாகப் போய்விட்டதாகச் சொல்கிறார்கள். ஏன் வேறு இடமே கிடைக்கவில்லையா? அதுவும் மதுரை மாவட்டம் என்று சொல்கிறார்கள். மதுரை மாவட்டத்தில் தோண்டினால் தண்ணீர் வரக்கூடிய இடங்கள் நிறைய இருக்கின்றன, அவைகளை எல்லாம் விட்டுவிட்டு, எங்கேயோபோய் தோண்டினார்களாம், பாறையாகப் போய் விட்டதாம், தண்ணீர் வரவில்லையாம், ஆகையினால் அந்த திட்டம் அப்படியே நிறுத்தப்பட்டிருக்கிறதாம். நம்பக்கூடியதா இது?

198 கிணறுகளை அமைக்க திட்டம் என்று சொன்னால், ஒரு தாலுக்காவுக்கு எத்தனை? எந்தெந்த தாலுக்காக்களுக்கு போட வேண்டும் என்று திட்டமிட்டீர்கள்? ஏன் அந்த 29 பாறை இடங்களைத் தவிர வேறு இடங்கள் உங்களுக்கு கிடைக்கவில்லை? அந்த 29 போக பாக்கி எல்லாம் அப்படியே இருக்கிறது என்று சொன்னால், இது வெறும் கண் துடைப்பு சமாசாரம், மக்களை ஏமாற்றுவதற்காக அல்லது சட்டமன்ற உறுப்பினர்களை ஏமாற்றுவதற்காகத்தான், இப்படி இந்த அறிக்கையிலே விவரம் தந்திருக்கிறீர்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து வீட்டு மனை என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு தமிழகத்தில் 10 லட்சம் குடும்பங்கள் வீட்டு மனை இல்லாமல் இருக்கின்றன. ஒன்றிரண்டு அல்ல, 10 லட்சம் மக்கள் இருக்கிறார்கள். அந்த 10 லட்சம் குடும்பங்களுக்கும் வீட்டு மனைகளை வழங்க 125 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்த 125 லட்சம் ரூபாயிலே எத்தனை பேருக்கு வீட்டு மனைகளை வாங்கித்தர முடியும்? 10 ஆயிரம் பேர்களுக்கு வேண்டுமானால் வாங்கித்தரலாம். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையில் அது சாத்தியமா? அதுவும் எந்த வழக்கும் கோர்ட்டுக்குப் போகாமல்—ஏற்கெனவே 420 வழக்குகள் கோர்ட்டில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள்

பெருமையாகச் சொன்னார்கள். 480 வழக்குகள் என்றால் ஏறத்தாழ எடுத்த எல்லா முயற்சிகளுமே தடைபட்டு இருக்கின்றன என்றுதான் அர்த்தம். இந்தச் சூழ்நிலையில் ஏன் அதற்கென்று ஒரு விசேஷமான சட்டத் திருத்தத்தைக் கொண்டுவரக்கூடாது நீங்கள்?

கோர்ட்டிலே வழக்குகள் இருக்கின்றன. இப்போது வேறு 125 லட்சம் ரூபாயை இதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். இவைகளை உண்மையாக செலவு செய்து, வீட்டு மனைகளை வாங்கிக் கொடுக்க முடியுமா? ஆகவே, இதற்காக நீங்கள் ஒரு விசேஷமான சட்டத்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல இப்போது ஒதுக்கியிருக்கிற தொகை 125 லட்சம் ரூபாய் என்பது தோதுபடாது. அது போதவே போதாது. இதற்கென்று 4, அல்லது 5 கோடி ரூபாயாவது ஒதுக்கினால்தான் சரிபடும். அப்படி ஒதுக்கினால்தான் அவர்களுக்கு வீட்டடி மனைகளை வாங்கிக் கொடுக்க முடியும். இப்போதே அவர்கள் வாங்கிக் கொடுத்த மனைப்பட்டாக்களை வைத்துக் கொண்டு, கடனுக்கு அலையோ அலை என்று அலைகிறார்கள் பாவம். மனு போட்டால் 2 வருஷம் 3 வருஷத்திற்கு குறைந்து அதை எடுப்பதில்லை. எடுத்தாலும், அவர்களுக்கு 5 ஆயிரம் வீடு கட்டுவதற்காக கொடுக்கப்படுகிறது என்றால், அதில் ஆயிரம் ரூபாய் மானியம் என்றும், 4 ஆயிரம் ரூபாய் கடன் என்றும் தருகிறார்கள். அதிலும் அந்த ஆயிரம் ரூபாயை அதிகாரிகள் லஞ்சம் என்ற பெயரால் வாங்கிச் சாப்பிட்டு விடுகிறார்கள். நான் இதை, இந்த அரசாங்கத்தைக் குறை சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. **

மானியமாகக் கொடுக்கும் ஆயிரம் ரூபாயை அதிகாரிகள் லஞ்சம் ஆக வாங்கி சாப்பிட்டு விடுகிறார்கள். மீதமுள்ள 4 ஆயிரம் ரூபாயையும் அவர்களுக்கு உரிய காலத்தில், காலா காலத்தில் கொடுப்பதில்லை. முதலிலே பேஸ்மெண்ட் போடுவதற்கு சிறிது தொகை, பிறகு இரண்டு அடி கட்டினால ஒரு தொகை, பிறகு 4 அடி உயரம் கட்டினால் ஒரு தொகை என்று சிறுக சிறுக தருகிறார்கள். அந்தச் சுவற்றை முழுவதுமாகக் கட்டி முடிப்பதற்குள், அவனுக்கு போதும் போதும் என்றாகிவிடுகிறது. ஆகவே, இந்த நிலையை மாற்ற, வீடு கட்டக் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை மொத்தமாக அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அதுவும் அந்த 5 ஆயிரம் ரூபாயில் ஒரு வீடு கட்ட முடியாது. காலையில் இங்கே கேள்வி நேரத்தின் போது கூட 40 ஆயிரம் ரூபாயில் வீடுகட்ட முடியுமா என்று உறுப்பினர்கள் கேட்டு, அதற்கு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது அதை 60 ஆயிரமாக உயர்த்த எண்ணியிருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆகவே, 60 ஆயிரம், 1 லட்சம் என்று வைத்திருப்பவர்களாலேயே வீடு கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்றால், இந்த 5 ஆயிரம் ரூபாயை வைத்து எப்படி

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவர்கள் வீடு கட்டிக்கொள்ள முடியும். ஆகவே, அந்தத் தொகையை நீங்கள் அதிகரித்துத் தரவேண்டும். (மணியடிக்கப் பெற்றது) என்னுடைய கட்சியிலேயிருந்து நான் மட்டும் தான் பேசுகிறேன். என்னை திசைத் திருப்பி விடுவீர்களேயானால், என்னுடைய மூடு மாறிவிடும். ஆகவே பேசவிடுங்கள்.

ஆகவே, அந்த 5 ஆயிரம் ரூபாய் என்பதை 7 ஆயிரம் அல்லது 8 ஆயிரம் என்றாவது உயர்த்திக் கொடுத்தால்தான் அவர்களால் ஒரு குடிசை வீடாவது கட்டிக் கொள்ள முடியும். இப்போது வீடுகட்டும் பொருள்கள் எல்லாம் என்ன விலை விற்கின்றன? 30 ரூ, 40 ரூ கொடுத்து சிமென்ட் வாங்கிய காலத்தில் நீங்கள் கொடுத்த 5,000 சரியாக இருந்திருக்கலாம். இப்போது 100 ரூபாய் கொடுத்து சிமென்ட் வாங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இது போலவே எல்லாப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கின்றன. ஆகவே, அந்தத் தொகை 8 ஆயிரம் அல்லது 10 ஆயிரம் என்ற அளவுக்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1949-லேயிருந்து 1983 வரை 3 லட்சத்து 91 ஆயிரத்து 430 பேர்களுக்கு மனைகள் வழங்கப்பட்டதாக இந்தக் குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது எதற்கு இந்தக் கணக்கு என்று கேட்கிறேன். 49-லிருந்து யார் கணக்கு கேட்டார்கள். இங்கிலீஷ்காரன் காலத்திலிருந்து, காமராசர் காலத்திலிருந்து. கலைஞர் காலத்திலிருந்து யாருக்கு வேண்டும் அந்த விவரங்கள். போன வருஷம் நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள் என்பதை சொல்லியிருந்தால் போதாதா? இவைகளையெல்லாம் நாங்கள் தெரிந்துக் கொள்ள வேண்டுமா?

(பிற்பகல் 12-30)

ஆகவே, இந்தமாதிரி ஒரு திசை திருப்பக்கூடிய கணக்குகளை இந்த அவையிலே அடுத்த ஆண்டாவது கொடுக்காமல் இருப்பது நல்லது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து சத்துணவு மையம் என்பதைப் பொறுத்தவரையில் எந்தத் துறையினை எடுத்துக்கொண்டாலும் இது வந்துவிடுகின்றது. எல்லா அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட வகையிலும் இந்தச் சத்துணவு வந்துவிடுகின்றது. சத்துணவு போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை, அதைப் பாராட்டுகிறோம். ஆனால் சத்துணவு மையங்களில் எப்படி உணவு வழங்கப்படுகின்றது தெரியுமா? ஆதிதிராவிட மக்களுக்குத் தனியாகச் சோறு போடப்படுகின்றது. மற்ற மக்களுக்குத் தனியாகச் சோறு போடப்படுகின்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்)** : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமே தவிர, பொதுவாக அவ்வாறு பேசக்கூடாது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு அமைச்சர்களும் வாய்ப்புக்கள் கிடைக்கின்ற போதெல்லாம் மையங்களை பார்வையிட்டு கையெழுத்து போட்டு வருகிறோம். என்ன நிலைமையில் நாம் பார்த்திருக்கிறோம், எப்படிப்பட்ட நிலைமை இருந்தது என்று குறிப்பிடுகிறோம். ஆகவே நமக்கு உதவியாக இருக்கும் என்ற கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எந்த இடத்தில் அப்படி நடை பெறுகின்றது என்ற தகவலைக் கொடுத்தால் திட்டவட்டமாக நான் உங்களுக்குச் சொல்ல முடியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு சொல்ல முடியும், அப்படி தகவல் கிடைத்தால் உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது, நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாற்றுத் தலைவர் அவர்களே, குறையாகச் சொல்ல வேண்டும் என்பதற்காகவோ அல்லது குற்றமாகச் சொல்லவேண்டும் என்பதற்காகவோ நான் சொல்லவில்லை. நான் ஊரைச் சொல்கிறேன், குறித்துக்கொள்ளுங்கள். என்னுடைய தொகுதியில் தாதநாயக்கன்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கின்றது. அந்த கிராமத்திற்கு பகல் 12 மணிக்கு நான் போய் இருந்தேன். அப்போது அங்கே சோறு போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது 40, 50 ஆதி திராவிட பிள்ளைகள் தனியாக வெளியே அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். மற்ற 25 பிள்ளைகள் உள்ளே உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த சத்துணவு மையத்திற்குக் கட்டடம் இல்லை, வாடகைக் கட்டிடத்தில் வைத்து உணவு விநியோகம் செய்து கொண்டிருந்தார்கள். நான் போய் அங்குள்ள பாலசேவிகா அவர்களிடம் கேட்டதில் அவர்கள் சொன்னது என்னவென்றால் இந்த ஊரில் இப்படித்தான் பழக்கம் என்று சொன்னார்கள். நானும் இதைப் பற்றிச் சொல்லி பெரிய பிரச்சினையாக ஆக்கினால் தாழ்த்தப் பட்ட மக்களுக்கு தொல்லைகள் அதனால் வரக்கூடும் என்று எண்ணி பேசாமல் வந்துவிட்டேன்......

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி அந்த சட்டமன்ற உறுப்பினர் தொகுதியின் எல்லைக்குள் ஒரு சம்பவம் நடைபெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். alleged to have been done உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கடிதம் மூலமாக நமக்கு அந்த complaint கொடுத் திருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. என் பழனிவேல் : தலைவரவர்களே, நான் complaint கொடுக்கவில்லை என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் இந்தச் சத்துணவு மையத்தைக் கண்காணிப்பதற்காக எத்தனையோ அதிகாரிகளை நியமித்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே கிட்டத்தட்ட 67 மையங்கள் இருக்கின்றன. நான்



அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்பதற்காக அத்தனை மையங்களுக்கும் ஒவ்வொரு நாளும் போய்ப் பார்க்க முடியாது அப்படிப் பார்வையிடுவதற்காகச் சில அதிகாரிகளை நியமித்திருக்கிறீர்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட நிலைமைகள் தெரியுமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : I am very happy குறையாகச் சொல்லவில்லை. நான் என்ன கேட்கிறேன் என்றால், Is it not in the national interest? எதிர்க்கட்சியாக நான் உங்களைப் பாவிக்கவில்லை. நாட்டுமக்களின் நன்மைக்காகத்தான் அத்தனை பேரும் பாடுபடுகிறோம். ''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பாரிலானுங் கெடும்'' என்ற குறளுக்கேற்ப எதிர்க்கட்சியினர் தேவைதான். Was it not the duty of any member, whether he is in the opposition or in the ruling party, to bring to the attention of the authorities such miscarriage of justice? அப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றபோது இந்த மன்றத்திலே சொல்லக்கூடிய உரிமை உண்டு என்றாலும் அப்போதே அதுபற்றித் தகவல் கொடுத்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்க சௌகரியமாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ஊரைச் சொல்ல வேண்டும் என்று கேட்டார். ஊரைச் சொல்லிவிட்டார் அதற்குப் பிறகு......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலே அவ்வாறு நடந்திருக்கிறது என்பதால் அதுபற்றி இந்த மான்றத்திலே ஏன் தெரிவிக்கவேண்டும், அதற்கு முன்னாலேயே சொல்லி இருக்கலாம் அல்லவா என்றுதான் சொல்கிறார்.

திரு. கு. ரமணி : எந்த ஊர் என்று சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அவ்வாறு ஊரைச் சொன்னதற்குப் பிறகு இப்படி........(குறுக்கீடுகள்)........ட்யூட்டி என்று சொன்னது தவறு......

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சி. கோபால்) : அதில் ஒன்றும் தவறு இல்லை. அவர்களுடைய தொகுதியாக இருப்பதால் அதை உடனடியாக ஏன் தெரியப்படுத்தவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, Because Hon. Thiru. Ramani is little upset. நான் ட்யூட்டி என்று சொல்லவில்லை. நீங்கள் இங்கே பேசக் கூடாது என்றும் நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்வதற்கு எனக்கு உரிமையும் இடையாது. உங்களுக்கு பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஒரு வேண்டுகோளாகத்தான் சொன்னேன். தகவல் உடனடியாக எங்களுக்கு கொடுத்து இருப்பீர்களானால் ஒட்டு மொத்தமாக சமுதாய நன்மைக்கு பயன்படக்கூடிய வகையில் நடவடிக்கை எடுத்திருக்க முடியும் என்பதற்காகச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

*திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது எல்லாம் பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. திடீரென்று விவாதத்தை வேறு திசையில் உருப்பிவிடக்கூடிய முறையில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பமுடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசியதை எல்லாம் அவை குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு)

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கடமை என்று சொன்ன வார்த்தையை ஒட்டி நானும் நல்ல எண்ணத்தில் தான் சொன்னேன். நண்பர் திரு. துரைராஜ் அவர்களைக் கூட எனக்கு 20 வருடமாகத் தெரியும். அவர் ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் என்றும் எனக்குத் தெரியும். அங்கே, திருநெல்வேலியில் என்ன நடக்கும் என்பது அவருக்கும் தெரியும். ஆகவேதான் நான் என்ன சொல்கிறேன என்றால் அமைச்சர் கேட்டுக்கொண்டது போல், உடனடியாகச் சொல்லி இருந்தாலும் ஒரு பயனும் ஏற்பட்டிருக்காது. அரசாங்கத்திற்கு பல முறை எழுதியிருந்தும் முதலமைச்சருக்கு சொல்லியிருந்தும் நடவடிக்கை இல்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் பேசியது எல்லாம் குற்றச்சாட்டாக இருக்கிறது. ஆகவே அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும். அது பாயின்ட ஆப் ஆர்டரில் வராது.

திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் சற்று நேரத்திற்கு முன்னால் பேசும்போது இந்த வீடு கட்ட கடன் கொடுக்கும் தொகை 5 ஆயிரத்தில் ஆயிரம் ரூபாயை அதிகாரிகளே எடுத்துக்கொள்கிறார்கள் ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12—40)

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, 10 நிமிடங்களாக என்னை உட்கார வைத்துவிட்டீர்கள். கொஞ்சம் சந்தர்ப்பம் கொடுங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்கார வைப்பதல்ல. சில விதிமுறைகளின்படி இங்கே பேசுகிறோம். அவ்வளவு தான்.

திரு. என். பழனிவேல் : ஆண்டுக்கு ஒரு முறை கூடுகிறது. இப்போது விஷயங்களைச் சொல்லவில்லையென்றால் எப்போது சொல்வது? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கட்சியைப் பற்றிச் சொல்லும்போது அந்த மாதிரிக் குற்றத்தைச் சொல்ல வேண்டாம், கட்சியைப்பற்றிச் சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. என். பழனிவேல் : மதிய உணவு மையங்களிலே நடக்கக் கூடிய தவறுகளைக் கண்டிப்பதிலே அரசும் அமைச்சரும் அந்தக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இவ்வளவு ஆர்வமாக இருப்பதை நான் பாராட்டுகிறேன். எனக்கு அதிலே கருத்துவேறுபாடு இடையாது. அந்த அளவுக்கு கீழ் உள்ள நிலைமைகளைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் அதுவே சந்தோஷம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நண்பர் துரைராஜ் அவர்கள் ** சொன்னதாகச் சொல்கிறார்கள். நான் அப்படிச் சொல்லவில்லை (குறுக்கீடு தெரியும். இப்பவும் நான் சொல்கிறேன். நீங்கள் மனச்சாட்சியை ஒரு பக்கம் வத்துவிட்டு பேசினால் நான் எப்படி அதற்குப் பொறுப்பு? இந்த நாட்டிலே என்ன லஞ்சம் இல்லையா? தெரிந்தும் நீங்கள் பேசுகிறீர்கள். உங்களுக்கு நான் சவால் விடவில்லை பொதுவாக அப்படி இருக்கிறது என்று சொன்னேன். இந்தமாதிரி முறையில் இல்லாமல் மனுப்போட்டவுடனே லஞ்சம் கொடுக்காமல் காரியம் நடந்தால் மிக்க சந்தோஷம். விரைவாகச் செய்வதற்கு அனைவரும் ஒத்துழைத்தால் நன்றி உடையவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. குப்புசாமி : துணைத் தலைவர் அவர்களே, அருமைச் சகோதரர் பழனிவேல் அவர்கள் சில குற்றச்சாட்டுக்களை இங்கே கூறி இருக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் அதிகாரிகள் எடுத்துக் கொள்வது ** என்று சொன்னார்கள். ஏற்கெனவே அந்தக் குற்றச்சாட்டை திரு. துரைராஜ் அவர்கள் மறுத்திருக்கிறார்கள். மீண்டும் அதையே சொல்வதால் அவைக்குறிப்பிலே இருக்க வேண்டுமா? ** என்பது போன்ற பொருள் வரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கட்சியைப் பற்றிச் சொன்னால் திரும்பி உங்கள் கட்சியைப்பற்றிச் சொல்வார்கள். அது எல்லாம் விவகாரம் வேண்டாம். ஏதாவது ஸ்பெசிபிக்காக இருந்தால் அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். (குறுக்கீடு) வெளியே கட்சி மட்டும் இல்லை, நாடே இருக்கிறது. நாட்டிலே வேறு ஆட்கள் இல்லையா? ஆகவே அந்த விவகாரங்கள் எல்லாம் வேண்டாம். அது எல்லாமே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசக்கூடிய ** உறுப்பினர்கள் கேள்வி நேரங்களிலே அவர்களே அதிகாரிகள் லஞ்சம் கேட்கிறார்கள் என்று சொல்கிறார்கள், நாம் ஒவ்வொரு நாளும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத்திலே யாரும் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது.

திரு. கே. குப்புசாமி : கேள்வி நேரத்திலே என்று அவர்கள் சொன்னதையும் நீக்கவேண்டும்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பூராவும் நாம் நீக்கிக் கொண்டிருந்தால் பேசுவதில் பாதி போய்விடும். நாம் பேசும் போது சில வரையறைகளுக்குட்பட்டு பேசினால் நீக்கவேண்டிய அவசியம் இருக்காது. ** என்று சொன்னால்தான் அவர்கள் கேட்கிறார்கள் (குறுக்கீடு) நாட்டிலே கட்சியிலே இருக்கிறவர்கள் கொஞ்சம்தான், நாட்டிலே நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணங்களை இன்றைக்கு ஊக்குவிப்பதாகவும், அதற்கு உதவி செய்வதாகவும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இது ஓரளவிற்கு இருக்கலாம். பெயர் அளவிற்கு இருக்கலாம். ஆனால் உண்மையிலே சொல்கிறேன். இந்த கலப்பு திருமண தம்பதிகள் சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளிடத்தில் மனுக்களைக் கொடுத்தால் அவை பல ஆண்டுகள் நடவடிக்கை இல்லாமல் இருக்கின்றன. நானே சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் விஜயசாரதி அவர்களிடம், சந்தானம், லட்சுமி என்ற இருவரின் கல்யாணத்தைப் பற்றிய ரெக்கார்டை கொடுத்தேன் இன்று வரையில் உதவி கிடைக்கவில்லை. ஆகவே கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லக்கூடிய இந்த அரசு அவர்களுக்கு தகவல் கிடைத்த ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே இந்த உதவியை கிடைக்கச் செய்யவேண்டும். இது வெறும் கண்துடைப்பாகச் செய்யக்கூடாது அதைப்போல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதிமன்றங்களில் இலவச சட்ட உதவி என்று சொல்கிறார்கள். எங்கே இருக்கிறார்கள் அந்த வக்கீல்கள்? எங்கே அவர்கள் ஆபீஸ் வைத்திருக்கிறார்கள்? யாருக்காக அவர்கள் வழக்குகளை நடத்தினார்கள் என்பது போன்ற தகவலே இல்லை. திண்டுக்கல்லில் கோர்ட் இருக்கிறது; பழனியில் கோர்ட் இருக்கிறது. பல கேஸ்கள் பல ஏழை, எளிய மக்கள் தாங்களாக பணம் கொடுத்து கேஸ் நடத்த வேண்டியிருக்கிறது. நான் இன்னும் சொல்கிறேன் சாதாரண தாழ்த்தப்பட்ட மக்கள் நகரங்களுக்கு ஏதாவது பிரச்னை என்று போனால் அங்கே

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டன.





அவர்களைச் சந்தேக கேஸ்களில் பிடித்து உள்ளே போடுகிறார்கள். ஏன் இந்த இலவச வக்கீல்கள் போய் அவர்களை மீட்கக்கூடாது? அவர்கள் சப்-ஜயில்களுக்குப் போனார்களா? சிறைச்சாலைகளுக்குப் போனார்களா? நிரபராதிகள் எத்தனை பேர்கள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்? அதை இந்த அரசாங்கம் கேட்கக்கூடாதா? அந்த மாதிரி கேட்டு உதவி செய்தால் தான் அவர்களுக்கு உதவி கிடைக்குமே தவிர வெறும் புள்ளிவிவரத்தை வைத்து சட்ட உதவி அளிக்கிறோம் என்று சொல்வது வெறும் கண்துடைப்பாகும்.

அதைப்போல காவல் துறையில், அரசாங்க அலுவலகங்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தவிதமான மரியாதையும் இல்லை. அவர்களை வாருங்கள், அமருங்கள், என்ன விஷயம் என்று அதிகாரிகள் யாராவது கேட்கிறார்களா? கேட்க மாட்டார்கள்; அவர்களுக்கு அந்தமாதிரி பழக்கமே கிடையாது; அந்த தாழ்த்தப்பட்ட மக்களை ஏதாவது ஒரு கேஸ் அல்லது பிரச்னை என்றால் நாயை இழுத்துக்கொண்டு போவதைப் போல போய் அங்கே நொக்கறான். அதற்கு மட்டும் சட்டம் இடம் கொடுக்கிறதா? அதைக் கேட்கவே முடியாது. அவர்களுக்கு மரியாதை என்ற பேச்சுக்கே இடம் கிடையாது. நம் எத்தனையோ மரியாதை வாரங்களைக் கொண்டாடுகிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி மன்றங்களானாலும் சரி, காவல் துறையானாலும் சரி, ரெவின்யூ துறையானாலும் சரி அவர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை. அவர்கள் ஒன்றும் தெரியாத கண்ணில்லாத கபோதிகள். அவர்களுக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்றால் அரசாங்கமே அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளே முன்வந்து பிரச்னையைக் கேட்டுத் தீர்த்தால் தான் உண்டு; இல்லையென்றால் அவர்கள் பிரச்னை தீராது.

இன்றைக்கு அரசு அச்சகங்களில் சென்னையில் உள்ள சில ஊழியர்கள் எங்களிடத்திலே வந்து பார்த்தார்கள், அங்கே 300 பேர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு, முதல் வருடம் 130 ரூபாய், இரண்டாம் வருடம் 140 ரூபாய், மூன்றாம் வருடம் 150 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். இதை வைத்துக்கொண்டு எப்படி வாழ்க்கை நடத்துவது? அரசாங்கத்திலே பலதடவைகள் மனுக்கள் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கேட்கவில்லை என்று சொல்கிறார்கள். இண்டியன் அப்ரென்டீஸ் ஆக்ட் விதிகளின்படி ஒவ்வொரு வருடமும் ரூ. 230 ரூ. 250, ரூ. 260 என்று கொடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். இந்தச் சட்டத்தை அரசாங்கம் இன்றைய வரையில் அமல்நடத்தவில்லை. எங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு நிவாரணம் கொடுக்கிற முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும். இறுதியில் பதில் அளிக்கிறபோதுகூட சொல்லலாம். அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அடுத்து ஒய்வூதியம். ஒய்வூதியத்திற்கு தாழ்த்தப்பட்ட மக்கள்தான் கிராமங்களில் நிறைய பேர்கள் மனுக்கள் கொடுக்கிறார்கள். 65 வருடம் ஆகி, 70 வருடமாகி அவர்கள் மனுக்களைப் போட்டால் அதற்குப் பதில் வருவதே இல்லை. ஒரு தொகுதிக்கு 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் என்று ஃபிக்ஸ் பண்ணி வைத்திருக்கிறோம். அப்படியில்லாமல் தாழ்த்தப்பட்ட மக்கள் எவ்வளவு பேர்கள் மனு போட்டாலும் அந்தத் தொகை அவர்களுக்குக் கிடைப்பதற்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டும்.

இந்தத் துறையைப்பற்றி மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் சொல்கிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள் ரெவின்யூ தாசில்தாருக்கு இருக்கிற மதிப்பு, தனித்தாசில்தாருக்கு இல்லை என்று சொன்னார்கள். அது முழுக்க, முழுக்க உண்மை. ** **

(பிற்பகல் 12–50)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினரால் கடைசியாக பேசப்பட்டது, அமைச்சர் சொன்ன பதில் இரண்டும் சேர்ந்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, 1983–84 ஆம் ஆண்டுக்கான ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் நலத் துறையினுடைய மானியக் கோரிக்கையை வரவேற்றுப் பேசுகிற வாய்ப்பளித்தமைக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கின்றேன். புரட்சித் தலைவருடைய அரசு அமைந்ததற்குப் பின்னாலே, ஆதி திராவிட நலத் துறைக்காக மானியக் கோரிக்கை ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வருகிறது. 1976–77–லே ரூ. 13 கோடியாக இருந்த மானியம், 1977-78-லே ரூ. 15 கோடியாக மாறி, 1978-79–லே ரூ. 16 கோடியாக மாறி, 1979-80-லே ரூ. 19 கோடியாக மாறி, 1980–81–லே ரூ. 24 கோடியாக உயர்ந்து, 1981–82–லே ரூ. 27 கோடியாக உயர்ந்து, 1982–83–லே ரூ. 42 கோடியாக உயர்ந்து, இன்றைய தினம், 1983–84–லே ஏறக்குறைய ரூ. 44 கோடி அளவுக்கு உயர்ந்து, அனுமதி கேட்டு அமைச்சர் அவர்கள் அவைமுன் மானியக் கோரிக்கையைக் காண்டு வந்திருக்கிறார்கள். இப்படி, படிப்படியாக, புரட்சித் தலைவருடைய அரசு அமைந்ததற்குப் பின்னாலே, மானியக் கோரிக்கையின் அளவு உயர்ந்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திருக்கிறது. இந்த அரசு அமைந்ததற்குப் பின்னாலே, ரூ. 14 கோடியாக இருந்த மானியம் இன்றைக்கு ரூ. 44 கோடியாக உயர்ந்திருக்கிறது—அது புரட்சித் தலைவருடைய அரசுதான் என்பதைப் பெருமையோடு கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆதி திராவிட நலப் பணிகளை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு வகையாகப் பாராட்டியிருந்தாலும், பல்வேறு மாநிலங்களிலிருந்து வந்திருக்கிற குழுக்களும், கர்நாடகம், ஆந்திரம், குஜராத் போன்ற மாநிலங்களிலேயிருந்தும் அண்மையிலே அமரராகியிருக்கிற ராஜ்மன் அவர்கள் தலைமையிலே வந்த மத்தியகுழு கூட தமிழ்நாட்டிற்கு வந்து சுற்றிப் பார்த்து விட்டு, ஆதி திராவிடர் நலமக்களுக்குச் செய்திருக்கிற நலப் பணிகளைப் பாராட்டிவிட்டு, பெருமையோடு நற்சான்றிதழ்கள் தந்து இருக்கிறார்கள் என்பதே இந்த அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற மிகப்பெரிய பாராட்டுப் பத்திரமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக இன்றைக்கு எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள், சத்துணவுத் திட்டத்தைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் பணிவன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அரசு எந்த ஒரு திட்டம் கொண்டு வந்தாலும் தமிழகத்திலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களை, ஏழைகளை உயர்த்துகின்ற வகையில் அக்கறை கொண்டு பல்வேறு காரியங்களை அவர்கள் ஆக்கபூர்வமாகச் செய்தாலும், அதிலே முதற்படியாக இந்தச் சத்துணவு திட்டம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நல்லவகையிலே வாழ்விக்க வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு திட்டம் என்பதை உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மற்ற எல்லா இனத்தவர்களுக்கும் இல்லாத ஒரு வாய்ப்பும் வசதியும் இந்தச் சத்துணவுத் திட்டத்தினாலே-புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற திட்டத்தினால், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை மட்டும் உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் சமுதாயத்திலே ஒரு மறுமலர்ச்சியை உருவாக்கக் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இந்தச் சத்துணவுத் திட்டத்தில், 5 வயதிலிருந்து 9 வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு ஆதி திராவிடப் பள்ளிகளிலே உணவு அளிக்கப்படுகிறது என்பதைச் சொன்னாலுங்கூட, தற்போது இந்த உணவு அளிப்பதன்மூலம், கிராமங்களிலேயிருக்கிற தாழ்த்தப்பட்ட, ஏழை, எளிய மக்கள் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களிலே வயிறார சத்துணவு சாப்பிட்டுவிட்டு வயிற்றுப் பசியைப் போக்கிக் கொண்டதற்குப் பின்னால், தற்போது அறிவுப் பசியைப் போக்கிக் கொள்வதற்காகக் கல்விக் கூடங்கள் செல்வதை—தாழ்த்தப்பட்ட மக்கள்

வீட்டுக் குழந்தைகள் பள்ளிக் கூடங்கள் செல்வதை—உங்களுக்கு நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி, சமுதாயத்தின் அடித்தளத்திலே உள்ள மக்களை மேலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதற்காகக் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இப்படிப்பட்ட சமுதாய மறுமலர்ச்சித் திட்டமான சத்துணவுத் திட்டத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில், அதில் ஏதேனும் குறைகள் இருந்தால், அவைகளைக் கோடிட்டுக் காட்டினால் இந்த அரசாங்கத்தின் சார்பாக அவற்றின்மீது நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும் பணிவன்புடன் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தத் திட்டம் சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காகக் கொண்டு வரப்பட்ட சீரிய திட்டம் என்று பாராட்டுகின்ற அதே நேரத்தில், நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்து, மேலும் இந்தத் தாழ்த்தப்பட்டமக்களின் நிலையை மேம்படுத்த வேண்டுமென்று அந்தத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதுதான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு தருகின்ற திட்டமாகும். அந்தத் திட்டத்தின் மூலமாக இந்தச் சமுதாயத்திலே அடித்தளத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் அதிகமான வாய்ப்பைப் பெறுவதற்கு நிச்சயமாகப் பயன்படும் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது மற்ற இனத்தவர்களில் யாராவது ஒருவர் வேலையில் இருக்கின்ற வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்கள் காலம்காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கின்ற நிலையில், அவர்கள் அந்த வாய்ப்பு வசதிகளைப் பெறுகின்ற நிலையில், வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு தருகின்ற திட்டத்தைப் புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருப்பதன் காரணமாக, சமுதாயத்திலே அடித்தளத்திலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள், அருந்ததியர் மக்கள், ஆதி திராவிட மக்கள் அரசாங்க வேலை வாய்ப்பு பெறுவதற்கான வாய்ப்பு வசதி ஏற்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற அப்படிப்பட்ட மக்களுக்கு, அவர்களுடைய குடும்பத்தில் ஒளி விளக்கு ஏற்றும் திட்டமாகத்தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பு தருகிற இந்தத் திட்டம் இருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அவர்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று புரட்சித் தலைவரவர்களின் அரசு அப்படிப்பட்ட மக்களுக்குப் பல்வேறு சீரிய திட்டங்களை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதிலே ஒரு திட்டமாகத்தான், இராமநாதபுரம் மாவட்டத்தில் 400 குடும்பங்கள் பயன் பெறும் வகையில் கூட்டுறவு நூற்பாலையைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உருவாக்கியிருப்பதை நான் மனதாரப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதேபோன்று தொழில் முறை கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கான முயற்சியையும் இந்த அரசு எடுத்திருக்கிறது. அதையும் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படிப்பட்ட முயற்சிகளுக்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தாற்

போல ஒவ்வொரு மாவட்டத்திற்கும் துணைக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து, அதன்மூலமாகத் தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட மக்களுக்கு அவர்கள் வாழ்க்கையிலே பொருளாதாரத்திலே முன்னேற வழிவகை செய்து தர வேண்டுமென்ற என்னுடைய ஆலோசனையையும் அரசுக்குச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக, வீட்டு வசதிக் கழகத்தின் மூலமாகப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைப்பற்றி இந்த அரசாங்கம் சொல்லுகின்ற நேரத்தில், இதற்கு முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆதி திராவிடர் நல விரிவாக்க அதிகாரி என்று நியமித்து அதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படுகின்ற குறைகளைப் போக்கும் அளவிற்கு நடவடிக்கை எடுத்திருப்பதை நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடிக்கடி ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகமும், விரிவாக்க அதிகாரிகளும் இணைந்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தொழில் மையத்திலே கிடைக்கின்ற ஆலோசனைகளைப் பெற்று அநதந்தப் பகுதிகளிலே உள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்னென்ன தொழில்களை ஆரம்பித்துக் கொடுத்தால் அவர்களுடைய வாழ்க்கையின் பொருளாதார நிலை மேம்படுவதற்கு வசதியாக இருக்கும் என்று ஆராய்ந்து, மாவட்டத் தொழில் மையத்தோடு இணைந்து, அப்படிப்பட்ட மக்களுக்குப் புதிய வாய்ப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசிய நண்பர் ஒருவர் சொன்னார். வீட்டுமனைகளைக் கையகப்படுத்துவதில் முட்டுக்கட்டை நிலைமை இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். 125 இலட்சம் ரூபாய் ஒதுக்கிவிட்டு, எப்படி இந்தப் பணத்தைச் செலவழிக்கப் போகிறீர்கள் என்ற கேள்வியைக் கேட்டுவிட்டு அமர்ந்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் அரசாங்கத்தின் கவனத்திற்கு ஒரு வேண்டுகோளைப் பணிவன்போடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் இத்தனை இலட்சம் ரூபாய்களை ஒதுக்கி இந்த மக்களுக்கு நல்லது செய்யும் அதேநேரத்தில், அதைத் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குகளைத் தடுத்து விடுவதால் ஏழாண்டு, எட்டாண்டு பத்தாண்டு என்று அந்த வழக்குகள் முடிவுறாமல் இருப்பதால் அவர்களுக்கு நிலம் எடுத்து வரும் பணிகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட பணிகள்

பாதிக்கப்படாமல் இருப்பதற்காக, உயர்நீதிமன்றத்தில் தனி நீதிபதியை உருவாக்கி, இருக்கின்ற அத்தனை வழக்குகளையும் உடனடியாகப் பரிசீலனை செய்து, விரைவாக முடித்து, அப்படிப்பட்ட மக்களுக்கு நிலத்தைக் கையகப்படுத்துகின்ற அனைத்துப் பணிகளையும் செய்ய வேண்டுமென்று நான் பணிவன்

(பிற்பகல் 1-00)

போடு கேட்டுக்கொள்கிறேன். தனி நீதிபதி அமைத்தாலும் சரி, இல்லை தனி நீதிமன்றமாக ஒரு சட்டமே கொண்டுவந்து, இப்படி நில ஆர்ஜிதத்திற்காக தடுக்கிறவர்கள் மீது இருக்கிற வழக்குகளை விசாரிப்பதற்குத் தனி நீதி மன்றமோ உருவாக்கி வழக்குகளை விரைவாகப் பைசல் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒரு தாலுக்காவுக்கு ஒரு ஹரிஜன தாசில்தார் என்று இருக்கிற அலுவலகங்கள் 2. 2 தாசில்தார்கள் இருக்கிறார்கள் என்று சொன்னாலும் அங்கிருக்கும் ஒரே ஒரு சர்வேயர் 2 அலுவலகங்களுக்கும் சென்று அங்கிருக்கும் பணிகளைச் செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதே போல் ஒரே தட்டச்சரே இருந்து அத்தனை பணிகளையும் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தாலுக்கா மையத்திற்கும் ஒரு தாசில்தார் இருப்பதற்குத் தனித்தனி அலுவலகத்தை, அந்தந்த தாலுக்கா மையங்களிலே உருவாக்கித் தந்து இந்த நில ஆர்ஜிதப் பணிகளை விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி நியமிக்கப்படுகிற தாசில்தாராக இருந்தாலும் சரி. மாவட்ட நல அதிகாரியாக இருந்தாலும் சரி, வயதானவர்களை நியமிக்கிற நேரத்திலே அவர்கள் ஓடியாடி இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதற்கு முடியாமல் பணிகள் விரைவுபடாமல் தடைபடுகின்றன. இப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டு மென்று சொன்னால், விரிவாகப் பணியாற்றப்படவேண்டுமென்று சொன்னால், உடனடியாக 'குரூப் 1' தேர்வு முடித்துவிட்டு வருகிற சுறுசுறுப்பான இளைஞர்களை கட்டாயம் ஓராண்டு காலம், 2, 3 ஆண்டுகாலங்கள் இந்த நலத்துறையிலே பணியாற்ற வேண்டுமென்ற ஒரு சூழ்நிலையைப் புரட்சித் தலைவரவர்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன் போடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக தாழ்த்தப்பட்ட இனத்திலே பல்வேறு வகையான கோரிக்கைகளையும், குறைகளையும் இங்கே சுட்டிக்காட்டி னார்கள். நான் பணிவன்போடு புரட்சித் தலைவர் அவர் களுடைய கவனத்திற்கும், அமைச்சரவர்களுடைய கவனத்திற்கும் கொண்டுவருவது என்னுடைய கடமை என்ற காரணத்தாலே கூறவிரும்புவது—தாழ்த்தப்பட்ட இனமான அருந்ததியர் என்ற இனம் இன்னும் தாழ்த்தப்பட்ட நிலையிலே தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட இனத்தை முன்னேற்று வதற்கும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்கும் அவர்களுக்குப் பல்வேறு வாய்ப்புகளையும்வசதிகளையும்



உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொடுக் கப்படுகிற அத்தனை சலுகைகளும் முறையாக அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா, இன்னும் எந்தெந்த வகையில் பல்வேறு திட்டங்கள் போட்டால், அந்த அருந்ததி இனம் சமுதாயத்தில் முன்னேறும் என்ற அளவிற்கு அமைச்சரவர்களும், புரட்சித் தலைவரவர்களும் சிந்தித்து, ஒரு தனி நபர் கமிஷனை அமைத்து, அந்தக் கமிஷனுடைய அறிக்கையைப் பெற்று, என்னென்ன வாய்ப்புகளையும் வசதிகளையும் செய்யலாம் என்பதை அரசாங் கத்தின் மூலமாகச் செய்வதற்கு முயற்சிகளை எடுக்கவேண்டு மென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல,இந்தச் சமுதாயத்திலே காலணிகள் தைக்கின்ற தொழிலாளர்கள் 500 பேர்களுக்கு பெட்டிக்கடைகளை கொடுத்து, ஆதரித்திருப்பதைப் பாராட்டுகிற அதே சமயத்திலே ஒவ்வொரு மாவட்ட மையத்திற்கும், இப்படிப்பட்ட தொழில் செய்கிற அந்தத்தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளித்து,கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அந்தக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாகப் பயிற்சி கொடுத்த அந்தத் தொழிலாளர்களை வைத்து, காலணி களை உருவாக்கி அவர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருகிற அதே நேரத்தில், நல்ல காலணிகளை மற்ற மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து,அந்தச் சமுதாயத்தின் அடித்தளத் திலே இருக்கிற அருந்ததி மக்களுடைய நலன்களைப் பாதிக்காத வகையிலே அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின் மூலமாக ரூ. 4000-ம், அதிலே ரூ.1000, மானியமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பணம் போதாது என்று ஏற்கனவே கோடிட்டுக் காட்டியிருக் கிறேன். அதை ரூ. 1 ,000 ஆக உயர்த்தித் தரவேண்டு மென்றும், அதிலே ரூ. 3,000 மானியமாகத்தரவேண்டு மன்றும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கலப்புத்திருமணங்கள் மூலமாகத்தான் சமுதாயத்தில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகளையும், ஜாதி உணர்வுகளையும் போக்கமுடியும் என்ற நம்பிக்கை அத்தனை பேருக்கும் இருக்கிறது என்று சொன்னாலும் நம்முடைய புரட்சித் தலைவருடைய அரசு அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் புரிந்தவர்களுக்குப் பல்வேறு வாய்ப்பு வசதிகளைத் தந்திருக்கிறது என்று சொன்னாலும், கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, அரசாங்கத் திலுடைய வேலைவாய்ப்புகளிலே முன்னுரிமை தரவேண்டும். என்ற ஆணையைப் போட்டு, அப்படிப்பட்ட கலப்புத் திருமணங் களை ஊக்குவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தன்னிறைவுத் திட்டம்இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத் திலே தமிழகத்திலே புரட்சித் தலைவருடைய அரசினால் ஏற்படுத்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிடர், அருந்ததி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் ஒரு ரெவின்யூ டிவிஷனுக்கு ஒரு தன்னிறைவுத் திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி சங்ககிரி, இளைச்சிப்பாளையம் போன்ற இடங்களில், மாணவர்கள் விடுதி கட்டப்படாமல் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிறது. அதைக் கட்டவேண்டும். மல்லசமுத்திரத்தில் உள்ள மாணவியர்களுக்காக கட்டிடங்கள் கட்டித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீரபாண்டித் தொகுதியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர் சகோதரி அவர்கள் ஒரு கோரிக்கையை இந்த மன்றத்தின் முன்னாலே வைக்கச் சொல்லியிருக்கிறார்கள். திருவாத்தகவுண்டனூர் ஆதிதிராவிட தெருவுக்காக நில ஆர்ஜிதம் செய்தும், 20 ஆண்டுக்காலமாக அவர்களுக்கு நகர அமைப்புத் திட்டத்தின் கீழ் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கிறது. அதைப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அச்சுத்துறையிலே, சேலம், விருத்தாசலம், திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு பிராந்திய அச்சகத்திலே இதுவரை தொழிலாளர்களுக்கான சங்கங்கள் அமைக்கப்பட வில்லை என்றும், அவர்கள் அரசினர் பிராந்திய அச்சகத் தொழி லாளர்கள் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றும் தெரிய வருகிறது. அப்படிப்பட்ட சங்கத்திற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதோடு அந்தத் தொழிலாளர்களுக்கு 12 மாதங்கள்தான் மருத்துவ விடுப்பு கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற அரசாங்கத் துறையிலே இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதுபோல், இவர்களுக்கும் 18 மாத மருத்துவ விடுப்புக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களைப் புரட்சித்தலைவர் அவர்களுடைய அரசு கண்போல் காத்துவருகிறது. அதுமட்டுமல்ல, ஒரு தாய் தன்னுடைய குழந்தையை எப்படிப் பேணிக்காப்பாளோ அந்த வகையில் புரட்சித் தலைவர் அரசு இன்றையதினம், தாழ்த்தப்பட்ட மக்களை தாய் குழந்தையைக் காப்பதுபோல் காத்துவருகிறது, ஒரு தாயாக இருந்து காத்துவருகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் எடுத்திருக்கிற நல்ல பல காரியங்களுக்காக நான் மனதார பாராட்டி என்னுடைய நன்றியைக் காணிக்கையாக வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சருடைய மானியக் கோரிக்கையின் மீது இந்தியக்



கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துக்களை எடுத்துக்கூற விரும்புகிறேன். இங்கே எனக்கு முன்னாலே பேசிய ஆளும்கட்சி யினுடைய அன்புச் சகோதரர் தனபால் அவர்கள் கடந்த காலங்களிலே இந்த ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட திட்டங்களுடைய கோடிகளைச் சொன்னார்கள். எத்தனையோ கோடிகளை இந்த நாடு சந்தித்துக்கொண்டு இருக்கிறது. இந்த மக்களுக்காக பல கோடிகளை நாம் செலவழித்துக்கொண்டிருக் கிறோம். ஆனால் உண்மையிலே அந்த மக்களுக்காக நாம் கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்துக்கொண்டு இருக் கிறோமே அந்த மக்களில் ஏறத்தாழ 90 சதவீத மக்கள் இரண்டே இரண்டு கோடிகளைத் தான் கண்டு கொண்டிருக்கிறார்கள். ஒன்று அவர்கள் இறக்கின்ற நேரத்திலே போடுகின்ற துணிக்கோடி. மற்றொன்று தெருக்கோடி என்று சொன்னால் அது மிகையாகாது. ஏன் இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால் இந்த மன்றத்திலே பல்வேறு உண்மைகளை, எடுத்துச்சொல்லுகின்ற போது ஆளும் கட்சி நண்பர்களுக்குக் வருத்தங்கள் ஏற்படலாம். நான் இந்த மன்றத்தினுடைய உறுப்பினர் என்ற முறையிலே என்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களை, உள்ளத்தின் குமுறல்களை எடுத்துச்சொன்னால் உங்களுக்குக் குறையாக இருக்காது என்று நான் கருதுகிறேன். இந்தப் பாரத தேசத்திலே விடுதலை பெற்றபிறகு, 70 கோடி மக்களைக் கொண்ட இந்த பாரத நாட்டில் இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று சொல்லுகின்ற மக்கள் 18 கோடி பேர்கள். நான் இந்தப் அரசாங்கத்தையும், எந்த ஆட்சியையும் குறை சொல்லமாட்டேன். 18 கோடி மக்களில், 36 ஆண்டுகளாக, சுதந்திரத்திற்குப் பிறகு, 7 பொதுத் தேர்தல்களை இந்த நாடு சந்தித்ததற்குப் பிறகு, ஆறு ஐந்தாண்டுத் திட்டங்களை இந்த நாடு கண்டதற்குப் பிறகு, பல கோடிக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்ததற்குப் பிறகு, வாழுகின்ற 18 கோடி மக்களில் 1 கோடி மக்கள் இன்றைக்கு குடியிருப்பு மனை இல்லாமல் இருக்கிறார்கள் என்று மத்தியிலே ஆளுகின்ற அரசாங்கம் சொல்லிக்கொண்டிருக்கிறது. இங்கேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கொள்கைக் குறிப்பை நான் படித்துப் பார்த்தேன். தமிழகத்திலே வாழுகின்ற 4 கோடியே 85 லட்சம் மக்கள் 1981–ஆம் ஆண்டுக் கணக்குப் பிரகாரம், அவர்களில் ஏறத்தாழ தாழ்த்தப்பட்ட மக்கள் 18.34 சதவீதமாகும். ஆகவே அவர்களுடைய எண்ணிக்கை என்று சொல்கின்றபோது ஏறக்குறைய 1 கோடி மக்களாக இன்றைக்கு இருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி இருக்கக்கூடிய மக்களில் 18 லட்சம் குடும்பங்கள் என்று இங்கே சொல்லியிருக்கி றீர்கள். எண்ணிக்கையைச் சொல்லியிருந்தால் நன்றாக இருந் திருக்கும். இந்த 18 லட்சம் குடும்பங்களில் 9 லட்சம் குடும்பங்கள் இன்றைக்கு வறுமைக்கோட்டுக்குக் கீழே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு என்ன இலக்கணம் என்று உங்களாலே சொல்ல முடியாது. அவர்களைப் படைத்த ஆண்டவன் என்று ஒருவன் இருந்தால்கூட அவனால்கூட சொல்ல

முடியாது. அப்படிப்பட்ட ஏழ்மை நிலையில்தான் இந்த மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். இதைச் சொல்லிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு புள்ளிவிவரத்தைக் கொடுத் திருக்கிறார்கள். தமிழகத்திலே வாழுகின்ற மொத்த மக்கள் ஜனத்தொகையில் கல்வி அறிவு பெற்றவர்கள் 46.7 சதவீதம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் கல்வி அறிவு பெற்ற ஆதி திராவிடர்கள் 29.7 சதவீதம், பழங்குடியினர் 20.45 சதவீதம் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது எழுத்தினுடைய தவறா அல்லது நான் புரிந்துகொண்டது தவறா என்று எனக்குத் தெரியவில்லை. 46 சதவீத மக்களில் 24 சதவீத மக்கள், இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் படித்து முடிந்ததற்குப் பிறகு கல்வி அறிவு பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களில் இன்றைக்கு அரசுப் பணிகளில் அமர்த்தப்பட்டு இருக்கின்ற உங்களால் கொடுக்கப்பட்டு இருக்கின்ற 18 சதவீதத்தில் 12 சதவீதம்தான் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மீதி 6 சதவீதம் எட்டியே பார்க்கவில்லை என்று சொல்கிறீர்களே, இது என்ன தவறா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இன்றைக்குப் படித்து இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் சொல்கிறீர்கள். படித்த மக்களுக்கு வேலை கொடுத்ததைப்பற்றிச் சொல்கிற போது 12% கொடுத்து இருப்பதாகச் சொல்கிறீர்கள். இது முன்னுக்குப் பின் முரணான தகவலாக இருக்கிறது என்று நான் கருதவேண்டியிருக்கிறது.

(பிற்பகல் 1-10)

இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு பல்வேறு விளக்கங்களை இதிலே சொல்லியிருக்கிறது. மாணவர்கள் விடுதியைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைக் குறிப்பிடவிரும்புகிறேன். இந்தத் துறையின் இயக்குநராக வீற்று இருக்கும் அதிகாரி அவர்கள், என்னுடைய மாவட்டத்தில் ஆட்சித் தலைவராக இருந்த நேரத் தில், அவரை அழைத்துக்கொண்டு என்னுடைய தொகுதியில் உள்ள கடம்பூர் பஞ்சாயத்தில் உள்ள அரசினர் மாணவர்கள் விடுதியைக் காட்டினேன். அந்த விடுதி ஒரு மாடு அடைக்கும் கொட்டகையில் இருக்கிறது. இந்த 16 ஆண்டுகாலமாக அந்த விடுதி அந்த மாட்டுக்கொட்டகையில் தான் இருந்து கொண்டு இருக்கிறது. நீங்கள் சொல்லலாம், உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டிகூட—ஏசுநாதர் கூட மாட்டுக் கொட்டகையில் பிறந்தார் என்று சொல்லலாம். அந்த ஏசுநாதர் கூட மாட்டுக்கொட்டகையில் பிறந்த காரணத்தால்தான் ஏழை களுக்கு நீதிகேட்ட காரணத்தால் சிலுவையில் அடைத்துக் கொல்லப்பட்டார் என்ற உண்மை நமக்குத் தெரியும். அதைப் போல இன்றைக்கு மாட்டுத் தொழுவத்திலே அவர்கள் அடைக்கப்பட்டு இருந்தாலும், அவர்கள் படித்து பட்டங்கள் பெற்று, இந்த மாநிலத்திலே நாங்கள் வாழப் பிறந்தவர்கள் என்று நீதி கேட்டால், அந்த நீதி கேட்ட காரணத்திற்காகத்தான் வெண்மணியும், விழுப்புரமும், உஞ்சனையும், புளியங்குடியும் தொடர்கிறதோ என்கிற எண்ணம்தான் எங்கள் மனதிலே தோன்றி இருக்கிறது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்பு கிறேன்.



பல்வேறு உதாரணங்களை என்னால் எடுத்துச் சொல்ல முடியும். கோவில்பட்டியில் பெண்கள் வசிக்கும் விடுதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அது ஒரு தனியார் கட்டி டத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டும்.

அது மட்டுமல்லாமல், ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை, அந்தந்த நிறுவனங்களின் மூலமாக வழங்கப் படுகிறது. அப்படி வழங்கப்படுகிற காரணத்தால் அந்த ஸ்தானத்தில் இருக்கக்கூடியவர்கள் செய்யும் தவறு அல்லது அதிகார துஷ்பிரயோகத்தின் காரணமாக, அது காலாகாலத்தில் அவர்களிடத்தில் போய்ச் சேருவது இல்லை அந்தக் கால தாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். அந்தத் தவறு போக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள். இந்தத் துறைக்கு என்று மாவட்டந்தோறும் அதிகாரிகள் இருக்கிறார்கள். வட்டம் தோறும் அதிகாரிகள் இருக்கிறார்கள் ஆனால் அவர்களுக்கும் இவர்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது மாவட்ட அதிகாரி மாவட்ட ஆட்சித் தலைவர் அதிகாரத்தில் இருக்கிறார். இந்தக் குழப்பத்தைப் போக்க வேண்டும். அந்த இயக்குநர் தலைமையின் கீழ் அவர்கள் பணியாற்ற வேண்டும். அதற்காக ஒரு ஆணை பிறப்பிக்கப் பட்டது என்று அறிகிறேன். அது இன்றைக்கு நிறைவேற்றப்பட முடியாத நிலையில் இருக்கிறது. அதைப் போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனையைப் பற்றி இங்கே சொல்லப்பட்டது. பல்வேறு இடங்களில் ஆதிதிராவிட மக்களுக்காக வீட்டுமனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, நிலங்கள் அளந்து கொடுக்கப்பட்டு, பட்டாவும் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதிலே அவர்கள் குடியேற முடியாமல் நிலைமைகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் உள்ள அப்படிப்பட்ட ஒரு நிலைமை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் தெரிவித்து இருக் கிறேன். ஒரு பட்டாவைக் கொடுத்து இருக்கிறார்கள். எங்கே இடம் என்று கேட்கிற நேரத்தில், பக்கத்தில் உள்ள அதிகாரிகள் சொல்கிறார்கள், கடலில் போய்த் தேடுங்கள் என்று. அது கொடுக்கப்பட்டது 1972-ஆம் ஆண்டில். இப்படிப்பட்ட அவல நிலை இருக்கிறது.

ஆகவே, ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், உடனே அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும், அதை அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டும், அதை அவர்கள் கையகப்படுத்திக்கொள்ள வசதி செய்யவேண்டும். அந்த வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. மு. அப்பாதுரை] [1983 மார்ச் 31

குறிப்பாக இன்றைக்கு ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும்
நிலங்களில் பல்வேறு இடங்களை அரசுபல்வேறு நல்லதிட்டங்களுக்
காகஎடுத்துக்கொண்டு மாற்று இடம் தந்துள்ளது. ஆனால் அதை
அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கவில்லை. குறிப்பாக,
ஒன்றைக்கோடிட்டுக் காட்டவிரும்புகிறேன். தமிழகத்தில்,
குறிப்பாக, இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற மின்
பற்றாக்குறையைப் போக்க, அமைக்கப்பட இருக்கும் அணுமின்
நிலையம் கல்பாக்கத்தில் உள்ளது. அந்த அணு மின் நிலையம்
அமைக்கப்பட்டிருக்கும் இடத்தில் இருந்து ஆதிதிராவிட மக்கள்
வெளியேற்றப்பட்டு அவர்களுக்கு மாற்று இடம் கொடுத்தார்கள்.
ஆனால் பட்டா கொடுத்தார்களா?

13 ஆண்டு காலம் ஆகிவிட்டது. அங்கே குடியிருக்கக்கூடிய
மக்களுக்கு இதுவரை மனைப்பட்டா கிடைத்ததா என்றால்
இல்லை. விரைவிலே அவர்களுக்கு மனைப்பட்டா வழங்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையைப் பார்க்கும்போது நம்முடைய அமைச்சர்
அவர்களுடைய படத்தைப்போட்டு என்னென்ன திட்டங்களை
எல்லாமோ இந்த அரசு செய்து வருகிறது என்று போடு
கிறார்கள், பத்திரிகையிலே நாங்கள் அடிக்கடி பார்க்கிறோம்.
அதைப்பார்த்துக்கொண்டு, அங்கே இருக்கிற படித்த இளை
ஞர்கள் இந்தத் திட்டத்தின் கீழ்எங்களுக்குக் கடன் தருவதற்காக
வாய்ப்புகளைப் பெற்றுத் தாருங்கள் என்று எங்களைக் கேட்
கிறார்கள். நாங்கள் போய் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக்
கேட்டால் அவர்கள் ஜாமீன் கொடுக்க வேண்டும் என்று சொல்
கிறார்கள். ஜாமீன் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்தால்
அவர்கள் இந்த அரசாங்கத்திலிருந்து கடனே கேட்கமாட்
டார்கள். ஆக, இப்படி ஏதோ விளம்பரத்திற்காகத் திட்டங்கள்
விளம்பரப்படுத்தப்படுகின்றனவே அல்லாமல் அந்த மக்களுக்குப்
பயன்படுவதாக இல்லை: தாழ்த்தப்பட்ட மக்கள் உதவிபெற
வழியில்லை.

இன்றைக்குக் கூட என்னுடைய தொகுதியிலிருந்து தந்தி
வந்திருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் தாழ்த்தப்பட்ட
மக்கள் 20 பேர், 30 பேர்களுக்குக் கறவை மாடு வாங்கிக்கொள்ள
கடன் மானியம் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.
அதை வைத்துக்கொண்டு வங்கியில் போய் கடன் கேட்டால்
சப்சிடி வழங்கும் அதிகாரியிடமிருந்து அனுமதி பெற்றுவாருங்கள்
என்று சொல்கிறார்கள். அந்த அதிகாரிகளைப்போய்க் கேட்டால்
கடன் கொடுக்கும் வங்கியில் அங்கீகாரம் பெற்று வாருங்கள்
என்று சொல்கிறார்கள். இப்படி அந்த மக்களை இங்கும்
அங்குமாக இழுத்தடிக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில்
அந்த மக்களுக்காக 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது
ஆனால் அந்தப் பணம் அந்தமக்களுக்குக் கிடைக்கவில்லை. வங்கி
கடன் கொடுக்க தயாராக இருந்தால் அதிகாரிகள் எழுதிக்
கொடுக்கத் தயாராக இல்லை. இந்த இழிநிலையைப் போக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 31] [திரு. மு. அப்பாதுரை]

அது மட்டுமல்ல. இன்றைக்குத் தீண்டாமை ஒழிப்புச் சட்டம்
இருக்கிறது. எத்தனையோ சட்டங்களை இந்த அரசும் போட்
டிருக்கிறது, மத்திய அரசும் போட்டிருக்கிறது. எத்தனை
சட்டங்களைப் போட்டால் என்ன? தீண்டாமை ஒழிக்கப்பட்டதா?
அந்த மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறதா? ஒன்றும்
நடக்கவில்லை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்
பழனிவேல் அவர்கள் சொன்னவுடன் எங்கள் மாவட்டத்தைச்
சேர்ந்த அருமை நண்பர் துரைராஜ் அவர்களுக்குக் கோபம்
வந்தது. நான் மனச்சாட்சியோடு கேட்கிறேன். அங்கே இருக்கின்ற
நிலைமைகள் உங்களுக்குத் தெரியாதா? இருக்கின்ற நிலைமை
களை எண்ணிப்பார்க்க வேண்டும்.

திருச்செந்தூர் சட்டமன்றத் தேர்தல் பிரசாரத்திற்காகச்
சென்றிருந்தோம். அங்கே நடந்த ஒரு சம்பவத்தை, நானே
நேரில் பார்த்த சம்பவத்தைச் சொல்கிறேன். இங்கேகூட ஆளும்
கட்சி நண்பர்கள் சொன்னார்கள், திருச்செந்தூர் சட்டசபைத்
தேர்தலில் ஆதிதிராவிட மக்கள்தான் அண்ணா தி.மு.க.வுக்கு
வஞ்சகம் இல்லாமல் வாக்களித்தார்கள் என்று. நான் அங்கே
கல்விளை என்ற கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே
பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக
வாழ்கிறார்கள். அங்கே அரசாங்கச் செலவில் கட்டப்பட்ட
ஒரு மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி இருக்கிறது அங்கே வாழு
கின்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிலிருந்து குடிக்க தண்ணீர்
வரவில்லை. ஆனால் அங்கே ஆதிக்கம் படைத்தவர்களுடைய
தோப்பில் தென்னங்கன்றுகளுக்குத் தண்ணீர் போகிறது. அந்த
ஆதிதிராவிட குடும்பங்கள் அதைப்பற்றிச் சொல்லிக்கொண்
டிருக்கும்போது ஆதிக்கம் படைத்தவர்கள் அவர்களை
அழைத்தார்கள். அழைத்தவுடன், என்பக்கத்தில் ஒருவரும்
இல்லை; எல்லோரும் போய்விட்டார்கள். இதுதான் ஜனநாயகம்
என்று அப்போது நான் நினைத்துக்கொண்டேன். இன்றைக்கு
இதுபோன்று பல வேறு கிராமங்களில் குடிநீர்த் தொட்டிகள்
திறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத்
தண்ணீர் கிடைக்கிறதா என்றால் இல்லை. அந்த அவல
நிலையைப் போக்க தீண்டாமைச் சட்டம் போட்டிருக்கிறீர்கள்;
போக்க முடிந்ததா? சட்டம் இருந்தாலும் இப்படிப் பல்வேறு
வகைகளிலே ஆதிதிராவிட மக்கள், பழங்குடி மக்கள் புறகணிக்கப்
படுகிறார்கள். இந்த அவல நிலைகளைத் தடுத்து நிறுத்த
அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களுக்கு இருக்கிற இப்படிப்பட்ட குறை
பாடுகளைப் போக்க சட்டங்களைப் போட்டால் மட்டும்
பயனில்லை. அவற்றை உரிய முறையிலே செயல்படுத்தி, தவறு
செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும்; அந்த மக்களை
அரசாங்கம் பாதுகாக்க வேண்டும். இல்லை என்றால் அவர்கள்
தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள இந்த அரசாங்கம்
அவர்களுக்கு ஆயுதம் கொடுக்க வேண்டுமென்று இந்த மன்றத்தின்
மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மு. அப்பாதுரை] [1983 மார்ச் 31

(பிற்பகல் 1-20)

இன்றைக்கு ஆதிதிராவிட மக்களுக்குச் சொந்தமான நிலங்களை, அதாவது அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களை, மற்றவர்கள் வாங்கக்கூடாது என்று ஒரு சட்டம் இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், திருச் சந்தூர் தேர்தலுக்கு முந்தியது பெரியகுளம். அந்தப் பெரியகுளம் தொகுதியிலே இருக்கக்கூடிய வடகரை, தென்கரை, புதுக்கோட்டை என்று சொல்லக்கூடிய பகுதிகளில் சுமார் 700 ஏக்கர் பஞ்சமர் நிலங்கள் இன்று மற்றவர்களால் பயன்படுத்தப் படுகின்றன. பஞ்சமர் என்று சொன்னாலே, ஆதிதிராவிட மக்கள் என்று பொருள். அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட 700 ஏக்கர் நிலம், இதுவரையில் அந்த மக்களுக்கு கொடுக்கப்படவே இல்லை. அதை அங்கேயிருக்கிற பெரியதனக்காரர்கள் தங்களுக்குச் சொந்தமாக எடுத்துக்கொண்டு பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களும், வெகுநாளாக பட்டா கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அது இன்னும் கொடுக்கப்படவில்லை.

நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது நீங்கள் நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், அதற்கு மத்திய அரசினர் அனுமதி தர மறுக்கிறார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். அது ஒருபுறம் இருந் தாலும், இப்படி ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தனை மற்றவர்கள் அபகரித்து வருவதைத் தடுப்பதற்காவது நடவடிக்கை எடுக்கலாம் அல்லவா என்றுதான் கேட்கவிரும்பு கிறேன்? ஆகவே அந்த நிலங்களைப் பெற்று மறுபடியும் அந்த மக்களின் கையிலே கொடுத்து அதிலே அவர்கள் பயிர் செய்து பிழைக்கக்கூடிய அளவுக்கு ஒரு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் 1958ல்—1958 என்று சொன்னால் மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் இளைய பெருமாள் அவர்கள் அப்போது காங்கிரஸ் ஆட்சி இருந்தது என்று சொல்வார்கள். அவர்களுடைய ஆட்சிக்காலம் போய், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்து, அவர்களுடைய ஆட்சியும் போய் இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டு கொண்டிருக் கிறது. ஆனால் அந்த 1958ல் சென்னை மாநகரத்தின் அருகில் சிவஷண்முகபுரம் என்ற ஒரு இடத்தில் ஆதிதிராவிட மக்களுக் காக இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் இன்றுவரையில் அந்த நிலங்களுக்குப் பட்டா கொடுக்கப்படவில்லை, அவர்களுக்கு அது சொந்தம் ஆக்கப்படவில்லை. ஆகவே தற்போது அங்கே உயிரோடு இருக்கக்கூடிய, ஆதிதிராவிட மக்களுக்காவது, அவர்களுடைய தொகையை கணக்கிட்டுப்பார்த்து, அந்த நிலங் களை பட்டா செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் காள்கிறேன்.

அதேபோல செங்கற்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் தொகுதியிலும், அதன் சுற்றுப்புறங்களிலும் பலலாயிரக்கணக் கான ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். அந்தமக்கள்



1983 மார்ச் 31] [திரு மு. அப்பாதுரை]

நகரத்திற்கு வரவேண்டும் என்றால், பாலாற்றைக் கடந்துதான் வரவேண்டும். அப்படி வருவதற்கு அவர்களுக்குச் சரியான பாதை வசதி இல்லை.— இங்கே இந்திரா நகர், காமராசர் நகர் அல்லது அண்ணா நகர் பக்கத்திலே புறநகர்ப்பகுதி உருவாகிறது என்றால், 3, 4 வீடுகள் கட்டி முடிப்பதற்குள், அங்கே கார்களே போகக் கூடிய அளவுக்குப் பாதைகள் போடப்பட்டு விடுகின்றன, மின்சார வசதிகள் வண்ண விளக்குகளின் அலங்காரம் போன்றவை வந்து விடுகின்றன.—ஆனால், ஆயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய அந்தப்பகுதியில் அவர்களுக்கு போவதற்கும் வருவதற்கும் சரியான பாதையே இல்லை. அந்தக் குறைகளை எல்லாம் போக்கி, அந்தப் பகுதியிலே வசிக்கின்ற மக்களுக்கு பாதை வசதி மட்டுமல்லாது, குடிதண்ணீர் வசதி போன்ற அத்தியாவசிய வசதிகள் அனைத்தும் செய்துதர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஸ்ரீவில்லிபுரம் என்னும் இடத்தில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வீட்டுக்கு எதிரில 12 ஆண்டுக்காலமாக வீட்டுமனைகள் அங்குள்ள பழங்குடி மக்களுக்கு வழங்கபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவை இன்னும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்த நிலையினைப்போக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன. (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில், மிகவும் பின்தங்கிய தொகுதி, தொடர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்றே ஒதுக்கப்பட்ட தொகுதியாக அது இருந்து வருகிறது. அங்கே வாழக்கூடிய மக்கள் மிகமிக தாழ்த்தப் பட்ட நிலையிலே உள்ள ஆதிதிராவிட மக்கள். என்னுடைய தொகுதியில், துரிபாஸ்பட்டி, பணிக்கர் குளம், சாமிநத்தம், புதியப்புத்தூர், முள்ளுப்பட்டி, கவணகிரி, வெண்ணாரம், பசுவந்தனை, வடக்கு வண்டானம், கட்டாரங்குளம் குளம், செட்டிகுறிச்சி, கே. துரைசாமிபுரம், கடம்பூர், ஒட்டமாகுளம் இளவேலங் கால் ஆகிய பகுதிகளில், 10, 20க்கு மேற்பட்ட கிராமங்களில ஆதிதிராவிட பழங்குடி மக்கள் அதிக அளவில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைகளே கிடையாது. ஆகவே, அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டாக்களை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குவதோடு இங்கே சத்துணவுத் திட்டத் தைப்பற்றி அதிகமாகச் சொன்னார்கள்(மணியடிக்கப் பெற்றது.)

திரு. ஏ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே எனக்கு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள மானிய கோரிக்கை மீது பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை துவக்குகிறேன்.

தமிழகத்தில் ஆதிதிராவிட மக்கள் சுமார் 88.86 லட்சம் பேர்வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பொருளா தாரத்தில் முன்னேற்றம் அடையச் செய்ய, புரட்சித் தலைவர் அரசு பல நல்ல திட்டங்களை உருவாக்கி இன்று செயல்படுத்தி

வருவதைப் பாராட்டுகிறேன் ஆதிதிராவிட மக்களின் குழந்தைகள் கல்வி அறிவு பெறவேண்டுமென்ற நல்லெண்ணத்தில் புரட்சித் தலைவர் அரசு 1983-84 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கத்தில் சுமார் ரூபாய் 2378.27 லட்சம் ஒதுக்கி, அவர்களுடைய கல்வித்தரத்தை சிறப்பாகச் செயலாற்ற உதவி வருவதை நான் பாராட்டுகிறேன்.

முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிட பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு ஒவ்வொருவருக்கு ஒருவேளை உணவு 22 காசு என்று வழங்கியதை, உயர்த்தி 45 காசு ஆக ஆக்கியதன் மூலம் குழந்தைகள் நல்ல முறையில் சத்துணவு பெறுவதற்கு வழிவகை செய்த மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்கள் விவசாயத்தில் முன்னேற அவர்கள் தங்களுடைய நிலத்தில் பாசன கிணறு வெட்டி தண்ணீர் எடுக்க மூன்றில் ஒருபாகத்தை மானியமாகவும், மீதி மூன்றில் இரண்டு பாகத்தை, நிலவள வங்கி, தேசிய வங்கிகளின் மூலமாகவும் கடனாகப் பெற்று விவசாயத் துறையில் நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை பாராட்டுகிறேன்.

ஆதிதிராவிடரின் மாணவர்கள் பெரிய பணிகளுக்குச் செல்வதற்காக தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைக்குழு நடத்தும் தேர்விற்குப் பயிற்சியளித்தல் திட்டத்தின் மூலம் பல ஆதி திராவிடரின் மாணவர்கள் நல்ல பெரிய வேலைக்குச் செல்ல ஏற்பாடு செய்துள்ளதைப் பாராட்டுகிறேன்.

ஆதி திராவிட மாணவர்கள், ஆயுதப்படை பிரிவு, காவல் துறைப் பணிகளில் சேர நல்ல உடல்கட்டு, அறிவுக்கூர்மை இவற்றைக் கொண்டவர்களாக, நல்ல திறமை உள்ளவர்களாக உருவாக ஆதிதிராவிட நலத்துறையின் மூலம் பயிற்சிஅளிப்பதை வரவேற்கின்றேன்.

ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் தங்களுடைய தேவைக்கு உதவும் வகையில் திருமணக்கூடம், சமுதாய நலக் கூடம் போன்றவற்றை ஏற்படுத்தி அவர்களுடைய நிகழ்ச்சிகளுக்கு உதவிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட ஏழைகளின் இறுதிச் சடங்குகளுக்கு உதவித் தொகை அளிக்கும் திட்டத்தைச் செம்மையாகச் செயல்படுத்தி வருவதைப் பாராட்டுகிறேன்.

ஆதி திராவிட மக்களுக்கு கிராமப்புறங்களில் குடிநீர் வழங்க முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு மானிய விலையில் மாட்டுத் தீவனம் கொடுக்கவேண்டும். என்னுடைய தொகுதியான தாராபுரத்தில் ஆதி திராவிட மாணவருக்குத் தங்கும் விடுதி ஒன்று சுமார் ரூ.3 இலட்சம் செலவில் ஏற்படுத்திக் கொடுத்த புரட்சித்தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



என்னுடைய தொகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு வீட்டுமனைப்பட்டா நிலம் இல்லாத அனைவருக்கும் விரைவாக வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். என்னுடைய தொகுதியில் நாட்டுகல் பாளையம், தளவாய் பட்டினம், தேவாநல்லூர், பொன்னாபுரம் வடதாரை, உப்பத்தார்பாளையம், புத்தூர், நரணாபுரம், அலங்கியம், மனக்கடவு, மங்களாம்பாளையம், வீராஜிமங்கலம், செல்லாம்பாளையம், காங்கியம் பாளையம், பஞ்சப்பட்டி ஆகிய இடங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு ஆதிதிராவிட வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுகிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு 50 சதவீத மானியத்துடன் கறவை மாடுகள் வாங்கக் கடன் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்து கொடுத்திருப்பது அவர்களுடைய வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துகின்ற சிறப்புமிக்க திட்டமாகும். இதனால் அவர்கள் பொருளாதாரத்தில் உயர்வினை அடைய வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் இந்த அரசு செய்த சாதனைகளைப் பாராட்டுகிறேன்.

புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில்தான் அதிகமான எண்ணிக்கையில் ஆதிதிராவிட மாணவர்கள் மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகியவற்றில் இடம் பெற்றுள்ளார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆட்சியில்தான் ஆதிதிராவிட மக்களுக்கு சுகாதார வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு வீடுகட்டித் தருவதில் ரூ.3,000 என்று இருந்ததை ரூபாய் 6,000 என்று உயர்த்தித் தந்திருப்பதற்காக பாராட்டுகிறேன். எனக்குப் பேச வாய்ப்புத் தந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.28 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

(அ) வரவு-செலவுத்திட்டம் 1983-84 வாக்கெடுப்பு—தொடர்ச்சி கோரிக்கை எண்.31—ஆதிதிராவிடர் நலன்

(ஆ) கோரிக்கை எண். 44—எழுதுபொருள் அச்சுத்துறை.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு வசிக்கிற ஆதிதிராவிடர் மக்களுடைய நலன்கள் குறித்த மானியக் கோரிக்கை மீது பேசுகிற வாய்ப்பினை அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த

மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த சமுதாய மக்களுடைய பிரச்னைகள் குறித்து அந்த மக்களுடைய நல்வாழ்விற்காக அமைச்சர் அவர்கள் தீட்டியிருக்கிற திட்டங்கள் குறித்து குடியரசுக் கட்சியின் சார்பாக அவர்களுக்கு முதற்கண் என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். வளர்ந்து வருகிற சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்னைகள் எந்தளவிற்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்று எண்ணிப்பார்த்து அவர்களின் வருங்கால நல்வாழ்விற்காக, அரசியல், சமுதாய, பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையை வகுத்திருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை மாத்திரம் இந்த நேரத்தில் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இந்தச் சட்டமன்றம் தோன்றிய நாட்களிலிருந்து, இன்றைய வரையிலும் ஆதிதிராவிட மக்களுக்காகப் போடப்படுகின்ற இந்த மானியக் கோரிக்கை அத்தனையும் ஒரேவிதமாக போடப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு ஆடுமாடுகள் வாங்கக்கடன் கொடுத்திருப்பது பற்றியும், கோழி வளர்ப்பிற்காக கடன் கொடுத்திருப்பது பற்றியும், சிறு கடைகள் வைத்துக்கொள்வதற்காக கொடுக்கப்படும் கடன்கள் பற்றியும், இப்படிப்பட்ட விதத்திலே பல்லாண்டுக் காலமாக இந்த மானிய கோரிக்கைகள் இந்தச் சட்டமன்றத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னாலும், இந்த மக்கள் சமுதாயத்திலே எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் அல்லது எந்த அளவுக்கு மாறியிருக்கிறார்கள் என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கத் தவறி விட்டோம் என்ற ஐயப்பாடு என்னுடைய மனதிலேஎழுகிறது. அதனால் தான் எவ்வளவோ திட்டங்கள் தீட்டினாலும் அந்தமக்களை குறைந்த பட்ச அளவாவது முன்னேற்ற முடியாத நிலை இன்றைக்கும் இந்த நாட்டிலே இருக்கிறது. ஆதலால் இந்த அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் கொண்டு வர விரும்புவது, இந்த மக்களுக்காக போடப்படும் திட்டங்களை முழுமையாக நாம் மாற்றியாக வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் விடுப்பது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இவர்கள் பொருளாதாரத்திலே வளம் பெறவேண்டும் என்பதற்காக கோடிக்கணக்கான ரூபாயை ஒதுக்கி, இந்த மக்கள் முன்னேற வேண்டுமென்பதற்காக எத்தகைய திட்டங்களைப் போட்டாலும், இன்றையதினம் இந்த மக்களை முன்னேற்ற முடியவில்லையே என்ற ஒரு சலிப்புத்தன்மையை நாம் அடைய முடிகிறதே தவிர, அந்த மக்களை முன்னேற்றி விட்டோம் என்ற தன்மையை நாம் இந்தியா முழுவதும் அடைய முடியவில்லை என்ற நிலைதான் இருக்கிறது. இதற்கு ஒரு பெரிய, தலையாய காரணமாக விளங்குவது, இந்தச் சமுதாயம் ஒரு பாதிக்கப்பட்ட சமுதாயமாக இருக்கிறது என்று ஒரு மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்திய பேரறிஞர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் அன்றே சொல்லியிருக்கிறார்கள்.



'We will have political equality in 1950 and inequality In social and economical life. We must remove this contradiction at the earliest moment or else those who suffer from social encqualltise will break the structure of political democracy.

திட்டங்கள் அந்த மக்களுடைய நன்மைக்காக போடப்பட்ட என்று சொன்னார்கள். பல கோடிக்கணக்கில் போடப்பட்ட திட்டங்களுக்குச் செலவிடப்படுகின்றது. ஆனால், அப்படி கட்டப்படுகின்ற பொருளாதார கோட்டையை, அந்த மக்களுடைய சமுதாய ஏற்றத்தாழ்வுகள் என்கின்ற மிகப் பெரிய ஆயுதம் தகர்த்து சுக்கு நூறாக்கி விடுகிறது. எனவே, இந்த மக்களுடையபொருளாதார முன்னேற்றத்தைக்கருத்தில் கொண்டு இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்காக இந்த அரசாங்கமும், அரசும் அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும், என்னைப் பொறுத்தவரையில், பொருளாதார முன்னேற்றத்தை, பணம் வைத்துக் கொண்டு சமுதாயத்தை மாற்றியமைப்பதற்கு, அதன் மறுமலர்ச்சிக்கு இந்திய அரசும், தமிழக அரசும் திட்டங்கள் தீட்டியாக வேண்டும். இல்லையென்றால், பல்லாண்டுகளுக்கு முன்பு இருந்த அந்த மக்களுடைய நிலைதான் இன்றைக்கும் இன்னும் 10 ஆண்டுகளுக்குப் பிறகும், 100 ஆண்டுகளுக்குப் பிறகும் இருக்கும் என்ற தீர்க்கதரிசமான உண்மையை அன்றே அண்ணல் அம்பேத்கார் எடுத்துரைத்தார். அது உண்மையாக்கப்பட்டு, இன்றைக்கும் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவேதான், இந்த மக்களுடைய சமுதாய முன்னேற்றத்தைக் கணக்கிலே கொள்ளவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சில நண்பர்கள் வாதிட முடியும். இன்றைக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் கேவலமாக நடத்தப்படுவதற்குக் காரணம், அவர்களிடம் பொருளாதாரம் இல்லை; அவர்கள் நிலம் இல்லை; அவர்களிடம் பொருளாதாரம் இல்லை. அவர்களிடையே வியாபாரத்தில் ஈடுபட முடியவில்லை. அவர்களுக்கு பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவந்து, இந்த நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களுடைய நிலையை மேம்பாடடையச் ஆதிக்கத்தை ஒழித்து, அவர்களிடையே உள்ள ஜாதி வேற்றுமையை செய்தால், அவர்களிடையே உள்ள ஜாதி வேற்றுமையை ஒழித்துவிட முடியும் என்று சிலர் வாதிட முடியும். ஆனால், அப்படிப்பட்ட பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தி, ஒரு சமுதாய மறுமலர்ச்சியை உருவாக்கிய பின்னாலும், ஜாதி சமுதாயக் கொடுமை எந்த நேரத்திலும் இருக்குமே தவிர, எந்த நேரத்திலும் ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை பொருளாதார முறையில் உருவாக்கி விட முடியாது. இதிலே பலர் முயற்சித்து தோல்வியைக் கண்டிருக்கிறார்கள், வேண்டுமென்றால், வெளி நாடுகளில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரையில், ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க முடியாது. இந்தியத் திருநாட்டிலே, இப்பேர்ப்பட்ட ஒரு சமுதாய முன்னேற்றம், பொருளாதாரம் மூலம் வந்துவிட முடியாது என்ற உண்மையை இன்னும் பல பேர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள். பலர் அதிலே தோல்விகண்ட பின்னரும், அதை ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறார்கள்.

எனவே அரசு இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்கு சமுதாய மறுமலர்ச்சிக்கு சமுதாய பாதுகாப்பிற்கு திட்டங்களை தீட்டியாகவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு கொள்வது என்னுடையகடமையாகும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாலை 4-10)

எந்த அளவுக்கு ஜாதி மத பேத நிர்வாகத்தை ஒழிக்க முடியும் அல்லது ஒரு சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதற்கு என்னவெல்லாம் தடையாக இருக்கின்றன என்று எண்ணிப்பார்த்து திட்டம் வகுக்கவேண்டும். வெறுமனே இவர்களுக்கு ஆடு வாங்கித் தருவதிலும், மாடு வளர்ப்பதற்கு கடன் தருவதிலேயும், சிறு கடைகள் வைப்பதற்குக் கடன் தருவதிலேயும் இந்த மக்கள் மறுமலர்ச்சி பெற்றுவிடமுடியுமா என்பதை எண்ணிப்பார்த்து எது இவர்களுக்குத் தடையாக இருக்கிறது என்பதை ஆராய்ந்து அதைக் விளக்குவதற்கு உண்டான திட்டத்தை தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று இந்த மக்களை முன்னேற விடாமல் தடுத்துக்கொண்டு இருப்பது ஜாதியம். இந்த மக்களுடைய முன்னேற்றத்திற்குப் பெரும் இக்கட்டாக இருப்பது ஜாதியம். அந்த ஜாதியத்தை ஒழிப்பதற்குத் திட்டம் தீட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமுதாயத்திலே மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு மிகப்பெரிய திட்டங்களை தீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்பேர்ப்பட்ட திட்டங்களுக்கு இடையூறாக இருப்பது எதுவாக இருந்தாலும் சரி அதை கண்டுஅறிந்து அதை நீக்க வேண்டும். இன்று அந்த மக்களை சமுதாயத்தல் முன்னேற விடாமல் தடுப்பது பல ஜாதியைச் சேர்ந்தவர்கள் சமுதாயத்தின் பெயரால் அமைப்புகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள், இன்றைக்கு மிகப்பெரிய ஆச்சரியம் பிராமணர்கள் கூட அவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இது உலகத்திலேயே மிகப்பெரிய அச்சரியமான விவகாரம். ஆக இன்றைக்கு ஒவ்வொரு ஜாதியைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய ஜாதியை வலுப்படுத்திக்கொள்வதற்காக உரிமைகளைக் கேட்பதற்காக பிராமணர்கள் உட்பட அனைவரும் ஜாதியின் பெயரால் சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வைத்துக் கொள்வது மாத்திரம் பிரச்சனை அல்ல. அந்தச் சங்கங்கள் இந்தச் சமுதாய மக்களுடைய சமுதாய முன்னேற்றங்களை கெடுப்பதற்கும் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதை ஒடுக்குவதற்கும் அவர்கள் சேர்ந்து இருக்கிறார்கள் என்று எண்ணிப்பார்க்கும் போது தான் வருத்தமாக இருக்கிறது. எனவே அப்பேர்ப்பட்ட அமைப்புகளை அரசாங்கம் சட்டம் போட்டு தடை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். என்ன என்ன பிரச்சனைகளுக்காக ஜாதி கலவரங்கள் உண்டாகின்றன? என்ன என்ன பிரச்சனை களுக்காக ஜாதி கலவரங்கள் கிராமங்களிலே கட்டு அவிழ்த்து விடப்படுகின்றன? குடிநீர் இல்லாத காரணத்தால் அங்கே மேல் ஜாதிக்காரன். இருக்கும் பகுதியில் தண்ணீர் எடுக்கச் செல்கிறான் அப்போது ஜாதி சண்டை வருகிறது. கூட்டுறவு கடைகள் காலனியில் இல்லாததால் கடைக்கு சரக்கு வாங்க செல்கிற நேரத்தில் ஜாதி சண்டை வருகிறது. பள்ளிக்



கூடங்கள் இங்கே இல்லாததால் அங்கே சென்று படிக்கின்ற நேரத்தில் வீண்புக்காவது சண்டை வந்து விடுகிறது. இப்பேர்ப் பட்ட ஜாதி கலவரத்திற்கு காரணம் இருக்கின்ற இந்த மூலக் கூறுகளை ஆராய்ந்து காலனிகளில் பள்ளி கூடங்களை வைக்க வேண்டும், கூட்டுறவு கடைகளை வைக்கவேண்டும். தாழ்த்தப் பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் குடிநீரை முழுமையாக தன்னிறைவு ஆக்கித் தரவேண்டும். இதற்கு எல்லாம் திட்டங்களை தீட்டவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் சொல்வ தால் இவர்கள் மாத்திரம் தனியாக பிரிந்து கொள்கிறார்கள் என்று கூட சிலபேர் என்னைக் கேட்கக்கூடும். இரண்டு பேரும் ஒன்றாக இன்றைக்குத் தண்ணீர் எடுக்கக்கூடிய ஊர்களில் சமுதாயம் பூத்துக்குலுங்குகிறதா அதையாவது எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் இருக்கிறபோது, இந்த மக்கள் போராடுவதற்குத் யாரா இல்லாத மக்கள். போராட்டத் திற்கு தன்னை தயார்படுத்திக் கொள்ள முடியாதநிலை இல்லாத மக்கள். ஆகவே தான் இவர்களுக்குச் சமுதாய விடுதலை வேண்டும் என்று சொன்னால் இவர்களுக்கு இருக்கின்ற அந்த இக்கட்டுகளை, முரண்பாடுகளை அந்த சமுதாய கட்டுப் பாடுகளை தீர்க்கின்ற வகையிலே அப்பேர்ப்பட்ட திட்டங்களைச் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்கு உடனடியாகக் கொண்டு செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்த மக்கள் கல்வியின் மூலம் தான் மிகப் பரிய விடுதலையைப் பெறமுடியும் என்ற ஒரு ஆணித்தரமான முடிவு இருக்கிறது. வேறு எந்த சக்தியாலும் இந்த மக்கள் விடுதலையை பெறமுடியாது. "Education is the only weapon to get rid of slavery அடிமைத்தனத்திலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் விடுபடுவதற்கு கல்வி ஒன்று தான் மூலமான ஆயுதம். மிகப்பெரிய ஆயுதம். அந்தஆயுதத்தைத் தாழ்த்தப்பட்ட மக்கள் கையில் கட்டாயமாக கொடுத்து ஆகவேண்டும். கல்வி இல்லை என்று சொன்னால் தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேற முடியாது உதாரணமாக ஒன்றைச் சொல்லவேண்டும். ஒரு தாசில்தார் தாழ்த்தப்பட்டவராக இருக்கிறார். அந்தத் தலுக்கா ஆபிஸில் வேலை செய்கின்ற பியூன் தாழ்த்தப்பட்டவராக இருக்கிறார். வரி வசூல் செய்வதற் காக தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தாசில்தார் மேல் ஜாதிக்காரர் வீட்டுக்குச் செல்கிறபோது அந்த மேல் ஜாதியைச் சேர்ந்தவர் அவருக்கு சேர் போட்டு, டீ கொடுத்து என்ன சார்பிறகு வரக்கூடாதா என்று சொல்லி அவரை உள்ளே அழைத்துச் செல்கிறார். அதாவது தாழ்த்தப்பட்ட வகுப்பைச்சார்ந்த தாசில் தார் உள்ளே போக முடிகிறது. அதே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பியூன் வெளியே தான் நிற்க முடிகிறது. ஆகையால் இந்த முன்னேற்றம் அரசு சட்டம் போடுவதால் வருவது கிடையாது. மிகப்பெரிய மேதைகள் சீர்திருத்தம் செய்வதால் வருவது கிடையாது. கல்வியின் மூலம் அந்த மிகப்பெரிய சமுதாய விடுதலையை, உரிமையை, சுதந்திரத்தை அந்த ஆதிதிராவிடன் அங்கே பெற்று இருக்கிறான். ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறுவதற்கு மிகப்பெரிய ஆயுதமாக விளங்குவது கல்வி அந்தக் கல்வி மாத்திரம் கட்டாயம் அந்த மக்களுக்குப் போய் சேருகிற வகையில் அந்த கல்வியை கொண்டுவர வேண்டும். இதை எண்ணித்தான் நம்முடைய பெரும் தலைவர் டாக்டர் அம்பேத்கார்

அவர்கள் தாம் சம்பாதித்த பல கோடி ரூபாயை கல்வி ஸ்தாபனத்திற்காக கொடுத்து இன்றைக்கு 56 கல்லூரிகள் கட்டி இந்த மக்களை வாழ வைத்திருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையிலே கல்விக்கு முக்கியத்துவம் தந்து அந்த மக்கள் கட்டாயம் கல்வி பெற வழிவகைகள் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்விக் கூடங்களை தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளிலே திறக்க வேண்டும். மொத்தம் 497 தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பள்ளிக்கூடங்களும் 138 மலைவாழ்மக்களுக்குப் பள்ளிக்கூடங்களும் வைத்திருக்கிறோம். இதிலே வருந்தத்தக்கது என்னவென்றால் எட்டே எட்டு தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்நிலைப் பள்ளிகள்தான் வைத்து இருக்கிறார்கள். இது விரிவாக்கப்பட வேண்டும். குறைந்த பட்சம் ஒரு தாலுகாவிற்கு 4,5 தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்தியாக வேண்டும். அது மட்டுமல்ல, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலேயும் விடுதிகள் கட்டாயம் அமைத்தாக வேண்டும். இதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டியாக வேண்டும். பள்ளிக்கூடத்தோடு விடுதியையும் கட்ட வேண்டும். இல்லையென்றால் பள்ளிக்கூடமே கட்டாதீர்கள். பள்ளிக்கூடத்தோடு விடுதியைக் கட்டுங்கள். பள்ளிக்கூடத்தை விட்டால் அவர்கள் விடுதிக்குத்தான் செல்லவேண்டும், விடுமுறை நாட்களில் மாத்திரம் வீட்டுக்குச் செல்லவேண்டும். இதற்கெல்லாம் நிதி ஆதாரங்கள் கிடைக்காது என்று அமைச்சர் அவர்கள் வருத்தப்பட்டுக் கொள்ளலாம். நான் தாழ்மையோடு ஒரு வேண்டுகோளை இந்த நேரத்திலே விடுக்கிறேன். அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்படுகிற விறகுக் கடைக்காக லோன், பெட்டிக் கடை லோன், சைக்கிள் கடை லோன் என்றெல்லாம் 125 ரூபாயில் இருந்து 1000 ரூபாய் வரையிலும் அவர்களுக்கு கடன் தருகிறார்கள். தாலுகாவாரியாக 5, 6 பேர்களுக்கு 50, 60 லட்சம் செலவு செய்கிறார்கள். தயவு செய்து கடனை நிறுத்திவிடுங்கள், தராதீர்கள். கடனை வாங்கியதாக ஒருவர்கூட கைதூக்கியதாக நமக்குத் தெரியவில்லை. இந்தத் திட்டத்திலே கடன்வாங்கியவர் எவரும் வறுமைக்கோட்டிலிருந்து தாண்டியதாகவும் நாம்கேள்விப்பட வில்லை. அந்தக் கடன்கள் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகப்போகிறது. அந்தக் கடன்களை தள்ளுபடி செய்யுங்கள். அந்தக் கடன்களை யாருக்கும் தராதீர்கள், அதிலே பணத்தை சேமியுங்கள், இதுபோன்று சில்லரையாக நாம் தருகிற கடன்களைத் தராமல் அதிகப்பணத்தை சேமித்து பள்ளிக்கூடத்தைக் கட்டுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மாத்திரம்மல்ல, இன்றைக்கு காந்தி பெயரால் ஸ்காலர்ஷிப் வைத்திருக்கிறார்கள், நினைவு பரிசுத் தொகையை வைத்திருக்கிறார்கள். அடுத்த நிதியாண்டிலிருந்து பட்டப் படிப்பிலே சிறந்த மார்க் வாங்குகிற மாநிலத்திலேயே சிறந்து விளங்குகிற ஒரு மாணவனுக்கும் மாணவிக்கும் பேரறிஞர் அம்பேத்கார் பெயரால் ஒரு நினைவுப் பரிசை வழங்கவேண்டும் என்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்,



பொருளாதார முன்னேற்றத்தைப் பொறுத்தவரையிலும் இன்றைக்கு எல்லா இடங்களிலும் கூட்டுறவு சொசைடிகள் மூலமாக ஆடுமாடுகள் வழங்கப்படுகின்றன. ஐ.ஆர்.டி.பி. மூலமாக மிகப் பெரும்பான்மையான ஆதிதிராவிட மக்கள் வருமானம் பெற்று இன்றைக்கு அவர்கள் வறுமைக்கோட்டை தாண்டிக் கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட உருப்படியான திட்டத்தின் மூலமாக அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற்றம் அடைகிற அளவுக்கு அந்தக் கடன்களை விஸ்தரிக்க வேண்டும். 25, 30 ஆடுகள். 4,5 கறவை மாடுகளை கொடுக்க சங்கம் என்ற அமைத்து இன்றைக்கு சப்ஸிடியை நாம் தந்தாலும் வங்கிகள் பணம் தர மறுக்கின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒவ்வொரு வங்கியிலும் தாலுகா வங்கியிலும், நகர வங்கியிலும் தாழ்ந்தப்பட்ட மக்களுக்கு என்று தனியாக ஒரு பண்ட் ஒதுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்கிறேன். அதை நம்பியாவது அந்த வங்கிகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கடன்கொடுக்க முன்வருவார்கள். தாட்கோ செய்யும் என்று அமைச்சர் சும்மா இருந்து விடக்கூடாது. அந்த தாட்கோ பல ஊர்களிலே அதைச் செய்வதில்லை, அமைச்சர் அவர்கள் செய்கிறார்கள், தாட்கோ செய்யும் என்று எண்ணிவிடாமல் அதற்கான பணத்தை மூலதனமாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்;

வீட்டு மனைகளைப்பொறுத்தவரையிலே இன்றைக்கு தமிழகத்தை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கிற மூல விவகாரமாகும் வீட்டுமனை விவகாரம். எல்லா கிராமங்களிலும் நாம் நில ஆர்ஜிதம் செய்கிறோம். எந்த இடத்திலேயும் சும்மா இருப்பதில்லை. இந்த வீட்டு மனை விவகாரத்திலே பல வழக்குகள் உச்ச நீதிமன்றத்திலே இருக்கின்றன, உயர் நீதி மன்றத்திற்கு சென்றிருக்கின்றன. அதனால் நில ஆர்ஜிதக் கொள்கையிலே நாம் மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். ஒன்று கட்டாயம் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டும். இல்லையென்றால் ஒவ்வொரு ஊரிலேயும் கணக்குப்பிள்ளைகள் மணியக்காரர்கள் தான் நாட்டின் ஜனாதிபதிகள் அவர்கள் சொன்னால்தான் ஒரு இடம் புறம்போக்கு அவர்கள் சொன்னால் ஒரு இடம்டிரை லேன்ட், அவர்கள் சொன்னால் ஒரு இடம் வெட்லேண்ட் என்ற நிலை இருக்கிறது. கிராமப் புறங்களிலே இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை கண்டறிந்து கட்டாய ஆர்ஜிதம் செய்து பட்டா செய்து கொடுக்க முயற்சி செய்யுங்கள். பிரச்சினை இல்லாத இடங்களைப் பார்த்து பட்டா கொடுக்க முயற்சி செய்யுங்கள். சில கிராமங்களிலே அடம்பிடிக்கிறார்கள் அந்த இடம்தான் வேண்டுமென்று. அதை மாற்றி அவர்களுக்குத் தேவையான இடத்தைக் கொடுப்பதற்கு முயற்சி செய்யவேண்டும். இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு வழி உண்டு.

(மாலை 4—20)

மூன்று, நான்கு கிராமங்களை ஒன்று சேர்த்து ஒரு இடத்தில் 5 அல்லது 10 எக்கர்களை ஆர்ஜிதம் செய்து அந்த இடங்களில் ஒரு புதிய குடியிருப்பை ஏற்படுத்தினால் கிராமம் கிராமமாக சென்று நிலம் எடுக்கிற தொல்லைகள் இருக்காது. இதன்

மூலமாக அந்த ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு சமுதாய பாதுகாப்பு கிடைக்கும். ஆயிரம் பேர், 2 ஆயிரம் பேர் இருந்தால் அந்த இடத்தில் சாதிக் கலவரங்கள் வருகின்றன. ஆனால் அதே நேரத்தில் 5 ஆயிரம் போகள் ஆதிதிராவிட மக்கள் இருந்தால் அவர்களுக்குச் சமுதாயப் பாதுகாப்பு வருகிறது. அதனால் இப்பேர்பட்ட சங்கடங்களை நீக்குவதற்குத் இந்த தனிக்குடியிருப்புகள் நிச்சயமாக உதவி செய்யும் மூன்று, நான்கு கிராமங்களை ஒருங்கிணைத்து ஒரு இடத்தில் வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து அதற்காக ஒரு லட்சம் ஆனாலும் அல்லது 5 லட்சம் ஆனாலும் சரி செலவு செய்து குடியிருப்புகளை ஏற்படுத்தவேண்டும். இன்றைக்கு எத்தனையோ திட்டங்களை வீட்டுவசதி வாரியம் மூலமும், கிராமப்புற வீட்டுவசதி வாரியம் மூலமும் செய்கிறோம். ஆகவே அமைச்சர் அவர்கள் தயவு செய்து எப்படியாவது இந்த மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கிற திட்டத்தை அமல்படுத்த வேண்டும். நாம் எந்த இடத்தில் காலை வைத்து நிலம் ஆர்ஜிதம் செய்து நிலத்தை எடுக்கிறோமோ அங்கே அவர்களைக் குடியேற்றுவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். 2 ஆயிரம் பேர்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்திருக்கிறோம் என்றால் 4 ஆயிரம் பேர்களுக்கு அந்த இடத்தில் வீடு கட்டிக்கொடுக்க முடியும். நீங்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 2 மாடி, 3 மாடி வீடுகளைக் கட்டினால் அந்த இடத்தில் மாடிக்கு 2 ஆயிரம் வீதமாக 6 ஆயிரம் பேர்களைச் குடியமர்த்த முடியும். 4 ஆயிரம் பேர்களுக்கு நிலமே தேவையில்லை. 2—வது, 3-வது மாடிகளில் அவர்களைக் குடியமர்த்த முடியும். அந்த ஆதிதிராவிட மக்களை மாடி வீடுகளில் குடியமர்த்திய பெருமை இந்த அரசுக்கு வரும். கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் கட்டாந்தரையில் தான் வீட்டுமனைத் தந்தார்கள்; வீடு கட்டிக் கொடுத்தார்கள். நாங்கள் 2-வது மாடியில் அந்த மக்களை குடியமர்த்தியிருக்கிறோம் என்ற பெருமையை அமைச்சர் அவர்கள் தேடிக்கொள்ளவேண்டும். இதனால் 4 ஆயிரம் பேர்களுக்கு வீடு கட்டும் பணத்தை மிச்சம் பண்ணலாம். நிலத்தை வாங்கும் பணத்தை மிச்சம் செய்யலாம். அந்தப் பணத்தையெல்லாம் இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் செலவு செய்து அவர்கள் வாழ்க்கை நிலையை மேம்படுத்த வேண்டும்; அதற்கு அமைச்சர் அவர்கள் கடுமையான சட்ட திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. எல்லா மாவட்டங்களிலும் இருந்துகொண்டிருக்கிற பிரச்னை. வடஆற்காடு மாவட்டத்தில் மிக அதிக அளவில் இருந்து கொண்டிருக்கிறது. இந்தப் பிரச்னை உயர்நீதிமன்றத்திற்கு போய் வழக்கு வாபஸ் ஆகி வந்திருக்கிற விவகாரம். தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற பெயரில் இன்றைக்குப் பலபேர் குரும்பா என்பதற்கு பதில் குரும்பன் என்பதைப் போலவும், போலிச் சான்றிதழ்களை வாங்கி வேலைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் வேலைக்கு செல்வதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இந்த மக்களுடைய வாய்ப்பை, கிடைக்கவேண்டிய கோட்டாவை பெற்றுக்கொண்டு இவர்கள் வயிற்றில் அடித்து அவர்கள்



வாழ்கிறார்களே என்ற எரிச்சலோடு சொல்கிறேன். அதேபோல ரெட்டிகள் எல்லாம் கொண்டாரெட்டி என்று சர்டிபிகேட் வாங்குகிறார்கள். அதைப்போல தான் குறவர்கள். இப்படி தாழ்த்தப்பட்ட மக்களுக்குக்கிடைக்கிறகொஞ்சநஞ்ச சலுகையைக் கூட சர்டிபிகேட் வாங்குவதில் மோசடி செய்து வாங்கிவிடுகிறார்கள். மலைவாழ் மக்கள் என்ற பெயரில் வாங்குகிறார்கள். இன்றைக்கு மலைவாழ் மக்களுக்கு ஆள் இல்லை. எந்த அதிகாரிகளானாலும் சரி மலைவாழ் மக்களிலே ஆள் இல்லையென்றால் பி.சி.க்கும், ஓ.சி க்கும் அந்த வேகன்சியை ஃபில்-அப் செய்வதற்கு எந்தச் சட்டம் அதிகாரம் வழங்குகிறது? ஆனால் அந்தச் சட்டம் இல்லாதபோது எஸ் டி. யில் இல்லையென்றால் ஓ.சி.-க்கு தருகிறார்கள், பி.சி -க்கு தருகிறார்கள். அந்த புண்ணியவான்களைக் கேட்கிறேன். எஸ்.டி.-யிலே ஆள் இல்லையென்றால் எஸ்.சி.க்கு கொடுத்துவிடுங்கள். இதைச் செய்வதற்கு அரசாங்க அதிகாரிகளுக்குச் சிந்தனை வருவதில்லை. அமைச்சர் அவர்கள் அவர்களுக்குக் கட்டாயமாக அறிவுரை அளிக்கவேண்டும். (மணியடிக்கப்பெற்றது.)

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

திரு. வெ. அரங்கராசன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1983—84-ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் முதலியோர் நலன் குறித்த மானியக்கோரிக்கைக்கு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ரூபாய் 44 கோடியே 45இலட்சத்து 68 ஆயிரம் வழங்கப்படவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் தான் ஆதிதிராவிடர் நலனுக்காக அதிக அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. காலையிலிருந்து பேசுகிறவர்கள் ஆதிதிராவிடர் நலனுக்காக இந்த அரசு எதையுமே செய்யவில்லை என்பதைப் போலவும், அதிக அளவில் நிதி ஒதுக்கம் என்பது வெறும் கண்துடைப்பு என்றும், மிகக் குறைந்த அளவிற்குத்தான் இந்த ஆதிதிராவிடர் நலத்துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டு காரியங்கள் ஆற்றப்பட்டு வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். 1972—73 ஆம் ஆண்டில் ரூ. 393.84 கோடி மொத்தத்தில் ஒதுக்கியதில், ரூ. 8.4 கோடி ஆதி திராவிடர் நலனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது—அதாவது, 2.14% தான் அன்றையதினம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப் போல, 1973—74-ல் ரூ. 8.14 கோடி, அதாவது மொத்தத்தில் 1.96 ஆகக் குறைந்திருக்கிறது. 1974-75—ஆம் ஆண்டு மேலும் குறைந்து 1.70 சதவீதமாக ஆகியிருக்கிறது. 1975-76 ஆம் ஆண்டில் 1.70 சதவீதம்; பழமொழி சொல்வார்களே, கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆனது போல 2.14 சதவீதத்திலிருந்து 1.70 சதவீதமாக, 1975-76 ஆம் ஆண்டில், 4 ஆண்டுகளில் குறைந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் 1977—78 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதற்குப்

பின்னால், 2.13 சதவீதமும், 1979-80-ஆம் ஆண்டு 2.11 சதவீதமும், 19.0—81 ஆம் ஆண்டு 1.74 சதவீதமும், 1981—82 ஆம் ஆண்டு 2.08 சதவீதமாகவும, சென்ற ஆண்டு 1983-84-ல் 3.13 சதவீதமாகவும் உயர்ந்திருக்கிறது. அந்த அளவுக்குத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் மிக அதிக அளவில் ஆதிதிராவிடர்கள்மீதும் பழங்குடியினர் மீதும் அக்கறை கொண்டு நிதி ஒதுக்கி, அந்த இலாகவைத் திறம்படச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக இதைச் சொல்கிறேன்.

மேலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பல வழிகளில் இன்றையதினம் ஆதிதிராவிடர் நலனில் அக்கறை கொண்டு, பல வழிகளில் அவர்களுக்கு வேலை வாய்ப்பையும், பலவற்றில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கின்ற வகையில், பல பணிகளைச் செய்திருக்கிறார்கள். இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கிற கிராம அதிகாரிகளின் பதவியை ஒழித்ததின் காரணமாக, ஆதி திராவிடர்கள் 18ம் வேலை பெறும் நிலை மயை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதைப் போல, இன்றையதினம் பஞ்சாயத்துக்கள், மற்றும் பஞ்சாயத்து யூனியன்களிலும் ஆதி திராவிடர்கள் சேர்மனாகவும் தலைவர்களாகவும் வர முடியாதிருக்கிற நிலைமையை மாற்றி, மக்கள் தேர்தல் மூலமாக ஆதி திராவிடர்கள் பஞ்சாயத்து சேர்மனாகவும் பஞ்சாயத்து தலைவர்களாகவும் வருகின்ற நிலைமையை சட்டபூர்வமாகக் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்றையதினம் நகராட்சிகளுக்கும் அந்த நிலைமையை உருவாக்கி, ஆதி திராவிட மக்களும் பழங்குடி மக்களும் பயன் அடைகின்ற வகையில் சட்டத்தைத் திருத்த இருப்பதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக் கிறார்கள்.

மேலும், இன்றையதினம் வேலை வாய்ப்பு அனைத்துத் துறைகளிலும் 18% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இருக்க வேண்டுமென்ற முறையில் தமிழக முதல்வர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், 1982—83—ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு விரிவாக்க அதிகாரி என்ற முறையில் நியமித்து, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற ஆதி திராவிட மக்கள் பலன் பெறுகின்ற வகையில், அவர்களுக்கு உதவி செய்வதற்காக புரட்சித் தலைவருடைய அரசு விரிவாக்க அதிகாரிகளை நியமித்திருக்கிறது.

மேலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் கிட்டத்தட்ட, 50 சதவீதத்தை, கல்வித் துறையில், அவர்கள் முன்னேறுவதற்காக ஒதுக்கி மிக நல்ல முறையிலே அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.



மேலும், 1980—81 ஆம் ஆண்டு காந்தியடிகளுடைய நினைவு படிப்பு உதவித் தொகையை உருவாக்கி, ஒவ்வொரு மாவட்டத் திலும் மேல்நிலைப் பள்ளியில் பயில்கின்ற—அதிக மதிப்பெண்ணைப் பெறுகின்ற ஒரு மாணவன், ஒரு மாணவிக்கு முதலாவது ஆண்டாக இருந்தால் ரூ. 1.500—ம் அதற்குப் பின்னால் வருகின்ற ஆண்டுக்கு ரூ. 1,000மும் பரிசுத்தொகையைப் பெறுகின்ற நிலையை உருவாக்கி. அவர்களுக்கு நிதி கொடுத்துக் கொண்டி ருக்கிறார்கள். மேலும், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக, ஆதி திராவிட மக்களுக்குப் பலன் கிடைக்கின்ற வகையில், அடிப்படை வசதி களைச் செய்வதற்காக, அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அடிப்படை வசதியான குடிநீர் வசதி, பள்ளிக் கட்டிடங்கள், இடுகாட்டுச் சாலைகள், பாலங்கள் ஆகியவற்றிற்கு 1980-81 ஆம் ஆண்டு ரூ. 66.23 இலட்சமும், 1981— 82 ஆம் ஆண்டு ரூ. 88.47 இலட்சமும், 1982—83—ஆம் ஆண்டு ரூ. 75 இலட்சமும் ஒதுக்கி ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற இடங்களில் சாலை வசதிகளையும், குடிநீர் வசதிகளையும் அளித்து பள்ளிக் கூடங்களையும் இந்த அரசு நல்ல முறையில் கட்டிக் கொடுத்திருக் கிறார்கள். அதைப்போல கல்வி நிறுவனங்களில் மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, கலைக் கல்லூரி ஆகியவற்றில் நாடு சுதந்திரம் அடைந்து 25 ஆண்டுகாலமாக, 1971—72 ஆம் ஆண்டு வரை 5.83 சதவீதம் ஆதி திராவிட மக்களும் பழங்குடி யினரும் கல்வி பெற்றிருக்கிறார்கள், ஆனால், புரட்சித் தலை வரவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 1980—81 ஆம் ஆண்டு வரைகிட்டத்தட்ட நான்காண்டுக் காலத்திற்குள்ளாக அவர்க ளுடைய பள்ளிகளில் பயில்வோர்களின் எண்ணிக்கை 21 சத வீதமாக ஆகியிருக்கின்றன.

(மாலை 4—30)

பொறியியல் கல்லூரிகளில், சுதந்திரம் அடைந்து 25 ஆண்டு காலத்திற்குப் பிறகு 4.37 சதவீதம் மக்களே ஆதி திராவிட மக்கள் பயின்று வந்திருக்கிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர வர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு, நான்காண்டுக் காலத் திற்குள்ளாக 8.6 சதவீதமாக அவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை மிகப் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளுக்கு, எம்.பி.பி.எஸ். படிப்பிற்காக ஆறு இடங்களை ஒதுக்கி நன்முறையில் பயில்வதற்காக 1979—80 ஆம் ஆண்டு முதல் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கு முன்பிருந்த ஆட்சிக் காலத்தில் ஆதி திராவிடர் நலன்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகை ஆண்டுக் கடைசியில் அந்த நிதியை சரண்டர் செய்யும் நிலைமை நீண்டகாலமாக இருந்தது. ஆனால் புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு ஒதுக்கிய நிதி முழுவதையும் செலவு செய்து அதிக நிதிகளை ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியின ருக்கும் செலவு செய்யும் அளவிற்கு நிலைமைகளை உருவாக்கித் தந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அரசு வந்ததற்குப் பிறகு ஆதி திராவிடர்களுக்கு கால்னிகளைக் கட்டித் தரவில்லை என்று குறை கூறிக் கொண் டிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் கோவிந்த புரத்தில் இந்த ஆண்டு காலனி கட்டுவதற்காகப் பணிகள் துவங்கப்பட்டு, 40 காலனிகள் கட்டுகின்ற பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காகத் தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்களுக்கும், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரவர் களுக்கும் என்னுடைய நன்றியையும், தொகுதி மக்களின் சார்பாகவும். அந்தக் கிராம மக்களின் சார்பாகவும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியில் மலைவாழ் மக்களுக்காக பச்சை மலையில் தொடக்கப்பள்ளிகள் மட்டும்தான் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே இரண்டாண்டுக் காலமாக நடுநிலைப்பள்ளி தேவை என்று அந்தப் பகுதியிலுள்ள மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, பச்சைமலையில் டாப்செங்காட்டுப்பட்டியிலும், செம்புளிச்சம்பட்டியிலும் இரண்டு தொடக்கப்பள்ளிகளையும் நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தித் தருவதோடு, ஒரு உயர்நிலைப் பள்ளியையும் பச்சைமலையில் உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் செம்புளச்சாம்பட்டிக்கும், டாப்செங்காட்டுப் பட்டிக்கும் சரியான முறையில் சாலை வசதிகள் இல்லாமல் மண் சாலைகளாக இருக்கின்றன. ஆகவே, மிக விரைவில் சோபனபுரத் திலிருந்து டாப்செங்காட்டுப்பட்டிக்கும், செங்காட்டுப் பட்டி யிலிருந்து செம்புளிச்சாம்பட்டிக்கும், செம்புளிச்சாம்பட்டி யிலிருந்து டாப்செங்காட்டுப்பட்டிக்கும் இந்த ஆண்டு தார்ச் சாலை போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடி மக்களை மலைகளிலிருந்து தரைமட்டத்திலே இருக்கின்ற மக்களோடு தொடர்பு கொள்ளச் செய்து அவர்களுடைய பழக்க வழக்கங்களோடு பழக்கினால் அவர் களுடைய தரமும், பண்பும், பழக்க வழக்கங்களும் மாறி நம்மைப் போன்ற நிலைமைகள் உருவாகும் சூழ்நிலை ஏற்படும். எனவே, உப்பிலியாபுரத்தில் பழங்குடியினர் மாணவர் விடுதியை ஏற் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சை மலையை இந்த ஆண்டு சுற்றுலாத் தலமாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,





மலையிலே இருக்கின்ற மருத்துவ மனைகளுக்குக் கீழே யிருந்து கிட்டத்தட்ட இருபது கிலோமீட்டர் தூரம் தினசரி சென்று வர இயலாத நிலைமை மருத்துவர்களுக்கு இருப்பதால், வாரத்திற்கு ஒரு முறைதான் மருத்துவர்கள் அங்கே சென்று வருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. எனவே, மருத்துவர்கள் தங்குவதற்கான இல்லங்களையும், செவிலியர்கள் தங்குவதற்கான இல்லங்களையும் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் 18 சதவீதம் இட ஒதுக்கீடு இருக்கிறது; இன்று 1.7 சதவீதம் பேர் பழங்குடி யினர் இருப்பதாக அறிக்கையிலே கொடுத்திருக்கிறீர்கள். எனவே, 2 முதல் 5 சதவீதம் இட ஒதுக்கீட்டை பழங்குடி யினருக்கு ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பச்சைமலை மலைவாழ் மக்களுக்கு வீட்டு மனைகளை ஒதுக்கித் தந்து அவர்களுக்கும் காலனி கட்டிக் கொடுக்கும் நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முருங்கப்பட்டியில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி கட்ட வேண்டும். அது பத்தாண்டுக் காலமாக பேஸ் மட்டத்திலே அப்படியே நின்று கொண்டிருக்கிறது. தமிழக முதல்வர் புரட்சித் தலைவரவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு ஒரு ஆண்டுக் காலத்திற்குள்ளாக மூன்று இலட்சம் ரூபாயில் அந்தக் கட்டிடம், மாணவர் விடுதிக்கான கட்டிடத்தை கட்டி முடித்த தற்காக புரட்சித் தலைவரவர்களும், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், துறையூர், கண்ணனூர் ஆகிய இடங்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கித் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த இரண்டு கிராமங்களுக்கும் பள்ளிக் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டுமென்று, இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஹரிஜன நல தாசில்தார்களின் பதவி வசீகரமான தாகவும், அந்தத் தகுதியை பெருமை உடைய பதவி என்று கருதும்படி அவர்களுடைய சம்பளத்தையும் உயர்த்தவேண்டு மென்றும், காலங்காலமாக ஹரிஜன தாசில்தார் பதவியைக் 'கண்டம்' செய்யப் பட்டவர்களுக்குத்தான் ஒதுக்குகின்ற நிலையை மாற்றி, புதிய அத்தியாயத்தை உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அனைத் திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஆதி திராவிட நலன் தாசில்தார்களுக்கு அந்தந்த தாலுக்காக்களிலே இருக்கின்ற, பஞ்சாயத்துக்களிலே, பஞ்சாயத்து யூனியன்களிலே

இருக்கின்ற ஜீப்களை வாரத்திற்கு ஒரு நாள் அல்லது மாதத் திற்கு 2,3 முறை கொடுத்து, தாலுக்காக்களிலே இருக்கின்ற அத்தனை கிராமங்களுக்கும் சென்று, மிக விரைவாக பணி யாற்றுவதற்கான நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயக் கூடங்களைவிட மிக முக்கியமானது, ஆதி திராவிடர் குடியிருக்கின்ற இடங்களில் குளங்கள் இல்லாத ஊரில் குளங்கள் வெட்டித் தர நில ஆர்ஜிதம் செய்யவேண்டு மென்றும், புறம்போக்கு நிலங்களிலே இருக்கின்ற இடங்களில், தற்சமயம் இருக்கின்ற வறட்சி நிதிகளிலிருந்து, ஆதிதிராவிடப் பெண்கள் குளிப்பதற்காக, குளியலறைகள் அல்லது ஒரு குளத்தை வெட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. மூர்த்தி அவர்கள் கூறுகின்ற பொழுது நில ஆர்ஜிதம் செய்வதிலிருந்த தகராறை மாற்றுவதற்காக பல மாடி கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கூறியதை நானும் வலியுறுத்தி, அதிக அளவில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு பதிலாக ஒரு ஏக்கரிலே பல மாடி கட்டிடங்கள் கட்டுவதன் மூலம் பல ஆதிதிராவிட மக்கள் பயன்பெறும் வகையில் இருக்கின்ற காரணத்தால், நில ஆர்ஜிதத்தைக் குறைப்பதற்கு வழிவகையாகவும் அமையும். அதற்குச் செலவிடப்படுகின்ற தொகையில் பல கட்டிடங்கள் ட்டுவதற்கான நிலைமையும் உருவாகின்ற காரணத்தால் பல மாடிக் கட்டிடங்கள் கட்டி, அதை ஆதிதிராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் தருவது பயனுள்ள வகையில் அமையும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவிற்கு பேச வாய்ப்பளித்தமாற்றுத் தலைவரவர்களுக்கு என் நன்றியைக் கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்திலுடைய மாற்றுத் தலைவரவர்களே, ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள் மேம் பாட்டிற்காக இங்கே இந்த மானியத்தில் ஏறத்தாழ 50.62 கோடி ரூபாய் என்று சொல்கின்ற அளவிற்கு ரூ. 50 கோடிக்கு மேலே தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தொகை போதுமானதா என்று கேட்டால், போதவில்லை என்பது தான் என்னுடைய முதல் பிரச்சினை. காரணம் 2,000 ஆண்டுகளாக கல்வித்துறையிலும், வேலைவாய்ப்புகளிலும், சமுதாயத்துறை யிலும், பொருளாதாரத்திலும், அழுத்தப்பட்டு, ஊனம் உற்ற வர்கள் இருப்பதுபோல, சமுதாயத்தில் ஊனமுற்றுள்ள இவர்கள் நிலை உயர்த்தப்படவேண்டும். எனவே இந்தத் தொகை போதுமானதாக இல்லை. எவ்வளவு அதிகமாக ஒதுக்க வேண்டுமோ அவ்வளவு அதிகமாக ஒதுக்கப்படவேண்டும். என்பதை நான் இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, ஆதிதிராவிட சமுதாயத்திற்கு கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தின்போது, இட ஒதுக்கீடும், வேலை வாய்ப்பும், கல்வி வாய்ப்பும் அளிக்கப்பட்டது. காங்கிரஸ் ஆட்சி காலத்திலே 16% ஆக இருந்ததை, கலைஞர் முதல்வராக



வந்ததற்குப் பிறகு 18% ஆக உயர்த்தினார். ஆதிதிராவிட மக்களுக்கு கலைஞர் அவர்கள் காலத்தில் 16 என்று இருந்ததை 18 ஆக உயர்த்தியதுபோல, நீங்களும் அதிகமான பிரதிநிதித்துவம் கொடுத்து, அதிகசதவிகிதமாக ஒதுக்கவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்கவிரும்புகிறேன். 18% இட ஒதுக்கீடு செய்கிறபொழுது அரசுப் பணிகளிலே அந்த இடங்களெல்லாம் முழுமையாக நிரப்பப்படுகிறதா? அதைப் போலவே அரசாங்கத்தில் பொது நிறுவனங்களிலே அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்படுகிறதா என்பதை இங்கே நாம் கண்காணிக்கவேண்டும். அப்படிக் கண்காணிப்பதற்கு ஒரு குழு அமைக்கவேண்டும் (குறுக்கீடு).

திரு. கோவைத்தம்பி: தலைவரவர்களே, ஒரு பயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு சிவசாமி அவர்கள் மலர் மாலை யோடு உள்ளே வந்திருக்கிறார். என்ன காரணம் என்று தெரிய வில்லை.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, எனக்கும் மலைக் கண்ணனுக்கும் இந்த தேர்தலில் ஓட்டு வித்தியாசம் கேஸ் நடந்து அந்த கேஸ்லே சுப்ரிம் கோர்ட் வரைக்கும் போய் மீண்டும் ஹைகோர்ட்டிலே எண்ண வேண்டுமென்றும், அதில் ஒரு ஓட்டு வித்தியாசத்திலே நான் ஜெயித்து இருக்கிறேன்,

(மாலை 4-40)

திரு. அ. ரகுமான்கான்: இந்த 18 பர்சென்ட் இட ஒதுக்கீடு அரசுப் பணிகளிலே நிரப்பப்படுகிறதா? பொது நிறுவனங்களில் நிரப்பப்படுகிறதா? என்பதை கண்காணிப்பதற்கு ஒரு குழு போடப்பட்டு அதிலே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உறுப்பினராக இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்தக் குழு எப்போது கூடியது? அந்தக் குழுவிலே நீங்கள் எல்லாம் கூடி இவைகளை ஆராய்ச்சி செய்தீர்கள்? இதையெல்லாம் ஆராய்ந் தீர்களா? அரிசன மக்களுக்காக மிகவும் பாடுபடுவதாக சொல்லுகின்ற மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் எப்போ தாவது அந்தக் குழுவிற்கு வந்திருக்கிறார்களா? பிரச்சினைகளைப் பற்றி பேசியிருக்கிறார்களா? 18 பர்சென்ட் என்று இருப்பது உண்மைதானா? அதைப்பற்றி ஏதாவது ரிப்போர்ட் உண்டா? இவைகளை எல்லாம் முதல் அமைச்சர் அவர்கள் சபைக்கு வரா விட்டாலும், அவர்களின் சார்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இங்கே பேசிய அருமை நண்பர் அரங்கராசன் அவர்கள் கூட பஞ்சாயத்துக்களில், பஞ்சாயத்து யூனியன்களில் அரிசன மக்களுக் காக இட ஒதுக்கீடு செய்து இருக்கிறோம், அதைப்போலவே நகராட்சிகளிலும் இட ஒதுக்கீடு செய்யப் போகிறோம், இது

அரிசன மக்கள் மீதுள்ள அக்கரையில்லையா என்று அவர்கள்
கேட்டார்கள், மாற்றுத்தலைவர் அவர்களே, நான் உங்கள்
மூலமாக நினைவுபடுத்த விரும்புகிறேன். இதை அரசியல்
லாபமாகக் கருதாமல் உண்மையான நோக்கத்தோடு செய்
திருப்பீர்களேயானால், திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஆனால்
நடைமுறையைப் பார்க்கும்போது, அரிசன மக்களே அல்லாத
ஊர் அண்ணா கிராமம், தென் ஆற்காடு மாவட்டத்தில்
உள்ளது. அந்த கிராமத்தை அரிசன மக்களின் தொகுதி என்று
அறிவித்திருக்கிறீர்களே, ஏன் உங்களிடத்திலே அதிகாரிகள்
இல்லையா? உங்களிடத்திலே அறிக்கைகள் இல்லையா? பிறகு
தெரிந்தும் அறிவிப்பதன் நோக்கம் என்ன? அரிசனங்களே
இல்லாத இடத்தை அரிசனத் தொகுதி என்று அறிவித்திருக்
கிறீர்கள். அதைப்போலவே மதுரை மாவட்டத்திலே, சிலையம்
பட்டி, கோட்டையூர்......

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,
அரிசனங்களே இல்லாத அண்ணா கிராமத்தை அரிசனங்களுக்
காக ஒதுக்கினார்கள் என்று அரசிடம் குற்றம் சாட்டுகிறார்கள்.
ஏன் அப்படி ஒதுக்கினால் அந்தக் கிராமம் தீட்டப்பட்டுவிடுமா
என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்.... ....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்):
மாண்புமிகு உறுப்பினர் அதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.
அரிசனங்களே இல்லாதபோது யார் போட்டி போட முடியும்.
அதைத் தாங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

திரு. ஜி. மூர்த்தி: அரிசனங்களே அல்லாதது அல்ல.
பர்செண்ட்டேஜ் இல்லாததுதான்.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்):
உறுப்பினர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.
அரிசனங்களே இல்லாத கிராமம் என்றுதான் சொல்கிறார்.

திரு. அ. ரகுமான்கான்: மாற்றுத் தலைவர் அவர்களே, இதே
சபையில் எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்
குற்றச்சாட்டை எழுப்பி முதல் அமைச்சர் அவர்கள்
ஆட்சித்தலைவருடைய அறிக்கையைத் தந்து மாவட்ட
அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் ஒப்புக்கொண்டு மாண்புமிகு
பகுதியை அதிகம் தெரிந்த சகோதரர் இளையபெருமாள் அந்தப்
களும் அந்த விவரத்தை விளக்கி, பிரச்னை அவர்
பிறகு, மூர்த்தி அவர்கள் ஏதோ சொர்க்கத்திலேயிருந்து முடிக்கப்பட்ட
போல் இங்கே அமர்ந்திருக்கிறார்கள். பரவாயில்லை. வந்தது
அரிஜன் கூட அங்கேயில்லை. இன்னொன்றையும் நான் ஆக ஒரு
படுத்த விரும்புகிறேன். மதுரை மாவட்டத்திலே நினைவு
கோட்டையூர் என்ற பகுதியில் 100-க்கு 99 சிலையம்பட்டி
மக்கள். ஆனால் என்ன தொகுதியாக அறிவித்து பேர்கள் அரிசன
தெரியுமா? அரிசனங்கள் அல்லாத தொகுதியாக இருக்கிறீர்கள்
யாக அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே குதிரையை பொதுத்தொகு வண்டிக்கு



முன்னாலேதான் பூட்டவேண்டும். ஆனால் நீங்களோ குதிரையைப்
வண்டிக்குப் பின்னாலே பூட்டுகிறீர்கள். எல்லாம் ஒரு மாற்றமாக
இருக்கிறது. எனவே உண்மையான பலன் இதன் மூலம்
கிடைக்கப் போவதில்லை. ஆகையினாலே என்ன நிலைமை?
பஞ்சாயத்துக்குத் தேர்தல் இல்லை. பஞ்சாயத்து யூனியனுக்குத்
தேர்தல் இல்லை. பழையபடி நகராட்சிக்கு ஒதுக்குகிறோம்
என்று சொல்கிறீர்கள். இதனால் சிக்கல் ஆரம்பமாகும்.
பழையபடி பொதுமக்கள் கோர்ட்டுக்கு போவதைத் தடுக்க
முடியாது. ஆக மாநகராட்சிக்குத் தேர்தல் இல்லை.
பஞ்சாயத்துக்களுக்கு, தேர்தல் இல்லை; இதற்கு அமைச்சர்
எதற்கு? அதிகாரிகள்தான் எதற்கு? ஆகவே இப்படிப்பட்ட
தவறுகள். அரிசன மக்களுக்கு இட ஒதுக்கீடு செய்கிறோம்
என்று ஒரு கோஷத்தை வைத்து மக்களை ஏமாற்றுகின்ற
தந்திரமாக இது பயன்படுகிறது, அந்த உள்நோக்கத்தான்
இது காட்டுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தாழ்த்தப்பட்டவர்களுக்கு சலுகைகள், இது
அவசியம் தேவை, ஆனால் ஆர்: எஸ். எஸ். போன்ற வகுப்பு
வாத இயக்கங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இதுபோன்ற
சலுகைகள் தேவையில்லை என்று வாதிட்டுக்கொண்டு இருக்
கிறார்கள். ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.
தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலே ஒரு இளையபெருமாள் போன்ற
வர்கள், ஒரு அம்பேத்கார் போன்றவர்கள், ஒரு பாலனைப்
போன்றவர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினராக, மற்ற தகுதிகள்
பெற்றவர்களாக உயர்ந்துவிடுவதாலே இன்றைக்கு சேற்றிலே
நெளிந்துகொண்டிருக்கக்கூடிய, வறுமையிலே உழன்று கொண்
டிருக்கிற அந்தச் சேரித் தோட்டத்திலே பூத்த கறுப்பு
ரோஜாக்கள் வாழ்க்கையின் பயனை சமூக அந்தஸ்தை அவர்கள்
பெற்றுவிட்டார்கள் என்று பொருள் அல்ல. மதிப்பிற்குரிய
ஜகஜீவன்ராம் அவர்கள் எல்லாப் பொறுப்புகளிலும் இருந்த
வர்கள் ஒரு தேசியத் தலைவர். அவர்கள் திறந்துவைத்த
சிலை, இன்றைக்கு இந்த விஞ்ஞான யுகத்திலே தீட்டுப்
பட்டு விட்டது என்ற அளவிற்கு தீண்டாமை வெறி இந்த
நாட்டிலே இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆக
இந்தச் சமுதாயம், அமுழ்த்தப்பட்ட சமுதாயம், ஜாதியின்
பெயரால், மதத்தின் பெயரால், சமூகத்தில் ஜாதிகள்
ஒழிக்கப்படுகின்ற வரைக்கும் அவர்களைத் தூக்கி விடுவதற்கு
இந்தச் சலுகைகள் அவசியம் இருந்தாக வேண்டும் என்பதிலே
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், நாங்கள்
தெளிவாக வலியுறுத்தி வருகிறோம். இன்னொன்றையும் நான்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கலைஞர் அவர்கள் ஆதி
திராவிடர்களுக்காக இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க
வேண்டுமென்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து அமுல்
படுத்தினார்கள். 1974–ஆம் ஆண்டு என்று கருதுகிறேன்.
ஒரே ஒரு ஆண்டிலே மட்டும் 10 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள்.
40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன; அப்போது ஜெயப்பிரகாஷ்
நாராயன் அவர்கள் தமிழ்நாட்டுக்கு வந்தார்கள்.

மகாத்மா காந்தியின் பாதை, இதுபோன்ற இலவச வீடுகள் ஆதித் திராவிடர்களுக்கு கட்டித் தரும் திட்டம் என்று சொன்னாாகள்.' ஜகஜீவன்ராம் அவர்கள் இங்கே வந்து சொன் னார்கள். என்னுடைய மாநிலத்தில் இதை அமல்படுத்த முடியுமா என்று எண்ணிப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். முன்னாள் ஜனாதிபதி கிரி அவர்கள் பாராட்டி இருக்கிறார்கள். ஆனால், ஆதிதிராவிடர் நலனுக்காக என்னையே அர்ப்பணிக் கிறேன் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர் இதைப் பற்றி என்ன சொன்னார் என்றால், த ழ்த்தப்பட்டவர் களுக்கு இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுத்தால், மற்றவர்கள் கேட்கமாட்டார்களா என்று கேட்டார்கள். இது என்ன நியாயம் என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்த ஆட்சியில் இலவச வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் கைவிடப்பட்டு விட்டது என்று நான் அறிகிறேன். இது ஆதித் திராவிட மக்களுக்கு இந்த அரசு செய்யும் நியாயமா என்பதை நான் கேட்க ஆசைப்படுகிறேன்,

ஆலயங்களில் அர்ச்சகர்களாக ஆதித்திராவிடர்கள் வரலாம் என்ற சட்டம் சுப்ரீம் கோர்ட்டிலே செல்லுபடியாகத்தக்கதல்ல என்று சொல்லப்பட்டு விட்டது. அதற்காக அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும். நிலைமைகள் இப்படி இருந்தபோதிலும் அந்த அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இங்கேயுள்ள மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சிகள் ஏதேனும் எடுத்து இருக்கிறார்களா என்பதை நான் இங்கே கேட்க ஆசைப்படுகிறேன். பாராளுமன்றத்திலேதான் அத்தகைய ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன் னாலும், அதற்கான முயற்சிகளை நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய நிலைமையில் இருப்பதால், அதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், தந்தை பெரியார் அவர்கள் கோயிலே வேண்டாம் என்று சொன்னார்கள், சாமியே கிடையாது என்று சொன்னார்கள், அதனால் ஆதித்திராவிடர்கள் அர்ச்சகர்களாக வரவேண்டுமா என்று கேட்டார்கள். இப்படி முன்னுக்குப் பின் முரணான வகையில் பல கருத்துக்களைச் சொல்லியிருக் கிறார்கள். நான் அதற்குள்ளே சென்று பிரச்னையைச் சிக்க லாக்கவிரும்பவில்லை. இந்த அரசு தீண்டாமை வாரம் கொண்டாடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. தீண்டாமை வாரம் எடுப்பதால் மட்டுமே தீண்டாமை ஒழிந்து விடுமா? இந்த அரசு சமபந்தி போஜனம் நடத்தியது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கூட சமபந்தி போஜனம் சாப்பிட்டதாக பத்திரிகைகளில் எல்லாம் வந்தன. அவர்களுடைய பத்திரிகை களில் கூட வந்து இருக்கிறது. இதனால் எல்லாம் பிரச்னை தீருமா? சமபந்தி போஜனத்தை விட சம்பந்தி போஜனம் வந்தால் தான் இந்தப் பிரச்னை தீரும் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மதுவிலக்குப் பிரசாரம் செய்வதற்காக ஒரு கோடி ரூபாய் ஒரு புறம் செலவழிக்கப் படுகிறது. அதேநேரத்தில் சாராயக்கடைகள் ஆங்காங்கு திறக்கப்படுகின்றன. கள்ளுக்கடைகள் திறக்கப்படுகின்றன,



அதனால் வருமானம் பெருகிக்கொண்டு இருக்கிறது. அப்படிப் பட்ட முறையில் மதுவிலக்குப் பிரசாரத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவழிக்கின்றபோது தீண்டாமை பிரசாரத்திற்காக ஒரு கோடி ரூபாய் செலவழிக்கக்கூடாதா? ஆகவே அதற்காக ஒரு கமிட்டி அமைத்து அதன் மூலம் இந்தப் பிரச்சாரத்தைச் செய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்,

ஆதித்திராவிட மக்கள் உயிரோடு இருக்கின்றவரையில் தான் சரியாக கவனிக்கப்படவில்லை, அவர்களுடைய பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை என்கிற நிலைமை இருந்தாலும், செத்த பிறகாவது அவர்களைக் கொஞ்சம் சரியாக கவனிக்கக்கூடாதா? அவர்களுடைய ஈமச்சடங்கிற்காக 50ரூபாய் தான் தரப்படுகிறது. விலைவாசிகள் விஷம்போல் ஏறிவிட்ட நிலையில் இந்த 50 ரூபாய் போதாது. ஆகவே, அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் ஆதித் திராவிடர் மக்களைப் பொறுத்தவரையில் எப்படி இருக்கிறது, மலைவாழ் மக்களைப் பொறுத்தவரையில் எப்படி இருக்கிறது என்று சொன்னால், அதற்கான விவரங்கள் இங்கே பாலிசி நோட்டில் 13–ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் 45 காசு செலவில் சத்துணவு வழங்கும்திட்டம் செயல்படுத்தப்படுகிறது என்றும்இந்த45 காசு செலவில் 34 காசு உணவுப்பொருள் வழங்குத் துறையாலும், மற்றும் கூட்டுறவு சங்கங்கள் வழங்கும் அரிசி, எண்ணெய், பருப்பு போன்றவற்றிற் காகச் செரிகட்டப்படுகிறது என்றும்' எஞ்சிய 11 காசு காய்கறிகள், சுவைப்பொருள்கள் வாங்குவதற்காக மானியமாக வழங்கப் படுகிறது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. 11காசிலே காய்கறிகள், சுவைப்பொருள்கள் வாங்கிவிட முடியுமா? நான் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட் கிறேன்—34 பைசாவில் அரிசி, பருப்பு, எண்ணெய் வாங்க முடியுமா? ஆகவே, சத்துணவுத் திட்டம் இந்த மக்களை ஏமாற்றும் திட்டம், சிலர் கொள்ளை அடிப்பதற்கு உதவி செய்யும் திட்டம் என்று கூறிக்கொள்கிறேன்.

இதிலே ஏதோ தவறு வந்து விட்டது என்று சொன்னால் அதற்காக ஆசிரியர் சம்பளம் பிடிக்கப்படுகிறது. டி.இ.ஒ. ஒருவர் ஆசிரியர் சம்பளத்தைப் பிடித்து கணக்குக்காட்டு என்று கேட்டு இருக்கிறார்; அந்த ஆசிரியர் ஹைகோர்ட்டுக்குப் போய் ஸ்டே வாங்கி இருக்கிறார். இப்படி நிலைமைகள் இருந்து கொண்டு இருக்கின்றன.

அரசு அச்சகத்தில் இருந்து இந்த சத்துணவுத் திட்டத்திற் காக 5 ரூபாய் வசூலிக்கப்பட்டு இருக்கிறது. இது எந்த வகையில் நியாயம்? ஆகவே, சத்துணவுத் திட்டம் ஆதித்திராவிட மக்களைப் பொறுத்தவரையில் சரியாக நிறைவேற்றப் பட வில்லை. இந்த நிலையில் அகில இந்திய அண்ணா திராவிட

முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப் பரப்புச் செயலாளர் இதற்காக மாண்புமிகு முதலமைச்சருக்கு நோபிள் பரிசு கொடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார், அப்படியானால் இந்தத் திட்டத்தை முதன் முதலில் கொண்டு வந்த காமராஜருக்கு கொடுக்கவேண்டாமா? நம்முடைய முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்—அவருக்கு முன் தியாகராஜ செட்டியார் கொண்டு வந்தார் என்று? அவருக்கு கொடுக்க வேண்டாமா?

(மாலை 4-50)

நம்முடைய முதலமைச்சரே சொன்னார்—அதற்கு முன் பாரதியார் சொன்னார் என்று, அவருக்குக் கொடுக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சரே சொன்னார்— வள்ளைக் காரன் கொண்டு வந்தான் என்று, அவனுக்கு கொடுக்கவேண்டும் அதற்குப்போய் நோபல் பரிசு என்றால்......

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: அரசு அச்சகங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத் திற்குகட்டாயமாக 5ரூபாய் வீதம் வசூல் செய்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை எந்த அடிப்படையில் சொல் கிறார்கள் என்று தெரியவில்லை. அதுபற்றி விவரங்களை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாற்றுத் தலைவரவர்களே, அரசு அச்சகத்தின் ஊழியர்களுடைய சங்கத் தலைவராக இருப்பவன் நான். அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள், பாதிக்கப்பட்ட உறுப்பினர்கள் எழுத்துமூலம் தந்திருக்கிறார்கள். வேண்டு மானால் அமைச்சரிடம் தருகிறேன். நடவடிக்கை எடுத்தால் மகிழ்ச்சி.

...தை போன்று இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். இந்த சத்துணவுத் திட்டத்திற்கு, சத்துணவே இல்லாத கொள்கைக்கு, இன்றைக்கு நோபல் பரிசு முதலமைச்சருக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்வது தனிப்பட்ட முறையில் வேறுவிவகாரமாக இருக்கலாம், அது வேறு—எந்த வகையில் நியாயம்?

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் இருக்கின்றன அல்லவா? அந்தக் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் அல்லவா? குடிதண்ணிர் வசதி, சுகாதார வசதி போன்ற வசதிகள் எல்லாம் செய்து கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் அவை எந்த அளவுக்கு இருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் என்னுடைய தொகுதியிலே வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். முடிந்தால் ஒருநாள் மாறுவேடம் போட்டு என்னுடைய தொகுதிக்கு வரவேண்டும். வேண்டுமானால் நானும் மாறு



வேடம் போட்டு அமைச்சருடன் வருகிறேன். சிந்தாதிரிப் பேட்டை, ஜோதிமாநகர், சத்தியவாணிமுத்து நகர்' நாவலர் நகர், பாடர் தோட்டம் போன்ற பகுதிகள் எல்லாம் என்னுடைய தொகுதியில் இருக்கின்றன. அங்கே எல்லாம் அதிகமான அளவில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே குழாய்கள் ஒழுங்காக போடப்படவில்லை: தண்ணீர் சரியாக வரவில்லை.

இதோ என்னிடம் ஒரு பத்திரிகை இருக்கிறது. இது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை (பத்திரிகை ஒன்றைக் காட்டி னார்). மாற்றுத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு இதிலே என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். 'மெட்ராஸ் அட் மிட் நைட்' (இரவு நேரத்தில் சென்னை) எப்படி இருக்கிறது என்று 27-ந்தேதி பத்திரிகையில் படம் பிடித்துப்போட்டிருக்கிறார்கள். இங்கே குழாய் அடிவாரத்திலே குடங்கள் அடுக்கப்பட்டிருக் கின்றன. ஒரு பெண்மணி அந்த குழாயடியிலேயே படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கிறார், இரவு மணி இரண்டு அப்போது. இன்னொரு பெண்மணி கன்னத்தில் கை வைத்துக்கொண்டு, பானையை பாதுகாத்துக்கொண்டு, தவித்துக்கொண்டிருக்கிற காட்சியை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை படம்போட்டு காட்டியிருக்கிறது.

திரு. பி. துரைராஜ்: மாற்றுத் தலைவரவர்களே, இது இந்த ஆதிதிராவிடர் மானியத்தில் வருகிறதா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆதிதிராவிட மக்கள் தண்ணீர் சாப்பிடவில்லையா? எல்லோரும் தண்ணீர் சாப்பிடுகிறார்கள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு விளக்குவதற்காக இதைக் குறிப்பிடுகிறேன். இந்த ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறை 1983-84 ஆம் ஆண்டு கொள்கை விளக்க அறிக்கை முதல் பக்கத்தில் 6—வது இனத்தில் ஆதி திராவிடர் குடியிருப்பு களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்சார வசதி, சுகாதாரவசதி, என்று தமிழில் தான் எழுதியிருக்கிறார்கள்.

ஆக, மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புவது இன்றைக்கு இதைப்போன்ற நிலைமைஇருந்து கொண்டிருக்கிறது அது மட்டுமல்ல. இன்னொரு விவரத்தையும் சொல்ல விரும்புகிறேன் இப்படி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் படம் பிடித்துப் போட்டதால் என்ன நடந்தது தெரியுமா? அந்த பத்திரிகைக்கு கொடுத்து வந்த அரசு விளம்பரத்தை ரத்து செய்து விட்டார்கள். காரணம் இப்படி அரசாங்கத்தில் நடைபெறுகின்ற தவறுகளை சுட்டிக்காட்டினார்கள். அதனால் விளம்பரத்தை ரத்து செய்துவிட்டார்கள்.

அது மட்டுமல்ல, வேறு சில பத்திரிகைளிலும் செய்திகள் வந்திருக்கின்றன. குறிப்பாக ஆனந்த விகடன் பத்திரிகையில் ஒரு கேலிச்சித்திரம் போட்டிருக்கிறார்கள். அதாவது, விருந்தினர் வெளியிலே இருந்து வருகிறார்கள். அதைப் பார்த்ததும் வாருங்கள் வாருங்கள் என்று வரவேற்கிறார்கள். ஆக வெளியூரிலிருந்து தண்ணீருடன் வருகிறவர்களுக்கு பெரிய வரவேற்பு என்று ஆனந்த விகடன் பத்திரிகையில் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சனை நாடு முழுவதும் இருப்பது வேறு விவகாரம். ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் இப்படி இருக்கிறதே என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்று தலைவரவர்களே, இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் அனுமதியோடு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த தண்ணீர் பஞ்சம் வந்ததற்குக் காரணம். மழை பெய்யவில்லை, அதற்கு என்ன செய்ய முடியும் என்று கேட்டால் இதற்கு முன்பு கூட மழை பெய்யாமல் இருந்திருக்கிறது. வான் பொய்த்தது உண்டு. அப்போதெல்லாம் இப்படிப் பட்ட நிலைமை ஏற்படவில்லை. இப்போது இந்த நிலை ஏன் என்றால் எடுக்கப்பட்ட நடவடிக்கை சரியில்லை என்பது தான்.

புழலேரியில் நின்றுகொண்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிலத்தடி நீர் பற்றி அதிகம் தெரிந்தவர்கள் அல்ல....

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்நான் குறுக்கிடுவதை தவறாக கருத மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் வேறொரு மானியத்திலே பே வேண்டிய கருத்துக்களை எல்லாம் இங்கே, இதிலே பேசுவது. அவ்வளவு பொருத்தமாக எனக்குத் தோன்றவில்லை ஏனென்றால் அவர் எப்படி ஆரம்பித்தார். என்றால், ஆதிதிராவிடர் வசிக்கக்கூடிய அந்தப் பகுதியிலே தண்ணீர் வரவில்லை என்று ஆரம்பித்து, பொதுவாக அந்த மானியப் பிரச்னையில் பேசவேண்டியது எல்லாம் பேசிக் கொண்டிருக் கிறார்கள். அது குறித்து, ஒரே நாளில் இங்கே இரண்டு மானியக்கோரிக்கைகள் கொண்டு வரப்பட்ட நேரத்தில், இதே தண்ணீர்ப் பிரச்னை குறித்து' அவருடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் நீண்ட நேரம் பேசியிருக் கிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னையில் மட்டும் குறிப்பிட்டுப் பேசுவார்களேயானால். பதில் அளிக்கும் நேரத்தில் அமைச்சருக்கு செளகரியமாக இருக்கும் என்பதற்காகச் சொல்கிறேன். பேசக்கூடாது என்று சொல்லவில்லை, பேசுவதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் இப்போது அவையில் எடுத்துக்கொண்ட பிரச்னைகள் குறித்து மட்டும் பேசுவது நன்றாக இருக்கும். குடிதண்ணீர் பிரச்னைக்கு ஒட்டு மொத்தமாகச் சென்று இப்போது பேசுவது நன்றாக இருக்காது. முன்பே அது குறித்து 70





கோடி ரூபாய் வரையில் ஒதுக்கீடு செய்யப்பெற்று, மானியக் கோரிக்கை கொண்டுவரப்பட்டது. அது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் நிறைய பேசியாகிவிட்டது. அவர்களுடைய கட்சியின் துணைத் தலைவர் அவர்களும் 1 மணி நேரத்திற்கு மேல் விளக்கமாக எல்லாவற்றையும் பேசியிருக்கிறார். ஆகவே இப்போதுஎடுத்துக்கொண்ட பிரச்னையில் மட்டும் பேசினால், அமைச்சர்அவர்களுக்கு பதில் அளிக்க உதவியாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான்; மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அவருடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புக் காலனிகள் என்று வருகிறபோது அந்தப்பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்களுக்கு குடிதண்ணீர் வசதியில்லை, அந்தக்குறை அவர்களுக்கு மட்டும் அல்லாது, அவர்களோடு சேர்ந்து வசிக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்டி ருக்கிறது. இதனால் எல்லோருமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் அரசாங்கம் அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க தவறி விட்டது என்று சொல்கிறபோது ஆதிதிராவிடர் வசிக்கக்கூடிய குடியிருப்புக்காலனிகளிலுள்ள குழாய்களில் தண்ணீர் வரவில்லை அதையும் மெட்ரோ வாட்டர் தான் பொறுப்பு எடுத்து செய்கிறது. அரசாங்கம் தான் இதற்கு ஒட்டுமொத்தமாக பொறுப்பு ஏற்கவேண்டும் என்பதற்காக அவைகளை சுட்டிக் காட்டினேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறி விட்டாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புழலேரியில் நின்று கொண்டு, பல இடங்களில் மார்க் பண்ணி. அந்தந்த இடங்களில் கிணறுகளை தோண்டச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தடி நீர் பற்றிய அனுபவம் இருந்திருக்குமா, இல்லையா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் கிணறுகள் அங்கே இன்றைக்கு அதிக அளவில் தோண்டப்பட்டு போடப்பட்ட குழாய்களில் தண்ணீர் வரவில்லை. அவை அத்தனையும் வேஸ்ட் ஆகிவிட்டது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் வறட்சியைப் பார்வையிட வந்திருந்தபோது என்னுடைய தொகுதிக்கு அவர்களை அழைத்து வந்திருந் தாலும், அவர்கள் உள்ள நிலைமையைப் புரிந்துகொண்டு போயிருப்பார்கள். ஆனால் இரவு நேரத்திலே, பெட்ரோமாக்ஸ் லைட்டின் வெளிச்சத்திலே ஒரு சில குழாய்களுக்கு மட்டும் கொண்டு போய் காண்பித்து, அங்கேயெல்லாம் தண்ணீர் வரவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு மாநிலத்தின் பெரிய பிரச்னையானகுடிதண்ணீர் பிரச்னையை அரை மணி நேரம், 1 மணி நேரம் சுற்றிப் பார்த்தாலே தெரிந்து கொண்டு விட முடியாது. ஆகையினால் இதில் மாநில அரசு ஏற்கெனவே தகுந்த நடவடிக்கைகளை எடுத்திருந்தால், இந்தக் குடிதண்ணீர் பிரச்னை இல்லாது போயிருக்கும் என்று சொல்லிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். (குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்) (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

[1983 மார்ச் 31]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதல்வச் அவர்கள் புழலேரியில் நின்று பார்த்தார், பாரதப் பிரதமர் வந்து வறட்சியைப் பார்த்தால் என்று சொல்வதெல்லாம் இந்த மானியத்திற்கு அவசியமில்லாத விஷயங்கள். ஆனாலும் இதிலே ஒரு முக்கியமான பிரச்னையை அவர் எழுப்பியிருக்கிறார். இந்தக் தண்ணீர் பிரச்னையை பொதுவான விவாதமாக்கி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசும்போது, பாரதப் பிரதமர் அவர்களை பெட்ரோமாக்ஸ் லைட்டுகள் மூலமாக சில பகுதிகளை மட்டும் பார்வையிட வைத்தார்கள் என்று சொல்வதனால் ஏதோ தமிழக அரசு அவர்களை வேறு சில பகுதிகளில் பார்வையிடுவதற்கு வாய்ப்பு தராமல் தடுத்த மாதிரி ஒரு இம்பிரஷனை ஏற்படுத்தக்கூடாது.

பாரதப் பிரதமரின் புரோகிராம் பொறுத்தவரையில் அவருடைய புரோக்கிராமை சென்டிரல் கவர்ன்மெண்டிலேயே போட்டு, இந்த காரியத்திற்காக அவர்கள் அரை நாள் தான் ஒதுக்கி கொடுத்தார்கள். அந்த அரை நாளிலே எவ்வளவு பகுதிகளைப் பார்க்க முடியுமோ அவ்வளவையும் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆகவே, அதை இங்கே பிரச்னையாக ஆக்கிக் கொண்டு, வர வேண்டாம். அதைப் போலவே, நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கை வந்த போது, இந்த குடிநீர் வடிகால் வாரியத்தின் மானியக் கோரிக்கையையும் சேர்த்துக் கொண்டு வந்து, 70 கோடி ரூபாய் வரையில் நிதி ஒதுக்கம் செய்து, அதில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்து தெரிவித்து விட்டார்கள். மாண்புமிகு ரகுமான்கான் அவர்களுக்கும் அப்போது பேச வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கூட அதில் பங்கு கொண்டு விளக்கமாக எல்லாக் கருத்துக்களையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்களும் பதிலளித்து விட்டார்கள்.

ஆகவே, மீண்டும் அந்த மானியத்தையே இங்கே கொண்டு வந்து பேசுவது சரியாக இருக்காது. குறிப்பிட்ட பகுதியிலே ஆதிதிராவிட மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், (குறுக்கீடு), சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தேவையான நடவடிக்கைகளை எடுப்பார்கள், அல்லது பதில் சொல்லும்போது அவர்கள் அதனைப் பயன்படுத்திக் கொள்வார்கள். ஆனால் லட்டு மொத்தமாக, இந்த வாய்ப்பினை மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பயன்படுத்திக்கொண்டு, அரசாங்கத்தின் மீது என்னென்ன குற்றச்சாட்டுகளை எல்லாம் சுமத்த வேண்டும் என்று நினைக்கிறாரோ, அவைகளை சுருமாரியாக சொல்லி, இப்படி மானியத்தையே மாற்றிக் கொண்டு பேசிக்கொண்டிருக் கிறார்களே, அவர் அப்படி பேசுவது முறைதானா, அவைகள் அவைக் குறிப்பிலே இருக்கவேண்டுமா என்று மாண்புமிகு துணைத் தலைவர்அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1983 மார்ச் 31]

(மாலை 5—00)

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுடைய குடியிருப்புக் களில் தண்ணீர் இல்லை என்ற பிரச்சினை இருக்கின்றது. அங்கே குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென்று ஒரு தனி அமைச்சர் இல்லை என்னுடைய தொகுதி அரிசன மக்கள் நிரம்பிய பகுதி. ஆகவே அதைத்தான் தீர்க்கும்படி திரும்பத் திரும்பச் சொல்கிறேன். அங்கே குடிநீர் பிரச்சினை இருக்கின்றது. அதை அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இன்னொன்றை நான் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய ஸ்பஷல் காம்போனன்ட் பிளன் என்பது ஒரு சிறப்பம்சங்கள் கொண்ட ஒரு திட்டம். அதை மத்திய சர்க்கார் அரிசன மக்களுடைய சமூகப் பொருளதார முன்னேற்றத்திற்காக அறிவித்திருக்கிறார்கள். அதிலே பல கோடி ரூபாய் மாநில சர்க்காருக்கு ஒதுக்கப்பட்டிருக்கின்றது. நான் பத்திரிகைச் செய்தியை அடிப்படையாக வைத்துக்கூட பேச விரும்பவில்லை. உங்கள் மூலமாக அமைச்சரிடத்திலே இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; இதிலே விவரக் குறிப்புகள் இல்லை,..........

டாக்டர். கே. சமரசம் : துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகின்றபோது எழுதுகோருள் அச்சுத்துறையில் பணியாற்று கின்றவர்களிடம் இருந்து 5 ரூபாய் மாதாமாதம் பிடித்து சத்துணவுத் திட்டத்திற்காக கட்டாயமாக கொடுக் சப்படுவதாகச் சொன்னார்கள். அதுபற்றிய ஆதாரங்களைத் தருகிறேன் என்று சொன்னார்கள். அப்படி ஆதாரங்கள் இருந்தால் அவற்றை கொடுத்துவிட்டு பேசினால் பரவாயில்லை. இல்லாவிட்டால் அது அவைக்குறிப்பிலே இருக்க வேண்டுமா என்பது பற்றி தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும். இது ஒன்று அடுத்து இன்னொன்று, கொள்கை பரப்புச் செயலாளருக்கு நோபல் பரிசு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். தியாகராயர், காமராஜர் என்றெல்லாம் சொன்னார்கள். நான் தியாகராயரைப் பற்றியோ அல்லது காமராஜரைப் பற்றியோ எப்போதும் குறைவாகச் சொல்லவில்லை. சத்துணவைப் பொறுத்த வரையில் ..........

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அதுபற்றி உங்கள் தரப்பிலே இருந்து உறுப்பினர்கள் பேசுகின்றபோது பதில் சொல்லலாம். மேலும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதில் இவ்வளவு நீளமாகப் பேசக் கூடாது. உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசுகின்றபோது பதில் சொல்லிக் கொள்ளலாம்

திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களேமாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் போது பாரதப் பிரதமர் அவர்களுக்கு வேண்டும் என்றே இந்த மாநிலத்தில் 7 மணிக்கு பெட்ரோமாக்ஸ் லைட்டு போட்டு கைப்பம்பை அடித்துக் காட்டினார்கள் என்று சொன்னார்கள். அது இருக்க வேண்டுமா என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டார்கள், தாங்கள் தயவு செய்து அது குறித்து தீர்ப்புக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். அதனை அவைக் குறிப்பிலே இருந்து எடுக்கும்படிகேட்டுக் கொள்கிறன். ....(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது அவைக்குறிப்பிலே இருப்பது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை, ஏனென்றால் தெளிவாக அதில் எந்தவிதமான உள்நோக்கமும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Prime Minister Programme was organised and approved by the Cen're. Prime Ministers Secretariat g:ve the clearance. பல பகுதிகளை நாம் சேர்க்க வேண்டும் என்று சொல்லி இருந்தோம். ஆனால் அவர்களுக்கு நேரம் இல்லாத காரணத்தால் அவற்றைக் குறைத்தார்கள். ஆகவே மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் அவர்களுடைய தொகுதியினை பாரதப் பிரதமர் அவர்கள் பார்க்கவில்லை என்ற குறை இருக்குமேயானால் நமது தமிழக சர்க்கார் மீது குற்றம் சாட்டுவது சரியாக இருக்காது என்பதை தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். அது அவைக் குறிப்பிலே இருக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால் பிரச்சினை இல்லை என்னைப் பொறுத்த வரையில்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவை எல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கட்டும். அவற்றை நீக்கவேண்டிய தில்லை.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, விட்ட இடத்திலேஇருந்து தொடர விரும்புகிறேன். 1980–81 ஆம் ஆண்டு ஆதிதிராவிட மக்களுக் காக அவர்களின் முன்னேற்றத்திற்காக ஒரு சிறப்பு அம்சத் திட்டம் போடப்பட்டது. அதற்கு 1980-81 ஆம் ஆண்டும் அதேபோல் 1981–82 ஆம் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட தொகையை மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கியிருக்கிறது அது எவ்வளவு? அந்தத் தொகை முழுவதும் செலவழிக்கப் பட்டதா? இதற்கு ஆடிட்டர் ஜெனரல் அக்கவுன்ட்ஸ் சரிபார்க்கப்பட்டதா என்ற விவரங்களை இந்த அவையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வைப்பார்களானால், ரொம்பவும் உதவிகரமாக இருக்கும். காரணம் நான் கேள்விப்படுகிறேன். மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக வழங்கிய கோடிக்கணக் கான தொகை சரியாக பயன்படுத்தப்படாமல் அவைகள் முறையாக அந்த மக்களுக்குப் போய்ச் சேராமல், அதிலே சில



தவறுகள் நடந்திருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே சந்தேகத்தை போக்குகின்ற வகையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு விளக்கம் அளிப்பார்களானால், அந்த மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். இங்கே இந்த பாலிசி நோட்டிலே, 35—ஆம் பக்கத்திலே ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ, தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர் என்று குறிப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அறிவார்கள். அண்மையில் சென்னை உயர்நீதி மன்றத்தின், சபையின் துணைத் தலைவர் அவர்களும் தலைசிறந்த வழககறிஞர் என்ற முறையில் அந்ததீர்ப்பை அறிவார்கள், நீதிபதி ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். என்ன தீர்ப்பு என்று கேட்டால் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு, தந்தை எந்த சாதியைச் சேர்ந்தவரோ, அந்த சாதிதான் பிள்ளைக்கு வரும்என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பு ஒருபுறம் இருக்கிறது, ஆனால் இங்கே பாலிசி நோட்டிலே, கலப்புத்திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு பிறக்கும் குழந் தகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதி மொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ, தாயின் சாதியோ சேர்ந்தவர்களாகக் கருதப்படுவர் என்று குறிப்பிடப்பட்டிருக் கிறது. தாய் அந்த மாதிரி உறுதிமொழி கொடுத்தால் அது சட்டத்திற்கு' நீதித்துறைக்கு புறம்பாக, தீர்ப்புக்குப் புறம்பாக ஏற்றுக் கொள்ளக்கூடியதாகு . எனவே, து குறித்து அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்குச் சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம். பி. பி எஸ். முதலாம் ஆண்டு பட்டப் படிப்பிற்காக 6 இடங்கள் 1979–80 ஆம் ஆண்டு முதல் கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்றன என்ற குறிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்கு பிறக்கும் பிள்ளைகளுக்கு நம் அரசாங்க வேலைவாய்ப்புகளில் முன்றுரிமை கொடுக்கப் வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அரசாங்கத்தின் வேலை வாய்ப்புகளில் மட்டுமல்லாமல், பொது நிறுவனங்கள் பப்ளிக் அன்டர்டேக்கிங்ஸ் அதிலேகூட கலப்பு திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்று நான்கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 6 எம். பி. பி. எஸ். சீட்டுகள் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் உங்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன். அந்த 6 இடங்களும் நிரப்பப்பட்டு விட்டனவா? அந்த 6 இடங்களுக்கு எத்தனை பேர்களிடமிருந்து மனுக்கள் வரப்பெற்றன? எந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்ற விவரத்தைச் சொன்னால், கொஞ்சம் உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 6 இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன. அதிலே எப்படி வகுத்திருக்கிறோம் என்றால் பார்வேர்ட் கம்யூனிடி ஆதிதிராவிடர் அவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி, பேக்வேர்ட் கம்யூனிடி ஆதிதிராவிடர் என்ற ஒரு முறையை வகுத்திருக்கிறோம். இதிலே அந்த தம்பதிகளில் ஒருவர் கட்டாயமாக ஆதிதிராவிடராக இருக்க வேண்டும் என்ற வகையில் ஒரு முறையை வகுத்திருக்கிறோம். மேலும், பேக்வேர்ட் கம்யூனிடி, பார்வேர்ட் கம்யூனிடி ஆகிய இரண்டு பேருக்கும் இடையே திருமணம் நடந்தால், அவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அது முடியாது என்று சொல்லியிருக்கிறோம். ஒருவர், நிச்சயமாக ஆதிதிராவிடராக இருக்க வேண்டும். 6 இடங்களும் நிரப்பப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே. ஆதிதிராவிடர் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லுகிறபோது. அந்த சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக இன்றைக்கு நம்மைப் போன்றவர்கள் எல்லாம், அவர்களுக்கு நல்ல முறையிலே நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அரசு எல்லாவிதமான காரியங்களையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் ஓரிரு கருத்துக்களைக் கூறி என் உரையை முடிக்க விரும்புகிறேன்.

(மாலை 5-10)

அரசு அச்சகத்தின் சார்பாக அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒன்றை கொண்டு வர விரும்புகிறேன். தமிழ் தெரிந்த நீதிபதிதான் நீதிமன்றத்தில் இருக்கவேண்டும் என்று நாம் சொல்கிறோம். அதற்காக நாம் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் எல்லாம் கொடுத்துக் கூட பேசியிருக்கிறோம். ஆனால் இங்கே அப்படிச் சொல்லிவிட்டு அரசு அச்சகத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கக்கூடிய இடம் தமிழை தவிர வேறு ஒன்றும் அறியாத தொழிலாளர்கள் இருக்கக்கூடிய இடம் அங்கே கொண்டு போய் நீங்கள் தமிழ் தெரியாத அதிகாரி ஒருவரை நியமித்து இருக்கிறீர்கள். இது நியாயமாஎன்று நான் கேட்க விரும்புகிறேன். ஒருவேளை





அவருக்கு தமிழ் தெரியும் என்று சொன்னால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எனக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நான் சொல்கிறேன். தமிழ் தெரிந்த நீதிபதி வேண்டும் என்று வலியுறுத்துகிற நாம் தமிழ் தெரிந்த அதிகாரிகளைத் தான் தமிழ் தெரிந்த தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற இடத்தில் நியமிக்க வேண்டும்.

அடுத்து, டெல்லியில் உள்ள வழங்கு பொருள் விற்பனை தலைமை இயக்குநர் செய்த ஒதுக்கீட்டிலிருந்து காகித அட்டை போன்றவைகள் எல்லாம் ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. அப்படி கொள்முதல் செய்வது பொதுத்துறை ஆலைகளா அல்லது தனி நபர் ஆலைகளா? எனக்குக் கிடைத்த தகவல் சேஷசாயி ஆலையிலிருந்து காகித அட்டைகள் எல்லாம் வாங்கப்படுவதாக கேள்வி. ஏன் தனி நபரிடமிருந்து வாங்க வேண்டும். அதில் ஏதாவது பிரத்தியோக விசேஷங்கள் இருக்கிறதா என்ற விவரங்களை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். அரசு அச்சகத்தில் பயிற்சி பணியாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மத்திய அரசு ஒரு உத்தரவு போடுகிறது அந்த உத்தரவின் அடிப்படையில் முதல் வருட மாணவர்களுக்கு 130 ரூபாய் அந்த பயிற்சி பெறுகின்ற காலத்தில் மாத உதவி தொகையாக இருந்ததை மத்திய அரசு அந்த 130 ரூபாயை 230 ஆக்குகிறது. 2-வது வருட மாணவர்களுக்கு 140 ரூபாயை 260 ரூபாயாக ஆக்குகிறது. 3-வது வருடம் படிப்பவர்களுக்கு 150 ரூபாயை 300 ரூபாயாக ஆக்குகிறது. மத்திய அரசு உத்தரவு போடுகிறது. அதை நீங்கள்அமுல்படுத்துவதற்குபதிலாக பழைய நிலையிலேயே முதல் வருட மாணவர்களுக்கு 130 ரூபாயும், 2.வது வருட மாணவர்களுக்கு 140 ரூபாயு , 3-வது வருட மாணவர்களுக்கு 150 ரூபாயும் என்று கொடுப்பது எந்த விதத்தில் நியாயம்? 14 மாதமாக இந்த விதிகள் பின்பற்றப்படாததால் அவர்களுக்கு வரவேண்டிய'அரியர்ஸ் வராமல் இருக்கின்றன; அவைகளை தரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே தொழிலாளர்கள் பணி செய்கின்ற இடத்தில் தான் அரசு அச்சக இயக்குநர் அலுவலகம் இருக்க வேண்டும். அண்ணா சாலையில் அலுவலகம் இருக்கிறது. தொழிலாளர்கள் வேலை செய்கின்ற இடம் வேறு. இதனால் 1 லட்சம் ரூபாய் நஷ்டம் அரசாங்கத்திற்கு செலவு ஏற்பட்டிருக்கிறது. இரவு நேரத்தில் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் அவர்களுக்கு இரவு படி 1 ரூபாய் என்று கொடுப்பது நியாயம் அல்ல. 5 ரூபாயாவது விலைவாசி ஏற்றத்தை ஒட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கம்போஸிங் தொழிலாளர்களுக்கு இன்றைக்கு சீருடை வழங்கப்படாத நிலைமை இருக்கிறது. அமைச்சருக்கு கூட ஒரு தவறான தகவல் இந்த பாலிசி நோட்டில் கொடுத்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். நான் விசாரித்துப் பார்த்தேன். இந்த ஈயம் உருக்கும் பகுதியில் பணிபுரியும் பணி யாளர்களுக்கு 250 மில்லி கிராம் பாலுக்குப் பதலாக நபர் ஒருவருக்கு 60 காசுகள் கொடுக்கப்படுகிறது, இலவசமாக வைட்டமின் கொடுக்கப்படுகிறது என்று பாலிசி நோட்டில் இருக்கிறது. நான் ஊழியர்களைக் கூப்பிட்டுக் கேட்டேன். அப்படி எல்லாம் நடைமுறையில் இல்லை என்று சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, முக்கியமான பிரச்சனை ஒன்றை அமைச்சருடைய கவனத்திற்கு உங்கள் மூலமாக கொண்டுவர விரும்புகிறேன். மதுரை அரசு கிளை அச்சகத்தில் 2 மாதத்திற்கு முன்னால் ஒரு டெண்டர் கால்பார் செய்திருக்கிறார்கள். டெண்டரிலே குறிப் பிட்டிருக்கிற அளவுக்கு மேலே வேஸ்ட் பேப்பர் காண்ட்ராக் டர்கள் எடுத்துப் போய் இருப்பதாக கேள்வி. ஆனால் அதிகாரிகள் லட்சுமண நாராயண ரெட்டி, கணேசன் போன்றவர்களை சஸ் பண்டு செய்து இருக்கிறார்கள். இதில் மேல் அதிகாரிகளுக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. சிலரை மட்டும் சஸ்பெண்டு செய்துவிட்டு மற்றவர்கள் தப்பித்துக்கொள்வதன் மர்மம் தெரியவில்லை.

தலைமை அச்சக பரிசு சீட்டு நம்பரிங் பாக்ஸ் தவறி போனது உங்களுக்கு எல்லாம் தெரியும். அதனுடைய கிரயமே மொத்தம் 300 ரூபாய் தான். 8 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டார்கள். ஆனால் தலைக்கு 5 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் வந்திருக்கிறது. இதிலே இன்சார்ஜ் ஆக இருக்கக்கூடிய சந்தானகிருஷ்ணரெட்டி மீது நடவடிக்கை இல்லை. அப்பாவி 8 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய காரணம் தெரியவில்லை.

தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சை கேள்வித் தாள் வெளியானது ஊர் அறிந்த விஷயம். அதில் சம்பந்தப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை என்று எனக்கு குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். மேலும் பலரை விரட்டிக்கொண்டு இருப்பதாக சொல்கிறார்கள். ஆக இந்த மானியத்தை அச்சு தொழிலாளர்களின் நலனை கருதுகிற விதத்திலேயும் இந்த அரசு இன்னும் பல அறிய செயல்களை செய்யவேண்டும் என்று கேட்டு ஆதி திராவிட மக்களுக்கு ஒதுக்கி இருக்கக்கூடிய நிதி போதாது என்பதை எடுத்துச்சொல்லி மத்திய அரசு தருகின்ற நிதிகூட முறையாக பயன்படுத்தவேண்டும் என்று சொல்லி, ஆதி திராவிட மக்களுடைய பெயரை அரிசனம் என்பதை ஆதி திராவிட என்று மாற்றிவிட்டால் பிரச்சனை தீர்ந்துவிடாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு புதிய யோசனையை சொன்னார்கள் ஆதி இந்து என்று கூட சொல்லலாம் என்று



சொன்னார்கள். அது எந்த அளவுக்கு பொருத்தம் என்று எனக்கு தெரியாது என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. பி. துரைராஜ் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன் குறித்து 1983–84 ஆம் ஆண்டிற்காக கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையை ஆதரித்து அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சிலபல கருத்துக்களை இங்கே வைக்க விழைகிறேன். இந்த ஆதிதிராவிடர், பழங்குடியினர் நலன் கோரிக்கையின் கீழே அவர்கள் சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக 50.62 கோடி ஒதுக்கப்பட்டு இருப்பது குறித்து மெத்த மகிழ்ச்சி யடைகிறேன். மத்திய அரசு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் மத்திய அரசு செலவு செய்கிறது என்ற விவரத்தை அறியும்போது மத்திய அரசையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கடந்த கால ஆட்சியிலே ஆதிதிராவிட மக்களுடைய சமுதாயத் திற்கு அதிகமாகத் திட்டங்களைக் கொண்டுவந்ததைப் போலவும் இந்த சமுதாய மக்களை உயர்த்துகிற நோக்கத் திற்காக பாடுபட்டதைப் போலவும் இன்றைக்கு அவர்கள் பேசும்போது இந்த சமுதாய மக்களுக்கு நீலிக்கண்ணீர் வடித்த காட்சியை நான் பார்க்கிறபோது மெத்த வருத்தப்படுகிறேன். 1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத் திலே முதலமைச்சராக பதவியேற்றபோது நான் அன்றைய தினம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியிருக்கிறேன். அதற்குப் பின்பும் பணியாற்றியிருக்கிறேன். இதற்கு முன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்திலே ஆதிதிராவிடர் நல இலாகாவை எனது அன்புக்குரிய சகோதரி டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் நல்ல முறையிலே வகித்து வந்தார்கள் என்பது மாமன்றத்தில் உள்ள அனை வருக்கும் தெரியும். டாக்டர் சத்தியவாணி முத்து அம்மையார் அரிசன நலத் துறை அமைச்சர் என்று பேரறிஞர் அண்ணா காலத்திலே அவர்கள் அமைச்சர் பதவி வகித்தபோது பெயர் பலகை எழுதப்பட்டிருந்தது. **

திரு. சு. பாலன் : ** **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் பேசியதும் தப்புதான், நீங்கள் பேசியதும் தப்புதான். ** (குறுக்கீடு)

திரு. பி. துரைராஜ் : ** (குறுக்கீடு) **

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எப்போதோ ** ஆன கதைகள் யருக்கும் தெரியாது, சொல்லியது எனக்கும் தெரியாது, இன்றைக்கு நாட்டிலே நடப்பதைப் பார்ப்போம். பழையதை பேசவேண்டிய நேரத்திலே பேசிக்கொள்ளலாம் (குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

[1983 மார்ச் 31

திரு. துரைமுருகன் : அது எக்ஸ்பஞ்ச் செய்யப்பட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது எக்ஸ்பஞ்ச் செய்யப்படுகிறது.

திரு. பி. துரைராஜ் : ஆதிதிராவிட சமுதாய முன்னேற்றத் திற்கு கல்வி தான் முதன்மையானது, இன்றியமையாதது என்ற கருத்தில் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ஏறத் தாழ 80 சதவீதம் கல்விக்காக ஒதுக்கப்பட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன். கடந்த கால அரசுகள் ஆதிதிராவிட மக்களுக்கு கல்வித்துறையிலே புகுத்தாத பல சலுகைகளையெல்லாம் இந்த அரசாங்கம் புரட்சித் தலைவர் அரசு ஏற்படுத்தி அந்த சமுதாயத் திலே உள்ள மக்கள் கல்வித் துறையிலே நல்லமுறையிலே முன்னேறுவதற்கு வழிவகை செய்து இருப்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

(மாலை 5-20)

உதாரணமாக கடந்த காலத்தில் இல்லாத சலுகைகள், திறமை யுள்ள மாணவர்களுக்கு ஊக்கத்தொகை கொடுத்து கல்வி கற்பிக்கப்படுகிறது. இரண்டாவது சட்டக்கல்வி பயின்று இன்றைக்கு பயிற்சி செய்யக்கூடிய வக்கீல்களுக்கு அவர்களுக்கு ஆரம்பத்தில் தொழிலைச் செய்வதற்கு 750 ரூபாய் மானிய மாகவும், 750 ரூபாய் கடனாகவும் கொடுத்து நல்லமுறையில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு இந்த அரசினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மூன்றாவதாக இன்றையதினம் அரசு தேர்வுகள் எழுதுபவர்களுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது. உதாரணமாக குரூப் — 4 பரிட்சை எழுதுவதற்கு இந்த தாழ்த்தப் பட்ட மக்களுக்கு தனி பயிற்சி கொடுத்து, நல்லமுறையில் படித்து தேர்வு எழுதுவதற்கு இந்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருப்பதை பாராட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வைகளில் எல்லாம் நல்லமுறையில் பயிற்சி பெறுவதற்கு உதவித் தொகை கொடுத்து அந்த மாணவர்களை பயிற்றுவித்து வருகிறது என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள ஆசைப் படுகிறேன். அடுத்து, காவல் துறைக்கும், இராணுவத் துறைக்கும் இந்த தாழ்த்தப்பட்ட மக்கள் சேர்வதற்கு நலல திடகாத்திரமாக தங்களுடைய உடல்நலத்தை வைத்துக்கொள் வதற்கு தனியாக பயிற்சி கொடுத்து, இலவசமாக உணவும், இருக்க இடமும் கொடுத்து உதவி செய்து வருகிறது. தற்போது வழங்கக்கூடிய தொகைகளை நல்லமுறையில் வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு கூட்டுறவு



1983 மார்ச் 31] [திரு.பி.துரைராஜ்]

நூற்பாலை ஏற்படுத்த முன்வந்ததற்காக இந்த அரசைப்பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது மாவட்டத்திலே ஒரு இடத்தில் பவர்-லூம் அதாவது விசைத்தறியில் பயிற்சி பெறு வதற்கு எடுக்கப்பட்டிருக்கிறவர்களில் 50 சதவீதம் தாழ்த்தப் பட்ட மக்களை எடுக்கவேண்டுமென்று இன்றைக்கு அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. சமீபத்தில் அந்த உத்தரவு அமலுக்கு வந்துகொண்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

THIRU DURAI MURUGAN : Sir, I think there is no quorum in t'e h u-e. is it proper to conduct the house in the absence of quorum,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆதி திராவிடர் நலன் குறித்த இந்த மானியத்தில் எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் வந்து கலந்து கொண்டிருக்கவேண்டும். ஆதி திராவிடர்கள் சார்பிலே 40 உறுப்பினர்களுக்கு மேலே இருக்கிறார்கள். இந்த துறையைப் பொறுத்தவரையில் அவர்கள் முழுமையாக வந்திருக்க வேண்டும். நாம் தான் அவர்களுக்காக அக்கறையோடு பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. துரைராஜ் : கூட்டுறவு முறையில் ஆதிதிராவிடர் களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு பல நல்ல திட்டங்களை அரசு கொண்டு வந்து செயல்பட்டுக் கொண்டு இருப்பதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணமாக பால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள், ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள், குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் முதலியவற்றை ஏற்படுத்தி முன்பு இருந்ததை விட அதிகமான சங்கங்களை துவங்கி இன்றைய தினம் தாழ்த்தப் பட்ட மக்களுடைய பொருளாதாரத்தை நல்லமுறையில் உயர்த்துவதற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுடைய சௌகரியத்திற்காக அரசாங்கத் திலே பல சலுகைகளை மேலும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கல்விக்காக இன்னும் அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதம் மாறிய ஆதிதிராவிட மக்களுக்கு பல திட்டங்களில் தனியாக நிதி ஒதுக்கி வருகிறது. இந்து ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப் படக்கூடிய நிதியில் 10-ல் ஒரு பங்குதான் தாழ்த்தப்பட்ட மதம் மாறிய கிறிஸ்த்துவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அந்த நிலையை மாற்றி அதிலே பாதித் தொகையை அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இல்லத்தில் சேர்ந்து படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வழங்கப் படுகிற உதவித் தொகையானது இப்போது இருக்கிற நிலை மைக்கு போதாது. அதை கல்லூரி மாணவர்களுக்கு 100 ரூபாய் என்றும், மற்றவர்களுக்கு 80 ரூபாய் என்றும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்த

படியாக பெற்றோர் வருமான வரம்பு இப்போது 6000 ரூபாய் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் கடந்த காலங்களில் இருந்த காங்கிரஸ் ஆட்சியிலேயிருந்து ஏறத்தாழ 1500 ரூபாய்க்கு மேலே உயர்த்த முடியாது என்ற நிலை இருந்தது. அதற்குப் பிறகு ரூ. 3,000 என்ற நிலைக்கு உயர்த்தியது. ஆனா புரட்சித் தலைவருடைய அரசு கடந்த 2 ஆண்டுகாலமாக அதை ரூ. 6,000 என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. நான் அதையும் கூட இந்த ஆண்டிலேயிருந்து ரூ. 10,000 என்ற அளவுக்கு உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, உழவு மாடுகள் வாங்குவதற்காக இன்றைக்கு ரூ. 600 கொடுப்பதாகக் குறிப்பிலே காணப் படுகிறது. நான் நிச்சயமாகச் சொல்லிக்கொள்வேன், இந்த ரூ. 600 ஐக் கொண்டு ஒரு மாடு கூட வாங்க முடியாது. ஆகவே, தயவுசெய்து அதை ரூ. 1,000 என்ற அளவுக்காவது உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வீட்டுமனை வழங்குவதற்காக ரூ. 125 இலட்சம் ஆண்டொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டும் இதே தொகைதான் ஒதுக்கியிருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன். இந்தத் தொகை தமிழகத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வாங்கிக் கொடுக்க நிச்சயமாகப் போதாது என்று. ஏனென்றால் நாம் ஆண்டுதோறும் ஒரு சிறு தொகையை ஒதுக்கிச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, இன்றைக்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவர் பல புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தன்னிறைவுத் திட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்து, கடந்த 3 ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்குப் பல தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு திட்டமிட்டு செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதே போன்று இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் குறைந்தது, வீட்டுமனை வழங்குகின்ற திட்டத்தையாவது தன்னிறைவுத் திட்ட நிலைக்குக் கொண்டு வந்து, ஒரு சிறப்பான திட்டம் தீட்டி ஏறத்தாழ இந்த ஆண்டிலேயோ அல்லது வரக்கூடிய ஆண்டிலேயோ ரூ. 5 கோடி ஒதுக்கி, 5 ஆண்டுக்காலத்திலே வீட்டுமனை இல்லாத தாழ்த்தப் பட்டவர்கள் இருக்கக் கூடாது என்ற நிலைமையை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





குடிதண்ணீர் வழங்குவதற்காக ரூ. 29.12 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது நிச்சயமாகப் போதாது. எனக்கு முன்னால் பேசிய பல உறுப்பினர்கள் சொன்னார்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனித்தனியாக கிணறுகள் வேண்டும், கூட்டுறவுக் கடைகள் வேண்டும், எல்லா உதவிகளும் தனித் தனியாகச் செய்யப்பட வேண்டுமென்று. நான் அதை ஆதரிக்கவில்லை. ஏனென்றால், சமுதாயத்தில் எல்லா மக்களும் பல இடங்களிலும் சுமுகமாக ஒரே இடத்தில் பல வாணிபங்களைச் செய்து வருகிறார்கள். அந்த நிலைமையை மாற்ற வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். தீண்டாமையை ஒழிக்க நாம் தீவிரமாகச் செயல் பட வேண்டும். இப்பொழுது இந்த அரசாங்கம் இந்தத் தீண்டாமை வழக்குகளை விசாரிப்பதற்காக, ஆங்காங்கு மாவட்ட வாரியாக, தனி விசாரணைக் குழுக்களை ஏற்படுத்தி யிருப்பதைக் கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டுவதற்காக கடந்த ஆண்டுகளில் ஏறத்தாழ ரூ. 4,000 கொடுக்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு அதை ரூ. 6,000 ஆக உயர்த்திக் கொடுத்திருப்பதைக் கண்டு உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுப் பணிகளில் இன்னும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குரிய 18% கொடுக்கப்படாமல் இருப்பது உள்ளபடியே மிகவும் வருந்தத்தக்கது. ஆனால், பள்ளிகளில் அட்மிஷன் என்ற வகையிலே அந்த 18% கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், வேலை வாய்ப்பு அளிக்க தனிக் கவனம் செலுத்தி, தனிச் சலுகை வழங்கி 18% பூர்த்தி அடையக்கூடிய அளவுக்கு வேலை வாய்ப்புகளை அவர்கள் கொடுத்து உதவ முன் வர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதி சம்பந்தமாக ஒரு சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். இந்த ஆண்டில் 10 மாணவர்கள் இல்லங்கள் துவங்குவதற்கு இங்கே வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே உள்ள குருவிகுளம் சேந்தமங்கலம் ஆகிய இரண்டு கிராமங்கள் பிற்பட்ட பகுதி, தாழ்த்தப்பட்ட பகுதி. அந்த இரண்டு ஊர்களிலும் அந்த மாணவர் இல்லங்களை இந்த ஆண்டிலே துவக்க வேண்டு மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த திருச்செந்தூர் தேர்தல் சமயத்திலே, பல கிராமங் களில், ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அந்த சந்தர்ப்பத்திலே அந்த ஆத்தூர் பகுதியைச் சேர்ந்த இன்னும் பல கிராமங் களுக்குக் குடி தண்ணீர் வழங்கப்படுவதற்காக, அங்கே குழாய்கள் போடப்பட்டு, அது இன்னும் பூர்த்தி அடையாமல்

இருக்கிறது. ஆகவே, அந்தக் கிராமங்களிலே குடி தண்ணீர் வழங்குவதற்காக போடப்பட்ட குழாய்களைப் பதித்து, வெகு விரைவிலே தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கடைசியாக, கலப்புத் திருமணத்தைப் பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கலப்புத் திருமணத்தை நான் நன்கு ஊக்குவித்து வளர்க்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்காக, ஏறத்தாழ ரூ. 10 இலட்சம் அளவுக்கு ஒதுக்கியிருக்கிறோம். அது போதாது என்று நான் சொல்கின்றேன். கலப்புத் திருமணம் செய்து கொண்ட அந்தக் குடும்பத்திலுள்ள ஆணுக்கோ, பெண்ணுக்கோ வேலை வாய்ப்பு பெறுவதிலே மிகவும் சங்கடமான நிலைமையிருக்கிறது. ஆகவே, கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் முன்னுரிமை கொடுத்தும் அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளுக்கு இன்னும் நல்ல முறையிலே கல்விச் சலுகைகளும் உத்தியோகச் சலுகைகளும் கொடுக்க வேண்டு மென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், வணக்கம்.

(மாலை 5.30)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர வர்களே, ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை மற்றும் எழுதுபொருள்—அச்சுத்துறை சம்பந்தப்பட்ட இந்த விளக்கக் குறிப்புகளின் அடிப்படையில் காந்தி—காமராஜ் தேசிய காங்கிர ஸினுடைய கருத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். இங்கே கொடுத்திருக்கின்ற குறிப்பில் தீண்டாமை ஒழிப்புக்காகவே என்று ஒரு வாரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். ஜனவரி 24 ஆம் தேதியிலிருந்து 30 ஆம் தேதி வரை தீண்டாமை ஒழிப்பு வாரம் என்ற வாரம் கொண்டாடப்படுவதாக அரசாங்கக் குறிப்பிலே இருக்கிறது. அப்படிப்பட்ட வாரம் கொண்டாடப் படுவதாகக் காகிதத்திலே மட்டும்தான் இருக்கிறதா அல்லது காரியத்தில் நடைபெறுகிறதா என்ற கேள்வியைக் கேட்கின்ற அளவிற்கு மக்கள் மனத்தில் அது சில எண்ணங்களைப் பதிப்பித் திருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன். வாரம் நடைபெறு வதாக இருக்கலாம் ; ஆனால் போதிய அளவிற்கு ஆழமாக, அழுத்தமாக மக்கள் மனத்தில் பதிகின்ற அளவிற்கு இல்லை என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அவர்களுக்கு மனத்தில் பதிகின்ற அளவிற்கு இருந்தால்தான் இதைச் செம்மைப்படுத்துவதற்கான வழி என்ன என்பது நமக்கு தோன்றும். ஜனவரி 30 ஆம் நாள் நிறைவு நாள் என்று வைத்திருப்பதற்குக் காரணம், அன்றுதான் இந்த நாட்டினுடைய தந்தை என்று போற்றப்படுகின்ற அண்ணல் காந்தியடிகள் அவர்கள் தன்னுடைய இன்னுயிரை நீத்த ஒரு தினமாகும். அவர்கள் தன்னுடைய வாழ்க்கையிலே பெரும்பகுதியைத்



தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கிக் கொடுத்த உத்தமத் தலைவராவார். ஆனால் அந்த ஜனவரி 30 ஆம் தேதியன்றாவது அதுபற்றி அதிகமாகப் பேசப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

தமிழகத்திலே இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல குடியிருப்புகளுக்கு நான் சென்றிருக்கிறேன். அவர்கள் அங்கே எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நேரடியாகப் பார்க்கின்ற வாய்ப்பு பெற்ற எளிய தொண்டன் நான். மிகப் பெரிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய ஜெயபிரகாஷ் நாராயணன் அவர்களுடைய ஆசீர்வாதத் தோடு சென்னையிலிருந்து கோவை வரையில் பாதயாத்திரை சென்றபொழுது ஒவ்வொரு நாள் இரவிலும் அந்தக் குடியிருப்பு களில் தான் தங்கி, அவர்களுடைய பிரச்னைகளை அறிந்து அவர்கள் எந்த அளவிற்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்ட ஒரு ஊழியன் நான்.

தீண்டாமை இன்னும் இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாகச் சொல்லலாம், இன்னும் இருக்கிறது என்று உறுதி யாகச் சொல்ல விரும்புகிறேன். நாமக்கல் கவிஞர் அவர்கள் அழகாச் சொல்லுவார் ;

"தீண்டாமை என்கிற தீய பழக்கம் தீரத் தொலைந்திட நல்ல நாளாச்சு" என்று ஒரு அருமையான கவிதையைச் சொல்லும்பொழுது,

"இந்த வழக்கம் நாளுக்கு நாளாய் இந்து மதத்தினை
வெட்டுது வாளாய்

வேதத்தில் இல்லை, கீதையில் இல்லை வேறுள சாத்திரம்
யாதுக்கினி

சாதித்து யாரையும் சண்டாளன் என்றிட சாத்திரம்
சத்திய சம்மதமோ

என்று யாரும் தாழ்த்தப்பட்டவர்கள் இல்லை என்று நமது அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல் கவிஞர் அவர்கள், விடுதலைக்காகப் பாடிய அந்தக் கவிஞர் எழுதி வைத்திருக் கிறார்கள். அப்படிப்பட்ட கவிதைகளை எடுத்துச் சொல்லிச் சொல்லிச் சொல்லி, காந்தி மகான் போன்றவர்கள் வலியுறுத்திச் சொல்லிய காரியங்களைச் சொல்லிச் சொல்லி, இந்தத் தீண்டாமை வாரம் கொண்டாடப் பட வேண்டுமென்பது என்னுடைய எண்ணமாகும். ஆகவே, அமைச்சரவர்கள் இந்தத் தீண்டாமை வாரத்தைக் கொண்டாடுகிறோம் என்று ஒரு வரியை எழுதுவதற்குப் பதிலாக, இப்படிப்பட்ட தீண்டாமை வாரம் எந்த வகையிலே கொண்டாடப் பட வேண்டும் என்பதைப்பற்றி மற்றவர்களையும் கலந்தாலோசித்து அதைத் தீவிரப்படுத்த வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், இன்னும் பலயிடங்களில் தீண்டாமை இருக்கிறது, சிலயிடங்களில் உணவு விடுதிகளில் தனியாக வைக்கப்பட்டு, மூங்கில் குழாய் வழியாக காப்பியை ஊற்றுகின்ற வழக்கம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலை இனியும் தமிழகத்திலே இருக்கலாமா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

ஆலயங்களில் அவர்களை அனுமதிக்கலாம் என்று அந்தப் பிரச்னை தீர்ந்து விட்ட பிறகும்கூட, இன்னும் சிலயிடங்களில் ஆதி திராவிடர்கள் உள்ளே நுழைய முடியாத இடங்கள் இருந்து கொண்டு தான் இருக்கின்றன. சட்டப்படி அவர்கள் உள்ளே செல்வது செல்லுபடியாகும். ஆனால் இந்தச் சமுதாயத்தின் சம்மதம் அதற்கு இன்னும் கிடைக்காத காரணத்தினால், அந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் இன்னும் நுழைய முடியாத இடங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் அரசாங்கம கண்டு கொண்டு அங்கிருக்கின்ற ஏழை எளிய மக்களிடம் கேட்டறிந்து தீர்வு காண்பதற்காக வழிவகைகளைக் காண வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இளையபெருமாள் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். எல்லாயிடங்களிலேயும், படித்த வர்கள், நல்ல வகையிலே தொழில் வல்லுநர்களாகவும் இருப்பவர் களெல்லாம் இப்பொழுது ஆதிதிராவிட மக்களிலேயிருந்து வந்து விட்டார்கள் என்ற செய்தியைச் சொன்னார்கள். அது மகிழ்ச்சியான ஒரு செய்தியாக இருந்தாலுங்கூட, இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாக ஆங்கில வார ஏட்டில் வந்திருக்கின்ற ஒரு செய்தியைக் குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவென்று அமைச்சரவர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், 1982 ஆம் ஆண்டில் வெளி யிட்ட 32 வது ஆனுவல் ரிப்போர்ட் என்ற ஆண்டு அறிக்கையைத் தந்திருக்கிறது. அந்த அறிக்கையிலே என்ன சொல்லப்பட்டிருக் கிறது என்றால், 352 பதவிகள் நிரப்பப்படாமல் இருக்கின்றன; அந்த 352 பதவிகள் நிரப்பப்பட வேண்டுமென்று விண்ணப்ப மனுக்களைக் கேட்டபொழுது, எத்தனை பேர் அதற்குத் தேவைப்



படுகிறார்கள் என்றால் 352 பேர்கள் தேவை, அதில் 112 இடங்கள் தாழ்த்தப்பட்டவர்களுக்காக ஒதுக்கப்பட்டவை. 117 இடங்கள் மலைவாழ் பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்பட்டிருக் கிறது. இந்த 229 இடங்களுக்குமே தகுதியான ஆட்கள் கிடைக்காத காரணத்தினாலே அந்த இடங்கள் நிரப்பப்பட வில்லை என்று 32 வது ஆண்டு அறிக்கை கூறுகிறது. யூ.பி.எஸ்.சி. யினுடைய அறிக்கை. அது எப்படி தொழில் நுட்ப வல்லுநர்கள் அங்கே கிடைக்கவில்லை என்று சொன்னால், Science, Medicine, Architecture, Engineering, Publicity, Education. இப்படிப்பட்டவை களுக்கெல்லாம், திறமையான வல்லுநர்கள் கிடைக்காத காரணத்தால் அதற்கான 239 பதவிகளில் அந்த தாழ்த்தப்பட்ட வர்களுக்காகவும், பழங்குடி மக்களுக்காகவும் ஒதுக்கப்பட்டதை நிரப்பப்படவில்லை என்று சொல்லுகிறாக்கள். இவைகளை யெல்லாம் நீங்கள் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். என்ன காரணம் என்றால், இந்தக் குறிப்பிலே சொல்லப்படுகிறது. 1971-72 ஆம் ஆண்டு பாலிடெக்னிக்கிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு.... .(குறுக்கீடு)

திரு. துரைமுருகன். பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு அங்கத்தினர் திரு. குமரி அனந்தன் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இந்தச் சபையிலே இந்து பத்திரிக்கை நிருபரைத் தவிர, வேறு ஒரு பத்திரிக்கை நிருபர் கூட இல்லையே, அது என்ன அர்த்தம்? ஆகையால் பத்திரிகைகள், இந்த மன்றத்தினுடைய செய்திகளை பகிஷ்கரிக்கிறதா ? நாட்டு மக்களுக்கு, கண்ணாகவும், காதாகவும் இருக்கக் கூடிய பத்திரிகைகள் இங்கு, கண் இல்லாது காது இல்லாது, முகம் இல்லாது மூளியாக இருக்கிறது, இந்தப் பகுதி என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு: கு, பா, பழனியப்பன்): அதை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கண்டிப்பாக அமர வேண்டும் என்று உத்தரவு போடமுடியாது.

திரு. துரைமுருகன் : பின்னர் அவர்களுக்கு சேர் எதற்கு போடப்பட்டிருக்கிறது? பாஸ் எதற்கு அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. பா. பழனியப்பன்): அவர்கள் வருவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள், அவ்வளவு தான்.

திரு. குமரி அனந்தன் : திரு. துரைமுருகன் அவர்கள் இந்தச் செய்திகளைச் சுட்டிக்காட்டி, அவையின் கவனத்தையும், இங்கே வராமல் இருக்கின்ற அவர்களின் கவனத்தையும் ஈர்த்தற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் இன்று காலையிலே தான் ஒரு பத்திரிகை நிருபருக்கு பஸ்ஸில் இடம் கிடைக்கவில்லை என்ற மனக்குறையை அவர்கள் சார்பில் எடுத்துச் சொன்ன நானே பேசிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இந்த நிலை ஏற்பட்டது என்பதனை அவர்கள் சுட்டிக் காட்டியது இன்னும் பொருத்தமாக இருக்கிறது என்பதைச் சொல்லி துரைமுருகன் அவர்களுக்கு மீண்டும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1983 மார்ச் 31

பத்திரிகையாளர்கள் இப்படிப்பட்ட செய்திகளை வெளியிலே
நல்ல முறையிலே வெளியிட்டால்தான், தகவல்கள் நல்ல
முறையிலே மற்றவர்களுக்குப் போய்ச்சேரும் என்கிற வகையிலே
நல்லெண்ணத்தோடு சொல்லப்பட்ட இந்தச் செய்திகளை
நம்முடைய மாண்புமிகு தலைவரவர்கள் ஏற்றுக் கொண்டு
வேண்டியன செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.
(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர
வர்களே, மாண்புமிகு துரைமுருகன் சொல்லியிருக்கக் கூடிய
கருத்தினுடைய அடிப்படையிலும், மாண்புமிகு நம்முடைய
காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சித்தலைவர் குமரி அனந்தன்
சொல்லியிருக்கக் கூடிய கருத்தின் அடிப்படையிலும் கூட,
இப்பொழுது தேநீர் விருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிற மற்ற
பத்திரிகை நிருபர்கள், இங்கே உள்ளே வந்து ஏற்கனவே அமர்ந்
திருக்கக் கூடிய பத்திரிகை நிருபர்கள் மூலமாக என்ன பேசப்
பட்டது என்பதை தெரிந்து கொண்டு, 'இன் சப்போர்ட் ஆப்
துரைமுருகன்'ஸ் ரெக்வெஸ்ட்'—ஆக அவர்கள் அந்த வகையிலே
தெரிந்து கொண்டு, நிச்சயமாக பத்திரிகையிலே வெளியிடுவார்கள்
என்று நான் நம்புகிறேன்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு குமரி அனந்தன் பேசிய
பிறகு தான் நான் பேசலாம் என்றிருந்தேன், ஆக நான் கேட்க
விரும்புவதெல்லாம்—இந்த மன்றத்திலே அங்கத்தினர்கள் தெரிவிக்
கின்ற கருத்துக்களையும், அரசாங்கம் தெரிவிக்கின்ற கருத்துக்
களையும் நாட்டு மக்களுக்கு தரிவிப்பதற்கு பத்திரிகைக்காரர்களுக்கு
அழைப்பு காடுத்து, பாஸ் கொடுத்து, நாற்காலி கொடுத்து,
ஆக அத்தனையும் செய்து கொடுத்து, அவர்களை உட்கார
வைத்திருக்கிறோம், ஆனால் இந்து பத்திரிகை நிருபர் மட்டும்
உட்கார்ந்து எழுதிக் கொண்டிருக்கிறார். வேறு ஒரு பத்திரிகை
நிருபர் கூட ஒட்டுமொத்தமாக ஏதோ 'ஸ்ட்ரைக்' பண்ணியது
மாதிரி. போயிருக்கிறார்களே, இது நியாயம்தானா என்பதை
நான் கேட்க விரும்புகிறேன். இவர் சொல்லி எடுத்துக்கொள்
வார்கள் என்றால், இவர் 'கிளாஸ் எடுப்பாரா'? எல்லாப்
பத்திரிகையிலும் எடுப்பாரா? எக்ஸ்பிரஸ் முதலில் போட
வேண்டும், இந்து பத்திரிகை முதலில் செய்திகளை போட
வேண்டும் என்ற போட்டி மனப்பான்மை வந்துவிடும். 'இட்
இஸ் ராங்'—ஆகையால் ஒரு அழைப்பைக் கொடுங்கள்.
எனக்காக அல்ல.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு துரைமுருகன்
கருத்தை ஏற்றுக்கொள்ள விரும்புகிறேன். I am agreeing with
Mr. Durai Murugan and I am hoping துரைமுருகன் குரல்,
என்னுடைய குரல், மறைமுகமாக மாண்புமிகு குமரி அனந்தன்
சொல்லுகிற குரல் அவர்களுக்குக் கேட்கும் என்கிற அந்த ஆசை
யினுடைய அடிப்படையிலே நிச்சயமாக அதையெல்லாம் பிரசுரிப்
பார்கள் என்று நான் நினைக்கிறேன். அவ்வளவு தான்.
துரைமுருகனும், நானும் 'ஹோப்' தான் பண்ண முடியும்.



1983 மார்ச் 31]

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. பா. பழனியப்பன்) :
இதுபற்றி அதிகமான விவாதம் தேவையில்லை. உறுப்பினருடைய
கருத்தும், அமைச்சருடைய கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்து
பத்திரிகை நிருபர் மாத்திரம் இங்கு உட்கார்ந்திருக்கிறார்,
உட்கார்ந்திருக்கிறார் என்று சொல்வது அவரையும் வெளியே
போகச் சொல்வதுபோல் அமைந்திருக்கிறது. இந்தச் சதியில்
ஏதோ அவருக்கு உறவு இருக்கிறது என்பதை நான் பணிவோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்): இது
தேவையில்லாத கருத்து.

(மாலை 5-40)

திரு. குமரி அனந்தன் : இப்போது மாண்புமிகு நல்வாழ்வுத்
துறை அமைச்சர் அவர்கள் நாளை இந்தச் செய்திகள் எல்லாம்
பத்திரிகையிலே வரும் என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்
கிறார்கள். எனவே, காலையிலே எழுந்து எல்லாப் பத்திரிகை
யிலும் பார்க்கவேண்டும். அமைச்சர் பெருமகனாருடைய உறுதி
நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்று பார்க்கின்ற வாய்ப்பு
எங்களுக்கு இருக்கிறது. இன்று காலையிலே நிகழ்ந்த சம்பவத்தை
சுட்டிக்காட்டியதற்கு காரணம் நான் மாண்புமிகு சபாநாயகர்
இடம் கூட எந்த விதியாக இருந்தாலும், இந்தச் சட்டசபை
யினுடைய அங்கமாக பக்கத்திலே இருந்து கொண்டிருக்கிற தங்க
நிகர் நிருபர்கள் எல்லாம் தாங்கள் ஏறிவருகின்ற. சட்டமன்ற
உறுப்பினர்கள் ஏறிவருகின்ற பஸ்ஸிலேகூட எப்படியாவது வருவ
தற்கு உரிய வழிவகைகளைக் காணவேண்டுமென்ற நோக்கத்தோடு
தான் சொன்னேன். மீண்டும் அவர்களைத் தனியாக சந்தித்தால்
கூட அதை நான் வலியுறுத்துவேன் என்ற வகையிலே தான்
பத்திரிகை எல்லாம் நாங்கள் போடுகிறோம் என்பதை அருமைக்
குரிய துரைமுருகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்துப்
பத்திரிகை நிருபர் இங்கே இருப்பதைப் போலவே மற்றவர்களும்
இருக்க வேண்டுமென்ற அவருடைய ஆசையைப் போலவே
என்னுடைய ஆசையையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஒருவேளை
நம்முடைய கருத்துக்கள் சிறந்தன அல்ல என்று சொன்னாலும்கூட
அது சிறந்தனவா என்பதை அவர்களுடைய காதாகிய தராசிலே
நிறுத்துப் பார்க்கவேண்டிய கடமை அவர்களுக்கு இருக்கிறது.
அவர்கள் அதை நிறுத்துப் பார்த்து, இது மக்கள் நெஞ்சிலே
நிறுத்தக் கூடியது தான் என்று சொன்னால் நிருபர்களாக
இருக்கின்றவர்கள் அதிலே தங்களுடைய பத்திரிகையிலே எழுது
வார்கள் என்ற நோக்கத்தோடு சொல்லப்பட்டிருக்கிறது. இங்கே
மேலும் என்னுடைய செய்தியைத் தொடருவேன்.



13624

பாலிடெக்னிக்குகளில் படித்துக்கொண்டிருக்கிற மாணவர்கள்
இன்று 1980—81 ஆம் ஆண்டுக்கான புள்ளி விவரத்தை நமது
அமைச்சர் பெருமகனார் கொடுத்திருக்கிறார்கள். இது 21
விழுக்காடாக இருக்கிறது, தாழ்த்தப்பட்ட மலைவாழ்மக்களுக்கு.
ஆனால் 1971—72—லே 5.38 ஆகத்தான் இருந்தது என்று
சொன்னால், இது ஒரு மகத்தான வளர்ச்சியாகத்தான் இருக்கிறது
மறுக்க இல்லை. அதைப்போலவே எல்லா இடத்திலேயும்
இருக்கிறதா என்றால், இல்லை. உதாரணத்திற்கு பொறியியல்
துறையிலே 1971—72—லே 4.37 ஆக இருந்தது. 1980-81-லே
8.62 ஆக மட்டுமே இருக்கிறது. எனவே பொறியியல் கல்லூரியிலே
நான்கில் இருந்து எட்டாகத்தான் வந்திருக்கிறது. ஆனால்
பாலிடெக்னிக்குகளில் ஐந்திலிருந்து 21-க்கு போய் இருக்கிறது.
அதைப் பார்க்கின்றபோது, யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன்
சொன்னது சரியாகத்தானே இருக்கிறது என்று எண்ணுகிற
எண்ணம் வருகிறது. எனவே மேல் படிப்புகளிலே நமது தாழ்த்தப்
பட்ட மாணவர்களுக்கு சரியான இடமும், சரியான போதனையும்
கிடைக்கின்ற ஒரு சூழ்நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்க
வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று. புதிதாகத் தொழில் தொடங்குகின்றவர்கள்
அதிலிருந்து வருகின்ற ஆதாயத்தை அந்தத் தொழிலிலே மீண்டும்
முடக்க பிளவிங் பேக் என்று சொல்வார்கள். மீண்டும்
அதிலேயே போட்டு அந்தத் தொழிலை செம்மைப்படுத்துவது
போல், சிறப்படையச் செய்வது போல் நல்லமுறையிலே வணிகம்
செய்கின்றவர்கள் அந்த வணிகத்திலே கிடைக்கின்ற இந்த
லாபத்தை மீண்டும் அதிலேயே போட்டு, பெரும் வணிகர்களாக
மாற முயற்சி செய்வதுபோல், சமுதாயத்தில் படித்திருக்கின்ற
இளைஞர்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற அறிவாகிய அந்தச்
செல்வத்தை மீண்டும் தமது சமுதாயத்தில் இருக்கின்றவர்களுக்கு
கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கு வழி இருக்
கிறதா என்று பார்க்கவேண்டும். ஏன் என்றால், தாழ்த்தப்பட்ட
சமுதாயத்திலேயிருந்த படித்தவர்கள், படித்து பட்டம் பெற்று
வெளியிலே வருபவர்கள். மீண்டும் தமது அறிவை தம்மைச்
சேர்ந்தவர்களுக்கு கொடுக்கின்ற ஒரு நிலையிலே அவர்கள்
இருக்கிறார்களா, அதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கிறார்களா?
இதிலே பேசப்படுவது எல்லாம் என்னவென்றால் சொத்து சுகம்
வைத்து இருப்பவர்களைப் பற்றி எல்லோரும் பேசுகிறோம்.
நியாயமான முறையிலே பேசுகிறோம். ஒருவனுக்கு தோப்புத்
துரவு இருக்கிறதா, இல்லாதவனுக்குக் கொடுக்கவேண்டும்.
இதுதான் நியாயம். நிறைய பணம் இருக்கிறதா, அது இல்லாத
வனுக்குக் கொடுக்க வேண்டும், அதுதான் நியாயம் எனச்
சொல்கிறார்கள். ஆனால் ஒருவனுக்கு படிப்பு இருக்கிறது என்று
சொன்னால் அது இல்லாதவனுக்கு அந்தப் படிப்பாளி கொடுக்க
வேண்டும் என்று சொல்வதை நாம் உரத்த குரலிலே சொல்லியாக
வேண்டும். அப்படி என்று சொன்னால், படிக்க முடியாமல்
இருந்து கொண்டிருப்பவர்களை இந்தச் சமுதாயத்திலே இன்று



படித்துவிட்டு வெளியே வருபவர்கள் மற்றவர்களையும் அந்த
அளவிற்கு கைத்தூக்கி விடுவதற்கு தங்களுடைய முயற்சியை
அந்தத் திசையை நோக்கிச் செலுத்தவேண்டுமென்று நான்
அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் இதிலே நான் குறிப்பிட்டுச் சொல்ல
வேண்டும். எம்.பி.பி.எஸ். படிப்பதற்கு 6 பிள்ளைகளுக்கு கலப்பு
மணம் செய்பவர்களுடைய குழந்தைகளுக்கு இடம் என்று
சொன்னதை முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள்
சுட்டிக்காட்டினார்கள். கலப்புத் திருமணம் செய்த தம்பதியர்
களுடைய குழந்தைகளுக்கு 6 இடம் என்று சொல்லுகிறபோது
கலப்புத் திருமணம் செய்வது என்பதே ஒரு சாதனை. பாரதி
ஒரு இடத்திலே மிக அழகாகச் சொல்லுவான் : ''நாடகத்தில்
காவியத்தில் காதல் என்றால் நாட்டினர் தான் உவப்பெய்தி
நன்றாம், நன்றாம் என்பர், வீடகத்தே, கிணற்றோரத்தே,
காதல் என்றால் உறுமுகின்றார்'' என்று சொல்லுவான். மனித
நிலையிலிருந்து மாறி அவர்கள் உறுமுகின்றார் என்று
சொல்லுவான். ''பாடை கட்டி அதைக் கொல்ல வழி பார்க்
கின்றார்'' என்பான். கொன்று விட்டு பாடைகட்டுவதற்குப்
பதிலாக, பாடையை கட்டி வைத்துவிட்டே கொல்லத்துணி
வார்கள், நிச்சயமாக கொன்றுவிடுவோம் என்று. அந்த
அளவிற்கு காதல் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும்,
அரிதாக இருக்கின்ற காலத்தில், அப்படி கலப்புத் திருமணம்
செய்து கொண்டிருப்பவர்களுடைய குழந்தைகளுக்கு என்று
சொல்கிறபோது, இந்தக் கலப்புத் திருமணம் செய்தவர்கள் இந்தச்
சமுதாயத்திலே எதிர்நீச்சல் போட்டு தங்களுடைய வாழ்வை
நடத்தி தாங்கள் குழந்தைகள் பெற்று, அந்தக் குழந்தைகளை
செம்மையுற வளர்த்து, படிக்க வைத்து, அவர்கள் படித்து
ஓரளவிற்கு வளர்ந்ததற்குப் பின்னாலே எம்.பி.பி.எஸ். படிப்ப
தற்குரிய சூழ்நிலைகளை உருவாக்கவேண்டும். அதற்கு இடையிலே
இந்த சமுதாயத்திலே எவ்வளவு பெரிய புயல் அடிக்கும். அந்தக்
காதல் மணம் புரிந்து கொண்ட இந்த மலர்கள் எந்த அளவிற்கு
வாடாமல் வதங்காமல் இருக்கும் என்பதெல்லாம் ஐயப்பாட்டுக்கு
உரியன. எனவே கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு
கல்வித்தகுதி இருப்பின் உடனடியாக அவர்களுக்கு வேலை
கொடுக்கும் திட்டத்தை — அவர்களுடைய குழந்தைகளுக்கு
எம்.பி.பி.எஸ். படிக்கும் திட்டம் வரட்டும். வேண்டாமென்று
சொல்லவில்லை.— கொண்டுவரவேண்டும். ஆனால் அப்படிப்
பட்ட குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொள்ளும் சூழ்நிலை
அவர்களுக்கு இருக்குமா, இருக்காதா என்கிற நிலையில் அந்தக்
கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கே—ஆணுக்கும்
பெண்ணுக்குமே, அந்தக் கணவன்—மனைவி இருவருக்குமே—
முன்னுரிமை கொடுத்து, எல்லோரையும் விட முன்னுரிமை
கொடுத்து,—தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு அளிக்கப்
படுவதை விட முன்னுரிமை கொடுத்து வேலை கொடுக்கும்
சூழ்நிலை உருவாக்கப்படுமானால், கலப்புத் திருமணம் அதிகமாக
நடக்கும். அது ஜாதி வேற்றுமையை ஒழிக்கும் என்பதை நான்
தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1983 மார்ச் 31

இந்தச் சமுதாயத்திலே இன்று படித்து முன்னேறி வருகிற
வர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படியிருந்தாலும், அவர்கள்
வாழ்ந்து கொண்டிருக்கும் சுற்றுச் சார்பு அவர்களை மேலும்
அறிவுச் செல்வம் பெறுவதற்கு உரியவர்களாக ஆக்குவதில்லை.
சான்றாகச் சொல்ல வேண்டுமானால் இப்படிப்பட்டவர்கள்
கூடியிருக்கிற இடங்களில் நிச்சயமாக, உறுதியாக, கண்டிப்பாக
தவறாமல் நூல் நிலையம் வைக்கப்பட வேண்டும். எல்லா
இடங்களிலும் நூல் நிலையங்கள் வைக்க வேண்டும் என்பதை
அரசாங்கம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

தாழ்த்தப்பட்ட, ஆதி திராவிட சமுதாயத்திலே உள்ளவர்கள்
இறந்து விட்டால், அந்த இறந்து போனவர்களுக்கு இறுதிச்
சடங்கு செய்வதற்காக எடுத்துச் செல்லப் பாதை வசதி கூட
இல்லாமல் இருக்கின்றது. இன்று கூட அப்படி இருக்கலாமா?
அப்படி இனிமேல் ஒன்று கூட இருக்கக் கூடாது என்ற வகையில்,
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆழமாகச் சிந்தித்து நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

இங்கே நிறையச் செய்திகளை நீங்கள் தந்திருக்கிறீர்கள்.
ஆனால், உங்கள் பார்வைக்காக என்னுடைய நெஞ்சின் அடித்
தளத்திலிருந்து எழுகின்ற சில கருத்துக்களை இங்கே எடுத்து
வைக்க விரும்புகின்றேன். சான்றாக, இன்று 40 பைசா, 50
பைசா என்கிற அளவுக்கு கூலி வேலை செய்யப்போகும் நிலைமை
இருக்கிறது. நிலம் அதிகமாக இருக்கிறது. அந்த நிலத்தின்
பக்கத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மிகக் குறைவாக
இருக்கிறார்கள் என்ற நிலை இருக்குமானால், அவர்களுக்குக்
கூலி அதிகமாகக் கிடைக்கிறது. நிலம் அதிகம்; கரம் குறைவு;
கூலியும் அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால், பல இடங்களிலே
மக்கள் அதிகமாக இருக்கிறார்கள்; நிலம் மிகக் குறைவாக
இருக்கிறது. நிலம் மிகக் குறைவாக இருப்பதால்
ஒப்பந்தக் கூலிகளாக அவர்கள் ஏற்பாடு செய்யப்படு
கிறார்கள். ஒரு ஏக்கருக்குக் களையெடுக்க 40 பேர்
போகிறார்கள்: நடவு 40 பேர் போகிறார்கள்: அப்படியென்றால்
ஒரு ஏக்கருக்கு என்ன கூலி கொடுக்க முடியுமோ அதைத்தான்
விவசாயி கொடுக்க முடியும். 40 பேர் இருக்கிறார்கள் என்ப
தற்காக 40 வாய்கள் உண்ண வேண்டும் என்பதற்காக' அந்த
விவசாயி கூலியைக் கூடுதலாகக் கொடுக்க முடியாது. அந்த
அளவுக்கு வருமானம் வரவில்லை. ஆகவே ஒரு ஏக்கருக்கு
எவ்வளவு கூலி என்று கொடுக்கப்படுகிறதோ, அதைத்தான் அந்த
40 பேரும் பங்கிட்டுக்கொள்ளும் சூழ்நிலை வரும் என்று
சொன்னால், அவர்களுடைய வாழ்வு எப்படி இருக்கும் என்பதை
நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே,
நீங்கள் துணிச்சலோடு ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்ற
வேண்டுகோளை நான் உங்கள் முன்னால் வைக்கிறேன்.



1983 மார்ச் 23] [திரு. குமரி அனந்தன்]

முதலில் அரசாங்கத்தின் சார்பில் ஒரு திட்டம் கொண்டு வர
வேண்டும். வன இலாகா வனப் பகுதிகளில் இன்று மரங்களை
நட்டு வளர்ப்பதற்காக திட்டங்களைத் தீட்டி அந்த மரங்களை
வளர்க்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் இடங்களில் இப்படிப்
பட்ட ஆதித் திராவிட மக்களை நூற்றுக் கணக்கில் குடியமர்த்தி
அவர்களுக்கு அங்கே சமூகக் கூடங்களை ஏற்படுத்தி, அவர்
களுடைய பிள்ளைகள் படிப்பதற்காக பள்ளிக் கூடத்தையும்
ஏற்படுத்தி, ஒரு கூட்டுப் பண்ணை முறையில் அவர்கள்
தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கும் அவர்கள் செய்யும்
உழைப்பால் வனம் செழித்து வளரவும் திட்டமிடலாம். அப்படிப்
பட்ட ஒரு திட்டத்தை நடத்துவதால் அவர்கள் ஒரு இடத்தி
லிருந்து மற்றொரு இடத்திற்குக் குடி பெயர்ந்து போகவேண்டிய
நிலைவரும். அப்படி வருகிறபோது யார், யார் விரும்பி
வருகிறார்களோ அவர்களை அழைத்துச் செல்லலாம். யாரையும்
வற்புறுத்தி அழைத்துச் செல்லத் தேவையில்லை. அப்படி
விரும்பி வருபவர்களை அழைத்துச் சென்று அந்தந்த இடங்களில்
குடியமர்த்தி அங்கே அவர்களுக்குப் பள்ளிக்கூடம், மருத்துவ
வசதி, பொழுது போக்குவதற்கான விளையாட்டுத் திடல்கள்,
பார்க் ஆகியவைக் கட்டித் தர வேண்டும். அப்படிச் செய்வதன்
மூலம் அந்தத் தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்வில் ஒரு புது மலர்ச்சி
ஏற்படும்.

இப்போது 25 சமுதாய நிலையங்கள்
அதைப் போல இப்போது 25 சமுதாய நிலையங்களில்
ஏற்படுத்தி இருப்பதாகவும், அந்தச் சமுதாய நிலையங்களில்
ஆணொன்று பெண்ணொன்று என்று இரண்டு அதிகாரிகளும்
அவர்களுக்குக் குற்றேவல் புரிய ஒரு பெண்ணும் என்று மூன்று
பேர் கொண்ட குழு இருப்பதாகவும் அவர்கள் அந்தச் சமுதாயக்
கூடங்களிலிருந்து 8 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு இருக்கின்ற
ஆதித் திராவிட மக்களின் குழந்தைகளைப் பேணி பார்க்கின்ற
பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அந்தக் குழந்தைகளுக்
கெல்லாம் தலையில் எண்ணெய் போட்டு தண்ணீர் விட்டு
குளிப்பாட்டி சுத்தம் செய்து சுகாதார பழக்கவழக்கங்களை
அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து வருகின்றனர் என்றும்
இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

தமிழகம் முழுவதும் சுற்றி வருகின்ற பல அரசியல் தொண்டர்
களிலே நானும் ஒருவன். இப்படி எட்டு கிலோ மீட்டர் தூரம்
வரை போய் அங்கேயிருக்கின்ற குழந்தைகளைக் குளிப்பாட்டி
அவர்களுக்குச் சுகாதார பழக்கவழக்கங்களை ஏற்படுத்தித்
தருகின்ற சேவை மனப்பான்மை செய்கின்ற அதிகாரிகளை நான்
எங்குமே பார்க்கவில்லை. ஒருவேளை என் கண்ணுக்குத் தட்டுப்
படாமல் இந்தச் சேவை எங்காவது நடந்து கொண்டிருக்கலாம்.
ஆனால், என் கண்ணுக்குத் தட்டுப்படுகிற அளவுக்கு அந்தச்
செயல்கள் நடக்கவில்லை.

நான் பணிவோடு ஒரு கருத்தை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காந்தியப் பாதையிலே இப்படிப்பட்ட சேவை மனப்பான்மையோடு தொண்டு செய்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களிலே பலர் மறைந்துவிட்டார்கள். வைத்தியநாத ஐயர் போன்றவர்கள், என். ஆர். சுப்பராமன் போன்றவர்கள், சுவாமி சகஜானந்தா போன்றவர்கள் எல்லாம் மறைந்துவிட்டார்கள். ஆனால் அவர்களுடைய வழி வந்தவர்கள், அவர்களுடைய காலடியைப்பற்றி அவர்களுடைய கருத்துக்களைப் பரப்புவதற்கு வந்தவர்கள் இன்னும் சர்வோதயா சங்கங்களிலே நிறையபேர் இருக்கிறார்கள்.

(மாலை 5-50)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவாகத் தெரிவிப்பேன். சர்வோதயா சங்கங்களிலிருந்தும் காந்திய நிலையங்களிலிருந்தும் சிலரை தேர்ந்து பொறுக்கி எடுத்து, இப்போது மேலவையிலே கூட அண்ணா அருணாசலம் என்று போற்றப்படுவர் இருக்கிறார், அவர்கள் தலைமையிலே மாவட்டத்திற்கு என்ற ஒவ்வொரு குழுவை அமைத்து அந்தந்த மாவட்டத்தில் இருக்கிற குழு இந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிற அரசாங்கக் குழுவோடு இணைந்து வேலை செய்கின்ற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால் நிச்சயமாக இந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அவை நல்வாழ்வு கொடுக்கின்ற திட்டங்களாக வரும்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். அவர்களுக்கு இத்தலை சலுகைகளைச் செய்து கொடுப்பதைவிட—சலுகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்; மேலும மேலும் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்—அந்த சலுகைகளைச் செய்வதோடு சேர்த்து இன்னொன்றையும் செய்ய வேண்டும். கைத்தொழில்களைப் பழக்கிக் கொடுக்கின்ற பழக்கம் அவர்களை இன்ன இடத்திற்கு வாருங்கள் என்று சொல்வதற்குப் பதிலாக அவர்கள் இருக்கின்ற இடத்திற்கு தாங்கள் போவோம் என்று சொல்கிற அளவுக்கு சமுதாயத் தொண்டர்களை உருவாக்கித் தரமுடியுமா என்று பாருங்கள். இன்று அம்பர் சர்க்காக்கள் அங்கே போகலாம். அவரவர்கள் இடத்திலே இருந்து நூல் நூற்கின்ற அந்த அம்பர்சர்க்காக்கள் அங்கே போகமுடியும.

அதைப்போன்று பனை ஓலையிலே கூடை பின்னுதல் போன்ற தொழில்களை அவர்களுக்குப் பயிற்றுவிக்க முடியும். அவர்களுக்கு பயிற்றுவிக்க முடியும் என்றால் அரசாங்கத்திலே இந்த இடத்திலே சொல்லிக் காடுக்கிறோமே என்று தயவுசெய்து சொல்லாதீர்கள். அரசாங்க அதிகாரிகள் அவர்கள் இருக்கின்ற இடத்திற்குப் போக வேண்டும். அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். அவர்கள் இருக்கின்ற இடத்திற்குப் போய் இவைகளைச் சொல்லிக்கொடுக்க வேண்டும். இப்படி சேவை செய்கின்ற மனப்பான்மை பெற்றவர்கள் எங்கெங்கே





இருக்கிறார்கள் என்று பார்த்து, அவர்களை பெருமளவுக்கு வைத்துக்கொண்டு, அவர்கள் மூலம் ஒரு பயிற்சி முகாம் நடத்தி, அந்தந்த பகுதியிலே இருக்கிற ஆள்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்து, மீண்டும் அவர்களை தங்கள் பகுதிகளுக்கு அனுப்பி, உங்கள் ஊரிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு இதைக் கற்றுக்கொடுங்கள் என்று சொல்லுகின்ற முறை வருமானால் இந்த தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களிடையே புதுவாழ்வு மலரும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இந்த நம்பிக்கை அடிப்படையிலேதான் இந்த கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

இன்னும் அவர்கள் மீது தாக்குதல் நடப்பதும், அவர்கள்மீது பல இடங்களிலே பொல்லாங்கு பேசப்படுவதும், பல இடங்களிலே அவர்களுடைய குடிசைகள் எரிக்கப்படுவதும்—இவைகளைப் பார்க்கும்போது சமுதாயத்திலே உணர்ச்சி போதுமான அளவு இன்னும் தூண்டப்படவில்லை. சமுதாயத்திலே உள்ள உணர்ச்சி போதுமான அளவு இன்னும் தூண்டப்படவில்லை என்கிற நேரத்தில் மற்றவர்கள் மன்னிக்க வேண்டும். எங்கள் அருமைக்குரிய அண்ணன், அகில இந்திய ரீதியிலே அந்தக் குழுவுக்குத் தலைவராக இருந்த மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்ற வகையிலே சொல்கிறேன். அரசாங்கம் தாழ்ந்து கிடக்கின்ற மக்களை மேலே தூக்குவதற்கு எந்த அளவு குனிய வேண்டுமோ அந்த அளவு இன்னும் குனியவில்லை என்பதையும், குனிந்து கொடுக்கின்ற, நீட்டுகின்ற கரத்தை எந்த அளவுக்கு நிமிர்ந்து பற்றி மேலே எழவேண்டுமோ அந்த அளவு அநத சமுதாய மக்கள் நிமிர்ந்து மேலே எழவில்லை என்பதையும் மனதிலே கொள்ளவேண்டும். ஆக, அரசாங்கம் இன்னும் கொஞ்சம் குனிய வேண்டும்; குனிந்து நீட்டுகின்ற கரத்தைப் பிடிப்பதற்கு அந்த சமுதாய மக்கள் இன்னும் கொஞ்சம் நிமிர வேண்டும். இந்த இரண்டு காரியங்களும் நடக்காத வரையில் அவர்கள் புத்தொளி வீசுவதற்கு வழியில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

வேறு ஒரு கருத்தைப் பற்றிச் சொன்னார்கள். இந்தப் பகுதியிலே தண்ணீர் வரவில்லை; அந்தப் பகுதியிலே தண்ணீர் வரவில்லை என்று தண்ணீர் கொடுப்பதற்குரிய சூழ்நிலைகளைச் சொன்னார்கள். தேர்தல் நேரத்திலே எல்லோருமே அவர்களுடைய வாக்குகளைப் பெறுதற்கு முயலுகிறோம். அதேநேரத்தில் தேர்தல் முடிந்த பிறகு அந்த வாக்குகளைப் போட்டவர்களுக்கு நாம் சொன்ன வாக்கு என்னவாயிற்று என்பதை சிந்திக்க வேண்டும். சிற்பி என்கின்ற கோவை மாவட்ட கவிஞன் மிக அழகாக எழுதினான், "அரிசனங்களு

ஆகா! வாக்குச்சீட்டை அடைகாக்கும் முட்டைகள்'' என்று ''புன்னகை பூக்கும் பூனைகள்'' என்ற தலைப்பிலே இதை எழுதினான்.

''அரிசனங்கள் ஆகா! வாக்குச்சீட்டை
அடைகாக்கும் முட்டைகள்
தேர்தல் தீர்ந்தால் திகுதிகுவென
எரியும் நல்ல விறகு கட்டைகள்''

என்று எழுதினான். ஆக, தேர்தல் காலம் வரையில் அவர்கள் வாக்குச்சீட்டை அடைகாக்கும் முட்டைகள் ஆகவும், தேர்தல் தீர்ந்துவிட்டதற்குப் பிறகு திகுதிகு என்று எரியும் நல்ல விறகு கட்டைகள் ஆகவும் அவர்கள் கருதப்படுகிறார்கள்.

நம்மில் பலர் அப்படி கருதவில்லை. அப்படி பலர் இருந்தும்கூட அந்த சிலருடைய செயல்கள்தான் நடந்து கொண்டிருக்கின்றனவே என்பதைப் பார்க்கும்போது 24 ஜனவரி தொடங்கி 30—ல் முடிக்கிறீர்கள் தீண்டாமை வாரத்தை. அந்த தீண்டாமையை ஒழிப்போம் என்று சொல்லுகின்ற பணியோடு மட்டுமல்ல, தீண்டத்தகாதவர்களாக இருக்கிற அவர்கள் சமுதாயத்திலே தீண்டா விளக்காக என்றும் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிற ஒரு ஒளிமிக்க சமுதாயமாக மாறிவிட்டார்கள் என்பதற்கும் திட்டங்கள் வருக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பை தந்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

*திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே, அடி மட்டத்திலே இருக்கக்கூடிய, ஆதிதிராவிட மக்களின் நலத்துறையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கக்கூடிய, ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மானியக் கோரிக்கையிலே எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மக்கு, முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் நம்முடைய தமிழ் சமுதாயத்திலே, தமிழகத்திலே ஆதிதிராவிட மக்களுடைய நலனை முன்னுக்கு கொண்டு வந்ததிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள்தான் மிக முக்கியமான பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் முதலிலே தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.





இன்றையதினம் அரிசன் என்று சொல்லக்கூடிய அந்தச் சொல்லையே மாற்றி, ஆதி திராவிடன் என்று பெயர் சூட்டியதால், அதுவே அவர்களுக்கு ஒரு நல் வாய்ப்பின் ஆரம்பம் தான் என்று இந்த நேரத்திலே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல நம்முடைய தமிழகத்திலே, தன்னிறைவுத் திட்டம் என்ற ஒரு திட்டத்தின் பெயரால், ஆதித்திராவிட மக்கள் வாழ்கிற பல இடங்களில், அவர்களுக்கு மயானங்களுக்குச் செல்ல சாலைகள் அமைத்துக் கொடுத்தும், அவர்கள் வாழ்ந்துவரும் பகுதிகளில் ஆழ் குழாய் கிணறுகளைப் போட்டு, அவர்களுக்கு குடிநீர் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்தார்கள்.

அதேபோல நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவு திட்டத்தின் மூலமாக, அதுவும் பெரும்பகுதி மக்கள் ஆதிதிராவிடர்களாக வாழ்கிற பகுதிகளிலே கூட தனியாக அவர்களுக்கென்று மையங்களை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுக்குத் தேவையான பணிகளை எல்லாம், சீரும் சிறப்புமாக நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆட்சியின்கீழ், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து வருகிறார்கள். இந்த திட்டங்கள் எல்லாம், தந்தை பெரியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும், என்னென்ன நோக்கத்தை எல்லாம் கொண்டு, அவர்களுக்கு அதனை நிறைவேற்றிட வேண்டும் என்று கனவு கண்டார்களோ, அவைகளை எல்லாம் இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் இங்கே செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த சத்துணவு திட்டத்தைப் பற்றி எல்லாம் இங்கே பேசிய சில உறுப்பினர்கள் குறை சொல்லி, அவர்கள் வேறு ஏதாவது சத்துணவைப் போட வேண்டும் என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் எங்களைப் போன்ற கிராமப்பகுதிகளிலே இருந்து வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதுவும் எதிர்க்கட்சி வரிசையிலே, காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு இளைய பெருமாள் அவர்களுக்குக்கூட மிக நன்றாகத் தெரியும். ஆதிதிராவிட மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே, அந்த மக்கள் எப்படி ஒரு வேளை உணவு கூட இல்லாமல் துன்பப்பட்டுக் கொண்டிருந்தார்கள் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு கொண்டு வரப்பட்ட இந்த சத்துணவு பற்றி குறை சொல்கிறார்கள்.

இதற்கு முன்னாலே இதுபோன்ற திட்டத்தை காமராசர் அவர்கள் கொண்டு வந்தார்கள், மற்றவர்கள் கொண்டு வந்தார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் அவர்கள் கொண்டு வந்த பகலுணவு திட்டத்திற்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் சத்துணவு திட்டத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது. அப்போது பகல் நேரங்களிலே பள்ளி செல்லும் பிள்ளைகளுக்கு மட்டும் உணவு கொடுத்தார்கள். ஆனால் இப்போது, வீட்டிலே

இருக்கக்கூடிய, 2 வயதிலிருந்து 5 வயது வரை உட்பட்ட எல்லாக்குழந்தைகளுக்கும், இந்தச் சத்துணவுகொடுக்கப்படுகிறது. அதுவும் எப்படி, காய்கறிகள், சமையல் எண்ணெய், பருப்பு போன்ற எல்லா வகையான சத்துணவுகளையும் சரிவிகிதத்தில் கலந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசியவர்கள் குறைகள் கூறியும், இது அவ்வளவான சத்துணவாக இல்லை, வேறு ஏதாவது தனியாக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் எந்த உணவைச் சொல்கிறார்களோ, நாங்கள் அறியோம். இந்த திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. சத்துணவு சாப்பிடுகின்ற ஆதிதிராவிட மாணவர்கள் அல்லது சிறுவர்கள் எல்லாம் எல்லாப் பிள்ளைகளோடும் ஒன்றாக உட்கார்ந்து உணவு உண்டால், அவர்கள் மனதிற்குள்ளே வேற்றுமைகள் ஏற்பட வழி இருக்காது; பேதங்கள் நீங்கும் என்ற காரணத்திற்காகத்தான், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சத்துணவு திட்டத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்று ஆணித்தரமாக இந்த நேரத்திலே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கிராமப் பகுதிகளிலே வாழக்கூடிய ஆதித் திராவிட மக்களை முன்னேற்றம் அடையச் செய்யவேண்டும் என்பதற்காக நாமும் பல வேலை வாய்ப்புத் திட்டங்களைப் போடுகிறோம்; மத்திய அரசும் 20 அம்சத் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு முன்னேற்றத்தை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் போடப்பட்டிருக்கின்றன. ஆனால், உண்மையிலேயே, இந்தத் திட்டத்தை நடைமுறைப் படுத்த எடுத்துச் செல்லும்போது, அவர்களுக்கு கடன் கொடுக்க வேண்டும் என்று, உதவி கேட்டு, வங்கிகளை அணுகுகிறபோது, மத்திய சர்க்காரின் கீழே இயங்கக்கூடிய வங்கிகள் எல்லாம், அவைகளை கொடுக்க மறுக்கின்றன.

குறிப்பாக, ஆதிதிராவிட மக்கள், மலை வாழ் மக்கள், மற்றும் கிராமப்பகுதிகளிலே உள்ள சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்தும் தொழிலாளர்கள் ஆகியோருக்கு, என்று நாம் பல திட்டங்களை போட்டு, அவர்களுடைய தொழிலுக்கு உதவி செய்யும் வகையில், ஏதாவது திட்டங்களைப் போட்டு, அதன் அடிப்படையில் அவர்கள் வங்கிகளை அணுகுகிறபோது, அவர்களை பல தடவை இழுத்தடித்து, அதன் பலனையே அவர்கள் அடைய முடியாதபடி செய்துவிடுகிறார்கள். இதை நான் எதற்காகக் கூறுகிறேன் என்றால், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் இந்தப் பிரச்னையை மத்திய சர்க்காருக்கு எடுத்துக் கூறி, அதற்கான ஒரு உத்தரவை இட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



(இரவு 6-00)

கிராமப் பகுதியிலே உள்ள ஆதி திராவிட மக்கள் ஜாமீன் மனுவிலே கையெழுத்து வாங்கவேண்டும் என்றால் சொத்துள்ளவர்களிடத்திலும், கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் பாக்கி இல்லாதவர்களிடத்திலும்தான் கையெழுத்து வாங்க வேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒருவர் போய் கேட்கின்றபோது யாரும் ஜாமீன் போட முன்வருவதில்லை. அப்படி வந்தாலும் கூட வாங்கிக் கொள்பவர்கள் அவர்களை நம்பாமல் இவர்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிடுகிறார்கள், எனவே அவர்கள் அந்தப் பலனை அடைய முடியவில்லை. ஆகவே அந்த சமுதாயத்திற்கு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில் கண்டிப்பாக சிறு சிறு துளிகள்தான் பெரு வெள்ளமாக மாறும். ஒரேயடியாக அந்தச் சமுதாயத்தை தூக்கிவிட முடியாது. ஏனென்றால் நம்முடைய நாடு ஜனநாயக நாடு. மற்ற நாடுகளில் அதாவது ராணுவ ஆட்சி நடத்துகின்ற நாடுகளில் வேண்டுமானால் போடுகின்ற சட்டத்தை அப்படியே நிறைவேற்ற முடியும்.

குறிப்பாக கிராமப் பகுதியிலே இப்போது அவர்களுக்கு என்று தனியாக வீடுகள் கட்டுவதற்காக நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறார்கள். அப்படி ஆர்ஜிதம் செய்கின்றபோது அதுபற்றி பல சட்டங்களை மத்திய சர்க்காரே திருத்தவேண்டும், அவர்களுக்கு உடனடியாகக் கிடைக்கின்ற வகையிலும், பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். அப்படி ஏற்படுத்தினால்தான் அந்தந்த நோக்கங்களை நிறைவேற்ற முடியும். இல்லை என்றால் முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் நண்பர்கள் பேசுகின்றபோது முதலமைச்சர் சம பந்தி உணவு உண்டுவிட்டால் மட்டும் போதாது, சம்பந்தியாக இருக்க வேண்டும் என்றெல்லாம் கூறினார்கள். ஆகவே நான் ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். சம்பந்தியாக யாரிடம் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது மற்றவர்கள் அறிந்த ஒன்றாகும். சாதாரண ஆதிதிராவிடர்கள் வீட்டிலே இருக்கின்ற பெண்கள் அழகாக இருந்தால் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் ஆதிதிராவிட பையனுக்கு பெண் கொடுக்க முன்வருவார்களா என்றால் யாரும் முன்வர மாட்டார்கள் என்பதை ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே சம்பந்தியாகவேண்டும், சம்பந்தியாக வேண்டும் என்று சொல்கின்றவர்கள் யாருக்கும் பெண் கொடுத்ததாக சரித்திரம் கிடையாது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கின்ற பல்வேறு திட்டங்களை எல்லாம் கூறி இருக்கிறோம். நாம் எல்லாம் ஆதி திராவிட மக்களைப் பற்றிக் கூறினோம். ஆனால் அருந்ததி மக்கள் இருக்கிறார்கள். உள்ளபடியே அவர்களைப் பற்றி இன்னும் கவலைப்படவில்லை. ஆதி திராவிட மக்களாக

இருப்பவர்கள் தனக்குக் கீழாக இருப்பவர்களைச் சேர்த்தால்தான்
அந்த சமுதாயத்தை முன்னேற்ற முடியும். அடுத்து என்னுடைய
பகுதியிலே உள்ள மலைவாழ் மக்களைப் பற்றி இங்கே சில
கருத்துக்களை கூற விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே
கல்வராயன் மலைப்பகுதியிலே 1976—ஆம் ஆண்டு ஜனாதிபதி
ஆட்சியிலே நிலங்களை ஜாகிர்தார் வசமிருந்து அரசாங்கம்
எடுத்தது. அப்படி ஜனாதிபதி ஆட்சிக் காலத்திலே எடுக்கப்
பட்டபின் எந்தவிதமான பலனும் இல்லாமல் இருந்தது. பிறகு
நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு அந்த மக்களுக்கு
பயன்படுகின்ற வகையில் 5 கோடி 6 கோடி ரூபாய் செலவழித்து
சாலை வசதிகளைச் செய்து கொடுத்து இருக்கிறார்கள். அப்படி
இருந்தும் அந்தப்பகுதியிலே தொகுதியைச் சுற்றிப் பார்க்க
வேண்டும் என்றால் 125 கிலோ மீட்டர் சுற்றித்தான் செல்ல
வேண்டும். அங்கே 105 கிராமங்கள் இருக்கின்றன, 30 ஆயிரம்
மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். உள்ளபடியே நான்
சொல்கிறேன். இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்த திரு. குமரி
அனந்தன் அவர்கள் பேசுகின்றபோது கூறினார்கள்......

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத்தலைவர்
அவர்களே, மாண்புமிகு திரு. கலிதீர்த்தான் அவர்களை எனக்கு
20 வருடங்களாகத் தெரியும். இருந்தாலும் ஒன்று சொல்ல
விரும்புகிறேன். மலைவாழ் மக்களுக்காக மாநில அரசு
கொடுத்திருப்பதைவிட மத்திய அரசு அதிகமான தொகை
கொடுத்திருக்கின்றது. இது ஒன்று. இன்னொன்று. ராஷ்டிரபதி
ஆட்சி இருந்தபோதுதான் அந்த நிலத்தை ஜாகிர்தாரிடம் இருந்து
எடுத்தார்கள். ஜாகிர்தாரிடம் இருந்தபோது எவ்வளவு
கொடுமைகள் இருந்தன என்பதெல்லாம் அவர்களுக்கும் நன்றாகத்
தெரியும். அவர்கள் இளைஞராக இருந்திருப்பினும் அந்தக்
கொடுமைகளை அவர்கள் உணர்ந்திருப்பார்கள். அவற்றை
எல்லாம் களைகின்ற வகையிலே அவர்களிடத்திலே அந்த
நிலங்களை எடுத்தார்கள். இப்போது மத்திய சர்க்கார் மற்றும்
மாநில சர்க்கார் மூலமாக வேண்டிய தொகை ஒதுக்கப்
பட்டிருக்கின்றது என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும்
தெரியும் என்பதை இந்தச் சமயத்தில் நண்பர் கலிதீர்த்தான்
அவர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. சோ. கலிதீர்த்தான்: மாண்புமிகு மாற்றுத்தலைவர்
அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த
மாண்புமிகு இளையபெருமாள் அவர்கள் அப்படிக் கூறினாலும்
உள்ளபடியே மத்திய அரசு அப்படிக் கொடுத்தது என்பதை நான்
இந்த நேரத்தில் மறுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.
எங்களுடைய முதலமைச்சர் அவர்களிடம் பல முறை அந்தப்
பகுதிக்கு வேண்டிய திட்டங்களைக் கேட்டு இருக்கிறோம்.



நம்முடைய நிதியிலேயிருந்து தான் நாம் முடிந்ததை செய்ய
முடியுமே தவிர வேறு எங்கேயிருந்தும் நிதி ஒன்றும் வருவதில்லை
என்று எங்களுக்குக் கூறியிருக்கிறார்கள். ஆனால் சுதந்திரம்
பெற்று 35 ஆண்டுகள் ஆகியும், என்னுடைய பகுதியிலே உள்ள
அந்தக் கல்ராயன் மலைப்பகுதியிலே இருக்கிற ஜாகீர்தார்
களிடமிருந்து 1976 ஆம் ஆண்டிலே தான் நமது கைக்கு வந்தது.
இன்னும் அவர்கள் எல்லாம் எவ்வளவு அடித்தளத்திலே இருந்து
கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்திய அரசு எண்ணிப்பார்க்க
வேண்டும் என்றும், அவைகளை எல்லாம் மாற்ற வேண்டும்
என்றும் தான் நான் கூறுகிறேனே தவிர வேறு எந்த நோக்கத்
தோடும் கூறுவதாக யாரும் எண்ண வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன். அந்த இடங்களை ஜாகீர்தார்களிடத்திலே
யிருந்து பிரித்து வன இலாகாவிடம் கொடுத்துவிட்டார்கள்.
இத்துறைக்கான அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள்
எல்லாம் தயவு செய்து குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும் என்று
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அந்த மலை ஜாதி மக்களுக்கு
தனிப்பட்ட முறையில் நிலங்களோ, இடுகாடுகள்
போன்றவைகளோ எதுவுமே கிடையாது. அந்த நிலங்களை
எல்லாம் சர்வே செய்து, சர்வே செய்த நிலங்களை எல்லாம்
வனத்துறையிடத்திலே கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்கள்—
அந்த நிலங்களை எடுக்கிறபோது அந்த மலைவாசிகளுக்கு ஒரு
நோட்டீஸ் கொடுத்தார்கள். அந்த நோட்டீஸ் கொடுத்த
நேரத்திலே, தமிழே படிக்கத் தெரியாத அந்த மக்களிடத்திலே
போய் ஆங்கிலத்திலே அந்த அப்ஜெக்ஷன் மனுக்களை கேட்கப்
பட்டது. அவர்கள் பட்டாதான் கொடுத்துவிட்டார்கள் என்று
எண்ணிக்கொண்டு தெரியாத்தனமாக அவைகளை வாங்கி
அவர்கள் பெட்டியிலே வைத்துக் கொண்டு விட்டார்கள்.
இன்றைக்கும் கூட அவைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
இன்றையதினம் அவர்கள் பட்டா கேட்டால் அரசாங்கத்திலே
சொல்லப்படுவது என்னவென்றால், கோர்ட்டிலே வழக்குப்
போட்டுத்தான் அவர்கள் உரிமையைப் பெற்றாகவேண்டும் என்ற
பதில்தான். அந்த நிலைமையை மாற்றுவதற்கு நம்முடைய
அமைச்சர் அவர்கள், மற்றும் அந்தத் துறையைச் சேர்ந்த
அதிகாரிகள் எல்லாம் முயற்சி செய்து ரீசெட்டில்மென்ட் செய்து
எங்கெங்கு அவர்கள் விவசாயம் செய்கிறார்களோ அந்தந்த
நிலங்களையெல்லாம் அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க
வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே சுமார் 105 கிராமங்கள்
இருக்கின்றன. அந்த 105 கிராமங்களில் சுமார் 50
கிராமங்களில் மின்சார இலாக்காவின் சார்பாக மின் விளக்கு
போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மின்சாரப் பற்றாக்
குறையின் காரணமாக அவர்களுக்கு விளக்கு எரியாமல் அவதிப்
படுகிறார்கள். அந்தப் பகுதியிலே சங்கராபுரத்திலே ஒரு துணை
மின்நிலையம் ஏற்படுத்த வேண்டும்.

கல்ராயன் மலைப்பகுதியில் மேகம் என்ற இடத்திலே சுமார் 600 அடி உயரத்தில் இருந்து ஒரு நீர்வீழ்ச்சி வருகிறது. அங்கே ஒரு துணை மின் நிலையத்தை ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த மலைவாழ் மக்களுக்கு பயன் கிடைக்க வாய்ப்பாக இருக்கும்.

அந்த நீர்வீழ்ச்சி இருக்கிற இடத்திலே ஒரு சுற்றுலா மையம் ஏற்படுத்த முடியும். வெளி நாட்டிலேயிருந்து வரக்கூடிய பயணிகள் அந்தப் பகுதிக்கு வருவதற்கும் அதன் மூலமாக எங்கள் பகுதிக்கு நல்ல வருமானம் வரக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

மலைவாழ் மக்களுக்கு வருமானத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிற கடுக்காய், புளி, மாமரம் போன்றவைகளை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வன இலாகாவினர் தடுத்து விடுகிறார்கள். அதை குறைந்தது இன்னும் 5 அல்லது 10 ஆண்டு காலமாவது ஒத்திப் போடவேண்டும். அந்த மலைவாழ் மக்களுக்கு வேறு ஏதாவது ஒரு வழியிலே வருமானம் வருவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு பிறகு வன இலாகாவினர் கடுக்காய் மரங்கள் போன்றவைகளை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க ஆதி திராவிடர் நலத்துறை முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்னையைப் பொறுத்தவரையில் எங்கள் பகுதியிலே ''போர்வெல்'' களைப் போட்டிருக்கிறார்கள். குடிநீர்க் கிணறுகளைப் போட்டிருக்கிறார்கள். ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் செய்கிற இந்தச் செலவை குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செய்யப்படுகின்றது. பல இடங்களிலே 4, 5 ஆண்டுகளுக்கு முன்னாலே கிணறுகள் வெட்டப்பட்டு அவைகள் எல்லாம் பாதி பாதியிலே நின்று விட்டன. பாதிக் கிணறு வெட்டப்பட்டு கல்சுவா கூட கட்டாமல் பல இடங்களிலே விட்டுவிட்டார்கள். அதைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று குடிநீர் வடிகால் வாரியத்திலே கேட்டோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னும் 2 ஆண்டுகளில் அப்பகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகக் கூறி இருக்கிறார்கள். எங்களுடைய கல்ராயன் மலைப் பகுதி ஒரு தனி அதிகாரியின் கீழ் இயங்கி வருகிறது. அந்தப்பகுதியை டவுன்சிப்பாக மாற்றிகொடுப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

(இ/வு 6-10)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்):** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடம். இப்போது 15 நிமிடம் பேசியிருக்கிறீர்கள்.





**திரு. சோ. கலிதீர்த்தான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த தனி அதிகாரிக்கு பதிலாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு அந்த மக்களுடைய நலனை பாதுகாக்க வேண்டும் என்று நம்முடைய அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் அவர்களுடைய கல்வி வளர்ச்சியில் நம்முடைய சேரப்பட்டு மற்றும் வெள்ளிமலை ஆகிய இடங்களில் உள்ள பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றவேண்டும். அவர்களுக்கு என்று கோமுகி டேமில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அதற்கு கட்டிடம் கிடையாது. பி.டபுள்யூ.டி. கட்டிடம் உடைந்துபோய் எந்த நேரத்திலும் விழக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு கட்டிடத்தைக் கட்டிக்கொடுப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாக வேண்டிய ஏற்பாடுகளைச்செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகள் மீது ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த 3 ஆண்டுகாலமாக இந்த சட்டமன்றத்தில் அந்த கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் கொடுக்கும் 2,700 ரூபாயை உயர்த்த வேண்டும், உயர்த்தவேண்டும் என்று சில உறுப்பினர்கள் என்னை உட்பட இந்த அவையில் எடுத்துச் சொன்னதன் காரணத்தால் இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அதை 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி இருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, என்னுடைய தொகுதியில் ஒரு அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு சகோதரன் அங்கே திருடர்களால் கொலை செய்யப்பட்டான். அந்தக் குடும்பத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்று பல முறை இந்த மன்றத்தில் சொல்லி நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய நிவாரண நிதியிலிருந்து 5 ஆயிரம் ரூபாயை இன்றைக்கு அளித்து அந்த ஆர்டரை என் கையில் கொடுத்து இருக்கிறார்கள். அதற்காகவும் என்னுடைய நன்றியை இந்த மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்த கடன் கொடுத்து வீடு கட்டுவதற்கு நாம் 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம். ஆனால் தாட்கோ மூலமாக வீடு கட்டுவதற்கு 1980–81ல் 10 ஆயிரம் வீடு கட்டவேண்டும் என்று இலக்கு இருக்கிறது. அந்த இலக்கை முடிக்காமல் இதுவரைக்கும் வீடு கட்டாமல் இனிமேல் தான் கட்டப்படும் என்று இந்த புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு 4 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அந்த 4 ஆயிரத்தில் 3,250 ரூபாய் அரசாங்கம் மானியமாக கொடுக்கிறது. பாக்கி 750 ரூபாயை பயன் பெறுபவர்கள் போடவேண்டும் என்று இருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கடன் வாங்கி

கட்டுவதில்கூட இன்றைக்கு சிமெண்டு விலை, கொத்தனார் கூலி, சுண்ணாம்பு விலை, கல் விலை எல்லாம் விஷம் போல் ஏறியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் இந்தச் 10 ஆயிரம் வீடு என்பதை இன்னும் நீங்கள் குறைத்துக் கொள்ளுங்கள். ஒரு வீட்டுக்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாயாவது கொடுத்து வீடு கட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்கவேண்டும். அப்படிச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1980–81-ல் ஒதுக்கப்பட்ட அந்த இலக்கு 10 ஆயிரம் வீடு இன்னும் கட்டப்படவில்லை என்பது இப்போது தெள்ளத் தெளிவாகத்தெரிகிறது. அதை உடனடியாக நிவர்த்தி செய்யவேண்டும் என்று குறிப்பிடுவதோடு இந்த தாட்கோ ஆபீஸ் மட்டும் வெளியே போய் இருக்கிறது. வேறு எந்த இலாக்கா ஆபீஸாவது வெளியே போய் இருக்கிறதா? தாட்கோ ஒரே ஆபீஸ் மட்டும் தான் இன்றைக்கு விழுப்புரத்தில் வைத்து இருக்கிறார்கள். இங்கேயிருந்து விழுப்புரம் நாம் செல்லவேண்டும் என்றால் இரவு நேரத்தில் போகும்போது அங்கே ஆபீஸில் யாரையும் பார்க்க முடியவில்லை. மதுரை யிலிருந்து ரயிலிலோ, பஸ்ஸிலோ வந்தாலும் காலை 5 மணிக்கு வந்துவிடுகிறோம். அப்போதும் அவர்களைப்பார்க்கமுடியவில்லை. ஆகையால் இந்த அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு ஆபீஸ் என்ற அளவில் எடுத்துக்கொள்ளாமல் இதை எல்லா ஆபீஸ் மாதிரியும் மதித்து இந்த ஆபீசையும் இந்த தலைமையிடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற குறிப்பில் மாடுகள் வாங்குவதற்கு 600 ரூபாய் என்று இருக்கிறது. இன்றைக்கு இந்த 600 ரூபாயில் சிறிய கன்று கூட வாங்க முடியாது. அதை தயவுசெய்து 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, பால் திட்டம். அரிசன மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள மக்களுக்கு இன்றைக்கு பால் மாடுகள் வாங்கிக் கொடுக்கிறோமே அது அவர்களை உயர்த்தக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆனால் ஐ.ஆர்.டி.பி. திட்டத்தின் கீழ் இன்றைக்கு 2,500 ரூபாய் கொடுத்து அதிலே 1,250ரூபாய் அரிசன மக்களுக்கு மானியமாக கொடுக்கும்போது ஏன் நாம் மட்டும் 1500 ரூபாய் அதிலே 500 ரூபாய் மானியம், பாக்கி கடன் என்று சொல்லக் கூடிய நிலமை உருவாக்கப்பட்டிருக்கின்றது? இது நல்லதா? இந்த திட்டத்தை கைவிட்டுவிட்டு அந்த 2,500 ரூபாய் கொடுக்க கூடிய ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் கொடுக்கிறார்களே அந்த அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



இன்றைக்கு ஐ.ஏ.எஸ். பரிட்சைக்கு நிறையப் பேர்கள் படிக்கச் செல்கிறார்கள். அப்படி பாஸ் பண்ணிய குழந்தை களுக்கு டெல்லியிலே இருக்கக்கூடிய ராவ் ஐ.ஏ.எஸ். இன்ஸ்டிட் யூட்டிலே, பயிற்சி நிலையத்திலே படிப்பதற்கு பிற்பட்ட மாணவர்களுக்கு 10 பேர்களுக்கு இந்த அரசு சலுகை வழங்கிக் கொண்டிருக்கிறது. அதே நேரத்திலே அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்கள் சென்னையிலிருந்து மட்டும் படிக்கலாம் என்றால்—நான் அதைக் குறைவாகச் சொல்லவில்லை— சென்னையிலே இருந்து படிப்பதைக் காட்டிலும் தலைநகரத்திலே இருந்து படிப்பார்களானால் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் எழுதுவதற்கு பல மாதிரிக் கேள்விகளை அவர்கள் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும், அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு கொடுக்கும் சலுகையை அரிசன மாணவர் களுக்கும் கொடுத்து உதவ வேண்டுகிறேன்.

இன்றைக்கு சட்டக் கல்லூரியிலே மாணவர்கள் படிக் கிறார்கள். அந்தச் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு சென்னையிலே இருக்கிற கல்லூரியிலே மட்டும்தான் ஹாஸ்டல் வசதி இருக்கிறது. ஆனால் கோவை, மதுரை மற்ற இடங்களில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதியும் இல்லை, ரெஸிடன்ஷியல் ஸ்காலர்ஷிப்பும் இல்லாத காரணத் தினால் அவர்கள் உண்ணாவிரதம் இருந்து எங்களைச்சுற்றி வளைத்துக் கொண்டார்கள். நாங்கள் எப்படியும் அமைச்சரிடம் சொல்கிறோம், முதலமைச்சரிடத்திலேயும் சொல்லி ஹாஸ்டல் வசதியும், ரெஸிடன்ஷியல் ஸ்காலர்ஷிப் வசதியும் செய்யச் சொல்கிறோம் என்று சொல்லி அதற்குப் பிறகு இங்கே அது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இன்னும் அது வரவில்லை. அதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் கிட்டத்தட்ட அரிசனக் குடும்பங்கள் மட்டும் 18 லட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு ஒவ்வொரு யூனியனிலும் ஆயிரம் குடும்பங்கள் எடுக்கிற அளவுக்கு ஒரு ஜில்லாவிற்கு ஒரு யூனியன் என்ற அளவிலே அமைச்சரவை திட்டம் தீட்டியிருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டக் கூடியதாக இருந்தாலும் அப்படி வந்தாலும் ஆண்டு ஹோல் 15 ஆயிரம் குடும்பங்கள்தான் ஆண்டுக்கு பயன்பெறும். அதை மாற்றி 50 ஆயிரம் குடும்பங்களுக்காக இந்த நலத்திட்டங் களைச் செய்துகொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தீண்டாமையைப் பற்றியெல்லாம் பேசினார்கள்; 18 சதவீதம் என்பது உண்மையிலேயே ஒரு துறையிலாகிலும் இருக்கிறதா என்று பார்த்தால் நம்முடைய அமைச்சர் கையிலே இருக்கிற அரிசன நலத் துறையிலே கூட அந்த 18 சதவீதம் நிரப்பப்படவில்லை என்பதை அறுதியிட்டு உறுதியாக நான் சொல்லிக் கொள்கிறேன். ஒரு துறையில் கூட அது நிரப்பப் படவில்லை என்றால் அதற்கு என்ன காரணம்? ஏன் நிரப்பப்

படவில்லை? நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன் எஸ்.சி.அன்ட் எஸ்.டி. வெல்பேர் அசோஷியேஷன் என்ற அளவுக்கு ஒரு குழுவை வைத்து அந்தக் குழுவின் மூலமாக அங்கே இருக்கின்ற சீனியர் ஐ.ஏ.எஸ். அதிகாரியைத் தலைமை தாங்கச் சொல்லி எந்த எந்தத் துறையிலே 18 சதவீதம் பூர்த்தி செய்யப்படவில்லையோ அதைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு 3 ஆண்டுக்காலத்திற்குள்ளாக பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கித் தந்தால் தமிழகத்திலே உள்ள அரிசன மக்கள் அதை அடையக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசில் இதற்கு ஒரு கமிஷனே இருக்கிறது. ஒரு முறை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன், அண்ணன் என்று சொல்வது பார்லிமெண்டரி அல்ல, மதிப்பிற்குரிய திரு. இளையபெருமாள் அவர்கள் ஒன்மேன் கமிஷன் என்ற முறையிலே இந்தியா முழுவதும் சுற்றிவந்து அறிக்கை சமர்ப்பித் திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரிசன மக்களுக்கு எங்கெங்கெல்லாம் விழுக்காடு நிரப்பப்படாமல் இருக்கிறதோ அதைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமையை மத்திய அரசு உருவாக்கி இருக்கிறது. குறிப்பாக ரயில்வே துறையிலே 18 சதவீதத்தை எட்டிப்பிடிக்கக்கூடிய அளவுக்கு இருந்து கொண்டு இருக்கிறது. அந்த நிலைமையிலே இந்த அமைச்சரவை 3 ஆண்டு திட்டத்தைப் போட்டு எம்.ஏ, எம்.ஏ.பி.டி., எம்.எஸ்.ஸி., பி.ஏ., பி.ஏ.பி.டி., பி.எஸ்.ஸி., படித்துவிட்டு ஏராளமான அரிசன மக்கள் ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். அவர் களுக்கு எல்லாம் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வேலைவாய்ப்பு அளிப்பதற்கு வழிவகை செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். நான் குழுவை அமைக்கவேண்டுமென்று சொன்னேனே, எஸ்.டி. அன்ட் எஸ்.சி. எம்ப்ளாயிஸ் அசோஸியேஷன் என்று, அந்தக் குழுவிலே அந்த அந்த இலாக்காவிலே உள்ள முக்கியமான அதிகாரிகளை உறுப்பினர்களாக வைத்து ஒரு சீனியர் ஐ.ஏ.எஸ். ஆபீசரை தலைமைதாங்கச் சொல்லி எந்த எந்தத் துறைகளிலே எத்தனை விழுக்காடு என்பதைக் கண்டறிந்து முதலமைச்சருக்கு சமர்ப்பித்து அதன் மூலமாக 18 சதவீதத்தை பூர்த்தி செய்ய முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு இலாகாவிலே 10 வேலைகள் இருக்கின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த பத்து வேலைகளில் ரிசர்வேஷன் அப்ளிகபிள் இல்லை, ரிசர்வேஷன் கொடுப்பதில்லை, அதை 4 ஆகக் குறைத்து நான்கு இடங்களிலே இருந்தாலும் அதிலே ஒரு அரிசன மகனுக்காவது வேலை கொடுத்து அந்த அரிசன மக்கள் வாழ்க்கையை உயர்த்துவதற்கு அமைச்சர் வழிவகை செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(இரவு 6–20)

அதுமாத்திரமல்ல. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் மத்திய அரசு குழாய் கிணறுகளை அமைத்துக் கொடுக்கிறது. எங்கெல்லாம் அரிசன மக்களுக்கு இடம் இருக்கிறதோ, ஒரு



ஏக்கர், ½ ஏக்கர், 10 செண்ட், 20 செண்ட் என்று வைத்திருக் கிறார்களோ அவர்கள் கிணறு வெட்டமுடியாமல் மிகவும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாசன வசதி உண்டாகிற அளவில் கிட்டத்தட்ட 3-ல் ஒரு பாகம் இனாம். அதாவது 5000-க்கு மேற்படாமல் கொடுக்கலாம் என்று குறிப்பிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை அமல் நடத்துவ தோடு இப்போது மத்திய அரசு 10 கோடி ரூபாய் கொடுத் திருப்பதை நான் பத்திரிக்கையிலே படித்தேன். இங்கே குறிப்பிலும் இருக்கிறது. அப்படி கிணறுகளை அமைப்பதிலே அவர்கள் 10 கோடி கொடுத்தால் இந்த அரசாங்கம் 10 கோடி கொடுக்கலாம். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அன்றைக்கு சொல்கிறபோது ஏழைகளுக்கெல்லாம், வறுமைக்கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு எல்லாம், நிலம் இல்லாதவர்களுக்கு வேஷ்டி, சேலை கொடுப்பதாகச் சொன் னார்கள். இது உண்மையிலே தேவைதானா என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காகும் பணத்தை எல்லாம் இந்த ஏழை அரிசன மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஒதுக்கி செலவு செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும். அரிசன சமுதாயத்திலே பிறந்த நான் இதை எதிர்க்கிறேன் என்று நினைக்கவேண்டாம். நான் எதிர்க்கவில்லை. மக்களை கைதூக்கி விடக்கூடிய அளவிற்கு இருக்கிற அரசாங்கம் அவர்களுக்கு துணி மணி கொடுத்தோ, சோறு போட்டோ—அதற்காக நான் சத்துணவுத் திட்டத்தை எதிர்ப்பதாக நினைக்க வேண்டாம், அதை எதிர்க்கவில்லை—அவர்களை வாழ வைக்க முடியாது என்பதை சுட்டிக்காட்டி, அதற்கு செலவு செய்கிற தொகையை கிணறு வெட்டியோ அல்லது எங்கெல்லாம் வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கிறார்களோ அவர்கள் வாழ்வில் முன்னுக்கு வருவதற்கும் பொருளாதாரத்தை உயர்த்தும் அளவில் திட்டங்கள் போட்டுக் காரியங்கள் ஆற்ற வேண்டுகின்றேன்.

இன்றைக்கு நான் 27 வருடங்களாக அரசியலில் இருந்து வருகிறேன். எத்தனையோ முறை கல்வியமைச்சர் அவர்களிடம் சொல்லிப் பார்த்தேன். என் தொகுதியில் நிறைய பெண்கள் இருக்கிறார்கள். அந்த பிள்ளைக்கு அக்கா, அவள் அப்பனுக்கு அக்கா, அவள் அம்மாவிற்கு அக்கா, இப்படி அக்கா, அக்கா என்று என்னை சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு தயவு செய்து அமைச்சர் அவர்கள் நிலக்கோட்டையில் பெண்கள் ஐ.டி.ஐ. ஆரம்பிப்பதற்கு பெர்மிஷன் கொடுக்க வேண்டும். அனுமதி கொடுத்தால் நான் இடத்தை வாங்கிக் கொடுப்பதற்கு முழு முயற்சி எடுக்கிறேன். யாரையாவது பிடித்து கட்டடம் கட்டுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். அதற்கு அடுத்து சமுதாயக் கூடங்கள். என்று எனக்கு முன்பு பேசிய அண்ணன் அவர்கள் கூறினார்கள் நினைக்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பா. பழனியப்பன்): அண்ணன் என்று சொல்வது அன்பார்லிமெண்டரி என்று சொல்லி உறுப்பினர் திரும்பவும் இப்போது சொல்வது பொருத்தமாகுமா என்று கேட்கிறேன.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இல்லை, மாண்புமிகு அங்கத்தினர் திரு. இளையபெருமாள் அவர்கள் சொன்னார்கள். சொல்வதற்கு வாய் கூசுகிறது, ஆகவே அந்த அடிப்படையிலே ஒவ்வொரு தாலுகா தலைநகரங்களிலும் அல்லது யூனியன் தலைமையிடங்களிலும் கல்யாண மண்டபம் கட்டிக் கொடுத் தால் அவர்களுக்கு மிக உதவியாகவும், சாலச் சிறந்ததாகவும் இருக்கும்.

இன்றைக்கு வீட்டு மனைகளை கொடுத்து வருகிறோம். அதற்கான பட்டாக்களையும் கொடுத்து வருகிறோம். ஆனால் ஐந்து ஆண்டுகள், பத்து ஆண்டுகளானாலும் கூட சம்பந்தப் பட்ட அதிகாரிகள் அவர்களுக்கு இடத்தை பிரித்து கொடுப்ப தில்லை. அவர்களிடத்தல் கேட்கும்போது ரொம்ப அசால்ட்டாக பார்க்கலாம் என்று பதில் சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் எங்கெங்கெல்லாம் பட்டா கொடுத்துவிட்டு வீட்டு மனை இன்னும் அளந்து கொடுக்கப்படவில்லையோ அவை களை உடனடியாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு என்னுடைய ஊரில் ஒரு கலப்புத் திருமணம், நான் அவர்களிடத்திலேயே சொல்லிவிட்டு வந்தேன். நான் கல்யாணத்திற்கு வரவில்லை என்று நினைக்கவேண்டாம். பிறகு வருகிறேன் என்று சொலலிவிட்டு வந்தேன். அவர்கள் விரும்பிய கல்யாணம் செய்யவில்லை. பெண் வீட்டார்கள் அழகன்பட்டி என்ற கிராமத்திற்கு வந்து இருக்கிற அரிசன பையனைப் பார்த்து இன்றைக்கு திருமணம். பெண் வீட்டார் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்தவர்கள். அந்த திருமணத்திலே அவர்கள் தாய், தந்தையார் இருந்து முறையோடு பெண் கேட்டு முறையாக கல்யாணம் செய்து வைத்தால் அவர்களுக்கு எவ்வளவு அதிகப்படியான அளவிலே உதவி செய்வோமோ அந்த அளவிற்கு அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த பையனை இதர சாதியைச் சேர்ந்த பெண் கல்யாணம் செய்து 4, 5 ஆண்டு களாகிவிட்டது. அந்த பெண் கவுண்டமார் பெண்; அரிசன பையனை கல்யாணம் செய்து கொண்டாள். அவள் பி.ஏ.பி.டி. படித்தவள். அவளுக்காக வேலைக்கு நானும் அலை, அலை என்று அலைந்துவிட்டேன். இதுவரையில் எந்த வேலையும் கிடைக்கவில்லை. அவளுடைய தாய், தந்தையரால் விரட்டப் பட்டு வெளியிலே இருக்கிற நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.



அடுத்து இறந்தவர்களுக்கு நாம் 50 ரூபாய் கொடுக் கிறோம். அது கூட 3 மாதம், 4 மாதம் என்று ஆகிறது. அந்த 50 ரூபாயை சற்று உயர்த்தி 100 ரூபாய், அல்லது 150 ரூபாய் என்று அன்றைக்கே கிடைக்கிற அளவிலே செய்ய வேண்டும். பஞ்சாயத்து போர்டு மூலமாக அன்றைக்கே கிடைக்கிற நிலைமை உருவாக்கப்படுமேயானால் அது சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்

தொழில் துறையை எடுத்துக் கொள்வோமானால், நிச்சய மாக இன்றைக்குப் பல தொழில் தெரிந்தவர்கள் மனுக்களைப் போட்டு, அலைந்து கொண்டிருந்தால்கூட பணம் கிடைப்ப தில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருப்பதை மாற்றி ஒரு ஜில்லாவுக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து, ஒரு ஜில்லாவில் 100 பேர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று வைத்து, சொந்தத் தொழில் அல்லது நமது மதிப்பிற்குரிய மாண்புமிகு குமரி அனந்தன் அவர்கள் சொன்னார்களே அந்த மாதிரியான தொழில்களை ஊக்குவிக்க அரிசன ஆண்களுக்கும் பெண் களுக்கும் அதிகப்படியான பண உதவி கொடுக்க வேண்டு மென்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மதுரை மாவட்டத்திலே குழாய்க் கிணறுகள் எடுக்கவில்லை யென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சொன்னார்கள். இந்த வருஷம் அதை எடுக்காமல் இருந்தால் நிச்சயமாக அந்தப் பணத்தைச் செலவழிக்க முடியாது. ஆகவே, நம்முடைய மாநிலத்திலே உள்ள 15 ஜில்லாக்களையும் எடுத்து, எங்கெங் கெல்லாம் இந்த நிலங்கள் இருக்கின்றனவோ, அந்த, அந்த யூனியன்களில் இருக்கிற கமிஷனர்கள் மூலமாகவோ அல்லது தாசில்தார் மூலமாகவோ அந்த நிலங்களின் அளவுகளை வாங்கிக் கொண்டு, அதை வைத்து குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதில் பாதி மானியம் இருக்கிறது. 1 இலட்சம் குழாய்க் கிணறு போட்டால் 50 பேர்களுக்காவது மானியம். அதிலே 10 பேராவது பெனிஃபீஷியரீஸ் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. அப்படி வரும்போது 3/ பாக மாவது அவர்களுக்கு மானியமாகக் கொடுத்து இந்தக் குழாய்க் கிணறு திட்டத்தை அமல் நடத்தினால் சாலச் சிறந்ததாக இருக்கும். ஒரு சில ஜில்லாக்களை மட்டும் எடுத்துக் காண்டு மற்ற ஜில்லாக்களைப் புறக்கணித்தால் அதுவும் நல்லதல்ல என்று இந்த நேரத்திலே கூறிக்கொண்டு....... (மணியடிக்கப் பெற்றது).

திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிட பழங்குடியினர் துறையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1983—84 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையை நான் மனப் பூர்வமாக வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ரூ. 50 கோடியே 61 இலட்சத்து

58 ஆயிரம் இந்தத் துறைக்கு ஒதுக்கி, நல்ல பல திட்டங்களை
நிறைவேற்ற இருக்கிற புரட்சித் தலைவருடைய அரசை நான்
மனமாறப் பாராட்டுகின்றேன். இந்த அரசு ஆதி திராவிடர்
பழங்குடி மக்களுடைய வாழ்க்கை மேம்பாட்டிற்காக, திட்டமிட்டு
ஒரு கொள்கையை வகுத்துச் செயல்படுகிறது என்பதை எடுத்துக்
காட்டுகின்ற வகையில், கல்வித் துறை, வேலை வாய்ப்பு,
பொருளாதார மேம்பாடு, பொதுச் சுகாதாரம், வீட்டு வசதி
போன்ற பணிகளைச் சிறப்பாகச் செய்து கொடுக்கின்ற
வகையிலே திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

காலையிலே இங்கே பேசிய மதிப்பிற்குரிய மாண்புமிகு
உறுப்பினர் பழனிவேலு அவர்கள் ரூ. 45 கோடிதான் இந்த
துறைக்கு ஒதுக்கியது. 1 சதவீதம் மக்கள் தொகை இருக்
கிறார்களே, இதில் 2½ சதவீதம் தானே இந்த நிதி;
இந்தச் சமுதாயத்தின் மொத்த மக்களின் மீது இந்த அரசுக்கு
அக்கறை இல்லையா என்றெல்லாம் கேட்டார்கள். அதே
போல மாண்புமிகு ரகுமான்கான் அவர்களும் ரூ. 50 கோடி
போதுமா என்று கேட்டார்கள். ஆனால் இங்கே பேசியவர்கள்
அனைவருமே இந்த அரசு ஆதி திராவிடப் பழங்குடி மக்களுக்கு
ஒதுக்கியிருக்கின்ற தொகையை, ஆற்றுகின்ற பணிகளைக்
கொஞ்சம் மறைத்து, குறைகளை மட்டும் தெரிவித்தார்கள்
என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்
கின்றேன்.

எல்லா துறைகளின் மூலமாகவும், 1983-84 ஆம் ஆண்டில்
ஆதி திராவிட பழங்குடி மக்களுக்காக அனைத்துத் துறைகள்
லிருந்து, ரூ. 119 கோடியே 56 இலட்சத்து 15 ஆயிரம்
செலவழிக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே நான்
தெரியப்படுத்துகிறேன்.

அதே போல பழங்குடி மக்களுக்கு அனைத்துத் துறைகளின்
வாயிலாகவும் ரூ. 60 கோடியே 58 இலட்சம் செலவழிக்கப்
படுகிறது என்ற உண்மையை இந்த மாமன்றத்திற்கு நான்
எடுத்து வைக்க விரும்புகிறேன். ஆதி திராவிடர்களை, பழங்குடி
யினரை, மேம்படுத்தி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டு
மென்றால், அவர்களை அறியாமையிலிருந்து அகற்ற வேண்டு
மென்றால், கல்வி கற்பித்தால்தான் மற்றவர்களைப் போல்
அவர்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என்று பெரும்
நோக்கத்தைத் திட்டமாக வைத்துக்கொண்டு இந்த அரசு
செயலாற்றிக்கொண்டு வருகிறது. ஆகவேதான் ஒதுக்கப்படுகின்ற
நிதியிலே அதிக அளவு கல்வித் துறைக்கு இந்த அரசு ஒதுக்கி
யிருக்கிறது என்பதை, 1981-82-ல், ரூ. 17,91,25,000மும்,
1982-83-ல் ரூ. 23,17,58,000மும். 1983-84 ஆம்



(இரவு 6-30)

ஆண்டு 23 கோடியே 78 இலட்சத்து 27 ஆயிரம்
ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த
நேரத்தில் எடுத்து வைக்க விரும்புகிறேன். ஒரு ஆதி
திராவிட மாணவனுக்குப் படிக்க வேண்டுமென்ற எண்ணம்
இருந்தால் போதும் முதல் வகுப்பிலேயிருந்து பட்டப்படிப்பு
வரையிலும் முழுமையாக அரசே செலவு செய்து அவர்களைப்
படிக்க வைப்பதற்குத் தயாராக இருக்கிறது; அதற்கான திட்டங்
களைத் தீட்டியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரியப்
படுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்
பள்ளிகள் 947 உள்ளன. இதன்மூலம் இந்தப் பள்ளிகளில்
1,78,000 ஆதிதிராவிடர்-பழங்குடியினர் மாணவர்கள் படிக்
கிறார்கள்.

மேல்நிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும்
நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பழங்குடி
யினருக்கு மட்டும் உறைவிடப் பள்ளிகள் என்ற தங்கிப் படிக்கும்
வகையில் 138 பள்ளிகள் இந்த அரசால் நடத்தப்படுகின்றன
என்பதை நான் பெருமகிழ்ச்சியுடன் இந்த நேரத்தில் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

கல்லூரிகளிலும், தொழில் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளி
களிலும் படிக்கின்ற மாணவர்கள், மாணவியர்கள் 675 இல்லங்
களில் 47,276 மாணவ மாணவிகள் பயன்பெறுகிறார்கள் என்ற
நல்ல செய்தியை இந்த மாமன்றத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

தனியார் நிர்வாகத்தின் மூலமாக தமிழகம் முழுவதும்
நடத்தப்படும் அந்த இல்லங்களில் தங்கிப் படிக்கின்ற 3,308
மாணவ மாணவியர்களுக்கு உதவித் தொகையை இந்த அரசு
வழங்குகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன்.

மருத்துவக் கல்லூரிகளில், பொறியியல் கல்லூரிகளில்,
விவசாயக் கல்லூரிகளில் ஆதிதிராவிட மாணவர்கள் அதிக
அளவில் இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியிலேதான்
படிக்கிறார்கள் என்ற நிலைமையைத் தெரிவித்து, நியாயமாக
அவர்களுக்கு இடங்கள் வழங்கப்படுகின்றன என்பதையும் இந்த
நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் மூலம்
ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரையில் படிக்கின்ற ஆதி
திராவிடர்களுக்காக இயங்குகின்ற பள்ளிகள் அனைத்திலும்
உணவு அளிக்கப்படுகிறது என்பதையும் தெரிவிக்க விரும்பு
கிறேன்.

அதேபோல், நலப பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளுக்கு ஆண்டுக்கு இரண்டு செட் துணிகளைத் தைத்துக் கொடுக்கப் படுகின்றன.

ஆதிதிராவிட மாணவர்கள் தனியாக மாணவர் இல்லங் களிலிருந்து பள்ளிக்குச் செல்லும்பொழுது வேறு வேறாகத தெரியும். பிரிவினை போலத் தெரியும், எனவே அப்படி வேண்டாமென்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னது என் நினைவில் இருக்கிறது. ஆகவே, அது போன்ற நிலைமையில்லாமல் ஆதிதிராவிட மாணவர் இல்லங்களில் மாணவர்களைச் சேர்க்கும்பொழுது 75 சதவீதம் பேர்களை ஆதிதிராவிடர்களிலிருந்து, 20 சதவீதம் பேரைப் பிற்பட்ட வகுப்பிலிருந்தும், மீதியுள்ள 5 சதவீதம் பேர்களை முன்னிலை வகுப்பு மாணவர்களையும் சேர்த்து ஒன்றாக தங்க வைத்து ஒரு சமத்துவத்தை உருவாக்க இந்த அரசு பணிகளை மேற் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பழங்குடியினருக்காக 5 உறைவிடப் பள்ளிகளும், ஒரு நடுநிலைப் பள்ளியும் இயங்கிக் கொண்டிருக் கின்றன. ஆசனூர் என்ற இடத்தில் உள்ள நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

புதிதாக உறைவிடப் பள்ளிகளைத் துவக்கும்பொழுது ராமா பெய்லூர், வாணிப்புத்தூர், காலிதிம்பம், கேர்மாலம், அட்ரோடு போன்ற பகுதிகளில் உறைவிடப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் வைத்திருக்கிறேன். அதை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, நான் திரும்பச் சொல்கிறேனே என்று தாங்கள் என் மீது கோபிக்கக் கூடாது. அருள்கூர்ந்து, இப்படிப்பட்ட ஒரு சபையை நடத்தத் தான் வேண்டுமா என்பதை எண்ணிப்பார்த்து, சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது இந்த நாட்டுக்குத் தெரிவிக்கப்படட்டும். இந்த அரிசன மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையின மீதான விவாதத்தின் பொழுது இத்தனை உறுப்பினர்கள்தான் வந்திருக்கிறார்கள் என்ற நிலை நாட்டுக்குப் புரியட்டும். இது இந்த நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டிய விஷயமாகும். கோரம் இல்லாமல் மிகக் கோரமான முறையில் இந்த மன்றத்தை நடத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



ஒரு பகுதி மக்களின் பிரச்னையைப் பற்றி விவாதிக்கும்பொழுது. கட்சி பேதம் பார்த்துச் சொல்லவில்லை, இவ்வளவு பொறுப்பற்ற நிலையிலே இந்த மாமன்றத்தை நடத்துவதானது இந்த மக்கள் பால் நாம் ஒரு அவலநிலையை வெளியாக்குவதாகத் தெரிகின்ற நிலைமை இருப்பதைப்போல் இருக்கிறது என்று கூறிக் கொள கிறேன். இப்படி நடத்துவது சிறந்ததா என்பதைப்பற்றி தாங்கள் யோசிக்க வேண்டுமென்று கேட்பதோடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபொழுது -வது முதற்கொண்டு கல்லூரி வரையிலும் இலவசமாக என்று சொன்னார்கள். அவர்கள் தெரியாமல் சொல்லியிருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன்

1-வது பிளஸ் 2 வரையிலும் எல்லா சமுதாயத்தினருக்கும் 'பிரீ எடுகேஷன்' என்பது அரசாங்கத்தினுடைய பாலிசி. ஆகையால் அவர்களுக்கு அந்த கிரேடுவேஷன் இருக்கிறதே அந்த 3 வருஷம்தான் அந்த மக்களுக்கு இலவசம். அதிலே ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆபீசர் அல்லது ரூ. 9,000/-க் மேல் வருட வருமான முள்ள ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளை களுக்கு அந்த இடத்திலே சம்பளத்தைக் கட்டித்தான் படிக்க வேண்டும். அதற்காக சலுகை இல்லை என்பதை இந்த மாமன்றமே அறியவேண்டுமென்பதற்காக திரும்ப சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. ப. பழனியப்பன். குறைந்த பட்ச எண்ணிக்கை இல்லாததால் மணி அடிக்கவேண்டும்( (மணி அடிக்கப் பெற்றது)

திரு. ஆர. ரங்கசாமி : மாண்புமிகு மரியாதைக்குரிய உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் ரூ. 9,000-க்கு மேலே வருமானம் உள்ளவர்களுக்கு எந்தச் சலுகையும் இல்லை என்று சொன்னார் கள். அதுதான் புரட்சித் தலைவர் அரசினுடைய சமதர்ம சமுதாயம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களிலே கூட, பழங்குடியினர் மக்களிலே கூட, வசதி படைத்தவர்கள் கிடைக்கின்ற அந்த சலுகைகள் எல்லாம் பெற்று, முன்னேறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்தினால் தான் சமுதாயத்திலே மிகவும் தாழ்ந்திருக்கின்ற அந்தப்பகுதியிலே இருக்கின்ற மக்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்பதற்காகத் தான் அந்த வருமான வரம்பு வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவன்புடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

என்னுடைய தொகுதியான சத்தியமங்கலம், தலைமலை குத்தியாளத்து ஆகிய பகுதிகளில் சுமார் 15,000-க்கும் மேற்பட்ட ஆதிவாசிகளும், சுமார் 75,000-க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடர் களும் வசிக்கின்றார்கள். இங்கே ஆதிதிராவிட பழங்குடியினர் கூட்டுறவு விற்பனை சங்கம் உள்ளது. இதை நிலை உயர்த்தி பல

நோக்கு கூட்டுறவு சங்கமாக ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை 1983—84 ஆம் ஆண்டில் சேர்த்து உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறைவிடப் பள்ளிகளை பல இடங்களில் ஆரம்பித்திருக்கிறார்கள். என்னுடைய தாழ்மையான யோசனை என்னவென்று சொன்னால், மலைப்பகுதியிலே போக்குவரத்து இல்லாத இடங்களில் 'செட்டில்மெண்ட் ஏரியாக்களிலே' உறைவிடப் பள்ளிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். அதனாலே அதிகாரிகள், ஆசிரியர்கள் சென்று வருவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட இடங்களில் ஒரு மையப்பகுதியாகத் தேர்ந்தெடுத்து, போக்குவரத்து வசதியை ஏற்படுத்தி, ஆரம்பப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி ஆகியவைகளை ஒரே இடத்தில் அமைத்து உதவினால், நிச்சயமாக அந்தக் குழந்தைகளும் மற்றவர்களைப் போல் சிறப்பான கல்வி கற்க வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலனுக்காக 2 விற்பனை சங்கங்கள், 5 வனத்தொழிலாளர் ஒப்பந்த சங்கங்கள், 15 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தப்படுகின்றன. இந்தச் சங்கங்கள் மூலம் இவர்களுக்கு தொழில் வாய்ப்பு, உற்பத்தி செய்யும் பொருட்களை நியாய விலைக்கு விற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. பல லட்சக்கணக்கான ரூபாயை அவர்களுக்கு மான்யமாக வழங்கி, சமுதாயத்தில் அவர்கள் சுயமாக வாழ்வதற்கு வழிவகைகளைச் செய்து கொடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(இரவு 6—40)

அதே நேரத்தில் நான் இன்னொரு பணிவான வேண்டுகோளை தெரிவித்துக்கொள்கிறேன். ஆதிதிராவிடர் நலத்துறையைப் பொறுத்தமட்டில், மாவட்ட அளவிலே இருக்கின்ற அதிகாரிகள் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அந்த நிர்வாகத்தில் இருக்கிறார்கள். இயக்குநர்களுக்கு நேரடியாக தொடர்பு கிடையாது. ஆகவேதான் மாவட்டத்திற்குக் கீழே நடைபெறுகின்ற அந்தப் பணிகள் கொஞ்சம் காலதாமதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அந்தத் துறையை மாவட்ட அளவிலே இருப்பதை இயக்குநர் அவர்களுடைய நேரடி நிர்வாகத்திற்கு கொண்டுவர வேண்டுமென்ற தாழ்மையான என்னுடைய வேண்டுகோளை தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்று எனக்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.





திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே நம்முடைய ஆதிதிராவிட நலத்துறை அமைச்சராக பொறுப்பேற்று இருப்பவர், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோர்களைக் குறித்த மானியக் கோரிக்கையையும் எழுதுபொருள் ஆகிய மானியக்கோரிக்கையையும் இந்த மன்றத்திலே வைத்து, அதிலே பேசுகின்ற வாய்ப்பினை அளித்ததற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன் என்று வழக்கமாக ஒப்புக்குச் சொன்னாலும், நான் முன்னாலே சுட்டிக்காட்டியதைப் போல இந்த இலாக்கா இந்த மன்ற உறுப்பினர்களாலே எப்படி மதிக்கப்படுகிறதோ, அதைவிட மோசமாக இன்றைக்கு அரசாலே மதிக்கப்படுகிறது. இந்த இலாக்காவுக்கு அரசியல் சட்டத்திலே இப்படிப்பட்ட ஒரு அனுசரணையும், ஆதித்திராவிட பெருங்குடி மக்களிடத்திலே வாக்குப் பெறுகின்ற ஒரு பயமும் இல்லாவிட்டால், இப்படிப்பட்ட ஒரு இலாக்காவே இருக்குமா என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. எனவே அரசியல் சட்டம் சொல்கிறதே, வாக்குக்குப் போயாக வேண்டுமே என்ற அடிப்படையிலே இந்த இலாக்காவை இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். இது ஒரு இலாக்கா, இதிலே பாராட்டு என்பதைவிட, ஒரு சமுதாய மாற்றத்திற்காக பாடுபடுகின்ற ஒரு மறுமலர்ச்சி இலாக்கா என்றுதான் இதை நாம் குறிப்பிட வேண்டும். பள்ளிகளைக் கட்டுவதும், சீருடைகள் அணிவதும், சோறுகள் போடுவதும் இப்படிப்பட்ட பல்வேறு வேலைகளைவிட, ஒரு தாழ்ந்த நிலையிலே, ஒரு அழுத்தப்பட்ட நிலையிலே இருக்கிற ஒரு வர்க்கம் ஆண்டாண்டுக்காலமாக இப்படி அடிமைப்பட்டிருக்கிற ஒரு இனம், மீண்டும் வாழவேண்டுமென்று துடிப்பதற்கான ஒரு துடிப்பு இருக்கிறதே அந்தத் துடிப்பின் அடிப்படையிலே ஏற்பட்டது தான் இந்த இலாக்கா என்பதை நாம் முதலிலே தெரிந்துகொள்ள வேண்டும். ஆதிதிராவிடர்கள் என்று சொல்கிறபோதே இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் அவர்கள். ஆதியிலே வந்தவர்கள் அவர்கள். இன்றைக்கு நாமெல்லாம் திராவிடர்கள். திராவிடப் பாரம்பரியம் என்று சொல்லுகிறோம். இந்த திராவிட பாரம்பரியத்துக்கு நாம் பாதியிலே வந்தவர்கள். ஆனால் இவர்கள்தான் ஆதியிலே வந்தவர்கள். ஆதியிலே வந்தவர்களை பாதியிலே வந்தவர்கள் கொஞ்சம் அழுத்தி வைத்திருக்கிறார்கள். அழுத்தப்பட்ட இந்தச் சமுதாயம் மீண்டும் மேலுக்கு வர வேண்டுமென்று துடிக்கிறதே, அந்தத் துடிப்பினுடைய விளைவு தான் இன்றைக்கு இப்படிப்பட்ட இலாக்காவாக பரிணமித்திருக்கிறது. இன்றைக்கு அண்ணல் காந்தியும், டாக்டர் அம்பேத்கார் அவர்களும், தென்னகத்திலே தந்தை பெரியார் அவர்களும் இல்லாவிட்டால், இன்னும் இந்த சமுதாயத்தை திரும்பிப் பார்ப்பதற்குக் கூட ஆள் இல்லாமலே, பழைய கால நிலையிலே தான் அவர்கள் நொண்டிக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் இந்த இலாக்கா இந்த அரசாங்கத்திலே எப்படிச் செயல்படுகிறது என்பதை ஆளுங்கட்சியிலே இருக்கிற நண்பர்களும், எதிர்க்கட்சியிலே இருக்கிற நண்பர்களும் படம் பிடித்துக்காட்டினார்கள். இந்த இலாக்காவுக்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பது, இடத்திலேயிருந்து தெரிகிறது. அமைச்சர் அவர்கள்

எங்கள் மாவட்டத்துக்காரர், அதிலேகூட எனக்கு பந்தபாசம் உண்டு. இந்த இலாக்காதான் பிற்படுத்தப்பட்டது என்றாலும், இந்தச் சமுதாயம் பின்னே தள்ளப்பட்டு தேங்கி நிற்கிறது என்றாலும், இந்த இலாக்காவுக்குரிய அமைச்சரின் ஆசனத்தைக் கூட முன் வரிசையிலே இல்லாமல் பின் வரிசையிலே தள்ளி வைத்திருக்கிறார்கள். இதுவே போதும். ஒரு வருந்தத்தக்க செய்தி. இருந்தாலும் உங்களுக்கு என்று கொடுத்திருக்க வேண்டும். மற்றவர்கள் எத்தனையோ பேர்கள், இந்தச் சமுதாயத்திலே யிருந்து அமைச்சர்களாக வந்திருக்கிறவர்கள் எல்லாம் முதல் வரிசையிலே இருக்கிறபோது, ஒரு ஆதி திராவிட இனக் குடிமகன், அந்த இலாக்காவை வகிக்கின்ற ஒரு பெருமகனுக்கு நாம் முதல் வரிசையிலே கொடுத்து நாமாவது யாராவது உட்காருவதற்கு இடம் இருந்தாலும் நீங்கள் உட்காருவதுதான் முறை என்று சொல்லி, நாம் கௌரவத்தைச் செய்திருக்கவேண்டும். அதைக் கூட நான் சொல்லவில்லை. காரணம் அவ்வளவு ஒரு அலட்சிய மனப்பான்மை, ஒரு போக்கு இன்றைக்கு இந்த ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது என்பதை மெத்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே ஒருநல்ல ஐடியா என்னவென்றால், தமிழகத்திலே உள்ள அரிசனங்களைப் பற்றி இங்கே குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். அதை நான் படித்துப் பார்த்தேன். தமிழ்நாட்டிலே 484 லட்சம் மக்கள் இருக்கிறார்களாம். அதிலே அரிசன மக்கள் 88 லட்சம். அதாவது 18 பர்செண்ட், 18 விழுக்காடு ஆதிதிராவிடர்கள் குடும்பங்கள் எவ்வளவு இருக்கிறது என்று கணக்குச் செல்கிறது என்றால், அதுவும்18 லட்சம், அரசுத்துறையிலே அவர்களுக்கு எவ்வளவு இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றால், அதுவும் 18 பர்செண்ட். ஆகப்பார்த்தால், மக்கள் தொகையிலே 18 பர்செண்ட், ஆதி திராவிடர்கள் குடும்பங்கள் 18 பர்செண்ட். அரசுத்துறையிலே வேலை வாய்ப்பு தரவேண்டியது 18 பர்செண்ட் எனவே இது ஆதி திராவிடர்கள் இலாக்கா என்பதைவிட, 18 பர்செண்ட் இலாக்கா என்று மாற்றிவிடலாம். கணக்கு எப்படி கரெக்டாக கொடுக் கிறார்கள் பாருங்கள் ஏன் இதை இப்படி கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கான ஒரு உள்நோக்கம் இருக்கிறது. தமிழ் நாட்டிலே ஆதி திராவிட பெருங்குடி மக்களுக்கு என்ன செய்தீர்கள், நாங்கள் எவ்வளவோ பணங்களை வாரிக் கொடுக்கிறோமே என்று மத்திய அரசு கேட்டால் உடனே ஒரு கணக்கைப் போடுகிறார்கள். மொத்தமாக எவ்வளவு செலவு செய்திருப்பார்கள் என்ற கணக்கைப் பார்த்து, தமிழ்நாடு முழுவதும், எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டதோ, அதைப் பிரித்து, அதிலே 18 பர்செண்ட் எவ்வளவு வருகிறதோ, அது ஆதி திராவிடர்களுக்கு செலவு செய்தது என்ற கணக்கைத் தான் இந்த அரசு மத்திய அரசுக்கு சமர்ப்பித்துக்கொண்டிருக் கிறது.

இந்தக் கொள்கைக் குறிப்பு ஏட்டை நான் பார்த்தேன். இந்தக் கொள்கை குறிப்பு ஏட்டிலே புதிய புதிய திட்டங்கள்அவர்களுடைய வளர்ச்சிக்கு உகந்த திட்டங்கள் இருக்குமா என்று பார்த்தேன். கடன் படி கொடை திட்டம். அவர்களுக்கு கடன் கொடுத்து படிப்பதற்கு உதவி செய்கிற திட்டம். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1974-75. திராவிட முன்னேற்றக்



கழக ஆட்சி காலம். கல்விச் சுற்றுலா திட்டம். அவர்கள் எல்லாம் ஊரைச் சுற்றிப் பார்த்து வருவதற்காக ஆயிரம் ரூபாய் தருவது. இது எப்போது ஆரம்பிக்கப்பட்டது? இந்தக் கொள்கைக் குறிப்பேட்டிலேயே போடப்பட்டு இருக்கிறது 1969—70. இதுவும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலம். சட்டப் பட்டதாரி களுக்கு நிதியுதவித் திட்டம். இது எப்போது ஆரம்பிக்கப் பட்டது? 1974—75. இதுவும் கலைஞர் ஆட்சிக் காலத்து திட்டம். தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக்கழகம். இது எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1974 ஆம் ஆண்டு. இதுவும் கலைஞர் காலத்துத் திட்டம். சமுதாயக் கூடங்கள் கட்டுகிற திட்டம். இது எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1971—72-லே கலைஞர் காலத்திலே ஆரம்பிக்கப்பட்டது. கலப்புத் திருமணத் திற்குப் பரிசு கொடுக்கும் திட்டம் அதை ஊக்குவிக்கிற திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? 1968—69. இதுவும் கலைஞர் காலத்து திட்டம். ஆகவே, இதிலே போட்டு இருக்கின்ற திட்டங்கள் எல்லாம் பார்த்தால், அத்தனையும், கலைஞர் காலத்தில் இந்த ஆதிதிராவிட பெருங்குடி மக்களுக்காகப் போடப் பட்ட திட்டங்களாகும்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1968—69 எப்படி கலைஞர் ஆட்சிக் காலமாகும்? அது அண்ணா காலம் அல்லவா?

திரு. துரைமுருகன் : 1968—69-லே எப்போது அண்ணா இறந்தார், அதற்குப் பின்னாலே கலைஞர் அவர்கள் எப்போது பதவி ஏற்றார் என்பது எல்லாம் மாண்புமிகு ராகவானந்தம் அவர்களுக்கு மிகத் தெளிவாகத் தெரியும். எனவே, இப்படிப் பட்ட திட்டங்களை, திராவிட முன்னேற்றக்கழக ஆட்சி காலத்தில் போடப்பட்ட திட்டங்களைத்தான் நீங்கள் இப்போது சுட்டிக் காட்டியிருக்கிறீர்களே தவிர ஏதாவது ஒரு புதிய திட்டங்களை நீங்கள் அறிவித்து இருக்கிறீர்களா என்பதை நீங்களே அருள் கூர்ந்து தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால், இந்த ஆதிதிராவிட பெருங்குடி மக்களிடத்திலே உள்ள வாக்குகளை எப்படி வாங்குவது என்பதிலேயும், எதைப் பேசினால் இந்த மக்கள் ஏமாந்து ஓட்டுப் போடுவார்கள் என்பதிலேயும், நீங்கள் கண்ணும் கருத்துமாக இருந்தால், இந்த நாட்டிலே அவர்களுடைய வாழ்க்கை வளமாவதற்கு எங்கே நீங்கள் வித்திடப்போகிறீர்கள்? நான் கூடக் கேள்விப்பட்டேன். நீங்கள் எதை செய்கிறீர்களோ இல்லையோ அதைப்பற்றி நான் கவலைப் படவில்லை.

ஆனால், ஸ்டேட் ஆதிதிராவிடர் அட்வைசரி கமிட்டி என்று ஒன்று நீங்கள் வைக்கவேண்டும். அதை நீங்கள் போட்டு இருக்க வேண்டும். எப்போது நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்கள்? 1977 ஆம் ஆண்டு. அதிலிருந்து இதுவரையிலே அப்படிப்பட்ட ஒரு போர்டை போட்டு இருக்கிறீர்களா என்றால் கிடையாது. இப்போது 1983 நடக்கிறது. இதுவரையில் கிடையாது என்று சொல்லப்படுகிறது. ஆனால் இதிலே இப்போது என்ன நிலைமை

பைல் பாசாகிப் போய் இருக்கிறது. எனக்கே வந்த தகவல்படி அந்த பைல் எங்கோ போய் மூலஸ்தானத்தில் முடங்கி இருப்பதாகக் கேள்வி. இதுவரையிலே அப்படிப்பட்ட ஒரு அட்வைசரி கமிட்டி போடப்படவில்லை என்பதால் இருந்தே அந்த மக்களின் மீது கிஞ்சித்தும் நல்லெண்ணம் உங்களுக்கு இல்லை என்பது தெளிவு.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். ஒரு காலத்தில் இளையபெருமாள் ரிப்போர்ட் என்று அவர்கள் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். அந்தச் சமுதாயத்தை எந்தெந்த வகைகளில் முன்னேற்றம் செய்யலாம் என்று அதிலே சொன்னார்கள். இந்தியா முழுவதும் புகழ்பெற்ற ஒரு ரிப்போர்ட் அது. அதை எல்லோரும் ஒரு காலத்தில் ஊன்றி ஊன்றி படித்து இருக்கிறோம். அதிலே அவர்கள் பல்வேறு திட்டங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி இருந்தால் இன்றைக்கு அரிசன மக்கள் எவ்வளவோ மேம்பாடு அடைந்து இருக்கமுடியும். ''எராடிகேஷன் ஆப் அன்டச்சபிளிடி போர்ட்' என்கிற போர்டை தாலுக்கா மட்டத்திலே ஏற்படுத்தி, அதன் மூலம் தீண்டாமையை ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்த இளையபெருமாள் ரிப்போர்ட்டிலே அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தார்கள். ஆனால் போதாத காலம் இந்த நாட்டைவிட்டு அவர் போக வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு நாங்கள் ஆட்சிக்கு வந்தபோது, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தபோது, எங்கள் ஆட்சி கலைக்கப்பட்டது. நீங்கள் வந்து இருக்கிறீர்கள், 1977-ல். அந்த தாலுக்கா—வயிஸ் போர்டை நீங்கள் போட்டு இருக்கிறீர்களா என்றால் இது வரையில் போடவில்லை.

ஹை பவர் கமிட்டி என்று ஒரு கமிட்டியைப் போட்டீர்கள். அப்படிப் போட்டதாக இந்த மன்றத்திலேகூடச் சொன்னீர்கள். முதலமைச்சர் அதற்கு சேர்மன். இலாகா மட்டத்தில் இருக்கிற எல்லா செக்ரடரிகளும், மற்ற துறை அதிகாரிகளும் அதிலே உறுப்பினர்கள். அந்த ஹை பவர் கமிட்டியில் என்ன செய்ய வேண்டும்? உட்கார்ந்து ஆதிதிராவிட மக்களுக்கு எல்லாம் எவ்வளவு பிரமோஷன் வரவேண்டும், எந்தெந்த இலாகாவில் என்னென்ன செய்யவேண்டும் என்பதையெல்லாம் ஆராய்ந்து அந்தத் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களின் பதவி உயர்வுக் காகவும், மற்றவற்றிற்காகவும் வழிவகை காணுவதுதான் அந்தக் கமிட்டியின் நோக்கம்.

அந்த ஹை பவர் கமிட்டி இதுவரையில் ஒரு முறையாவது கூடி இருக்கிறதா என்று கேட்டால் இல்லை. இந்த மூன்றையும் வைத்து நான் சொல்கிறேன்—இந்தச் சர்க்காருக்கு எந்தவிதமான நல்லெண்ணமும் இந்த ஆதிதிராவிட பெருங்குடி மக்கள்பால் இல்லை என்பதை நான் அறுதியிட்டுச் சொல்வேன்.



ஆனால் அமைச்சர் மாத்திரம் சொல்லமாட்டார். ஏனென்றால் பொறுப்பை அவர் ஏற்று இருக்கிறார். ஆகவே, வம்புக்காவது, அப்படியெல்லாம் கிடையாது, நாங்கள் செய்யலாம் என்றுதான் இருக்கிறோம். அதற்காக இப்போது கூட முதலமைச்சருக்கு பைல் போய் இருக்கிறது, அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது என்று எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறார். நான் அவரைக் குறை சொல்லப்போவது இல்லை.

(மணி 6-50)

ஆனால் ஒட்டுமொத்தமாக இருக்கிற நிலைமை என்ன என்பதைப் பார்க்க வேண்டும். இதிலேகூட ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறீர்கள். 18 சதவீதம் அரசுத்துறையிலும் அரசுப் பொதுத் துறைகளிலும் கொடுக்க வேண்டும் என்பது சட்டம். ஆனால் 31—12—1982 வரை எத்தனை சதவீதம் கொடுக்கப் பட்டிருக்கிறது? அரசுத் துறையில் 12.47 சதவீதம்; அரசுப் பொதுத் துறையில் 12.17 சதவீதம். ஆக, 18 சதவீதம் கொடுக்க வேண்டிய இடத்தில் 12 சதவீதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது; மீதி நிரப்பப்படவில்லை. ஏன் என்று கேட்டால் போதிய ஆள் வரவில்லை என்று சொல்வார்கள். இங்கேதான் ஏமாற்றுவேலை நடக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசனங்களிலிருந்து போதிய ஆள் வரவில்லை என்று சொல்லி, அரிசனங்கள் அல்லாதவர்களை அந்த இடத்தில் நியமிக்க அரசு அதிகாரிகள் செய்கின்ற ஒரு தில்லுமுல்லுதான் இது. இல்லை என்றால் அரசுத் துறையில் 12 சதவீதம்தான் கொடுக்கப்பட்டிருக் கிறது; போதிய ஆள் வரவில்லை; அதனால் அந்த போஸ்டுகள் வேக்கன்டாக இருக்கின்றன என்று சொல்லி வேக்கன்டாக வையுங்கள் பார்க்கலாம். அப்படி வேக்கன்டாக வைப்பதில்லை; அங்கேதான் நடக்கிறது ஏமாற்று வேலை. அந்த இடங்களை எல்லாம் காலியாக வைத்தால் அரசாங்கம் கிடுகிடு என்று ஆடிப் போகும். அரிசனங்கள் அல்லாதவர்களை நியமிக்க வேண்டும் என்பதற்காக, 'ஐயா, அரிசனங்கள் வரவில்லை, அதனால் உடனடியாக மற்றவர்களை நியமிக்கலாம்' என்று சொல்லி அரிசனங்கள் அல்லாதவர்களை நியமித்து விடுகிறார்கள். ஏகபோக அதிகாரிகள், அரிசன மக்கள் ஆண்டாண்டு காலமாக அடிமைகளாக இருக்க வேண்டுமென்று கருதுகின்ற சில சூத்திர தாரிகள் செய்த ஏற்பாடு இது என்று மாண்புமிகு அரிசன நல அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இந்த அரிசன மக்களுக்காக புதிய திட்டம் ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை. அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவது பற்றி ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். வீட்டுமனை வழங்கப்பட்ட ஒரு கணக்கையும் இந்தக் குறிப்பிலே கொடுத்திருக் கிறார்கள். 1949 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரை அதாவது 31—12—1982 வரையில் 3,96,431 மனைகள் வழங்குவதற்காக 24,797·84 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டது; நாங்கள் இந்த அளவு நிலத்தை கையகப்படுத்தியிருக்

கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் 1949-லிருந்து என்று சொல்ல வேண்டும், சுதந்திரம் அடைந்ததிலிருந்து, 1947 ஆம் ஆண்டிலிருந்து என்று வைத்திருக்கலாமே. இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, 'நாங்கள் இவ்வளவு நிலங்களைக் கைப்பற்றியிருக்கிறோம்; காங்கிரஸ் ஆட்சியில் இவ்வளவு நிலங்களை கைப்பற்றினார்கள்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இவ்வளவு நிலங்களைக் கைப்பற்றினார்கள்; காங்கிரஸ் ஆட்சியில் வழங்கப்பட்ட மனைகள் இவ்வளவு; திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் வழங்கப்பட்ட மனைகள் இவ்வளவு; அண்ணா தி.மு.க. ஆட்சியில் இவ்வளவு மனைகள் வழங்கப்பட்டுள்ளன' என்ற கணக்கை, விவரத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் 'மொட்டை தாதன் குட்டையில் விழுந்தமாதிரி' 1949-லேயிருந்து 31-12-1982 வரையில் 3,96,431 மனைகள் வழங்குவதற்காக 24,797 ஏக்கர் நிலத்தை கைப்பற்றியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள்.

இதிலே நாங்கள் என்ன விவரத்தைக் கண்டுபிடிக்க முடியும்? நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் எப்படித் தெரிந்து கொள்ள முடியும்? இந்த ஆதிதிராவிட மக்களுக்கு உங்கள் தொண்டு எவ்வளவு, காங்கிரஸ் தொண்டு எவ்வளவு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டு எவ்வளவு என்ற விவரத்தை யார் கண்டுபிடிக்க முடியும்? இப்படி பொத்தாம் பொதுவிலே அச்சிட்டுக் கொடுக்கக்கூடிய ஒரு கொள்கைக் குறிப்பாக இனிமேல் இருக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலேகூட இன்னும் ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். எதை எடுத்துக்கொண்டாலும் ஒரு திட்டம். அதுவும் எவ்வளவு ஜாக்கிரதையாகச் சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? இங்கே ஒரு வீடு கட்டுகிற திட்டம் சொல்லப்பட்டிருக்கிறது. வீடு கட்டுவதற்கான செலவு ரூ. 4,000 ஆகும். இதில் அரசு 3,250 ரூபாயை உதவித் தொகையாக வழங்கும். பயனடைவோர் ரூ. 750 மதிப்புள்ள அளவிற்கு உடலுழைப்பளிக்க தங்களுடைய பங்கைச் செலுத்த வேண்டும். வீட்டு மனைப்பரப்பு 201 சதுர அடி. சரியாக கணக்கிட்டிருக்கிறார்கள். 201 சதுர அடி. இது கிராமப்பகுதி வீட்டுவசதி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் வடிவமைப் பப் போன்றே கட்டப்படும். கட்டட்டும். உதவித் தொகை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி நிறுவனத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப்படும். தொழில் நுட்ப மேற்பார்வை, உதவி போன்ற தேவையான அடிப்படை உதவிகள் பயனடைவோருக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும். வீடு கட்டுவதற்கு கொடுப்பது 4,000 ரூபாய். இது மேலே ஓலைக் கூரைப்போடுவதற்குத்தான் போதும். இதற்கு தொழில் நுட்பம் வேறு அளிக்கிறார்கள். பிளான் இப்படி போட வேண்டும்; ப்ளூ பிரிண்ட் இப்படி தயாரிக்க வேண்டும் என்றா எஞ்சினீயர் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்கிறது? ஒரு குடிசை போடுவதற்குக் கூட இந்தப் பணம் போதாது. இதற்கு எஞ்சினீயர் ஆலோசனை கூறுவார். அவர்களுக்கு காப்பி, டீ வாங்கிக் கொடுக்க வேறு செலவு செய்ய வேண்டும். இப்படிப் பட்ட ஒரு திட்டம் தேவைதானா?



அந்த மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க வேண்டியது அவசியம். அதற்குத் தனியாக ஒரு இலாகா இருக்கிறது. அங்கே இவர்களுக்கு என்ன வேலை? முன்னாலே எங்கள் ஆட்சியிலே 4000 ரூபாய், 5000 ரூபாயில் வீடுகள் கட்டிக் கொடுத்தோம். அதிலே குறிப்பாக நான் குறிப்பிட விரும்புவது இரத்தினகிரி. அங்கே பெரிய கோவில் ஒன்று இருக்கிறது. அங்கே ஒரு கிராமத்தில் எங்கள் ஆட்சியில் வீடுகள் கட்டத் தொடங்கி, சுவர் எல்லாம் கட்டப்பட்டு விட்டன. கூரை போடுகின்ற நிலையில் ஆட்சி கலைக்கப்பட்டது. இன்று வரையில் அது அப்படியே இருக்கிறது. ஒளவையார் பாடியது மாதிரி சுவரோடு நிற்கிறது. அதற்கு கூரை கூட மேலே போடப்படவில்லை. அப்படியே இருக்கிறது. நீங்கள் மேலே திட்டங்கள் போட்டு, அதிகமாக அவர்களுக்கு வீடு கட்டாவிட்டாலும் பரவாயில்லை, அந்தக் கூரையையாவது போட்டிருக்கக் கூடாதா? வீடுதான் கட்டிக் கொடுக்கமாட்டீர்கள். அது உங்களால் முடியாது—அதுவும் இந்த 5 ஆயிரத்தை வைத்துக் கொண்டு, சரி, திராவிட முன்னேற்றக் கழகக் காலத்தில் கட்டப்பட்ட இந்த வீடுகளுக்கு, கூரையாவது போட்டு அவர்களுக்கு கொடுத்திருக்கக் கூடாதா என்று நான் கேட்க விரும்புகிறேன் (மணியடிக்கப் பெற்றது.)

11 நிமிடங்கள் தான் ஆகியிருக்கிறது. ½ மணி நேரம் நான் கேட்டிருக்கிறேன், காலையிலிருந்து இதிலே பேச வேண்டும் என்று நான் காத்துக் கொண்டிருக்கிறேன். மாலையிலும் அவையை வைத்துக் கொள்ளலாம் என்று நான் தான் அனுமதி கேட்டேன். அத்தோடு காலையிலிருந்து, இங்கே உட்கார்ந்து கொண்டு, இங்கே கோரம் இல்லாதபோது எல்லாம், பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பிக் கொண்டிருந்தேன். என்னை அனுமதிக்க மாட்டேன் என்கிறீர்களே இது சரியா. இதிலே நான் எந்தவித கட்சி கண்ணோட்டமும் கொண்டு பேச விரும்பவில்லை. அரிசனங்களின் முன்னேற்றத்திற்கு என்னால் ஆனது எதையாவது எனக்குத் தெரிந்த திட்டங்களை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் அனுமதித்தால் பேசுகிறேன். இல்லாவிட்டால் பேசாமல் உட்கார்ந்து விடுகிறேன்.

அடுத்து, தொழில் துவங்குவதற்காக 2,500 ரூபாய் கடன் கொடுக்கிறீர்கள். அப்படிக் கொடுக்கும்போது, அவர்களிடம் இருக்கும் பட்டா, பத்திரம், அடங்கல், சிட்டா, வில்லங்கம், இல்லங்கம் என்று எல்லாவற்றையும் வாங்கி வைத்துக் கொள்ளுகிறீர்கள், 2,500 ரூபாய்க்கு என்ன பெரிய தொழிற்கூடத்தையா அவன் துவக்கப் போகிறான்—இப்போதிருக்கிற விலைவாசி நிலைமையிலே? அதை வைத்துக் கொண்டு சின்னதாகக் கடை வைக்கலாம். அப்படி இல்லை என்றால், சற்று பெரிதாகக் கடை வைக்க வேண்டும் என்றால், அல்லது சற்று பெரியதாக தொழில் துவங்க வேண்டும் என்றால், அவன் மேற்கொண்டு வெளியில் எங்காவது கடன் வாங்கினால் தான் முடியும். ஆனால் நீங்கள் இந்த 2,500 ரூபாய்க்காக எல்லாவற்றையும் வாங்கி வைத்துக் கொண்டால், அவன் எதை வைத்து வெளியில் கடன் வாங்க முடியும்? ஆகவே இது ஏதோ கண் சிமிட்டும் நேரத்தில் ஏமாற்றுகிற விவகாரமே தவிர, அவர்களுக்கு உபயோகமான திட்டமாக இது இல்லை,

அடுத்து சமுதாயக் கூடங்களைக் கட்டுவது பற்றி, இங்கே எல்லோரும் பெருமையாகப் பேசினார்கள். சமுதாயக் கூடங்களைப் பற்றி இந்த அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "..1974-75ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் ரூ. 15,000? மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டன. 1980—81ஆம் ஆண்டிலும், 1981-82ஆம் ஆண்டிலும் ரூ. 3.43 இலட்சம் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக ஏழு இடங்கள் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளன...." என்று கூறப்பட்டுள்ளது. 74-75-லே சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் 80—81-லே நீங்கள் வந்ததற்குப் பிறகு சமுதாயக் கூடங்கள் கட்டுவதற்காக லொகேஷனைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்களே தவிர, அந்தக் கூடங்களை 81-லேயும் கட்டவில்லை. 82-லேயும் கட்டவில்லை. 80 போச்சு, 81 போச்சு, 82-ம் போச்சு 83ம்வந்தாகிவிட்டது, 84 பைனான்சியல் வருடமும் வரப்போகிறது. ஆனால் என்ன நடவடிக்கைகளை இது பற்றி எடுத்திருக்கிறார்கள் என்று கேட்டால், ஒன்றும் கிடையாது. சமுதாயக் கூடங்கள் என்று ஒரு தலைப்பு போட்டு சும்மா அழகாக எழுதி வைத்திருக்கிறார்கள் அவ்வளவுதான்.

அடுத்து, இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையின் அடிப்படையில் கணக்குகளைப் பார்த்தேன். நீங்கள் இந்தக் குறிப்பேட்டிலே முக்கியமாக ஒன்று செய்திருக்க வேண்டும். மத்திய அரசு இந்தத் துறைக்காக எவ்வளவு தந்தது என்கிற விவரம் சரியாக இல்லை. ஒருவேளை என்னால்தான் கண்டுபிடிக்க முடியவில்லையோ, எனக்குத் திறமையில்லையோ தெரியவில்லை. 6-வது 5 ஆண்டுத் திட்டத்தில் நிறையப் பணத்தை அவர்கள் இந்தத் துறைக்காக வாரிக் கொடுத்தார்கள். அப்படி அவர்கள் கொடுத்த தொகை எவ்வளவு? அதில் எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள்? fully centrally sponsored scheme எவ்வளவு? ஸ்டேட் பாதி செலவு, சென்டிரல் பாதி செலவு என்று இருக்கக்கூடிய ஸ்கீமில் எவ்வளவு இருக்கிறது. போக நீங்களாக இந்தத் துறைக்கென்று செய்திருப்பது எவ்வளவு என்று 3 வகைகளில் அந்தத் திட்டங்களை நீங்கள் இதில் தனித்தனியாக கொடுத்திருக்க வேண்டும். என்னவோ எல்லோரும் பொருளாதார அசெஸ்மெண்டில் ரிசர்ச் செய்தவர்கள் என்றோ, அல்லது எல்லோருமே பைனான்ஸ் டிபார்ட்மெண்டில் வொர்க் பண்ணியவர்கள் என்றோ நினைத்துக் கொண்டு, இப்படி ஒட்டு மொத்தமாகப் புள்ளி விவரத்தைக் கொடுக்கக் கூடாது.

அடுத்து பல திட்டங்களுக்கு இங்கே எப்படி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள் என்று விவரம் கொடுத்திருக்கிறீர்கள். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு வெகுமதி அளித்த வகையில், 82—83-லே 2.50லட்சம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது ரிவைஸ்டு எஸ்டிமேட்டிலே எப்படி வருகிறது என்று பார்த்தால், 13.08 லட்சமாக உயர்கிறது. 82—83 வரவு-செலவு திட்டத்தில் 2.50 லட்சமாக ஒதுக்கப்பட்டது; ரிவைஸ்டு எஸ்டி





மேட்டிலே 13.08 ஆக உயர்ந்திருக்கிறது என்றால், 10 லட்சம் ரூபாய்க்கு மேலே உயர்ந்திருக்கிறது. ஆனால் 1983—84-க்கு பார்த்தால் 10 லட்சம் தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஏன் அதுவே போதும், அதற்கு மேலே பண்ணிக் கொள்ள வரமாட்டார்கள் என்றா?

அடுத்து, ஆதி திராவிடர்களுக்கு குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வழங்குவது என்ற முறையில் 1982-லே 0.01 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதே மாதிரி ரிவைஸ்டு எஸ்டிமேட்டிலேயும்,0.01 லட்சம் என்றே போட்டிருக்கிறார்கள். ஒரு பைசா கூட உயர்த்திப் போடவில்லை. சரி 1983—84-லேயாவது உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் அதிலேயும் ஒரே மாதிரி .01 லேக் என்றே போட்டிருக்கிறார்கள்.

அடுத்து, ஆதி திராவிட குடியிருப்புகள் வளர்ச்சித் திட்டம் என்பதின் கீழ் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் 75.00 லட்சம். எப்போது? 1982—83-லே போட்டிருக்கிற எஸ்டிமேட்.

(இரவு 7-00)

ரிவைஸ்ட் எஸ்டிமேட் என்ன தெரியுமா? கொஞ்சம் கூட உயரவில்லை. அதே 75 தான். 1983—84-லே அதற்கு ஒரு ரூபாயாவது ஒதுக்கி இருக்கிறீர்களா என்றால் கிடையாது. ப்ளாங்காக விட்டு வைத்திருக்கிறீர்கள். தமிழ்நாடு ஆதி திராவிடர் மேம்பாட்டு வீட்டு வசதிக் கழகத்தின பணிமனைகள் இதற்கு எவ்வளவு என்று கேளுங்கள். 300 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே. ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே ஏறியது ஏதாவது இருக்கின்றதா என்றால் இல்லை. எப்படி ஏறும்? திட்டங்களைச் செய்தால் தானே ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலே ஏறும். ஆகவே ஏறவில்லை. அதே 300 இலட்சம் தான். இப்போது எவ்வளவு தெரியுமா? 200 இலட்சம். ஆக 1982—83-லே எஸ்டிமேட்டிலே ஒதுக்கப்பட்டது 300 இலட்சம், ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலேயும் அதே 300 இலட்சம். திட்டங்களைச் செய்தால்தானே கூடும் ஆகவே இப்போது எவ்வளவு ஒதுக்கி இருக்கிறீர்கள்? 200 இலட்சம்தான்.

சிறப்புப் பணித் திட்டங்களின் கீழ் கிராம வளர்ச்சி ஒருங்கிணைந்த வட்டாரங்களில் ஆதி திராவிடர்களுக்கு சிறப்பு நலத் திட்டங்கள் என்ன தெரியுமா? (மணியடிக்கப்பட்டது) 1,100 இலட்சம், அதே 1,100 இலட்சம் தான் ரிவைஸ்ட் எஸ்டிமேட்டிலேயும், 1983—84-லேயும் அதே 1,100 இலட்சம் தான். ஆதி திராவிடர் குடியிருப்புகளில் குடிநீர் தோண்டுவதற்கு 1982-லே 24.42 இலட்சம் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால் எவ்வளவு செலவாகி இருக்கின்றது. இங்கே கிணறு தோண்டி இருக்கிறார்கள். அதனால் இன்க்ரீஸ் ஆகி இருக்கின்றது. எவ்வளவு? 28 இலட்சம். பிறகு என்ன ஆனது? இங்கே பார்த்தால் 1983—84-லே 24 இலட்சம். அப்படியானால் இந்த வருஷம் ஆதி திராவிடர் குடியிருப்புகளில் கிணறு தோண்டவில்லை. முதலில்

(திரு. துரைமுருகன்) [1983 மார்ச் 31

24, 28 ஆக ஆகி இருக்கின்றது என்றால் இப்போது அதைவிட அதிகமாக ஆகித்தானே இருக்கவேண்டும். அதிகமாக ஆக வில்லை. அதே 24 தான் ஒதுக்கி இருக்கிறாாகள். மேலும் ஒதுக்கப்பட்ட பணமோ செலவு செய்யப்படவில்லை, ஏன்? அதற்கு வேண்டிய அக்கறையை நீங்கள் எடுத்துக் கொள்வது கிடையாது. அதேபோன்று இன்னொன்றை இங்கே சொல்ல விரும்புகிறேன். திரு. ரகுமான்கான் அவர்களும் கூட சொன்னார்கள். 9.56 கோடி ரூபாய் மத்திய அரசு திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் அவற்றை எல்லாம் செலவு செய்யாமலே ஊரக உள்ளாட்சித் துறைக்கு மாற்றி பாங்கிலே கொண்டுபோய் போட்டு இதுவரையில் அரிசனங்களுக்கு செலவு செய்யாமலே நாங்கள் செலவு செய்து விட்டோம் என்று சொல்லி மேலும் ஒரு 8 கோடி கேட்டு வாங்கினீர்கள். இது பற்றி ஒரு ஆர்டிகிளே எழுதி இருக்கிறார்கள் திரு. சோமு அவர்கள் தன்னுடைய பத்திரிகையிலே. ஆனால் இதுவரையில் இந்த அரசின் சார்பிலே அதற்கு ஏதாவது மறுப்பு கொடுக்கப் பட்டிருக்கின்றதா என்றால் இல்லை. அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவு படுத்த வேண்டும்.

அடுத்து இன்றைக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி இருக்கின்றது. ஆனால் அரிசனங்களுக்கு அரசு தரப்பிலே உள்ள பணிமனைகளில் 18 சதவீதம் கொடுக்கப்பட வேண்டும் என்றாலும் 12 சதவீதம் தான் இருக்கின்றது. அரிசன தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்பைப் பெருக்கக்கூடிய ஒரு வழிவகையினை நான் சொல்கிறேன். மலேசியாவிலே பூமிபுத்திரா என்பவன் தான் ஒரிஜினல் மலேசியா குடிமகன். ஒரு பெட்டிக்கடை வைப்பது என்றால் கூட அதிலே 3 பேர் வேலைக்கு வைக்கப்படுகின்றார்கள் என்றால் அவர்களில் பூமிபுத்திரா ஒருவரையும் வேலைக்கு வைக்க வேண்டும் என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். அதேபோன்று ப்ரைவேட் கம்பெனிகள், தனிப்பட்ட முதலாளிகள், டி.வி.எஸ். ஆனாலும், ஹாகாஸ் ஆனாலும், விஸ்கோஸ் ஆனாலும் எந்தக் கம்பெனி இந்த நாட்டிலே சர்க்காரிடத்திலே அனுமதி பெற்றாலும் அந்தக் கம்பெனிகளில் எல்லாம் 18 சதவீதம் அரிசனத் தோழர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று கண்டிப்பாகச் சட்டம் போட்டு வைத்திருக்கிறீர்கள், ஆனால் லையோலா, விவேகானந்தா, பச்சையப்பா, கௌரிவாக்கம், ஜெயின் காலேஜ் போன்ற எந்தக் கல்லூரிகளிலும் தனிப்பட்ட கல்லூரிகளிலும் அரிசனப் பெருங்குடி மக்களை வேலைக்கு வைக்கவில்லை. சென்னை நகரத்திலே பச்சையப்பன் கல்லூரியிலே ஒரே ஒருவர் தான் இருக்கிறார். அதாவது பொருளாதாரத் துறையிலே திரு. குப்புசாமி என்ற ஒரே ஒருவர் தான் லெக்சரராக இருக்கிறார். ஆகவே.... (மணியடிக்கப்பட்டது).... எனக்கு 20 நிமிஷமாவது கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்து விடுங்கள். நேரம் அதிகம் ஆகிவிட்டது.



1983 மார்ச் 31]

திரு. துரைமுருகன்: தனியார் கல்லூரிகளிலே 20 பெர்சன்ட் வைத்தாக வேண்டும். அது மட்டுமல்ல. ஸ்மால் ஸ்கேல், லார்ஜ் ஸ்கேல், மீடியம் ஸ்கேல் என்ற வகையில் எந்தக் கம்பெனியாக இருந்தாலும், எப்படிப்பட்ட கம்பெனிகள் ஸ்டார்ட் பண்ணினாலும் அரிசன மக்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் போட வேண்டும் மலேசியாவிலே போட்டிருப்பது போன்று கண்டிப்பாக சட்டம் போட்டாக வேண்டும். மலேசியாவிலே பூமிபுத்திரா என்பவனை அவ்வாறு வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று சட்டம் போடப் பட்டிருக்கின்றது. ஏன்? அவர் ஒரிஜினல் குடிமகன். அதே போன்று இங்கே ஒரிஜினல் குடிமகன், இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன், சன்ஸ் ஆஃப் த சாயில் யார் என்று கேட்டால் ஆதி திராவிட பெருங்குடி மகன்தான். எனவே அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்களை ஏமாற்றி விடுகிறார்கள். சென்ட்ரல் கவர்மெண்டிலே இருந்து பெட்ரோல் பங்க் கொடுக்கப் படுகின்றது அரிசன மக்களுக்கு என்றாலே ஊரிலே உள்ள பெரிய ஆட்கள் அவர்களிடம் போய் கையெழுத்து வாங்கிக் கொடுத்து விட்டுதான் வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே அரிசன மக்கள் பெட்ரோல் பங்கைப் பார்ப்பது கூட இல்லை, எனவே இப்படி எல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்டவர்களை எல்லாம் கண்டுபிடிக்க வேண்டும்.

அடுத்து கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு மெடல் கொடுக்கிறார்களாம். எப்படி இருக்கின்றது? சீனி சக்கரை சித்தப்பா, சீட்டி எழுதி சுவைத்துப் பாரப்பா என்பது போல் இருக்கின்றது. கலப்பு திருமணம் செய்து கொண்டவர்களை அந்தக் குடும்பத்திலேயும் துரத்துகிறார்கள், இந்தக் குடும்பத்திலேயும் துரத்துகிறார்கள். அதனால் அவர்கள் நடு வழியில் நிற்கிறார்கள். அப்படிப்பட்டவர்களிடம் பத்திரத்தைக் கொடுத்து விடுகிறார்களாம். 5 வருஷத்திற்கு அப்புறம் தருகிறேன் என்று. ஆகவே இதற்கு ஒரு திட்டம் வகுத்தாக வேண்டும். கலப்பு திருமணம் செய்து கொண்டவர்கள் யாராக இருந்தாலும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் அது, இது என்று இல்லாமல் உடனடியாக அவர்களுக்கு வேலை கொடுப்பதற்குத் திட்டமிட்டாக வேண்டும். அவர்கள் பிள்ளைகள் எவ்வளவு படித்தாலும் சரி, இம்மீடியட்டாக வேலை கொடுக்க வேண்டும். சர்க்காரிலே இருந்து அதற்கு ஒரு 10 கோடி ரூபாய் செலவானால்தான் என்ன? ப்ளேனில் போவதற்கும், ஊருக்குப் போவதற்கும், சுற்றுவதற்கும் எவ்வளவோ செலவழிக்கிறீர்கள், இதற்கு ஒரு பத்து கோடி ஒதுக்கினால் என்ன? ஆகவே யார் யார் கலப்புத் திருமணம் பண்ணிக் கொள்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க வேண்டும். 5000 ரூபாய் நெட் காஷ் கொடுக்க வேண்டும்....(மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே இந்த அவையிலே வைக்கப்பட்டு இருக்கக்கூடிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனைக் குறித்தும் அச்சுத்துறையினுடைய சார்பிலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய 1983-84ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய விவாதத்திலே பங்கு கொண்டு ஏறத்தாழ 17 மாமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து அவையிலே வைத்திருக்கிறார்கள். தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கக் கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் தங்களுடைய மனதின் அடித்தளத்திலேயிருந்து எழுந்திருக்கக் கூடிய உணர்ச்சிகள் காரணமாக ஆதி திராவிட பழங்குடி மக்களுடைய நலனை எண்ணி அந்தச் சமுதாயம் மேம்பட்டுத் திகழ வேண்டும் என்கின்ற உணர்வின் காரணமாக அந்தச் சமுதாய மக்களின் மீது கொண்டிருக்கக்கூடிய அன்பின் காரணமாகவும் பல்வேறு கருத்துக்களை அந்தச் சமுதாயம் நலம் பெறுகின்ற வழிவகைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற உணர்வின் காரணமாக இங்கே அந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொருத்தவரையில் 1981ம் ஆண்டு கணக்கெடுப்புப்படி இருக்கக்கூடிய 88.86 லட்சம் ஆதி திராவிட மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை தங்களுடைய கவனத்திலே வைத்துக்கொண்டு அந்த மக்களுக்கு அடிப்படைத் தேவைகள், அடிப்படை வசதிகள் முழுமையாகப் பெற்று அந்த மக்கள் அனைத்து நலன்களையும் பெற்றுத் திகழ வேண்டும் என்கின்ற எண்ணத்தின் காரணமாக இந்த விவாதத்திலே பங்கு கொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்த கருத்தாக இங்கே தங்களுடைய எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்காக அரசின் சார்பிலே என்னுடைய நன்றியை அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாமன்ற உறுப்பினர்கள் எந்த எண்ணத்தின் அடிப்படையில் உங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றீர்களோ அந்த கருத்துக்களின் அடிப்படையிலே இந்த அரசைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் இருக்கின்ற ஆதி திராவிட பழங்குடி மக்கள் நலனுக்காக தங்களுடைய பணியை தொடர்ந்து ஆற்றும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன். இங்கே பேசிய பல உறுப்பினர்களும், விவாதத்தை துவக்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர் ஜே.எஸ். இராசு முதல் முடித்து வைத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் வரையிலும் பத்திரிகையிலே வந்திருக்கக்கூடிய ஒரு செய்தியை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு சில கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதனைத் தெளிவு படுத்த வேண்டிய கடமை எனக்கு இருக்கிறது என்கின்ற அடிப்படையிலே இங்கே ஒரு சில கருத்துக்களை அது குறித்து நான் வைக்கக் கடமைப்பட்டிருப்பவனாக நான் இருக்கிறேன்.



(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

தமிழகத்தைப் பொறுத்தவரை இங்கே சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை நாம் செயல்படுத்தி வருவதை மாமன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் உணர்ந்திருப்பார்கள் என நான் கருதுகிறேன். அந்தச் சிறப்பு உள்ளடக்கத் திட்டம் என்கின்ற வகையிலே நாம் நிறைவேற்றுகின்ற அந்தத் திட்டம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அதனைச் சரியான முறையிலே புரிந்து கொள்ளாமல் பேசியிருக்கிறார்கள் என்று நான் கருதுகின்றேன். சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினைப் பொறுத்த வரையில் 'ஸ்பெஷல் காம்போனன்ட் ப்ளான்' என்று அழைக்கக்கூடிய அந்த திட்டத்தைப் பொறுத்த வரையில் மைய அரசு அந்தத் திட்டத்திற்காக தமிழகத்திற்கு எந்த விதமான நிதியையும் அளிக்கவில்லை என்பதை நான் முதலிலேயே தெளிவு படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(இரவு 7-10)

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இந்த மானியத்தில் இருக்கக்கூடிய 23 துறைகளிலே அனைத்துத் துறைகளுமே ஆதி திராவிட மக்களுக்கு நேரடியாக உதவி வருகின்றன என்று இல்லை. தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்த 43 துறைகளிலே 20 துறைகள் அவர்களுடைய திட்டங்களின் அடிப்படையில் ஆதி திராவிட மக்களுக்குப் பல்வேறு சலுகைகளையும் பல்வேறு பயன்களையும் தந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 20 துறைகளின் மூலமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆதி திராவிடர்களுக்கு அந்த அந்த துறைகளின் சார்பாக நடைபெறுகின்ற திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு அந்தத் திட்டங்களுக்கு அந்தத் துறைகள் எவ்வளவு நிதியினை செலவு செய்கின்றன என்பதை கணக்கு எடுத்து அந்தக் கணக்கீட்டின் மொத்தத்தை தமிழகத்தில் இருக்கின்ற அதிகாரிகள் ஆய்வு செய்து ஆய்வு செய்யப்பட்ட அந்தக் கணக்கை டெல்லிக்கு எடுத்துச் சென்று அங்கே இருக்கக்கூடிய உள்துறை அமைச்சகத்தைச் சார்ந்த அதிகாரிகளிடமும் திட்டக் குழுவின் அதிகாரிகளிடமும் கலந்து பேசி உருவாக்கப்படுகின்ற திட்டமாக சிறப்பு உள்ளடக்க திட்டம் அமைந்து இருக்கிறது என்பதை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். ஏதோ பத்திரிக்கையில் வந்து இருக்கக்கூடிய ஒரு செய்தியை அடிப்படையாக வைத்துக் கொண்டு மத்திய அரசு மாநில அரசுக்கு அதிகமான நிதியினை அளித்தது என்கின்ற எண்ணத்தில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லிவிட்டு இந்த அரசைப் பொறுத்தவரையில் ஏதோ மத்திய அரசுக்குத் தவறான தகவலை தவறான அறிக்கையை சமர்ப்பித்து விட்டதாகவும் மாண்புமிகு உறுப்பினர்கள் கொண்டு இருக்கக்கூடிய அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு எந்தவிதமான அறிக்கையையும் இதுவரையில் அனுப்பவில்லை என்பதும் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய பணத்தை நாங்கள் முழுமையாக செலவழித்து விட்டதாகச் சொல்லி எந்த விதமான தவறான அறிக்கையையும் இந்த அரசு கொடுக்க

வில்லை என்பதை நான் முதலிலே தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நிறைவேற்றி இருக்கக்கூடிய திட்டங்கள் அந்த அந்த துறைகளில் உதாரணமாக வேளாண்மைத் துறையை எடுத்துக் கொள்வோமானால் இங்கே இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட ஒரு புள்ளி விவரத்தை எடுத்துச் சொன்னார்கள். தமிழகத்தினுடைய மொத்தத் திட்ட மதிப்பீட்டை திட்ட ஒதுக்கீட்டை மனதில் வைத்துக் கொண்டு அதிலே 18 சதவீதம் எவ்வளவு என்று கணக்கு எடுத்து அந்த கணக்கீட்டின் அடிப்படையில் இவ்வளவு பணத்தை நாம் ஆதி திராவிடர்களுக்கு தமிழகத்தில் செலவு செய்து இருக்கிறோம் என்று இந்த அரசு மத்திய அரசுக்கு கணக்கு காட்டியதாக அவர்கள் தங்களுடைய வாதத்தில் எடுத்துச் சொன்னார்கள். அது தவறு என்பதை நான் அவர்களுக்கு மட்டும் இன்றி இந்த மன்றத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் சுட்டிக்காட்ட கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பொதுவாக ஒதுக்கீட்டிலே ஒவ்வொரு துறையின் மூலமாக நான் முன்பு எடுத்துச் சொன்னதைப்போல, இருக்கக்கூடிய 43 துறைகளிலே ஆதி திராவிட மக்களோடு நேரிடையான தொடர்பை கொண்டு அவர்களுக்கு பயன் அளிக்கக் கூடிய அந்த 20 துறைகள் மூலமாக என்ன என்ன திட்டங்களை அந்தத் துறைகள் மேற்கொண்டு இருக்கின்றனவோ அந்த திட்டங்களின் மூலமாக எவ்வளவு சதவீதம் ஆதி திராவிட மக்களுக்கு செலவிட்டு இருக்கிறார்களோ அந்த அடிப்படையிலே அவற்றை முழுமையாக கணக்கு எடுத்துதான் மத்திய அரசுக்கு அனுப்புகிறோம், என்பதை இங்கே தெளிவாக நான் விளக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

அடுத்து இன்னொன்றை சொல்ல விரும்புகிறேன். 18 சதவீதம் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் அங்கே இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு சில துறைகளிலே 15 சதவீதமாகவும் இருக்கலாம் ஒரு சில துறைகளிலே அது செலவிட்டு இருக்கக்கூடிய தொகையானது 18 சதவீதத்தைத் தாண்டி 20 சதவீதமாக இருக்கலாம். ஒரு சில துறைகளிலே 46 சதவீதம் 48 சதவீதம் கூட அந்த அந்தத் துறைகளின் மூலமாக தமிழகத்தில் இருக்கின்ற ஆதி திராவிட மக்களுக்கு செலவிட்டு இருக்கிறோம். இவற்றை எல்லாம் ஒட்டு மொத்தமாகக் கணக்கிட்டு இந்த அரசை பொறுத்தவரையில் இந்த அரசினுடைய அதிகாரிகள் மத்திய அரசு அதிகாரிகளோடு கலந்து பேசி அவர்கள் அளிக்கக்கூடிய ஒப்புதலின் அடிப்படையில் இந்த இந்தத் திட்டங்களுக்கு நாம் ஸ்பெஷல் காம்போனண்ட் பிளானில் ஒப்புதல் அளிக்கலாம் என்று அவர்கள் அனுமதி அளித்ததன் பேரில் தான் அவை ஏற்றுக் கொள்ளப்படுகின்றன என்பதை இங்கே நான் தெளிவாக்க விரும்புகிறேன். உதாரணமாக வேளாண்மைத் துறையில் நாம் செயல்படுத்துகின்ற ஒரு திட்டத்தைப் பொறுத்த வரையில் அந்தத் திட்டத்தின் மூலமாக 10 பேரில் குறைந்தது 2 பேர் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும் என்று வேளாண்மைத் துறையின் மூலமாக பயிற்சி வழி தொடர்பு திட்டத்தை தமிழகத்தில் செயல் படுத்தி வருவதை



உறுப்பினர்கள் உணர்ந்து இருப்பீர்கள். அந்த ஒரு திட்டத்தைப் பொறுத்தவரையில் பயன்பெறுகின்றவர்களில் ஒவ்வொரு கிராமத்திற்கு 10 பேரில் 2 பேர் ஆதி திராவிடர்களாக இருக்கவேண்டும் என்று அந்தத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்லி பயன்பெற்று இருக்கக் கூடிய 2 பேர் ஆதி திராவிடர்கள் இருக்கிறார்கள் என்ற இந்த கணக்கை நாம் ஸ்பெஷல் காம்போனெண்ட் பிளானில் சேர்க்க வேண்டும் என்று மத்திய அரசில் கேட்டபோது அந்த அரசைச் சேர்ந்த அதிகாரிகள் இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நிராகரித்து விட்டார்கள். இதே போல் வேளாண்மைத் துறையைச்சேர்ந்த மற்றொரு திட்டமான விவசாயப் பயிற்சி திட்டத்தைப் பற்றி நாம் எடுத்துச் சொன்னபோது அந்த திட்டத்தை நாம் செயல்படுத்துவதன் மூலமாக 50 சதவீதத்தினர் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டும் என்று அந்த திட்டத்தின் மூலமாக அரசு ஆணையை விதித்து இருக்கிறது அந்த அடிப் படையிலே இந்த திட்டத்தைப்பற்றி எடுத்துச் சொல்கிறபோது அதே மத்திய அரசைச் சேர்ந்த அதிகாரிகள் அதனை ஏற்றுக் கொண்டு அதை ஸ்பெஷல் காம்போனெண்ட் பிளானில் சேர்த்துக் கொள்ளுகின்ற சம்மதத்தை அவர்கள் தந்து இருக்கிறார்கள். இது ஏதோ இந்த அரசு 18 சதவீதம் இருக்கக்கூடிய மொத்த திட்ட ஒதுக்கீட்டிலே கணக்கெடுத்து அதன் அடிப்படையிலே கண்மூடித்தனமான ஒரு கணக்கை இங்கே வகுத்து அதனை மைய அரசுக்கு அனுப்பி அவர்களுக்குத் தவறான தகவலை கொடுத்து அதன் மூலமாக ஸ்பெஷல் காம்போனன்ட் பிளானை வகுத்து இருக்கிறோம் என்ற கூற்றே தவறான கூற்று என்பதை நான் ஆணித்தரமாக மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்ததாக மைய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய சிறப்பு நிதி உதவியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களும் திரு. ஜே. எஸ். இராசு போன்றவர்களும் மற்றவர்களும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அதையும் தெளிவு படுத்த வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது.

ஸ்பெஷல் காம்போனெண்ட் பிளானைப் பொறுத்தவரையில் அதனுடைய பெர்பார்மன்ஸை வைத்து நமக்கு சிறப்பு மைய நிதி உதவி கிடைப்பதாக ஒரு கருத்து—உறுப்பினர்கள் அந்தப் பத்திரிகையைப் படித்ததன் மூலமாகப்—புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஒன்றை மட்டும் நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஸ்பெஷல் காம்போனண்ட் பிளானை வைத்து நமக்கு சிறப்பு மைய உதவி கிடைக்கவில்லை என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அந்த சிறப்பு மைய உதவி தமிழகத்திலே மட்டுமல்ல, இந்திய நாட்டிலே உள்ள மற்ற மாநிலங்களிலே இருக்கக்கூடிய ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அவர்களுடைய பிற்படுத்தப்பட்ட நிலையை அடிப்படையாகக் கொண்டும் ஒதுக்கப்பட்டிருக்கிற மைய நிதி உதவியிலே 50 சதவீதம் நமக்குக் கிடைப்பதில்லை.

சமுதாயத்தில் இருக்கக்கூடிய நலிந்த பிரிவினருடைய நலனுக்கு அந்த மாநிலம் எவ்வளவு திட்டங்களைத் தீட்டியிருக்கிறதோ அந்த அடிப்படையில் 10 சதவீதமும் ஆதி திராவிடர் பயன்பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து 25 சதவீதமும், இறுதியாக சிறப்புக் கூட்டமைப்புத் திட்டத்தின் அளவைப் பொறுத்து 10 சதவீதமும் சிறப்புக் கூட்டமைப்புத் திட்டத்தினுடைய செயல்முறை பெர்பார்மன்ஸைப் பொறுத்து 5 சதவீதமும், ஆக அந்த அளவிலேதான் இந்த சிறப்பு நிதி உதவியைப் பொறுத்தவரையில் மாநில அரசுக்கு மைய அரசால் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக மைய அரசால் கொடுக்கப்பட்டிருக்கிற சிறப்புத் தொகை சரியான வகையில் செலவழிக்கப்படவில்லை என்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் தவறான ஒரு கருத்தைக் கொண்டிருக்கிறார்கள். அதையும் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே இறுதியாக பேசிய திரு. துரைமுருகன் கூட இதைப்பற்றிப் பேசி ஏதோ வட்டியை நாம் எதிர்பார்க்காமல் வங்கிகளிலே அந்தப் பணத்தைப் போட்டுவிட்டு மைய அரசுக்கு அந்தப் பணத்தை முழுமையாக செலவழித்து விட்டோமென்ற வகையிலே கணக்குக் காட்டியிருப்பதாகவும் ஒரு தவறான கருத்தை இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில் கொடுக்கப்பட்டிருக்கிற சிறப்பு நிதி உதவியிலே முழுமையாக செலவழிக்கப்பட்டு விட்டது என்று இந்த அரசு மைய அரசுக்கு அறிக்கையோ அல்லது கடிதமோ என்றைக்கும் எழுதவில்லை என்பதை நான் தெளிவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்த வரையில் அந்த வகையில் மைய அரசுக்கு எந்த விதமான தவறான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பதை முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அண்மையிலே கூட சென்ற வாரத்திலே நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த விஷயமாக ஸ்பெஷல் காம்போனன்ட் பிளானை வரையறுப்பதற்காக டெல்லிக்குச் சென்றபோது அங்கே இருக்கிற அதிகாரிகளிடத்திலே—கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டதைப் போல—30-11-82 முடிய அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய 9.56 கோடியிலே ஏறத்தாழ 8.32 கோடி ரூபாயை நாம் செலவழித்திருக்கிறோம் என்றும் அதன் மூலமாக 91,496 ஆதி திராவிட மக்கள் டி.ஆர்.டி.க்களின் மூலமாக வகுக்கப்பெற்றிருக்கிற பல்வேறு திட்டங்களின் மூலமாக பயன்பெற்றிருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையையும் விவரத்தையும் மைய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த அளவிலேயும் மைய அரசு கொடுத்து இருக்கக்கூடிய நிதி உதவியைத் தவறான வகையில் செலவழித்து விட்டோம் அல்லது செலவழிக்காமலே செலவழித்து விட்டதாக அவர்களுக்குத் தவறான அறிக்கையை அல்லது குறிப்பைச் சொல்லவில்லை





என்பதை தெளிவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. இந்த அவையிலே நான் சொல்லியிருக்கக் கூடிய கருத்து மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளக்கூடிய நிலையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமின்றி, அடுத்த தொகையாக அவர்கள் மூலமாகக் கொடுக்கப்பட்டிருந்த அந்தத் தொகை 8.64 தமிழகத்திலே இருக்கிற ஆதிதிராவிடர் வீட்டு வசதிக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநரிடத்திலே கொடுத்து விட்டதாகவும் அவர்கள் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு அதைப் பங்கிட்டுக் கொடுத்து விட்டதாகவும் ஒரு தவறான எண்ணம் இருக்கிறது.

(இரவு 7—20)

அதையும் நான் தெளிவு படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கூட இன்று காலையில் அவையில் அச்சிட்ட வடிவிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மாவட்ட ரீதியாக என்னென்ன பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம் என்பதையும் இந்த சிறப்பு நிதி உதவியைக் கொண்டு என்னென்ன வழிவகைகளை மேற்கொள்கிறோம் என்பதையும் நான் விரிவாக எடுத்து வைத்திருக்கிறேன். அதை மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தப் பணியில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சிறப்பு நிதியுதவியைக் கொண்டு என்னென்ன பணிகளுக்கு இந்த அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது என்பதும். ஒப்புதல் அளிக்கக்கூடிய தொகை எவ்வளவு என்பதையும் இங்கே விரிவாக எடுத்து வைத்திருக்கிறோம். இங்கே கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய இந்தப் புள்ளி விவரத்தின் அடிப்படையில், இந்த அரசை பொறுத்தவரையில் மத்திய அரசு சிறப்பு நிதியுதவியாக் கொடுத்திருக்கிற தொகையை எந்த வகையிலும் வீணான வகையில் செலவிடப்படவில்லை என்பதும் அல்லது செலவிடப் படாமலேயே செலவிட்டதாக அவர்களுக்கு அந்த வகையில் நாங்கள் தெரிவிக்கவில்லை என்பதும் இங்கே இருக்கிறவர்களுக்கு இதன் மூலமாக புலானகியிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிற போது மத்திய அரசு கொடுத்த சுமார் 9 கோடி ரூபாயில் 8 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாகச் சொன்னார்கள். ஒரு கோடி இதிலே மிச்சப்படுகிறது. மற்றொன்று ரூரல் வெல்பேர் ஹவுசிங் ஸ்கீம் என்று சொல்வது நம்முடைய குறிப்பிலே கொடுத்ததைப் போல் 4000 ரூபாய் பயனடைவோர் 750ரூபாய் கொடுக்க வேண்டும். இரண்டு தினங்களுக்கு முன்பு நம்முடைய வீட்டு வசதி அமைச்சர் அவர்கள் அதை 6,000 ரூபாயாக்கி

கொடுப்பதற்கு சென்றிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ரூரல் லேண்ட்லெஸ் ஹவுசிங் ஸ்கீமில் மத்திய அரசு எவ்வளவு நமக்கு கொடுத்தது? நம்முடைய மாநில அரசு எவ்வளவு கொடுக்கிறது? வீட்டு வசதி ஆதிதிராவிட மக்களுக்கு செய்கிறோம் என்று குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. 50 சதவீதம் மாநில அரசும், 50 சதவீதம் மத்திய அரசும் கொடுக்கிறது. ஆகவே ஒட்டு மொத்தமாக ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், நாம் நினைப்பது சரியாக இருக்குமானால், கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வரும் என்ற எனக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறேன். அது குறித்து சரியான தகவல் அரசிற்குத் தான் தெரியும். ஆகவே இந்த ஐந்தாண்டு திட்டகாலத்தில் சுமார் 100 கோடி கொடுக்கப் பட்டது என்பது சரியான கணக்கு தானா? அல்லது தாங்கள் சொன்ன கணக்குப்படி 9 கோடியிலே 8 கோடி செலவழிக்கப் பட்டதா? அதிலே ஒரு கோடி இந்த ஐந்தாண்டுத்திட்டத்திற்காக மிச்சம் வைத்திருக்கிறார்களா? அல்லது 50 சதவீதம் என்பதை எப்படி வைத்திருக்கிறீர்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாற்றுத்தலைவர் அவர்களே, மத்திய அரசு கொடுத்த 9.6 கோடியில் இதுவரையில் 6.32 கோடி ரூபாய் 30-11-82 முடிய செலவிட்டிருக்கிறோம் என்பதை ஏற்கனவே இந்த மன்றத்திற்கு நான் சொல்லியிருக்கிறேன். இதைத்தவிர மத்திய அரசிற்கு இது குறித்து தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீதம் இருக்கிற ஒரு கோடி தற்போது செலவழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ரூரல் ஹவுசிங் ஸ்கீம் மூலமாக எவ்வளவுத் தொகை கிடைக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. என்றாலும் அது குறித்து பயன் அடைகிறவர்களின் எண்ணிக்கையை விளக்கியிருக்கிறேன். ஆகவே சம்பந்தப்பட்ட அமைச்சரிடத்திலே கேள்வி கேட்டால் அது குறித்து விவரமான பதில் கிடைக்கும்.

மாற்றுத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, கிடைத்த தொகை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேலாண்மை இயக்குநர் மூலமாக மற்ற துறைகளிலே பல்வேறுதொழில்களுக்கு என்னென்ன வகையிலே நாம் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்திருக்கிறோம் என்ற விவரத்தை நான் விளக்கமாக இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்கு அளித்திருக்கிறேன். அந்த வகையில் இப்போது மேலாண்மை இயக்குநருக்கு ஏன் கொடுத்தோம் என்று சொல்கிறபோது மத்திய அரசை பொறுத்தவரையில் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை மாநில அரசு மேற்கொள்கிறபோது அந்தப்பணியை அந்தந்த மாநிலங்களிலே இருக்கிற இது போன்ற கார்ப்பரேஷன்கள் மேற்கொள்ளவேண்டுமென்று மத்திய அரசு விருப்பம் தெரிவித்து மாநில அரசும் அதை ஏற்றுக்கொண்டதன் காரணமாக இத்தகைய எண்ணம் உருவானது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



அடுத்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இத்தகையத் திட்டக் கணக்குகளைத் தலைமைக் கணக்காயர் அவர்கள் தணிக்கை செய்கின்றாரா என்ற விவரத்தைக் கேட்டார்கள். பணத்தைப் பொறுத்தவரையிலும் மைய அரசிலேயிருந்து கிடைக்கக்கூடிய எந்த உதவியாக இருந்தாலும் இந்தத் துறையின் மூலமாக நடைபெகின்ற திட்டங்களுக்காகச் செலவிட்டிருக்கக்கூடிய தொகையையும் தலைமைக் கணக்காயர் அவர்கள் தணிக்கை செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தையும் அவருடைய அறிக்கையின் மீது அரசு அளித்திருக்கக்கூடிய விளக்கத்தை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்ற விவரத்தையும் இங்கே நான் வைக்க விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்த அளவிலே இந்த வகையிலே செயல்படுகின்ற விதத்தை எண்ணிப் பாராட்டுகின்ற வகையிலே மைய அரசைப் பொறுத்தவரை, இந்த உதவியை அளிக்கக்கூடிய மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் அளிக்கக் கூடிய சிறப்பு மைய நிதி உதவியைப் படிப்படியாக உயர்த்தி வந்திருக்கிறது என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏதோ மாநில அரசைப் பொறுத்தவரையில் தவறான கணக்கைக் காட்டி, அதை மைய அரசு அதிகாரிகள் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டதாக, தவறான எண்ணத்தை இங்கே இருக்கக் கூடிய மாமன்ற உறுப்பினர்களு , தமிழகத்திலே இருக்கிற மக்களும்—அந்த எண்ணத்திற்கு வரக்கூடாது என்ற காரணத்தினால் இவற்றை விளக்க வேண்டியது என்னுடைச் கடமையாகஇருக்கிறது என்ற வகையில் நான் இந்த விளக்கத்யைத சொல்ல விரும்புகிறேன்.

தமிழக அரசைப் பொறுத்தவரையில், தமிழகத்திலேயிருக்கிற ஆதிதிராவிட மக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்திருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தத் துறையினைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய மொத்த திட்ட ஒதுக்கீட்டில் மூன்றில் இரண்டுபங்கினை இந்தத் துறையின் மூலமாக இயங்கி வருகின்ற கல்வி நிலையங்களுக்காகச் செலவிடுகிறோம். இந்தச் சமுதரயத்தைச் சேர்ந்த குழந்தைகள் நல்ல கல்வியினைப் பெறுவதன் மூலமாக, சமுதாயத்திலே ஏற்றமிகு பதவிகளுக்கு வந்து அவர்களும் தங்களுடைய வாழ்க்கையிலே ஒரு மறுமலர்ச்சியினைப் பெற முடியும் என்ற வகையில் தமிழக அரசைப் பொறுத்தவரையில்நலத்துறையில் மூலமாக இயங்கி வருகின்ற பள்ளிகளுக்கு மூன்றில்இரண்டு பங்கு தொகையினை கல்விக்காக செலவிட்டு வருகின்றோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில் மொத்தம் 1085 பள்ளிகளை இந்த மாணவிகளுடைய நலனுக்காக தற்போதுசெயல்படுத்தி வருகின்றோம் என்பதையும் அதன் மூலமாக 1,86,675 மாணவ மாணவிகள் பயன் பெறு கிறார்கள்என்பதையும் இங்கே நான் சொல்லவிரும்புகிறேன்.

இந்த மாணவ மாணவிகள் தங்கிப் பயில்கின்ற விடுதிகளை பொறுத்தவரையில், தமிழகத்திலே 695 விடுதிகளை உருவாக்கி புதிய விடுதிகளை ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுத்தி, இந்த மாணவ மாணவிகள் நல்ல வசதியோடு தங்கி பயில வேண்டுமென்ற உணர்வின் காரணமாக, இந்த வழிவகைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் தமிழகத்திலே இருக்கிற நலத்துறையின் மூலமாக இயங்கி வருகிற பள்ளிகளின் தரத்தைக் குறித்தும் அந்தப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய வசதியில்லாத தன்மைகள் குறித்தும் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இது சம்பந்தமாக, ஆதிதிராவிட நலத்துறை இயக்குநர் அவர்கள் தேவையான பரிந்துரைகளைச் செய்ததன் மூலமாக, அரசு அவற்றைக் கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டதன் காரணமாக, வருகின்ற நிதிஆண்டிலே அதிகப்படியான ஆசிரியர்களை நியமிப்பதற்கும் மரச்சாமான்கள் போன்ற உபகரணங்களை வாங்குவதற்காக ரூ. 43.82இலட்சம் இந்த அரசு அனுமதிக்க இருக்கிறது என்பதையும் இந்த மானியக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தருவதன் மூலமாக, அது நடைமுறைக்கு வரும் என்கிற வகையில் இந்த மானியக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தருவீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களிடத்திலே அதை எதிர்பார்க்கின்றேன்.

அதைப் போல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் புதிய விடுதிகளையும் இந்தத் துறையின் மூலமாக நாம் கட்டி வருகின்றோம் என்பதையும் சென்ற ஆண்டினைப் பொறுத்த வரையிலே ஏறத்தாழ 78 விடுதிகளைத் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக நாம் கட்டியிருக்கிறோம் என்பதையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னொரு முக்கிய பிரச்னையாக, இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் ஒரு கருத்தினைச் சொன்னார்கள். வீட்டுமனைகள், தமிழகத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு இன்றியமையாத பிரச்னையாக இருக்கிறது என்பதையும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்திலே இருக்கிற ஆதிதிராவிட மக்களுடைய நலனுக்காக தனியாக ஒரு 3 ஆண்டு திட்டத்தைக் கூட இங்கே உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையிலே சில ஆய்வுகளை மேற்கொண்டபொழுது அதன் மூலமாக உடனடியாக வீட்டுமனைகள் தேவை என்று சொல்கின்ற அளவிலே 2 லட்சம் பேர்கள் உடனடியாக வீட்டுமனைகள் வேண்டுமென்ற அளவிலே இருப்பதாக அந்த ஆய்விலிருந்து நமக்குத்



தெளிவாகிறது என்கிற அந்த வகையில், இந்த அரசைப் பொறுத்தவரையில் அதற்கு எந்த வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ அவைகளை எடுக்கின்ற முயற்சிகளிலே ஈடுபட்டிருக்கிறது என்பதையும் இங்கே நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

(இரவு 7-30)

மாண்புமிகு உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் உங்களுக்கு மிக நன்றாகத் தெரிந்திருக்கும். இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தான் தமிழகத்திலே வீட்டு மனைகள் பிரச்னையைத் தீர்க்க வேண்டும். உடனடியாகக் களைய வேண்டுமென்ற உணர்வோடு 1978—ஆம் ஆண்டுச்சட்டத்தை இந்த அரசு கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தை நாம் நடைமுறைப் படுத்துவதன் மூலமாக இந்த ஆதிதிராவிட மக்களுடைய வீட்டுமனைப் பிரச்னைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். நிறைவேற்ற முடியும் என்கிற அடிப்படையிலே அந்த புதிய சட்டத்தை இந்த அரசு உருவாக்கியது, ஆனால் உயர்நீதி மன்றம் அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பு அளித்ததன் காரணமாக தற்போது இந்த அரசு உச்ச நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்து அந்த வழக்கு அங்கே நிலுவையிலே இருக்கிறது. அந்த வழக்கினைத் துரிதப்படுத்துகின்ற நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

இருந்தாலும் தொடர்ந்து வீட்டு மனைப் பிரச்னையைச் சமாளிக்க வேண்டு மன்ற முறையில் இந்த அரசைப் பொறுத்தவரையில் பழைய சட்டத்தின்படி 1894 ஆக்ட்டின்படி தமிழகத்திலே வீட்டுமனைப் பட்டக்களை வழங்குகின்ற நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சட்டத்தின் மூலமாக நடை பெறுகின்ற அந்தத் திட்டம் காலதாமதமானாலும்கூட இந்த அரசைப் பொறுத்தவரையிலே ஒதுக்குகின்ற தொகைக்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும்—இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு பழனிவேல் அவர்கள் கூட 1.25 கோடியை நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லி இந்த தொகையை நீங்கள் முழுமையாகச் செலவிடமுடியாது என்ற வகையிலே கூட அவர்கள் கருத்துக்களைச் சொன்னார்கள் அது போதாது என்ற வகையில் கருத்தைக் சொன்னார்கள். ஒன்றை மட்டும் இங்கே சொல்ல நான் விரும்புகிறேன்.

பழைய சட்டத்தின் அடிப்படையிலே நாம் தற்போது பணத்தை ஒதுக்கீடு செய்து, இவ்வளவு ஒதுக்கீடு செய்து நாம் நிலங்களைக் கையக்கப்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட்டாலும் இறுதியிலே பார்க்கிற பொழுது ஒதுக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொகையைக் காட்டிலும் அதிகமாகவே இந்த அரசைப் பொறுத்தவரையிலே செலவிட்டிருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுகளாக இங்கே இறுதியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் கூட ஒரு கருத்தினைச் சொன்னார்கள். கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய குறிப்புகளிலே 1949-ஆம் ஆண்டு முதல் இன்று வரை என்கின்ற வகையிலே மூன்று இலட்சத்துச் சில்லறை என்கின்ற அளவிலே ஒரு கணக்கைத் தெரிவித்திருப்பதாக அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் கடந்த பத்தாண்டுகளாக தமிழகத்திலே கையகப்படுத்தப்பட்டிருக்கக் கூடிய வீட்டுமனைப் பட்டாக்களுடைய எண்ணிக்கை, 1966 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையில் 91,658 ஆக இருக்கிறது. இது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகின்ற பொறுப்புக்கு வருவதற்கு முன்பாக இருந்த கணக்கு ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவரின் தலைமையிலே இந்த அரசை அமைத்த பிறகு தமிழகத்திலே கயகப் படுத்தப்பட்டிருக்கக் கூடிய மனைகளினுடைய எண்ணிக்கை, 1977 முதல் இன்று வரையில் 1,37,526 ஆகியிருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்து விழைகின்றேன்.

இந்த அரசினைப் பொறுத்தவரையில் இதிலே அதிக அக்கறையை எடுத்துக் கொண்டு இதிலே அதிக முயற்சிகளை எடுத்துக் கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் அந்தப் பணியினைத் திறம்பட நாம் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டிருப்பதன் காரணமாக இதிலே இந்த அரசு அதிக அக்கறையினைக் கொண்டு செயலாற்றி வருகிறது என்பதனை நான் தெரிவிக்க விழைகிறேன்.

பழங்குடியினரைப் பொறுத்தவரையில் இந்த அரசு தமிழகத்தில் ஐந்து மாவட்டத்தில் ஒன்பது இடங்களிலே ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது என்பதையும், பழங்குடியினரைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே அவர்களுடையமக்கள்தொகை 5.20 இலட்சமாக இருக்கிறது என்பதையும் அடிப்படையாகக் கொண்டு, எந்த வித வசதியும் வாய்ப்பும் இன்றி இருக்கக்கூடிய அவர்களுக்கு அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்ற வகையில், இந்த அரசைப் பொறுத்தவரையிலே இப்பொழுது பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டத்தினைத் தமிழகத்திலே திறம்பட செயலாற்றி வருகிறோம்.

அந்த வகையில் 1981-82—ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் தம்முடைய மாநிலத் திட்டத்திலேயிருந்து இதற்காக 300.65 இலட்சமும், மைய அரசினுடைய சிறப்பு உதவியாக 92 இலட்சமும், ஆக மொத்தம் 81-82-லே 392.65 இலட்சம் நாம் செலவிட்டு இருக்கிறோம் என்பதை நான் தெரிவிக்க விழைகின்றேன். அடுத்த ஆண்டாக, 1982-83-ஆம் ஆண்டும்



மொத்தமாக நாம் செலவிட்டிருக்கும் தொகை 451.36 இலட்சமாக இருக்கிறது. வருகின்ற ஆண்டிலே 600.58 இலட்சம் செலவிட வேண்டுமென்று நாம் திட்டங்களை வகுத்திருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவிக்க விழைகிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற ஆதிதிராவிட மக்கள் அனைத்து வசதிகளையும் பெற வேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கைகளை எடுக்கின்ற அதே நேரத்தில், சமுதாயத்திலே இருக்கக் கூடிய பல பிரச்னைகளைக் களைவது இந்த அரசுக்கு இருக்கக்கூடிய முக்கிய பிரச்னையாக இருக்கிறது. அதிலே முக்கியமாக தீண்டாமைப் பிரச்னையைப் பற்றி இங்கே பேசிய உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்னார்கள்.

தீண்டாமையை இந்த நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று எல்லோரும் ஒருமித்த கருத்தைக் கொண்டிருந்தாலும், தமிழக அரசைப் பொறுத்தவரையிலும், தீண்டாமையை விலக்குவதற்கும், ஆதிதிராவிட மக்களுடைய பொருளாதாரத் தன்மையை உயர்த்தவேண்டுமென்கிற எண்ணம் இந்த அரசுக்கு உண்டு என்பதையும், அந்தப் பொருளாதாரத் தன்மையை உயர்த்துகின்ற நடவடிக்கைகளை நாம் எடுக்கவேண்டுமென்கிற உணர்விலே தமிழகத்திலே இருக்கின்ற 18 லட்சம் ஆதிதிராவிட குடும்பங்களில் 50 சதவிகிதமான 9 லட்சம் ஆதிதிராவிட குடும்பங்களை வறுமை கோட்டிற்கு மேலே கொண்டு வருகிற நடவடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விழைகின்றேன். ஆதிதிராவிட மக்களைப் பொறுத்தவரையில், வேளாண்மையும், வேளாண்மையைச் சார்ந்த தொழில்களிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது முன்பிருந்த நிலையைத் தெளிவாக்குகிறது ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை மாறி, பல்வேறு தொழில்களிலே அவர்களை அறிமுகப்படுத்தி, அவர்களுக்கு சம்பந்தமே இல்லாத தொழில்களிலே கூட அவர்கள் ஈடுபடுகின்ற ஒரு நிலைமையை உருவாக்கிய பெருமை தமிழக முதல்வர் புரட்சித் தலைவரைச் சாரும் என்பதை நான் தெரிவிக்க விழைகிறேன். முன்பெல்லாம் இந்தச் சமுதாயத்தில் பிறந்தவர்கள் இந்தத் தொழிலைத் தான் செய்ய வேண்டும் என்கிற நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு அந்த நிலைமை புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே முற்றிலும் மாறி, எந்த சமுதாயத்தில் பிறந்த யாரும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலைமை இன்றைக்கு உருவாகியிருக்கிறது, என்பதை இங்கே நான் தெரிவிக்க விழைகின்றேன். அந்த அடிப்படையிலேதான் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பல்வேறு தொழில்களிலே அவர்களை அறிமுகப்படுத்தி அவர்களுக்கு நிரந்தர மாத வருமானம் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்கிற நல்லுணர்வு காரணமாக, இந்த அரசு பல்வேறு திட்டங்களை வகுத்து, அதனைத் திறம்படச் செயலாற்றி வருகிறது என்பதையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. எம். விஜயசாரதி] [1983 மார்ச் 31

சென்ற ஆண்டை பொறுத்தவரையில், இந்தமாமன்றத்திலே இந்த மானியக் கோரிக்கைக்கு பதிலளித்துப் பேசுகிறபோது என்னென்ன திட்டங்களை அறிவித்தோமோ அந்தத் திட்டங்களை அறிவிப்போடு இல்லாமல், எந்த அளவிலே இருக்கிறது என்பதையும் இங்கே தெளிவு படுத்துவது என்னுடைய கடமையாக இருக்கிறது. இந்த அரசைப் பொறுத்தவரையில், அறிவிப்பதோடு இல்லாமல் பிரச்னைகளை செயல்படுத்துவதையே தன்னுடைய் கடமையாகக் கொண்டு செயலாற்றி வருகிறது என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சென்ற ஆண்டு இந்த மாமன்றத்திலே அறிவிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்திலே அமைக்க இருக்கின்ற நூற் பாலையைப் பொறுத்தவரையில், அதனை விளக்கவேண்டியது என்னுடைய கடமையாக இருக்கிறது. அந்த நூற்பாலைக்கு ஆகக் கூடிய மொத்த செலவு 4.39 கோடி ரூபாயாகும். அதற்கு தமிழக ஆதிதிராவிட வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக ரூ. 2 கோடியை நாம் மானியமாக அளித்து, அதன் மூலமாக அங்கே 300 ஆதிதிராவிட மக்கள் நிரந்தர வேலை வாய்ப்பைப் பெறுகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. சென்ற ஆண்டு தான் முயற்சிகளை எடுத்தோம் என்பதை இங்கே தெரிவிக்க விழைகின்றேன். அந்த வகையிலே அந்தப் பணியைப் பொறுத்த வரையில், தற்போது அச்சங்குளம் கிராமத்தில் 25 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கட்டிட வேலைகள் தீவிரமாக நடந்து கொண் டிருக்கின்றன. இயந்திரங்கள் வாங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அடுத்த வருடம் மே மாதம் முதல் இந்த நூற்பாலை அங்கே இயங்கும். அது இயங்குவதன் மூலமாக அங்கே 300 ஆதிதிராவிட மக்கள் நிரந்தர வேலைவாய்ப்பினை பெற்று, நிரந்தர மாத வருமானத்தைப் பெறுகின்ற ஒரு நிலைமையை நாம் உருவாக்கியிருக்கிறோம் என்பதையும் நான் தெரிவிக்க விழைகிறேன்.

திரு. துரைமுருகன் : ரூ. 4 கோடிக்கு ஒரு பேக்டரி. அதிலே ஒரு மில். அதிலே ரூ. 2 கோடி ஹரிஜன வாரியத்திலிருந்து கொடுக்கிறோம். ரூ. 2 கோடி கொடுத்து வேலை வாங்குகிறோம், இது சாசு கொடுத்து, வேலை வாங்குகிற மாதிரியே. சர்க்காரிலே போட்டு, பேக்டரி ஆரம்பித்து, அதிலே கொடுக்க லாமே தவிர, ஹரிஜன வாரியத்திலிருந்து ரூ. 2 கோடி கொடுத்து ஏன் 300 பேர்களை வேலை வாங்குகிறோம்? அமைச்சரிடம் கேட்கவிரும்புவது, மொத்தமாக அந்த பேக்டரி யிலே எத்தனை பேர்களை வேலையில் வைக்கப்போகிறீர்கள்? மொத்தமாக வைக்கும்பொழுது 'ஆட்டோமேடிக்காக' நமக்கு 18 சதவிதம் ஹரிஜனங்களுக்கு வந்தாகவேண்டும். அதை விட்டு விட்டு, ரூ. 2 கோடியை கேட்கிறீர்கள். அந்த ரூ. 2 கோடியை ஹரிஜனங்களுக்கு வேறு துறையில் செலவு பண்ணலாமே? மொத்தம் எவ்வளவு பேர்களை வேலைக்கு வைக்கப் போகிறீர்கள்? அதிலே 18 சதவிகிதம்...... (குறுக்கீடு)



1983 மார்ச் 31]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: நூற்பாலையைப் பொறுத்த வரையில், அங்கே 400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக் கிறது. அதிலே 300 பேர்கள் ஆதிதிராவிடர்கள் இருக்க வேண்டும் என்கிற வகையில் இந்த அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அது தவறு என்று மாண்புமிகு உறுப்பினர் கருதுகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. 300 ஆதிதிராவிடர்களுக்கு மாத நிரந்தர வருமானம் கிடைக்கக் கூடிய நிலமை அவர்களுக்கு இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையில் செய்து தந்திருக்கிறது.

திரு. துரைமுருகன் : 400-ஐயும் ஹரிஜனங்களுக்கே கொடுத் தாலும் ஓ. கே. சொல்கிறவன் நான். அதுலே மாறுபட்ட கருத்து அல்ல. ஹரிஜன நலத்திலிருந்து ரூ. 2 கோடி வாங்குகிறீர்களே, அதை வாங்கி 300 பேர்களுக்கு வேலை கொடுக்கிறீர்களே, அதற்கு நாம் தனியாக ஒரு பேக்டரி ஆரம்பிக்கலாம். ஹரிஜன் டெவலப்பர் இலாகா ஆரமபிக்கலாம், அதிலே சர்க்கார் ஆரம் பிக்கிற ஒரு இடத்திலே, இந்த வாரியத்திலிருந்து பணம் கொடுக்கத் தேவையில்லை என்பது என்னுடைய எண்ணம்.

(இரவு 7-40)

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : அது உங்களுடைய எண்ணமாக இருந்தாலும் அரசைப் பொறுத்தவரையில் இந்த மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற வகையில் இப்போது பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன்.

அடுத்ததாக சென்ற ஆண்டைப் பொறுத்த வரையில் தமிழகத்திலே இருக்கின்ற ஏழை ஆதிதிராவிட மக்கள் நிலங் களைப் பெற்றிருந்தாலும் அந்த நிலங்கள் சரியான பாசன வசதியற்று இருப்பதன் காரணமாக பல இடங்களிலே அந்த நிலங்கள் தரிசாக இருப்பதை உணர்ந்த இந்த அரசு அந்த முயற்சிகளை எடுத்து, இத்தகைய தரிசு நிலங்களுக்கு பாசன வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற காரணத்தால் தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் வாரியத்தோடு தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வாரியக்கழகம் இணைந்து தமிழகத்திலே 5 மாவட்டங்களில் அந்தப் பணிகளை மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுத்தது. அதன் மூலமாக தமிழ்நாடு குழாய்க் கிணறுகள் தோண்டுகின்ற அந்த வாரியம் இதுவரையில் 271.16 லட்சம் மதிப்பீட்டில் 5,665, ஆதிதிராவிட விவசாயிகளுக்கு பயன் படுத்துவதற்காக 208 திட்டங்களை தயாரித்து இருக்கிறது. இந்தக் கழகம் இதுவரையில் 45 குழாய்க் கிணறுகள் தோண்டி யிருக்கிறது. மேலும் 6 குழாய்க்கிணறுகள் தோண்டப்படுகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்படுத்தப்பட்ட ஒன்றியத்தைத் தேர்வு செய்து, அந்த ஒன்றியத்திலே இருக்கக்கூடிய ஆயிரம் குடும்பங்களைத் தேர்வு செய்து, ஆயிரம் குடும்பங்களும், அவர்கள் சேர்ந்திருக்கக்கூடிய பகுதியிலே அவர்களுக்கு தொழில் களிலே ஈடுபடுகின்ற ஒரு நிலைமைய உருவாக்க வேண்டுமென்ற வகையில் இந்த அரசைப் பொறுத்தவரையில் அதற்கான

ஒவ்வொரு ஒன்றியத்திலேயும், தேர்ந்தெடுக்கப்படுகின்ற
ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 60 லட்சம் ரூபாயை ஒதுக்கி இதன்
மூலமாக அங்கே நிரந்தர வேலை வாய்ப்புக் கிடைக்கக்கூடிய
நிலைமையை இந்த அரசு உருவாக்கியது. அதன் மூலமாக இந்த
வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக இதுவரையில் 11 மாவட்டங்
களில் இந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஆணைகளை
அரசு பிறப்பித்திருக்கிறது. மீதி இருக்கிற 4 மாவட்டங்களில்
இந்த திட்டம் அமுல்படுத்துவதற்கான ஆணைகளை விரைவில்
பிறப்பிக்க இருக்கிறது. இதுவரையிலே இந்தத் திட்டத்தின் கீழ்
4,384 ஆதிதிராவிடர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். மற்றும
உள்ளவர்கள் 30—6—1983-க்குள் பயன் பெறுவார்கள் என்ற
வகையிலே இந்தத் திட்டத்தைப் பற்றி நான் இங்கே சொல்ல
விரும்புகிறேன். இதன் மூலமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய 15
ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகின்ற ஒரு நிலைமையை இந்த
அரசு உருவாக்கி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இந்த ஆண்டைப் பொறுத்தவரையில்
நான் ஏற்றுக்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் குறித்து
எடுத்துச் சொல்வதற்கு முன்பாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய
அருந்ததி மக்கள் எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாமல் இருக்
கின்ற அவர்களுக்கு இந்த அரசு சென்ற ஆண்டு 500 பங்குகளை
அளித்து, அதன் மூலம் 35 லட்சம் ரூபாயை ஒதுக்கி
தமிழகத்திலே இருக்கின்ற அருந்ததி மக்கள், சாலை ஓரங்களில்,
வெய்யிலிலும் மழையிலும் படுகின்ற இன்னல்களைத் தீர்க்க
வேண்டுமென்ற உணர்வை தமிழக முதல்வர் அவர்கள் எடுத்துக்
கொண்ட முயற்சியின் காரணமாக இந்த திட்டத்தை உருவாக்கி
35 லட்சம் ரூபாயை அதற்காக ஒதுக்கி அதிலே 500 பேர்களுக்கு
அந்த வாய்ப்பினை உருவாக்குகின்ற வகையிலே இந்த அரசு
நடவடிக்கை எடுத்தது. அதே திட்டத்தை இந்த ஆண்டும்
அறிவித்து, இதன் மூலமாக தமிழகத்திலே இருக்கக்கூடிய மேலும்
500 அருந்ததி குடும்பங்கள் ஒரு நல்ல நிமைக்கு வருகின்ற ஒரு
வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற வகையில் ஒவ்வொரு
வருக்கும் 7 ஆயிரம் வீதப்—ஒவ்வொரு பங்கு அமைப்பதற்கு 7
ஆயிரம் வீதப்—இந்த அரசு ஒதுக்கீடு செய்து 500 பங்குகளை
அளிக்கக்கூடிய நடவடிக்கைகளை இந்த அரசு இந்த ஆண்டும்
எடுத்துக்கொண்டு இருக்கிறது என்பதும், அதற்காக 35 லட்சம்
ரூபாயை இந்த அரசு இந்த ஆண்டும் ஒதுக்கும் என்பதையும்
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தமிழகத்திலே படித்திருக்கின்ற ஆதி திராவிட
சமுதாயத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கும், பெண்களுக்கும் ஒரு
சுய வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்ற வகையிலே, அதே
போன்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில், இந்த
ஆண்டும், இந்த அரசைப் பொறுத்தவரை எடுத்துக்கொண்டிருக்
கின்ற புதிய முயற்சியாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். 400 பங்குகளை இதன் மூலமாக
அமைத்து நம்முடைய மாநிலத்திலே பல இடங்களிலே இருக்கக்
கூடிய நாசே நிறுவனங்களின் மூலமாக படித்த பட்டதாரிகளுக்கு
சுய வேலைவாய்ப்பிலே அவர்கள் ஈடுபடுகின்ற வழிவகையை



அவர்கள் செய்து இருப்பது போல், அதே வழியைப் பின்பற்றி
ஆதி திராவிட சமுதாயத்தைச் சார்ந்த படித்த இளைஞர்களும்,
பெண்களும் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவர்
களுக்குத் தேவையான கடைகளை அவர்கள் வைத்துக்கொண்டு
வாழ்க்கையை நடத்துவதற்கு இந்த அரசைப் பொறுத்தவரையில
இதற்காக 400 பங்குகளை இந்த ஆண்டு அமைப்பதாக இருக்
கிறது என்பதும், அதற்காக 20 லட்ச ரூபாயை இந்த ஆண்டு
நாம் செலவழிக்க இருக்கிறோம் என்பதையும் நான் இங்கே
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வட ஆர்க்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை
யிலும் கூட்டுறவுத் துறையிலே பட்டு நூல் தயாரிக்கின்ற ஆலை
சுமார் ரூபாய் 44 லட்சத்திலே அமைய இருக்கிறது. இதற்கு சிறப்பு
நிதிஉதவித் திட்டத்திலேயிருந்து 13.5 லட்ச ரூபாயினை நாம்
கொடுக்க இருக்கிறோம். இதன் மூலமாக அங்கே 100 ஆதி
திராவிட மக்கள் நிரந்தர வேலைவாய்ப்பைப் பெறுகின்ற வசதி
ஏற்படுத்தித் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே
தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதைத்தவிர, பட்டுப்பூச்சி வளர்ப்பிலே ஈடுபட்டு இருக்கும்
ஆதிதிராவிடர், மலைவாழ், பழங்குடி வகுப்பைச் சேர்ந்த சிறு
விவசாயிகளையும் இந்த கூட்டுறவு ஆலையில் அங்கத்தினர்களாக
சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, சேரன் போக்குவரத்துக் கழகத்தோடு
இணைந்து, ஆதிதிராவிடர் இளைஞர்களுக்காக ஊர்தி ஓட்டுநர்
பயிற்சி, மோட்டார் வாகனங்கள் பழுதுபார்த்தல், மற்றும்
போக்குவரத்துத் துறையைச் சேர்ந்த இதர பயிற்சி நிலையம்
ஒன்று, 1 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட இருக்கிறது
என்றும், அதற்காக சிறப்பு உதவித் திட்டத்தின் கீழ் 40 லட்சம்
தந்து, இதன் மூலமாக 1000 இளைஞர்களுக்கு அந்தப் பயிற்சி
அளிக்கப்பட்டு, அவர்கள் அந்தப் பயிற்சியைப் பெறுவதன்
மூலமாக நிரந்தர வேலை வாய்ப்பை வருங்காலத்தில் பெறுவ
தற்கு வழிவகை ஏற்படுத்துகின்ற ஒரு புதிய திட்டத்தை இந்த
ஆண்டு முதல் நாம் ஏற்படுத்த இருக்கிறோம் என்பதை நான்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அச்சுத் துறையைப் பொறுத்தவரையில், அச்சகத் தொழிலா
ளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசு அச்சகத்தில் நவீன
இயந்திரங்களை வாங்கி வைக்க வேண்டும் என்று அரசு முடிவு
எடுத்து, அதற்காக 74 லட்சத்து 94 ஆயிரம் ரூபாய் செலவில்
36 நவீன மற்றும் கட்டுமான இயந்திரங்களை வாங்கவேண்டும்
என்கிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.
1982-83-ஆம் ஆண்டில் சுமார் 46 லட்சத்து 44 ஆயிரத்து 860
ரூபாய் மதிப்புள்ள 20 நவீன இயந்திரங்களை வாங்குவதற்கு
அரசாணைகள் தற்போது பிறப்பிக்கப்பட்டு இருக்கின்றன
என்றும், அதிலே 21 லட்சத்து 11 ரூபாய் மதிப்புள்ள 12 நவீன
இயந்திரங்கள் வாங்கப்பட்டு உபயோகத்தில் இருக்கின்றன
என்பதையும் நான் தெரிவிக்க விழைகிறேன்.

சூளை பகுதியில் தற்போது இயங்கி வரும் அரசு அச்சகம் அந்த இடத்திலே இயங்க வசதி இல்லாத காரணத்தால் வேறு இடத்திற்கு அதைமாற்றி அங்கே முழுமையாக ஒரு அச்சகத்தை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விழைகிறேன்.

இராஜாஜி சாலையிலிருக்கும் எழுதுபொருள் கிடங்கு தற்போது வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால், அதற்கும், சூளை அச்சகம் ஆகிய இரண்டுக்கும் ஆகச் சேர்த்து வேறு இடத்தை தேர்வு செய்யும் பணி தற்போது ஏற்றுக்சொள்ளப்பெற்றிருக்கிறது என்பதையும் நான் தெரிவிக்க விழைகிறேன்.

அரசின் மைய அச்சகத்தைப் பொறுத்தவரையில், நவீனப் படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக தற்போது அரசின் பெரு முயற்சியால் முதன்முறையாக அச்சுத்துறை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு அதற்கு ரூபாய் நாற்பது இலட்சம் ஒதுக்கீடு செய்ய ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

1983-84-ஆம் ஆண்டைப் பொறுத்தவரை, ரூ 15 இலட்சமும் 1984-85 பொறுத்தவரை ரூ. 25 இலட்சமும் நவீன இயந்திரங்கள் வாங்குவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 1983-84-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ. 15 இலட்சத்தில் ஒரு போட்டோ டைப் செட்டிங் இயந்திரமும், வெப் ஆப் செட்டிங் மெஷின் ஒன்றும் கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடும் நடைபெறுகின்றன என்பதை நான் இப்போது தெரிவித்துக் கொள்ள விழைகின்றேன்.

மைய அரசைப் பொறுத்தவரையில், சென்ற 1982-83-ஆம் ஆண்டில் சில முக்கியப் பணிகளை இந்த அச்சகம் மேற்கொண் டிருக்கிறது. பெரியகுளத்தில் நடைபெற்ற இடைக்கால தேர்தலுக் கான வாக்காளர் சீட்டுகளையும் சட்டமன்ற பேரவை—மேலவை உறுப்பினர்களின் விவாதங்களையும் புத்தகங்களையும் படிவங் களையும் இந்த அச்சகம் தயாரித்துக் கொடுத்திருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இலவச வழிகாட்டுப் புத்தகமும் சத்துணவு விளக்க வழிகாட்டுப் புத்தகமும் குழந்தைகள் உடல்நல அட்டைகளையும் அச்சடிக் கின்ற பணிகளையும் இந்த அச்சகம் மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனிவேல் அவர் களும், ரகுமான்கான் அவர்களும், அந்த அச்சகத்தில் இருக்கக் கூடிய தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லி, அவர்களிலே தொழில் பழகுனர்களாக அப்பிரண்டிஸ்ஸுகளாக இருப்பவர்களுக்கு கூடுதல் ஸ்டைபண்டு தரவேண்டும் என்ற கருத்துக்களைச் சொன்னார்கள். அதைப்பொறுத்தவரையில், தற்போது அரசு அச்சகங்களில் 346 அப்பிரண்டிஸ்கள் இருக்



கின்றனர். அவர்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை 25-1-82 முதல் உயர்த்தி அளிக்கப்படவேண்டும் என்று இருக் கிறது. தற்போது அங்கே தொழில் பயிற்சியாளராக இருக்கக் கூடியவர்களுக்கு 130 முதல் 150 ரூ. வரையில் வழங்கப்படுகிறது. அதை 25-1-82 முதல் 230 முதல் 300 வரையில் உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என்று இருக்கிறது.

அதைப்போன்று டிப்ளமோவாக இருக்கக்கூடியவர்கள் 180 ரூபாய் வரையில் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 320 ரூபாய் வரையிலே கொடுக்க வேண்டுமென்ற வகையிலும் 25-1-82 முதல் அதை உயர்த்தித் தரவேண்டுமென்ற வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

(இரவு 7-50)

அதைப்போன்று 'சான்ட்விச்' பயிற்சியாளர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் 150 ரூபாய் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை 250 ரூபாயாக 25—1-1982 முதல் உயர்த்தி வழங்க ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த உதவித் தொகைகளை வழங்கு வதினால் அரசுக்கு தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு 4.56 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். இதை குறுகிய சுற்று முறையில் ஒப்புதல் பெற்று, ஆணைகள் விரைவிலே பிறப்பிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் அங்கே பார்வையிழந்தவர்கள் நூல் கட்டுகின்ற பணியிலே பணி யாற்றுவதை குறிப்பிட்டுச் சொல்லி, பார்வையிழந்தவர்களாக இருக்கக்கூடிய அவர்களுடைய கஷ்டத்தையும் எடுத்துக் கூறி யிருக்கிறார்கள், அவர்களுக்கு அதிலே பணி நிர்ணயிக்கப்படக் கூடாது என்ற ஒரு கருத்தையும் சொன்னார்கள். நூல் கட்டுகின்ற பணியிலே பணியாற்றுகின்ற அத்தனை தொழிலாளர்களுக்கும் அவர்கள் செய்யவேண்டிய வேலையின் அளவு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது இந்தவேலை அளவு பார்வையிழந்தவர்களுக்கும் பொருந்தும் என்றஅளவிலே தற்போது இருக்கிறது. இருந்தாலும் மடித்தல், கவர்செய்தல் போன்ற சுலபமான வேலைகள் மட்டும் இப்போது அவர்களுக்கு தரப்படுகின்றன என்பதைச் சொல்லு கின்ற அதேநேரத்தில் குறைந்த வேலை அளவு தரப்படுவதினால் மற்றவர்களுக்கு ஊதியஉயர்வு நிறுத்தப்படுவது போல் இவர்களுக் கும் ஊதிய நிறுத்தம் செய்யப்படுகிறது. அதனால் ஏற்படுகின்ற பாதிப்பை தவிர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் காரண மாக அரசு பார்வையிழந்தவர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு இருக்கிற வேலை அளவிலே சலுகை அளிப்பது குறித்தும் இந்த அரசு தற்போது தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டு வருகிறது என்பதையும் விரைவிலே அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அச்சகத்தைப் பொறுத்தவரையில் 1020 தொழிலாளர் களுக்கும் சலவைப்படி 4 ரூபாய் வீதத்தில் இருந்ததை நாம் 6 ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் பங்குகொண்டு பல உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருந்தாலுங்கூட நேரம் இல்லை என்பதால் அத்தனை உறுப்பினர்களுக்கும் தனிப்பட்ட முறையிலே பதில் அளிக்க இயலவில்லை என்றாலும் இந்த மாமன்றத்திலே இருக்கக்கூடிய ரிசர்வ் தொகுதிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் கூட்டுகின்ற அந்தக் கூட்டத்திலே பங்குகொண்டு கருத்துக்களைச் சொல்லும் நிலை இருக்கிறது. இந்த ஆண்டும் அதைப்போன்று இந்தக் கூட்டத்தொடர் முடிவ தற்குள் ஒரு கூட்டத்தைக் கூட்ட இருக்கிறேன். அதிலே நீங்கள் எல்லாம் கலந்துகொண்டு கருத்துக்களைக் கூறவேண்டும், சென்ற ஆண்டைப்போல இந்த ஆண்டும் கருத்துக்களைத் தர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்திலே நீங்கள் தெரிவித்த ஆலோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பல திட்டங்களை உருவாக்கினோம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள். அதைப்போன்று இந்த ஆண்டு கூட்டத்திலும் கலந்துகொண்டு அரிய கருத்துக்களைத் தர வேண்டுமென்று தற்போது நான் ஒரு வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் மாநில ஆதிதிராவிடர் கமிட்டி பற்றி ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்று காலையிலே திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் சொல்லும் போது அதற்கு விளக்கம் அளித்திருக்கிறேன். இந்தக் கூட்டத் தொடர் முடியும் முன்பே அந்தக் கமிட்டியை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மேலும் இங்கே பேசிய அனைத்து உறுப்பினர்களும் இந்த சமுதாய மக்கள் மேம்பாடு அடைய வேண்டுமென்ற முறையிலே நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களின் எண்ணத்தின் அடிப்படையிலே இந்த சமுதாய மக்கள் முன்னேறுவதற்கும் சமுதாயத்திலே மற்றவர்களால் இந்த சமுதாய மக்கள் மதிக்கப்படக்கூடிய வகையிலும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். தமிழ்நாட்டிலே ஆதி திராவிட மக்கள் வாழ்க்கைத் தரம் உயரும் வகையில், அவர்களுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும் வகையில் நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என்பதை எடுத்துச்சொல்லி, இங்கே விவாதத் திலே கலந்துகொண்ட உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் இந்த அரசு செயலாற்றும் என்பதை அவர்களுக்கு விவரமாக எடுத்துச்சொல்லியிருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கை களை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, நான் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்ல வில்லை. நான் ஏற்கெனவே உங்களிடம் விளக்கம் கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். (குறுக்கீடு)



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இரண்டு விஷயங்களுக்கு முக்கியமாக நான் விளக்கம் கேட்கக் கடமைப் பட்டிருக்கிறேன். ஒரு ஒன்றியத்திலே ஆயிரம் நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கொடுக்கக்கூடிய திட்டம் என்று சொன்னார்கள். அந்த திட்டத்தில் எத்தனை ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்திருக் கிறீர்கள்? நிரந்தர வேலை என்றால் என்ன வேலை? நிரந்தர மாக தொழில் செய்யக்கூடிய வேலையா? அல்லது வேறு ஏதாவதா? எந்த மாதிரியானது? அத்தோடு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்.... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு கேள்வியோடு போதும். இவைகளையெல்லாம் நீங்கள் உரையாற்றும்போது சேர்த்துக் கேட்டிருக்க வேண்டுமே தவிர, விவாதம் முடிவுற்ற தற்குப் பிறகு, இரண்டாவது விவாதமாக இப்படி மறுபடியும் தொடர்ந்து பேசக்கூடாது.... (குறுக்கீடு).

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்களிடம் கடைசியில் விளக்கம் கேட்க முன்பே உங்களிடம் அனுமதி கேட்டேன். அறிக்கையிலே இருப்பதைக் கூட கேட்கக்கூடாது என்றால் எப்படி? ** (குறுக்கீடு) கேட்கக்கூடாது என்று சொன்னால், உட்கார்ந்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரைப் பற்றிக் குறிப் பிட்டுப் பேசிய அந்தப் பகுதிகளை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். விவாதம் முடிந்ததற்குப் பிறகும், இப்படி விரிவாக பதில் கேட்டு விளக்கிக் கொண்டேபோனால் எப்படி சரியாகும்? தேவை என்றால் ஒன்றிரண்டு வரிகளை லேசாகக் கேட்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்....

திரு. எல். இளையபெருமாள் : லேசாகவே கேட்கிறேன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, பின்தங்கிய வகுப்பினர்களுக்கு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஆயிரம் பேர்களுக்கு நிரந்தர வேலை கொடுக்கிற திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு 4 ஆயிரம் பேர் களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்த வேலைகள் என்ன என்பதை விளக்க வேண்டும் என்பது ஒன்று; மற்றொன்று, மத்திய அரசு 6-வது ஐந்தாண்டு திட்டத்தில், இந்தத்துறைக்கு எவ்வளவு ஒதுக்கியிருக்கிறது, அதில் எவ்வளவு கிடைத்திருக்கிறது என்று சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

**மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆயிரம் குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டதாக ஏற்கெனவே நான் சொன்னேன். இதிலே அந்தந்த மக்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் என்னென்ன தொழில்களைச் செய்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், அல்லது அதன் மூலமாக அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் என்று பார்த்து, இடத்திற்கேற்ப வசதி வாய்ந்த தொழில் இருக்குமேயானால் அங்கே அதற்குரிய கூடங் களை அமைத்து, அதற்கு தேவையான பயிற்சிகளையும் அவர் களுக்கு அளித்து, அதன் மூலமாக அவர்களுக்கு நிரந்தர வருமானத்தை ஏற்படுத்துகிற பணியைத்தான் நாம் செய்து வருகிறோம் என்று தெரிவித்திருக்கிறேன் (குறுக்கீடு).

திரு. எல். இளையபெருமாள் : அப்படிப்பட்ட தொழில் பழக்க வழக்கங்களே இல்லாத இடத்தில் என்ன செய்யப்போகிறீர்கள்?

மாண்புமிகு திரு எம். விஜயசாரதி : அந்தந்த பகுதிகளின் வசதிகளுக்கேற்ப அவர்களுக்கு என்னென்ன வழிகளில் பயிற்சி அளிக்க முடியுமோ, அப்படி அளித்து அல்லது அந்த மக்கள் இருக்கக்கூடிய சூழ்நிலையின் அடிப்படையில் அவர்களுக்கு என்னென்ன வாய்ப்பு வசதி இருக்கிறதோ, அந்த அடிப்படையிலே அவர்களுக்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்த இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தைப் பொறுத்தவரையில், அதிலே நான் ஏற்கெனவே சொன்னதைப் போல, 9.56 கோடியும், 8.64 கோடியும் இதுவரையில் இந்த அரசுக்கு கொடுக்கப்பட்டது. இந்த ஆண்டும் இதற்கான தொகை, 9.90 கோடியை அவர்கள் தருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அதுவும் அங்கேயிருந்து 3 தவணைகளில் நமக்கு கொடுக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண் 31—பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன்.

திருவாளர்கள் சு. பாலன், எல். இளையபெருமாள், எம். ஆறுமுகம், ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பற்றுக் கொள்ளப் பெற்றன.



திரு. என். பழனிவேல் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதி யுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.

"மானியக் கோரிக்கை எண். 31 பழங்குடியினர் ஆதி திராவிடர் முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 44,45,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண். 44— எழுது பொருள்—அச்சுத்துறை.

திரு. சு. பாலன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றது.

திருவாளர்கள் கே. கல்லன், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர் களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,22,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 4-4-1983 காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8.01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

223. தமிழ்நாடு 1940-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 27-11-1982ஆம் நாளிட்ட 2989 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1939-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 4 1939) 133 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிவிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

137. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த தொகை கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

138. கோரிக்கை எண். 31—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் இணைப்புகள், 1983-84 (தமிழ், ஆங்கிலம்).

139. 1983–84ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத் துறையின் சாதனைத் திட்டம் (ஆங்கிலம்).

140. கோரிக்கை எண். 44—எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1983–84 (தமிழ், ஆங்கிலம்).

141. 1982-83ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை (ஏழாவது சட்டமன்றப் பேரவை) தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I

(....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 614-க்கான விடையைக் காண்க.)

உடுக்குறியிட்ட வினா எண் 10336 திரு. கே. ரமணி, எம்.எல். ஏ) சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படும் விவர அறிக்கை.

தேசிய பஞ்சாலைக்கழகம் (National Textile corporation) எடுத்துக் கொண்டுள்ள ஏழு மில்களிடமிருந்து, தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு செலுத்த வேண்டியுள்ள தொகை ரூ. 42.59 இலட்சம் செலுத்தப்படாமல் பாக்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| ஆலையின் பெயர். | வருங்காலவைப்பு நிதிக்கு செலுத்தப் பட வேண்டிய தொகை. (ரூ. இலட்சங்களில்) |
|---|---|
| 1. காளீஸ்வரர் மில்ஸ், கோயம்புத்தூர் | 10.36 |
| 2. சோமசுந்தரம் மில்ஸ், கோயம்புத்தூர் | 19.16 |
| 3. கோயம்புத்தூர் ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் .. | 5.85 |
| 4. பங்கஜா மில்ஸ், கோயம்புத்தூர் .. | 5.41 |
| 5. சாரதா மில்ஸ் கோயம்புத்தூர் .. | 1.34 |
| 6. கிருஷ்ணவேணி டெக்ஸ்டைல்ஸ், கோயம்புத்தூர். .. | 0.28 |
| 7. ஓம் பராசக்தி மில்ஸ், கோயம்புத்தூர் | 0.19 |
| மொத்தம் .. | 42.59 |



மேலே குறிப்பிட்ட ஆலைகள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் இவ்வாலைகள் தேசியமயமாக்கப்படுவதற்கு முன்புள்ள காலத்தைச் சேர்ந்தவையாகும். ஆகவே இவ்வாலைகள் செலுத்தவேண்டிய நிலுவைத் தொகைகளை 1974-ம் ஆண்டின் நலிந்த நெசவுத் தொழில் நிறுவனங்கள் (அரசுடைமை) சட்டத்தின்கீழ் மத்திய அரசால் இதற்கென நியமிக்கப்பட்ட வழங்குதல் ஆணையாளரின் (Commissner of p.ymen's) மூலம் ஆலைச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் ஈட்டுத் தொகைகளிலிருந்துதான் பெற இயலும். தொழிலாளர் வருங்கால வைப்புநிதி நிறுவனத்திலிருந்து இதற்கான கோரிக்கை மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் தேவையான நிதி இல்லாத காரணத்தால் வழங்குதல் ஆணையாளரிடமிருந்து மேற்கூறிய நிலுவைத் தொகையைப் பெற முடியவில்லை. ஆகவே உயர் மட்ட அதிகாரிகளுக்கு இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலைகளிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிப்பதென்பது அகில இந்திய ரீதியிலான ஒரு பிரச்சினை என்பதால் 20–7–81 அன்று மத்திய அரசு தொழிலாளர் துறைச் செயலரின் அலுவலகத்தில் மத்திய அரசு வர்த்தக அமைச்சரவைப் பிரதிநிதி, தொழிலாளர் நல அமைச்சரவைப் பிரதிநிதி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட ஆலை நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகிய இவர்கள் கலந்துகொண்டு ஒரு பேச்சு வார்த்தை நடைபெற்றது. நிலுவைத் தொகை வசூல் பற்றிய பிரச்சினையை மத்திய அரசு இன்னும் பரிசீலனை செய்து வருகிறது. இதுவரை மத்திய அரசிடமிருந்தோ அல்லது மத்திய வருங்கால வைப்பு நிதி ஆணையரிடமிருந்தோ எந்த ஒரு அறிவுரையும் இது பற்றி வரவில்லை,

### ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1983–84

பிழை திருத்தங்கள் :

| பக்க எண். | வரிசை எண். | கட்டம் எண். | பதிலாக | வாசிக்கவும் |
|---|---|---|---|---|
| 3 | 16 | 4 | ... | 122 |
| 3 | 16 | 6 | 252 | .. |
| 3 | 23 | 7 | 577 | .. |
| 3 | 23 | 8 | ... | 577 |
| 4 | 33 | 2 | 1000 | 1000 (க) |
| 4 | 33 | 2 | 100(மு) | 100 (க) |
| 5 | 37 | 2 | 20,000(மு) | 20,000 (மு) ** |
| 5 | 39 | 5 | ... | 200 |

| பக்க எண். | வரிசை எண். | கட்டம் எண். | பதிலாக. | வாசிக்கவும். |
|---|---|---|---|---|
| 6 | 43 | 3 | 169 | 139* |
| 6 | 49 | 2 | ** | 1** |
| 17 | 1 சென்னை | 5 | 18255 | 8255 |
| 12 | | | இந்து மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள் | *இந்து மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள் |
| | | | மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் | **மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப் பேற்கும் திட்டங்கள் |
| | | | சாட்டியது மூலதனம் கடன்களும் முன் பணங்களும் | (சா) சாட்டியது (மூ) மூலதனம் (க) கடன்களும் முன்பணங்களும். |

## இணைப்பு II

(..700 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு (1983-84)

"ஆதி திராவிடர் பழங்குடியினர் நலன்" என்ற தலைப்பின் கீழ் 1983-84 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை எண் 31-ல் ரூ. 4,445.68 இலட்சம் ஒதுக்க ஒப்புதல் அளிக்குமாறு இச் சட்ட மன்றப் பேரவையினை வேண்டுகிறேன்.

2. 1981 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி, தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர்கள் 88.86 இலட்சம் பேர். பழங்குடியினர் 5.20 இலட்சம் பேர். இது மொத்த மக்கள் தொகையில் முறையே 18.34 சதவீதமும் 1.07 சதவீதமும் ஆகும். தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் கல்வியறிவு பெற்றவர்கள் 46.76 சதவீதம். இதில் கல்வியறிவு பெற்ற ஆதிதிராவிடர் 29,67 சதவீதமும் பழங்குடியினர் 21.45 சதவீதமும் ஆவர்.



3. தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவந்த பலமுனைத் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதோடு கல்வி, வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, வருவாய், கூட்டுறவு, தொழில் போன்ற பல பொதுத்துறை திட்டங்களின் கீழ் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை செயற்படுத்திவரும் நலத் திட்டங்களின் பலனையும் இவர்கள் பெறுகின்றனர்.

4. ஆதி திராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப்படுத்த புதிதாகக் கொண்டுவரப்பட்ட சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருவதை இந்த அவையினர் நன்கறிவர். ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்கென கொண்டுவரப்பட்ட சிறப்புக்கூறுகள் கொண்ட திட்டத்தின் நோக்கங்களாவன:—

(i) ஆதி திராவிடர்களில் பாதிபேர் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளனர். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இவர்கள் வறுமை நிலையிலிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர உதவுதல்.

(ii) ஆறாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின்வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி முதலியவற்றை செய்து கொடுத்தல்.

இவ்விரண்டு நோக்கங்களையும் எய்த, இதர வளர்ச்சித் துறைகளின் முயற்சிகளையும் நிதி வாயில்களையும் ஒருங்கு திரட்டி பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் பொதுத் துறையிலிருந்து நன்மையை ஆதி திராவிடர்கள் பெற அரசு வழி வகுத்துள்ளது, இதற்காக, ஒவ்வொரு வளர்ச்சித் துறைக்கும் திட்ட இலக்கும், நிதி இலக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. நிதி இலக்கும் விவரங்கள் இணைப்பு IX—ல் கொடுக்கப்பட்டுள்ளன. திட்டங்களின் முன்னேற்றத்தைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நிதி இலக்கையும் திட்ட இலக்குகளையும் நிர்ணயிக்குமாறு வளர்சித் துறைகள் அனைத்தும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. இச் சிறப்புக்கூறுகள் கொண்ட திட்டம் பிரித்தறிய முடியாத துறைகளிடமிருந்து வரும் உதவி கணக்கெடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் 18 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் பாதிபேர் அதாவது 9 இலட்சம் ஆதி திராவிடர் குடும்பங்களின் வறுமை நிலையைப் போக்கி அவர்களை மேம்பட்ட நிலைக்கு கொண்டுவர ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் நலனைக் கவனித்துக்கொள்ள, தமிழ்நாட்டிலுள்ள 378 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரிவாக்க அதிகாரியை அரசு 1982—83 ஆம் ஆண்டில் நியமித்துள்ளது. மேலும் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர்களின்,

மேம்பாட்டிற்காகச் செயல்படுத்தப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களின் திட்ட மேம்பாட்டையும், நிதி மேம்பாட்டையும் கோட்ட அளவிலேயே திறம்பட ஆய்வு செய்து, கண்காணிக்க, சென்னை மாவட்டத்தைத் தவிர பிற அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு வருவாய் கோட்டத்திலும் ஒருகுழு அமைக்கப்பட்டுள்ளது. இது இதற்காக திங்கள் ஒருமுறை கூடும். கோட்டாட்சியர் இதன் தலைவராக இருப்பார்.

5. பழங்குடியினர் நலனுக்காக பழங்குடியினர் நலத் துணை திட்டத்தின்கீழ் தனித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. பழங்குடியினர் நலத் துணைத் திட்டம் வந்ததையடுத்து, பழங்குடியினர் மேம்பாட்டு நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கல்வி, பொருளாதார முன்னேற்றம், சுகாதாரம், வீட்டுவசதி மற்றும் ஏனைய திட்டங்களின்கீழ் உள்ள இயல்பான துணைத் திட்டங்களுடன் இத்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதைத் தவிர, தொன்மை பழங்குடியினருக்கான புதிய மேம்பாட்டுத் திட்டம் ஒன்றும் உள்ளது.

6. இந்திய ஆட்சிப் பணி பதவி நிலையிலுள்ள இயக்குநரின் தலைமையின்கீழ் ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறை செயல்பட்டு வருகிறது. பொது நிருவாகத்தில் இவருக்கு உதவியாக மாவட்ட வருவாய் அலுவலர் பதவித் தரத்திலுள்ள இணை இயக்குநர் ஒருவர் உள்ளார். நேர்முக உதவியாளர் ஒருவரும் உள்ளார். கல்வி தொடர்பான திட்டங்களில் இவருக்கு உதவியாக கல்வித்துறை துணை இயக்குநர் உதவி புரிகிறார். கணக்குப் பிரிவில் கணக்கு அலுவலர்கள் இருவர் இயக்குநருக்கு உதவியாக இருக்கின்றனர். இவர்கள் துறை கணக்குகளுக்கும், துறை கணக்கு குறித்த துறை தணிக்கைக்கும் பொறுப்பு வகிக்கின்றனர். பல்வேறு கூட்டுறவுத் திட்டங்கள், சில்லறை வணிகர்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் வழங்க அனுமதி அளிப்பது ஆகியவற்றை பொறுத்தமட்டில் கூட்டுறவு துணைப் பதிவாளர் ஒருவர் இயக்குநருக்கு உதவுகிறார். மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியாளர்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்கள் இத்துறையின் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துகின்றனர். மாவட்ட அளவில் சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம் செயல்படுத்தப்படுவதை ஆய்ந்து கண்காணிப்பது மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை முறையாக செயற்படுத்துவதும் மாவட்ட ஆட்சியாளரின் பொறுப்பாகும்.

7. ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டத்தின்கீழ் வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் பழங்குடியினர் நலத் துணைத் திட்டத்தின்கீழ் வரும் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டதன் பயனாக ஆதி திராவிடர், பழங்குடியினரின் சமூகப் பொருளாதார வளர்ச்சி வேகம் பெற்றுள்ளது. இதுவரை ஆதிதிராவிடர் பழங்குடியினர் நல



இயக்குநர், இயக்குநர் அலுவலகத்தின் வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள நல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமே பொறுப்பேற்றிருந்தார். அரசுத் துறைகளிலும், அரசு பொதுத்துறை நிறுவனங்களிலும், கல்வி நிறுவனங்களிலும் ஆதி திராவிடருக்கு 18 சதவீதம் இட ஒதுக்கீடு செயப்படுகிறதா என்பதை ஆய்வு செய்து கண்காணிக்கவும் அவர் உயர் அதிகாரக் குழுவின் உறுப்பினர்—செயலாளர் என்ற முறையில் பொறுப்பேற்றுள்ளார். இதுபோன்ற சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புக் சட்டம், பழங்குடியினர் நலத் துணைத்திட்டம் ஆகியவை செயற்படுத்தப்படுவதையும் ஆய்வு செய்வதும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரின் பொறுப்பாகும். சிறப்புக் கூறுகள் கொண்ட திட்டம், குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், பழங்குடியினர் நலத்துணைத் திட்டம் ஆகியவை செவ்வனே செயற்படுத்தப்படுவது குறித்து அரசுக்குத் தெரிவிக்கும் கூடுதல் பொறுப்பும் ஆதி திராவிடர் பழங்குடியினர் நல இயக்குநர், மாவட்டங்களிலுள்ள அத்துறை அதிகாரிகள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் திட்டங்கள்.

8. ஆதி திராவிடர்-பழங்குடியினர் நல மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைத் தவிர 'மூலதனச் செலவு' என்ற தலைப்பில் ரூ. 540.01 இலட்சமும், ''கடன்கள்-முன்பணங்கள்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 73.61 இலட்சம், ''கொத்தடிமைகளுக்குப் புது வாழ்வு அளித்தல்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 0.26 இலட்சமும் சாட்டியவை என்பதில் ரூ. 2.02 இலட்சமும் ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத் திட்டங்களுக்காக 1983–84 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத் திட்டத்திற்காக 1983–84 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 5,061.58 இலட்சம் ஒதுக்கப்படும்.

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலனுக்காக தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகள் பின்வரும் மூன்று பெருந்தலைப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன:

1. கல்வி
2. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.
3. பொது சுகாதாரம், வீட்டு வசதி.

### 1. கல்வி

9. ஆதி திராவிடர்-பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு முதன்மையானதாகவும், இன்றியமையாதாகவும் திகழ்வது கல்விதான் என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை. தற்போது ஆதி திராவிடர்-பழங்குடியினர் மாணவர்களுக்கென்றே ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத் துறை நடத்திவரும் பள்ளிகளில் மட்டுமல்லாமல், கல்வித்துறை தனியார் நிறுவனம் நடத்தும் பள்ளிகளிலும் அவர்களுக்கு தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைக் கல்வி அளிக்கப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தில் இத்துறைக்கு ஒதுக்கப்படும் தொகையில் பெரும்பகுதியானது கல்விக்காக ஆண்டுதோறும் செலவிடப்படுகிறது. அதன் விவரம் வருமாறு:—

| ஆண்டு | ஆதி திராவிடர்–பழங்குடியினர் நலனுக்கான மொத்த ஒதுக்கீட்டுத் தொகை. | ஆதி திராவிடர்/பழங்குடியினர் கல்விக்காக மட்டுமான ஒதுக்கீடு. |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| (1) | (2) | (3) |
| 1981–82 | 2,702.17 | 1,791.25 |
| 1982–83 | 4,285.64 | 2,117.58 |
| 1983–84 | 4,460.99 | 2,378.27 |

படிப்புதவித் தொகை:—

10. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பு:

1976–77 ஆம் ஆண்டு இறுதிவரை, முதல் வகுப்பு முதல் பதினோராம் வகுப்பு வரை பயிலும் ஆதி திராவிடர் (இந்து)- பழங்குடியினர் கிருஸ்துவராக மாறிய ஆதி திராவிடர் களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலாததற்கான படிப்புதவித் தொகையும் வழங்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை, புத்தகங்களுக் காகவும், தனிக் கட்டணங்களுக்காகவும் ரொக்கமாகக் கொடுக்கப் பட்டது. படிப்புதவித் தொகையுடன், அவசியமான போது தேர்வுக் கட்டணங்களும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டது. இந்த படிப்புதவித் தொகை வழங்க, பெற்றோர்/பாதுகாவலரின் அதிக அளவு ஆண்டு வருமானம் ரூ. 3,000 என்று நிர்ணயிக்கப் பட்டிருந்தது. 1977–78 ஆம் ஆண்டு முதற்கொண்டு, நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் பயிலும் ஆதி திராவிடர் (இந்து), பழங்குடியினர், மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் களுக்கு,அவர்களின் பெற்றோரின்/பாதுகாவலரின்வருமானத்தைப் பாராமல் இலவசமாகப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர் களுக்குக் கல்வித் துறை இலவசமாகப் புத்தகங்களையும், சிலேட்டுகளையும் வழங்கி வருகிறது. சம்பந்தப்பட்ட நிலையங் களுக்குத் தனிக் கட்டணங்களைத் திருப்பிக் கொடுப்பது தொடர்பான சலுகைகள் தேர்வுக் கட்டணங்களைச் செலுத்து வதில் அளிக்கப்பட்ட சலுகைகள் ஆதி திராவிடர், பழங்குடி யினர், கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் களுக்கு அவர்களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருதாமல் அளிக்கப்படுகிறது. இச்சலுகை களினால், IV முதல் X ஆம் வகுப்பு வரையிலான வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் கிருத்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச்



சேர்ந்த சுமார் 7.89 இலட்சம் மாணவர்கள் 1981–82 ஆம் ஆண்டில் பயனடைந்தனர். இதைத் தவிர, பள்ளிகளுடன் இணைக்கப்பட்ட மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் VI முதல் X வகுப்புகளில் பயிலும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் கிருஸ்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்களுக்கு மாணவரில்லங்களில் தங்கிப் பயில்வதற்குரிய கட்டணங்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. மெட்ரிக் படிப்புக்கு முந்தைய படிப்பிற்கு மாணவரில்லங்களில் தங்கிப் பயில்வதற்கான கட்டணத் தொகைக்கு ஒப்புதலளிப்பதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 விருந்து ரூ. 6,000 மாக உயர்த்தப் பட்டது. இது, 1981–82 ஆம் கல்வி ஆண்டிலிருந்து செயலுக்கு வந்தது. தங்கிப் பயிலும் மாணவர் ஒருவருக்கு 1981–82 ஆம் ஆண்டில் உணவு, தங்குவதற்குரிய கட்டணங்கள் வகையில் வழங்கப்படும் தொகை திங்களொன்றுக்கு 10 ரூபாய் உயர்த்தப் பட்டது. உணவு மற்றும் தங்குவதற்குரிய தற்போதைய கட்டண வீதம் ஆண்டொன்றுக்கு ரூ. 250 லிருந்து ரூ. 350 வரை ஆகும்.

II மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு

மெட்ரிக் வகுப்பிற்கு மேற்பட்ட வகுப்புகளில் படிக்கும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவர்கள் அனைவருக்கும் அவர் களுடைய பெற்றோரின்/காப்பாளரின் வருமானத்தைக் கருத்திற் கொள்ளாமல் படிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுவதில்லை. இவ்விதம், ஆதி திராவிடர், பழங்குடியினர் வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு எல்லா வகுப்புகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது.

மேல்நிலைப் பள்ளிப் படிப்பு, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு, கலைக் கல்வி, அறிவியற் கல்வி உயர்மட்ட தொழில் நுட்ப பயிற்சிகள் ஆகியவற்றைப் பயிலும் இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவரில்லத்தில் தங்கிப் பயிலும் மாணவர் களுக்கும் மாணவரில்லத்தில் தங்கிப் பயிலாத மாணவர் களுக்கும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் எம்மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கருத்திற் கொள்ளாமல், மத்திய அரசின் படிப்புத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் படிப்புதவி தொகையைப் பெறத் தகுதியற்ற இந்து ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கும், (அவர்கள் எம்மதத்தைச் சேர்ந்தவராய் இருப்பினும்) கிறித்துவ மதத்திற்கு மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களுக்கும், மாநில அரசின் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசின் உதவித் தொகையை பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு 9,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக 1—7—1981 முதற்கொண்டு உயர்த்தப்பட்டது. மாநில அரசின் உதவித் தொகையைப் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு ரூ. 3,000 லிருந்து ரூ. 6,000 ஆக 1981–82 ஆம் கல்வியாண்டிலிருந்து உயர்த்தப்பட்டது.

ஆதி திராவிடர் பழங்குடியினர் வகுப்லபச் சேர்ந்த மருத்துவ, பொறியியற் கல் பயிலும் மாணவர்களுக்கும் மாணவரில்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் வழங்கப்படும் பராமரிப்புப் படியினை மத்திய அரசு 1—1—1978 விருந்து திங்களொன்றுக்கு ரூ. 60 ஆக உயர்த்தியது. ஏனைய படிப்புகளுக்கும், பராமரிப்புப் படிலய 1—7—1981 விருந்து திங்களொன்றுக்கு ரூ. 5 விருந்து ரூ. 60 வரை உயர்த்தியுள்ளது. மத்திய அரசு வழங்கும் படிப்புதவித் தொகையில் பராமரிப்பு செலவிற்கான தற்போதைய தொகை திங்களொன்றுக்கு ரூ. 50 விருந்து ரூ. 240 வரை உயர்த்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் பயனடைந்த மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1977—78 விருந்து 1981—82 வரையிலான ஆண்டு களில் செலவிடப்பட்ட தொகை ஆகியவை குறித்த விவரங்கள் வருமாறு:—

| ஆண்டு. | மாநில அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.) | மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.) | தொகை (ரூ. இலட்சத்தில்.) | மத்திய அரசின் விதிமுறைகளின் கீழ் மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பு. (பயனடைந்தவர்களின் எண்ணிக்கை.) | தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| ஆதி திராவிடர்கள். | | | | | |
| 1977—78 | 6,10,070 | 4,930 | 83.48 | 18,050 | 1,53.67 |
| 1978—79 | 6,69,688 | 3,819 | 1?2.46 | 18,254 | 1,53.02 |
| 1979—80 | 7,74,965 | 5,887 | 160.67 | 22,890 | 2,13.41 |
| 1980—81 | 7,79.444 | 8,329 | 171.49 | 39,214 | 2,78.10 |
| 1981—82 | 7,88.781 | 8,149 | 152.23 | 43,940 | 4,15.21 |
| பழங்குடியினர். | | | | | |
| 1977—78 | .. | .. | .. | 225 | 2.52 |
| 1978—79 | 3 | .. | 0.01 | 218 | 1.97 |
| 1979—80 | .. | 1 | 0.01 | 69 | 0.74 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1980—81 | 53 | .. | 0.11 | 255 | 2.08 |
| 1981—82 | 39 | . | 0.09 | 473 | 2.88 |

குறிப்பு 1 : மத்திய அரசின் படிப்புதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 1978—79 ஆம் ஆண்டு முடிவில் செலவிடப் பட்ட தொகையை விட அதிகமாகச் செலவிடப்பட்ட தொகையை மத்திய அரசு ஏற்கும். எஞ்சிய தொகையை பொறுப்பேற்ற செலவுத் தொகையாக மாநில அரசு ஏற்கும்.

குறிப்பு 2 : புத்த மதத்திற்கு மாறிய ஆதி திராவிட மாணவர்கள் மத்திய அரசின் படிப்புதவித் தொகையைப் பெறத் தகுதியுடையவராவர்.

மத்திய அரசின் படிப்புதவித் தொகை குறித்த நடைமுறை களின் கீழும், மாநில அரசின் படிப்புதவித் தொகை குறித்த அறிக்கையின் கீழும், மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட அனைத்துப் படிப்புகளுக்கும் படிப்புதவித் தொகை வழங்குவதற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர்களே, ஒப்புதலளிக்கும் அதிகாரி களாவர் என்று 1982–83 ஆம் கல்வியாண்டிலிருந்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், தொழிற் பயிற்சிகளும் (இப்பயிற்சியில் சேர பள்ளி இறுதி வகுப்பில் தேறியிருக்க வேண்டிய அவசியமில்லை) மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்பாகக் கருதப்படும்.

இப்புதிய நடைமுறையின்படி, 1981—82 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகைச் செலவிடப்பட்ட தொகையில் 90 சதவீதத்திற்கு சமமான தொகை 1982—83 ஆம் ஆண்டில் தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகையின் முதல் தவணைத் தொகையாகப் பிரித்துக் கொடுப்பதற்கான முன்பணமாக கல்வி நிறுவனங்களின் தலைவர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. இது வரை, 43,279 மாணவர்களுக்கு முதல் தவணைத் தொகை வழங்குவதற்காக, மெட்ரிக் படிப்பிற்கு மேற்பட்ட படிப்புகளைக் கொண்ட 1,400 கல்வி நிறுவனங்களுக்கு இதுவரை ரூ. 249.71 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. நிறுவனத் தலைவர்கள் வழங்கிய படிப்புதவித் தொகையை அடிப்படையாகக் கொண்டு படிப்புதவித் தொகையின் இரண்டாம் தவணைத் தொகை வழங்கப்பட உள்ளது.

12. செயலூக்கத் திட்டம்:

கல்வியில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் தொடர்ந்து பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் பள்ளி இறுதித் தேர்வில் முதலாதாவும், இரண்டாவதாகவும் வெற்றி பெறும் ஆதி திராவிடர் மாணவர்கள் (ஆண்கள்) இருவருக்கும், கிறித்தவராக மதம் மாறிய ஆதி

1983-84 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 61.00 இலட்சமும், கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ. 1.01 இலட்சமும் 1983-84 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டு உள்ளது.

மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டத்தின் கீழ் நீரடி வசதியற்ற கழிப்பிடங்களைச் சுத்தம் செய்தல், தோல் பதனிடுதல், தோல் உரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், ஆதி திராவிடர்கள் அல்லாத வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு மெட்ரிக் படிப்பிற்கு முந்தைய படிப்பிற்காக வழங்கப்படும் படிப்புதவித் தொகை தொடர்ந்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 2.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

17. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள்:

(அ) ஆதி திராவிடர்கள்.—இம்மாநிலத்தில் 947 ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் உள்ளன. அவற்றின் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| 1. தொடக்கப் பள்ளிகள் .. | 842 |
| 2. நடுநிலைப் பள்ளிகள் .. | 71 |
| 3. உயர்நிலைப் பள்ளிகள் .. | 26 |
| 4. மேல்நிலைப் பள்ளிகள் .. | 8 |
| மொத்தம் .. | 947 |

இப்பள்ளிகளில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய வகுப்பைச் சேர்ந்த சுமார் 1.78 இலட்சம் மாணவர்கள் பயிலுகின்றனர். ஆதி திராவிடர் நல மேல்நிலை/உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் நூலக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பழங்குடியினர்.—இத்துறை பழங்குடியினருக்காக 138 பள்ளிகளை நடத்தி வருகிறது. அவற்றின் விவரம் வருமாறு :—



| | |
|---|---|
| அரசு பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் .. | 118 |
| அரசு பழங்குடியினர் உறைவிட நடுநிலைப் பள்ளிகள் .. | 12 |
| அரசு பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளிகள் .. | 4 |
| அரசு பழங்குடியினர் உறைவிட மேல்நிலைப் பள்ளிகள் | 3 |
| அரசு பழங்குடியினர் உறைவிடம் இல்லாத பள்ளி .. | 1 |
| மொத்தம் .. | 138 |

மேற்கூறிய உறைவிடப் பள்ளிகளில் இலவச உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் 8,598 மாணவர்கள் பயனடைகின்றார்கள். 1982-83 ஆம் ஆண்டில் புதியதாக 12 பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன.

1982-83ஆம் ஆண்டில் 3 பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 2 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப் பட்டுள்ளன.

1982-83ஆம் கல்வி ஆண்டில் ஆதி திராவிடர் நலத் தொடக்கப் பள்ளி ஒன்று நடுநிலைப் பள்ளியாகவும், 9 ஆதி திராவிடர் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 4 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்பட்டுள்ளதுடன் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கும், பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகளுக்கும் பல்வேறு பதவித்தர ஆசிரியர்களும் கூடுதலாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலத்துறை நடத்தும் பள்ளிகளுக்குக் கட்டிட வசதி செய்து கொடுப்பதற்காக 1980-81இல் ரூபாய் 1 கோடி செலவில் அனுமதிக்கப்பட்ட திட்டம் ஒன்று 1981-82-ல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது

1981 82இல் 14 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

1982-83, 1983-84ஆம் ஆண்டுகளில் ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

1983-84இல் மாணவ மாணவியர் சேர்ந்து படிக்கும் ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகள்/உயர்நிலைப் பள்ளிகளை மாணவர்களுக்கென்றும், மாணவியர்களுக்கென்றும் தனித் தனியாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலப் பள்ளிகள்/பழங்குடியினர் மாணவர் இல்லங்களுடன் கூடிய பள்ளிகளுக்கு மேசை, நாற்காலிகள் கணித சாதனங்கள்,

நூலக வசதிகள், துப்புரவு வசதிகள், விளையாட்டுச் சாமான்கள்
ஆகியவற்றை வழங்கவும் கருதப்பட்டுள்ளது. கூடுதலாக
வகுப்பு அறைகளைக் கட்டவும், விளையாட்டுத் திடல்
ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. கூடுதலாக இடைநிலை
ஆசிரியர்களை நியமிப்பதன் மூலம் ஆசிரியர்களின் எண்ணிக்
கையை அதிகரிக்கவும் கருதப்பட்டுள்ளது.

18. மாணவ, மாணவியருக்கு உடைகள் வழங்குதல்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும்
அல்லது அரசினர் இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவியர்
அனைவருக்கும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு ஜதை உடைகள்
வழங்கப்படுகின்றன. 4 முதல் 10 வரையில் உள்ள வகுப்புகளில்
பயிலுகின்றவர்களும் அரசினர் ஆதி திராவிட நல மாணவர்
இல்லங்களில் தங்கிப் பயிலுபவர்களுமான மாணவர்களுக்கு
இரண்டு ஜதை உடைகள் வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர்,
பழங்குடியினா நலப் பள்ளிகளில் 1 முதல் 8 வரையில உள்ள
வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் அவர்கள்
எந்த இனத்தைச் சேர்ந்தவராயிருப்பினும் ஒவ்வோர் ஆண்டும்
இரண்டு உடைகள் வழங்கப்படுகின்றன. இந்த இரண்டு ஜதை
உடைகளும் கல்வி ஆண்டு தொடக்கத்திலேயே வழங்க ஆணை
பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப்
பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள சாரணர்களுக்கும் சாரணப்
பயிற்றுநர்களுக்கும் 1982-83ஆம் ஆண்டிலிருந்து சீருடைகள்
வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

19. கல்விச் சுற்றுலா :

மாணவர்கள் தங்களது பொது அறிவை வளர்த்துக்
கொள்ளுவதற்கு ஏதுவாக ஆதி திராவிடர், பழங்குடியினர்
வகுப்பைச் சேர்ந்த மாணவர்களை முக்கியமான இடங்களுக்கு
கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லும் திட்டம் 1969-70ஆம்
ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு
உயர்நிலைப் பள்ளியிலிருந்தும் 40 மாணவர்களை கல்விச் சுற்றுலா
அழைத்துச் செல்வதற்கு 1977–78 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோர்
ஆண்டும், ரூ. 1,000 வழங்கப்படுகிறது. அதற்காக 1983-84ஆம்
ஆண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்காக
ரூ. 0.37 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

20. முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் :

1-7-82-க்கு முன்னர் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப்
பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்
ஒவ்வொருவருக்கும் நாளொன்றுக்கு 22 காசு அடக்கச்
செலவில் நண்பகல் உணவு வழங்கப்பட்டது. 1-7-82-லிருந்து
ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 5+





9+வயது வரையுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு ஒவ்வொரு
வருக்கும் 0.45 காசு செலவில் சத்துணவு வழங்கும் புதிய
திட்டத்தை சென்னை மாநகரம் நீங்கலாக தமிழ்நாடு முழுவதிலும்
அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஆண்டு
முழுவதும் சத்துணவு வழங்கப்படுகிறது. பின்னர் இத்திட்டம்
10 முதல் 14 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் நீட்டிக்கப்
பட்டது. இத்திட்டம் 15—9—82லிருந்து சென்னை மாநகருக்கும்
நீட்டிக்கப்பட்டது.

45 காசு செலவில், 34 காசு உணவுப் பொருள் வழங்கு
துறையாலும், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் வழங்கும் அரிசி,
எண்ணெய், பருப்பு போன்றவற்றிற்காகச் சரிக்கட்டப்படுகிறது.
எஞ்சிய 11 காசு காய்கறிகள், சுவைப் பொருள்கள் வாங்குவதற்
காக மானியமாக வழங்கப்படுகிறது.

வனத்துறை நடத்தும் 14 பள்ளிகள் உட்பட ஆதி திராவிடர்,
பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் 1,72,636 மாணவர்
களுக்கு 1,070 மையங்களில் சத்துணவு வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர்/பழங்குடியினர் நலப் பள்ளிகளில் புதிய மதிய
உணவு வழங்குவதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத்
திட்ட மதிப்பீட்டில் ரூ. 86.82 இலட்சங்கள் ஒதுக்கப்
பட்டுள்ளது.

21. மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள்
எழுது பலகைகள் முதலியவற்றை வழங்குதலும் பள்ளிகளுக்குச்
சாதனங்கள் வழங்குதலும் :

இம்மாநிலத்தில் ஆதி திராவிடர்களுக்காகவும், பழங்குடி
யினருக்காகவும் 1,085 பள்ளிகளை இத்துறை நடத்தி வருகிறது.
கல்வியாண்டில் ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகள்
திறக்கப்பட்ட பிறகு, இப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள்
அனைவருக்கும் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாய்
இருந்தாலும் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள்,
எழுது பலகைகள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.
இத்திட்டத்தின் கீழ் 1982-83ஆம் ஆண்டில் 1.87 இலட்சம்
மாணவர்கள் பயனடைந்தனர். இதற்காக, 1983-84ஆம்
ஆண்டில் ரூ. 34.47 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்
பட்டுள்ளது.

22. ஆசிரியர்களுக்குக் குடியிருப்புகள் :

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பணி
புரியும் ஆசிரியர்களுக்குச் சமவெளிகளில் ஒவ்வொன்றும்
ரூ. 15,080 செலவிலும் மலைப் பகுதிகளில் ஒவ்வொன்றும்
ரூ. 17,000 செலவிலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.
இதுவரை 182 ஆசிரியர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.
இதற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூ. 4.44 இலட்சம் நிதி
ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிரியர்கள் குடியிருப்பு
களைப் பராமரிப்பதற்கான செலவும் அடங்கும்.

23. குழந்தைகள் காப்பகம்;

1977—78ஆம் ஆண்டிலிருந்து 1980—81ஆம் ஆண்டு வரை யில் ஒவ்வோராண்டும் 50 என்ற வீதத்தில் குழந்தைகள் காப்பகங் களை ஏற்படுத்த அரசு அனுமதித்து வந்துள்ளது. 200 குழந்தைகள் காப்பகங்களை ஏற்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் 70 குழந்தை கள் உள்ளனர். பணிபுரியும் மகளிரின் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பினை அவர்களிடமிருந்து ஏற்றுக் கொள் வதும் வளர்ந்து வரும் வயதில் அவர்களுக்கு தூய சுகாதாரமான நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிப்பதும், அக்குழந்தைகளுக்குப் பள்ளி செல்லும் பழக்கத்தை உருவாக்குவதும் இதன் நோக்க மாகும். 3 முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் இக்காப்ப கங்களில் அனுமதிக்கப்படுகின்றனர். இத்திட்டம் நண்பகல் உணவுத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. இத்திட்டத் திற்காக 1983-84 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.77 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

24. தட்டச்சு சுருக்கெழுத்துக் கல்வியில் பயிற்சி அளிப்பதற்காக திட்டம்:

தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி பெற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்கள் போதிய எண்ணிக்கையில் இல்லை யாதலால், தட்டச்சர் சுருக்கெழுத்தர் பதவிகளில் அவர்களுக்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள 18 சதவீத இடங்களை நிரப்ப இயலாது போகிறது. இதனைக் கருத்திற் கொண்டு, தனியார் நடத்தும் வணிகக் கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் பழங்குடியினர் மாணவர்களுக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்தில் பயிற்சி அளிப்பதற்கான சிறப்புத் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது. இத்திட்டத்தின்படி 950 மாணவர்களுக்கு தட்டச்சுப் பயிற்சியும், 475 மாணவர்களுக்கு சுருக்கெழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 3.52 இலட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

25. சட்டப் பட்டதாரிகளுக்கு நிதி உதவி :

சட்டத் தொழிலை மேற்கொள்ள ஆதி திராவிடர், பழங்குடி யினரைச் சேர்ந்த சட்டப் பட்டதாரி மாணவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, அவர்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்புகிற ஆதி திராவிடர், பழங்குடி யினர் இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்ற பட்டதாரிகள் ஐவருக்கு 1974-75ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன.—

(i) வழக்குரைஞராகப் பதிவு செய்துகொள்வதற்கான கட்டணம், வழக்குரைஞர்கள் அறைக்கான வாடகைக் கட்டணம் முதலிய வகையில் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 கடன்.



(ii) புத்தகங்கள், மேசை, நாற்காலி முதலியவை வாங்க ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ. 750 உதவித்தொகை.

1982-83ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தின் கீழ் தெரிந் தெடுக்கப்படும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 5—லிருந்து 15 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

26. கல்லூரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சித் திட்டம்

கல்லூரி மாணவர்களுக்கு ஆங்கிலம், தமிழ், பொருளாதாரம் அரசியல் கணிதம் போன்ற பாடங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கும் பொருட்டு, சென்னை மாநகரில், மாணவர்களுக்காக ஒரு நிலையமும், மாணவிகளுக்காக ஒரு நிலையமும் ஆக இரண்டு நிலையங்கள் இரு திங்கள் காலத்திற்கு செயல்படுகின்றன. இந்த வசதி 1976—77-இல் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி வசதி 189 கல்லூரிகள் அனைத்திலும் ஓராண்டில் இரு திங்கள்கட்கு அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக் காலத்தின்போது ஒவ்வொரு கல்லூரிக்கும் ரூ. 1,000 மொத்தத் தொகையாக அளிக்கப் படுகிறது. 1983—84—லும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும். இதற்காக இவ்வாண்டில் ரூ. 1.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை தொழில் நுட்பக்கல்வி இயக்குநரின் கட்டுப் பாட்டின் கீழுள்ள 7 பொறியியல் கல்லூரிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கும் இச் சிறப்புப் பயிற்சித் திட்டத்தை 1981—82 ஆம் ஆண்டில் அரசு விரிவு படுத்தியுள்ளது.

27. மாணவர் இல்லங்கள் :

பள்ளிகள், கல்லூரிகள், தொழிற்பயிற்சிப் பள்ளிகள் ஆகிய வற்றில் பயிலும் மாணவர்களுக்கு மாணவர் இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வோர் ஆண்டும் தேவை, நிதி நிலைமை ஆகியவற்றின் அடிப்படையில் புதிய மாணவரில்லங்கள் திறக்கப்படுகின்றன. தனியார் மாணவர் இல்லங்களும் அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படு கின்றன. ஆதி திராவிடர், பழங்குடி நல மாணவர் இல்லங்களில் கீழ்க்கண்டவாறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படு கின்றனர் :—

| ஆதி திராவிடர் மாணவரில்லங்கள் : (1) | சதவீதம் (2) |
|---|---|
| ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் .. | 75 |
| பிற்பட்ட வகுப்பினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர். | 20 |

| (1) | | (2) |
|---|---|---|
| முன்னிலை வகுப்பினர் | | |
| பழங்குடியினர் மாணவரில்லங்கள் | .. | 5 |
| பழங்குடியினர் | | |
| ஆதிதிராவிடர்கள் | .. | 60 |
| பிற்பட்டோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பரம்பரையினர் | .. | 30 |
| | . | 10 |

1982—83 ஆம ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்கென்று உள்ள 675 மாணவர் இல்லங்களில் மொத்தம் 42,978 மாணவர்கள் பயனடைந்தனர். மாணவர் இல்லங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் 10 சதவீதம் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ளது. பழங்குடியினரைப் பொறுத்தமட்டில், மொத்தம் 905 மாணவர்களைக் கொண்ட 20 மாணவர் இல்லங்கள் உள்ளன. 1982-83ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்களுக்காக 15 புதிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட்டுள்ளன; இவற்றில் 900 மாணவர்கள் தங்கலாம். 1983—84 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் களுக்காக 10 புதிய மாணவர் இல்லங்களைத் திறப்பதற்கு நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

1983—84 ம் ஆண்டில் புதிய மாணவரில்லங்களைத் திறப் பதற்கும் 695 மாணவரில்லங்களைப் (ஆதிதிராவிடர்களுக்கு 675 பழங்குடியினருக்கு 20) பராமரிப்பதற்கும் ரூ. 491.13 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அரசு ஆதிதிராவிடர்/பழங் குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்குரு. 2 மதிப்புள்ள விளையாட்டுப்பொருட்கள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.

ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்கியுள்ள அரசு இல்லங்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்கள் வருமாறு:

| மாணவர் இல்லங்களின் வகை. | | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். |
|---|---|---|
| (1) | | (2) |
| | | ரூ. |
| 1. சென்னை நகரிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், சென்னை மாநகரிலுள்ள அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள் | .. | 95 |



| (1) | | (2) |
|---|---|---|
| 2. வெளியூர்களிலுள்ள அரசு கல்லூரி மாணவர்/மாணவியர் இல்லங்கள், அரசு தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்கள் | .. | 80 |
| 3. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசு இல்லங்கள் | .. | 60 |

பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங் குடியினர் மாணவர் இல்லங்களுக்கும் அளிக்கப்படும் பல்வேறு உணவுக் கட்டண வீதங்களின் விவரம் வருமாறு.—

| வகை | மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு அளிக்கப்படும் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| பழங்குடியினர் உறைவிட தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், பழங்குடியினர் மாணவர் இல்லங் கள் | 45 |
| பழங்குடியினர் உறைவிட உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளி | 60 |

பத்துஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்ட ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள், பழங்குடியினர் மாணவர் இல்லங்கள், பழங் குடியினர் உறைவிட பள்ளிகள் ஆகியவற்றுக்குப் பழைய சமையல் பாத்திரங்களுக்குப் பதிலாக 1982—83 இல் புதிய பாத்திரங்கள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

1982-83 ல் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள், பழங்குடி யினர் இல்லங்களில் உள்ளவர்களுக்குக் கர்ணம் மேசைகள் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1982-83 இல் மலைப் பகுதியிலுள்ள ஆதிதிராவிடர் பழங்குடியினர் அரசு மாணவர் இல்லங்களில் உறங்குவதற்கு சிமிண்டால்ஆன படுக்கைஇருக்கைகள் கட்ட ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

1983-84 ஆம் ஆண்டில், அரசுக் கல்லூரி, தொழிற்பயிற்சி மாணவர் இல்லங்களில் தங்கிப்படிப்பவர்களுக்கு சிறிய மேசை ஒன்றும், நாற்காலி ஒன்றும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூ. 4.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் அமைந்துள்ள பழங்குடியினர் உறைவிடப் பள்ளி மாணவர்களுக்கும், பழங்குடியினர் மாணவர் இல்ல மாணவர்களுக்கும் 1983-84 ஆம் ஆண்டில், கம்பளி சட்டைகள் வழங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 2.99 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

28. அரசு இல்லங்களிலுள்ள மாணவர்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகளில் இன்றியமையாப் பொருள்களை வழங்குதல்;

இத்துறை நடத்தி வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர் இல்லங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலைகளில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வாங்கப்படுகின்றன.

29. மாணவர் இல்லங்களுக்கான கட்டிடங்கள் கட்டுதல்:

ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நலத்துறை நடத்தும் 695 அரசு இல்லங்களில் (ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு 675, பழங்குடியினர் மாணவர்களுக்கு 20) 147 மாணவர் இல்லங்கள் (ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு 132, பழங்குடியினர் மாணவர்களுக்கு 15) அரசு கட்டிடங்களில் அமைந்துள்ளன. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவர்களுக்கான இல்லங்களைக் கட்டும் பணியை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுள்ளது. இதுவரையில், ஆதிதிராவிடர்களுக்காக 219 மாணவர் இல்லங்கள் (ஆதிதிராவிடர்களுக்கு 214 பழங்குடியினர்களுக்கு 5) கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் 74 இல்லங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 145 இல்லங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடந்தேறி வருகிறது.

1982-83 ஆம் ஆண்டில் மாணவர்-மாணவியர் இல்லங்கள் கட்டப்பட்டு வருகின்றன.



1933-84 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர், பழங்குடியினர் மாணவ, மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 249.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

30 பகுதி நேர சிற்றாசிரியர்கள்;

ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கான அரசினர் உயர்நிலைப் பள்ளி மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் மாணவர்கள் தேர்வுகளைச் சிறப்பாக எழுதத் துணைபுரியும் பொருட்டு. பகுதி நேர சிற்றாசிரியாகள் நியமிக்கப்படுகின்றனர். இத்தகைய பகுதி நேர சிற்றாசிரியர்கள் பதவிகள் 248 உள்ளன. இவை தவிர கல்லூரி மாணவர் இல்லங்களுக்காக மூன்று பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் பதவிகளும், தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரத்திலுள்ள நந்தனார் அரசு மாணவர்/மாணவியர் இல்லங்களில் ஐந்து பதவிகளும் உள்ளன. அக்டோபர் முதல் நாள் தொடங்கி ஓர் ஆண்டில் ஆறு மாதங்களுக்கு இவர்கள் நியமிக்கப்படுவார்கள். மேல்நிலைக் கல்வி புதியதாகத் தொடங்கப்பட்டதால், உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்களில் ஒன்பதாவது. பத்தாவது வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பதினைந்தும் அதற்கு மேற்பட்டும் இருப்பின் பகுதி நேரச் சிற்றாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.42 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1. தனியார் நடத்தும் மாணவர் இல்லங்களுக்கான உதவித் தொகை;

ஆதிதிராவிடர், மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கான அரசு இல்லங்களை தவிர, 41 இல்லங்கள் ஆதிதிராவிடர் மாணவர்களுக்காகவும் நான்கு பழங்குடியினர் மாணவர்களுக்காகவும் உறைவிடப் பள்ளிகள் தனியார் நிறுவனங்கள் அரசு நிதியுதவியுடன் நடத்தி வருகின்றன.

உதவித் தொகை பெறும் இல்லங்களுக்கு அளிக்கப்படும் உணவு மானியத் தொகையை 1981-82 ஆம் ஆண்டிலிருந்து அரசு உயர்த்தியுள்ளது. சென்னை மாநகரம், மற்றும் மாவட்ட, வட்ட தலைமை இடங்கள், இரண்டாம் நிலை நகராட்சிகள் ஆகிய இடங்களில் அமைந்துள்ள அரசு உதவியுடன் நடத்தப்பட்டு வரும் மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகை திங்கள் ஒன்றுக்கு ரூ. 35 ஆக இருந்ததை ரூ. 45 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் மாதம் ஒன்றுக்கு ரூ. 30லிருந்து ரூ. 40-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. தனியாரால் நிருவகிக்கப்படும்

நான்கு பழங்குடியினர் மாணவர் உறைவிடப் பள்ளிகளில் பயிலும்
ஒவ்வொரு மாணவருக்கும் வழங்கப்படும் மானியத் தொகை
திங்கள் ஒன்றுக்கு ரூ. 36லிருந்து ரூ. 46க்கு உயர்த்தப்பட்
டுள்ளது. 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்
பீட்டில் இதற்கென ரூ. 11.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2. வேலை வாய்ப்பும் பொருளாதார மேம்பாடும்;

32. வேளாண்மை:

உழவு மாடுகள்

வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் ஆதிதிராவிடர்கள், பழங்
குடியினரின் வாழ்க்கை நிலையை உயர்த்தும் பொருட்டு, உழவு
மாடுகள், விதைகள், பிற வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை
வாங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் 600 ரூபாய் என்ற வீதத்தில்
நிதி உதவி அளிக்கப்படுகிறது.

பாசனக் கிணறுகள்

பாசனக் கிணறு வெட்டுவதற்காக கொடுக்கப்பட்டு வரும்
உதவித்தொகை திட்டத்தினை அரசு மாற்றியமைத்துள்ளது.
இப்புதிய திட்டத்தின்கீழ் கிணறு வெட்ட ஆகும் மொத்த
செலவில் ⅓ பாகம் உதவித்தொகையாக அளிக்கப்படும். மீதமுள்ள
பாகம் நிலவள வங்கி/வணிக வங்கிகளிலிருந்து கடனாக வழங்
கப்படும். மேற்கூறிய அரசு உதவித்தொகை கிணறு வெட்டும்
செலவின் ⅓ பாகமாக அல்லது உயர் அளவுத்தொகை ரூ. 5000—
மாக இருக்கும். 1983-84 ஆம் ஆண்டில் இதற்கென ஆதி
திராவிடர்களுக்கு ரூ. 5.97 இலட்சமும் பழங்குடியினருக்காக
ரூ. 1.49 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர.
இந்த இனங்களுக்கு கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதி
திராவிடர்களுக்கு ரூ. 0.95 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஆதி திராவிடர்கள் வைத்திருக்கும் நிலங்களுக்குப்
பாசன வசதிகள் அளிப்பதற்காக, மத்திய அரசு அளிக்கும்
சிறப்பு நிதியுதவியைக் கொண்டு, பெரும் பாசனத் திட்டம்
ஒன்றை இம்மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. தமிழ்
நாடு குழாய்க் கிணறுகள் நிறுவனத்தைச் சேர்ந்த தனிப் பணி
யாளர்கள், ஆதி திராவிடர்கள் வைத்திருக்கும் நிலங்களை இத்
திட்டத்தின் கீழ்க் கண்டறிந்து வருகின்றனர். செங்கற்பட்டு



தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாத
புரம் மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் நிலங்களுக்குப்
பாசன வசதிகளை அளிக்கத் தமிழ்நாடு குழாய்க் கிணறுகள்
நிறுவனம் திட்டங்களை வகுத்துள்ளது. இந்நிறுவனம், 31-12-82
முடிய மதுரை மாவட்டத்தில் ரூ. 24 83 இலட்சம் மொத்த
செலவில் கடுமையான பாறைப் பகுதிகளில் 12 கிணறுகள்
தோண்டுவது உட்பட 198 குழாய்க் கிணறுகள் தோண்டு
வதற்காகத் திட்டமிட்டு 29 குழாய்க் கிணறுகள், தோண்டி
முடித்துள்ளது. மேலும் 10 குழாய்க் கிணறுகள் தோண்டும்
பணி நடைபெற்று வருகிறது.

33. தோட்டக்கலை.

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லி மலை, சின்னக்
கல்ராயன் மலை, பெரிய கல்ராயன் மலை ஆகிய இடங்களில்
தோட்டக் கலையை மேம்படுத்துவதற்கு தட்ப வெப்ப நிலை
சாதகமாக உள்ளது. எனவே அங்கு வாழும் பழங்குடி மக்
களின் வருவாயைப் பெருக்கும் பொருட்டு, தருமபுரி, தோட்
டக்கலை—மலைத் தோட்டப் பயிர் இயக்குநரின் நிர்வாகக்
கட்டுப்பாட்டின் கீழ் திட்டம் ஒன்று செயல்பட்டு வருகிறது.
மேற்கூறிய திட்டத்தினை ஆத்தூர் தோட்டக் கலை உதவி
இயக்குநர் செயல்படுத்தி வருகிறார். இதற்கான செலவினம்
ஆதி திராவிடர் பழங்குடியினர் நல நிதியிலிருந்து பெறப்படு
கிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்கள், காய்கறிகள் முதலிய
வற்றை வெற்றிகரமாகவும், கணிசமான வருமானம் தரத்தக்க
வகையிலும் உற்பத்தி செய்வதற்காகப் பழங்குடியினருக்கு
நடைமுறை ஆலோசனை, அறிவுரை, தொழில் நுட்ப உதவி
ஆகியவை அளிக்கப்படுகின்றன. பழங்கள், காய்கறிகள் மற்றும்
சமையலுக்கு பயன்படும் வாசனை பொருள்களாகிய, ஏலம்
இலவங்கம் ஆகியவற்றைப் பயிரிடுவதற்கான பொருள்கள் இல
வசமாகக் கொடுக்கப்படுகின்றன. சுமார் 8,714.56 ஏக்கர்
பரப்பளவு இத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது மேற்
சொன்ன திட்டத்திற்கு 31—7-1982 வரை ஆதி திராவிடர்
பழங்குடியினர் நலத்துறையின் நிதியிலிருந்து தொகை செல
விடப்பட்டது. இத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்
டத்தின் கீழுள்ள ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித்
திட்டத்துடன் சேர்க்கப்பட்டு தோட்டக்கலை மலைத் தோட்டப்
பயிர்கள் இயக்குநரால் 1-8-82 முதல் செயல்படுத்தப்பட்டு
வருகிறது.

34. தொழில் கருவிகளை இலவசமாக வழங்குதல்
கருமார், தச்சர், தையல் தொழில்கள், ஏனைய 18
தொழில்களி:, தொழில் நுட்பப் பயிற்சிப் பெற்ற ஆதி
திராவிடர்கள், பழங்குடியினர்கள், கிறித்துவர்களாக சமயம்
மாறிய ஆதிதிராவிடர்கள் ஆகியவர்களுக்குக் இலவசமாக கரு
விகள், சாதனங்கள் வழங்கும் திட்டம், தொடர்ந்து செயல்
படுத்தப்பட்டு வருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் இத்திட்
டத்திற்காக ரூ. 9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

35. சிறுதொழில் கடன்.

சைக்கிள், கடைகள், ஓட்டல்கள் (சிற்றுண்டிச் சாலைகள்)
மளிகைக் கடைகள், அச்சகம், முதலியவை போன்ற முப்பத்
தோரு (31) தொழில்களை நடத்துவதற்காக ஆதிதிராவிடர்
களுக்கு சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து
செயற்படுத்தப்பட்டு வருகிறது. தொழில் வகைகளுக்கு ஏற்ப
ரூ. 125 லிருந்து ரூ. 15,000 வரை கடன் தொகை வழங்கப்
படுகிறது. 1983-84ம் ஆண்டில் ஆதி திரா.விடர்களுக்காக
ரூ. 10.00 இலட்சமும் சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்காக
ரூ. 1.00 இலட்சமும் பழங்குடியினருக்காக ரூ. 0.5 இலட்ச
மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

36. பயிற்சி நிலையங்கள்

வேலை வாய்ப்பு பயிற்சித் துறையிலிருந்து மாதம் ஒன்
றிற்கு ரூ. 25 பெறும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த
பயிற்சியாளர்களுக்கு ஆதிதிராவிடர் நல நிதியிலிருந்தும் திங்கள்
ஒன்றுக்குக் கூடுதலாக ரூ. 30 பயிற்சி உதவித் தொகை வழங்
கப்படுகிறது. இதன் மூலம் 1-8-1980லிருந்து அவர்கள் பெறும்
பயிற்சி உதவித் தொகை மாத்தம் ரூ. 55 ஆகிறது. ஆதி
திராவிடர் மாணவர் அனைவருக்கும் ரூ. 55 பயிற்சி உதவித்
தொகையும் பழங்குடி மாணவர்களுக்கு ரூ. 82.50 பயிற்சி
உதவித் தொகையும் தொடர்ந்து வழங்கப்படுகின்றது.
1983-84 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காகரூ 12.62 இலட்சம்
நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேலை வாய்ப்பு
பயிற்சித் துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.



37. கூட்டுறவு

(அ) ஆதிதிராவிடர்கள்

தொழில் துறையில், ஆதிதிராவிடர்கள் துரிதமாக முன்
னேற வசதி செய்து கொடுக்கும் நோக்கோடு குடிசைத் தொழில்
கூட்டுறவுச்சங்கங்கள், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்
பயிற்சி நிலையங்கள், பயிற்சி உற்பத்தி நிலையங்கள், பணி
நிலையங்கள் பலவற்றை அரசு நிறுவியுள்ளது. இவை
தொழில் வணிக இயக்குநர், சமூக நலத்துறை இயக்குநர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் ஆகியவர்
களால் நடத்தப்படுகின்றன இந்நிலையங்களையும் சங்கங்
களையும் நடத்துவதற்குத் தேவையான செலவுத் தொகை ஆதி
திராவிடர் பழங்குடியினர் நலத்துறையால் ஏற்கப்படுகிறது.

ஆ. பழங்குடியினர்கள்

பழங்குடியினரைச் சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து
விடுவிக்கும் பொருட்டும் காடுபடு பொருட்களைப் பழங்குடியினர்
விற்பனைச் செய்வதற்கு இயலும் பொருட்டும், அவர்களுடைய
பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டும், அவர்
களுக்கென இம்மாநிலத்தில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்,
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வனத் தொழிலாளர்கள்,
ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அரசு அமைத்
துள்ளது. தற்போது பழங்குடியினருக்காக, இரண்டு கூட்டுறவு
விற்பனைச் சங்கங்கள் ஐந்து வனத் தொழிலாளர்கள் ஒப்பந்தக்
கூட்டுறவுச் சங்கங்கள். இரண்டு பல நோக்குக் கூட்டுறவுச்
சங்கங்கள் ஆகியவை உள்ளன. நியாயமான வட்டி வீதத்தில் நிதி
யுதவி அளிக்கும் நிறுவனங்கள் மூலம் பழங்குடியினருக்கு மாற்றுக்
கடன் வசதிக்கு வகை செய்வதற்காகப் பெரிய அளவிலான
பழங்குடியினர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பழங்
குடியினர் வாழும் பகுதிகளில் 13 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்
சங்கங்கள் உற்பத்திக்காகக் கடன் வசதியை அளிப்பதோடு
மட்டுமின்றி நுகர்வோர் கடன் வசதிகளையும் அளிக்கின்றன.
வேளாண்மை இடுபொருட்களை வினியோகிப்பதற்கு ஏற்படும்
செலவினங்களை சரிக்கட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி
களிலிருந்து கடன் பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மலை
வாழ் பழங்குடியினருக்கு உதவும் பொருட்டு சிறு தொழில்களைத்
தொடங்குவதற்குரிய திட்டம் ஒன்று தனியாகத் தயாரிக்கப்
பட்டு வருகிறது.

38 பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்

ஏழை ஆதிதிராவிடர்களுக்கு உதவி புரிதல், அவர்களுக்கு சுய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டு பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவுக் சங்கங்களைச் சேர்ந்த அதிதிராவிடர் பால் வழங்கு ஒவ்வொருவரும் ஒரு கால்நடைக்கு உறுப்பினர் தகுதியுடையவர் ஆவர். இந்தத் 1,500 ரூபாய் பெறுவதற்கு திராவிடர் நல நிதியிலிருந்து தொகையில் ரூ. 500 ஆதி பட்ட வங்கியிலிருந்து 1,00 மானியமாகவும் தேசிய மயமாக்கப் வழங்கப்படுகிறது. ரூபாய் கடன் தொகையாகவும் களை வாங்குவதற்கு ஒவ்வொரு உறுப்பினரும் இரு கால்நடை தகுதியுடையவராவார். மட்டுமே மேற்கூறிய உதவியைப்பெற களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்கள் மற்றும் கிறிஸ்துவர் மானியம் வழங்க ஆதிதிராவிடர்கள் ஆகியோருக்கு ரூ. 17.83 இலட்சம் இத்திட்டத்திற்கு 1983–84 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசு சிறப்பு நிதி உதவி

39. சிறப்பு உட்பகுதி திட்டத்தைச் செயற்படுத்துவதற்கென கூடுதல் உதவியாக மத்திய அரசு சிறப்பு நிதி உதவியை வழங்கு கிறது. ஒருங்கிணைந்த கிராமப்பகுதி வளர்ச்சித் திட்ட முறையைப் போலவே பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் மூலம் சுமார் 50 000 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவி யாக அ மய மாவட்ட கிராம வளர்ச்சி முகவரமைப்புகளிடம் மத்திய அரசின் சிறப்பு உதவியாக ரூ. 9.56 கோடி வழங்கப் பட்ட , இத்தொகையைக் கொண்டு 30–11–82 ஆம் நாள் வரையில் குடும்ப நலனை நோக்கமாகக் கொண்ட திட்டங்களின் கீழ் 8.32 கோடி ரூபாய் சுவவில் 91.496 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மையும் வேளாண்மை தொடர்பான பணிகளும் தான் ஆதிதிராவிடர்களின் முதன்மைப் பணியாக இருந்த போதிலும் இப்பணிகளில் அவர்கள் ஆண்டு முழுவதும் ஆதாயம் ஈட்டத்தக்க அளவில் தொடர்ந்து ஈடுபட இயலாது. மேலும் அவர்களுடைய வாழ்க்கைத் தொழில் முறையைப் பலதிறப் படுத்த வருவாய் ஈட்டும் தொழில்கள் தொழில் பிரிவுகள் தொழில் பேட்டைகள் முதலியவற்றை ஏற்படுத்துவதற்கு இந்த



மத்திய அரசு சிறப்பு நிதி உதவியை பயன்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. மேற்கூறிய திட்டங்களுக்கு நிதி உதவி செய்யும் பொருட்டு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை மத்திய அரசால் வழங்கப்பட்ட ரூ. 1748.62 லட்சத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்கப்பட்டுள்ளது.

கைத்தறித் துணிகள் தயாரிப்புப் பணியில், இராமநாதபுரம் கிழக்கு மாவட்டத்தில், 400 ஆதி திராவிடர்கள் பயன்பெறும் வகையில் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையை ஏற்படுத்தவும், மதுரை, சேலம், வடாற்காடு திருநெல்வேலி, புதுக்கோட்டை, பெரியார், தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1,475 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் விசைத் தறித் தொழில் வளாகங்களை ஏற்படுத்தவும், 800 ஆதிதிராவிடர்கள் பயனடையும் வகையில் 8 தொழில்முறை நசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தவும், அரசு அனுமதி வழங்கி யுள்ளது. கதர் கிராம தொழில்களின் மூலம் மாநிலத்தில் காலணி தைக்கும் 500 தொழிலாளிகளுக்கு பெட்டிக் கடைகள் வழங்கவும் வடஆற்காடு மாவட்டத்தில் ஒரு காலணி தயாரிக்கும் பிரிவையும் ஒரு பயிற்சி நிலையத்தையும் ஏற்படுத்தவும் பெரியார் மாவட்டம் கொங்கம்பாளயத்தில் ஒரு குரோம் தோல் பதனிடும் பிரிவையும், 20 கிராம நூற்பு மையங்கள் 8 நெசவாளி தறி நிலையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்துறையில் அரசு ரூ 250.63 இலட்சம் உதவித் தொகை வழங்கியுள்ளது. இதன் மூலம் 7965 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

தொழில் துறையில், செங்கல் தயாரிக்கும் கூடங்கள் பாலித்தீன் பைகள் தயாரிக்கும் கூடங்கள், தீப் பட்டி தயாரிக்கும் கூடங்கள் முதலியவற்றிற்காக ரூ. 69 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 3,359 நபர்கள் பயனடைவர்.

ஆதிதிராவிடர்களின் நிலங்களுக்குப் பாசன வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு குழாய்க்கிணறுகள் தோண்டும் கழகத்தால் ஒரு பெருந்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம், செங்கல்பட்டு, தென்ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்சொன்ன மாவட்டங்களில், வருவாய்த் துறைப் பணியாளர்களை நியமிக்க தமிழ்நாடு குழாய்க்கிணறுகள் கழகத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான செலவுத் தொகையில் 50 சதவிதத் தொகையை மத்திய அரசு. சிறப்பு உதவித் தொகையிலிருந்து மானியமாகவும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்திலிருந்து 25 விழுக்காடு தொடக்கத் தொகையாகவும் எஞ்சிய தொகை வங்கிகளிடமிருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

40. கிராமத் தொகுதி வளர்ச்சித் திட்டம்:

சென்னை மாவட்டம் நீங்கலாக ஏனைய 15 மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு வளர்ச்சி வட்டாரம் எனத் தேர்ந்தெடுத்து ஆதிதிராவிடர்களுக்கான பொருளாதார வளர்ச்சிப் பணிகள் தீவிரமான முறையில் செயல்படுத்தும் திட்டத்தை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி வளர்ச்சி கழகம் 1982–83–ல் ஏற்றுள்ளது. இதன்படி ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் 1000 ஆதி திராவிடர் குடும்பங்கள் என மொத்தம் 15,000 குடும்பங்கள் பயன் பெறுவர். பொருளாதார நிலையில் மிகவும் பின் தங்கியவையாகவும் ஆதிதிராவிடர்கள் பெருமளவில் வசிக்கும் ஒதுக்கப்பட்ட பகுதிகளாகவும் உள்ள வட்டாரங்கள் இத்திட்டத்திற்காக தெரிந்தெடுக்கப்படுகின்றன. கிராமப்பகுதி நூலிழை தயாரிக்கும் நிலையம், நேபாளி நெசவு நிலையங்கள், கிராமப்பகுதி பயிற்சி நிலையங்கள், உற்பத்திப் பிரிவு, பாய் முடையும் நிலையம், காலணி தயாரிக்கும் நிலையம், கையினால் காகிதம் செய்யும் பிரிவு, கயிறுப்பொருள்கள் கல்லுடைக்கும் பிரிவுகள், உலைக்கற்கள் தயாரிக்கும் பிரிவுகள் போன்ற கிராமப்பகுதி குடிசைத் தொழில்கள் மூலம் ஆண்டு முழுவதிலும் பணியில் ஈடுபடும் வகையில் ஆதிதிராவிடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க இத்திட்டம் வகை செய்கிறது. இதன் மூலம், குடிநீர், இடுகாடு, பள்ளிகள் ஆகியவற்றிற்குச் செல்லும் நடைபாதை, மருந்தகங்கள், நியாய விலைக் கடைகள், தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் உள்ள ஏனைய வசதிகள் ஆகியவற்றை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

41. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு.—தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழு நடத்தும் தேர்விற்கு பயிற்சியளித்தல்.

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர்கள், சமயம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழுவால் நடத்தப்படும் தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு எப்பொழுதெல்லாம் நடத்தப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அத்தேர்வினை எழுத விண்ணப்பித்துள்ளவர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொகுதி IV பணிக்குரிய போட்டித் தேர்வு ஆரம்பிப்பதற்கு முன்னர் 2 மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சி காலத்தில் மாணவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூ. 45 உதவித்தொகை அளிக்கப்படுகிறது. 1982–83–ம் ஆண்டு மாநிலத்தில் 17 பயிற்சி நிலையங்கள் செயல்பட்டன. 1983–84 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் பயிற்சி இதற்கு ரூ. 0.02 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



42. ஆயுதப்படைப் பிரிவு, காவல் துறைப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக ஆதிதிராவிடர்களுக்குப் பயிற்சியளித்தல்.

ஆதிதிராவிடர் (இந்து வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள்) தரைப்படை மற்றும் காவல் துறையில் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படும் வாய்ப்பினை அதிகரிக்க, இவர்களுக்கு உடல் அமைப்பு அறிவுக்கூர்மை இவற்றை அதிகரிக்கும் நோக்கோடு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டமாகும் இது. சென்னை, முன்னாள் இராணுவத்தினர் நல வாரியத்தின் இணை இயக்குநர் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி முகாம்களை நடத்துகிறார். தேவைப்படும் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலருடையதாகும். முதற்கண், இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இரு மாவட்டங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதி திராவிடர் மாணவர்களுக்கு 2 திங்கள் கால அளவிற்கு பயிற்சி முகாம்கள் நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த முகாம்கள் பயனளிக்கும் வகையில் அமைந்துள்ளதால், 16 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 ஆதிதிராவிட மாணவர்களுக்கு 60 நாட்களுக்கு படைப்பிரிவு, காவல்துறையில் சேர்வதற்கு வகை செய்யும் பொருட்டு மேற்சொன்ன பயிற்சி முகாம்களை நடத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. பயிற்சி மாணவர்களுக்கு உணவு தங்குமிட வசதிகள் போன்ற எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

43. அனைத்திந்திய அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்குத் தேர்வுக்கு முன்பு பயிற்சி அளிக்கும் நிலையம்.

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி போன்ற அனைத்திந்தியப் பணிக்களுக்கான போட்டித் தேர்வுகள் எழுத ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்குத் தேர்விற்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையம் 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்நிலையம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கு இந்தியா முழுவதும் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்நிலயத்துடன் இணைக்கப்பட்ட மாணவர் இல்லம் ஒன்றும் உள்ளது. பயிற்சி பெறும் மாணவியருக்கு சென்னை, மாநிலக் கல்லூரி மகளிர் விடுதியில் தங்குமிட வசதியும், உணவு வசதியும் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறுபவர் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு ரூ. 125 உணவிற்காக செலவிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று அனைத்திந்திய பணிகளில் நியமனம் பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000

மானியம் அளிக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம் தொடங்கப் பட்ட நாளிலிருந்து 42 மாணவர்கள் அனைத்திந்தியப் பணிகளில் நியமிக்கப்படுவதற்கு இறுதியாக தெரிந்தெடுக்கப் பட்டனர். சென்னையிலுள்ள தேர்வுக்கு முன் பயிற்சி அளிக்கும் நிலையத்திற்குத் துணையாக மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் தலைமையிடங்களில் துணை நிலையங்கள் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

44. பொதுச் சுகாதாரம் வீட்டு வசதி வீட்டுமனைகள் வழங்கும் திட்டம்.

வீட்டுமனைகள்:

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் உள்ளனவோ, அங்கெல்லாம் இந்த நிலங்கள் மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாக ஆதிதிராவிடர்கள் பழங்குடியினருக்கு வீட்டுமனைகளாக ஒப்படைப்பு செய்யப்படுகின்றன. அரசு நிலங்கள் இல்லாதபோது 1894 ஆம் ஆண்டு நிலங்கள் கையகப்படுத்துதல் சட்டம் 1/1894 சட்டத்தின்கீழ் தனியார் நிலங்களைக் கையகப் படுத்தி அவற்றை தகுதியுடைய ஆதிதிராவிடர்கள்/பழங்குடியினருக்கு 3 சென்டுகள் வீதம் வீட்டு மனைகளாக வழங்கப் படுகிறது. 1949 ஆம் ஆண்டிலிருந்து 1982-83 ஆம் ஆண்டு வரை (31-12-1982 ஆம் நாளன்று இருந்தவாறு) 3,96,431 மனைகள் வழங்குவதற்காக 24,797.84 ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டது. இதில் 3,55,100 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. எஞ்சியுள்ள பட்டாக்கள் விரைவில் வழங்கப் படும். 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் வரை ஆதிதிராவிடர்கள் பழங்குடியினருக்கு வீட்டுமனைகள் வழங்கு வதற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு ரூ. 1,038 23 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இயன்ற வரையில் சாதி இந்துக்கள் வாழ்கின்ற குடியிருப்புகளுக்கு அருகாமையிலேயே ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வீட்டுமனைகள் வழங்கு வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டத்திற்காக 1983–84 ஆண்டில், ரூ. 125.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது தனிமைப்படுத்தப்பட்டோர் என்னும் உணர்வைப் போக்கவும், எல்லா வகுப்பு மக்களிடையே உள்ளத்தளவில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தவும். உண்மையி லேயே நலிந்த பிரிவினர் அனைவருக்கும் உதவி புரியவும், ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனைகளை வழங்குதல் வீடு கட்டிக் கொடுத்தல் என்னும் திட்டத்தின் கீழ் கையகப்படுத்தப் பட்ட வீட்டு மனைகளில்/கட்டப்பட்ட வீடுகளில் ஆதி திராவிடர்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள், உயர் வகுப்புகளைச் சேர்ந்த ஏழைகள் ஆகியோருக்கு முறையே 80 விழுக்காடு, 10 விழுக்காடு என்று ஒதுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. தேசிய கிராமப்பகுதி வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் களுக்கு வீட்டுமனைகள் வழங்குவதற்காக கையகப்படுத்தப்பட்ட மனைகளை சமப்படுத்துமாறு மாவட்ட ஆட்சி தலைவர்கள் அனைவருக்கும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.



45. தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி கழகம்.

இந்நிறுவனம் பிப்ரவரி திங்கள் 1974 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு, மீனவர்களுக்கு வீடுகளை கட்டித் தருதல், மாணவர் இல்லங்கள்/பள்ளிக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றைக் கட்டுதல் ஆகிய பணி, இந்நிறுவனத் திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளுக்கும் இந்நிறுவனம் பொறுப்பு வகிக்கிறது. 1982–83 முதல் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி வளர்ச்சித் திட்டத்தை அரசு உதவித்தொகை மற்றும் பயன்படுவோர் பங்குத்தொகை ஆகிய அடிப்படையில் செயல்படுத்தப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. வீடு கட்டுவதற்கென செலவு ரூ. 4,000 ஆகும். இதில் அரசு ரூ.3,250ஐ உதவித்தொகையாக வழங்கும். பயனடைவோர் ரூ. 750 மதிப்புள்ள அளவிற்கு உடலுழைப் பளிக்க தங்களுடைய பங்கைச் செலுத்த வேண்டும். வீட்டு மனைப்பரப்பு 201 சதுர அடி ஆகும். இது கிராமப்பகுதி வீட்டு வசதி திட்டத்தின் கீழ்செயல்படுத்தப்படும் வடிவமைப்பைப் போன்றே கட்டப்படும். உதவித்தொகை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தின் மூலம் பகிர்ந்தளிக்கப் படும். தொழில் நுட்ப மேற்பார்வை, உதவி போன்ற தேவையான அடிப்படை உதவிகள் பயனடைவோருக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி நிறுவனத்தின் மூலம் அளிக்கப்படும். 1979-80, 1980–81 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட நிதி யிலிருந்து திருத்தப்பட்ட முறையில் 10,000 வீடுகள் கட்டிக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்படும். இந்நிறுவனம் ஆதிதிராவிடர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் பணியினை நிறைவேற்ற இயலும் பொருட்டு ஆதிதிராவிடர் வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதியுதவி முதலீடு செய்வதற்காக மாநில அரசுக்கு மத்திய அரசு உதவி புரியும் திட்டம் ஒன்றை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. பங்கு முதலீட்டில் 49 சதவீதத் தொகையை மத்திய அரசும், 51 சதவீதத் தொகையை மாநில அரசும் அளிக்கின்றன. இத்தொகை வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள ஆதி திராவிடர்களுக்கு உதவி புரிவதற்காக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடக்கச் செலவுத் தொகையாக பயன்படுத்தப்படும்: ஆதிதிராவிடர்கள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஆதாயம் தரும் தொழில்களைத் தொடங்குவதற்காக மொத்த செலவில் 25 விழுக்காடுத் தொகை, இந்த தொடக்கச் செலவுத் தொகையாக 4 விழுக்காடு வட்டி வீதத்தில் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது.

இதுவரை, தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி நிறுவனத்திற்கு ரூ. 500 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 31-12-82 வரை 75,395 ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு ரூ. 388.75 இலட்சம் தொடக்கச் செலவு தொகையாக வழங்கப் பட்டுள்ளது. 1983-84ல் வரவு செலவு மதிப்பீட்டில் இதற்காக

ரூ. 200 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகர்
மற்றும், கிராமப் பகுதிகளிலும் வாழும் ஆதி திராவிடர்களுக்கு
உதவிடும் பொருட்டு இந்திய அரசு வழங்கும் சிறப்பு உதவித்
தொகையை, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களைச்
செயல்படுத்துதல், தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்
தொகுதித் திட்டங்களை மேம்படுத்துதல் போன்றவற்றிற்காக
இந்திய அரசு வழங்கும் சிறப்பு உதவித் தொகையைத் தமிழ்நாடு
ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனத்திடம் அளிக்க
இந்த அரசு முடிவு செய்துள்ளது. இம்மேம்பாட்டுப் பணிகளை
செய்து முடிக்க இயலும் வண்ணம் இந்நிறுவனத்தின் நிர்வாகப்
பணியாளர் அமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன.

1982–83–ல் ஆதி திராவிடர்களுக்கென ஒருங்கிணைந்த
வளர்ச்சித் திட்டம் ஒன்றை சென்னை மாநகர் நீங்கலாக
இம்மாநிலத்தின் 15 மாவட்டங்களிலும் பொருளாதாரத்தில்
மிகவும் பின்தங்கிய ஒவ்வொரு வட்டாரத்திலும் செயல்படுத்தக்
கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 15,000
குடும்பங்கள் பயனடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்சொன்ன நிறுவனத்தின், சமுதாயக் கூடங்கள், பள்ளிக்
கட்டிடங்கள், மாணவர் இல்லங்கள் ஆகியவற்றைக் கட்டும்
திட்டம் மன நிறைவளிக்கும் வகையில் தொடர்ந்து நடைபெற்று
வருகிறது.

46. கிராம வீட்டு வசதித் திட்டம்:

கிராம வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராம வீட்டுவசதிக்
கூட்டுறவு சங்கங்கள் மூலம் 4,000 ரூபாய் செலவில் கிராமப்
பகுதிகளில் வீடு கட்டப்படுகின்றது. ஆண்டு வருமானம் 4,200
ரூபாய்க்கு மேற்படாதவரும் இத்திட்டத்தின் மூலம் பயனடை
வோருமான ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஒவ்வொருவருக்கும்
வட்டியில்லாக் கடனுக்கும்; 1,000 ரூபாய் உதவித் தொகைக்கும்
இத்திட்டம் வகை செய்கிறது. ஆதிதிராவிடர்கள் பெருமளவில்
உள்ள இடங்களில் வீடு கட்ட விழையும் ஆதி திராவிடர்
வகுப்பைச் சேராதவரும் இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை
பெற தகுதியுடையவர் ஆவார். பயன்பெறும் ஆதிதிராவிடர்
பழங்குடியினருக்கும் வழங்கப்படுவதற்காக உதவித் தொகை
குறித்து ஆதி திராவிடர்—பழங்குடியினர் நலத்துறையின்
1983–84 ஆம் ஆண்டிற்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில்
ரூ. 600 இலட்சம் மூலதனம் மற்றும் வட்டிக்காக நிதி
யொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் சென்னை
கூட்டுறவுச் சங்கங்கள் (வீட்டுவசதி) பதிவாளரால் செயற்
படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 1-4-1982 முதல்
31-12-1982 நாள் வரையில் 26,009 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.
இவற்றுள் 21,924 வீடுகள் ஆதிதிராவிடர்களுக்கென கட்டப்
பட்டவையாகும்.



47. துப்புறவுப் பணியாளர்கள், குப்பை கூட்டுபவர்கள் பணி
நிலையை மேம்படுத்துதல்:

துப்புறவுப் பணியாளர்கள் மலக்கூடையை தலையில்
சுமக்கும் பழக்கம் தற்போது இம்மாநிலத்தில் நடைமுறையில்
இல்லை. பெருக்குபவர்களுக்கும், துப்புறவுப் பணியாளர்
களுக்கும் தள்ளு வண்டிகள், கையுறைகள், புதை காலணிகள்.
தட்டுகள், சுரண்டு கருவிகள் ஆகியவற்றை இலவசமாக
வழங்குவது போன்ற திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு
வருகின்றன. 1977–78 ஆம் ஆண்டில் 432 தள்ளு வண்டிகளும்
216 தட்டுகளும், சுரண்டு கருவிகளும் ரூ. 1.76 இலட்சம்
செலவில் வழங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் செயற்படுத்த
1979–80–ல் 58 நகராட்சிகளுக்கு 2,980 தள்ளு வண்டிகளும்
102 பேரூராட்சிகளுக்கு 300 தள்ளுவண்டிகளும், 480
சுரண்டு கருவிகளும் வழங்க ரூபாய் 9,66,400 வழங்கப்பட்டது.
1981–82 ஆம் ஆண்டில் 250 தள்ளு வண்டிகள், 250 சுரண்டு
கருவிகள், தட்டுகள் ஆகியவற்றை ரூ 1,58,154 செலவில் 53
பேரூராட்சிகளுக் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

48. குடிநீர் வசதிகள்:

ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், கிறித்துவர்
களாக சமயம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் பாதுகாக்கப்
பட்ட குடிநீர் வழங்குவதற்கென ஆதி திராவிடர் குடியிருப்பு
களில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒரு குடிநீர்க்
கிணறு தோண்டுவதற்காகும் உயர் அளவு செலவு வரம்பு
ரூ. 7,500 ஆகும். குடிநீர்க் கிணறுகள் தவிர, ஆதி திராவிடர்கள்
பழங்குடியினர், கிறித்தவர்களாக சமயம் மாறிய ஆதி
திராவிடர்கள் ஆகியோருக்காக ஆண்டுதோறும் படிப்படியாக
நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் நிலமட்ட நீர்த் தேக்கங்களும்
அமைக்கப்படுகின்றன. இவ்வாறு நில மட்ட நீர்த் தேக்கம்
கட்டவும் ஆழ்கிணறு தோண்டவும் உயரளவு செலவு வரம்பு
ரூ. 15,000–லிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
சாதாரண திறந்த கிணறுகளுக்கு பதிலாக இயன்ற அளவிற்கு
துளைக் கிணறுகள் அமைக்கப்படுகின்றன. ஆதி திராவிடர்களும்
பழங்குடி மக்களும் கிறித்துவ மதத்திற்கு சமயம் மாறிய ஆதி
திராவிடர்களுக்கும் குடிநீர் கிணறுகள் அமைத்து கொடுப்
பதற்காக 1983–84 ஆம் ஆண்டில் ரூபாய் 29.12 இலட்சம்
ஒதுக்கப்பட்டுள்ளது.

49. மின் வசதி:

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து
கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு
ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ஒவ்வோராண்டும் அரசு
இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957–58
ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டு வருகிறது. 31–3–1981 ஆம் நாள் நிலவரப்படி 25,714
ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு அளிக்கப்

பட்டுவிட்டது. 1981–82 ஆம் ஆண்டில்,
883 ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு புதிதாக உருவான
அளிக்கப்படவிருக்கிறது. இவற்றுள் மின் இணைப்பு
வரையில் 149 ஆதி திராவிடர் 31–3–82 ஆம் நாள்
அளிக்கப்பட்டுவிட்டது. குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு

50. சமுதாயக் கூடங்கள்:

ஆதி திராவிடர் குடியிருப்பில் வாழும் மக்கள் திருமணம்
சமூக விழாக்கள், கூட்டங்கள் நடத்துவதற்கென்று அக்
குடியிருப்புகளில், 1971–72 ஆம் ஆண்டிலிருந்து
நிறைவேற்றும் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் படிப்படியாக
செலவில் சமுதாயக் கூடங்கள் ரூபாய் 10,500
ஆம் ஆண்டு முதல் ஒவ்வொன்றும் கட்டித்தரப்பட்டன. 1974-75
செலவில் சமுதாயக் கூடங்கள் ரூ. 15,000 மதிப்பீட்டுச்
ஆண்டிலும் 1981–82 ஆம் கட்டப்பட்டன. 1980–81 ஆம்
செலவில் சமுதாயக் கூடங்கள் ஆண்டிலும் ரூ. 3.43 இலட்சம்
தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. கட்டுவதற்காக ஏழு இடங்கள்
திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் இத்தொகை தமிழ்நாடு ஆதி
வசம் ஒப்படைக்கப் பெற்றுள்ளது. கழக நிர்வாக இயக்குநர்
ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் இதற்கென 1983–84 ஆம்
ஒதுக்கப்பெற்றுள்ளது.

51. சமுதாய நிலையங்கள்;

ஆதி திராவிடர்கள், அவர் தம் குழந்தைகள் ஆகியோரிடையே
நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச்செய்யும்
ஆடவர் சமூகப் பணியாளர் பொருட்டு
பணியாளர் ஒருவரும் ஒருவரும், மகளிர் சமூகப்
கொண்ட 25 சமுதாய குற்றேவலர் (பெண்) ஒருவரும்
பட்டு வருகின்றன. நிலையங்கள் இம்மாநிலத்தில் நடத்தப்
5 முதல் 8 கிலோ அவர்கள் தங்கள், தலைமையிடத்திலிருந்து
தீவிர பிரச்சாரம் மீட்டர் சுற்றளவில் உள்ள கிராமங்களில்
ஆரோக்கியமாகவும் செய்கின்றனர். சிறார்களை நீராட்டி,
அவர்கள் கற்றுக் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தையும்
முதலமைச்சரின் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில்
மாத்திரைகளும் சத்துணவும் பல்வகை வைட்டமின் சத்துள்ள
வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர் பழங்குடியினர் சிறார்களுக்கு

இச்சிறார்கள் ஒவ்வொருவருக்கும் ஆண்டு
14 ரூபாய் செலவில் ஆண்டுக்கு இருமுறை ஒன்றுக்கு
படுகின்றன. இதற்கென 1983–84 உடைகளும் வழங்கப்
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆம் ஆண்டில் 4.46 இலட்சம்

52. நீர்புற சலவைக் கூடம்:

1978–79 ஆம் ஆண்டில், கன்னியாகுமரி
லுள்ள சலவைத் தொழிலாளி சமூகத்தைச் மாவட்டத்தி
சலவைக்கூடம்அமைத்துத்தரும்திட்டம் சேர்ந்த மக்களுக்கு
சுசீந்திரம் பேரூராட்சியில் கன்னியாகுமரிமாவட்டம்
ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. 1979–80
கன்னியாகுமரி மாவட்டத்தில் மேலும் இரண்டு



பேரூராட்சியில் (மணவாளகுருச்சி மற்றும் அருமனை), நீர்புற
சலவைக் கூடங்கள் கட்டித்தரப்பட்டன. 1980–81 ஆம்
ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்க்குடியிலும்,
திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டம்
பரக்கைக்குளத்திலும் நீர்புறச் சலவைக் கூடங்கள் அமைக்கும்
பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 1981–82 ஆம் ஆண்டில்
கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மருகனூர் மற்றும்
திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த செங்கோட்டை வட்டத்
திலுள்ள இலத்தூரிலும், நீர்ப்புற சலவை கூடங்கள் அமைக்கும்
பணிக்காக உதவித் தொகை மற்றும் கடனாக ஒவ்வொரு
ஊருக்கும் ரூ. 10,000 வழங்கப் பெற்றுள்ளது. 1983–84 ஆம்
ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக
ரூ. 0.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

53. தீண்டாமை ஒழிப்பு

திருத்தி இயற்றப்பட்ட "குடியியல் உரிமைகள் பாதுகாப்புச்
சட்டம்" 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19 ஆம் நாள்
முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது. இச்சட்டம்
செவ்விய முறையில் செயல்படுத்தப்படுவதற்காக காவல் துறை
துணைத் தலைமை காவல் அதிகாரி பதவி தரத்தில் காவல் துறை
அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இம்மாநிலத்தில் தென் ஆற்காடு, திருச்சிராப்பள்ளி,
திருநெல்வேலி, தஞ்சாவூர் (மேற்கு), மதுரை (தெற்கு),
கோயம்புத்தூர் (நகர்புறம்), செங்கற்பட்டு (கிழக்கு), இராமநாத
புரம் (மேற்கு), வட ஆற்காடு, கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி,
நீலகிரி, புதுக்கோட்டை, செங்கற்பட்டு (மேற்கு), மதுரை
(வடக்கு), இராமநாதபுரம் (கிழக்கு), தஞ்சாவூர் (கிழக்கு),
கோயம்புத்தூர் (கிராமப்புறம்) மற்றும் பெரியார் ஆகிய
மாவட்டங்களில் 20 இயங்கும் காவல் படைப்பிரிவுகள் இயங்கி
வருகின்றன. இக்காவல் படைபிரிவுகள் அனைத்திற்கும்
ஜீப்புகள் வழங்கப்பெற்றுள்ளன. 31-5-82 ஆம் நாள் வரையில்
இயங்கும் காவல்படைப் பிரிவுகள் 9,290 வழக்குகளைப் பதிவு
செய்துள்ளன. இவற்றில் 4,061 வழக்குகளில் நீதிமன்றங்கள்
தண்டனை வழங்கியுள்ளன.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான
குற்றங்களை பதிவு செய்து விரைவில் விசாரித்து முடிவு செய்ய
திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர்,
(கும்பகோணம்) மாவட்டங்களில் நான்கு தனி நீதிமன்றங்கள்
அமைக்கப் பெற்றுள்ளன.

தனி நீதிமன்றங்கள் செயல்பட்டுவரும் தஞ்சாவூர்,
திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, மாவட்டங்களிலும்
வழக்குகள் பெருமளவு நிலுவையாக உள்ள தென் ஆற்காடு,
கோயம்புத்தூர் மாவட்டங்களிலும் உள்ள நீதிமன்ற பணிகளைக்
கவனிக்க 5 வழக்கு நடத்தும் குழுக்களை ஏற்படுத்த அரசு
அனுமதி வழங்கியுள்ளது.

குடியியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செம்மையாக செயல்படுத்த அரசுக்கு ஆலோசனை நல்கிட மாநில அளவிலான குழுவை அரசு திருத்தி அமைத்துள்ளது.

தீண்டாமைக் கொடுமையினை அகற்றுவதில் தூய்மையும், துப்புரவும் பேருதவியாக அமைவதால் ஒவ்வொரு வட்டத்திலும் துப்புரவுடன் பராமரிக்கப்படும் ஆதி திராவிடர் குடியிருப்பு ஒவ்வொன்றிற்கும் ஒரு வானொலிப் பெட்டி பரிசாக வழங்கப் படுகிறது. இதற்காக 1983-84 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 0.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாநகர் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கத் தீவிரமாகப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதற்பரிசின் மதிப்பு 1,000 ரூபாய் இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாய் ஆகும். இதற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 0.23 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் சனவரி திங்கள் 24 ஆம் தேதி முதல் 30 தேதி வரை 'தீண்டாமை ஒழிப்பு வாரம்' கொண்டாடப்படுகிறது. இந்த வாரத்தில் தீண்டாமை ஒழிப்பினை மக்களின் கவனத்திற்கு கொண்டுவர மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் ஆகியோரின் நலனுக்காக ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறைஎடுத்த நடவடிக்கைகளை விளக்கும் சிறப்பு வெளியீடுகள் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து அரசால் வெளியிடப்பட்டு வருகிறது. இதுபோன்று நடப் பாண்டிலும் சிறப்பு வெளியீடு வெளியிடப்பட்டது.

54 கலப்புத் திருமணங்கள்.

சாதி சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கு வதற்கு ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாக கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டுள்ள தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968—69-ல் கொண்டு வரப்பட்டது. கிறித்துவ சமயத்திற்கு மாறிய ஆதி திராவிடர் மக்களுக்கும் 1976 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24 ஆம் நாள் முதல் இத்திட்டம் பொருந்துமாறு நீட்டிக்கப் பட்டுள்ளது. தற்போது கலப்புத் திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் பின்வரும் பரிசுகளும் சலுகைகளும் பெறத் தகுதி யுடையவராவர் :—

(i) 8 கிராம் (14 காரட்டு) எடையுள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(ii) தம்பதிகளின் ஆண்டு வருமானம் 6,000 ரூபாய் அல்லது அதற்குக் குறைவாக இருந்தால், திருமணச் செலவு வகையில் 3 ·0 ரூபாயும், தேசியச் சேமிப்பு பத்திரம் 4,000 ரூபாய்க்கும் வழங்கப்படும். இப்பத்திரம் அவர்கள் இருவர் பெயரிலும் இருக்கும். இதனை அவர்கள் விற்கவோ, அடைமானம்



வைக்கவோ கூடாது. ஆறு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் பிரிந்துவிட்டால், வட்டி உட்பட சேர்ந்துள்ள தொகை முழுவதும் அரசுக்குச் சேரும். மனைவியை இழந்தவர்களுக்கும் கணவனை இழந்தவர்களுக்கும் மணவிலக்கு செய்து கொண்டவர்களுக்கும் குழந்தைகள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி 21—8--1979 முதல் மேற்சொன்ன சலுகைகள் நீட்டிக்கப் பட்டுள்ளன.

(iii) கலப்புத் திருமணம் செய்த தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகள் பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு இணங்க தந்தையின் சாதியோ தாயின் சாதியோ சேர்ந்தவர் களாகக் கருதப்படுவர். ஒரு குழந்தைக்கு அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் மற்ற குழந்தைகளுக்கும் சாரும்.

(iv) மேல்நிலை வகுப்பில் அல்லது அதற்குச் சமமான வகுப்பில் தேறியவர்களுக்கு ஒருங்கிணைந்த எம்.பி.பி.எஸ். முதலாம் ஆண்டு பட்டப்படிப்பிற்காக ஆறு இடங்கள் 1979—80 ஆம் ஆண்டு முதல் கலப்புத் திருமணத் தம்பதிகளின் பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கியதிலிருந்து பழைய திட்டத்தின் கீழ் 843 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன. திருத்தியமைக்கப் பட்ட திட்டத்தின் கீழ் ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ. 4,3(0 என்ற வீதத்தில் 146 தம்பதியருக்கும் ரொக்கம் வழங்கப் பட்டது.

18-9-1978 ஆம் நாளன்று அல்லது அதற்குப் பிறகு நடந்த திருமணங்களுக்கு இச்சலுகை பெற வேண்டி மனு செய்வதற் கான கால அளவை 2 ஆண்டு காலத்திற்கு அரசு நீட்டித் துள்ளது';

இத்திட்டத்திற்காக 1983-84 ஆம் ஆண்டில் ரூபாய் 10·00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

55. இறுதிச் சடங்குகளுக்கு தொகை அளித்தல்.

ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள் குடும்பத்தினரில் ஒருவர் இறந்து விட்டால் இறுதி சடங்குகளுக்காக ரூ. 50 நிதி உதவி வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது, அக் குடும்பங்களின் எளிய பொருளாதார நிலையையும் வறுமைச் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஈமக்கடனுக்கும் இந்த நிதியுதவியளிக்கப்படுகிறது.

1983-84 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்காக ரூ. 52·98 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டங்கள், தன்னிறைவுத் திட்டம்.

56. இம்மாநிலத்தில் 1979-80 ஆம் ஆண்டில் தன்னிறைவுத் திட்டம் கொண்டு வரப்பட்டு குறிப்பிட்ட 69 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் தெரிந்தெடுக்கப் பட்ட 69 வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள குடியிருப்புகளுக்கு பின்வரும் வசதிகளை செய்து கொடுக்க ஆதி திராவிடர் பழங் குடியினர் நலத்துறை 1980-81 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கியது :—

1. குடிநீர் வசதி செய்தல்.
2. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல், சிறு பாலங்கள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல்.
3. பள்ளிக்கட்டிடங்கள் கட்டுதல்.

இத்திட்டத்தை செயற்படுத்துவதற்காக 1980-81 ஆம் ஆண்டில் ரூ. 66·23 இலட்சம் செலவிடப்பட்டது. இத்திட்டம் 1981-82-ல் 150 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பெற்றது. இதற்கென ரூ. 88·47 இலட்சம் செலவிடப்பட்டது. இத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பெற்றது. சென்னை மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலரைத் தவிர ஏனைய மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர்களுக்கு இத்தொகை பகிர்ந்தளிக்கப்பெற்றுள்ளது. இத்தொகை புதிய பணிகளையும் தன்னிறைவுத் திட்டத்தின் 1 மற்றும் 2 ஆவது கட்ட வேலை களில் விடுபட்ட பணிகளையும் மேற்கொள்வதற்காகச் செலவிடப்படும்.

57. பழங்குடியினர் துணைத் திட்டம்.

தமிழ்நாட்டிலுள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பழங்குடியினர் நலத் துணைத் திட்டம், 1976-77 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் ஆண்டிற்கு ஆண்டு அதிகரித்து வருகின்றது. இதற்கான தொகை (1976-77 ஆம் ஆண்டில்) ரூ. 101.82 இலட்சமாக இருந்தது. தற்போது (1983-84 ஆம் ஆண்டில்) ஆறு மடங்கு உயர்ந்து ரூ. 600.58 இலட்சமாக உள்ளது. ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் துணைத் திட்டத்திற்காக (1980-85) ரூ. 2167·09 இலட்சம் நிதி ஒதுக்கப்பெற்றுள்ளது.



பழங்குடியினர் துணைத் திட்டமானது பகுதி அடிப்படை யிலான திட்டமாகும். பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ஒன்பது ஒருங்கிணைந்த பழங்குடியினர் முன்னேற்றத் திட்டப் பகுதிகளில் (துணைத் திட்டப் பகுதி) வசிக்கின்ற சுமார் 2·10 இலட்சம் பழங்குடியினர் பயனடைகின்றனர். குறைந்தது 15,000 பழங்குடியினரை கொடிய வறுமையிலிருந்து மீளச் செய்து நல்வாழ்வு வாழச் செய்வதே இந்த பழங்குடியினர் துணைத் திட்டத்தின் நோக்கமாகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஓராண்டுக்கு 3000 வீதம் பழங்குடியினர் குடும்பத்தினரை முன்னேறச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் தோட்டக்கலை, மண்வளப் பாதுகாப்பு, சிறு பாசனம், கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வன வளர்ப்பு, கல்வி, சுகாதாரம், சமூக நலம், கிராமியத் தொழில்கள், பட்டுப்புழு வளர்ப்பு, சாலைப் போக்கு வரத்து, குடிநீர் வழங்கல், மின் இணைப்பு வழங்குதல் ஆகியன அடங்கும்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப் பெறும் பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட மாநில பழங்குடியினர் முன்னேற்ற அதிகார மன்றத்தால் ஆய்வு செய்யப்பெறுகின்றது. முதலமைச் சரின் சிறப்புக் கட்டளையின்பேரில், தமிழ்நாட்டில் வசிக்கும் அனைத்து பழங்குடியினருக்கும் இரண்டாண்டு காலத்திற்குள் குடிநீர் வழங்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டங்களைச் செயற்படுத்த அந்தந்த துறைகள் பொறுப்பேற்கின்றன. மாவட்ட ஆட்சியர்கள் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் தலைமைத் திட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகளாவர்.

58. ஆதி திராவிடர்களுக்கும் பழங்குடியினருக்கும் இடம் ஒதுக்கீடு செய்வதற்கான விதிகள்.

1. கல்வி நிறுவனங்களில் அனுமதி.

மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வி, ஏனைய தொழில் கல்வி நிறுவனங்கள் உட்பட கல்வி நிறுவனங்களில் ஆதி திராவிடர் களுக்கும், பழங்குடியினருக்கும் உரிய இடம் கொடுக்க 18 விழுக்காடு இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கென அமைக்கப்பட்டுள்ள குழு 9-3-1982 அன்று ஆதி திராவிடர் நல அமைச்சரின் தலைமையில் கூடி, பொறியியல் மருத்துவம், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் கலைக் கல்லூரிகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களை சேர்த்துக் கொள்வது குறித்து விரிவாக ஆய்வு செய்தது. பல்தொழிற் பயிற்சிப் பள்ளிகளில், ஆதி திராவிடர், பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் 1971-72-ல் 5 83 விழுக்காட்டினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; ஆனால் 1980-81 ஆம் கல்வி ஆண்டில் 21 சதவிதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர் என்பதைக் கருதிப் பார்த்தால், அவர்களை மேற்கூறிய பல் தொழில் பயிற்சிப் பள்ளிகளில் சேர்த்துக் கொள்வது அதிகரித்துள்ளது என்பது தெளிவாகிறது. இதுபோலவே பொறியியல் கல்லூரியிலும் 1971-72-ல் 4.37 விழுக்காட்டினர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; ஆனால் 1980-81-ல் 8.6 சதவிதம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதிலிருந்து பொறியியல் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப் படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தெரிகிறது. 1981-82, 1982-83 ஆம் ஆண்டிற்கான விவரங்கள் சேகரிக்கப் பெற்று அவை குழுவினால் ஆய்வு செய்யப்படும்.

2, அரசுப் பணிகளில் நியமனம்.—

மாநில அரசுப் பணிகளில் 18 விழுக்காடு இடங்கள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறைத் தலைவரும் தலைமைச் செயலகத் துறைகளும் ஆண்டுதோறும் விவரக்கணக்கு ஒன்றை அனுப்பவேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதன் மூலம், இட ஒதுக்கீடு குறித்த விதியை நியமன அதிகாரிகள் ஒழுங்காகப் பின்பற்றுகின்றனரா என்பது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது, அரசுப் பணிகளில் மற்றும் அரசு பொது நிறுவனங்களில் ஆதி திராவிடர்களுக்கும், அளிக்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் குறித்து ஆராய, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், ஆதி திராவிடர் நல அமைச்சரை துணைத் தலைவராகவும், ஆதி திராவிடர் பழங்குடியினர் நலத்துறை இயக்குநரை உறுப்பினர் செயலாளராகவும் கொண்ட உயர் மட்டக்குழு செயல்பட்டு வருகின்றது.

அரசுத் துறைகளிலும், பொதுத் துறை நிறுவனங்களிலும் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் அளிக்கப்பட்டுள்ள இடங்கள் (விழுக்காட்டில்) வருமாறு :—

31-12-81 அன்றுள்ளவாறு

| | | விழுக்காடு |
|---|---|---|
| அரசுத் துறைகள் | .. | 12 47 |
| அரசு பொதுத்துறை நிறுவனங்கள் | .. | 12.17 |

கண்காணிப்புத் துணைக்குழு.—பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அரசு இரண்டாம் செயலாளரைத் தலைவராகக் கொண்டு "உயர் அதிகாரக்



கண்காணிப்புக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இது உயர்நிலைக் குழுவின் நிலையான துணைக் குழுவாகும், ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும் இட ஒதுக்கீடு குறித்த விதிகளை பதவி உயர்வு, பதவி மாற்றம் மூலம் செய்யப்படும் அனைத்து நியமனங்களுக்கும் பொருந்தச் செய்வது பற்றி செயற்குறிப்பை இக்குழு ஆய்வு செய்யும். மேலும் பல நிலைகளில் செய்யப்படும் பணி நியமனங்களை மீண்டும் ஆராய்ந்து தற்போதுள்ள நிலையினை மதிப்பீடு செய்து, அரசுப் பணிகளில் ஆதி திராவிடர் பழங்குடியினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை களைத் துரிதப்படுத்த வழிவகைகளையும் தெரிவிக்கும்,

59. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம்,

கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் மீண்டும் அடிமைத்தளைகளில் வீழ்ந்துவிடாமல் நல்வாழ்வு வாழ வகை செய்வதில் இந்த அரசு எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறது. இவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான திட்டங்கள் தீட்டி செயல்படுத்தப்பட்டு வருகின்றன, இவர்களுக்கு விளை நிலம் வழங்கப்பட்டும், வேலை வாய்ப்பு அளித்தும், பயன்பெறும் கடனும் வேளாண்மைக் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன, தற்போதைய கொத்தடிமைகளை விடுவிக்கும் திட்டத்துடன் பழங்குடி மக்கள் மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டம் மற்றும் மிகப்பண்டைய பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்துடன் செயல்படுத்தினால் கொத்தடிமையிலிருந்து விடுதலை பெற்ற தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலை உயரும் என அரசு கருதுகிறது. இம்மாநிலத்தில் 30-11-1982 முடிய 27,874 கொத்தடிமைகள் புதுவாழ்வு பெற்றுள்ளனர்.

60. 31 ஆம் எண்ணுள்ள இம்மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 44.48 கோடி (சாட்டிய செலவு உட்பட) செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதோடு ஏனைய மூன்று மானியக் கோரிக்கையின் கீழ் ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்திற்காகச் செலவு செய்யக் கருதியுள்ள தொகை பற்றிய விவரங்கள் வருமாறு :—

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| மானியக் கோரிக்கை எண் 43 பல்வகை | .. | 0.0026 |
| மானியக் கோரிக்கை எண் 57 பல்வகை மூலதனச் செலவு | .. | 5.4001 |
| மானியக் கோரிக்கை எண் 58 கடன்களும் முன் பணமும் | .. | 0.7361 |
| மொத்தம் | — | 6.1388 |

ஆதி திராவிடர்; பழங்குடியினரின் சமூக, [1983 மார்ச் 31
மேம்பாட்டுக்காக மேற்சொன்ன மானியக் பொருளாதார
அனைத்தின் கீழும் மொத்தத்தில் 50.62 கோடி கோரிக்கைகள்
செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ரூபாய் செலவு

ஆகவே, இம்மாநிலத்தில் நல்வாழ்வு
ஏனைய மக்களைப்போல் ஆதி திராவிடர், வாழ்ந்து வரும்
வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த அரசு அயராது பழங்குடியினரின்
வருகிறது. பாடுபட்டு

## இணைப்பு III

(700-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

### எழுதுபொருள் அச்சுத்துறை பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு

அமைப்பு :

அச்சகங்கள், எழுதுபொருள் பிரிவு எனும் இருபெரும் பிரிவு
களை எழுது-பொருள் அச்சுத்துறை கொண்டியங்குகிறது. இத்
துறையில் மொத்தம் 6,177 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.
எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்குநர், இத்துறையின் தலைவ
ராவார். நிருவாகம் சம்பந்தமாக ஒரு துணை இயக்குநரும்,
அச்சகம் சம்பந்தமாக ஒரு பொது மேலாளரும், கணக்குகளைப்
பொறுத்தவரையில் கணக்கு தலைமை அலுவலரும், எழுது
பொருள் சம்பந்தமாக ஒரு துணை இயக்குநரும் எழுதுபொருள்
அச்சுத்துறை இயக்குநருக்கு உதவியாகப் பணியாற்றுகின்றனர்.
இவர்களைத் தவிர, சென்னை அண்ணா சாலையிலுள்ள புத்தக
வெளியீட்டுப் பிரிவிற்கு உதவி இயக்குநர் ஒருவர் பொறுப்பு
வகிக்கிறார்.

2. இயக்ககம்:

எழுதுபொருள்-அச்சுத்துறை இயக்ககம், சென்னையில் 227
பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

இயக்குநர் அலுவலகம், சென்னையிலுள்ள மூன்று அச்சகங்
களையும், வெளியூர்களிலுள்ள ஐந்து அச்சகங்களையும்,
சென்னை, இராஜாஜி சாலையில் உள்ள எழுதுபொருள் கிடங்கை
யும், அண்ணா சாலையிலுள்ள அரசு வெளியீடு விற்பனை
நிலையத்தையும் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற கட்டிடத்தி
லுள்ள அரசு வெளியீடு விற்பனை சிறு நிலையத்தையும்
நிருவகித்து வருகிறது.



3. அச்சுப் பிரிவு.

3. 1. அச்சுப் பிரிவு பின்வரும் பகுதிகளைக் கொண்டுள்ளது:—

(1) மத்திய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

(2) உயர்நீதிமன்ற வளாகக் கிளை அச்சகம், சென்னை.

(3) சூளைப் பகுதியில் ஆனைக்காரன் தோட்டத்திலுள்ள கிளை அச்சகம், சென்னை.

(4) புதுக்கோட்டையிலுள்ள கிளை அச்சகம்.

(5) திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டார அச்சகம்.

(6) சேலத்திலுள்ள வட்டார அச்சகம்.

(7) விருத்தாசலத்திலுள்ள வட்டார அச்சகம்.

(8) மதுரையிலுள்ள வட்டார அச்சகம்.

3. 2. அரசு மைய அச்சகம், வள்ளலார் நகர், சென்னை.

1831—ல் முக்கியமாக அரசிதழ்களை அச்சிடுவதற்கென பத்து தொழிலாளர்களை மட்டுமே கொண்டு சிறிய அளவில் நிறுவப்பட்ட இந்த அச்சகம், தற்போது மாபெரும் நிறுவனமாகத் தழைத்து, வளர்ந்து தனது 151ஆம் ஆண்டை டிசம்பர் 1982-ல் நிறைவு செய்துள்ளது. சூயஸ்ஸின் கிழக்கே இது ஒரு பெரிய தனி அச்சகமாகக் கருதப்படுகிறது.

சென்னை மத்திய அச்சகம், பணி மேலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் 3,565 பணியாளர்களைக் கொண்டு செயற்பட்டு வருகிறது. மேற்கூறிய பணியாளர்களில் 312 பெண் பணியாளர்களும், 88 உடல் ஊனமுற்றோரும் அடங்குவர். இந்த அச்சகம் மூன்று முறை மாற்றுப்பணியில் செயல்படுகிறது. மேலும் 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்படி 231 பேர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்களில் 19 பேர் உடல் ஊனமுற்றவர் ஆவர். இவ்வச்சகம் அச்சு எந்திரங்கள் (Printing Machines), வரி அச்சு எந்திரங்கள் (Lino Type Composing Machines) தனிஅச்சு பலகணிகள் (Mono Type key Boards) மற்றும் பல தேவையான எந்திர தளவாடங்களையும் முழுமையாகப் பெற்று இயங்கி வருகிறது. பின்வரும் எந்திரங்கள் 1982-83—ல் புதிதாக வாங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1. ரோட்டா அச்சு எந்திரங்கள் | .. | 5 |
| 2. தனி அச்சு பலகணிகள் | .. | 3 |
| 3. மோனோ காஸ்டர்ஸ் | .. | 6 |

கடந்த மார்ச் 1982 முதல் மே 1982 வரை 1.25 கோடி உணவு பங்கீட்டு அட்டைக்கான உறைகள் (P. V. C. transparent jackets) ரூ. 50 இலட்சம் மதிப்பில் வாங்கப்பட்டன.

உதிரி பாகங்களும் மற்றும் மேட்டரிஸ்லும் ரூ.2,25,000-க்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அரசு மைய அச்சகத்தை நவீனப்படுத்தும் திட்டத்தின் ஒரு பகுதியாக, முதல் முறையாக ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வெப் ஆப்செட் எந்திரமும் (Web Offset Machine) மற்றும் போட்டோ கம்போஸிங் எந்திரமும் (Photo Composing Machine) வாங்குவதற்கு 1983-84ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கு 15·00 இலட்சம் ரூபாய் செலவாகும்.

நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், நிலைப்படுத்தப்படாத படிவங்கள், வார அரசிதழ்கள், அரசு சிறப்பிதழ்கள், காவல் துறை அரசிதழ் ஆகியவற்றை அச்சிடுவதோடு, அரசு தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகள், துறைத் தலைவர்கள், தமிழ் நாடு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர், போக்குவரத்துக் கழகங்கள், உள்ளாட்சி மன்றங்கள் முதலியவற்றால் தரப்படும் அச்சுப் பணிகளையும், வரவு-செலவுத் திட்ட ஆவணங்கள், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, உணவு பங்கீட்டு அட்டைகள், இரகசிய அறிக்கைகள், குழு அறிக்கைகள், விதித் தொகுப்பு மற்றும் நடை முறை நூல், தேர்தல் வாக்குச் சீட்டுகள் முதலியவற்றையும் மைய அச்சகம் அச்சிட்டுத் தருகிறது.

இம்மைய அச்சகம், 1982-ல் செய்து முடித்துள்ள சில முக்கிய பணிகள் வருமாறு:—

(1) பெரியகுளம் நாடாளுமன்ற தொகுதிக்கான வாக்குச் சீட்டுகள்.

(2) பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கைகள்.

(3) சட்ட மேலவை, சட்டப் பேரவை உறுப்பினர்களின் விவாதங்கள்.

(4) மானியக் கோரிக்கைகள், கொள்கை விளக்கக் குறிப்புகள்.

(5) 125 இலட்சம் உணவுப் பங்கீட்டு அட்டைகள்.

(6) மாநில ஆட்சி அறிக்கைகள்.

(7) சென்னை மாநகர் அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட தொலைப் பேசிக் குறிப்புப் புத்தகம்.

(8) மாத நாட்காட்டி மற்றும் மூன்று மாத நாட்காட்டி.

(9) நாட் குறிப்பேடுகள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நாட்குறிப்பேடுகள், சிறப்பு நாட்குறிப்பேடுகள், அமைச்சர்களுக்கான நாட்குறிப்பேடுகள்.

(10) புள்ளி விவர விதித்தொகுப்புகள்.

(11) பல்வேறு துறைகளின் நடைமுறை நூல்களும், விதித் தொகுப்புகளும்.



(12) கிராம அலுவலர்களின் நிருவாக நடைமுறை நூல்

(13) சங்கிலி அளவை நடைமுறை நூல்.

(14) கிராம அலுவலர்களின் கணக்குகள் நடைமுறை நூல்,

(15) காடுகள் குறித்த பணித் திட்டம்.

(16) இலவச சத்துணவுத் திட்டத்திற்கான வழி காட்டும் புத்தகம் (Guide Book).

(17) இலவச சத்துணவுத் தயாரிக்க வழிகாட்டும் புத்தகம்.

(18) குழந்தைகளுக்கான உடல் நல அட்டைகள்.

(19) மாணவர்களுக்கான மாதாந்திர பயணச் சீட்டுகள், சலுகைப் பயணச் சீட்டுகள்.

(20) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நடவடிக்கைகள் பற்றிய குறிப்பு.

(21) முதன்மை ஆணைத் தொகுப்புகள்.

1982–83-ம் ஆண்டு (30-11-1982 வரை) பல துறைகளுக்கு அச்சு வேலைகள் முடித்துக் கொடுத்ததற்கும், எழுதுபொருள் முதலியன வழங்கியதற்கும் ரூ. 1,45,58,291·00-க்கு கோரப் பட்டு, 30-11–1982 முடிய ரூ. 42,31,799.00 வசூல் செய்யப் பட்டுள்ளது. மீதமுள்ள தொகையை வசூல் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வச்சகத்தில் பணி புரியும் மகளிரின் குழந்தைகளைப் பணி நேரங்களில் கவனித்துக் கொள்ள குழந்தைகள் காப்பகம் உள்ளது. தொழிலாளர்களின் தேவையைக் கவனிப்பதற்காக ஒரு சிற்றுண்டிச் சாலையும் இவ்வச்சகத்தில் உள்ளது.

1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1982 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாள் முடிய பணியிலுள்ளபோது இறந்த 10 பணியாளர்களின் குடும்பத்தினருக்கு தொழிலாளர் நல நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் ரூ. 100 வீதம் மொத்தம் ரூ.1,000 அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்குறிப்பிட்டகாலஅளவில் இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர் ஒவ்வொருவருக்கும் ரூ. 10,000 வீதம் குடும்பநல நிதியாக ரூ. 70,000 அளிக்கப்பட்டுள்ளது.

சென்னை மைய அச்சகத்தில் 1982-ம் ஆண்டில் மூன்று சிறு விபத்துகள் ஏற்பட்டன.

மேலும், ஒரு தொழிலாளர் நல அலுவலரும், தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவரும், தொழிலாளர்களின் நலன் மற்றும் தேவை ஆகியவற்றைக் கவனிக்கிறார்கள். தொழிலாளர் நல அலுவலர், மற்ற கிளை வட்டார அச்சகங்களில் பணி புரியும் பணியாளர்களின் தேவைகளையும் கவனிக்கப் பொறுப்புள்ளவர் ஆவார்.

### 3.3. சென்னை சூளையிலுள்ள ஆணைக்காரன் தோட்டக் கிளை அச்சகம், சென்னை.

இந்த அச்சகம், 1974—ல் வாடகைக் கட்டிடத்தில் செயல்பட தொடங்கியது. இப்பொழுது இவ்வச்சகம் 696 பணியாளர்களைக் கொண்டு மூன்று முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது, மேலும் 1961-ம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டப்படி 47 தொழில் பழகுவோர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வச்சகம் முக்கியமாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு, காவல் துறை, மருத்துவத் துறை, வணிக வரிகள் துறை சம்பந்தப்பட்ட அச்சுப் பணிகளைச் செய்து வருகிறது.

பெண் பணியாளர்களின் நலனுக்கென குழந்தைகள் காப்பகம், ஓய்வு அறையும் உள்ளன. தொழிலாளரின் நலனைக் கருதி சிற்றுண்டிச்சாலை ஒன்று இங்கே இயங்கி வருகிறது. பணியில் இருந்தபோது இறந்த பணியாளரின் சட்டப்படிக்கான வாரிசுதாரருக்கு குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 10,000-ம் தொழிலாளர் நல நிதியிலிருந்து ரூ.100—ம் 1982-ம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நல உதவி அலுவலர் ஒருவர் இக்கிளை அச்சகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் தேவை, நலன் ஆகியவற்றைக் கவனிக்கிறார்.

### 3.4. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள கிளை அச்சகம்.

இந்த அச்சகம் 1923-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இது மூன்று முறைமாற்றுப் பணியில் இயங்கி வருகிறது. இவ்வச்சகத்தில் 237 பணியாளர்களும், இது தவிர 1961—ம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டப்படி நியமிக்கப்பட்ட 4 தொழில் பழகுவோர்களும் பணிபுரிகிறார்கள். இவ்வச்சகத்தில் உயர்நீதிமன்றத்திற்கு தேவையான அன்றாட வழக்குப் பட்டியல்கள், வாராந்திர வழக்குப் பட்டியல்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் அச்சடிப்பதே முதன்மையான வேலையாகும். இத்துடன் 1982-ம் ஆண்டில் மேற்கண்ட வேலைகளை செய்து முடித்து மீதமுள்ள நேரங்களில் இந்தியச் சட்ட அறிக்கைகள் (சென்னையில் நடைபெறும் வழக்குகள்) மற்றும் சில நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் [அதாவது டிடிஏ (DTA) I மற்றும் II] "தீர்ப்புத் திரட்டு" இதழ் ஆகியவைகளும் இங்கு அச்சடிக்கப்பட்டன.



ஒரு மோனோ கீ போர்டு, ஒரு மோனோ காஸ்டிங் எந்திரம் மற்றும் ஒரு செல்ப் இங்கிங் செமி ஆட்டோமேடிக் ப்ரூப் பிரஸ் ஆகிய எந்திரங்கள் வாங்கப்பட்டு 1982—ல் இவ்வச்சகத்தில் பொருத்தப்பட்டுள்ளன.

பணியிலிருந்தபோது இறந்த ஒரு பணியாளரின் சட்டப்படிக்கான வாரிசுதாரருக்கு குடும்ப நல நிதியிலிருந்து ரூ. 10,000 வழங்கப்பட்டது.

இவ்வச்சகத்தில் தொழிலாளர்கள் ஓய்வு நேரத்தில் விளையாடுவதற்கென்று ஒரு மனமகிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது. இது, மனையக, மனைப்புற விளையாட்டுகளுக்கு வகை செய்கிறது.

### 3.5. கிளை அச்சகம், புதுக்கோட்டை.

இக்கிளை அச்சகம் தன் சொந்தக் கட்டிடத்தில் 256 பணியாளர்களையும் 17 தொழில் பழகுபவர்களையும் கொண்டு, இரண்டு முறை மாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ். அரசு ரூ. 2,05,000 மதிப்பில் கூடுதல் கட்டிடங்கள் கட்ட ஒப்புதலளித்துள்ளது. இக்கிளை அச்சகத்தில் கட்டப்பட்ட கூடுதல் கட்டடத்தை கட்டி முடிப்பதற்காக ரூ. 81,000 கூடுதல் தொகைக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

பதினாறு மாவட்ட அரசிதழ்கள் (தமிழிலும், ஆங்கிலத்திலும்), பத்திரப் பதிவுத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, கல்லூரிக் கல்வித்துறை முதலியவற்றிற்குத் தேவையான நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள், உயர்நீதிமன்றம் முதலியவற்றிற்கு தேவையான நிலைப்படுத்தப்படாத படிவங்கள் ஆகியவை இவ்வச்சகத்தில் அச்சடிக்கப்படுகின்றன.

ரூபாய் 6 இலட்சம் செலவில், ஒரு மோனோ காஸ்ட்டர் இறக்குமதி செய்யப்பட்டு, பொருத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒரு வெட்டும் இயந்திரமும் (Cut ing Machine) ஒரு ப்ரூப் இயந்திரமும் இந்த அச்சகத்தில் பொருத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொழிலாளர்களின் ஓய்வு நேர பொழுது போக்குக்காக இவ்வச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றம் செயல்பட்டு வருகிறது. இது மனையக விளையாட்டுகளுக்கும் இலக்கிய நடவடிக்கைகளுக்கும் வகை செய்கிறது. தொழிலாளர் நலத்துறை நடத்திய ஆண்டு விளையாட்டுப் போட்டியில் இவ்வச்சகப் பணியாளர்கள் சிலர் கலந்து கொண்டார்கள்.

[1983 மார்ச் 31

இவ்வச்சகத் தொழிலாளர்களின் நலனுக்கென்றே ஒரு
கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு, நன்முறையில் நடைபெற்று
வருகிறது.

3.6. அரசு வட்டார அச்சகம், திருச்சிராப்பள்ளி.

இந்த அச்சகம் 1965 ஆம் ஆண்டிலிருந்து அரியமங்கலம்
தொழிற்பேட்டையில் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்குச்
சொந்தமான நான்கு வாடகைக் கட்டிடங்களில் 172 பணியாளர்
களையும் 12 தொழில் பழகுபவர்களையும் கொண்டு செயல்பட்டு
வருகிறது.

இவ்வச்சகத்தில், அரசு அலுவலகங்களுக்குத் தேவையான
நிலைப்படுத்தப்பட்ட படிவங்கள் அச்சடிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வச்சகத்திற்குச் சொந்தமாகக் கட்டிடம் கட்டுவதற்காக
துவாக்குடி கிராமத்தில், 3.08 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம்
ஏற்கெனவே வாங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இடத்தில்
கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்
உள்ளது.

பணியாளர்களின் பொழுது போக்கிற்காக இவ்வச்சகத்தில்
ஒரு மனமகிழ் மன்றம் செயல்படுகிறது. இது, தொழிலாளர் நல
நிதியைப் பயன்படுத்தி, செய்தித் தாள்கள், கதைப் புத்தகங்கள்,
மற்றும் விளையாட்டுச் சாதனங்கள் ஆகியவற்றை வாங்கி
அளிக்கிறது.

3.7. அரசு வட்டார அச்சகம், சேலம்.

இவ்வச்சகம் 1966 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மூன்று
வாடகைக் கட்டிடடங்களில், 150 பணியாளர்களையும், 11
தொழில் பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறைமாற்று
பணியில் இயங்கி வருகிறது.

இவ்வச்சகத்திற்கெனச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்காக
ரெட்டியார் கிராமத்தில் 2.8656 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம், சிறு
தொழில வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து (SIDCO) வாங்கி 1982
நவம்பரில் கட்டுமானப் பணி தொடங்கப்பட்டுள்ளது இக்
கட்டிடம் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது.

இவ்வச்சகம் முக்கியமாகக் கருவூல நிலைப்படுத்தப்பட்ட
படிவங்கள், நில அளவை, வேலை வாய்ப்பகம் ஆகிய துறை
களுக்குத் தேவையான நிலைப்படுத்தப்படாத படிவங்கள், பள்ளி
இறுதி வகுப்புப் புத்தகங்கள் (S.S.L.C. Book) ஆகியவைகளை
அச்சிட்டு வழங்கி வருகிறது.

கடினமான முறையில் தோல் இணைப்புப் பட்டைகளை உபயோ
கிப்பதற்குப் பதிலாக, புதிய முறையில் தோல் இணைப்புப்
பட்டைகளை கண்டுபிடித்த இவ்வச்சகத்தைச் சேர்ந்த இளநிலை
எந்திரக் கம்மியர் ஒருவருக்கு ரூ.200 பரிசாக வழங்கப்பட்டது.



1983 மார்ச் 31]

இவ்வச்சகத் தொழிலாளர்கள் ஒரு மனமகிழ் மன்றத்தை
நடத்தி வருகின்றனர்.

3.8. அரசு வட்டார அச்சகம், விருத்தாசலம்.

இவ்வச்சகம், 1966 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது
அண்மையில் சொந்தமாகக் கட்டப்பட்ட நவீன வசதிகள் கூடிய
புதிய கட்டிடத்தில், 152 பணியாளர்களையும், 11 தொழில்
பழகுபவர்களையும் கொண்டு இரண்டு முறைமாற்றுப் பணியில்
இயங்கி வருகிறது.

இவ்வச்சகம், வேளாண்மைத் துறை—கால்நடை வளர்ப்புத்
துறை, நீதித்துறை, வேலை வாய்ப்புத்துறை, தேசிய மாணவர்
படை, தொழில் வணிகத்துறை மற்றும் புள்ளி விவரத்துறை
ஆகியவற்றிற்குத் தேவையான படிவங்கள் மற்றும் பதிவேடுகள்
முதலியவற்றை அச்சடித்து வழங்குகிறது. இது தவிர கோப்புகள்
கட்டி அனுப்பும் அட்டைகள் மற்றும் 1/3 கோடிட்ட குறிப்புத்
தாள்கள் ஆகியவைகளையும் வழங்கி வருகிறது.

கம்பியடிக்கும் எந்திரம் (Wire Stitching Machine), கடைசல்
பிடிக்கும் எந்திரம் (Lathe) மற்றும் இதர தொழிற்கூடத்திற்குத்
தேவையான எந்திரங்கள் ஆகியவை விரிவாக்கத் திட்டத்தின்கீழ்
விரைவில் நிறுவப்படவிருக்கின்றன.

இவ்வச்சகத்தில், ஒரு மனமகிழ் மன்றமும் இயங்கி வருகிறது.

இந்த அச்சகத்தில், பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் சங்கம்
ஒன்றும் இயங்கி வருகிறது.

3.9. அரசு வட்டார அச்சகம், மதுரை.

இந்த அச்சகம், 1976 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
இவ்வச்சகம், 336 பணியாளர்களையும், அது தவிர 13 தொழில்
பழகுபவர்களையும் கொண்டு அச்சகத்திற்குச் சொந்தமான கட்டி
டத்திலேயே இரண்டு முறைமாற்றுப் பணியில் இயங்கி வருகிறது.

அறிக்கையாண்டில், இவ்வச்சகத்திலிருந்து 24 லட்சம் முத்
திரைக் காகிதங்களும் (Emblem Sheets) 4 இலட்சம் எஸ்.எஸ்.எல்.சி.
குறிப்புப் புத்தகங்களும் (S.S.L.C. Cumulative Record Books)
குறிப்பிட்ட சில துறைகளுக்குத் தேவையான வரையறுக்கப்பட்ட
படிவங்களும் பதிவேடுகளும் அச்சடித்து வழங்கப்பட்டன. அச்சு
அடிக் கட்டைத் தயாரிப்புப் பிரிவிற்காக ஒரு லித்தோடெக்ஸ்
ரூட்டிங் எந்திரம் (Lithotex Routing Machine) வாங்கப்பட்டுள்ளது.

இவ்வட்டார அச்சகத்தில் ஒரு மனமகிழ் மன்றமும் உள்ளது

## 4. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம், சென்னை.

சென்னை அண்ணா சாலையிலுள்ள அரசு விற்பனை நிலைய மும், உயர்நீதி மன்ற வளாகத்திலுள்ள கிளை விற்பனை நிலையமும் அரசு வெளியீடுகளை பொது மக்களுக்கு விற்பனை செய்கின்றன; மேலும் இவை இந்திய அரசு வெளியீடுகளுக்கு முகவரமைப்புகளாகச் செயல்படுகின்றன. அரசு வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் 58 பேர் பணிபுரிகின்றனர். உதவி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அரசு வெளியீடுகள் விற்பனை நிலையம் 1-4—1982 முதல் 30-9—1982 முடிய ரூ. 34,066.55 ரொக்கத்திற்கு வெளியீடுகளை விற்பனை செய் துள்ளது. உயர்நீதிமன்ற வளாகத்திலுள்ள துணை விற்பனை நிலையம், அதே கால அளவில் ரூ. 38,585·42 மதிப்புள்ள வெளி யீடுகளை விற்பனை செய்துள்ளது. விற்பனையை அதிகரிக்கும் உத்தியாக மாலையில் 5.30 மணிவரை விற்பனை நேரத்தை நீட்டித்து 1981ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட "மாலைநேர விற்பனை திட்டம்" தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

## 5. எழுதுபொருள் பிரிவு, சென்னை.

5.1 எழுதுபொருள் அச்சுத் துறையைச் சேர்ந்த எழுதுபொருள் பிரிவு, மைய முகவரமைப்பாக இருந்து அரசு அலுவலகங்களுக்குத் தேவையான எழுதுபொருள் தட்டச்சுப் பொறிகள், 'கணக்கிடும் பொறிகள், படிப்பெருக்கிகள் ஆகியவற்றை வாங்கி, தேவைக் கேற்ப அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்கி வருகிற இது, சென்னை இராஜாஜி சாலையிலுள்ள பழைய உயர்நீதிமன்ற கட்டிடத்தில் 328 பணியாளர்களைக் கொண்டு இயங்கி வருகிறது இப்பிரிவில் 1—4—1982 முதல் 30—11-1982 வரையில் ரூ. 203 இலட்சம் மதிப்புள்ள எழுதுபொருள்கள் வாங்கப்பட்டன.

மத்திய அரசின் உதவி பெறும் அல்லது மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களுக் கும் முன்னரே உரியத் தொகையைப் பெற்றுக்கொண்டு, எழுது பொருட்களை வழங்கி வருகிறது.

### 5.2. எழுதுபொருள் வாங்குதல்.

(i) காகிதம் மற்றும் அட்டைகள் (ii) தட்டச்சுப் பொறிகளும் படிப்பெருக்கிகளும் (iii) கதர் கைத்தறித் துணிகள் (iv) அச்சகம் மற்றும் சிறைச்சாலையில் தயாரிக்கும் பொருட்கள் நீங்கலாக பிற எழுதுபொருட்கள் யாவும் ஒப்பந்தப்புள்ளி மூலம் வெளி அங்காடிகளில் ஆண்டுதோறும் வாங்கப்படுகின்றன.

### 5.3. காகிதம், அட்டைகளை வாங்குதல்.

புதுடில்லியில் உள்ள வழங்கு பொருள் விற்பனைத் தலைமை இயக்குநர் செய்த ஒதுக்கீட்டிலிருந்து காகிதம், அட்டை போன்றவை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யப்படுகின்றன.



சிறப்பு வகைக் காகிதம், அட்டை முதலியன சிறப்புக் கொள் முதல் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்னர், ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதன் மூலம் ஒப்பந்த வீத அடிப்படையில் வழங்குபொருள் விற்பனைத் தலைமை இயக்குநரிடம் அல்லாமல் வெளியே வாங்கப்படுகின்றன.

## 6. பணியாளர்களுக்கான வசதிகள்.

பணியாளர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள சில அடிப்படை வசதிகள் குறித்த விவரங்கள் வருமாறு:—

### (i) குடியிருப்புகள்.

சென்னை, தண்டையார்ப்பேட்டையிலுள்ள அரசு அச்சகப் பணியாளர் குடியிருப்பில், 300 வீடுகள் உள்ளன. இக்குடியிருப் பைச் சுற்றி சுவர் கட்டப்பட்டு, எல்லா வீடுகளுக்கும் கம்பிவலை அடிக்கப்பட்டு, மின் விசிறி வசதியுடன், பாதுகாக்கப்பட்ட குடி நீரும், தெரு விளக்கு வசதியும் உள்ளன.

### (ii) தொழிலாளர் நலம்.

தொழிலாளர் நல அலுவலரும், சுகாதார ஆய்வாளரும் குடி யிருப்புக்கு அடிக்கடி சென்று பணியாளர்களின் நலனைக் கவனிக் கின்றனர். இத்துறைப் பணியாளர்களின் தேவைகளை நிறைவு செய்ய, தண்டையார்பேட்டை, அச்சக குடியிருப்புப் பகுதி யிலேயே மேலும் வீடுகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

### (iii) மருத்துவ வசதி.

அரசு மைய அச்சகத்திலுள்ள மருந்தகத்தைச் சேர்ந்த மருத்துவ அலுவலர், வாரம் ஒரு முறை இயக்ககம், எழுது பொருள் கிடங்கு, உயர்நீதிமன்றக் கட்டிடக் கிளை அச்சகம், மற்றும் சூளை ஆணைக்காரன் தோட்டத்திலுள்ள கிளை அச்சகம் ஆகியவற்றிற்குச் சென்று பார்வையிடுகிறார். தொழி லாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் நாள்தோறும் இந்த மருந்தகத்தில் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன.

### (iv) பன், தேனீர், பால் ஆகியவற்றை இலவசமாக வழங்குதல்.

அரசு மைய அச்சகம், அதன் கிளை அச்சகங்கள் அனைத் திலும் பணிபுரியும் எல்லாப் பணியாளர்களுக்கும் இலவசமாக, பன், தேனீர் வழங்குவதற்குப் பதிலாக, தற்போது கூடுதலாக்கப் பட்ட வீதத்தில் மாதம் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ரூ. 10 வீதம் வழங்கப்படுகிறது. ஈயம் உருக்கும் பகுதியில் பணிபுரியும் பணி யாளர்களுக்குப் பணியின் போது ஏற்படும் இடர்பாட்டிலிருந்து பாதுகாப்பளிக்க, 250 மில்லி கிராம் பாலுக்குப் பதிலாக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு தற்போது கூடுதலாக்கப்பட்ட வீதத்தில் 60 காசுகள் வீதம் ரொக்கப்படியும் அத்துடன் இலவசமாக வைட்டமின் சத்துக்கள் அடங்கிய மாத்திரைகளும் வழங்கப் படுகின்றன.

(v) தொழிலாளர்கள் நல நிதி.

பணியாளர் நல நிதியிலிருந்து விளையாட்டுகள், நல நடவடிக் கைகள் ஆகியவற்றிற்குத் தொகை கேட்கப்படும் போதெல்லாம் வழங்கப்படுகிறது. மேலும் சுதந்திர தினம், ஆயுத பூஜை மற்றும் வானொலிப் பெட்டியின் உரிமத்தைப் புதுப்பித்தல் ஆகியவற்றிற்கும் இந்த நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது.

(vi) கூட்டுறவுச் சங்கம்.

சென்னை, மைய அச்சகத்தில் செயல்படும் தமிழ்நாடு அரசினர் எழுதுபொருள் அச்சுத்துறை கூட்டுறவுச் சங்கம் 1982ம் ஆண்டு, ஜூன் திங்கள் 30ஆம் நாளன்றுள்ளபடி 2,592 உறுப் பினர்களைக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் பங்கு மூலதனம் ரூ. 23.14 இலட்சமாகும். இச்சங்கம் 1981–82 ஆம் ஆண்டில் ரூ. 4.61 இலட்சம் நிகர லாபம் ஈட்டியது. உறுப்பினர்களுக்கு 12 சதவீத ஆதாயப் பங்குத் தொகையும் வழங்கப்பட்டது.

(vii) கூட்டுறவுப் பண்டகச் சாலை.

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறைக் கூட்டுறவுப் பண்டகசாலை, பங்கீட்டு ஏற்பாட்டின்கீழ் வரும் பொருட்கள் உட்பட, இன்றியமையாத பண்டங்களை நியாய விலையில் பணி யாளர்களுக்கு அளிப்பதன் மூலம், பயனுள்ள வகையில் பணியாற்றி வருகிறது. 1982 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளன் றுள்ளபடி இதன் உறுப்பினர் எண்ணிக்கை 1,518 ஆகும். பங்கு மூலதனம் ரூ. 62,380 ஆகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 200 என்ற உச்சவரம்புக்குட்பட்டு தொழிலாளர்கள் பொருட்களை கடனாக வாங்கிக் கொள்ளும் வசதியும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ் வாண்டில் உறுப்பினர்களுக்கு 9 சதவீதம் ஆதாயப் பங்குத் தொகை வழங்கப்பட்டது.

(viii) நல நிதி.

பணியாளர் ஒருவர் இறக்க நேரிட்டால், ஈமச் சடங்குகளுக் குரிய செலவிற்காக நல நிதியிலிருந்து ரூ. 100 வழங்கப்படு கிறது.

(ix) தொழில் பழகுவோர்.

1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தைச் செயல் படுத்துவதற்காக அரசு, வெவ்வேறு வகைத் தொழில்களின்கீழ் தொழில் பழகுவோர் நிரந்தரப் பதவிகள் 301-க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவர்களைத் தவிர, பட்டையதாரர்களுக்காக 45 பதவிகளுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாறு தொழில் பழகுபவர்கள் சென்னை நகரம் மற்றும் வெளியூர்களிலுள்ள அரசு அச்சகங்களுக்குப் பணிபுரிய அனுப்பப்படுகின்றனர்.



7. பொது:

7.1. இத்துறையின் மேலாளர்கள், குறிக்கோளின் அடிப் படையில், நிருவாக முறையை (Management by objectives) எட்டு ஆண்டுகளாக நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இம்முறையை பின்பற்றியதால் நல்ல பயன் கிட்டியுள்ளது. இதனால் மைய அச்சகத்தில் அச்சுத்துறையில் உற்பத்தி அதிகரித்ததன் மூலம் நல்ல பயன் தெரிகிறது. அச்சுத்துறைக்கு வரும் ஒவ்வொரு வேலையும் நன்கு பரிசீலிக்கப்பட்டு, முன்கூட்டியே திட்டமிடப் பட்டு அச்சிற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பெரும்பாலான வேலைகள் திட்டமிடப்பட்ட காலவரையறைக்குள் முடித்து அனுப்பப்பட்டுள்ளன.

7.2. சென்னை, வட்டாரத் தொழிலாளர் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் தொழிலாளர்–ஆசிரியர் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள தொழிலாளர்கள் அனுப்பப்படுவதன் மூலம் தொழி லாளர் கல்வித் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுகிறது. தொழிலாளர்–ஆசிரியருக்கும், தொழிலாளர்–பயிற்சியாளர்களுக் கும் ஒட்டு மொத்தத் தொகை வழங்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தின்போது அவர்கள் பணிக்கு வராதிருக்கும் காலம், ஊதியத்துடன் கூடிய பணி நாளாகக் கருதப்படுகிறது.

7.3. குடும்பங்களுக்குத் துணை வருவாய் கிடைப்பதற்காக, மகளிருக்கு உதவி புரியும் நலத்திட்டமாகப் புத்தகங்கள் கட்டுதல், மேலுறைகள் தயாரித்தல் ஆகிய பணிகள் சென்னை நகரிலும் மற்றும் வெளியூர்களிலுமுள்ள சமூக நல நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன.

7.4. கதர்–கிராமத் தொழில்களை மேம்படுத்துவதற்காக, கதர்–கிராமத் தொழில் பிரிவுகளிடமிருந்து ஈச்சம் பாய்கள், சோப்புகள் மற்றும் கதர் துணிகள் முதலியன கொள்முதல் செய்யப்படுகின்றன.

7.5. தொழிலாளர்களால் அமைக்கப்பட்ட சென்னை, அரசு அச்சகக் குழு (கவர்ன்மென்ட் பிரஸ் பார்ட்டி), அதன் உறுப் பினர்கள் இறக்க நேரிட்டால், அவர்களின் குடும்பத்திற்குத் தேவையான அவசர உதவிகளைத் தொடர்ந்து செய்து வரு கிறது. இக்குழுவில் 31–12–1982 ஆம் நாளன்றுள்ளபடி 3,372 உறுப்பினர்கள் உள்ளனர்.

இக்குழு, 1-4-1982 முதல் 31–12–1982 முடிய இறந்த தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.59,274 வழங்கியுள்ளது.

7.6. 1982 ஆம் ஆண்டில் இத்துறையின் வெவ்வேறு பகுதி யிலும் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் உடல் ஊனமுற்றோரை

அதிக அளவில் பணியில் அமர்த்தியமைக்காகக் கிடைத்த பரிசுகளின் விவரங்கள் வருமாறு:—

1. தொழுநோயிலிருந்து குணமடைந்தவர்களுக்கு வேலை வாய்ப்பளித்ததற்காக சென்னையில் 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ஆம் நாள் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற விழாவில் ஒரு 'நிம்ப்கார் பரிசு' வழங்கப்பட்டது.

2. திட்டம் I-ல், 1980 ஆம் ஆண்டிற்கான மாநில பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசும், சுழற் கேடயமும் மற்றும் சான்றிதழும் 1982-ல் சென்னை, மத்திய அச்சகத்திற்கு வழங்கப்பட்டது.

3. திட்டம் II-ல், 1982 ஆம் ஆண்டில் மாநிலப் பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசாக ரொக்கம் ரூ.1,000-மும் சுழற் கோப்பையும், சான்றிதழும் சென்னை மத்திய அச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

4. திட்டம் III-ல், 1982ம் ஆண்டில், மாநிலப் பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசாக ரொக்கம் ரூ.1,000-மும், சான்றிதழும் சென்னை மத்திய அச்சகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

5. 1982 ஆம் ஆண்டில் கூளை ஆணைக்காரன் தோட்டக் கிளை அச்சகத்திற்கு மாநிலப் பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசாக மூன்றாவது பரிசு கிடைத்துள்ளது.

6. 1982 ஆம் ஆண்டில் சென்னை உயர்நீதிமன்ற அரசுக் கிளை அச்சகத்திற்கு பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசாக ரொக்கம் ரூ.500 கிடைத்துள்ளது.

7. 1982 ஆம் ஆண்டில், மாநிலப் பாதுகாப்புப் பராமரிப்புப் பரிசாக, திருச்சி அரசு வட்டார அச்சகத்திற்கு (2-வது மற்றும் 3-வது பரிசுகள்) இரண்டு பரிசுகள் கிடைத்துள்ளன.

7.7. எழுது பொருள் அச்சுத்துறையின் நிருவாகத்திற்கும் அதன் பணியாளர்களுக்கும் இடையே எப்போதுமே நல்லுறவு இருந்து வந்துள்ளது. எழுது பொருள் அச்சுத்துறை இயக்குநர், பணியாளர்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைப் போக்குவதற்கென நேரத்தை ஒதுக்குகிறார். மாநகரிலும், வெளியூர்களிலுமுள்ள மைய அச்சகத்திலும், கிளை அச்சகங்களிலும் நிலவும் சூழ்நிலை துறையின் சுமுகமான செயல்பாட்டிற்கு மிகவும் ஏற்றதாக உள்ளது. அச்சகம் மேற்கொண்ட அச்சிடும் பணிகள் சிறப்பாக முடிக்கப்பட்டு உரிய காலத்திற்குள் வழங்கப்பட்டன. இது போற்றத்தக்கு சாதனையாகும். தொழிலாளர்களை அதிக அளவில் வேலைக்கு அமர்த்தியுள்ள இத்துறையில் எப்போதுமே தொழில் அமைதி நிலவி வருகிறது. தொழிலாளர்கள் நல்கிய ஒத்துழைப்பு பாராட்டுதற்குரியது.



**ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நலத்துறை.**

**1983-84ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.**

இணைப்பு 1.

| தொடர் எண்ணும், திட்டத்தின் விவரங்களும். | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பங்கிட்டுக்கொண்ட மாநிலத் திட்டங்கள். | | திட்டத்தில் சேராதவை. | | | | மொத்தம். (ரூபாய்ஆயிரத்தில்.) | | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆதி திராவிடர்கள். | பழங் குடியினர். | ஆதி திராவிடர்கள். | பழங் குடியினர். | ஆதி திராவிடர்கள். | பழங் குடியினர். | ஆதி திராவிடர்கள். | பழங் குடியினர். | |
| | 57,616 | 248 | 2,10,787 | 14,152 | 1,54,961 | 8,335 | 4,23,364 | 2 2,735 | 4,46,[illegible] |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| கல்வி— | | | | | | | | | |
| 1 படிப்புதவித் தொகை. | 26,844<br>220 | 122 | 4,808<br>103<br>6,000<br>101(க) | 68<br>100(க) | 11,975<br>17,169 | 96<br>179 | 67,320 | 465 | 67,785 |
| 2 பள்ளிகள் .. .. | — | — | 4,972 | 1,207 | 42,977 | 3,609 | 47,049 | 4,816 | 51,865 |
| 3 முதலமைச்சரின் நண்பகல் சத்துணவுத் திட்டம் .. .. | — | — | 700 | .. | 150<br>7,832 | .. | 8,682 | .. | 8,682 |
| 4 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல்—பழுது பார்த்தல் | 10,000<br>(மூ) | 1<br>(மூ) | 21.46<br>10,000<br>(மூ) | 576 | 911 | 182 | 13,087 | 750 | 13,816 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 சீருடைகள் .. | .. | .. | 2,991 | 28 | 7,830 | 376 | 10,821 | 404 | 11,221 |
| 6 சாரணப் பயிற்றுநர்—சாரண சாரணிய ருக்குச் சீருடை வழங்கல். | .. | .. | 118 | 10 | .. | .. | 118 | 10 | 128 |
| 7 பாடப் புத்தகங்கள் நோட்டுபுத்தகங்கள் எழுது பலகைகள் வழங்குதல், பள்ளி களுக்கு சாதனங்கள் வழங்குதல். | .. | .. | 3,207 | 240 | .. | .. | 3,207 | 240 | 3,447 |
| 8 ஆசிரியர்களுக்கு இல்லங்கள். | .. | .. | 200 | 200 | 29 | 15 | 229 | 215 | 444 |
| 9 கல்வி சுற்றுலா .. | .. | .. | 29 | 8 | .. | .. | 29 | 8 | 37 |
| 10 பரிசுப் பொருட்கள். | .. | .. | .. | .. | 65 | .. | 65 | .. | 65 |
| 11 மாணவர் இல்லங்கள் பராமரிப்பு செலவு கள். | .. | .. | 4,354 | 144 | 41,150 | 3,465 | 45,504 | 3,609 | 49,113 |
| **12 மாணவர் இல்லங் களுக்கு கட்டிடங் கள் கட்டுதலும் பராமரித்தலும். | 10,000 (மு) | .. | 13,500 (மு) | 500 (மு) | 297 | 13 | 23,797 | 513 | 24,310 |
| 13 பகுதிநேர சிற்றாசிரியர் கள். | .. | .. | .. | .. | 133 | 9 | 133 | 9 | 142 |
| 14 உணவு மானியம் .. | .. | .. | .. | .. | 1,033 5 | 85 | 1,038 | 85 | 1,123 |
| 15 ஆதி திராவிடர் பழங் குடியினர் மாணவர் களுக்கு தகுதியின் அடிப்படையில் வழங்கப்படும் மானியம். | .. | .. | 1,445 | .. | .. | .. | 1,445 | .. | 1,445 |
| 16 தேர்வுமுன் பயிற்சி நிலையங்கள் | 550** | .. | . | .. | 252 | .. | 672 | .. | 672 |
| 17 கல்வி நிலையங்கள் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு இழப்பீட்டுத் தொகை. | .. | .. | .. | .. | .. | 252 | 252 | .. | 252 |
| 18 கல்லூரி மாணவர் களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல். | .. | .. | 100 | .. | .. | .. | 100 | .. | 100 |
| 19 திறமையான மாணவர் களுக்கு படிப்புதவித் தொகை (பயிற்சி நிலையங்கள்). | .. | .. | .. | .. | 320 | .. | 320 | .. | 320 |
| 20 பட்டயக் கணக்கர் தேர்வுகள். | .. | .. | .. | .. | 10 | .. | 10 | .. | 10 |
| 21 தட்டச்சு சுருக் கெழுத்து பயிற்சி. | .. | | 305 47* | .. | .. | .. | 352 | .. | 352 |
| 22 திறமையான மாணவ மாணவிகளுக்குத் தனிப்பயிற்சி. | .. | .. | .. | .. | 25 | .. | 25 | .. | 25 |
| 23 சிறார் நல மையங்கள் ஏற்படுத்துதல். | .. | .. | 577 | .. | .. | 577 | .. | .. | 577 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24 ஆதிதிராவிடா பழங்குடியினர் நலத் துறையைச் சேர்ந்த கல்விப் பிரிவில் கூடுதல் பணியாளர்கள் நியமித்தல். | .. | .. | 630 | .. | . | .. | 630 | .. | 630 |
| 25 தொழிற் பயிற்சி நிறுவனங்களில் தொழிற்பயிற்சி பெறும் ஆதிதிராவிடர் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித்தொகை. | .. | .. | 259 | .. | 1,003 | .. | 1,262 | .. | 1,262 |
| மொத்தம்—கல்வி .. | 37,614 | 122 | 55,814 | 2,982 | 1,33,266 | 6,029 | 2,26,694 | 11,133 | 2,37,827 |
| II. வேலை வாய்ப்பு பொருளாதார முன்னேற்றம். | | | | | | | | | |
| 26 வேளாண்மை .. | .. | .. | 597<br>95* | 149 | .. | .. | 692 | 149 | 841 |
| 27 கூட்டுறவு .. .. | .. | 52** | 1 | .. | .. | .. | 1 | 52 | 53 |
| 28 பால்வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள். | - | 1,583<br>200* | .. | .. | .. | .. | 1,783 | .. | 1,783 |
| 29 குடிசைத் தொழில்கள். | .. | .. | 104<br>1 | .. | 251 | 35 | 356 | 35 | 391 |
| 30 பயிற்சி உற்பத்தி நிலையங்கள். | .. | .. | .. | 50 | .. | .. | .. | 50 | 50 |
| 1 தொழில் நுட்பப் பயிற்சி பெற்றோருக்கு உதவித் தொகை. | .. | .. | 800<br>70* | 70 | .. | .. | 870 | 70 | 940 |
| 2 பயிற்சி வேலை வாய்ப்புப் பிரிவு | .. | .. | 50 | .. | .. | .. | 2 | .. | 2 |
| 3 சிறுவணிகக் கடன் | .. | 1,000<br>100(மு) | 1*(க) | .. | .. | .. | 1,100 | 50 | 1 150 |
| 4 அலுவலகத் தேர்வுகளில் வெற்றி பெற சிறப்பு பயிற்சி அளித்தல். | .. | 1*<br>1 | .. | .. | .. | .. | 2 | .. | 2 |
| 5 முப்படைகளில் கமிஷன் பதவி தரத்தில் நியமிக்கப் பெற ஆதிதிராவிடர் பழங்குடியினருக்கும் தனிப பயிற்சி அளித்தல். | .. | .. | .. | .. | 2 | .1 | 2 | .. | 2 |
| 6 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மகளிர்க்கு வானொலி தொலைக் காட்சி பெட்டிகளை பழுது பார்ப்பதில் பயிற்சி அளிக்கும் திட்டம். | .. | .. | 27 | .. | .. | .. | 27 | .. | 27 |
| 7 தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு பங்கு மூலதன முதலீடு. | 20,000<br>(மு) | .. | .. | . | .. | . | 20,000 | .. | 20,000 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வட்டாரங்களில் ஆதிதிராவிடர்களுக்கு நலம் பயக்கும் தனித் திட்டங்கள் (ஆதிதிராவிடர்களுக்கான தனித் துணைத் திட்டத்திற்கு சிறப்பு மத்திய உதவி. | .. | .. | 1,10,000 | .. | .. | .. | 1,10,000 | .. | 1,10,000 |
| மொத்தம் II வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும். | 20,000 | 52 | 1,14,562 | 319 | 253 | 35 | 1,34,835 | 406 | 1,35,241 |
| III. சுகாதாரம், வீட்டு வசதி முதலிய திட்டங்கள்— | | | | | | | | | |
| வீட்டு வசதிகள் .. | .. | .. | 20,000 | .. | 200 | .. | 20,000 | 200 | 20,200 |
| வீட்டு மனைகள் .. | .. | .. | 200(எ) 105 12,500 | .. | .. | .. | 12,805 | .. | 12,805 |
| பொது சுகாதாரம் .. | .. | .. | 3,775 | .. | .. | .. | 3,775 | .. | 3,775 |
| குடிநீர்க் கிணறுகள் | .. | .. | 2,498 | 275 | .. | .. | 2,637 | 275 | 2,612 |
| மருத்துவம் .. | .. | .. | 139 | 88 | 152 | 271 | 152 | 296 | 448 |
| மின் வசதி .. .. | .. | .. | 1 | 1 | 1 | .. | 2 | 1 | 3 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 45 சாலைகள் .. .. | .. | .. | .. | 110 | .. | .. | .. | 110 | 110 |
| 46 விளம்பரம் (ஆதிதிராவிடர் வார விழா). | .. | .. | .. | — | 33 | — | 34 | .. | 34 |
| 47 தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களுக்குப் பரிசுகள். | .. | .. | .. | — | 23 | — | 23 | — | 23 |
| 48 துப்புரவாக வைத்திருக்கும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குப் பரிசு. | .. | .. | .. | .. | 63 | .. | 63 | .. | 63 |
| 49 ஆதிதிராவிடர் குடிசை வாழ் மக்கள் மற்றும் குடியிருப்புகளுக்கு தொலைக் காட்சி பெட்டி வழங்குதல். | .. | .. | .. | . | .. | .. | 1 | .. | 1 |
| 50 சமுதாய நிலையங்கள். | .. | .. | .. | .. | 446 | .. | 446 | .. | 446 |
| 51 சமுதாயக் கூடங்கள் .. | .. | .. | 150 | .. | .. | .. | 150 | .. | 150 |
| 52 கலப்புத் திருமணங்கள். | .. | .. | 1,000 | .. | .. | .. | 1,000 | .. | 1,000 |
| 53 தமிழ்நாடு பழங்குடியினர் மேம்பாட்டு அதிகார மன்றம். | .. | .. | .. | 5 | .. | .. | .. | 5 | 5 |
| 54 துணிவெளுக்கும் துறைகள் கட்டுதல். | .. | .. | 10 10(a) | .. | .. | .. | 20 | .. | 20 20 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 55 துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதலும் துப்புரவாளர்கள், சுத்தித் தொழிலாளர்கள் பணியை மேம்படுத்துதலும். | .. | .. | 2 | .. | .. | .. | 2 | .. | 2 |
| 56 பழங்குடியினர் ஆராய்ச்சி நிலையம் நிறுவுதல். | .. | 74** | .. | .. | .. | .. | .. | 74 | 74 |
| 57 ஈமக் கடன்கள் செய்வதற்காக தொகை அளித்தல். | .. | — | .. | .. | 5,293 | .. | 5,293 | .. | 5,293 |
| 58 ஆதிதிராவிடர்—பழங்குடியினர் நல இயக்கத்தில் கண்காணிப்புப் பிரிவு. | .. | .. | 1 | .. | — | — | 1 | .. | 1 |
| மொத்தம்—III. சுகாதாரம், வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 2 | 74 | 40,391 | 616 | 6,011 | 271 | 46,404 | 961 | 47,365 |
| | | .. | .. | | | — | | .. | |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| IV. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்— | | | | | | | | | |
| 59 பழங்குடியினர் மேம்பாட்டுக்கான துணைத் திட்டம், குறித்து முன்னோடி நடவடிக்கைக்காக ஒருங்கிணைப்பு மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கான வல்லுநர் குழு. | .. | .. | .. | 39 | .. | .. | .. | 39 | 39 |
| 60 பழங்குடியினர் தங்கி பயிலும் வசதியுடன் கூடிய பள்ளிகளைத் திறத்தலும் பராமரித்தலும். | .. | .. | .. | 4,081 | .. | .. | .. | 4,081 | 4,081 |
| 61 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் நீர் வழங்கல் திட்டம். | .. | .. | .. | 2,500 | .. | .. | .. | 2,500 | 2,500 |
| 62 பழங்குடியினர் கிராமங்களுக்கு மின் வசதி திட்டம். | .. | .. | .. | 1,650 | .. | .. | .. | 1,650 | 1,650 |
| 63 பழங்குடியினர் பகுதி துணைத் திட்டத்தின் கீழ் சிறு பாசனத் திட்டம். | .. | .. | .. | 1,300 | .. | .. | .. | 1,300 | 1,300 |
| 64 கல்ராயன் மலைக்கான நிருவாக அமைப்பை ஏற்படுத்துதல். | .. | .. | .. | 245 | .. | .. | .. | 245 | 245 |
| 65 பழங்குடியினர் ஆராய்ச்சி—வளர்ச்சி. | .. | .. | .. | 245 | .. | .. | .. | 245 | 245 |
| 66 தொன்மைப் பழங்குடியினர் மேம்பாடு. | .. | .. | .. | 117 | .. | .. | .. | 117 | 117 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 67 பரவலாக வாழும் பழங்குடியினர் தொகுதிகள். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 68 ஒருங்கிணைந்த பழங்குடியினர் வளர்ச்சித் திட்டத்தின் பகுதிகளில் பழங்குடியினருக்கு இல்லம் கட்டுதல். | .. | .. | .. | 150 | .. | .. | .. | 150 | 150 |
| 69 மகப்பேறு—குழந்தைகள் நல நிலையங்களை அமைத்தல். | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| மொத்தம் IV—பழங் குடியினர் பகுதி துணைத் திட்டம். | .. | .. | .. | 10,209 | .. | .. | .. | 10,209 | 10,209 |
| V. கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டம்— | | | | | | | | | |
| 70 கொத்தடிமைகள் புதுவாழ்வு | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 71 விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளுக்கு வீட்டுவசதிக்கான உதவி. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | 1 |
| 72 கொத்தடிமைகளுக்கான நிலக் குடியேற்றத் திட்டங்கள். | .. | .. | .. | 24 | .. | .. | .. | 24 | 24 |
| மொத்தம் V—கொத்தடிமைகள் புதுவாழ்வுத் திட்டம். | .. | .. | .. | 26 | .. | .. | .. | 26 | 26 |
| VI. நெறிப்படுத்தலும் நிர்வாகமும்— | | | | | | | | | |
| 73 தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள் | .. .. | .. .. | .. .. | 2 (சா) 15,429 | .. | 15,431 | .. | 15,431 | .. |
| மொத்தம் VI—நெறிப்படுத்தலும், நிர்வாகமும். | .. | .. | .. | 15,431 | .. | 15,431 | .. | 15,431 | .. |

(ரூபாய் ஆயிரத்தில்)

| (1) | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள். / மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள். ஆதி திராவிடர். | பழங்குடியினர். | மாநிலத் திட்டங்கள். ஆதி திராவிடர். | பழங்குடியினர். | திட்டத்தில் சேராதவை. ஆதி திராவிடர். | பழங்குடியினர். | மொத்தம். ஆதி திராவிடர். | பழங்குடியினர். | பெரு மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| ச. கல்வி .. .. .. | 37,614 | 122 | 55,814 | 2,982 | 1,33,266 | 8,029 | 2,26,694 | 11,133 | 2,37,827 |
| சச. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு. | 20,000 | 52 | 1,14,582 | 319 | 253 | 35 | 1,34,835 | 406 | 1,35,241 |
| சசச. சுகாதாரம் வீட்டு வசதி ஏனைய திட்டங்கள். | 2 | 74 | 40,391 | 616 | 6,011 | 271 | 46,404 | 961 | 47,365 |
| சந. பழங்குடியினர் பகுதி துணைத் திட்டங்கள். | .. | .. | .. | 10,209 | .. | .. | .. | 10,209 | 10,209 |
| ந. கொத்தடிமைகள் புதுவாழ்வு திட்டம். | .. | .. | .. | 26 | .. | .. | .. | 26 | 26 |
| நச. நெறிப்படுத்தலும்-நிர்வாகமும் தலைமையிடம் மற்றும் மாவட்ட பணியாளர்கள். | .. | .. | .. | 15,431 | .. | 15,431 | .. | .. | 15,431 |
| மொத்த வருவாய் சாட்டியது .. | .. | .. | 200 | .. | 2 | .. | 202 | .. | 202 |
| அனுமதித்தது .. .. | 27,616 | 248 | 1,79,876 | 13,601 | 1,54,859 | 8,335 | 3,62,351 | 22,184 | 3,84,535 |
| மூலதனம் .. .. .. | 30,000 | .. | 23,500 | 501 | .. | .. | 53,500 | 501 | 54,001 |
| கடன்களும் முன் பணங்களும் .. | .. | .. | 7,211 | 50 | 100 | .. | 7,311 | 50 | 7,361 |
| பெரு மொத்தம் .. | 57,616 | 248 | 2,10,787 | 14,162 | 1,54,961 | 8,335 | 4,23,364 | 22,735 | 4,46,099 |

இந்து மதத்திற்கு மாறிய ஆதி திராவிடர்கள்.
*மத்திய மாநில அரசுகள் சம அளவில் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள்.
சாட்டியது.
மூலதனம்.
கடன்களும் முன்பணங்களும்.

இணைப்பு II.

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | ஓராசிரியர் பள்ளிகள் உட்பட பள்ளிகளின் எண்ணிக்கை. | தொடக்கப் பள்ளிகள். | | | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | நடுநிலைப் பள்ளிகள். | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம் | | மாணவர்கள். | மாணவிகள். | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 8 | 2,749 | 2,331 | 5,080 | 1 | .. | 205 | 205 |
| 2 செங்கல்பட்டு .. | 103 | 11,100 | 10,302 | 21,402 | 20 | 2,904 | 2,806 | 5,710 |
| 3 வட ஆற்காடு .. | 156 | 13,201 | 12,360 | 25,561 | 3 | 720 | 718 | 1,438 |
| 4 தென் ஆற்காடு .. | 180 | 14,136 | 12,800 | 26,936 | 5 | 900 | 539 | 1,439 |
| 5 தஞ்சாவூர் .. | 154 | 9,560 | 9,004 | 18,564 | 6 | 812 | 637 | 1,449 |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 118 | 10,150 | 8,870 | 19,020 | 18 | 4,110 | 3,523 | 7,633 |
| 7 மதுரை .. .. | 20 | 1,154 | 1,105 | 2,259 | 7 | 1,150 | 1,013 | 2,163 |
| 8 இராமநாதபுரம் | 23 | 1,540 | 1,360 | 2,900 | 3 | 372 | 180 | 552 |
| 9 திருநெல்வேலி .. | 21 | 1,345 | 1,245 | 2,590 | .. | .. | .. | .. |
| 10 கன்னியாகுமரி .. | 4 | 222 | 220 | 442 | .. | .. | .. | .. |
| 11 சேலம் .. .. | 12 | 910 | 708 | 1,618 | 2 | 474 | 244 | 718 |
| 12 தருமபுரி .. .. | 8 | 363 | 365 | 728 | 1 | 390 | 285 | 75 |
| 13 கோயம்புத்தூர் .. | 10 | 1,039 | 847 | 1,886 | 2 | 249 | 240 | 40 |
| 14 நீலகிரி .. .. | 4 | 153 | 150 | 303 | 2 | 210 | 158 | 368 |
| 15 புதுக்கோட்டை .. | 9 | 501 | 303 | 804 | 1 | 259 | 185 | 435 |
| 16 பெரியார் .. | 4 | 188 | 198 | 386 | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 242 | 68,311 | 62,168 | 1,30,479 | 71 | 12,541 | 10,733 | 23,274 |

இணைப்பு II—தொடர்ச்சி.

ஆதி திராவிடர் நல பள்ளிகளின் எண்ணிக்கையும் மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | உயர்நிலைப் பள்ளிகள். மாணவர். | உயர்நிலைப் பள்ளிகள். மாணவியர். | உயர்நிலைப் பள்ளிகள். மொத்தம். | மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கை. | மேல் நிலைப் பள்ளிகள். மாணவர்கள். | மேல் நிலைப் பள்ளிகள். மாணவியர். | மேல் நிலைப் பள்ளிகள். மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | .. | .. | .. | .. | 1 | 1,675 | 1,295 | 2,970 |
| 2 செங்கல்பட்டு .. | 6 | 2,814 | 1,950 | 4,764 | 1 | 1,280 | 811 | 2,091 |
| 3 வட ஆற்காடு .. | 1 | 180 | 95 | 275 | 1 | 850 | 639 | 1,489 |
| 4 தென் ஆற்காடு .. | 5 | 780 | 570 | 1,650 | 3 | 3,176 | 1,694 | 4,870 |
| 5 தஞ்சாவூர் .. | 3 | 490 | 292 | 782 | .. | .. | — | — |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 7 | 1,750 | 950 | 2,700 | 1 | 800 | 550 | 1,350 |
| 7 மதுரை .. .. | 1 | 150 | 98 | 248 | .. | .. | .. | .. |
| 8 இராமநாதபுரம் .. | 1 | 200 | .. | 200 | .. | .. | .. | .. |
| 9 திருநெல்வேலி .. | .. | .. | .. | .. | 1 | 394 | 263 | 657 |
| 10 கன்னியாகுமரி .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11 சேலம் .. .. | 1 | 190 | 85 | 275 | .. | .. | .. | .. |
| 12 தர்மபுரி .. | 1 | 140 | 79 | 219 | .. | .. | .. | .. |
| 13 கோயம்புத்தூர் .. | .. | .. | .. | .. | .. | — | .. | .. |
| 14 நீலகிரி .. .. | .. | .. | .. | .. | .. | — | — | — |
| 15 புதுக்கோட்டை .. | .. | — | .. | .. | .. | .. | .. | .. |
| 6 பெரியார் .. | .. | .. | .. | .. | .. | — | .. | .. |
| மொத்தம் .. | 26 | 6,694 | 4,119 | 10,813 | 8 | 8,175 | 5,262 | 13,427 |

ஆதி திராவிடர் நலப் பள்ளிகளின் எண்ணிக்கையும், மாணவ மாணவியரின் மொத்த எண்ணிக்கையும்—தொடர்ச்சி

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை. | மாணவர். | மாணவியர். | மொத்தம். | வாடகைக் கட்டிடங்களில் செயல்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. | அரசு கட்டிடங்களில் செயல்படும் பள்ளிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 சென்னை .. .. .. | 10 | 4,424 | 3,831 | 18,255 | .. | 10 |
| 2 செங்கல்பட்டு .. .. | 130 | 18,098 | 15,869 | 33,967 | 8 | 122 |
| 3 வட ஆற்காடு .. .. | 161 | 14,951 | 13,812 | 28,763 | 14 | 147 |
| 4 தென் ஆற்காடு .. .. | 193 | 18,992 | 15,603 | 34,595 | 2 | 191 |
| 5 தஞ்சாவூர் .. .. .. | 163 | 10,862 | 9,933 | 20,795 | 89 | 124 |
| 6 திருச்சிராப்பள்ளி .. .. | 144 | 16,810 | 13,893 | 30,703 | 42 | 102 |
| 7 மதுரை .. .. .. | 28 | 2,454 | 2,216 | 4,670 | 1 | 27 |
| 8 இராமநாதபுரம் .. .. | 27 | 2,112 | 1,540 | 3,652 | .. | 27 |
| 9 திருநெல்வேலி .. .. | 22 | 1,739 | 1,508 | 3,247 | .. | 22 |
| 10 கன்னியாகுமரி .. .. | 4 | 222 | 220 | 442 | 1 | 3 |
| 11 சேலம் .. .. .. | 15 | 1,574 | 1,037 | 2,611 | 1 | 14 |
| 12 தர்மபுரி .. .. .. | 10 | 893 | 729 | 1,622 | .. | 10 |
| 13 கோயம்புத்தூர் .. .. | 20 | 1,288 | 1,087 | 2,375 | 2 | 18 |
| 14 நீலகிரி .. .. .. | 6 | 363 | 308 | 671 | 2 | 4 |
| 15 புதுக்கோட்டை .. .. | 10 | 751 | 488 | 1,239 | 1 | 9 |
| 16 பெரியார் .. .. .. | 4 | 188 | 198 | 386 | .. | 4 |
| மொத்தம் .. | 947 | 95,721 | 82,272 | 1,77,993 | 113 | 834 |

## இணைப்பு III.

பழங்குடியினர் பயிலும் பள்ளிகள் பற்றிய விவரங்கள் (பழங் குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பகுதிகளின் கீழ்வரும் பள்ளிகளும் ஒருங்கிணையாத வளர்ச்சித் திட்டப் பகுதிகளின் கீழ்வரும் பள்ளிகளும் உட்பட.)

| மாவட்டம். | தொடக்கப் பள்ளிகள். | | | | | | தங்கிப் பயிலும் பள்ளிகள். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பழங்குடியினரின் ஒருங்கிணையாத வளர்ச்சித் திட்டப் பகுதியின் கீழ் வருபவை. | | பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பகுதியின் கீழ் வருபவை. | | மொத்தம். | | நடுநிலைப் பள்ளிகள். | |
| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 1 | 50 | .. | .. | 1 | 50 | .. | .. |
| 2 வட ஆற்காடு .. | 1 | 50 | 6 | 300 | 7 | 350 | .. | .. |
| 3 தென் ஆற்காடு .. | 4 | 250 | 17 | 850 | 21 | 1,100 | .. | .. |
| 4 தர்மபுரி .. | 1 | 100 | 9 | 450 | 10 | 550 | .. | .. |
| 5 சேலம் .. | 9 | 526 | 18 | 900 | 27 | 1,426 | 2 | 245 |
| 6 நீலகிரி .. | 16 | 990 | .. | .. | 16 | 990 | 6 | 595 |
| 7 கோயம்புத்தூர் | 10 | 480 | .. | .. | 10 | 480 | 2 | 172 |
| 8 பெரியார் .. | 5 | 265 | .. | .. | 5 | 265 | 1 | 100 |
| 9 திருச்சிராப்பள்ளி | 10 | 440 | 6 | 285 | 16 | 725 | .. | .. |
| 10 இராமநாதபுரம் | 1 | 11 | .. | .. | 1 | 11 | .. | .. |
| 11 மதுரை .. | 2 | 68 | .. | .. | 2 | 68 | 1 | 60 |
| 12 திருநெல்வேலி | 1 | 66 | .. | .. | 1 | 66 | .. | .. |
| 13 கன்னியாகுமரி .. | 1 | 105 | .. | .. | 1 | 105 | .. | .. |
| மொத்தம் .. | 62 | 3,401 | 56 | 2,785 | 118 | 6,186 | 12 | 1,172 |

இணைப்பு III—தொடர்ச்சி.

| மாவட்டம். | தங்கிப் பயிலும் உயர் நிலைப் பள்ளிகள். | | தங்கிப் பயிலும் மேல் நிலைப் பள்ளிகள். | | தங்கிப் பயிலும் வசதியில்லாத பள்ளிகள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | பள்ளிகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. |
| (1) | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 சென்னை .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 50 |
| 2 வட ஆற்காடு .. | 1 | 100 | .. | .. | .. | .. | 8 | 450 |
| 3 தென் ஆற்காடு .. | 1 | 400 | .. | .. | .. | .. | 22 | 1,800 |
| 4 தர்மபுரி .. | .. | .. | .. | .. | .. | .. | 10 | 550 |
| 5 சேலம் .. | 1 | 225 | 3 | 270 | .. | .. | 32 | 2,166 |
| 6 நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | 22 | 1,565 |
| 7 கோயம்பத்தூர் .. | .. | .. | .. | .. | .. | .. | 12 | 652 |
| 8 பெரியார் .. | .. | .. | .. | .. | .. | .. | 6 | 365 |
| 9 திருச்சிராப்பள்ளி | .. | .. | .. | .. | .. | .. | 1 | 725 |
| 10 இராமநாதபுரம் | .. | .. | .. | .. | .. | .. | 1 | 11 |
| 11 மதுரை .. | .. | .. | .. | .. | 1 | 84 | 4 | 212 |
| 12 திருநெல்வேலி | .. | .. | .. | .. | .. | .. | 1 | 66 |
| 13 கன்னியாகுமரி .. | 1 | 115 | 1 | 130 | .. | .. | 3 | 350 |
| மொத்தம் .. | 4 | 840 | 3 | 400 | 1 | 84 | 138 | 8,682 |

## இணைப்பு—IV.

ஆதி திராவிடர்களுக்குரிய அரசு மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் 1982–83.

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவர் — இல்லங்களின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவர் — மாணவர்களின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவியர். — இல்லங்களின் எண்ணிக்கை. | கல்லூரி மாணவர் இல்லங்கள். மாணவியர். — மாணவியர்களின் எண்ணிக்கை. | தொழிற்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர். — இல்லங்களின் எண்ணிக்கை. | தொழிற்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர். — மாணவர்களின் எண்ணிக்கை. | உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர். — இல்லங்களின் எண்ணிக்கை. | உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவர். — மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| சென்னை .. | 4 | 900 | 1 | 30 | 1 | 200 | 3 | 280 |
| 2 செங்கற்பட்டு .. | 2 | 80 | .. | .. | .. | .. | 40 | 2,062 |
| 3 வட ஆற்காடு .. | 3 | 150 | .. | .. | .. | .. | 29 | 1,561 |
| 4 தென் ஆற்காடு .. | 3 | 190 | 1 | 50 | .. | .. | 47 | 4,533 |
| 5 தஞ்சாவூர் .. | 3 | 225 | 1 | 50 | .. | .. | 39 | 1 993 |
| 6 திருச்சிராப்பள்ளி | 3 | 225 | .. | .. | 1 | 55 | 42 | 3,674 |
| 7 புதுக்கோட்டை | 1 | 200 | 1 | 75 | .. | .. | 17 | 974 |
| 8 மதுரை .. | 2 | 100 | | 75 | . | 118 | 46 | 3,041 |
| 9 இராமநாதபுரம் | 1 | 50 | . | .. | .. | .. | 56 | 3,799 |
| 10 திருநெல்வேலி | 2 | 80 | 1 | 50 | .. | . | 40 | 2,192 |
| 11 கன்னியாகுமரி .. | 1 | 107 | 1 | 50 | 1 | 40 | 5 | 265 |
| 12 சேலம் .. | 2 | 210 | 1 | 75 | .. | .. | 37 | 1,679 |
| 13 தர்மபுரி .. | 2 | 502 | .. | .. | .. | .. | 19 | 790 |
| 14 கோயம்புத்தூர் .. | 1 | 50 | .. | .. | 1 | 40 | 11 | 737 |
| 15 பெரியார் | 1 | 50 | .. | .. | .. | .. | 9 | 507 |
| 16 நீலகிரி .. | .. | .. | .. | .. | .. | .. | 9 | 520 |
| மொத்தம் .. | 31 | 3,119 | 8 | 455 | 6 | 453 | 448 | 28,608 |

## இணைப்பு—IV.

ஆதி திராவிடர்களுக்குரிய அரசு மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் 1982—83

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | உயர்நிலைப்பள்ளி மாணவர் இல்லங்கள். மாணவியர். இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | மொத்த மாணவர். இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர் எண்ணிக்கை. | மொத்த மாணவியர். இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | பெரு மொத்தம். இல்லங்களின் எண்ணிக்கை. | மொத்த மாணவ மாணவியரின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (10) | (11) | (12) | (13) | (14) | (15) | (16) | (17) |
| 1 சென்னை .. | 3 | 315 | 7 | 1,380 | 4 | 345 | 11 | 1,725 |
| 2 செங்கற்பட்டு .. | 13 | 497 | 42 | 2,142 | 13 | 497 | 55 | 2,639 |
| 3 வடஆற்காடு .. | 14 | 682 | 32 | 1,711 | 14 | 682 | 46 | 2,393 |
| 4 தென்ஆற்காடு .. | 15 | 1,362 | 50 | 4,723 | 16 | 1,412 | 66 | 6,135 |
| 5 தஞ்சாவூர் .. | 15 | 746 | 42 | 2,218 | 16 | 795 | 58 | 3,013 |
| 6 திருச்சிராப்பள்ளி | 14 | 991 | 46 | 3,954 | 14 | 991 | 60 | 4,945 |
| 7 புதுக்கோட்டை | 5 | 217 | 18 | 1,174 | 6 | 292 | 24 | 1,466 |
| 8 மதுரை .. .. | 22 | 1,496 | 50 | 3,259 | 23 | 1,571 | 73 | 4,830 |
| 9 இராமநாதபுரம் .. | 16 | 946 | 57 | 3,849 | 16 | 946 | 73 | 4,795 |
| 10 திருநெல்வேலி | 25 | 1,105 | 42 | 2,273 | 26 | 1,155 | 68 | 3,428 |
| 11 கன்னியாகுமரி .. | 4 | 165 | 7 | 412 | 5 | 215 | 12 | 627 |
| 12 சேலம் .. .. | 13 | 626 | 39 | 1,889 | 14 | 701 | 53 | 2,590 |
| 13 தர்மபுரி .. .. | 6 | 240 | 21 | 1,292 | 6 | 240 | 2 | 1,532 |
| 14 கோயம்புத்தூர் .. | 7 | 431 | 13 | 827 | 7 | 431 | 20 | 1,258 |
| 15 பெரியார் .. | 6 | 250 | 10 | 557 | 6 | 250 | 16 | 807 |
| 16 நீலகிரி .. .. | 4 | 275 | 9 | 520 | 4 | 275 | 13 | 795 |
| மொத்தம் .. | 182 | 10,343 | 485 | 32,180 | 190 | 10,798 | 675 | 42,978 |

| | |
|---|---|
| மொத்த எண்ணிக்கை | 42,978 |
| 10 விழுக்காடு எண்ணிக்கை | 4,298 |
| மொத்தம் | 47,276 |

## இணைப்பு—V.

பழங்குடியினருக்குரிய அரசினர் மாணவர் இல்லங்களின் எண்ணிக்கையும், மாணவர்களின் எண்ணிக்கையும் (1981–82)

| தொடர் எண்ணும், மாவட்டத்தின் பெயரும். | மாணவர் இல்லங்கள். | | மாணவியர் இல்லங்கள். | | மொத்தம். | |
|---|---|---|---|---|---|---|
| | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை. | மாணவியரின் எண்ணிக்கை. | இல்லங்களின் எண்ணிக்கை | மாணவ மாணவியரின் எண்ணிக்கை . |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 செங்கல்பட்டு .. | 1 | 50 | .. | .. | 1 | 50 |
| 2 வடஆற்காடு .. | 2 | 75 | .. | .. | 2 | 75 |
| 3 கோயம்புத்தூர் .. | 2 | 115 | .. | .. | 2 | 115 |
| 4 மதுரை .. .. | 2 | 110 | .. | .. | 2 | 110 |
| 5 திருச்சிராப்பள்ளி | 1 | 50 | 2 | 95 | 3 | 145 |
| 6 சேலம் .. .. | 4 | 140 | 2 | 75 | 6 | 215 |
| 7 கன்னியாகுமரி .. | .. | .. | 2 | 70 | 2 | 70 |
| 8 தென் ஆற்காடு .. | 1 | 75 | .. | . | 1 | 75 |
| 9 நீலகிரி .. .. | 1 | 50 | .. | .. | 1 | 50 |
| மொத்தம் .. | 14 | 665 | 6 | 240 | 20 | 905 |

## இணைப்பு—VI

ஆதி திராவிடர்-பழங்குடியினர் நலத்துறை.

| தொடர் எண்ணும் மாவட்டமும். | ஆதி திராவிடர் மாணவர் இல்லங்கள். | | | | பழங்குடியினர் மாணவர் இல்லங்கள். | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வாடகைக்கட்டிடங்கள். | | அரசுக்கட்டிடங்கள் . | | வாடகைக்கட்டிடங்கள், | | அரசுக்கட்டிடங்கள் | |
| | மாணவர் இல்லங்கள் | மாணவியர் இல்லங்கள் | மாணவர் இல்லங்கள் | மாணவியர் இல்லங்கள் | மாணவர் இல்லங்கள் | மாணவியர் இல்லங்கள் | மாணவர் இல்லங்கள் | மாணவியர் இல்லங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 சென்னை .. | 3 | 3 | 6 | 1 | .. | .. | .. | .. |
| 2 செங்கற்பட்டு .. | 32 | 11 | 10 | 2 | .. | .. | 1 | . |
| 3 வட ஆற்காடு .. | 22 | 13 | 10 | 1 | 1 | .. | 1 | ... |
| 4 தென் ஆற்காடு .. | 39 | 15 | 11 | 1 | 1 | .. | .. | .. |
| 5 தஞ்சாவூர் .. | 32 | 12 | 10 | 4 | .. | .. | .. | .. |
| 6 திருச்சிராப்பள்ளி .. | 36 | 10 | 10 | 4 | .. | .. | 1 | 2 |
| 7 மதுரை .. | 45 | 20 | 5 | 3 | .. | . | 2 | .. |
| 8 இராமநாதபுரம் .. | 49 | 15 | 8 | 1 | .. | .. | . | .. |
| 9 திருநெல்வேலி .. | 36 | 24 | 8 | 2 | .. | .. | .. | .. |
| 10 கன்னியாகுமரி .. | 3 | 5 | 4 | .. | .. | .. | .. | 2 |
| 11 சேலம் . | 34 | 9 | 6 | 5 | 1 | 1 | 3 | 1 |
| 12 தர்மபுரி .. | 19 | 5 | 2 | 1 | .. | .. | .. | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13 கோயம்புத்தூர் .. | 7 | 3 | 6 | 4 | | .. | .. | 2 | .. |
| 14 நீலகிரி .. .. | 8 | 3 | 1 | 1 | | 1 | .. | .. | .. |
| 15 புதுக்கோட்டை | 13 | 5 | 5 | 1 | | .. | .. | .. | .. |
| 16 பெரியார் .. | 6 | 6 | 4 | .. | | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 384 | 159 | 101 | 31 | | 4 | 1 | 10 | 5 |



## இணைப்பு VII.

மானிய உதவி பெறும் மாணவர் இல்லங்களின் பட்டியலும் 1982–83 ஆம் ஆண்டுக்கு அனுமதி அளிக்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை.

மானியம் (1982–83 ஆம் ஆண்டுக்கு வரையறுக்கப்பட்டது).

| தொடர் எண்ணும், அமைந்துள்ள இடமும் மற்றும் மானிய உதவி பெறும் மாணவர் இல்லங்களின் பெயரும். | ஆதி திராவிடருக்கென்று 1982–83 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப் பட்ட மானியங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| ஆதி திராவிடர்— | |
| அ. சென்னை மாநகர்— | |
| 1 மாநகர் மாணவியர் இல்லம், சென்னை-31 .. .. .. .. .. .. .. .. .. | 45 |
| 2 இராவ் சாகிப் டி. ஆர். எஸ். பிள்ளை மாணவியர் இல்லம், சென்னை-5 .. .. .. . .. | 5 |
| 3 சென்னபுரி அன்னதான சமாஜம், சென்னை-3 .. .. .. .. .. .. .. .. | 26 |
| 4 ஏ. டி. எஸ். எஸ். மாணவர் இல்லம், சென்னை-21 .. .. .. .. .. .. .. | 77 |
| 5 இராமகிருஷ்ண மிஷன் மாணவர் இல்லம், சென்னை-4 .. .. .. .. .. .. .. | 1 |
| | 154 |

| | |
|---|---|
| **II. செங்கற்பட்டு மாவட்டம் —** | |
| 6 வள்ளுவர் குருகுலம், தாம்பரம் .. .. .. .. .. .. .. .. .. | 78 |
| 7 குருகுலம் உணவு இல்லம், மதுராந்தகம் .. .. .. .. .. .. .. .. .. | 77 |
| 8 இராமகிருஷ்ண மிஷன் இல்லம், மல்லியங்கரனை .. .. .. .. .. .. .. .. | 26 |
| 9 புனித மேரி மகளிர் உயர்நிலைப் பள்ளி உணவு இல்லம், செங்கற்பட்டு .. .. .. .. .. | 64 |
| | 245 |
| **III. வட ஆற்காடு மாவட்டம் —** | |
| 10 காந்தி மிஷன் குழந்தைகள் இல்லம், வாலாஜா பேட்டை .. .. .. .. .. .. .. | 55 |
| 11 ஆர். எஸ். எஸ். இல்லம், இராணிப்பேட்டை .. .. .. .. .. .. .. .. | 34 |
| | 89 |
| **IV. தென் ஆற்காடு மாவட்டம் —** | |
| 12 பர்வதராஜகுல ஏழை மாணவர் இல்லம், காட்டுமன்னார்கோயில் .. .. .. .. .. .. | 29 |
| 13 சேவா சங்க மாணவர் விடுதி, திருக்கோயிலூர் .. .. .. .. .. .. .. .. | 45 |
| 14 விக்டரி மெமோரியல் இல்லம், விருத்தாசலம் .. .. .. .. .. .. .. .. | 144 |
| | 218 |
| **V. தஞ்சாவூர் மாவட்டம் —** | |
| 15 சிரியால் சத்திரம் இல்லம், தஞ்சாவூர் .. .. .. .. .. .. .. .. .. | 57 |
| 16 சத்திரம் உணவகம், ஒரத்தநாடு .. .. .. .. .. .. .. .. .. .. | 19 |
| 17 இராஜன் இல்லம், ஒரத்தூர் .. .. .. .. .. .. .. .. .. .. | 61 |
| 18 கோகிலம் இல்லம், வெள்ளம் பேரம்பூர் .. .. .. .. .. .. .. .. .. | 305 |
| 19 எல்.எம்.சி. உணவு இல்லம், சீர்காழி .. .. .. .. .. .. .. .. .. | 80 |
| 20 கஸ்தூர்பா காந்தி கன்னியா குருகுலம், வேதாரண்யம் .. .. .. .. .. .. .. | 112 |
| 21 ஆர்.எஸ்.எஸ். இல்லம் பட்டுக்கோட்டை .. .. .. .. .. .. .. .. | 65 |
| | 697 |
| **VI. திருச்சிராப்பள்ளி மாவட்டம் —** | |
| 22 காந்திஜி இல்லம், புத்தனாம்பட்டி .. .. .. .. .. .. .. .. .. | 115 |
| 23 திருவள்ளுவர் அனாதை இல்லம், லிங்கவாடி மேடு .. .. .. .. .. .. .. | .. |
| | 115 |
| **VII. மதுரை மாவட்டம் —** | |
| 24 சேவாலயம் மாணவர் இல்லம், மதுரை .. .. .. .. .. .. .. .. .. | 138 |
| 25 கஸ்தூர்பாய் மாணவியர் இல்லம், மேலூர் .. .. .. .. .. .. .. .. .. | 52 |
| 26 காந்திஜி மாணவர் இல்லம், மேலூர் .. .. .. .. .. .. .. .. | 68 |
| 27 சாந்தி மாணவர் இல்லம், நிலக்கோட்டை .. .. .. .. .. .. .. .. | 49 |
| 28 விவேகானந்தா- மாணவர் இல்லம், கம்பம் .. .. .. .. .. .. .. .. | 47 |
| 29 பாரதி மாணவர் இல்லம், திண்டுக்கல் .. .. .. .. .. .. .. .. .. | 115 |
| 30 மகாதேவ தேசாய் மாணவர் இல்லம், வத்தலகுண்டு .. .. .. .. .. .. .. | 35 |

| | |
|---|---|
| VII மதுரை மாவட்டம்—தொடர்ச்சி | 35 |
| 31 ஆதார பயிற்சி இல்லம், காந்தி கிராமம் .. .. .. .. .. .. .. .. .. | 64 |
| 32 கஸ்தூரிபாய் மாணவியர் இல்லம், திண்டுக்கல் .. .. .. .. .. .. .. .. | |
| | 239 |
| VIII. இராமநாதபுரம் மாவட்டம் — | 46 |
| 33 கஸ்தூரிபாய் மாணவியர் இல்லம், மானாமதுரை .. .. .. .. .. .. .. .. | 33 |
| 34 தக்கர் பாபா இல்லம், மானாமதுரை .. .. .. .. .. .. .. .. .. | |
| | 79 |
| IX. திருநெல்வேலி மாவட்டம் — | 64 |
| 35 வி. வி. எஸ். அய்யர் நினைவு மாணவர் இல்லம், சேரன்மாதேவி .. .. .. .. .. .. | 62 |
| 36 புனித மைக்கேல் உணவகம், கீழ்கைலாசபுரம் .. .. .. .. .. .. .. .. | |
| | 126 |
| X. நீலகிரி மாவட்டம் — | 65 |
| 37 ஸ்ரீ சற்குரு மாணவர் இல்லம், குன்னூர் .. .. .. .. .. .. .. .. .. | 42 |
| 38 தென்னிந்திய திருச்சபை நினைவு மாணவியர் இல்லம், உதகமண்டலம் .. .. .. .. .. | 53 |
| 39 தக்கர் பாபா குருகுலம், நீர்க்காச்கமண்டு .. .. .. .. .. .. .. .. .. | |
| | 160 |
| XI. பெரியார் மாவட்டம்.— | |
| 40 டி. எஸ். இராமன் சரோஜினிதேவி மாணவர் இல்லம், கோபிசெட்டிபாளையம் .. .. .. .. | 107 |
| கோயம்புத்தூர் மாவட்டம் — | |
| 41 பி. எஸ். ஜி. கங்கா நாயுடு நினைவு மாணவர் இல்லம், பீளமேடு .. .. .. .. .. .. | 38 |
| பெருமொத்தம் .. | 2,622 |
| பழங்குடியினர் — | |
| I. நீலகிரி மாவட்டம் — | |
| 1 ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், பழங்குடியினர் தங்கிப் பயிலும் ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, குன்னூர் .. | 200 |
| 2 ஸ்ரீ சற்குரு சர்வ சமரச சங்கம், பழங்குடியினர் தங்கிப் பயிலும் மகளிர் உயர்நிலைப்பள்ளி, குன்னூர் .. | 100 |
| 3 தக்கர் பாபா குருகுலம், நீர்க்காசமண்டு .. .. .. .. .. .. .. .. .. | 68 |
| | 368 |
| II கோயம்புத்தூர் மாவட்டம் — | |
| 4 சற்குரு சன்மார்க்க தொடக்கப்பள்ளி, கல்லாறு .. .. .. .. .. .. .. .. | 50 |
| பெருமொத்தம் | 418 |

# இணைப்பு—VIII

தமிழ் நாட்டில் பழங்குடியினர் நலனுக்காக நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல்.

| தொடர் எண்ணும் மாவட்டத்தின் பெயரும். | கூட்டுறவுச் சங்கத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| (அ) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் — | |
| 1 கோயம்புத்தூர் .. .. .. .. | துணக்கடவு சரக மலைவாழ் பழங்குடியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். |
| 2 கோயம்புத்தூர் .. .. .. .. | சத்தியமங்கலம் மலைவாழ் பழங்குடியினர் கூட்டுறவு விற்பனைச் சங்கம். |
| (ஆ) வனத் தொழிலாளர் ஒப்பந்தச் சங்கங்கள் — | |
| 1 கோயம்புத்தூர் .. .. .. .. | உடுமலைப்பேட்டை சரக மலைவாழ் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம். |
| 2 கோயம்புத்தூர் .. .. .. .. | சர்க்கார்பதி சரக வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுவு சங்கம். |
| 3 வட ஆர்காடு .. .. .. .. | நாயக்கனேரி மலைவாழ் பழங்குடியினர் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். |
| 4 இராமநாதபுரம் .. .. .. .. | செண்பகத் தோப்பு மலைவாழ் பழங்குடியினர் வனத் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கம். |
| 5 திருநெல்வேலி .. .. .. .. | காணி குடியிருப்பு மலைவாழ் பழகுடியினர் தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவு சங்கம். |
| (இ) பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் — | |
| 1 கன்னியாகுமரி .. .. .. .. | பேச்சிப்பாறை பலநோக்கு கூட்டுறவு சங்கம். |
| 2 நீலகிரி .. .. .. .. .. | தோடர்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் |

(ஈ) பழங்குடியினர் துணைத் திட்டம் பகுதியில் உள்ள பெரும் அளவிலான பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் —

| | |
|---|---|
| 1 சேலம் மாவட்டம் .. .. .. | ஏர்க்காடு |
| 2 சேலம் மாவட்டம் .. .. .. | கொல்லிமலை |
| 3 சேலம் மாவட்டம் .. .. .. | கல்ராயன் மலை |
| 4 சேலம் மாவட்டம் .. .. .. | அரனூத்துமல்ல |
| 5 வட ஆர்காடு மாவட்டம் .. .. | ஏலகிரி |
| 6 வட ஆர்காடு மாவட்டம் .. .. | ஜவ்வாது |
| 7 வட ஆர்காடு மாவட்டம் .. .. | புதூர்நாடு |
| 8 தென் ஆர்காடு மாவட்டம் .. .. | வெள்ளி மலை |
| 9 தென் ஆர்காடு மாவட்டம் .. .. | மோட்டாம்பட்டி |
| 10 தென் ஆர்காடு மாவட்டம் .. .. | கிளக்காடு |
| 11 தர்மபுரி .. .. .. .. .. | சித்தேரி |
| 12 திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. .. | பச்சைமலை. |
| 13 நீலகிரி மாவட்டம் .. .. .. | மாசானகுடி |

## இணைப்பு—IX

### சிறப்புக்கூறுத் திட்டம்—1983-84.

| வரிசை எண்ணும், துறையும். (1) | ஆதிதிராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை. (ரூபாய் இலட்சத்தில்.) (2) |
|---|---|
| 1 வேளாண்மை | 456.36 |
| 2 நிலச் சீர்திருத்தம் | 2.00 |
| 3 கிராம மேம்பாட்டுக்கான சிறப்புப் பகுதி | 764.85 |
| 4 மண்-நீர்வளப் பாதுகாப்பு | 25.00 |
| 5 கால்நடை வளர்ப்பு | 66.62 |
| 6 பால் பண்ணைத் திட்டம் | 8.73 |
| 7 காடுகள் | 360.00 |
| 8 சமுதாய வளர்ச்சித் திட்டம் | 1,234.46 |
| 9 கூட்டுறவு | 3.35<br>117.30 |
| 10 மின் உற்பத்திப் பெருக்கம் | |
| 11 கிராம சிறு தொழில்கள் (பட்டுப்பூச்சி வளர்ப்பு உட்பட) | 82.53 |
| 12 [illegible] | 400.00 |
| 13 பொதுக் கல்வி | 456.00 |
| 14 மருத்துவம், பொதுச் சுகாதாரம் | 175.00 |
| டானிடா | 200.00 |
| 15 கழிவுநீர் அகற்றல்-குடிநீர் வழங்கல் | 4,084.42 |
| 16 வீட்டு வசதி | 682.00 |
| 17 நகர்ப் பகுதி மேம்பாடு | 585.00 |
| 18 ஆதிதிராவிடர், பழங்குடியினர் பின்தங்கியோர் வகுப்பினர் குறித்த நலன் | 1,894.87 |
| 19 சமூக நலன் | 69.15 |
| 20 சத்துணவு | 302.18 |
| மொத்தம் | 11,956.15 |

# இணைப்பு—X

## பழங்குடியினருக்கான துணைத் திட்டம்.

## 1983-84 ஆம் ஆண்டுக்கான நிதிஒதுக்கம்.

(ரூபாய் இலட்சத்தில்)

| தொடர் எண். | பகுதி. | மாநிலத் திட்டத்தில் இருந்து ஒதுக்கம். | மத்திய அரசிடமிருந்து சிறப்புதவி. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | மண் வளப் பாதுகாப்பு | 10.00 | 4.00 | 14.00 |
| 2 | தோட்டக் கலை | 25.00 | 15.00 | 40.00 |
| 3 | பெரிய அளவிலான பழத் தோட்டத் திட்டம் | 17.00 | 5.00 | 22.00 |
| 4 | கால்நடை வளர்ப்பு | 15.30 | 18.00 | 33.30 |
| 5 | காடு வளர்ப்பு | 42.50 | 10.00 | 52.50 |
| 6 | கூட்டுறவு | 43.00 | 12.00 | 55.00 |
| 7 | சிறுபாசனம் | 5.00 | 8.00 | 13.00 |
| 8 | கிராமப் பகுதிக்கு மின் வசதிகள் அளித்தல் | 16.51 | .. | 16.51 |
| 9 | சாலைப் போக்குவரத்து | 175.00 | .. | 175.00 |
| 10 | வீட்டு வசதி | 0.50 | 1.00 | 1.50 |
| 11 | கிராமத் தொழில்கள் | 6.00 | 4.00 | 10.00 |
| 12 | பட்டுப் பூச்சி வளர்ப்பு | 26.85 | 4.00 | 30.85 |
| 13 | கல்வி | 34.79 | 15.00 | 49.79 |
| 14 | பொதுச் சுகாதாரம் | 16.75 | 10.00 | 26.75 |
| 15 | சத்துணவு (சமூக நலன்) | 27.03 | .. | 27.03 |
| 16 | கிராமப்பகுதி நீர் வழங்குதல் | 25.00 | .. | 25.00 |
| 17 | சமுதாய வளர்ச்சி | 1.00 | .. | 1.00 |
| 18 | சுற்றுலா | 0.01 | .. | 0.01 |
| 19 | ஆராய்ச்சி மேம்பாடு | 1.26 | .. | 1.26 |
| | பிற திட்டங்கள் | 6.08 | .. | 6.08 |
| | மொத்தம் | 494.58 | 106.00 | 600.58 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நூலகம் சென்னை-600 009. 136094
V2 11, 31 N83
N83-4,9-55)